சட்ட இயல்

(Jurisprudence)

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

சட்ட இயல்

(Jurisprudence)

பேராசிரியர்

மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.,

வளர்தமிழ்ப்புலத் தலைவர்,

தமிழ்ப் பல்கலைக் கழகம்.

தமிழ்ப் பல்கலைக் கழகம்,

தஞ்சாவூர்.

தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு :10
தி.ஆ.2015 — புரட்டாசி; செப்டம்பர் — 1984

ஆசிரியர் : மா.சண்முகசுப்பிரமணியம்
நூல் : சட்ட இயல்
பதிப்பு : முதற்பதிப்பு
நூலகப் பதிப்பு : விலை உரூவா 92/—

அச்சு : தமிழ்ப் பல்கலைக் கழக
மறுதோன்றி அச்சகம்,
தஞ்சாவூர்.

பதிப்புரை

'எதிலும் தமிழ்' என்னும் தொடக்கம் 'எல்லாம் தமிழ்' என்று நிறைவடைய வேண்டும். அதற்குப் பல துறைக் கலைநூல்களும் தமிழில் பல்கிப் பெருக வேண்டும். இப்பணியில் முனைந்துள்ள தமிழ்ப் பல்கலைக் கழகம் ''சட்ட இயல்'' என்னும் சட்டக்கலை நூலைத் தமிழ் உலகிற்கு வழங்குகின்றது.

இந்நூல் சட்டக் கலையை அறிமுகஞ் செய்கிறது; ஆழ்ந்த கருத்துகளை ஆர ஆய்கின்றது. சிக்கலான நுணுக்கங்களைக் ''கடல் அமுது எடுத்துக் கரையில் வைத்தது போல்'' எளிமையாக்குகின்றது. பேராசிரியர் மா. சண்முகசுப்பிரமணியம் அவர்கள் கற்றுத் துறைபோகிய சட்ட அறிஞர்; உற்றுணர்ந்த பட்டறிவினர். சட்டத்தைச் செயலுறுத்தும் அறங்கூறவைய நடுவராகவும், சட்டத்தை உருவாக்கும் சட்டப் பேரவைச் செயலராகவும் பணியாற்றியவர். நயம்பட எழுதுதல் அவர்தம் தனிப்பாங்கு; குறட் கருத்தை இழையோட்டமாக்கல் அவர்தம் தமிழ்ப்பாங்கு. இவ்விரு பாங்குகளும் இந்நூலைச் செந்நூலாகத் திகழ்விக்கின்றன.

இது தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்புத்துறை வரிநிழல் அச்சு (லைனோடேர்ம்) தொடக்கமாக அச்சகத்தின் முழுப்பணியில் வெளிவரும் முதல் நூல். பதிப்புத் துறையின் பத்தாவது வெளியீடு. சட்டக் கலையை அறிய விழைவோர்க்கு இந்நூல் கைவிளக்கு; சட்டம் பயில்மாணவர்க்குக் கதிர்விளக்கு. எனவே, நூலகப் பதிப்பு, மாணவர் பதிப்பு என இரு பதிப்புகள் வெளியிடப்படுகின்றன.

விழைவோரும் பயில்வோரும் பயன்பெறுவார்கள் என்று நம்புகின்றோம்.

தி.ஆ.2015—புரட்டாசி
செப்டம்பர்—1984 பதிப்புத் துறை,
தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம்.

முகவுரை

''இறவாத புகழுடைய
புது நூல்கள் தமிழ்மொழியில்
இயற்றல் வேண்டும்''

—பாரதியார்

'சட்ட இயல்' என்பது தமிழில் புதுநூல். 'அறம்', 'நீதி' என்ற துறைகளில் பழந்தமிழ் நூல்கள் பல இருந்தாலும், இன்றைய உலக வழக்கில் உள்ள 'சட்டம்' என்ற இயலை எடுத்து இயம்பும் நூல்கள் அண்மைக்காலம் வரை தமிழில் எழுதப்பெற வில்லை.

இன்றைய சட்டக் கருத்துகளை இனிய தமிழில் எளிதாகக் கூற இயலும் என்பதைக் காட்டும் வகையில் 'சட்ட இயல்' என்ற தலைப்பில் நான் எழுதிய நூல் 1962—ஆம் ஆண்டில் வெளி வந்தது. அது, சட்டக்கல்வி ஆங்கிலத்தில் மட்டுமே பயிற்றுவிக்கப்பட்ட காலம். எனவே, அந்நூல் பாடநூலாக எழுதப் பெறாமல் பொதுஅறிவு நூலாகச் சிறிய அளவில் ஆக்கப்பெற்றது. இன்று, சட்டக் கல்லூரிகளில் தமிழ்மொழியிலும் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. தாய்மொழியில் சட்டம் பயில்வதையே தமிழ் மாணவர்கள் பெரிதும் விரும்புகின்றனர். அருந்தமிழில் கற்பிக்கும் ஆர்வமும் ஆற்றலும் கொண்ட ஆசிரியர்கள் பலர் இன்று உள்ளனர். நீதிமன்ற

மொழியும் இன்று தமிழாகவே உள்ளது. இந் நிலையில், சட்ட நூல்கள் பலவும் தமிழில் ஆக்கப்பெறுவது இன்றியமையாததாகும். இதனை நிறைவு செய்யும் முயற்சியில் முகிழ்த்ததே இந்நூல்.

பல்வகைச் சட்டங்களுக்கும் அடிப் படையாக அமைவது 'சட்ட இயல்' என்பது. 'சட்ட இயல்' கூறும் நுட்பமான சட்டக் கோட்பாடுகளைத் திட்பமாகத் தமிழில் கூறிவிட்டால், ஏனைய சட்ட நூல்களை எளிதாகத் தமிழில் எழுதிவிடலாம் என்ற நிலை எழுகின்றது. எனவேதான், சட்டக் கல்விக்கு அடிப்படையான 'சட்ட இயல்' என்ற இந்நூலைப் பாடநூலாகப் பயன்படும் பாங்கில் எழுதி யுள்ளேன். எனினும், இது பொது அறிவு நூலாகவும் போற்றப்பெறும் என்பதில் ஐயமில்லை.

'சட்ட இயல்' என்ற பாடம் எளிதில் புரிந்துகொள்ள இயலாதது, என்ற எண்ணம் பரவலாக இருக்கின்றது. இது பயிற்சி மொழியால் எழும் இடர்ப்பாடேயாகும். ஆனால் இது தீந்தமிழ் மொழியில் தீட்டப் பெறுகையில் எவ்வளவு எளிமையும் இனிமையுங்கொண்டு நம்மை ஈர்க் கின்றது என்பதை ஆர்வமுள்ளோரனைவரும் உணர்வார்கள். மேலும், அடிப்படையான சட்ட நெறிகள், கருத்துகள் பல, அறநூலான திருக்குறளில் அறநெறிகளாக அமைந்துள்ள அருமையினையும் நாம் காண்கிறோம்.

ஆங்கில நூல் எதையும் அப்படியே மொழிபெயர்த்து இந்நூல் எழுதப்பெறவில்லை. இதில், ஆங்கிலச் 'சட்ட இயல்' நூல்கள் கூறும் அடிப்படைக் கோட்பாடுகள் சிதைவு சிறிதுமின்றி வளரும் தமிழில் வடிவு பெற்றுள்ளன.

இந்நூலினை விரைவில் எழுதுமாறு என்னை ஊக்குவித்தவர்கள் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்கள். அன்னாருக்கு எனது நன்றி என்றும் உரித்தாகும்.

இதனைத் தக்க முறையில் பதிப்பிப்பதில் ஆர்வம் காட்டியவர்கள் பல்கலைக் கழகப் பதிவாளர் (பொ) திரு வ.கிருட்டிணமூர்த்தி யவர்களும், பதிப்புத் துறைத் துணை இயக்குநர் கவிஞர் கோவை. இளஞ்சேரன் அவர்களும் ஆவர். இவர்களுக்கும் என் நன்றி.

இந்த நூலிலே குறைகள் இருப்பின், காரணம் எழுதியவனின் இயலாமை என்று கொள்ள வேண்டுமேயொழிய, ''சொல்லும் திறமை தமிழ் மொழிக்கில்லை'' என்று கொள்ளல் தகாது என்பதே வாசகர்களிடம் நான் வணங்கிக் கேட்டுக்கொள்வது.

சட்டத் தமிழ் வளர்க!

தஞ்சாவூர்
15—9—'84 மா. சண்முகசுப்பிரமணியம்

உதவிய நூல்கள்

1) சட்ட இயல் (Jurisprudence) — சால்மண்ட் (Salmond)

2) சட்ட இயல் — டயஸ் (Dias)

3) சட்ட இயல் — G.W.பேட்டன் (G.W.Paton)

4) ஆங்கிலச் சட்டநெறியும் ஒழுக்க நெறியும். (English Law and Moral Law) — A.L.குட்ஹார்ட் (Dr.A.L.Goodhart)

5) சட்டத்தின் உட்கோள் (The Idea of Law) — டென்னிஸ் லாய்டு (Dennis Lloyd)

6) திருக்குறள்

சட்ட இயல்

பொருளடக்கம்

முதற் பகுதி

பக்கம்

1. சட்ட இயல் **1**
(Jurisprudence)

'சட்டஇயல்' என்பது என்ன? — ஆராய்ச்சியின் தன்மை — சட்ட நெறிமுறை — சட்டக் கருத்தமைவுகள் பற்றிய ஆராய்ச்சி.

2. சட்டஇய்ல் பயில்நெறியங்கள் **11**
(Schools of Jurisprudence)

பகுத்தாய்வு முறைப் பயில்நெறியம் — வரலாற்று முறைப் பயில்நெறியம் — தத்துவ முறைப் பயில்நெறியம் — சமுதாய முறைப் பயில்நெறியம் அல்லது இயங்கு முறைப் பயில்நெறியம் — நிகழ்வு நிலைப் பயில்நெறியம்.

3. சட்டக் கோட்பாடுகள் **23**
(Theories of Law)

'சட்டம்' என்ற சொல் சுட்டுவது எதை? — 'சட்டம்' என்றால் என்ன? — 'இயல்பான அறவுணர்வே சட்டம்' என்ற கொள்கை — 'அரசின் ஆணையே சட்டம்'; 'கட்டுறுத்துவதே சட்டம்' என்ற கொள்கை — 'நீதி வழங்குவதற்கு உதவுவதே சட்டம்' என்ற கொள்கை — 'சட்டம் என்பது விதிகளின் ஒழுங்கமைப்பு' — 'தெளிந்த கொள்கை'.

4. அரசமைப்புச் சட்டம் **55**
(Constitutional Law)

'அரசமைப்பு' என்றால் என்ன? — இதைச் 'சட்டம்' என்று கூறலாமா?

5. நாட்டிடைச் சட்டம் **61**
(International Law)

'நாட்டிடைச் சட்டத்தின் தன்மை என்ன?' — இது ஓர் ஒழுக்கமுறையா, சட்டமா?

6. நிலவரைச் சட்டங்களும், இனமுறைச் சட்டங்களும் **67**
(Territorial Laws and Personal Laws)

இனமுறைச் சட்டம் — நிலவரைச் சட்டம் — அயலக ஒப்படை.

7. நீதி வழங்கும் முறை **71**
(The Administration of Justice)

உரிமைஇயல் நீதிமுறை — குற்றஇயல் நீதி முறை — நீதிமுறையின் நீர்மை.

8. சட்டத்தை ஒட்டிய நீதி முறை **77**
(Justice according to Law)

சட்டத்தை ஒட்டிய நீதிமுறை — நிறைபாடுகளும், குறைபாடுகளும்.

இரண்டாம் பகுதி

9. சட்டத்தின் மூலங்கள் **83**
(The sources of Law)

அரசமைப்பு, இயற்றுமுறை, முன்தீர்ப்பு நெறி, வழக்கநெறி, சட்ட நூல்கள்.

10. இயற்றுமுறைச் சட்டம் **89**
(Enacted Law - Legislation)

சட்டம் இயற்றுதல் — சமயமும் சட்டமும் இணைந்து நின்ற காலம் — இயற்றுமுறைச் சட்டமும் தீர்ப்புமுறைச் சட்டமும் — சட்டத் தொகுப்பு — சட்ட மன்றத்தின் தனிநிலை — மேல்நிலை இயற்றுமுறை, கீழமை இயற்றுமுறை — இயற்றப்பட்ட சட்டங்களின் பொருள் விளக்கம்.

11. தீர்ப்புமுறைச் சட்டம் **111**
(Judge - made Law - Precedent)

முன்தீர்ப்புநெறி நிற்றல் — முன்தீர்ப்புநெறி நிற்றலும் முன்தீர்ப்புத் தடையும் — தகுமுறைக் கொள்கை —— தீர்ப்புநெறி —— புறவுரை.

12. வழக்கமுறைச் சட்டம் **125**
(Customary Law)

'வழக்கநெறி' என்றால் என்ன? — 'வழக்க நெறி' சட்டத்தின் மூலம் ஆகிறது — வழக்கநெறியில் குறைபாடுகள் — எத்தகைய வழக்கநெறிகளை நீதி மன்றங்கள் ஏற்றுக் கொள்ளுகின்றன? — இங்கி லாந்தில் இன்றைய நிலை — வழக்கநெறியும் நீளுடைமையும் — நாட்டிடைச் சட்டத்திலும், அரசியலமைப்பு முறையிலும் வழக்கநெறிகள்.

13. சட்ட நூல்கள் **135**
Juristic writings)

நூலாசிரியர்களின் சிறப்பு — நீதிமன்றங்கள் அளிக்கும் மதிப்பு.

மூன்றாம் பகுதி

14. 'நீதி' என்றால் என்ன? **139**
(What is Justice?)

'நீதி' என்றால் என்ன? — ஒழுக்கம் வேறு, நீதி வேறு — நன்மை வேறு, நீதி வேறு — சட்டம் வேறு, நீதி வேறு — நீதியும் நீதிமன்றத் தீர்ப்புகளும் — தனி நீதி, பொது நீதி — நெஞ்சத்தின் நீர்மையே நேர்மையாகும் — நடுவுநிலைமையே நீதியாகும் — சமுதாயத்தின் சமநிலை அமைதி — சீர்தூக்கும் கோல் போற் கோடாமை — சீர்தூக்கும் சீர்மை — சீர்தூக்கி முறை செய்தல் — தகுதிக்கேற்பச் சமநிலை பேணுதல் — பகுதியால் பாற்பட்டு ஒழுகுதல் — நடுவுநிலைப் பண்பு இன்றி நல்வாழ்வு இல்லை — பிறவும் தமபோற் பேணிச் செய்தல் — செப்பம் உடையவர் ஆக்கம் — முறைசெய்தலின் முறைமை — கண்ணோட்டம் இன்மை — இறைபுரிதல் — வழக்கை ஓர்தல் — முடிவினைத் தேர்ந்து செய்தல்.

15. குற்றமும் தண்டனையும் **165**
(Crime and Punishment)

'குற்றம்' என்றால் என்ன? — 'குற்ற மனம்', 'கடும் சான்றுறுத்தம்' என்ற கோட்பாடுகள் — தண்டனையின் இன்றியமையாமை — தண்டனையின் அளவு — (குற்றத்தின் தன்மை, குற்றத்தின் நோக்கம், குற்றவாளியின் பண்புநிலை) — 'தக்காங்கு நாடி ஒத்தாங்கு ஒறுத்தல்' — குற்றவாளிகள் எவ்வாறு உருவாகின்றனர்? — தண்டனையின் நோக்கம் — 'அச்சுறுத்துவது தண்டனை' என்ற கொள்கை — 'பழி வாங்குவது தண்டனை' என்ற கொள்கை — 'குற்றங்களைத் தடுப்பது தண்டனை' என்ற கொள்கை — 'சீர் திருத்துவது தண்டனை' என்ற கொள்கை — இறுதியுரை.

நான்காம் பகுதி

16. உரிமைகள் **185**
(Rights)

'உரிமை' என்றால் என்ன? — உரிமையும் கடமையும் — 'உரிமை' என்பதில் உள்ள கூறுபாடுகள் — உரிமைக்கு இலக்காகும் பொருள்கள் — உரிமை என்பதில் அடங்கும் கருத்தமைவு — 'உரிமை' என்ற கருத்தமைவின் பகுப்பாய்வு — தன்னுரிமை — ஏலுரிமை — காப்புநிலை உரிமை.

சட்ட உரிமைகளின் வகைகள்

செயலுறும் உரிமை, செயலுறா உரிமை — பொதுமுக உரிமை — தனிமுக உரிமை — சொத்துநிலை உரிமை, தனிநிலை உரிமை — சொத்தமை உரிமை, மேலமை உரிமை — சட்டமுறை உரிமை, தகுமுறை உரிமை — நிறைவுற்ற உரிமை, நிறைவுறா உரிமை — தலையுரிமை, துணையுரிமை — முதல்நிலை உரிமை, தீர்வுநிலை உரிமை — பொதும உரிமை, தனிம உரிமை.

17. சொத்துரிமை 213
(Ownership)
'சொந்தம்' என்றால் என்ன? — சொத்துரிமை — சொத்தைப் பொறுத்த உரிமைகள் — சொத்து உரிமைக்கான இலக்கணம் — ஆஸ்டின் கூற்று, அதுபற்றிய ஆய்வு — பிற அறிஞர்கள் கூறும் வரைவுரைகள் — சால்மண்டின் கருத்தும், ஆய்வும் — சொந்தம் கொண்டாடத்தக்க பொருள்கள் — தனிச் சொத்துரிமையும் கூட்டுச் சொத்துரிமையும் — பொறுப்பமைப்பு — நிறைவுற்ற சொத்துரிமை, நிறைவுறாச் சொத்துரிமை — சொத்துரிமையும் இன்றைய சமுதாயமும்.

18. உடைமை 229
(Possession)
'உடைமை' என்றால் என்ன? — இலக்கணம் கூறுவதில் எழும் சிக்கல்கள் — பருப்பொருள் உடைமை, நுண்பொருள் உடைமை — உடைமை எண்ணம், உடமைச் செயல் — மெய்ந்நிலை உடைமையும், சட்டம்கொள் உடைமையும் — நேரடி உடைமை, பகர உடைமை — கொள்நிலை உடைமை, மெய்ந்நிலையுடைமை, ஒருங்கியல் உடைமை — உடைமையினை ஈட்டும் வழிகள் — எடுத்தல், ஒப்படைத்தல் — மெய்ந்நிலை ஒப்படைப்பு, கொள்நிலை ஒப்படைப்பு — சொத்துரிமையும், உடைமையும் — எவ்வித உடைமக்கும் சட்டப் பாதுகாப்பு.

19. நபர்கள் 253
(Persons)
'நபர்' என்பதன் கருத்தமைவு — இயல்பான நபர்களும் சட்டமுறை நபர்களும் — இறந்தவர்களின் தகுநிலை — இனிப் பிறக்க இருப்போரின் தகுநிலை — விலங்குகளின் தகுநிலை — சட்டமுறை நபர்கள் — சட்டமைப்பின் தனித்தன்மை — சட்டமைப்பிற்கும் கூட்டு வாணிபத்திற்கும் உள்ள வேறுபாடு — தனிநிலைக். கூட்டமைப்பு, தொகுநிலைக் கூட்டமைப்பு.

20. சட்டவழிச் செயல்களால் எழும் உரிமைகள் **269**
(Rights created by juristic acts)

'உரிமை மூலம்' என்றால் என்ன? — சட்ட வழிச் செயலும், சட்டத்தின் செயலும்—ஒருதலைச் செயலும், உடன்படு செயலும் — உடன்பாடுகள் — உடன்பாட்டின் கூறுகள் — உடன்பாட்டின் வகைகள் — ஒப்பந்தம், வழங்கடைவு, மாற்றடைவு, விடுப் படைவு — செல்லுறும் உடன்பாடு, செல்லுறாத உடன்பாடு — இல்லா நிலை உடன்பாடு, தவிர்தகு உடன்பாடு — உடன்பாடு செல்லுறாமைக்குக் காரணங்கள் — தற்கால வளர்ச்சி.

21. சட்டத்தால் எழும் உரிமைகள் **283**
(Rights directly created by Law)

'உரிமைத்திங்கு' — கவனமின்மை — தற் கவனமின்மை — கடும் பொறுப்பு — பகரப் பொறுப்படைவு — தீங்கு ஆகாத கேடுகள் — உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்துதல் — கொள்நிலை ஒப்பந்தம் — முறையற்ற பொருளடைவு — 'தீங்கியல்' சட்டத்தின் வளர்ச்சி — உரிமைகள் தீர்வுறுதல்.

22. தீர்வுநிலை உரிமைகள் **297**
(Remedial rights)

தீர்வுநிலை உரிமை — தன் உதவி — சாற்றுவகைத் தீர்ப்பு — தடையுறுத்தும் தீர்ப்பு — செயலுறுத்தும்தீர்ப்பு — இழப்பீடு அளிக்கும் தீர்ப்பு.

23. சொத்து **305**
(Property)

'பொருள்' என்றால் என்ன? — சொத்தின் வகைகள் — பருப்பொருள் சொத்துக்கள், நுண் பொருள் சொத்துக்கள் — (கலையமைப்புப் பதிப்புரிமை, இசையமைப்புப் பதிப்புரிமை, புதுப் புனைவுரிமை, வாணிபப் பெயர்கள்) — மேலமை நுண்பொருள் சொத்துக்கள் (குத்தகை, வசதியுரிமை, பிணையம்) — சொத்தை அடையும் வழிகள் (உடைமை, நீளுடைமை, உடன்பாடு, இறங்குரிமை).

24. கடமைகளும் கடப்பாடுகளும் **329**
(Duties and obligations)

கடமை — உரிமையும் கடமையும் எதிரிணையானவை — ஆஸ்டினின் கொள்கை — அடிப்படைக் கடமைகள் — கடமைகள் பற்றி ஆசிரியர் டயஸ் கூறுவது — கடமைகள் செல் லுறுத்தப்படுவனவா? — கடமைகள் என்றால் சட்ட மேலுறுத்தம் இருக்க வேண்டுமா? — கடமையின் இயக்கம் — கடப்பாடுகள் — வழக்கடை பொருள்கள் — இணைவுறு கடப்பாடுகள்.

25. குற்றப் பொறுப்படைவு **343**
(Criminal liability)

'பொறுப்படைவு', 'குற்றப் பொறுப்படைவு' பற்றிய கொள்கை — குற்ற மனம் — 'கருதிய செயல்' என்பது என்ன? — கருத்தைக் காண்பது எவ்வாறு? — முன்னறிதல், விருப்பம் இரண்டும் சேர்ந்தே 'கருத்து' ஆகின்றது — தெரிந்து செய்தல். — நோக்கம் — நோக்கத்தையும் காணவேண்டிய நேர்வுகள் உண்டு — கடும் பொறுப்படைவு — 'செயல்' என்றால் என்ன? — 'செய்வினை', 'சூழ்நிலை', 'விளைவு' மூன்றும் சேர்ந்ததே 'செயல்' — வினைக்கும் விளைவிற்கும் உள்ள தொடர்பு — குற்ற முயற்சி.

இக்கட்டான நிலையில் எழும் உரிமை — கவனம் இன்மை — கவனத்தின் தர நிலை — கவனமின்மை என்பது அகநிகழ்வானதா, புற நிகழ்வானதா? — கருத்து, நோக்கம், கவனமின்மை — தீயெண்ணம் — சட்டத்தை அறியாமல் இழைத்த செயல்கள் — தவறுதலால் விளையும் செயல்கள் — எதிர்பாரா விளைவு — காப்புரிமைச் செயல்கள்.

26. நெறிமுறைச் சட்டம் **385**
(The law of Procedure)

நிலைமுறைச் சட்டமும், நெறிமுறைச் சட்டமும் — நெறிமுறைச் சட்ட விதிகளின் விளைவு — நீதிமன்ற நெறிமுறை — சான்று — சான்றின்

வகைகள் — சான்றை மதிப்பிடுதல் — அறுதியான மெய்யுறுத்தம் — குறைநிலைச் சான்று, தனிநிலைச் சான்று — சான்றாகா நிகழ்மைகள் — நீதிமன்றத்தின் முன் சான்றினை வைத்தல்.

27. 'அறத்தால் வருவதே இன்பம்' 397

சட்டக் கலைச் சொற்கள். 403

சட்ட இயல்

(Jurisprudence)

முதற் பகுதி

சட்ட இயல்
(Jurisprudence)

'சட்ட இயல்' என்பது என்ன?

[ஆராய்ச்சியின் தன்மை — சட்ட நெறி முறை — சட்டக் கருத்தமைவுகள் பற்றிய ஆராய்ச்சி]

அறிவியல் நூல் ஒன்றைப் படிக்கின்றோம் என்றால், அந்நூல் எதைப்பற்றிக் கூறுகிறது என்பதை நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

'சட்ட இயல்' என்பது என்ன?

'சட்ட இயல்' (Jurisprudence) என்பது என்ன? அந்நூல் எதைப்பற்றி ஆராய்கின்றது?

'Juris. Prudentia' என்ற இலத்தீன் சொற்களில் இருந்து எழுந்ததே Jurisprudence என்ற ஆங்கிலச் சொல். Juris Prudentia என்பதன் பொருள் 'சட்டம் பற்றிய ஞானம்' அல்லது 'சட்டத்தில் திறமை' என்பார்கள்

சட்டங்கள என்றால் எத்தனையோ வகைச் சட்டங்கள் உள்ளன. உரிமை இயல் சட்டங்கள் (Civil Laws), குற்றவியல் சட்டங்கள் (Criminal Laws), வரிச் சட்டங்கள் (Tax Laws), வாணிபச் சட்டங்கள் (Commercial Laws) எனப் பல்வகைச் சட்டங்கள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் தொகுத்து ஆய்வதன்று சட்ட இயல்.

ஒரு மொழியில் பல இலக்கியங்கள் தோன்றிய பின்னர்தான் அம்மொழியின் இலக்கணம் உருவெடுக்கின்றது. அதுபோல், பல வகையான சட்டங்கள் தோன்றிச் செயலுறும் நிலையில், அச்சட்டங்கள் பற்றிய இலக்கணம் உருவாகின்றது. அவ்வாறு உருவாகியதே 'சட்ட இயல்' ஆகும்.

எனவேதான் இந்நூலை, சால்மண்ட் என்ற அறிஞர் 'சட்டம் பற்றி ஆயும் அறிவியல்'[1] என்று கூறுகின்றார்.

ஆராய்ச்சியின் தன்மை

பல்வேறு சட்டங்களையும், பல்வகைச் சட்ட அமைப்பு முறைகளையும் (legal systems) ஆய்ந்து அவற்றின் உட்கிடையான உணர்வுகளையும் ஒழுங்கு முறைகளையும் தொகுத்துக் கூறுகின்றது இந்நூல்.

சட்டவிதிகளின் தன்மை என்ன, தகைமை என்ன; அவற்றின் கொள்கை என்ன, குறிக்கோள் என்ன என்பனவற்றை ஆய்ந்து, தேர்ந்து திரட்டித் தருவது சட்ட இயல்.

பொதுவாக, எல்லாச் சட்டங்களிலும் இழைந்து நிற்கும் ஏற்றமிகு கோட்பாடுகளை எடுத்துக் கூறுகிறது இந்த ஆராய்ச்சி.

சட்டங்களின் உள்ளோட்டமான சிந்தனைகளையும், அவற்றின் சீர்மையினையும் செப்பமுறக் காட்டுவது இந்த ஆராய்ச்சியின் நோக்கமாகும்.

எனவேதான், ''சட்ட இயல் என்பது சட்ட ஞானத்தின் தத்துவக்கூறு''[2] என்கிறார் சிசரோ என்ற பேரறிஞர்.

நிலவும் சட்டங்களின் நீர்மையினை ஆய்கின்றது சட்ட இயல். அந்த நீர்மை எவ்வாறு இருக்க வேண்டும் என்று கூறுவதில்லை; இவ்வாறு இருக்கிறது என்பதையே சட்ட இயல் ஆராய்ச்சி விளக்குகின்றது.

ஆதலால்தான், ''சட்ட இயல் என்பது நிலவும் சட்டங்களின் நீர்மையினைக் காட்டும் அறிவியல்''[3] என்று கூறுகின்றார் ஹாலண்ட் என்ற சட்ட இயல் அறிஞர்.

---

1 We may define Jurisprudence as the science of civil law - Salmond

2 Jurisprudence - Philosophical aspect of the knowledge of the law - Cicero.

3 Jurisprudence is the formal science of positive law - Holland.

சட்ட இயலுக்கு ஆங்கிலத்தில் உள்ள இலக்கணங்களைக் கண்டு நாம் அயர வேண்டியதில்லை. கீழ்வரும் எடுத்துக் காட்டுகள் மூலம் எளிமையாகக் கருத்துகளைப் புரிந்து கொள்ளலாம்.

உலகில் நிலவும் பெரும்பாலான குற்ற இயல் சட்டங்களில் திருட்டுக் குற்றத்திற்கு ஆறுமாதம் சிறைத் தண்டனை என்றும், கொலைக் குற்றத்திற்கு மரண தண்டனை என்றும் விதிக்கப் பட்டிருக்கின்றது.

இதில் இருந்து தெரிவது என்ன?

சிறு குற்றங்களுக்குச் சிறிய தண்டனையும் கொடுங் குற்றங்களுக்குக் கடுமையான தண்டனையும் விதிக்கப்படுகிறது என்பதாகும். இந்தப் பொதுக் கொள்கையைப் புலப்படுத்துகிறது சட்ட இயல் ஆராய்ச்சி.

குறைந்த வயதுடைய இளமைப் பருவத்தினர் சிறு குற்றங்கள் இழைத்து விட்டால் அவர்களை எச்சரித்து விடுமாறு பல நாட்டுச் சட்டங்கள் பரிந்துரைக்கின்றன.

இதில் இருந்து தெரிவது என்ன?

குற்றச் செயலை மட்டும் பார்க்காமல் குற்றவாளியின் நிலையையும் கண்டு தண்டனை விதிக்கப்படுகிறது என்ற கோட்பாடு புலப்படுகிறது. இதனை நமக்கு உணர்த்துகிறது சட்ட இயல்.

ஒருவர் கவனம் இன்றி விசைவண்டியை ஓட்டியதால் மற்றொருவர் மீது மோதி மரணத்தை விளைக்கின்றார். அவருக்குத் தண்டனை ஓர் ஆண்டு வரை சிறை அல்லது அபராதம் என்று விதிக்கிறது சட்டம். ஆனால், கத்தியால் குத்தி மரணம் விளைவித்தவருக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது.

இதனால் தெரிவது, குற்றச் செயலை விட, குற்ற வாளியின் மனநிலை, தீய எண்ணம் முக்கியமானவை என் றாகின்றன. இந்த அடிப்படை உண்மையினை உணர்த்துகிறது சட்ட இயல் ஆராய்ச்சி.

ஒருவர் மற்றொருவருடன் ஒப்பந்தம் செய்து கொண்டால், அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றவேண்டும் எனச் சட்டங்கள் விதிக்கின்றன.

இதிலிருந்து, தந்த வாக்கினைத் தவறாது காப்பாற்ற

வேண்டும் என்ற ஒழுக்க நெறியினை ஓம்பி நிற்கிறது சட்டம் என்ற உண்மையினை ஓர்ந்து காண்கிறது சட்ட இயல்'.

இவ்வாறாகப் பல்வகைச் சட்டங்களையும் ஆய்ந்து அவற்றின் கோட்பாடுகளை, அடிப்படைத் தத்துவங்களை எடுத்துக்காட்டுகிறது 'சட்ட இயல்' என்ற அறிவியல் ஆராய்ச்சி.

இக் கூறுபாடுகளை எல்லாம் நன்கு உணர்த்தும் வகையில் சட்ட இயல் என்பதற்குத் தக்கதோர் இலக்கணம் கூறியுள்ளார், சால்மண்ட் எழுதிய 'சட்ட இயல்' நூலின் பதிப்பாசிரியரான பிட்ஸ் ஜெரால்டு என்ற பேராசிரியர்.

'சட்டம், சட்ட முறைகள் இவற்றின் அடிப்படைக் கொள்கைகளைத் தெளிவாகக் காட்டும் நோக்குடன், சட்டத்தின் பொதுவியலான நுட்பக் கோட்பாடுகளைக் கூர்ந்து காணும் ஆராய்ச்சியே 'சட்ட இயல்' என்பது.' [1]

சட்ட நெறி முறை

பொதுவாக ஓர் ஒழுங்கு முறையினை'நெறி முறை' என்று கூறுகின்றோம்.

அறத்தை ஒட்டிய ஒழுங்கு முறையினை 'அறநெறி முறை' என்றும், ஒழுக்கத்தை ஒட்டிய முறையினை 'ஒழுக்க நெறி முறை' என்றும் கூறுகின்றோம்.இவை போன்றே, சட்டங்களுக்கெல்லாம் பொதுவான ஒழுங்கு முறைகளைச் 'சட்ட நெறி முறை' என்று கூறலாம்.

சட்டங்களின் தன்மை, தகைமை, கொள்கை, குறிக்கோள் அனைத்தும் அடங்கும் வகையில் 'சட்ட நெறி முறை' என்ற தொடர் பயன்படுகிறது.

சட்டவாசகங்களைக் கொண்டது சட்டம். அந்த வாசகங்களுக்கு அடிப்படையாக அமைந்து விளங்கும் கொள்கைகளே சட்ட நெறி முறைகள். பல்வேறு சட்ட வாசகங்களையும் ஆய்ந்து அவற்றில் அடங்கியுள்ள சட்ட

1 Jurisprudence is the name given to a certain type of investigation into law, an investigation of an abstract, general and theoretical nature which seeks to lay bare the essential principles of law and legal systems - P.J. Fitzgerald.

நெறிமுறைகளைத் தெளிவாகக் காட்டுகிறது சட்ட இயல்.

எனவே, 'சட்ட இயல்' என்பது சட்டங்களை ஆய்ந்து அவற்றின் உட்கிடையான சட்ட நெறிமுறைகளைக் காட்டுவதாகும் என்று நாம் சட்ட இயலுக்கான இலக்கணத்தைக் கூறலாம்.

'சட்டத்தின் ஆதாரக் கொள்கைகளை அறிவியல் அடிப்படையில் இசைத்துக் காண்பது சட்ட இயல்'[1] என்கிறார் ஆலன்.

சட்டம் என்பது விதிமுறைகளைக் கொண்டதாகவும், சமுதாய ஒழுங்கமைதியைப் பேணும் கருவியாகவும் அமை—கின்றது. இவ்விரு கூறுகளையும் கருத்திற் கொண்டே சட்ட நெறியின் தகைமையினை நாம் ஆய்கின்றோம். ஆதலால், 'சட்ட நெறி முறை' என்பது ஏதோ தனித்து நிற்கும் ஒரு தத்துவம் அன்று. சமுதாயத்தில் வாழும் மக்களின் நலனைப் போற்றும் நோக்குடன் இயங்குவதே சட்ட நெறியாகும். சமுதாயத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டது சட்ட நெறி முறை. சமுதாய நலன்களும் நம்பிக்கைகளும் காலமெல்லாம் மாறாமல் நிலைத்து நிற்பனவல்ல. நாட்டுக்கு நாடு அவை மாறலாம். கால வளர்ச்சியிலே அவை மாற்றங்கள் பெறலாம். மக்களின் கல்விநிலைக்கேற்பவும், செல்வநிலைக்கேற்பவும் சட்ட நெறி முறைகளும் மாறுவது உண்டு. எனவே அரசியல், சமூக இயல், ஒழுக்கம், உள இயல், அறிவியல் போன்ற நெறிகளின் பின்னணியிலேயே சட்ட நெறி முறையினை நாம் மதிப்பிட வேண்டியதாகிறது.

இதனால்தான் ஜூலியஸ் ஸ்டோன் என்ற அறிஞர், 'சட்டத்தைத் தவிர்த்த மற்ற கல்வித் துறைகளின் அறவொளியிலே சட்டத்தின் கொள்கைகளையும், உத்திகளையும் வழக்கறிஞர்கள் ஆராய்வதே சட்ட இயல் ஆகும்'[2] என்று கூறுகின்றார்.

---

1 Jurisprudence is the scientific synthesis of the essential principles of law - C.K. Allen.

2 It is the lawyers' examination of the precepts, ideals and tenchiques of law in the light derived from present knowledge in disciplines other than the law - Julius Stone.

சட்ட கருத்தமைவுகள் பற்றிய ஆராய்ச்சி

சட்ட இயலில் மற்றுமொரு முக்கியமான கூறு, சட்டக் கருத்தமைவுகளைப் பற்றிய ஆராய்ச்சியாகும்.

உரிமை இயல் (Civil), குற்றவியல் (Criminal) சட்டங்கள் எல்லாமே மக்களின் உரிமைகளைக் காக்கின்றன. ஒருவருக்குச் சட்டப்படி உள்ள உரிமைகளுக்கு ஊறு விளைவிக்காமல் இருக்கும் கடமை பிறருக்கு உண்டு. இந்தக் கடமை ஆற்றும் பொறுப்பில் இருந்து தவறுவோர் தண்டனைக்கு ஆளாகின்றனர்.

மேலே கண்ட வாக்கியங்களில் உரிமை, கடமை, பொறுப்பு, தண்டனை முதலிய சொற்கள் வருகின்றன. இன்னும் இதுபோன்ற சட்டக் கருத்துகள் கொண்ட சொற்கள், குற்றம், செயல், கருத்து, கவனமின்மை, சொத்து, உடைமை எனப் பல உள்ளன. சட்டத்தில் இத்தகைய சொற்கள் கலைநுட்பச் சொற்களாகப் (Technical words) பயன்படுத்தப்பெறுகின்றன. இச்சொற்களில் அடங்கியுள்ள சட்டக் கருத்தமைவுகளைத் திட்டமாக வரையறுத்துக் காணுவதும் ஆராய்ச்சியின் பணியாகின்றது.

இசைக் கலையினைப் பயிலுவோர்க்கு அடிப்படையாக உள்ளன ச, ரி, க, ம, ப, த, நி என்ற ஏழு வகையான இசைக் கூறுகள். குழலிசை, குரலிசை, வேறு கருவிகளின் இசை எல்லாவற்றுக்குமே ஏழிசைகள் தாம் ஆதாரமாக உள்ளன. இந்த ஏழிசைகளின் அடிப்படை அறிவு இன்றி ஒருவர் இசைக் கலையை முறையாகப் பயிலுதல் இயலாது.

இந்த முறையிலேயே பல்வகைச் சட்டங்களுக்கும் ஆதாரமாக உள்ளவை சட்டக் கருத்தமைவுகளும், அக்கருத்தமைவு கொண்ட சட்டச் சொற்களும் ஆகும். நுட்பமான சட்டக் கருத்தமைவுகள் (Legal concepts) பற்றித் திட்பமான அறிவு இல்லையேல் சட்ட அறிவு நிறைவு பெற்றதாகாது. எனவேதான், அடிப்படைச் சட்டக் கருத்துகள் பற்றி ஆராயும் சட்ட இயல் எல்லாச் சட்டங்களுக்கும் அடிப்படை நூலாக இருக்கிறது; சட்டக் கல்விக்கும் ஆதாரமாக விளங்குகிறது.

எனவே, சட்ட இயல் ஆராய்ச்சியில் சட்டவிதிகளின் தன்மையினைக் கூர்ந்து காண்கின்றோம்; சட்டக் கருத்தமைவுகளின் உள்ளீடுகளை ஓர்ந்து உணர்கின்றோம்; பல்வேறு சட்ட முறைகளின் சிறப்புக் கூறுகளை ஆழ்ந்து

ஆய்கின்றோம்'[1] என்கிறார் சால்மண்ட்.

ஒரு மொழிக்கு எவ்வாறு இலக்கணம் இன்றியமை யாததோ அவ்வாறே சட்ட அறிவிற்குச் சட்ட இயல் இன்றியமையாததாகின்றது

சட்டம் என்பது ஓட்டமில்லாது நிற்கும் நீர்த் தேக்கம் அன்று. அது ஓடும் ஆற்றைப் போன்றது.

ஓட்டமில்லாத நீர்நிலையில் பாசி படர்கிறது; நாற்றம் எழுகின்றது. அதுபோல், மாறுதல் இல்லாத சட்டங்கள் நாளடைவில் மக்கிப் போகின்றன. வளர்ச்சி இல்லாத சட்டங்கள் வலியிழந்து நலிகின்றன. சமுதாயத்தின் வளர்ச்சிக்கேற்ப, சட்டமும் வளர வேண்டும்.

எனவே, சட்ட நெறிமுறையும் காலத்திற்கேற்ப மாறுகின்றது.

மேலும் சட்ட இயல், சமுதாயஞ் சார்ந்த அரசியல், பொருளியல், அறவியல் போன்ற துறைகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டதாகும். ஓர் இயலில் ஏற்படும் மாறுதல்கள் பிற இயல்களையும் பாதிக்கின்றன. ஆதலால், சட்ட இயல் ஆராய்ச்சி பிற துறைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்துகிறது.

ஆதி காலத்தில் சட்டங்கள் இருந்தன. ஆனால், 'சட்ட இயல்' என்ற பயிற்சி அறிவியலாக உருவெடுக்கவில்லை. உரோமானியர்கள்தாம் முதன் முதலில் சட்டம் பற்றிய அறிவியலை ஒரு தனித்துறைக் கல்விப் பயிற்சியாகக் கண்டனர். உரோமானிய மன்னன் ஜஸ்டினியன் (529.— 544)காலத்தில் 'சட்டத் தொகுப்பு' (Code of Civil Law) ஒன்று ஆக்கப்பெற்றது. அதில், சட்ட விதிகளும் அவற்றுக்கு ஆதாரமான கொள்கைகளும் வகை செய்யப்பட்டுத் தொகுக்கப் பெற்றன. குறிப்பிட்ட நாடுகளைச் சேர்ந்த சட்டங்கள் என்று இல்லாமல், பொதுவான சட்ட அறிவியலை உருவாக்கிய பெருமை அந்நூலுக்கு உண்டு. பிற்காலத்தில் வந்த ஐரோப்பிய நாட்டுச் சிந்தனையாளர்களுக்கு இத்துறையில் வழிகாட்டியது இந்நூலேயாகும்.

---

[1] In Jurisprudence we are concerned ratner to reflect as the nature of legal rules, on the underlying meaning of legal concepts and on the essential features of legal systems - Salmond

பதினெட்டாம் நூற்றாண்டில்தான் இங்கிலாந்தில் சட்ட அறிவியல் பரவியது. ஹாப்ஸ் (Hobbes), பெந்தம் (Bentham), ஆஸ்டின் (Austin) போன்ற சிந்தனையாளர்கள் சட்ட இயல் பற்றிய நூல்களை எழுதினார்கள். அதற்குப் பின்னர், சட்டத்தின் ஆட்சி (Rule of Law) நிலவும் பல நாடுகளிலும் இத்துறையில் ஆராய்ச்சி பெருகியது.

இன்று சட்டக் கல்வித் துறையில் 'சட்ட இயல்' முக்கியமானதாகக் கருதப்பெறுகின்றது.

உடற் கூறுகளைப் பற்றித் தெரியாதவர் எவ்வாறு தேர்ந்த மருத்துவர் ஆக முடியாதோ அவ்வாறே சட்டம் பற்றிய அறிவியலான சட்ட இயல் பயிலாதவர் சட்ட அறிஞர் ஆக முடியாது என்று அறிந்தோர் கருதுகின்றனர்.

சட்ட இயல்' என்ற சாணைக் கல்லிலே தீட்டப்பெற்ற அறிவுதான் சட்ட ஞானத்தால் ஒளிர முடியும் என்பது சட்ட அறிஞர்களின் கருத்தாகும்.

சட்ட இயல் பயில் நெறியங்கள்

(Schools of Jurisprudence)

[பகுத்தாய்வுமுறைப் பயில் நெறியம் — வரலாற்று முறைப் பயில்நெறியம் — தத்துவ முறைப் பயில் நெறியம் — சமுதாய முறைப் பயில் நெறியம் அல்லது இயங்கு முறைப் பயில் நெறியம் — நிகழ்வு நிலைப் பயில் நெறியம்]

நம் கண்களுக்குப் புலனாகும் பருப்பொருள் ஒன்றன் அமைப்பும் தோற்றமும் நாம் எந்தக் கோணத்தில் இருந்து பார்க்கின்றோமோ அதற்கேற்ப மாறுகின்றன.

இதைப்போன்றே நாம் ஆய்ந்து காணும் எதுவும் நாம் அதை அணுகும் கோணத்திற்கு ஏற்ப அமைதி பெறுகின்றது.

மேலை நாட்டுச் சட்ட இயல் அறிஞர்கள் பலரும் 'சட்டம்' என்பதைப் பல கோணங்களில் கண்டு ஆய்ந்தனர். அரசுக்கும் சட்டத்திற்கும் உள்ள உறவு, சமுதாய நலனுக்கும் சட்டத்திற்கும் உள்ள உறவு என்று பலதிறப்பட்ட நோக்குகளில் சட்ட இயலை அவர்கள் ஆராய்ந்தனர். இத்தகைய நோக்குகளின் அடிப் படையில் ஆய்வின் அணுகுமுறைகள் வேறுபட்டன. அணுகு முறைகளுக்கு ஏற்ப, பயில்நெறிகள் (பயிலும் நெறிகள்) மாறுபட்டன.

இந்த முறையிலான சட்ட இயல் ஆராய்ச்சியில் மூன்று வகையான பயில்நெறியங்கள் (Schools) உள்ளன. அவற்றைப் 'பகுத்தாய்வுமுறைப் பயில்நெறியம்' (Analytical School), 'வரலாற்றுமுறைப் பயில்நெறியம்' (Historical School), 'தத்துவமுறைப் பயில்நெறியம்' (Philosophical School) என்பார்கள்.

பகுத்தாய்வு முறைப் பயில் நெறியம்

(The Analytical School)

பத்தொன்பதாவது நூற்றாண்டில் பிறந்த பகுத்தாய்வு முறைப் பயில் நெறியத்தைச் சார்ந்த வல்லுநர்கள் சட்டத்திற்கும் அரசுக்கும் உள்ள உறவினையே முக்கியமாகக் கொண்டு சட்ட இயலை ஆய்ந்தனர்.

'அரசின் ஆணைகளே சட்டங்கள்' என்பது இப்பயில் நெறியத்தின் ஆதாரக் கொள்கையாகும். குடிமக்கள் சட்டங் களுக்குக் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும் என்பதால் சட்டங்கள் அரசின் ஆணைகளாகச் செயல்படுகின்றன. எனவே, இப்பயில் நெறியத்தினை, 'கட்டுறுத்துமுறைப் பயில்நெறியம்' (Imperative School) என்றும் குறிப்பிடுவதுண்டு.

சட்டத்தின் கடந்த காலம் பற்றியோ எதிர்காலம் பற்றியோ இக் கொள்கையினர் கவனிப்பதில்லை. 'சட்டம் இன்று எப்படி உள்ளது?' என்பதே இவர்களுக்கு முக்கியமாகும். ஆதலால் இவர்களை 'இற்றை நிலைப் பயில் நெறியத்தினர்' (Positive School) — (as-is-positus) என்பார்கள். இங்கிலாந்து நாட்டு அறிஞர்கள் பலரும் இதை ஆதரித்ததால் இதனை 'ஆங்கில நாட்டுப் பயில் நெறியம்' (English School) என்று பலரும் அறியும்படி குறிப்பிடுவதுண்டு.

வளர்ச்சியடைந்த சட்ட இயல் முறைகளை ஆய்ந்து, சட்ட இயலின் அடிப்படைக் கருத்துகளை வகுத்து, அவற்றிடையே உள்ள உறவுகளைக் காட்டிப் பகுத்தாயும் பாங்கினைக் கொண்ட இந் நெறியினை 'பகுத்தாய்வு முறைப் பயில் நெறியம்' (Analytical School) என்பார்கள்.

ஜெரிமி பெந்தம் (Jeremy Bentham) *(1748—1832)*

பகுத்தாய்வு முறைப் பயில்நெறியத்திற்கு அடிகோலியவர் ஆங்கிலநாட்டு அறிஞர் பெந்தம் என்பவர் ஆவர்.

அரசியலின் அடிப்படையில் அமைக்கப்பட்ட அரசுகளில் அதற்கென ஏலுரிமை (power) பெற்றவர்களால் விதிக்கப்பெற்ற சட்ட விதிகளின் தொகுப்பே சட்டம் என்பது. 'சட்டங்களின் நோக்கம்

தனிப்பட்ட மக்களின் நலனே ஆகும்' என்கிறார் அவர்.

'இயற்கைச் சட்டம்' (Natural Law) என்ற கோட்பாட்டை அவர் ஏற்பதில்லை. 'சட்டம் இயற்கையில் எழுகிறது என்பது பொருளற்றது. இயல்பான ஒழுக்கத்தையும் இயற்றப்படும் விதிகளையும் ஒன்றெனக் கொள்வது கூடாது' என்கிறார். நல்லதே செய்வதை மனித மனம் நாடுகிறது என்றாலும், நல்லது செய்வது மனிதனின் சட்டக் கடமை என்று கொள்ள முடியாது. மனிதனின் இயல்பான நாட்டம் வேறு; இன்றியமையாக் கடமை வேறு என்று வலியுறுத்துகிறார் பெந்தம். இயற்கைச் சட்டம் என்று எதுவும் இல்லையாதலால் 'இயற்கையான உரிமை' (Natural right) என்று எதுவும் இல்லை. 'உரிமை' என்றாலே அது சட்டத்தால் எழும் உரிமையாகத்தான் இருக்கிறதே தவிர சட்டத்திற்கு அப்பால் இயல்பாகவே உரிமை எதுவும் எழுவதில்லை என்பது இவர் கருத்தாகும்.

நீதிபதிகளின் தீர்ப்புகளில் கூறப்படும் கொள்கைகளைச் சட்டவிதிகளாக்கக் கொள்வதை (Judge - made Law) பெந்தம் கடுமையாகக் கண்டனம் செய்கின்றார். 'இரண்டு பேர்களிடையே ஒரு வழக்கு ஏற்பட்டு அந்த வழக்கைத் தீர்க்கும் வகையில் நீதிபதிகளால் இயற்றப்படும் சட்டக் கொள்கை கண்டிக்கத்தக்கது. சட்டவிதி என்றால் அது அனைவருக்கும் தெரிந்திருக்க வேண்டும். அவ்வாறு தெரிந்திருந்தும் சட்டத்தை மீறுவோரைத் தண்டிப்பதே நேர்மையாகும். அப்படியில்லாமல், ஒருவன் ஒன்றைச் செய்யும் வரை காத்திருந்துவிட்டு, அதற்குப் பின் அவனைத் தண்டிப்பது குறும்பு செய்யும் நாயைக் கோலால் அடிப்பது போன்றது' என்கிறார் பெந்தம். இயற்றப்பட்ட சட்டங்கள் (Codifide Law) மட்டுமே இருந்தால்தான் சட்டங்களைச் சீரமைக்க இயலும், என்பது அவர் தம் கொள்கை.

சட்டம் இன்று எப்படி உள்ளது என்பது ஒன்று; சட்டம் எப்படி இருக்க வேண்டும் என்பது வேறொன்று. இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். சட்டம் இன்று எப்படி உள்ளது என்பதே சட்ட இயல் ஆய்வின் நோக்காக இருத்தல் வேண்டும். இன்றுள்ள சட்டங்களை ஆய்ந்து அவற்றின் அடிப்படைக் கோட்பாடுகளைத் தொகுக்க வேண்டும். 'சட்டம்' என்றால் அது ஓர் ஆணை. அந்த ஆணையை இடுபவன் அரசன். ஆணைக்குக் கட்டுப்பட வேண்டியவர்கள் அந்த அரசனுக்கு அடங்கிய குடிமக்கள். அவ்வாறு அடங்கி நடக்காவிடில் விளைவது

தண்டனை. இவ்வாறு, சட்டத்தின் மூலம் எது? இதன் தன்மை என்ன? அதற்கு அடங்கி நடக்க வேண்டியவர் யாவர்? அடங்கி நடக்காவிட்டால் விளைவது யாது? இந்த அடிப்படையில் சட்ட இயலைப் பகுத்து ஆய்கின்றார் அறிஞர் பெந்தம்.

பகுத்தாய்வுக் கொள்கைப்படி தனித்தனிச் சட்டங்களே (laws) ஆயப்படுகின்றன; சட்டநெறி (law) என்று பொதுவாக எதுவும் ஆயப்படுவதில்லை.

பெந்தம் எழுதிய சட்ட நூல்களில் முக்கியமான நூல் ஒன்று (Of laws in General) **1945ஆம் ஆண்டில்தான் அச்சேறி** வெளிவந்தது. அதுவரை அந்நூல் இலண்டன் பல்கலைக் கழகத்தில் எப்படியோ கவனிப்பாரற்றுக் கிடந்தது. எனவே, பெந்தமிற்குப் பின் வந்த ஆஸ்டின் என்பாரே பகுத்தாய்வுப் பயில்நெறியத்தின் தந்தையாகக் கருதப்பட்டார். ஆனால்; உண்மையில் இந்தப் பயில் நெறியத்தைக் கண்டவர் அறிஞர் பெந்தமே ஆவார்.

ஜான் ஆஸ்டின் (John Austin) *(1790—1859)*

ஜான் ஆஸ்டின் என்பார் இலண்டன் பல்கலைக் கழகத்தில் சட்டப் பேராசிரியராக இருந்தவர்.

இவரும் தமக்கு முன் இருந்த பெந்தமைப் பின்பற்றிச் 'சட்டம் என்பது அரசின் ஆணை' எனக் கொண்டவர். பகுத்தாய்வு முறைப் பயில் நெறியத்தின் முக்கிய ஆசிரியராக இவர் கருதப்படுபவர். இவர் நெடுங்காலம் ஜெர்மானிய நாட்டில் இருந்து உரோமர்களின் சட்டத்தை ஆராய்ந்தவர்.

ஆஸ்டினைப் போன்றே, சர் தாமசு ஹாலண்ட் (Sir Thomas Holland) சர் ஜான் சால்மண்ட் (Sir John Solmond) பேராசிரியர் ஹார்ட் (Professor Hart) போன்றோர்களும் பகுத்தாய்வு முறையில் சட்ட இயலை ஆய்ந்தனர்.

ஜெர்மனியில் கெல்சன் (Kelson) போன்றோரும் அமெரிக்காவில் பேராசிரியர் கிரே (Prof Gray) ஹோஃபீல்டு (Hohfield) ஆகியோா நம் இம்முறையைப் பின்பற்றிச் சட்ட இயல் ஆராய்ச்சியை நடத்தினர்.

வரலாற்று முறைப் பயில் நெறியம்
(The Historical School)

இந்நெறியத்தைச் சேர்ந்தவர்கள் சட்டத்திற்கும் அரசுக்கும்

உள்ள உறவை விட, சட்டத்திற்கும் சமுதாய நிறுவனங்களுக்கும் உள்ள உறவினையே சிறப்பாக ஆய்ந்தனர். ஆதிகாலச் சட்ட முறை எப்படி உருவாகியது: அது எவ்வாறு இன்றைய நிலையை எய்தியது என்பன பற்றிய ஆராய்ச்சியை இவர்கள் மேற்கொண்டனர்.

'சட்டம் என்பது அரசனின் ஆணையன்று; அது சமுதாய வரலாறு காரணமாகக் காலப் போக்கில் வளர்ச்சி பெறுவது' என்பது இவர்களின் கொள்கையாகும்.

ஒரு நாட்டு மக்களின் மொழி எவ்வாறு தோன்றி வளர்கிறதோ அவ்வாறே அந்நாட்டின் சட்டமும் தோன்றி வளர்கிறது. நாட்டு மக்களின் நல்லுணர்வுக்கேற்பச் சட்ட நெறியும் தழைக்கின்றது. 'மக்களின் உள்ளத்தில் வேரூன்றி உருவெடுக்கிறது சட்டம்', என்பது இவர்கள் விளக்கம்.

அரசு என்ற அமைப்பு தோன்றுவதற்கு முன்னரே, வழக்க நெறிகள் சமுதாயத்தை ஒழுங்குபடுத்தி வந்தன. அரசு ஏற்படுவதற்கு முன்னர் இருந்த சமுதாய விதிகளையே அரசு செல்லுறுத்தியது. எனவே,'அரசு செல்லுறுத்தும் விதிகளே சட்டங்கள் என்று கூறுவது பொருந்தாததாகும்' என்பது இவர்களின் கோட்பாடு.

சேவினி (Savigny) *1779—1861*

சேவினி என்ற ஜெர்மானிய அறிஞரே வரலாற்றுமுறைப் பயில் நெறியத்தின் முன்னோடியாகக் கருதப்படுகின்றார். இவர் பத்தொன்பதாவது நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

'மக்களின் மொழி, பிற பழக்க வழக்கங்கள் எவ்வாறு காலப் போக்கில் உருவாகின்றனவோ அவ்வாறே சட்ட விதிகளும் சமுதாயத்தில் உருவாகின்றன. இதற்கு அரசியல் அதிகாரமோ சட்டம் இயற்றலோ தேவையில்லை. நாட்டு மக்களின் நலப் பண்பில் முகிழ்ப்பதே சட்டமாகும். நிலத்தின் இயல்பில் நீர் இருப்பது போல், மக்களின் இயல்பில் சட்டம் மலர்கின்றது. வழக்க நெறிகளே வளமைச் சட்டங்களாக உருவெடுத்தன' என்கிறார் இவர்.

சர் ஹென்றி மெய்ன் (Sir Henry Maine) *1822—1888*

இப்பயில் நெறியத்தின் பாங்கினை விளக்கிச் சட்ட இயல் வரலாற்றில் சிறப்பான இடம் பெற்றவர் சர் ஹென்றி மெயின் என்பார். இங்கிலாந்து நாட்டில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகப் பேராசிரியராகப் பணியாற்றிய பின், இந்தியாவில் கவர்னர் ஜெனரலின் ஆட்சிக் குழுவின் சட்டத்துறை

உறுப்பினராக இருந்தார். இந்திய நாட்டின் புராதனச் சட்டவிதிகளை ஆய்ந்து, 'சாதிக்கொரு நீதி' என்று இருந்த கொடுமையைக் கண்டித்து எழுதினார்.

'பிறப்பால் சமுதாய நிலை என்பது மாறி ஒப்பந்தத்தால் சமுதாய நிலை என்பது முன்னேறும் சமுதாயத்தின் இயக்கமாகும்'[1] என்பது அவர் கொண்ட கோட்பாடு ஆகும். அந்நாள்களில் சமுதாயத்தின் அலகாக இருந்தது குடும்பமேயாகும், தனி மனிதன் அல்லன். ஒவ்வொரு குடும்பத்திலும் இருந்த மூத்த ஆண்மகன் அக்குடும்பத்தின் தலைவனாக இருந்தான். பல குடும்பங்களின் கூட்டிணைப்பு குடியிருப்பு ஆகியது. பல குடியிருப்புகள் இணைந்து சிற்றரசாகியது. அந்த நாள்களில் குற்ற இயல் என்பது குற்றவாளியைத் தண்டிப்பதற்கு என்று மட்டுமன்றிக் குற்றவாளியிடமிருந்து இழப்பீடு பெறுவதாகவும் இருந்தது. (The penal law of ancient communities is not the Law of Crimes but the Law of Torts) இவ்வாறெல்லாம் இவர் தமது கொள்கையை விளக்குகிறார்.

இவர் கொள்கைகள் இந்நாளைய அறிஞர்கள் பலரால் ஏற்கப்படாவிட்டாலும் சட்ட இயலை வரலாற்றுப் பின்னணியுடன் ஆய்ந்து அரிய உண்மைகளைக் கண்ட பெருமை இவருக்கு உண்டு.

தத்துவ முறைப் பயில் நெறியம்
(The Philosophical School)

சட்டத்தின் குறிக்கோள் என்ன? அந்தக் குறிக்கோளைச் சட்டம் எய்தும் வழி என்ன? சட்டத்தின் பண்பும் பயனும் எந்த இலக்கை எட்டுவதற்கென்று இயங்குகின்றன? இந்த அடிப்படையில் சட்டத்தை ஆய்கின்றனர் தத்துவ முறைப் பயில் நெறியத்தினர்.

சட்டம் எப்படி இருந்தது என்றோ எப்படி இருக்கிறது என்றோ ஆய்வதைவிட, அது எப்படி இருக்க வேண்டும் என்பதைக் காண்பதே இதில் முக்கியமாகும்.

இவர்கள் சட்டத்தை அரசன இடும் ஆணை என்றோ வரலாற்றுப் போக்கில் வளர்ந்த விதிகள் என்றோ கருதுவதில்லை. மனித இனத்தின் பகுத்தறிவின் பயனாகப் பிறந்த சட்டம் மனித வாழ்வினை ஒழுங்குபடுத்தி உயர்த்த வேண்டும் என்பது இவர்கள் கருத்து.

---

1 The movement of progressive societies has hitherto been a movement from status to contract - Maine.

அறநெறி எவ்வாறு மனிதனை உயர்த்துகிறதோ அவ்வாறே சட்டநெறியும் மனிதனின் உயர்ந்த வாழ்விற்கு உற்ற சாதனம் ஆகின்றது. சமுதாய நலனுக்கு ஏற்ற வகையில் தனி மனிதனின் நடத்தையும் பொதுவான போக்கில் இருததல் வேண்டும். பொதுவான மக்கள் நலனுக்கு இசைந்த வகையில் தனி மனித நலனும் பேணப்பட வேண்டும். இதற்கு வகை செய்வதே சட்டமாகும். இவ்வாறு அறநெறியும் சட்ட நெறியும் ஒன்றி நிற்கின்றன, தத்துவ முறைப் பயில் நெறியத்தில்.

ஹுகோ குரோடியஸ் (Hugo Grotius) *1583–1645*

ஹாலந்து நாட்டு அறிஞரான ஹுகோகுரோடியஸ் என்பார் தத்துவமுறைப் பயில் நெறியத்தின் தந்தை எனப் போற்றப்படுகின்றார்.

மனிதனின் மனச்சான்றே, நல்லது எது தீயது எது என்பதைக் காட்டுகின்றது. எனவே, மனச்சான்றின் அடிப்படையில்தான் சட்ட விதிகள் எழுகின்றன. ஒழுக்கத்தை உரைகல்லாக வைத்தே சட்டங்களை நாம் மதிப்பிட வேண்டும். இயல்பாகவே மனித உள்ளத்தில் எழும் நன்மை தீமை என்ற உணர்வில் இருந்து உதிப்பனவே சட்ட நெறிகளாக உள்ளன. எனவே, மனித இயல்பான 'இயற்கைச் சட்டம்' (Natural Law) என்பதுதான் சட்டங்கள் எல்லாவற்றிற்கும் அடிப்படை ஆகின்றது. இவ்வாறு தமது கொள்கையினை விளக்குகிறார் குரோடியஸ்.

இம்மேனுவேல் கேன்ட் (Immanuel Kent) *1724—1804*

ஜெர்மானிய நாட்டு அறிஞர் இம்மானுவேல் கேன்ட் என்பாரும் தத்துவமுறைப்படி சட்ட இயலை விளக்கியவர் ஆவர். ஒழுக்கம் வேறு சட்டம் வேறு என்றாலும் கூட, சட்டம என்பது ஒழுக்கத்தை விட்டு விலகுவதில்லை என்பது இவர் கோட்பாடு. ஹெகல் (1770—1831) என்ற ஜெர்மானிய அறிஞரும் தத்துவ முறையினைப் பின்பற்றுபவர். 'மனிதனுக்குள்ள விடுதலை வேட்கையின் இயக்கமே மனிதகுலத்தின் வரலாறாக உள்ளது. வரலாற்றுக் காட்சிகள் அனைத்திற்கும் பின்னணியாக இருப்பது விடுதலை வேட்கையாகும். மக்களிடை உறவுகளில் விடுதலை வேட்கை அமைவதுதான் சட்டத்தின் வரலாறு ஆகும். சமயத்தின்

கட்டுகளில் இருந்து விடுதலை, கொடுங்கோன்மையிலிருந்து விடுதலை, பொருளாதார அடிமைத் தளையிலிருந்து விடுதலை என இவ்வாறாக மனித குலம் எய்திய விடுதலைகள் பல. இவ்வாறு தான் சட்டத்தில் ஏற்பட்ட பல மாறுதல்களும் விடுதலையையே குறிக்கோளாகக் கொண்டவை' என்கிறார்.

இருபதாம் நூற்றாண்டில்

இருபதாம் நூற்றாண்டுச் சட்ட இயல் அறிஞர்கள், பழைய பயில்நெறியங்களின் கோட்பாடுகளைப் பகுத்தாய்ந்து அவற்றிடையுள்ள ஒற்றுமைக் கூறுகளைத் தொகுப்பதில் முனைந்தனர்.

கோஹ்லர் (Kohler —*1849 — 1919*), ஸ்டேம்லர் (Stamler —— *1856 — 1938*), ஹெர்பர்ட் ஸ்பென்சர் (Herbert Spencer — *1820 — 1903*), ராஸ்கோ பவுண்ட் (Roscoe Pound — *1870 — 1964*) போன்ற பன்னாட்டு அறிஞர்களும் காலப்போக்கில் மாற்றங்கள் பெற்ற சமுதாய அமைப்புகளின் அடிப்படையில் சட்ட இயல் ஆராய்ச்சியை நடத்திக் கோட்பாடுகளை வகுத்தனர்.

இயங்குமுறைப் பயில் நெறியம் (The Functional School) அல்லது சமுதாயமுறைப் பயில் நெறியம்

அமெரிக்க நாட்டு அறிஞர் டீன் ராஸ்கோபவுண்ட்(Dean Roscoe Pound— *1870 —1964*) என்பார் சட்ட இயலை நாம் பயில்வது, அது எவ்வாறு சமுதாயத்தில் இயங்குகிறது என்பதன் அடிப்படையில் அமைய வேண்டும் என்கிறார்.

எந்தப் பொருளைப் பற்றியும் நாம் புரிந்து கொள்ள வேண்டுமானால் அது எவ்வாறு செயல்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். எனவே, சட்டம் சமுதாயத்தில் எந்த வகையில் செயல்படுகிறது என்பதை நாம் முதலில் காண வேண்டும். இந்த அடிப்படையில் தான் சட்ட இயல் ஆராய்ச்சி அமைய வேண்டும்.

சட்டம் என்பது விதிகளின் தொகுப்பு மட்டுமே அன்று மக்கள் நலன் ஒன்றோடொன்று முரண்படலாம். அத்தகைய முரண்படு நலன்களை இசைவுறச் செய்வதே சட்ட நெறியின் குறிக்கோளாகும். மக்களின் பெரும்பான்மைத் தேவைகளை முரண்பாடு இன்றி நிறைவு செய்வது தான் சட்டத்தின்

பணியாகிறது.[1]

கட்டிடங்களை அமைப்பதற்குப் பொறியியல் உதவுவது போல், சமுதாயக் கட்டுக் கோப்பை அமைப்பதில் சட்டம் உதவுகிறது. எனவே, 'சட்டம் சமுதாயப் பொறி இயலாக (Social Engineering) இயங்குகிறது' என்கிறார் பவுண்ட்.

சட்டம் என்பது சமுதாய அறிவியல் (Social Science) ஆகும். சட்ட விதிகளை மட்டுமே ஆய்வதால் அதன் உண்மைத் தன்மையினை நாம் அறிதல் இயலாது. எனவே, 'நீதிமன்றத் தீர்ப்புகளையும் அத்தீர்ப்புகளால் சமுதாயத்தில் ஏற்படும் விளைவுகளையும் தொகுத்து ஆய்வதே சரியான சட்ட இயல் பயில்முறை' என்கிறார் பவுண்ட். சட்டத்தைச் செல்லுறுத்தும் துறையினரின் செயல்களே முக்கியமாகும். நீதிபதிகளின் சமுதாயப் பின்னணி, அவர்களின் சிந்தனை முறையினைப் பாதிக்கும் சூழ்நிலைகள் இவற்றையும் ஆய்தல் வேண்டும். ஆட்சியாளர்கள் எவ்வாறு நடக்க வேண்டும் என்று விதிக்கும் சட்டவிதிகளைவிட, அவர்கள் எவ்வாறு நடக்கின்றனர் என்பதே சட்ட இயல் ஆய்வுக்கு உற்றதாகும்.

சட்டத்தால் பாதுகாக்கப்படும் நலன்களை தனிம நலன்கள் (Private Interests) பொதும நலன்கள் (Public Interests) சமுதாய நலன்கள் (Social Interests) என்று மூன்று வகைகளாகப் பிரிக்கின்றார் பவுண்ட். இந்நலன்கள் ஒன்றுக்கொன்று இசைந்து இயங்கும் வகையில் சட்டம் செயல்பட வேண்டும்.

சட்டங்கள், அவற்றைச் செல்லுறுத்தல், சமுதாய வாழ்வு மூன்றும் இணைந்தவை என்ற உண்மையினை உணர்த்துகின்றார் பவுண்ட். சட்டத்தின் இயக்கத்தால் ஏற்படும் சமுதாய விளைவுகளை முக்கியமாகக் கருதும் பவுண்டின் ஆய்வுகளைச் 'சமுதாய முறைப் பயில்நெறியம்' (Sociological School) என்றும் கூறுவார்கள்.

யூகன் எர்லிச் (Eugan Ehrlich - 1862 - 1922) என்ற ஐரோப்பிய சிந்தனையாளரும் இம்முறையில் சட்ட இயலை ஆய்பவர்.

[1] Law is a process of balancing conflicting interests and securing the satisfaction of the maximum of wants with the minimum of friction -Pound.

'சட்ட வளர்ச்சியின் ஊற்றுக்கண் சட்டங்களை இயற்றுவதிலோ சட்ட இயல் ஆய்விலோ நீதித் தீர்ப்புகளிலோ இல்லை; சமுதாய நிறுவனங்கள், சமுதாய மக்களிடை எழும் உறவு முறைகள் இவற்றுக்கேற்ப வளர்கின்றது சட்டம். மண உறவு குடும்ப உறவு, ஒப்பந்தம், வாரிசுரிமை (Inheritance)இவை போன்ற சமுதாய உறவுகளே சட்ட வளர்ச்சிக்கு மூலங்களாகின்றன. எனவே, சட்டம் என்பது உயிரோட்டம் கொண்டது, சமுதாய வாழ்வினைச் சார்ந்து நிற்பது. சமுதாய வாணிபம், பிற உறவு முறைகள், மரபுகள் இவற்றை நேரடியாக ஆய்வதே சட்ட இயல் ஆராய்ச்சிக்கு உகந்ததாகும்' —இவ்வாறு எர்லிச் கூறுகின்றார்.

சியோன் டுகூயிட் (Zeon Duguit —*1859 — 1928*) என்ற பிரஞ்சு அறிஞரும் சமுதாயமுறை ஆய்வாளர் ஆவார். 'சமுதாய உறுப்பினர்களாக வாழும் மக்களின் நடத்தையை ஒழுங்குறச் செய்வது சட்டம்; சமுதாயக் கட்டமைப்பின் பண்பும் பயனுமாக உள்ளது சட்டம்' — என்பது இவர் கொள்கை.

ஜெர்மானிய அறிஞர் ஐரிங் (Ihering —*1818 — 1898*) என்பாரும் இந்த வரிசையைச் சேர்ந்தவராவர். சட்டம் என்பது இயல்பாக வளர்வதன்று; அரசால் ஆணையிடப்படுவதும் அன்று; சட்ட விதி ஒவ்வொன்றுக்கும் சமுதாயக் குறிக்கோள் உண்டு. சமுதாயச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப எழுவதே சட்ட விதி ஆகின்றது. முரண்படும் தனிம நலன்களில் சிலவற்றைச் சமுதாய நலனுக்கு ஏற்பத் தேர்வு செய்து அவற்றைப் பாதுகாக்கின்றது சட்டம். இந்த முறையில் ஐரின் சட்ட இயலை ஆய்கின்றார்.

நிகழ்வு நிலைப் பயில் நெறியம்
(Realist School)

சமுதாய முறையில் சட்ட இயலை ஆயும் அறிஞர்களில் சிலர், இன்று சமுதாயத்தில் நிலவும் நிலையைக் கண்டு அதன் அடிப்படையில் ஆய்வினை நடத்துகின்றனர். இவர்களைப் பொறுத்த வரை சட்டம் என்பது நீதிபதிகளால் விதிக்கப்படும் கோட்பாடுகளைக் கொண்டதே ஆகும். நீதிபதிகளின் தீர்ப்புகளில் இருந்து தான் சட்டம் பிறக்கின்றது. இதுவே இன்றைய நிகழ் நிலை. அமெரிக்க நாட்டு நீதிபதி ஆலிவர் வெண்டல் ஹோம்ஸ் (Oliver Wendel Homes *1841 — 1936*) என்பார் இம்முறைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர். 'சட்டம் என்பது நீதிமன்றங்கள்

விதிப்பது' என்று உறுதிபடக் கூறுகின்றார்ஹோம்ஸ்.எனவே, நீதிமன்றங்கள் இயங்கும் விதம், நீதிபதிகளின் சமுதாயப் பின்னணி இவையெல்லாம் தீவிரமான ஆய்வுக்கு உரியன என்கிறார் ஹோம்ஸ்.

சட்டங்களுக்குப் பொருள் விளக்கம் காண்பதில் நீதிபதிகளின் பங்கு என்ன என்பது பற்றியும், அவர்களின் தனிப்பண்பு பற்றியும் இந்நெறியம் ஆய்கின்றது.

சட்ட இயலைப் பயிலும் பல்திறப்பட்ட நெறிகளை நாம் சுருக்கமாகக் கண்டோம். சட்ட இயல் என்பது ஒன்று தான். அதனை ஆயும் வகையில் அணுகும் முறைகள்தாம் வேறுபடுகின்றன. இங்கு ஆழ்ந்து நாம் சிந்தித்தால் ஓர் உண்மை விளங்கும். வேறுபட்ட பெயர்களைக் கொண்ட பயில் நெறியங்கள் ஒன்றுக்கொன்று முரண்படுவன அல்ல. ஓரளவு அவை ஒன்றையொன்று சார்ந்தே உள்ளன; ஒன்றிலுள்ள குறையை மற்றொன்று நிறைவு செய்யும் முறையிலேயே உள்ளது.

எனவே, நாம் சட்ட இயலை 'வரலாற்று முறைச் சட்ட இயல்', 'பகுத்தாய்வு முறைச் சட்ட இயல்' என்று பிரித்துக் காண்பது தவறாகும். 'சட்ட இயல்' என்ற அறிவியல் (Science of Law) ஒன்றுதான். அதனை அணுகும் வழிகள் பல, ஆயும் முறைகள் பல. இந்த அணுகு முறை வேறுபாட்டினால், 'சட்டம் என்றால் என்ன?' என்ற வினாவிற்கான விடைகளே வெவ்வேறு விதமாகக் கூறப்படுகின்றன. அவற்றை இனிக் காண்போம்.

சட்டக் கோட்பாடுகள்
(Theories of Law)

['சட்டம்' என்ற சொல் சுட்டுவது எதை? — 'சட்டம்' என்றால் என்ன? — 'இயல்பான அறவுணர்வே சட்டம்' என்ற கொள்கை — அறமும் சட்டமும் — 'அரசின் ஆணையே சட்டம்', 'கட்டுறுத்துவதே சட்டம்' என்ற கொள்கை; 'நீதி வழங்குவதற்கு உதவுவதே சட்டம்' என்ற கொள்கை 'சட்டம் என்பது விதிகளின் ஒழுங்கமைப்பு' — 'தெளிந்த கொள்கை']

'சட்ட இயல்' என்பது சட்டத்தின் கோட்பாடுகளையும் நெறிமுறைகளையும் ஆராய்வது என்று கண்டோம்.

'சட்டம்' என்ற பொருளே சட்டஇயல் ஆராய்ச்சிக்கு இலக்காக உள்ளது.

எனவே, ஆர்ராய்ச்சியின் தொடக்கத்திலேயே 'சட்டம் என்றால் என்ன?' என்பது பற்றி நாம் காண வேண்டும்.

எடுத்த எடுப்பிலேயே, 'சட்டம் என்றால் என்ன?' என்ற வினாவிற்கு விடை காண்பதில் பல சிக்கல்கள் எழுகின்றன.

முன் அத்தியாயத்தில் சட்ட இயலைப் பற்றி ஆயும் பயில்நெறியங்கள் (Schools of Jurisprudence) பல உள்ளன என்று நாம் கண்டோம். அந்தந்தப் பயில் நெறியங்களுக்கு ஏற்ப, சட்டம் என்பதற்கான விளக்கங்களும் மாறுபடுகின்றன.

'சட்டம்' என்ற சொல் சுட்டுவது எதை?

இந்த இடத்தில் 'சட்டம்' (law) என்ற சொல் எந்த ஒரு குறிப்பிட்ட சட்டத்தையும் சுட்டுவதில்லை. அனைத்துச் சட்டங் களுக்கும் அடிப்படையாக அமைந்துள்ள சட்ட நெறியினைக் குறிக்கும் வகையிலேயே இங்குச் 'சட்டம்' என்ற சொல்லைப்

பயன்படுத்துகிறோம்.

ஒரு நாட்டில் 'சட்டத்தின் ஆட்சி' (rule of Law) நடக்கிறது என்கிறோம். இப்பொழுது 'சட்டம்' என்ற சொல் குறிப்பிட்ட சட்டம் எதையும் சுட்டாமல், பொதுவான சட்டநெறிப் பாங்கினையே குறித்து நிற்கின்றது. இந்த வகையில் பொதுவான சட்டநெறியைக் குறிக்கும் முறையில்தான் 'சட்டம்' என்ற சொல்லைப் பயன்படுத்தி, அது பற்றி ஆய்கின்றோம்.

ஆங்கிலத்தில் 'law' என்ற சொல் இருவகைப் பொருள்களைச் சுட்டுகின்றது. ஒன்று, குறிப்பிட்ட ஒரு சட்டத்தை அது குறிக்கலாம். அப்பொழுது அதை 'a law' என்று கூறுகிறோம். 'குற்ற இயல் சட்டம்', 'சொத்து மாற்றுச் சட்டம்', 'சான்றியல் சட்டம்' என்ற பல்வகைச் சட்டங்களில் ஏதாவது ஒன்றைக் குறிப்பதற்கு 'a law' என்கிறோம். இவற்றையெல்லாம் மொத்தமாக குறிப்பது என்றால் 'laws' என்கிறோம். ஆனால், இச்சட்டங்களின் பொதுவியலான நெறியினைக் குறிப்பதற்கு 'law' அல்லது 'the law' என்று கூறுகின்றோம். எனவே, 'law' அல்லது 'the law' என்றால் 'சட்ட நெறி', 'சட்டக் கோட்பாடு' என்றே பொருளாகும்.

இப்பொழுது, 'சட்டம் என்றால் என்ன?' என்ற வினாவில் வரும் 'சட்டம்' என்ற சொல் பொதுவான 'சட்ட நெறிமுறை' யினையே குறிக்கின்றது என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

'சட்டம்' என்றால் என்ன?

இந்த வினாவிற்கு விடை கூறும் வகையில் சட்டத்திற்கு இலக்கணம் கூற முனைந்தனர், சட்ட இயல் அறிஞர்கள். 'சட்டம்' என்ற சொல்லிற்கு வரைவுரை (definition) கூற அவர்கள் முற்பட்டனர்

எந்த ஒரு கருத்தியலான சொல்லிற்கும் வரைவுரை கூறுவது என்றால் பல் கோணங்களில் இருந்து அதைக் கண்டு கூறலாம். அவ்வாறுதான் 'சட்டம்' என்ற சொல்லிற்கும் வரைவுரை கூறியுள்ளனர், சட்ட இயல் அறிஞர்கள்.

மலர்களை நாம் வருணித்து விடலாம். ஆனால், அவற்றின் மணத்தை எப்படிக் கூறுவது?

அதுபோல், பல்வகைச் சட்டங்கள் எவ்வாறு இருக்கின்றன என்று கூறிவிடலாம். ஆனால், அவற்றுள் இலங்கும் பொதுவான தன்மையினைக் காட்டும் வகையில் சட்டத்தின் இலக்கணத்தைக்

கூறுவது எளிதன்று. உருவெடுக்கும் சட்டங்களனைத்திலும் கருவாக உள்ளது எது என்பதை உணர்த்தும் முறையில் சட்டத் திற்கான இலக்கணம் இன்னும் உறுதியாகவில்லை என்றே கூற வேண்டும்.

சாதாரண, பருப்பொருள் ஒன்றுக்கு வரைவுரை கூறுவது என்றாலே, அது பல்வகைப் பட்டதாக இருக்கலாம். 'சீனி' என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். அதற்கு வரைவுரை கூறுவது என்றால், அதை வருணிக்கும் வகையில், 'சீனி என்பது வெண்மணல் போன்று இருக்கும்' எனலாம். அதன் தன்மையைக் குறிக்கும் வகையில் 'சீனி இனிப்புச் சுவையுடையது' என்றும் கூறலாம். அது எவ்வாறு ஆக்கப்படுகிறது என்பதைக் கூறும் வகையில் 'கரும்புச் சாற்றிலிருந்து கிடைப்பது சீனி' என்றும் சொல்லலாம். அதன் பயன்பாட்டைச் சொல்லும் வகையில் 'சீனி என்பது இனிப்புப் பண்டங்களைச் செய்வதற்குப் பயன்படுவது' என்றும் பகரலாம். சீனி என்ற பொருளைப் பல்வகைக் கோணங்களிலிருந்து கண்டு அதற்கு வரைவுரை கூறலாம்.

ஒரு பருப் பொருளைக் குறித்தே இத்தனை வகையான வரைவுரைகள் கூறலாம் என்றால், 'சட்டம்' என்ற கருத்தியலான சொல்லிற்குப் பல்வகைப்பட்ட வரைவுரைகள் எழுவது இயல்பேயாகும்.

சட்டத்தின் பண்பினைக் கூறுகிறது ஒரு வரைவுரை; அதன் பயன்பாட்டைக் கூறுகிறது மற்றொரு வரைவுரை; அதன் சீர்மை யினை விளக்குகிறது ஒரு வரைவுரை; அதன் செயற் பாட்டினை விளக்குகிறது வேறொரு வரைவுரை. இவ்வாறு, ஒவ்வொரு கோணத்தில் இருந்து கண்டு கூறப்படும் வரைவுரைகள் வெளித் தோற்ற முரண்பாடுகளுடன் காணப்படுதல் இயல்பேயாகும்.

'சட்டம் என்பது அரசின் ஆணை' என்பார் ஓர் அறிஞர். அது 'அறத்தின் குரல்' என்பார் மற்றோர் அறிஞர். 'நீதியின் கருவி சட்டம்' என்பார் ஒரு சிந்தனையாளர். அது 'நேர்மையின் இயக்கம்' என்பார் வேறொரு சிந்தனையாளர். இவ்வாறு பல கோணங்களில் இருந்து கூறப்படும் வரைவுரைகளை ஆய்வு செய்யும் பொழுதுதான் சட்டத்தின் உண்மைத் தன்மையினை முழுமையாக நாம் காண முடிகின்றது.

எனவே, சட்டத்திற்கான பல்வேறு இலக்கணங்களைக் கண்டு நாம் அயர்ந்து போக வேண்டியதில்லை. மாறாக, சட்டத்தின் பல்வேறு தன்மைகளையும் ஓர்ந்து நாம் காண்பதற்கு

அவை உதவுகின்றன.

மேலை நாட்டு அறிஞர்கள் ஒவ்வொருவரும் எவ்வாறு 'சட்டம்' என்பதற்கு வரைவுரை வகுத்துள்ளனர் என்பதை வரிசைப்படுத்தி நாம் காண்பதென்றால், அது வரைவுரைகளின் பட்டியலாக அமைந்துவிடும். எனவே, சட்ட இயலறிஞர்களின் அணுகு முறையின் அடிப்படையில் அவர்கள் கூறியுள்ள வரைவுரைகளை வகுத்து நாம் காண்பது பொருத்தமாகும். அதனை இங்குக் காண்போம்.

சட்டத்தின் தன்மையினை மூன்று வகையாக அணுகுகின்றனர் சட்ட நூலறிஞர்கள் என்கிறார் பிட்ஸ் ஜெரால்டு (Fitz gerald)

1) சட்டம் என்பது மனிதனின் இயல்பான அறவுணர்வு என்று கூறும் கொள்கை — இது 'இயல்பான அறநெறியே சட்டம்' எனும் கொள்கையாகும்.

2) 'அரசின் ஆணையே சட்டம்' எனும் கொள்கை.

3) 'நீதி வழங்குவதற்கு உதவும் கருவியே சட்டம்' எனும் கொள்கை.

இந்த அணுகுமுறைகள் ஒவ்வொன்றையும் சிறிது விரிவாகக் காணலாம்.

'இயல்பான அறவுணர்வே சட்டம்' என்ற கொள்கை

அரிஸ்டாட்டில், பிளேட்டோ போன்ற கிரேக்க மேதைகளிலிருந்து இன்றையச் சட்ட நூலறிஞர்கள் வரை பலர் இக்கொள்கையினை ஆதரிக்கின்றனர்.

ஜஸ்டினியன் (Justinian) ப்ளாக்ஸ்டோன் (Blackstone), சிசரோ (Cicero) அக்வினஸ் (Aquines) ஆகியோர் இறைவன் வகுத்த நீதி நெறியாகிய அறவுணர்வை ஒட்டிய விதிகளே உண்மையான சட்ட விதிகள் என்ற கோட்பாட்டினை ஆதரித்தனர்.

'இயற்கை நெறி என்ற சட்டக் கொள்கை வானம் போன்று பரந்து விரிந்துள்ளது. அந்த வானவீதியிலே, ஆதிகாலத்தில் இருந்து, அறிஞர்கள் கூறிய ஞானவாசகங்கள் விண்மீன்களாகச் சுடர் விடுகின்றன'[1] என்கிறார் டயஸ் (Dias)

[1] No other firmament of legal or political theory is so bejwelled with stars as that of natural law which scintillates with contributions from all ages - Dias.

'இயற்கையின் ஆற்றல் ஓர் ஒழுங்குக்கு உட்பட்டே இயங்குகிறது. விண்ணின் கோள்கள் தம் நிலையில் தவறாது இயங்குகின்றன. பருவங்கள் தவறாது குறித்த காலத்தில் மாறி மாறி வருகின்றன. தாவரங்கள் அனைத்தும் தம் நிலை தவறாமல் முளைத்து வளர்ந்து பலன் தருகின்றன. இத்தகைய இயற்கையின் வழி வாழும் மனிதனும் தன் பகுத்தறிவு கொண்டு பண்போடு வாழ்கின்றான். நன்மை எது, தீமை எது என்பதை அவன் நன்மனச்சான்று அவனுக்கு உணர்த்துகின்றது. அவனது உள்ளமே ஒழுக்க உணர்வுகளின் உறைவிடமாக உள்ளது. எனவே, மனிதனின் இதயத்தில் இயல்பாக எழும் ஒழுக்க உணர்வுகளே சட்ட நெறியாகும்' என்பது இக்கொள்கையின் அடிப்படைக் கருத்தாகும்.

> இங்கிலாநது நாட்டில் தலைமை நீதிபதியாக இருந்த சர் எட்வர்டு கோப் (Sir Edward Cope) என்பார் 'அறக் கோட்பாடுகளுக்கு முரணாகச் சட்டம்' (Common law) இருந்தால் அது செல்லுரிமை அற்றது' என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

இதயத்தின் இயல்பாகச் சட்டத்தைக் கொள்ளுவதால் இக்கோட்பாட்டினை 'இயற்கைச் சட்டக் கோட்பாடு' (Natural law theory) என்று கூறுவார்கள்.

ஆங்கிலத்தில் 'இயற்கைச் சட்டம்' எனபது அறவுணர்வைக் குறிப்பதாகும். எனவே, இதை 'அறநெறிக் கோட்பாடு' என்பதே பொருத்தமாகும். அறத்திற்கும் சட்டத்திற்கும் மூலமாக அமைவது மக்களின் அனுபவ அறிவு; அவற்றின் குறிக்கோளாக விளங்குவது சமுதாய இன்பம். இவ்வாறு, மூலத்திலும் நோக்கத்திலும், அற நெறியும் சட்ட நெறியும் இணைந்தே இருக்கின்றன. இந்த அடிப்படையில் தான், 'அடுத்தவர் மீது அன்பு காட்டு' என்ற அறநெறி 'அயலாருக்குத் தீங்கு விளைவிக்காதே' என்ற சட்ட விதியாக மாறுகிறது'[1] என்று லார்டு அட்கின் என்ற ஆங்கில நாட்டு நீதிபதி ஒரு தீர்ப்பிலே கூறியுள்ளார்.

சட்டவிதிகளில் அடங்கியுள்ள அறக்கொள்கைகளை உணரும்பொழுது தான், சட்டவிதிகளின் நீர்மையினை நாம் நன்கு உணர்தல் இயலும். ஒழுக்க நெறியை ஒட்டிச் சட்டநெறி அமைவதாலேயே, சட்ட நெறி தனிச் சிறப்புப் பெறுகின்றது.

---

1 The rule that you are to love your neighbour becomes in law, you must not injure your neighbour - Lord Atkin in Donoghue Vs Stevenson (1932 - A C. 562).

'சட்டமும் ஒழுக்கமும் இணைந்து நிற்கின்றன. சட்டநெறியின் சாரமான ஒழுக்கக் கொள்கைகளை ஒருவர் உணராவிடில் சட்டத்தின் அடிப்படைத் தன்மையினை அறிதல் இயலாது'[1], என்கிறார் பேராசிரியர் குட்ஹார்ட்.

'நல்லனவே செய்தல் வேண்டும், தீயன விலக்க வேண்டும். இவையே அறநெறியின் அடிப்படையாகும். இவற்றிலிருந்து எழுவனவே மற்ற நெறிகள் அனைத்தும்' என்கின்றார் தாமஸ் அக்வினஸ் (Thomas Aquinas) என்ற கிறித்துவஞானி.

"அல்லவை தேய அறம் பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்", என்பது வள்ளுவம்.

சட்டவிதிகளுக்கு மக்களில் பலர் பணிந்து நடப்பது அச்சத்தால் மட்டும் அன்று; அறவுணர்வால்தான் என்பது உண்மையாகும். சட்ட விதிகளுக்கு அடிப்படையாக அறநெறி அமைந்துள்ளதால் தான், மக்கள் சட்டத்திற்கு அடங்கி ஒழுகு-கின்றனர். அறவுணர்வு மக்கள் மனத்தில் இயல்பாய் எழுவது. அதை ஒட்டி ஒழுக வேண்டும் என்ற எண்ணமும் மக்களிடம் இயல்பாகவே உள்ளது. எனவே, அறநெறியை அடுத்து எழும் சட்டவிதிகளுக்குப் பணிந்து நடக்க வேண்டும் என்ற கடமையுணர்வு மக்கள் மனத்தில் இயல்பாகவே எழுகின்றது.

'நீதிமன்றத்தில் சான்று கூறுபவர் உண்மையே கூற வேண்டும்' என்பது சட்டவிதி. ஆனால், சான்றுஅளிப்பவர் கூறுவது உண்மையா, பொய்யா என்பதை உறுதிபடக் காண்பதற்கான உத்தி ஏதும் இல்லை. இந்நிலையில் சட்டம் வலியிழந்து நிற்கிறது. எனவேதான், சான்றளிக்க வரும் ஒவ்வொருவரும் முதலாவதாக ஓர் உறுதி மொழி எடுக்க வேண்டும் என்று சட்டம் விதிக்கின்றது. "எனது மனச்சான்று அறிய நான் உண்மையே கூறுவதாக உறுதியளிக்கிறேன்", என்று சாட்சிகள் ஆணையிட்டு உறுதி மொழி கூறுகின்றனர். எனவே, ஒருவர் உண்மையினை உரைப்பது அவரது மனச் சான்றினை, அறவுணர்வினைப் பொறுத்ததே ஆகின்றது. இவ்வாறு, அறம் என்பது சட்டத்திற்கு ஆதாரமாக அமைவதோடு சட்டம் திறம்படச் செயல்படுவதற்கும் உதவுகின்றது.

---

1 There is in England, therefore, a close bond between law and morals, and it is impossible to understand the nature of English Law unless we also recognise the various moral ideas which it represents - Dr. A.L. Goodhart in 'English Law and Moral Law'

'சட்ட நெறியின் பண்பும் பயனுமாகி அதற்கு ஆதாரமாகவும் அமைவது, முக்கியமாக, ஒழுக்க நெறியே யாகும்' என்று பேராசிரியர் குட்ஹார்ட் கூறுகின்றார்.

நம் நாட்டிலுள்ள நீதிமன்றங்களை "அறங்கூறும் அவையம்" என்றே பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பகருகின்றன:

"அரசு கோல் கோடினும், அறங்கூறு அவையத்து
உரை நூல் கோடி ஒரு திறம் பற்றினும்,
நாவொடு நவிலாது நவை நீர் உகுத்துப்
பாவை நின்று அழூஉம் பாவை மன்றமும்"
(காதை 5 — வரி 135—138)

என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

"செற்றமும் உவகையும் செய்யாது காத்து,
ஞெமன் கோலன்ன செம்மைத் தாகிச்
சிறந்த கொள்கை அறங்கூறு அவையம்"
(வரி—490—492)

என்று மதுரைக் காஞ்சியும்,

"அறங்கெழு நல்லவை உறந்தை அன்ன"
(93:5)

என்று அகநானூற்றுப் பாடலும் கூறுகின்றன.

இயல்பான அறவுணர்வே சட்டநெறி என்று கூறுவோரின் கொள்கை இவ்வாறு விளக்கப்படுகிறது. ஒவ்வொருவரும் இவ்வாறுதான் இயங்க வேண்டும் என்ற இயல்பான நெறி உள்ளது. ஒரு கடிகாரத்தை எடுத்துக் கொண்டால் சரியான நேரத்தைக் காட்டுவதே அதன் முறையான இயல்பாக இருக்க வேண்டும். சரியான நேரத்தைக் காட்டாத கடிகாரம் அதன் இயல்புக்கு மாறாக இயங்குவதாகின்றது. அது போன்றே, மனிதனுக்கும் இயல்பான பண்புகள் உண்டு. அவனது தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமெனில் அவன் முறை தவறாது இயல்பாக இயங்க வேண்டும். அவ்வாறு, இயல்பாக இயங்குவதே ஒழுக்க நெறியாகும். இந்த ஒழுக்க நெறியில் தோன்றுவதே சட்ட நெறி.

---

1 It is for this reason that the moral sense is one of the dominant forces not only in establishing the efficiency of law, but also in its very existence - Dr. A L Goodhart.

இக்கோட்பாடு பற்றிய ஆய்வுரை

இக்கோட்பாடு, சட்ட நெறி எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் கூறுகின்றது. ஆனால், சட்டம் இன்று இருக்கும் நிலையைக் கூறுவதன்று. நாம் சட்ட இயலில் காண்பது சட்டநெறி எவ்வாறு இருக்கிறது என்பதைத் தான்; எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைப் பற்றி அன்று.

அறமும் சட்டமும்

மேலை நாடுகளில் அறமும் சட்டமும் ஒன்று என்ற கருத்தே பதினெட்டாம் நூற்றாண்டு வரை பரவியிருந்தது. 'ஒழுக்கம் என்றாலும் அறம் என்றாலும் ஒன்றே தான். சட்ட விதிகள் எல்லாம் அறத்தின் அடிப்படையில் தோன்றி, அதனால் தனி ஆற்றலையும், மக்களைப் பணியச் செய்யும் மாட்சியையும் பெறுகின்றன', என்று ப்ளாக்ஸ்டோன் (Blackstone) என்ற ஆங்கில நாட்டுச் சட்ட வல்லுநர் கூறுகின்றார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மேலை நாட்டுச் சட்ட அறிஞர்கள் அறத்திற்கும் சட்டத்திற்கும் உள்ள வேறுபாடுகளை ஆய்ந்து கூறினர். 'அரசு ஒரு நெறியைச் செயல் படுத்தினால் மட்டுமே அது சட்டமாகிறது. அரசால் செயலுறுத்தப்படுவன எல்லாம் அறநெறிகளாகவே இருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. எனவே, அறநெறிக்கு மாறுபட்டதாகக் கூடச் சட்டநெறி இருக்கலாம்'[1] என்கிறார், ஹாலண்ட் என்ற சட்ட அறிஞர்.

'ஒரு சட்டவிதி ஒழுக்க நெறிக்கு மாறுபட்டதாகக் கூட இருக்கலாம். ஆயினும்,அது சட்டமே ஆகும். அத்தகைய சட்டவிதிக்குப் பணியாமல் இருப்பதே நமது ஒழுக்கக் கடமையாகவும் இருக்கலாம். எனினும், அது சட்டவிதி என்பதை மறுக்க முடியாது'[2] — இவ்வாறு ஆஸ்டின் என்ற அறிஞர் விளக்குகிறார்.

---

1 If it is a question of legal right, all depends upon the readiness of the state to exert its force on its behalf. It is hence obvious that a moral and a legal right are so far from being identical that they may easily be opposed to one another - Holland in 'Jurisprudence'

2 Austin has shown that the law itself may be immoral in which case it is our moral duty to disobey it; but it is nevertheless law - Markby in 'Elements of Law'

அறமும் சட்டமும் இணைந்து, சமுதாய இன்பத்தையே நோக்காகக் கொண்டு இயங்கினாலும் இவை செயற்படும் முறையிலும் தன்மையிலும் வேறுபட்டுள்ளன.

அறநெறிகள் அனைத்தும் சட்டவிதிகள் ஆவதில்லை

அறநெறிகளுள் பலவும் சட்டநெறிகள் ஆவதில்லை. அன்புடைமையும் அருளுடைமையும் அறநெறிகள். ஆனால், அவை சட்டநெறிகளல்ல. ஒவ்வொருவரும் பிறர்மீது அன்பு காட்ட வேண்டுமென்றோ, அருள் சேர்ந்த நெஞ்சினராக வாழவேண்டுமென்றோ சட்டம் விதிப்பதில்லை. அவ்வாறு விதித்துச் செயல் முறைப்படுத்துவதும் அரசால் இயலாது. ஒப்புரவின் உயர்வை அறம் கூறலாம். ஆனால், மக்கள் ஒப்புரவுடன் வாழவேண்டும் என்று சட்டம் கட்டாயப் படுத்துவது எவ்வாறு?

நல்லவை அனைத்தும் அறம் எனப்படுகிறது. ''கடன் என்ப நல்லவை எல்லாம்'', என்பது அறநெறி. ஆனால், நற்பண்புகள் எல்லாம் சட்டப்படியான கடமைகள் என்று கூறமுடியாது.

'ஒருவர் உண்மையே பேசவேண்டும்' என்பது ஒழுக்க நெறி. ஆனால், எங்கும் எப்பொழுதும் ஒருவர் உண்மையே உரைக்க வேண்டும் என்று சட்டம் விதிப்பதில்லை. நீதி மன்றத்தில் சான்றளிப்போர் உண்மையைக் கூறவேண்டும் என்றும், பிறருக்குத் தீங்கிழைக்கும் வகையில் உண்மையை மறைத்துப் பேசுதல் கூடாது என்றும் மட்டுமே சட்டம் விதிக்கின்றது. ஒருவர் தாம் அளித்த வாக்கினை நிறைவேற்றி வாக்குறுதியைப் பேண வேண்டும் என்பது அறநெறி. ஆனால், சட்டம், பிறரிடமிருந்து எதிர்பயன் (consideration) பெற்று அல்லது பெறுவதற்கென்று அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை மட்டுமே கட்டாயமாக நிறைவேற்ற வேண்டும் என விதிக்கின்றது. இவ்வாறு, இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ற வகையில் அறநெறிகளில் சில மட்டுமே சட்டவிதிகளாக இயற்றப் பெறுகின்றன. 'உயர்ந்த நற்பண்புகளை ஆய்ந்து நல்லவையனைத்தையும் அறம் ஏற்றுக் கொள்ளுகிறது. அவற்றில், காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றவை

மட்டுமே சட்டவிதிகள் ஆகின்றன' [1] என்று பேட்டன் என்ற சட்ட நூலறிஞர் கூறுகின்றார்.

அறம் நன்மையைப் பெருக்குகிறது; சட்டம் தீமையை ஒடுக்குகிறது

'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்ய வேண்டும்' என்பது உயர்ந்த அறநெறிக் கொள்கை. ஆனால், 'தமக்குத் தீமை இழைத்தவருக்கும் ஒருவர் நன்மையே செய்ய வேண்டும்' என்று சட்டம் கூறுவதில்லை. ஒவ்வொருவரும் உயர்ந்த நெறியில் வாழ்ந்தால் சமுதாய இன்பம் தானே தோன்றி நிலைத்துவிடும் என்ற அடிப்படையில் அறம் இயங்குகிறது. ஆனால், சட்டத்தின் முறைவேறு. சமுதாய நலன் எது என்பதை வரையறை செய்து கொண்டு அந்நலனுக்கு மாறான செயல்களை மக்கள் செய்யாதவாறு சட்டம் கண்காணிக்கின்றது. பிறருக்குத் தீங்கு இழைக்காதவாறு ஒருவரது செயல் இருக்க வேண்டும் என்பதே சட்டநெறி. 'நன்மை செய்', என்று அறம் கூறுகிறது. 'தீமையைச் செய்யாதே' என்று சட்டம் விதிக்கிறது. நன்மையை வளர்க்கிறது அறம்; தீமையை ஒடுக்குகிறது சட்டம்.

தனிமனிதப் பண்பினை உயர்த்துகிறது அறம்; சமுதாய நலப் பண்பினைக் காக்கிறது சட்டம்.

தனிமனிதனின் குணநலனை உயர்த்தி அதன் வழி, சமுதாய நலனை அறம் பேணுகிறது. சமுதாய நலனுக்கு இடர் விளைக்காத வகையில் தனிமனிதனின் செயல்களைச் சட்டம் நெறிப்படுத்து கிறது. தனிமனிதப் பண்பினை மையமாகக் கொண்டு அறம் இயங்குகிறது; சமுதாய நலத்தினை உரை கல்லாகக் கொண்டு சட்டம் இயங்குகிறது.

''தனி மனிதப் பண்பினைப் பக்குவப்படுத்தி அவனது குணநலனை உயர்த்த அறம் முயலுகிறது. சமுதாய நல்லுறவுக்கு

---

[1] Ethics is a study of the supreme good - an attempt to discover those rules which should be followed because they are good in themselves Law lays down what is convenient for that time and place - Paton in 'Jurisprudence'.

ஏற்றவகையில் அவனது செயல் இருக்கிறதா என்பதையே சட்டம் கண்காணிக்கிறது''[1] என்கிறார் பேட்டன்.

''அறம் தனிமனிதப் பண்பினை உயர்த்துகிறது. சட்டம் மக்களிடை எழும் உறவுமுறைகளை மட்டுமே ஒழுங்குறச் செய்கிறது''[2] என்று ராஸ்கோ பவுண்ட் கூறுகிறார்.

அறம் அறிவுறுத்துகிறது;
சட்டம் அச்சுறுத்துகிறது.

அறநெறியின்படி அனைவருமே ஒழுகுகின்றனர் என்று சொல்லுவதற்கில்லை. பிறர் பொருளைத் திருடுவோரும், பொய்ச் சான்றுரைப்போரும் அறநெறிக்கு மாறாகவே நடக்கின்றனர். மக்களை அறவழியில் செலுத்துவதற்கு எவ்விதக் கட்டாய முறையையும் அறம் கைக்கொள்ளுவதில்லை. ''வேண்டற்க வெஃகியான் ஆக்கம்'' என்றும், ''தன்னெஞ்சறிவது பொய்யற்க'' என்றும் நன்னெறியைக் காட்டி, திருடுவதும் பொய்புகலுவதும் தகாது என்று அறம் கனிவுடன் கூறுகிறது; கட்டாயப் படுத்துவதில்லை. ஆனால், சட்டம் கையாளும் முறை வேறு. ஒவ்வொரு சட்டவிதிக்கும் பின்னால் அரசின் மேலுறுத்தம் (sanction) உள்ளது. அரசு தன் வலிமை கொண்டு சட்ட விதிகளுக்கு மக்கள் அடங்கிநடக்குமாறு செய்கின்றது. சட்டத்தை மீறுபவர்களை அரசு தண்டிக்கின்றது. எனவே, திருடுவோரும் பொய்ச்சான்று உரைப்போரும் சட்டப்படி தண்டனைக்கு உள்ளாகின்றனர். இந்த அச்சுறுத்தல் சட்டத்தின் தனித்தன்மை ஆகும். ஆனால், அறத்திலே இந்த அச்சுறுத்தல் இல்லை.

இவ்வாறு சமுதாய இன்பத்திற்கேற்ற நன்னெறியில் மக்கள் நிற்க வேண்டுமென்று காரணம் காட்டுகிறது அறம்; கட்டாயப்

---

1 Ethics concentrates on the individual rather than society; law is concerned with the social relationship of men rather than the individual excellence of their characters - Paton in 'Jurisprudence'.

2 In ethics we aim at *perfecting individual character of men* while law seeks only to regulate the ralations of individuals with each other - Roscoe pound in 'Law and Morals'.

படுத்துகிறது சட்டம். அறம் அறிவுறுத்துகிறது; சட்டம் அச்சுறுத்து கிறது.

அறம் சிந்தனையை உயர்த்துகிறது; சட்டம் செயலைத் திருத்துகிறது.

சிந்தனையே செயலுக்கு மூலமாகிறது. உள்ளம் உயர்ந் தால்தான் மனிதன் உயர்கிறான். ஆதலால், அறம் மனிதனின் உள்ளத்தை உயர்த்த முயலுகிறது. "தீயவற்றை உள்ளத்தால் உள்ளலும் தீதே", என்று கூறி, "மனத்துக் கண் மாசிலனாதல் அனைத்து அறன்" என்று வலியுறுத்துகிறது அறம். ஆனால், சட்டம் மனிதனின் செயலையே கண்காணிக்கின்றது. சிந்தனை செயலாக வெளிப்படும் பொழுதுதான் சட்டத்தின் கடமை எழுகின்றது. இவ்வாறு, சிந்தனையைத் திருத்துகிறது அறம்; செயலைத் திருத்துகிறது சட்டம்.[1]

அறநெறி இயல்பாய் எழுவது; சட்டநெறி இயற்றப்பெறுவது

ஈகையும் இரக்கமும், அன்பும் அருளும் நம் மனத்திலே இயல்பாகவே எழுகின்றன. இவ்வாறு, இயல்பான பண்புகளே அறநெறிகளாக அமைகின்றன. ஆனால், சட்டநெறிகளில் பல இயல்பாக நம் உள்ளத்தில் எழுவதில்லை. வரிகளைக் கட்ட வேண்டும் என்ற சட்டவிதிக்கு அடங்கி நாம் நடப்பது சட்டத்திற்கு அஞ்சித்தான். பெரும்பாலான சட்டவிதிகள் அரசு இயற்றுவதால்தான் செயற்படுகின்றன. இயல்பாய் எழும் அறநெறிகள்கூட அரசால் இயற்றப்பட்ட பின்னரே சட்ட நெறிகளாகின்றன.

மாறாத நெறிகளைக் கொண்டது அறம்; மாறும் விதிகளைக் கொண்டது சட்டம்

நன்மை எது, தீமை எது என்று மனத்துக்கண் மாசின்றி

[1] With respect to subject matter, it is said that morals have to do with thought and feeling while the law has to do only with acts -Roscoe Pound in 'Law and Moral'.

எத்துணையோ காலம் எண்ணி எண்ணிக் கண்டறிந்த சிந்தனைச் செல்வமே அறமாகும். நாட்டிற்கு நாடு, காலத்திற்குக் காலம் அது மாறுவதில்லை. அன்பும் அருளும், ஈகையும் இரக்கமும், உண்மையும் ஒப்புரவும் உலகமக்கள் அனைவருக்கும் பொருந்தும் உயர்பண்புகள்; எக்காலத்திற்கும் பொருந்தும் பண்புகள். எனவே, வாழ்விற்கு வழிகாட்டும் அடிப்படையான அறநெறி உலகனைத்திற்கும் பொது நெறியாகும்; காலங்கடந்து நிற்கும் நெறியுமாகும். ஆதலால், அது தெய்வ நெறி எனப் போற்றப் பெறுகிறது. சட்டவிதிகள் சமுதாயத்தின் தேவைக்கேற்ப வளருகின்றன. நாட்டிற்கு நாடு, காலத்திற்குக் காலம் அவ்விதிகள் மாறுகின்றன. எனவே, அறம், மாறாத நெறியினைக் கொண்டு இலங்குகிறது; சட்டம், மாறும் விதிகளைக் கொண்டு இயங்குகிறது.

இவ்வாறு, சமுதாய இன்பத்தை நாடியே அறமும் சட்டமும் அமைந்திருப்பினும், அவை வெவ்வேறான வழிகளில் இயங்குகின்றன.

இயற்கை நெறி (Natural law) எனப்படும் அறம், தனிமனிதப் பண்பினை உயர்த்தும் வகையால் சமுதாய நலனைப் பேணுகிறது; சட்டம், சமுதாய நலனைக் காக்கும் வகையால் தனி மனிதனின் நடத்தையை ஒழுங்குறுத்துகிறது. 'நன்மையைச் செய்' என்று அறம் கூறுகிறது. 'தீமையைச் செய்யாதே' என்று சட்டம் தடுக்கிறது. அறம், காரணம் காட்டி மக்களை நல்வழிப் படுத்து கிறது; சட்டம் கட்டாயப்படுத்தி அவர்களை நல்வழி நிறுத்து கிறது. அறிவுறுத்துகிறது அறம்; அச்சுறுத்துகிறது சட்டம். சிந்தனையை உயர்த்துகிறது அறம்; செயலைத் திருத்துகிறது சட்டம். மக்கள் மனத்திலே இயல்பாய் எழுவது அறநெறி; மக்களால் இயற்றப் பெறுவது சட்ட விதி. அறம் மாறாத நெறிகளைக் கொண்டது; சட்டம் மாறும் விதிகளைக் கொண்டது.

அறநெறிக்கும் சட்ட நெறிக்கும் உள்ள இணைப்பு

அறநெறி, சட்டநெறி இவற்றின் இயக்கத்தில் இவ்வளவு வேறுபாடுகள் இருப்பினும், அறத்திற்கும் சட்டத்திற்கும் தொடர்பே இல்லை என்று கூறுவதை இந்நாளையச் சட்ட அறிஞர்கள் ஆதரிப்பதில்லை.

இங்கிலாந்து நாட்டில் லாக் (Locke) என்ற அறிஞர் அரசின்

அதிகாரம் மக்கள் அளித்த நம்பிக்கையால் தான் உள்ளது என்றும், எப்பொழுது வேண்டுமானாலும் மக்கள் அந்த அதிகாரத்தை மாற்ற முடியும் என்றும் ஒரு கோட்பாட்டை வகுத்தார். ''இக்கோட்பாடு ஐக்கிய அமெரிக்க நாட்டின் அரசமைப்பிலே, 'மனித உரிமைகள்' என்ற பெயரால் தக்க இடம் பெற்றுள்ளது'', என்கிறார் டென்னிஸ் லாய்டு (Dennis Lloyd) என்ற அறிஞர்.

இரண்டாவது உலகப் போருக்குப் பின், ஜெர்மானிய நாட்டுப் போர்த் தலைவர்கள் (நாசிக் கட்சித் தலைவர்கள்) பன்னாட்டு நீதிபதிகளைக் கொண்ட மன்றத்திலே விசாரிக்கப் பட்டுத் தண்டனை விதிக்கப்பெற்றனர். இது நியூரம்பர்க் விசாரணை (Nuremberg Trial) என்று வரலாற்றில் இடம் பெற்றுள்ளது. மேலும், பல்லாயிரம் யூதர்கள் கொலையுண்ட தற்குக் காரணமாக இருந்த ஐக்மான் (Eichmann) என்ற ஜெர்மானியர் இஸ்ரேல் நாட்டில் விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பெற்றார். இவ்வாறு தண்டனை பெற்றவர்கள் எவ்வாறு குற்றவாளிகள் ஆனார்கள்? அவர்கள் அன்று இருந்த ஜெர்மானி நாட்டுச் சட்டப்படிதான் இயங்கினார்கள். ஆயினும், அவர்கள் இழைத்த கொடுஞ்செயல்கள் மனித குலத்திற்கு எதிரான மிகக் கொடுஞ் செயல்களாகக் கொள்ளப்பட்டன. இது இயற்கையான அறநெறியின் ஏற்றத்தையே காட்டுகின்றது என்கிறார் டென்னிஸ் லாய்டு (Dennis Lloyd) ''இயற்றப்பட்ட சட்டங்களுக்கும் மேலான சட்டம் இயற்கையாக எழும் அறநெறி என்பதை இது காட்டுகிறது''[1] என்கிறார் அவர்.

நம் இந்திய நாட்டின் அரசமைப்பில் 'அடிப்படை உரிமைகள்' (Fundamental rights)என்பவை அறநெறி சார்ந்த உரிமைகள் தாம். அந்த உரிமைகளைப் பாதிக்காத வகையில் தான் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் என்று அரசமைப்பு விதிக் கின்றது.

குற்ற இயல் சட்டத்தை எடுத்துக் கொண்டால், 'குற்ற மனம் (mens rea) இன்றிக் குற்றம் இல்லை' என்ற அடிப்படைக் கோட்பாடு அறநெறியின்பாற்பட்டதே ஆகும்.

''குற்ற இயல் சட்டம் கூறும் ஒறுத்தல் முறை எவ்வாறு அறநெறியின் அடிப்படையில் அமைந்துள்ளது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். பிறருக்குக் கேடு இழைத்த ஒருவன் தண்டனை பெற வேண்டும் என்ற எண்ணம் சாதாரணமான எவர்

---

[1] Dennis Lloyd in "The Idea of Law" Penguin Books.

மனத்திலும் இயல்பாகவே எழுவதாகும். இந்த இயல்பான அறவுணர்வை ஒட்டி அமைவதே ஒறுத்தல் முறையினைக் கூறும் குற்ற இயல் சட்டம்''[1], என்று குட்ஹார்ட் விளக்குகின்றார்.

''சட்டத் துறையில் சட்டப் பொருளில் பயன்படுத்தும் பொழுதுகூட 'நீதி, நீதி முறை' என்ற சொற்களில் அடங்கி நிற்கும் அறக் கருத்து மறைந்து விடுவதில்லை'',[2] என்கிறார் சட்ட அறிஞர்.

சட்டத்திற்கு மக்கள் பணிந்து நடக்குமாறு அரசு ஆணை செலுத்துகிறது என்பது உண்மைதான். எனவே, சட்டத்தை அரசின் ஆணையாக நாம் கருதுகிறோம். ஆனால், உண்மையில் அரசின் ஆணை என்பதற்காக நாம் சட்டத்திற்குப் பணிவதில்லை. சமுதாயம் போற்றும் அறப் பண்புகளைச் சட்டம் பேணுவ தாலேயே சட்டத்தின்மீது மதிப்பும், சட்டநெறியை ஒட்டி ஒழுக வேண்டும் என்ற உணர்வும் மக்கள் மனத்திலே இயல்பாய் எழுகின்றன. அற நெறியின் அடிப்படையில் அமைந்து ஒழுக வேண்டும் என்ற இயல்பான உணர்வே சட்ட நெறியையும் சார்ந்து ஒழுக வேண்டும் என்ற கடப்பாட்டுணர்வாகக் கனிகின்றது.

''பட்டறிவை, அறநெறியை, சமயத்தை, வழி வழி வந்த மரபை ஒட்டி எழுவது சட்டநெறி என்ற உண்மையினை மக்கள் உணர்வதால்தான் 'சட்டத்திற்குப் பணிதல்' என்ற பண்பினை மக்கள் பேணுகின்றனர். எனவே, சட்டத்திற்கு மக்கள் பணிவது

[1] In no part of the criminal law is it more important to understand the correct relationship between state and moral law than it is in regard to punishment. There seems to be an instinctive feeling in most ordinary men that a person who has done an injury to others should be punished for it - Dr. Goodhart in 'English Law and Moral Law'

[2] The words 'Just' and ''Justice'' have never quite lost their ethical significance even in the most technical context - Pollock in 'Jurisprudence'.

அச்சத்தால் அன்று, அறவுணர்வால்'', [1] என்கிறார் டாக்டர் குட்ஹார்ட்.

எனவே, சட்டஇயல் பயிலும் நாம் உணர வேண்டிய உண்மை இதுவாகும்.

அறமும் சட்டமும் மக்களின் இன்ப வாழ்வைக் குறிக் கோளாகக் கொண்டே இயங்குகின்றன. ஆனால், அவை இயங்கும் முறைகள் வேறுபட்டவை. குறியில் அவை ஒன்றி யுள்ளன. ஆனால், நெறியில் வேறுபட்டுள்ளன.

'அரசின் ஆணையே சட்டம்'' என்ற கொள்கை, 'கட்டுறுத்துவதே சட்டம்'' என்ற கோட்பாடு.

(Imperative Theory of Law)

சட்ட இயல் ஆராய்ச்சியை எவ்வாறு அணுகுகின்றனர் என்பதை நாம் இங்குக் காணுகிறோம். ஹாப்ஸ் (Hobbes) பெந்தம் (Bentham), ஆஸ்டின் (Austin) போன்ற அறிஞர்கள் இப்பயில் நெறியத்தை வளர்த்தனர்.

சட்டத்தின் உட்பொருளை விட உருவமைப்பைக் கூறுவது இக்கொள்கை. சட்டத்தின் சாரத்தை விட, சடங்குகளைக் கூறுவது இக்கொள்கை.

சட்ட வாசகத்தின் உருவமைப்பு எப்படி உள்ளது?

அது ஒரு கட்டளையாக, ஆணையிடுவது போன்ற வாசகத்தைக் கொண்டுள்ளது. எனவே, சட்டம் என்பது ஓர் ஆணை.

---

[1] The conclusion is that the strength of English Law depends in large part on the fact that the people recognise that they are under the obligation to obey the law and that this sense of obligation is based, not on force or fear, but on reason,, morality, religion and the inherited traditions of the nation - Dr. Goodhart in ''English Law and the Moral Law''.

இந்த ஆணையை இடுவது யார்?

நாட்டை ஆளும் அரசனால் அல்லது நாட்டின் அரசால் சட்டம் என்ற ஆணை இடப்படுகிறது.

சட்டம் என்ற ஆணைக்கு அடங்கி நடக்க வேண்டியவர் எவர்?

ஒரு நாட்டுக் குடிமக்கள் அந்நாட்டுச் சட்டங்களுக்கு அடங்கி நடக்கும் கடமைப்பட்டவர்கள்.

சட்டத்திற்கு அடங்கி நடக்காவிடில் விளையும் பயன் என்ன?

சட்டத்திற்கு அடங்கி நடக்காத குடிமக்கள் தண்டனைக்கு உள்ளாகின்றனர். எனவே, தண்டனை என்ற மேலுறுத்தத்தைக் கொண்டது சட்டம்.

இக்கூறுகளையெல்லாம் ஒருங்கிணைத்துச் சட்டம் என்பதற்கு வரைவுரை கூறுகின்றார் ஆஸ்டின் (Austin) என்ற ஆங்கில நாட்டுச் சட்ட இயலறிஞர்.

''தம் ஆட்சியில் உள்ள குடிமக்களின் நடத்தையை ஒழுங்குறுத்தும் வகையில் அரசாண்மையரால் (sovereign) விதிக்கப்படும் ஆணைகளே சட்டங்கள்'',[1] என்கிறார் ஜான் ஆஸ்டின்.

''ஒரு நாட்டில் அரசாண்மையுடையவர் தம் குடிமக்களின் செயல்களைச் சீர்மைப்படுத்துவதற்கென இடும் ஆணைகளே சட்டங்கள்''[2] என்கிறார் ஹாப்ஸ் (Hobbes) என்ற அறிஞர்.

''கட்டுறுத்தும் ஆற்றல் இல்லாத சட்ட விதி எரியாத நெருப்புப் போன்றது; ஒளிராத விளக்குப் போன்றது''[3] என்கிறார் ஐரிங் (Ihering) என்ற பேராசிரியர்.

1 "Positive law consists of commands set as general rules of conduct by a sovereign to a member or members of the independent political society wherein the author of the law is supreme" - Austin.

2 The civil laws are the command of him who is endowed with supreme power in the state concerning the future actions of his subjects - Hobbes

3 A legal rule without coercion is a fire which does not burn, a light that does not shine - Prof. Ihering.

இக்கோட்பாடு பற்றிய **ஆய்வுரை**

கட்டுறுத்தும் கோட்பாட்டினர், முக்கியமாக, பேராசிரியர் ஆஸ்டின், சட்டத்திற்குக் கூறும் விளக்கத்தில் மூன்று முக்கியமான கூறுகள் உண்டு; (1) சட்ட விதிகள் ஆணைகளாக உள்ளன. (2) ஆணைகளை இடுவது அரசாண்மை பெற்ற நபர் அல்லது அமைப்பு. (3) சட்டங்களுக்குப் பணியாவிடில் விதிக்கப்படும் தண்டனை.

இம்மூன்று கூறுகளையும் மறுத்து விவாதிப்போர் உள்ளனர்.

ஆணை (command) —— 'ஆணை' அல்லது 'கட்டளை' என்பது மேலவர் கீழவருக்கு விடுப்பதே ஆகும். கீழவர் மேலவரிடம் கேட்பதை விண்ணப்பம் என்றே கூறுகிறோம். எனவே, ஆணை இடுபவர் மேலவர் (superior) ஆணையைப் பெறுவர் கீழவர் (Inferior).

அரசன் இடும் ஆணைகள் அனைத்தும் சட்டங்களாகி விடுகின்றனவா? அரசன் தன் வேலையாளிடம் குறிப்பிட்ட வேலையைச் செய்யுமாறு ஆணையிட்டால் அந்த ஆணையும் சட்டமாகி விடுமா? ஆணைகள் அனைத்துமே சட்டமாகிவிடுவதில்லை என்பதைக் குறிக்கும் வகையில் அந்த ஆணைகள் "பொதுவான ஆணைகளாக" (general commands) இருக்க வேண்டும் என்கிறார் ஆஸ்டின்.

எசமானன் வேலையாளுக்குக் கட்டளைகள் இடுகின்றான். பெற்றோர் பிள்ளைகளுக்குக் கட்டளைகள் இடுகின்றனர். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஆணைகள் விடுகின்றனர். ஆனால், இந்த ஆணைகள் எல்லாம் சட்டங்கள் ஆவதில்லை. கொள்ளை அடிப்பவன்கூடத் துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்திப் பிறருக்கு ஆணைகள் இடுகின்றான். இந்த ஆணையும் சட்டமாகி விடுமா? ஆவதில்லை.

எனவே, ஆணையிடுபவன் அரசனாக அல்லது அரசாண்மை (sovereignty) உடைய அமைப்பாக இருக்க வேண்டும் என்கிறார் ஆஸ்டின். "நாட்டின் அரசாண்மை உடையவன் என்றால் அவனுக்கு அந்நாட்டு மக்கள் வழக்கமாகப் பணிந்து நடக்கின்றனர். அவன் வேறு எவருக்கும் பணிந்து நடப்பதில்லை. அத்தகைய நிலையில் உள்ளவனைத்தான் அர-

சாண்மையுடையவன் என்று கூற முடியும்";[1] என்கிறார் ஆஸ்டின்.

எனவே ஆணையிடுபவனோ ஆணையிடும் அமைப்போ, மக்களைப் பணியச் செய்யும் மாட்சிமை கொண்டது என்பது வலியுறுத்தப்படுகிறது.

ஆணைகளுக்குக் குடிமக்கள் எவராவது பணிந்து நடக்க வில்லை எனில் விளைவு என்ன? பணியாத மக்கள் தண்டனைக்கு ஆளாகின்றனர். பணியாதவர்களைத் தண்டிக்கும் ஆற்றல் அரசாண்மையருக்கு இருத்தல் வேண்டும். இந்த ஆற்றலை "மேலுறுத்தம்" (sanction) என்கிறார் ஆஸ்டின். எனவே, சட்டத்திற்குப் பணியாதவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்ற மேலுறுத்தம் சட்டத்தின் ஒரு கூறாகும் என்கிறார்.

இவ்வாறு, ஆணை (command), அரசாண்மை (sovereignty), மேலுறுத்தம் (sanction) என்ற மூன்று கூறுகளையும் கொண்டு சட்டத்திற்கான விளக்கத்தை ஆஸ்டின் கூற முறபடுகின்றார்.

இந்த விளக்கத்திற்கான எதிர்வாதங்கள் பல திறப்படுவன.

சட்டங்கள் பல, ஆணைகளாக இருப்பனவல்ல. இன்னதைச் செய்ய வேண்டும் என்று விதிப்பதாகவோ இன்னதைச் செய்யக் கூடாது என்று விலக்குவதாகவோ இருப்பதில்லை. ஒருவர் தமது சொத்தை விருப்பாவணம்' (will) மூலம் பிறருக்கு எழுதி வைக்கலாம் என்று சட்டம் உள்ளது. இது எவருக்கும் கட்டளை இடும் சட்டம் அன்று.

ஆணைகளாகச் சட்ட விதிகள் இருந்தால் ஆணையிடும் நபர் ஒருவர் இருக்க வேண்டுமே. இன்றைய நாடுகள் பலவற்றிலும் சட்டம் இயற்றுவது தனி நபராகவோ தனிப்பட்ட அமைப் பாகவோ இருப்பதில்லை. இன்றையச் சட்டவிதிகள் பலவும் சட்டமன்றங்களால் இயற்றப்படுவனவும் அல்ல. சட்டமன்றங் களின் அதிகாரம் பெற்ற ஒப்படை ஆள்வையின் (delegated authority) கீழ்ப்பிற அமைப்புகள் சட்டவிதிகளை ஆக்குகின்றன. எனவே. அரசாண்மை பெற்றவரோ அமைப்போ மட்டுமே சட்டங்கள் என்ற ஆணைகளை இடுகின்றனர் என்ற ஆஸ்டின் கூற்று நிகழ்வு நிலைக்குப் பொருந்துவதில்லை.

இங்கிலாந்திலும் அந்நாட்டைப் பின்பற்றி இயங்கும்

1 A sovereign is any person or body of persons whom the bulk of a political society habitually obeys. and who does not himself

நாடுகளிலும் நீதிமன்றங்களும் சட்டக் கொள்கைகளை உருவாக்கிச் சட்டங்களை ஆக்குகின்றன. தீர்ப்பு முறைச்சட்டங்கள் (case lawor judge-made law) அரசாண்மை பெற்ற அமைப்பால் ஆக்கப் பெறுவனவல்ல. இருப்பினும் அவை சட்டங்கள் தாம். அதிலும் இங்கிலாந்தில் உள்ள இயற்றாச் சட்டங்கள் (unenacted legislation) அனைத்தும் தீர்ப்பு முறைச் சட்டங்களாகவே இருக்கின்றன. இவையெல்லாம் ஆஸ்டினின் வரைவுரையில் அடங்குவனவல்ல.

இங்கிலாந்து நாட்டில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்ட தாகக் கொள்ளப்பட வேண்டுமெனில், நாடாளுமன்ற அவைகள் இரண்டிலும் நிறைவேற்றப்பட்டு அரசனின் ஏற்பையும் பெற வேண்டும் என நெறிமுறை உள்ளது. நாடாளுமன்றத்தின் நடைமுறைகள் பற்றியும் விதிகள் உள்ளன. இவ்விதிகளில் பெரும்பான்மையானவை எழுத்துருவில் இல்லாதவை; அரசாண்மை பெற்ற அமைபபாலோ அரசனாலோ இயற்றப் படாதவை. ஆயினும், இவ்விதிகள் நடைமுறையில் அடிப் படையான சட்டங்களாகவே உள்ளன. இவ்வாறு அரசாண்மை பெற்ற அமைப்பால் ஆக்கப்படாத சட்டங்கள் உள்ளன. இவை ஆஸ்டின் கூறும் சட்டத்திற்கான விளக்கத்தில் அடஙகுவனவல்ல.

மேலுறுத்தம் (sanction) என்பதை எடுத்துக் கொண்டால் நாட்டிடைச் சட்டத்தைச் (International law) செல்லுறுத்து வதற்கான மேலுறுத்தம் எதுவும் இல்லை. ஒரு நாட்டுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை வேறொரு நாடு மீறி நடந்து கொண்டால், அவ்வாறு மீறிய நாட்டைக் கட்டுறுத்தும் ஆற்றல் எதுவும் இல்லை. இதை வைத்து நாட்டிடைச் சட்டம் என்பது சட்டம் இல்லை என்று கூற முடியாது. ஆஸ்டின் நாட்டிடைச் சட்டத்தை ஓர் ஒழுக்கக் கட்டுப்பாடு(Positive morality) என்றும், சட்டம் இல்லை என்றும் கூறுகின்றார். இதை ஏற்பதற்கில்லை என்று கூறுகின்றனர் பல சட்ட அறிஞர்கள்.

நாகரிகத்தில் முன்னேறியுள்ள பல நாடுகளிலும் இயல் பாகவே சட்டத்திற்குப் பணிந்தே மக்கள் ஒழுகுகின்றனர். மேலுறுத்தம் ஏதும் இல்லாமலே கூட, சட்டத்திற்கு மக்கள் அனைவரும் பணிந்து நடக்கும் நிலை ஒரு நாட்டில் ஏற்படலாம். இதை வைத்துக்கொண்டு அந்நாட்டுச் சட்டங்கள், சட்டங்கள் ஆகா என்று கூறுவதற்கில்லை.

எனவே, சட்டத்திற்குப் பணிய மறுத்தால் தண்டனை என்ற

மேலுறுத்தம் இல்லாமலேயே சட்டங்கள் இயங்க முடியும். ஆதலால், மேலுறுத்தம் என்பது இன்றியமையாததாக இருப்பினும், சட்டத்தின் இன்றியமையாப் பகுதி என்று கொள்வதற்கில்லை, என்கிறார் பிட்ஸ்ஜெரால்டு.

வரலாற்று முறையில் சட்ட இயலை ஆய்ந்த ஆசிரியர் மெயின் (Maine) என்பார், சட்டம் என்பது அரசமைப்பிற்கு முந்தியது என்பதை வலியுறுத்துகிறார். ஏற்கனவே, மக்களின் சமய நம்பிக்கைகளாகவும், வழக்க நெறிகளாகவும் இருந்தனவற்றையே பிற்காலத்தில் அரசு சட்டவிதிகளாகச் செல்லுறுத்தின. இவற்றையெல்லாம் அரசின் ஆணைகள் என்று கூறுவது வரலாற்றுக்கு முரண்பட்டது என்கிறார்.

'அரசாண்மையர் இல்லையேல் சட்டம் இல்லை', (no sovereign, no law) என்ற ஆஸ்டின் கொள்கையை ஆசிரியர் மெயின் ஏற்பதில்லை. "பஞ்சாப் நாட்டில் அரசு புரிந்த இரஞ்சித் சிங் என்ற வீரன் சட்டம் எதையும் இயற்றவில்லை. வழக்க நெறிகளையும் சமயப் பழக்கங்களையும் மட்டுமே சட்டங்களாக அவன் செல்லுறுத்தி வந்தான்", என்கிறார்.

சட்டத்தின் வரலாற்று நிலையை விட்டு விட்டு, இன்றைய நிலையை மட்டுமே எடுத்துக் கொண்டாலும் மேலுறுத்தம் ஒன்றையே சட்டத்தின் மையமாகக் கொள்ளுவதற்கில்லை என்கிறார் சால்மண்ட்: சட்டத்தின் குறிக்கோள் நீதி. எனவே, நீதியுணர்வு உள்ள மக்கள் சட்டவிதிகளுக்கு இயல்பாகவே பணிந்து நடக்கின்றனர். எனவே, "சட்டம் என்பது ஒழுக்க நெறி மட்டும் அன்று; ஒறுத்தல் முறை மட்டும் அன்று; அறநெறியும் மறவலியும் இசைந்து நிற்கின்றன சட்டத்தில். அரசின் குரலாக நீதி ஒலிப்பதே சட்டமாகும்"[1] என்கிறார் சால்மண்ட்.

'சட்டம்', 'நீதி' என்ற இரு சொற்களும் இணைந்தே வருகின்றன. 'நல்லது', 'தீயது', 'கடமை' போன்ற சொற்கள் சட்டத்திற்கும் ஒழுக்கத்திற்கும் பொதுவானவை. இவ்வாறு, அறத்தின் அடிப்படையில் முளைத்து இயங்கும் சட்டம் அரசின் வலிமை என்ற ஆற்றலையும் பெற்று நிற்கிறது. எனவே, அறத்தைச் சட்டத்திலிருந்து முழுதுமாக அகற்றிவிட்டுச் சட்டத்திற்கு விளக்கம் காண்பது தகாது என்று ஆஸ்டினின் கொள்கையில்

---

[1] Law is not right alone, but the perfect union of the two. It is

குறை காண்கின்றார் சால்மண்ட்.

'சட்டம்', என்பது 'கட்டுறுத்தும் ஆணை' என்ற கொள்கை குற்றஇயல் விதிகளுக்கு முற்றும் பொருந்துவதாகும் என்பார்கள்.

ஆழ்ந்து சிந்தனை செய்தால் நாம் ஓர் உண்மையினை உணரலாம்.

சட்டம் என்ற கருத்தமைவிற்கு ஆஸ்டின் தந்துள்ள விளக்கத்தை எதிர்த்து எழுந்துள்ள வாதங்கள் அனைத்துமே சரியானவை என்று கூறுவதற்கில்லை. சட்டத்தில் அறத்தின் நீர்மை உள்ளது என்பதும், நீதிபதிகளும் சட்டக் கொள்கைகளைத் தீர்ப்புகளின் வழி வகுக்கின்றனர் என்பதும், அரசமைப்பு தோன்றுவதற்கு முன்னரே மக்களைக் கட்டுப்படுத்திய நெறிகள் இருந்தன என்பதும், மேலுறுத்தமே சட்டத்தின் மையம் அன்று என்பதும் ஆசிரியர் ஆஸ்டின் அறியாதன அல்ல. ஆனால், இன்று நாம் சட்டம் என்று சுட்டும் கருத்தமைவின் சிறப்புக் கூறுகளை விளக்கும் வகையில் தான் அதை 'அரசாண்மையரின் ஆணை' என்றும், 'மேலுறுத்தம் உடையது' என்றும் கூறுகின்றார்.

பட்டுப்பூச்சியை ஒருவர் 'அழகான வண்ணச்சிறகுகளுடன் பறக்கும் உயிரினம்' என்று வருணிக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். பட்டுப்பூச்சி புழுவாக இருந்த நிலைக்கு இந்த வருணனை பொருந்துவது இல்லைதான். அந்நிலையில் அது பறப்பதும் இல்லை; அழகிய வண்ணச்சிறகுகளும் அதற்கு இல்லை. ஆனால், இன்றைய நிலையில் உள்ள பட்டுப்பூச்சிக்கு அந்த வருணனை பொருந்துவதேயாகும். அது போன்றே, அறிஞர் ஆஸ்டின் சட்டத்திற்குக் கொடுத்துள்ள வரைவுரை சட்டத்தின் வளர் நிலைகள் அனைத்திற்கும் பொருந்துவதில்லை என்று கூறலாம். ஆயினும், இன்றையச் சட்டத்திற்குப் பொருந்தாதது என்று அதைக் குறைகூறி ஒதுக்குவதற்கில்லை.

''நீதி வழங்குவதற்கு உதவுவதே சட்டம்'' என்ற கொள்கை (Law as the practice of the Court: legal realism)

அரசாண்மையரின் ஆணையே சட்டம் என்று ஆஸ்டின் கூறுகின்றார். ஆஸ்டினைப் பொறுத்து அந்த அரசாண்மை என்பது சட்டமன்றத்தில் உள்ளது. ஆனால், நிகழ்வுநிலைக் கொள்கையர்க்கு (realists) அந்த அரசாண்மை அமைந்துள்ளது நீதிமன்றத்தில்தான்; சட்டமன்றத்தில் அன்று.

''நீதி மன்றங்கள் தங்கள முன்வரும் வழக்குகளைத் தீர்க்கும்

வகையில் தீர்ப்புகளில் என்னென்ன விதிகளை ஏற்றுக்கொண்டு செல்லுறுத்துகின்றனவோ அவையனைத்தையுமே 'சட்டம்' என்ற சொல் குறிக்கின்றது'' என்கிறார் சால்மண்ட்.

நீதிமன்றங்கள் சட்டத்தின் அடிப்படையில்தானே நீதி வழங்குகின்றன? சட்டங்களைச் செல்லுறுத்துவதுதானே நீதி மன்றங்களின் கடமை? இயற்றப்பட்ட சட்டங்கள் இல்லையெனில் நீதி வழங்க இயலாதே? இந்நிலையில் நீதிமன்றங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிகளே 'சட்டம்' என்பது பொருந்துமா? இத்தகைய வினாக்கள் எழலாம்.

இயற்றப்பட்ட சட்டங்கள் இல்லாத காலத்திலே கூட நீதி மன்றங்கள் இயங்கின என்பதை நாம் மறப்பதற்கில்லை. ஆதிகால நீதிமன்றங்கள் நன்மனச்சான்றின் அடிப்படையிலேயே தீர்ப்புகளை வழங்கின. எனவே, சட்டம் என்பது நீதி முறைக்கு முந்தியது அன்று.

தற்காலத்திலுங்கூட நீதி வழங்குவதற்குச் சட்டங்கள் உதவி செய்கின்றன என்பது உண்மைதான். ஆயினும், சட்ட மன்றங்களால் இயற்றப்பட்ட சட்டங்களில் ஒரு வழக்கைத் தீர்ப்பதற்கான விடை கிடைக்காத நிலையில், நீதிபதிகள் அந்த வழக்கைத் தீர்ப்பதற்கென ஒரு சட்டக் கொள்கையினை வகுக்கின்றனர். அக்கொளகைகள் பிற்காலத்தில் வரும் வழக்குகளில் பின்பற்றப்படுகின்றன. வழக்கநெறிகளில் கூட எந்தெந்த நெறிகளைச் சட்டமாக ஏற்றுக் கொள்வது என்பதை நீதிமன்றங்களே தீர்மானிக்கின்றன. இவ்வாறு எழும் தீர்ப்பு நெறிகள் பலவும் சட்டவிதிகளாக மலர்கின்றன.

எனவே, ''வளர்ச்சி பெற்ற நீதிமுறையின் பயனாகவே பல சட்டவிதிகள் பிறக்கின்றன. ஆதலால், சட்டவிதிகள் பலவும் நீதி முறைக்கு முந்தியன அல்ல, நீதிமுறையின் விளைவாகவே அவை தோன்றுகின்றன''[1] என்கிறார் சால்மண்ட்.

மேலும், சட்டத்தின் குறிக்கோள் நீதியேயாகும். நீதியின் கருவியாகவே சட்டம் இயங்குகிறது. ஆதலால்தான், சட்டத்தைப் பின்பற்றி வழங்கப்படும் நீதிமன்றத்தீர்ப்புகளை நாம் சட்டத் தீர்ப்புகள் என்று கூறாமல், நீதித்தீர்ப்புகள் என்றே கூறுகிறோம்.

---

1 The aggregate of rules which constitute a developed legal system is not a condition precedent of the administration of justice, but a product of it - Salmond

எனவே, சட்டத்தை நீதியின் கருவி என்றுதான் கூறவேண்டுமே தவிர, சட்டத்தின் குறிக்கோளான நீதியை மறந்துவிட்டுச் சட்டத்திற்கான இலக்கணத்தைக் கூறமுற்படுதல் தகாது.[1]

இயற்றப்பட்ட சட்டங்களை நீதிபதிகள் கடைப்பிடிக்க வேண்டும் என்பது அவர்களுக்குற்ற ஒழுக்கக் கடப்பாடு (moral obligation) என்பதைத் தவிர, அவர்கள் அச்சட்டவிதிகளைப் புறக்கணித்துவிட்டால் அவர்களை ஒன்றும் செய்வதற்கில்லை என்கிறார் சால்மண்ட். சட்டத்தைப் புறக்கணித்த தீர்ப்பு செல்லுரிமை அற்றுப்போவதில்லை. உச்சநீதிமன்ற நீதிபதிகள் தங்கள் ஒழுக்கக் கடப்பாட்டில் தவறாது, தங்கள் மனச்சான்றின் வழிநின்று தீர்ப்புகளை வழங்குகின்றனர். இந்நிலையில் அத் தீர்ப்புகளுக்கு இயைந்த விதிகளை ஏற்றுக்கொள்வதும் இயற்றுவதும் அந்நீதிபதிகளின் கடமையே ஆகின்றது. இவ்வாறு அவர்கள் ஏற்றுக் கொண்ட சட்டவிதிகளே சட்டம் ஆகின்றன. எனவே, ''நீதிபதிகள் ஏற்றுக்கொள்வதாலேயே சட்டம், சட்டம் ஆகின்றது''[2] என்கிறார் சால்மண்ட்.

மேலே கூறப்பட்ட காரணங்களைக்காட்டி ஆசிரியர் சால்மண்ட் சட்டத்திற்கான இலக்கணத்தைக் கூறுகின்றார். ''நீதி மன்றங்களால் ஏற்கப்பட்டுச் செல்லுறுத்தப்படும் விதிகளின் தொகுப்பே சட்டம்''[3] என்கிறார்.

நிகழ்வுநிலையின் (realism) அடிப்படையில் தான் சட்டத்திற்கான இலக்கணத்தைக் காணவேண்டும் என்று கூறும் ஐக்கிய அமெரிக்க நாட்டு அறிஞர்கள் சால்மண்டின் கூற்றையே வேறு காரணங்களுக்காக ஆதரிக்கின்றனர். அமெரிக்க நீதிபதி ஹோம்ஸ் (Holmes) என்பார் இக்கொள்கையை விளக்கும் விதம் இது. சட்டத்தை மீறித் தன்னலம் பேணும் ஒரு தீயவன் எப்படி நடந்து கொள்ளுகிறான்? சட்டமுரணான செயலைச் செய்வதற்கு முன் அவன் சட்டப்புத்தகம் இதுபற்றி என்ன கூறுகிறது என்பதைப் பார்ப்பதில்லை. மாறாக, இந்தக் குற்றத்தை இழைத்தால் நீதி

[1] Justice is the end, law is merely the instrument and the means and the instrument must be defined by reference to the end -Salmond.

[2] Law is law, not because the courts are under any legal obligation to observe it, but because they do infact observe it - Salmond.

[3] Law is the aggregate of rules recognised and acted on by courts of justice - Salmond.

மன்றம் என்ன செய்யும் என்பதையே இவன் கருத்தில் கொள்ளுகிறான். சாதாரணமாக, சாலைப் போக்குவரத்து விதிகளை மீறுவோர் பேசிக்கொள்ளுவதை நாம் கேட்கிறோம். 'ஐம்பது ரூபாய்'. . . - 'ஆறுமாதம்' என்று பேசிக் கொள்வார்கள். இன்ன குற்றத்திற்கு ஐம்பது ரூபாய் அபராதமாக விதிக்கப் படுகிறது: இன்ன குற்றத்திற்கு ஆறுமாதம் சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறது என்பதை 'ஐம்பது ரூபாய்' என்றும் 'ஆறுமாதம்' என்றும், குறிப்பிட்டுப் பேசிக் கொள்ளுகின்றனர். அந்தக் குற்றங்களுக்குச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள அதிக அளவு தண்டனை எவ்வளவு என்பதைப் பற்றி அவர்களுக்குத் தெரியாது. அதைத்தெரிந்து கொள்ளவும் அவர்கள் முயலுவ தில்லை. அவர்கள் தெரிந்து கொள்வது, தெரிந்து கொள்ள வேண்டியது நீதிமன்றம் விதிக்கும் தண்டனை எவ்வளவு என்பதைப் பற்றித்தான். நீதிமன்றம் எப்படி இயங்கும் என்பதைச் சட்டநூல்களில் இருந்தோ சட்ட வாசகங்களில் இருந்தோ நாம் தெரிந்துகொள்ள முடிவதில்லை. நீதிபதிகள்தாம் சட்டத்தைப் படித்து அதன் பொருளைக் கண்டு அதற்கேற்ப நீதி வழங்கு கின்றார். "சட்டத்தில் உள்ள உயிரற்ற சொற்களுக்கு உயிரேற்றுவது நீதி மன்றங்கள்தாம்"[1] என்கிறார் பேராசிரியர் கிரே.

எனவே, நிகழ்வுநிலை (realism) அடிப்படையில் பார்த்தால் சட்டங்கள் அனைத்தும் நீதிபதிகளாலேயே ஆக்கப் படுகின்றன என்பது இவர்களின் கொள்கையாகும்.

காரண காரிய அடிப்படையில் சட்டவினாக்களுக்கு விடைகள் காணுவது இயலாது. சமுதாயம், அரசியல், ஒழுக்கம், இன்னும் பிற கூறுகள் இவற்றையெல்லாம் கவனத்திற் கொண்டுதான் சட்டவினாக்களுக்கான விடைகளைக் காண வேண்டியுள்ளது. எனவே, "சட்டத்தின் உயிரோட்டம் காரண காரிய வாதத்தில் இல்லை; கனிந்த அனுபவத்திலேயே உள்ளது"[2] என்கிறார் அமெரிக்க நாட்டு நீதிபதி ஹோம்ஸ்.

இயற்றப்பட்ட சட்டத்தில் உள்ளது ஒன்றாக இருக்கலாம். ஆனால், அது இயங்குவது வேறு விதமாக இருக்கலாம். எனவே,

---

1 "The courts put Life into the dead words of the statute"
- Prof. Gray

2 The life of the law has not been logic it has been experience
Holmes (1841 - 1936)

அமெரிக்க நாட்டுச் சட்டவியலறிஞர் எழுதப்பட்ட சட்ட விதிகளைப் (legal rules) பற்றி அக்கறை காட்டுவதே இல்லை. சமயச் சார்புடன் பழைமையை விரும்பும் நீதிபதியின் தீர்ப்புக்கும், பழைமையை வெறுத்துச் சமுதாய மாற்றங் காண்பதில் துடிப்புள்ள நீதிபதியின் தீர்ப்புக்கும் வேறுபாடு இருப்பது இயல்பேயாகும். தொழிலாளர் சார்புடைய நீதிபதி,முதலாளிச் சார்புடைய நீதிபதி என்ற இருவர் அணுகு முறையும் ஒன்றுக்கொன்று வேறுபட்டுத்தான் இருக்க முடியும்.

எழுத்தில் உள்ள சட்டம் எடுபடாமல் போகலாம் என்பதற்கு இந்தச் சிறு உதாரணம் போதுமானது. ஒரு கார் ஒருவர் மீது மோதிக் காயத்தை விளைக்கிறது. காயப்பட்டவரின் தற்கவனமின்மையால் தான் (contributory negligence) அந்த விபத்து நிகழ்ந்தது என்பது மெய்ப்பிக்கப்பட்டால் காயப்பட்டவருக்கு இழப்பீடு கொடுக்கப்பட வேண்டாம் என்பது சட்டம். ஆனால், நிகழ்வு நிலையில் என்ன நடக்கிறது? காயப்பட்டவர் மீது கனிவு கொள்ளுகின்றனர் நீதிபதிகள். எனவே, காயப்பட்டவரின் கவனமின்மையை நீதிமன்றங்கள் கருத்திற் கொள்வதில்லை. எப்படியும் காயப்பட்டு விட்டார். ஆதலால், அவருக்கு இழப்பீடு கொடுத்துத்தான் ஆக வேண்டும், என்ற இரக்க எண்ணத்தில் அவருக்கு இழப்பீடு அளித்துத் தீர்ப்பு வழங்கப்படுகிறது. இவ்வாறு, தற்கவனமின்மை (contributory negligence) என்ற சட்டக் கொள்கை நடைமுறையில் செயலற்றுப் போகிறது. காரணம், நீதிபதிகளின் இரக்க உணர்வு.

எனவே, நீதிபதிகளின் "தீர்ப்புகள் எப்படி இருக்கும் என்பதை ஊகித்துக் கூறுவது தான் சட்டம் ஆகின்றது" என்கின்றனர் நிகழ்வு நிலைக் கோட்பாட்டினர்.

இக்கோட்பாடு பற்றிய ஆய்வுரை

நீதிபதிகளின் தீர்ப்புகளை முன்னறிவதுதான் சட்டம் என்ற கோட்பாடு எல்லாச் சூழ்நிலைகளுக்கும் பொருந்துவதன்று.

ஒரு நாட்டின் அரசமைப்புச் சட்டம் (constitution) நீதிபதிகள் இட்டதே சட்டம் என்று கூறினால் இந்தக் கொள்கை ஏற்புடையதாகலாம். ஆனால், சாதாரணமாக எந்த நாட்டிலும் இத்தகைய வரம்பற்ற உரிமை நீதிபதிகளுக்கு இல்லை. இயற்றப்பட்ட சட்டங்களுக்கு உட்பட்டே நீதிபதிகள் இயங்குகின்றனர்.

இயற்றப்பட்ட சட்டம் நீதிபதிகளின் தீர்ப்புகளை ஊகித்துக் கூறுவதில்லை. அத்தீர்ப்புகள் இவ்வாறு தான் இருக்க வேண்டும் என்று வரையறுத்துக் கூறுகிறது.

நீதிபதிகளின் தீர்ப்புகளை முன்னறிவது தான் சட்டம் என்றால் சட்டத்திற்கு நிச்சயத் தன்மையே இல்லாது போய் விடும். இது தான் சட்டம் என்று எவரும் கூற இயலாத நிலை எழுந்து விடும்.

நடைமுறையில் பார்த்தால் நீதிமன்றத் தீர்ப்புகளில் பெரும்பாலானவை இயற்றப்பட்ட சட்டங்களைச் செல்லுறுத்தும் வகையில்தான் வழங்கப்படுகின்றன. அச்சட்டங்களைப் பின் பற்றியே வழக்குகள் அனைத்தும் தீர்க்கப்படுகின்றன. சட்டச் சிக்கல்கள் எழுவதும், அதனால் இயற்றப்பட்ட சட்டத்திற்கு நீதிமன்றம் பொருள் காணுவதும் மிகமிகச் சில வழக்குகளில் தான் தேவைப்படுகின்றன. இவ்வாறு நீதிமன்றங்கள் பொருள் காணுவது தீர்ப்புமுறைச் சட்டங்களாகக் (Judge-made law) கொள்ளப்படுகின்றன. ஆனால், இவற்றின் அளவு மிகவும் குறைவானது. இயற்றப்பட்ட சட்டங்களை ஒட்டிய தீர்ப்பு களோடு தீர்ப்புமுறைச் சட்டங்களை ஒப்பிட்டால் பின்னதன் அளவு மிகவும் குறைவானது என்பது தெளிவாகும். இவ்வாறு மிகக் குறைவான அளவில் தோன்றும் தீர்ப்புமுறைச் சட்ட விதிகளைக் வைத்துக் கொண்டு, சட்டம் அனைத்துமே தீர்ப்பு களின் அடிப்படையில் எழுவன என்று கூறுவது நிகழ்வு நிலைக்கு இசைந்தது அன்று என்கிறார் பிட்ஸ்ஜெரால்டு (Fitzgerald)

எழுதப்பட்ட சட்டமும் (enacted law) இயங்குமுறைச் சட்டமும்(law in practice) வேறுபட்டு இருப்பது உண்டு. ஏனெனில், நீதிபதிகள் இயற்றப்பட்ட சட்டத்தை அவ்வாறே செல்லுறுத்துவதில்லை. வழக்குகளில் உள்ள சூழ்நிலை, நீதிபதி களின் சமுதாயப் பின்னணி இவற்றுக்கு ஏற்பவே தீர்ப்புகள் அமைகின்றன. இதை வைத்துக் கொண்டு சட்டம் எல்லாமே நீதிபதிகள் கூறுவதுதான் என்று கொள்வது பொருந்தாது.

சால்மண்டின் சட்டக் கோட்பாடு

"நீதிமன்றங்களால் ஏற்கப்பட்டுச் செயற்படுத்தப்படும் விதிகளே சட்டம்", என்று சால்மண்ட் கூறுவதை மறுத்து

வாதங்கள் எழுப்பப்பட்டாலும் ஓர் உண்மையை நாம் மறந்து விடுவதற்கில்லை.

'சட்டம் என்பது நீதியின் கருவி' என்ற உண்மை உறுதிப்பட ஒலிக்கின்றது சால்மண்டின் சட்ட இலக்கணத்தில்.

மேலும் அவர் 'சட்டம்' என்ற சொல்லைக் குறிப்பிட்ட சட்டம் எதையும் (a law) குறிக்கும் வகையில் பயன்படுத்தவில்லை. பொதுவான சட்ட நெறியினையே (the law) 'சட்டம்' என்ற சொல்லால் குறித்து அதற்கு இலக்கணம் கொடுத்துள்ளார்.

சட்டங்களைச் செயற்படுத்துவதற்கே நீதிமன்றங்கள் உள்ளன. சட்டங்களை ஒட்டி நீதி வழங்குவதே அவற்றின் கடனாகும். இவ்வாறு இருக்க, நீதிமன்றங்கள்தாம் சட்டங்களின் மூலங்கள் என்று கூறுவது பொருந்தாது என்பது சால்மண்டின் கோட்பாட்டைக் குறைகூறுவோரின் வாதமாகும்.

'மருந்து என்றால் என்ன?' என்ற வினாவிற்கு 'மருந்து என்பது மருத்துவரால் கொடுக்கப்படுவது' என்று விடையளித் தால் பொருந்துமா? அவ்வாறு தான் 'நீதிமன்றம் ஏற்பது சட்டம்' என்று கூறுவதாகும் என்கிறார் சட்ட இயலறிஞர் வினோகி ரடாப் (Vinogradoff)

இயற்றப்பட்ட சட்டங்களின் அடிப்படையில் இயங்குவதுதான் நீதிமன்றம். எனவே, சட்டம் முந்தியது; நீதிமன்றம் பிந்தியது. ஆனால், சால்மண்டின் இலக்கணப்படி, 'பிந்திய நீதிமன்றம் முந்திய சட்டத்தைப் படைப்பது போல் ஒலிக்கின்றது' என்பது அடுத்த மறுப்புரையாகும்.

நாம் மேலே கண்டபடி, சட்டத்தின் பண்பும் பயனும் நீதிதான் என்பதைக் கருத்தில் கொண்டால் நீதியின் அடிப் படையில் சட்டத்தின் இலக்கணத்தைக் காண்பது சட்டத்தின் அடிப்படையான நீர்மையினை எடுத்துக் காட்டுவதாகிறது. சட்டத்தின் வாசகத்தைவிட அதன் வண்ணத்தை— சட்டத்தின் பதங்களை விட அவற்றின் பயனை எடுத்துக் காட்டும் ஏற்றம் உடையது சால்மண்ட் கூறியுள்ள இலக்கணம் எனலாம்.

தெளிந்த கொள்கை (The Pure Theory)

'சட்டத்தைப் பற்றிய தெளிந்த கொள்கை'. (the pure theory of law) என்பதை வகுத்தவர் ஹேன்ஸ் கெல்சன் (Hans Kelson)

(1881—1973) என்ற பேராசிரியர். இவர் வியன்னா (Vienna) பல்கலைக் கழகத்தில் சட்ட இயல் பேராசிரியராக இருந்தவர்.

சட்டக் கொள்கை எதுவும் சட்டம் இன்று எப்படி இருக்கிறது என்ற அடிப்படையில் அமைய வேண்டும்; சட்டம் எப்படி இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் அமைவது கூடாது. 'சட்டம்', 'சட்டம் பற்றிய கொள்கை' என்ற இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். சட்டக் கோட்பாடு என்றால் அது எல்லாச் சூழ் நிலைகளுக்கும் எக்காலத்திற்கும் பொருந்தும் வகையில் இருக்க வேண்டும். ஒழுக்க நெறி, அரசியல் நெறி, சமுதாய நெறி இவற்றின் தாக்கங்கள் எதுவும் இன்றிச் சட்டத்தை ஆய்தல் வேண்டும். இதுவே, 'தெளிந்த கொள்கை' என்பதன் அணுகு முறையாகும்.

பிற அறிவியல்களுக்கும் சட்ட இயலுக்கும் வேறுபாடு உண்டு. காரண காரியத் தொடர்புகளை விளக்குவன சாதாரண அறிவியல்கள். இன்ன விகிதத்தில் நீரியமும் (Hydrogen), உயிரியமும் (Oxygen) சேர்ந்தால் நீர் உண்டாகிறது என்ற காரண காரியத் தொடர்பைக் (Casual relation) கூறுவது அறிவியல். ஆனால், சட்ட இயல் கூறுவது இத்தகைய காரண காரியத் தொடர்பை அன்று; சமுதாயத்தில் நிலவும் நெறிமுறைகளைக் கூறுகிறது, சட்ட இயல். இன்னது நடந்தால் இன்னது விளைய வேண்டும், எடுத்துக் காட்டாக, ஒருவன் திருடினால் அவன் தண்டிக்கப்பட வேண்டும் என்ற வகையில் நெறிமுறைகளை (norms) விதிக்கிறது சட்டம். திருட்டுச் செயல் புரிந்த ஒருவன் தண்டனையில் இருந்து தப்பி விடலாம். இருப்பினும், 'திருடினால் தண்டனை உண்டு' என்ற நெறிமுறை பொய்த்து விடுவதில்லை.

காரண காரிய இயல்பைக் (casual) கூறுவன பிற அறிவியல்கள்; நெறி முறையின் (normative) இயல்பைக் கூறுவது சட்ட இயல். எனவே, சட்ட இயல் என்பது 'நெறி முறை இயல்' (Jurisprudence is a normative science) என்கிறார் கெல்சன். "பிற அறிவியல் ஆய்வுகள், காரண காரியக் கொள்கையின்படி உள்ளன; சட்டவியலின் ஆய்வு, நெறிமுறைக் கொள்கையின்படி உள்ளது", என்கிறார் அவர். 'குற்றம் இழைத்தவருக்குத் தண்டனை விதிக்கப்பட வேண்டும்', என்பது ஒரு நெறிமுறை (norm) 'கடன் பெற்றவர் அதைத் திரும்பக் கொடுக்க வேண்டும்' என்பது ஒரு நெறிமுறை (norm). 'விதிக்கப்பட்ட வரி செலுத்தப்பட வேண்டும்'

என்பது ஒரு நெறிமுறை. இவ்வாறு, 'வேண்டும்', 'வேண்டும்' என்ற 'வேண்டுறுத்தங்களை'க் (ought propositions) கொண்டது சட்ட இயல். இந்த வேண்டுறுத்தங்கள் சட்டப்படியானவையா என்பதை எப்படிக் காணுகின்றோம்?.

'குற்றம் இழைத்தவர் தண்டிக்கப்பட வேண்டும்' என்ற வேண்டுறுத்தம் சட்டப்படியானது. ஏனெனில், அது குற்ற இயல் சட்டத்தின் கீழ் எழுவது.

'குற்ற இயல்' சட்டம் எப்படி எழுந்தது? அது சட்டமன்றத்தால் இயற்றப்பட்டது. சட்ட மன்றத்தால் இயற்றப்பட்டதால் 'குற்ற இயல்' சட்டம் சட்டத் தன்மை பெறுகிறது. 'குற்ற இயல்' சட்டத்தில் இருந்து எழுவதால், 'குற்றம் இழைத்தவர் தண்டிக்கப்பட வேண்டும்' என்ற வேண்டுறுத்தம் சட்டத் தன்மை உடையதாகின்றது. இவ்வாறு, ஒரு சட்ட விதியின் செல்லுரிமை அதன் பின்னுள்ள வேறொரு விதியிலிருந்து எழுகின்றது.

எனவே, 'சட்ட மன்றத்தால் இயற்றப்படுவது சட்டமாகிறது' என்ற அடிப்படையான நெறிமுறையில் இருந்துதான் குற்ற இயல் சட்டமும், அச்சட்டம் கூறும் விதிகளும் சட்டத் தன்மையைப் (Lawness) பெறுகின்றன. இந்த 'அடிப்படையான நெறி முறை'யினை (ground norm)என்கிறார் கெல்சன்.

நமது பாரத நாட்டின் 'அரசமைப்பு' (Constitution) மத்திய, மாநிலச் சட்ட மன்றங்களின் அதிகார வரம்பினைக் கூறுகின்றது. இந்த அதிகாரத்தின் கீழ்தான் சட்டமன்றங்கள் சட்டங்களை இயற்றுகின்றன. எனவே, நம் நாட்டைப் பொறுத்த வரை 'அரசமைப்புச் சட்டம்' (The Constitution of India) 'அடிப்படை நெறி முறை' (ground norm) ஆகின்றது. ஆனால், இந்த அடிப்படை நெறிமுறைக்குச் சட்டத் தன்மை அளிப்பது என்று ஏதும் இல்லை. எனவேதான், இதை 'அடிப்படையான நெறி முறை' என்கிறார்.

இவ்வாறு, ஒரு நாட்டின் 'அடிப்படை நெறி முறை', அந்த நாட்டு அரசின் பிற உறுப்புகளுக்கு நெறி முறைகளை வகுக்கும் அதிகாரத்தைப் பகுத்து அளிக்கின்றது. எனவே பல்வேறு நெறிமுறைகள் செல்லுரிமை உடையனவா என்பதைக் காண்பதற்கு ஆதாரமாக உள்ளது அடிப்படை நெறிமுறையே ஆகும். இந்த வகையில், அடிப்படை நெறிமுறை, அது கூறும் வகையில் நெறிமுறைகளை வகுக்கும் அரசின் உறுப்புகள், அந்த நெறி முறைகளின் இயக்கம், இவையனைத்தும் ஒருங்கிணைந்த

அமைப்புத்தான் ஒரு நாட்டின் 'சட்ட ஒழுங்கமைப்பு' (Legal order) ஆகிறது, என்கிறார் கெல்சன்.

இவ்வாறு, ஒரு நாட்டின் சட்ட ஒழுங்கமைப்பினை, அற நெறி, அரசியல் நெறி, சமுதாய நெறி இவற்றோடு கலக்காமல், சட்ட நெறிமுறையின் (Legal norms) அடிப்படையிலையே விளக்குவதால், இக் கொள்கையினைத் 'தெளிந்த கொள்கை' (The pure theory) என்று அவர் கூறுகின்றார்.

பிற கொள்கைகள் எல்லாம் சட்டம் என்றால் அது அறத்தை ஒட்டி இருத்தல் வேண்டும் அல்லது நீதிக்கு உகந்ததாக இருத்தல் வேண்டும் அல்லது சமுதாய நலனுக்கு ஏற்றதாக இருத்தல் வேண்டும் என்று கூறுகின்றன. சட்டத்தின் செல்லுரிமை (validity) சட்டத்திற்கு அப்பாலான பிற இயல்புகளின் அடிப்படையில் அறுதி செய்யப்படுகின்றது. ஆனால், கெல்சன் வகுக்கும் கொள்கையில், சட்டத்தின் செல்லுரிமை சட்ட நெறிமுறைகளைப் பொறுத்தே உள்ளது. சட்ட நெறி முறைகளுக்கு (Legal norms) அப்பால் செல்லாமல், ஒரு நாட்டின் சட்ட ஒழுங்கமைப்பினை விளக்குகிறது கெல்சன் வகுத்த 'சட்டத்தைப் பற்றிய தெளிந்த கொள்கை' (The Pure Theory of Law).

ஆஸ்டின் கொள்கையின்படி அரசு என்பது ஒன்று; அதன் ஆணையான சட்டம் என்பது வேறொன்று. ஆனால், கெல்சனின் கொள்கையின்படி அரசும் சட்டமும் வேறல்ல; சட்ட ஒழுங்க மைப்புத்தான் (Legal order) அரசு என்பது. அரசால் இயற்றப்படுவது சட்டம் என்று ஆஸ்டின் கூறுகின்றார்; சட்டம் தன்னைத்தானே நெறிப்படுத்திக் கொள்கிறது என்கிறார் கெல்சன்.

இவ்வாறு, 'சட்டம் என்பது தானே இயங்கும் தனி அமைப்பு' என்ற தெளிந்த கோட்பாட்டினைத் (Pure Theory) தேர்ந்து விளக்குகிறார் பேராசிரியர் கெல்சன்.

நாட்டிடைச் சட்டம் (International Law), அரசமைப்புச் சட்டம் (Constitutional Law) இவை இரண்டும் சட்டங்களா என்ற வாதம் எழுவதற்குப் பிற சட்டக் கொள்கைகளில் இடம் உண்டு. ஆனால், கெல்சனின் சட்டக் கோட்பாட்டில் இந்த வாதத்திற்கு இடமில்லை.

ஆலன் (Allen), ஃபிரிட்மேன் (Friedmann) போன்ற அறிஞர்கள் கெல்சனின் கோட்பாட்டில் குறை காணுகின்றனர். 'அடிப்படை நெறிமுறை' (ground norm) என்பது நாட்டிடைச்

சட்டத்திற்குப் பொருந்துவதில்லை.

மேலும், 'அடிப்படை நெறிமுறை' என்பது நாட்டுக்கு நாடு வேறுபடலாம். இது போன்ற தெளிவின்மைகள் பல கெல்சனின் 'தெளிந்த கொள்கை'யில் இருந்தாலும் சட்டக் கோட்பாட்டினைப் பிற தொடர்பின்றிப் பிரித்துத் தானே இயங்கும் தனி அமைப்பாகக் காட்டிய பெருமை இந்த இருபதாம் நூற்றாண்டுக் கொள்கைக்கு உண்டு என்று கூறுகின்றனர் ஆய்வாளர்கள்.

அரசமைப்புச் சட்டம்

(Constitutional Law)

['அரசமைப்பு' என்றால் என்ன? —இதைச் 'சட்டம்' என்று கூறலாமா?]

'அரசமைப்பு' என்றால் என்ன?

Constitution என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'அமைப்பு' என்பது பொருள். ஆனால், அச்சொல் 'உடல் அமைப்பு', 'அரசு அமைப்பு' இரண்டையுமே பொதுவாகக் குறிக்கின்றது.

நம் உடலில் பல உறுப்புக்கள் உள்ளன. இவ்வுறுப்புக்களின் இணைந்த இயக்கமே நம் உடல் நலனுக்கு உறுதி அளிக்கின்றது. அது போல், அரசு என்ற அமைப்பிற்கும் பல உறுப்புக்கள் உள்ளன. பல்வேறு வகையில் அவை செயல்படுகின்றன. அவற்றின் இணைந்த இயக்கமே அரசு என்ற அமைப்பின் ஆதாரமாகின்றது.

அரசின் உறுப்புக்கள் எவை? அவை ஒவ்வொன்றின் கடமை என்ன? அவை இயங்கும் முறை என்ன? இவ்வாறு, அரசு என்ற அமைப்பின் உறுப்புக்கள் இயங்கும் நெறிமுறையைக் கூறும் விதிகளை 'அரசமைப்புச் சட்டம்' (Constitutional Law) என்று கூறுகிறோம். சுருக்கமாகச் சொன்னால், அரசின் அமைப்பைக் கூறுவது 'அரசமைப்புச் சட்டம்' எனலாம்.

ஓர் அரசின் அரசாண்மை அதிகாரம் (Sovereign power) எவ்வாறு பகிர்ந்து பயில்திறப்படுத்தப் பெறுகின்றது? அவ்வாறு பயில்திறப்படுத்தும் உறுப்புக்கள் எவை? அவ்வுறுப்

புக்களிடையே உள்ள சம்பந்தம் என்ன? இவற்றையெல்லாம் விளக்கி, அரசமைப்பின் இயக்கத்தை நெறிமுறைப் படுத்தும் விதிகளைத்தான் அரசமைப்புச் சட்டம் என்கிறோம். இது டைசி (Dicey) என்ற அறிஞர் கூறும் இலக்கணமாகும்.

''அரசாண்மையருக்கும், குடிமக்களுக்கும், அரசாண்மை அமைப்பின் உறுப்புக்களுக்கும் இடையுள்ள உறவு முறையினைக் கூறும் விதிகளைக் கொண்டது அரசமைப்புச் சட்டம்''[1] என்கிறார் ஹிப்பெர்ட் (Hibbert).

எனவே, 'அரசமைப்புச் சட்டம்' என்பது ஓர் அரசின் அடிப்படையான உறுப்புக்களைப் பற்றியும் இவற்றின் செயற்பாடு பற்றியும் விதிக்கும் ஆதார நெறிமுறைகளைக் கொண்டது என்பது தெளிவாகும்.

இந்த இடத்தில் ஒரு சிக்கல் எழுகின்றது.

அரசு என்ற அமைப்பு ஏற்பட்ட பின்னர்தானே சட்டங்கள். தோன்றுகின்றன? அரசின் அமைப்பைக் கூறும் விதிகளையும் 'சட்டங்கள்' என்று குறிப்பிட்டால், அரசு அமைவதற்கு முன்னரே சட்டங்கள் தோன்றிவிட்டனவா? அரசு முந்தியதா; சட்டம் முந்தியதா? இப்படி ஒரு சிக்கல் தோன்றுகிறது.

ஒரு மொழி இவ்வாறுதான் பேச்சிலும் எழுத்திலும் கையாளப்பட வேண்டும் என விதிப்பது அந்த மொழியின் இலக்கணம் (grammer) ஆனால், அந்த இலக்கணம் அம்மொழிக்கு முந்தியது அன்று. இயல்பாகவே, ஒரு மொழி பிறந்து, வளர்ந்து, வளம்பெற்று, இலக்கியங்கள் ஓரளவு அதில் தோன்றிய பின்னர்தான், அந்த மொழிக்கான இலக்கணம் எழுதப் பெறுகின்றது. அதன்பின், அந்த இலக்கணத்தின் வழியில் அம் மொழி மேலும் வளர்ச்சி பெறுகிறது. இதையே ''இலக்கியம் கண்டதற்கு இலக்கணம்'', என்பார்கள். இப்படியேதான், எல்லாக் கலைகளும் வளர்ந்து ஒரு சீரான நிலை எய்திய பின்னரே அக்கலைகளுக்கான இலக்கணம் இயற்றப்படுகிறது. இசை வளர்ச்சியுறும் நிலையில்தான் பண் பிறக்கிறது; நாட்டியம் வளர்ச்சியுறும் நிலையில்தான் தாளம் பிறக்கிறது.

---

1 Constitutional law is the body of rules governing the relation between the soverign and his subjects and the different parts of the sovereign body - Hibbert in his "Jurisprudence".

இம்மாதிரியே, ஒரு சமுதாயத்தில் அரசு என்ற அமைப்பு ஏற்பட்டு, அரசியல் வாழ்விலே அம்மக்கள் ஓரளவு முன்னேற்றம் அடைந்த பின்னரே அந்த அரசமைப்பிற்கு இலக்கணம் எழுதப் பெறுகின்றது; அரசமைப்புச் சட்டம் பிறக்கின்றது. இந்த உண்மையினை சால்மண்ட் இவ்வாறு கூறுகிறார்.

''அரசு என்ற அமைப்பு அரசமைப்புச் சட்டத்திற்கு முந்தியது. அதாவது, அரசமைப்புச் சட்டத்திற்கு முன்னரே அரசமைப்பைப் பொறுத்த வழக்காறுகள் செயலில் இருந்தன. ....எனவே, அரசமைப்பின் இயக்கத்தைத் தொடர்ந்து தோன்றியதே அரசமைப்புச் சட்டம் ஆகும்''.[1]

எனவே, அரசும் அதன் இயக்கமும் முந்தியன. அதன் பின்னரே, அரசமைப்புச் சட்டவிதிகள் தோன்றின என்பது தெளிவாகும்.

இதைச் 'சட்டம்' என்று கூறலாமா?

அடுத்து எழும் வினா, அரசமைப்புச் சட்டவிதிகளைச் 'சட்டம்' என்று கூறலாமா? என்பதாகும்.

ஆஸ்டின் வகுத்துள்ள இலக்கணப்படி சட்டம் என்பது அரசாண்மையரின் ஆணை. எனவே, அரசாண்மையரின் ஆணையாக உள்ள சட்டம் அரசாண்மையரைக் கட்டுப் படுத்துவது இயலாது. அரசமைப்புச் சட்டவிதிகளோ அரசின் இயக்கத்தையே வரையறை செய்வதாகும். எனவே, இவற்றைச் 'சட்டம்' என்று கொள்வது தகாது. அரசியல் ஒழுக்க நெறிக்குக் கட்டுப்பட்டுத்தான் அரசமைப்புச் சட்டவிதிகள் பின்பற்றப்படு கின்றன. ஆதலால், 'அரசமைப்புச் சட்டம் என்பது ஓர் ஒழுக்க நெறியே தவிரச் சட்ட நெறி அன்று' என்கிறார் ஆஸ்டின்.

ஆஸ்டினின் வாதத்திற்கு ஆசிரியர் வில்லோபி (Willowghby) பதிலளிக்கின்றார்: ''அரசியல் சட்டம் கட்டுப்படுததுவது அரசை அன்று, ஆட்சியைத் தான் (Government)அது கட்டுப்படுத்துகிறது. அரசு என்பது வேறு;

---

1 The Constitution as a matter of fact is logically prior to the constitution as a matter of law: in other words, constitutional practice is logically prior to constitutional law . . . . Constitutional law followed hard upon the heels of constitutional fact - Salmond.

ஆட்சியம் என்பது வேறு. இந்த வேறுபாட்டை மறந்ததாகும் ஆஸ்டினின் வாதம் என்கிறார்.

வில்லோபியின் கூற்றும் குறைபாடுள்ளது. ஏனெனில், எழுதப்பட்ட அரசமைப்புச் சட்டங்கள் அரசின் அதிகாரத்தை வரையறை செய்கின்றன.

புதிதாக அரசியல் விடுதலை பெறும் நாடுகள் பலவும் தங்கள் அரசமைப்புச் சட்டங்களை இயற்றிக் கொள்கின்றன. நாட்டு மக்களைக் கொண்டதே அந்நாட்டின் அரசு, எனவே, அந்த அரசின் அமைப்பைத் தீர்மானிப்பது அந்நாட்டு மக்களின் உரிமையாகும்; அடிப்படை உரிமையாகும். ஆகவே, மக்கள் தங்கள் ஆதார உரிமையின் கீழ் நாட்டின் அரசமைப்பை வகுத்துக் கொள்கின்றனர். நம் பாரத நாடு தன்னுரிமை பெற்ற பின், நம் நாட்டை ஒரு குடியரசாக அமைத்து அதற்கென அரசமைப்பை நாம் வகுத்துக் கொண்டோம். "இந்திய மக்களாகிய நாம் நமக்கு நாமே அளித்துக் கொள்ளும் அரசமைப்பு" என்ற முகப்புரையுடன் (Preamble) தொடங்குகிறது நம் அரசமைப்புச் சட்டம்.

சில நாடுகளில் அரசியல் அமைப்புச் சட்டம் எழுதப்படாமல் நீண்ட நாளைய வழக்காறுகள், மரபுகள் இவற்றின் அடிப்படையில் இயங்கி வருகிறது. தொன்று தொட்டு வரும் வழக்காறுகளே அரசமைப்பு விதிகளாகப் பின்பற்றப் படுகின்றன. இம்முறையில் இயங்கும் அரசியலமைப்பு நெறி இங்கிலாந்தில் சிறப்பாக நிகழ்கின்றது.

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்" (குறள் 549)

என்பது அறநெறி.

'குடிகளைப் பிறர் வருத்தாமல் காத்து, தானும் வருத்தாமல் அவர்களைப் பேணி, குற்றம் இழைப்பவர்களைத் தண்டிப்பது அரசனின் கடமை' என்கிறார் வள்ளுவர்.

குடியரசு என்ற அமைப்பில் அரசர் என்று எவரும் இல்லை. ஆயினும், ஆட்சியில் இருப்பவர்கள் இயற்றும் சட்டங்களால் நாட்டு மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பிற அடிப்படையான உரிமைகளுக்கும் இடர் விளையலாம். பேச்சுரிமை, சமய உரிமை, கருத்துப் பரிமாற்ற உரிமை போன்றவை மனிதனின் நல்வாழ்விற்கு இன்றியமையாத உரிமைகள். இத்தகைய உரிமைகளுக்கு விளையும் இடர்ப் பாடுகளைத் தவிர்க்கும் வகையில், மக்களின் நல்வாழ்விற்கு

இன்றியமையாத உரிமைகளை "அடிப்படை உரிமைகள்" (Fundamental rights) எனக் குறிப்பிட்டு, அவ்வுரிமைகளைப் பாதிக்கும் சட்டம் எதுவும் செல்லுரிமை அற்றது எனச் சாற்றுகிறது நம் நாட்டு அரசமைப்புச் சட்டம். இந்த அடிப்படை உரிமைகளை எந்த வகையிலும் மாற்றவும் இயலாது எனத் தெளிவாக விதிக்கிறது. ஐக்கிய அமெரிக்கா போன்ற குடியாட்சி நிலவும் பல நாடுகளிலும் இத்தகைய பாதுகாப்பு அளிக்கப்பட்டு, மக்களின் அடிப்படை உரிமைகள் அரசின் ஆதிக்கத்திற்கு அப்பாலாய் வைக்கப்பட்டுள்ளன.

இந்த அடிப்படை உரிமைகளைப் பாதிக்கும் சட்டங்கள் செல்லுரிமையற்றவை என்று சாற்றும் தனியுரிமை நீதிமன்றங்களுக்கு அளிக்கப் பெற்றுள்ளது. மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் புனிதக் கடமை, நீதி வழங்கும் மன்றங்களுக்கு உண்டு.

நாட்டு மக்களின் நல்வாழ்விற்கு அடிப்படையாக அரசமைப்புச் சட்டம் விளங்குவதால், நம் நாட்டில், குடியரசுத் தலைவர், ஆளுநர்கள், அமைச்சர்கள் போன்ற ஆட்சிப் பதவியில் உள்ளோர், தாங்கள் பதவி ஏற்கும் பொழுது நாட்டின் அரசமைப்புச் சட்டத்தைத் பேணிக் காப்பதாக ஆணையுறுதி எடுக்கின்றனர். இத்தகைய ஆணையுறுதி எடுக்க வேண்டுமென நம் அரசமைப்புச் சட்டம் விதிக்கின்றது.

இவ்வாறு, நாட்டு மக்களின் நல் வாழ்விற்கான அடிப்படை உரிமைகளுக்கு ஓர் அரணாய், அரசு அங்கங்களின் இயக்கத்திற்கு ஒரு நெறியாய், நாட்டின் அரசியல் நாகரிகத்திற்கு ஓர் இலச்சினையாய் விளங்குகின்றது அரசமைப்புச் சட்டம்.

நாட்டிடைச் சட்டம்

(International Law)

['நாட்டிடைச் சட்டத்தின் தன்மை என்ன? —— இது ஓர் ஒழுக்க முறையா?, சட்டமா? .....]

சமுதாய நல்வாழ்விற்குச் சட்டம் இன்றியமையாததாக உள்ளது என்று கண்டோம்.

இன்று, பல நாடுகளைக் கொண்ட ஒரு சமுதாயமாகவே உலகம் விளங்குகிறது. உலக நாடுகள் ஒன்றுக்கொன்று பல வகைகளில் தொடர்பு கொண்டுள்ளன. வாணிபம், செய்தித் தொடர்புகள், போக்குவரத்து என்று எத்துணையோ துறைகளில் உலகநாடுகளின் தொடர்பு வளர்ந்துள்ளது. இத்தொடர்புகள் ஒழுங்காக இயங்குவதற்கான உறவு முறைகள் நாடுகளிடை நிலவ வேண்டும். நீண்ட நாளைய வழக்காறுகளும் மரபுகளும் நாடுகளிடையான உறவு முறைகளை வகுத்துள்ளன. நாடுகளிடை எழும் ஒப்பந்தங்களையும் உறவு முறைகளையும் பேணி நடக்கும் கடப்பாடு உலகநாடுகளுக்கு உள்ளது. இல்லையேல், நாடுகளிடை எழும் ஒப்பந்தங்கள் பொருளற்றனவாகிவிடும். இவ்வாறு, உலக நாடுகள் தம்மிடை ஓர் ஒழுங்குக்கு உட்பட்டு இயங்குவதால், அந்த ஒழுங்கை 'நாடுகளின் சட்டம்' (Law of nations) என்று சட்டவியலறிஞர்கள் கூறுவார்கள். 'நாடுகளின் சட்டம்' என்றால் நாடுகளுக்கு மேலான சட்டம் என்ற பொருள் படும் என்பதால், ஜெரிமி பெந்தம் இச்சட்டத்தை நாடுகளிடை எழும் சட்டம் 'நாட்டிடைச் சட்டம்' (International Law) என்று குறிப்பிட்டார்.

''வழக்காறு அல்லது நாட்டிடை ஒப்பந்தம் (treaty) இவற்றால் எழும் விதிமுறைகளுக்கு இசைந்து நாகரிக நாடுகள் தம்மிடை எழும் உறவுகளை வகுத்து நடக்கக் கடமைப் பட்டுள்ளன. இவ்விதிமுறைகள் மீறப்பட்டால், அதனால் தீங்குற்ற நாடு அதற்கான தீங்கீடு பெறுவதற்கு உரிமையுடையதாகும். இந்த விதிமுறைகளே நாட்டிடைச் சட்டம் என்பது'', என்கிறார் வீட்டன் (Wheaton) என்ற ஆசிரியர்.

நாட்டிடைச் சட்டத்தின் தன்மை என்ன?

நாட்டிடைச் சட்டத்தின் தன்மை என்ன? அதைச் சட்டம் என்று கூறலாமா என்பது பற்றி சட்ட இயலறிஞர்களிடையே கருத்து வேற்றுமை உள்ளது. இது நீண்ட நாள்களாக உள்ள வேறுபாடு; இன்றும் தீர்க்கப்படாத வேறுபாடு.

ஆஸ்டின் (Austin), வில்லோபி (Willoughby), ஹாலண்ட் (Holland) போன்றோர் நாட்டிடைச் சட்டத்தைக் 'கட்டுறுத்தும் ஒழுக்கம்' (positive morality) என்று கூறலாமே தவிர, இதைச் 'சட்டம்' என்று கூறுவதற்கில்லை என்கின்றனர். ஆனால், வீட்டன் (Wheaton), ஒப்பன்ஹீம் (Oppenheim) போன்ற ஆசிரியர்கள் அது முறைப்படியான சட்டம் தான் என்று விளக்குகின்றனர். இது ஒரு தனிவகையான 'மரபுமுறைச் சட்டம்' (Conventional Law) என்கிறார் சால்மண்ட்.

அது ஓர் ஒழுக்கமுறைதான் என்ற கருத்து

ஆஸ்டினின் கருத்துப்படி 'சட்டம்' என்பது அரசாண்மையரால் தமக்குப் பணிந்து நடப்போருக்கு இடும் ஆணையாகும். அரசாண்மையுடைய நாடுகளுக்கு மேலாக வேறு அரசாண்மையர் இருத்தல் இயலாது. நாடுகள் அனைத்தும் சமநிலையில் உள்ளவை. எனவே, அவை ஒப்புக் கொண்ட விதிகளை ஆணைகள் என்று கொள்வதும் பொருந்தாது. ஆதலால், அவ்விதிகளைச் 'சட்டம்' என்று சொல்வதற்கில்லை.

மேலும் சாதாரணச் சட்டத்தை மீறினால் தண்டனை உண்டு. நாட்டிடைச் சட்டம் மீறப்பட்டால் தண்டனை என்று ஏதும் இல்லை. தண்டனை விதிப்பதற்கான மேலுறுத்தம் (sanction) எதுவும் இல்லை.

நாட்டிடைச் சட்டத்தைப் பெயரளவிற்கு வேண்டுமானால் 'சட்டம்' என்று குறிப்பிடலாம்; ஆனால், சட்டத்தின் இலக்கணம் எதுவும் இதற்கு இல்லை என்கிறார், ஹாலண்ட். இதைச் 'சட்டம்' என்பதற்கில்லை. ஏனெனில், இதைச் செல்லுறுத்தும் அதிகாரம் எவருக்கும் இல்லை. இது தனிமனிதர்கள் நடத்தையைக் கட்டுப்படுத்தாமல் நாடுகளின் நடத்தையையே கட்டுப்படுத்துகிறது. எனவே, இதை ஒழுக்கம் (morality) என்று கூறுவதும் பொருந்தாது. நாடுகளிடையே வேறுபாடு தோன்றினால் நடுவராக இருந்து அதைத் தீர்த்து வைக்கும் அதிகாரமும் பிறருக்கு இல்லை. எனவே, "நாட்டிடைச் சட்டம் என்பது சட்ட இயல் வரம்பிற்குள் வராத ஒன்றாகும்,"[1] என்கிறார் ஹாலண்ட். 'நாட்டிடைச் சட்ட விதிகளை நாட்டிடை நிலவும் ஒழுக்க விதிகள் என்று கூறலாமே தவிர வேறு வகையில் அவற்றைக் குறிப்பிடுவதற்கில்லை' என்கிறார் அவர்.

அது 'சட்டம்' தான் என்ற கருத்து

சட்டத்திற்கு ஆஸ்டின் கூறியுள்ள இலக்கணத்தை உரைகல்லாக வைத்து நாட்டிடைச் சட்டத்தை ஆய்வது பொருந்தாது. ஏனென்றால், சட்டத்திற்கு ஆஸ்டின் கூறுகின்ற இலக்கணமே தவறானது. 'சட்டம்' என்பது ஆணையாக இருக்க வேண்டும் என்பதன்று. சமுதாய மக்கள் சட்டத்திற்கு அடங்கி நடப்பது என்று தங்களுக்குள் இசைவதால் எழுவதே சட்டமாகும். இங்கு, நாடுகள் ஒன்றுக்கொன்று இசைந்து விதிமுறைகளை ஏற்றுக் கொள்கின்றன. எனவே, அவை சட்ட விதிகள் போன்றவைதாம்.

நாட்டிடைச் சட்டத்தைச் செல்லுறுத்துவதற்கு (enforcement) என்று எவரும் இல்லை என்பதால் அச்சட்டம் வலுவிழந்ததுதான். ஆனால், வலுவிழந்ததால் மட்டுமே சட்டம் தன் தன்மையை இழந்து விடுவதில்லை. எனவே, நாட்டிடைச் சட்டமும் சட்டமேதான், என்பது ஒப்பன் ஹீம் போன்றோர் கருத்து.

பயனில்லா விவாதம்

நாடுகளிடை உறவு முறைகளை வகுக்கும் விதிகள் உள்ளன. அவ்விதிகளைப் பேண வேண்டும் என்ற இசைவும் நாடுகளிடை

1 International law is the vanishing point of the jurisprudence.

உண்டு. இவ்விதிகளை நாடுகள் தங்களுக்குள் ஏற்படும் ஒப்பந்தங்கள் வாயிலாக மாற்றிக் கொள்கின்றன. இவ்வாறு, இவ்விதிகள் சாதாரணச் சட்ட விதிகளைப் போன்றே செயல்படுகின்றன. ஆயினும், 'சட்டம்' என்ற சொல்லுக்கு நாம் ஓர் இலக்கணத்தைக் கற்பித்து, அந்த இலக்கணத்திற்கு இசைந்தது இல்லை என்ற காரணத்தால் நாட்டிடை உறவு விதிகளைச் 'சட்டம்' என்று கொள்வதற்கில்லை என்று கூறுகிறோம். இது, ஆசிரியர் ஹார்ட் (Hart) என்பாரின் கருத்து.

ஒவ்வொரு சொல்லுக்கும் இன்ன பொருள் என்று நாம் தான் வரையறுக்கின்றோம். அது போன்றே, சட்டம், என்ற சொல்லுக்கும் ஒரு பொருளை ஏற்றிக் கூறுகிறோம். அந்தப் பொருளுக்கேற்ப நாட்டிடை உறவு விதிகள் உள்ளனவா என்று ஆய்கின்றோம். இது பயனற்ற ஆய்வு என்கிறார் பிட்ஸ்ஜெரால்டு (Fitzgerald) நாம் என்ன பெயரால் குறிப்பிட்டாலும் நாட்டிடைச் சட்டத்தின் தன்மையும் தகைமையும் மாறுவனவல்ல. எனவே, நாட்டிடைச் சட்டம் என்பது சட்டமா அல்லவா என்ற விவாதம் பொருளற்றது; வீணானது என்கிறார் அவர்.

அமெரிக்க நாட்டு நிலை.

ஐக்கிய அமெரிக்க நாட்டில் நாட்டிடைச் சட்ட விதிகளை அந்நாட்டின் சட்டவிதிகளாகவே கொண்டு நீதிமன்றங்கள் செயலுறுத்துகின்றன.

இங்கிலாந்து நாட்டு நிலை.

பிரித்தானிய நாட்டில் நீதிமன்றங்கள் நாட்டிடைச் சட்ட விதிகளை ஏற்றுச் செல்லுறுத்துவதில்லை. 'கப்பல் கைப்பற்றுச் சட்டம்' (Prize law) என்ற சட்டத்தை மட்டும் அந்நாட்டு நீதிமன்றங்கள் செல்லுறுத்துகின்றன.

இந்தியாவில் பிரித்தானிய நாட்டு முறையினையே பின்பற்றுகிறோம். அதாவது, நாட்டிடைச் சட்ட விதிகளை இந்திய நீதி மன்றங்கள் ஏற்றுச் செல்லுறுத்துவதில்லை.

இன்றைய உலக அரசியலில் நாம் காண்பது என்ன?

ஐக்கிய நாடுகளின் சபை (U.N.O.) நிறைவேற்றும் தீர்மானங்களை உறுப்பு நாடுகளில் பல மதிப்பதில்லை. தீர்

மானங்களின்படி நடப்பதில்லை. காரணம் அவற்றைச் செல்லுறுத்துவதற்கென்று எந்த வகை ஏற்பாடும் இதுவரை உருவாகவில்லை. இருப்பினும், ஐக்கிய நாடுகள் சபை திரட்டும் படைகள் உலகில் பூசல் எழும் பகுதிகளில் பணியாற்றி அமைதி நிலவச் செய்கின்றன. உலக நாடுகள் தங்களிடை எழும் பூசல்களை அச்சபைக்குத் தெரிவிக்கின்றன. எனவே, நாட்டிடைச் சட்டங்களை வெறும் ஒழுக்கங்கள் அல்லது வழக்காறுகள் என்று வருணிக்கும் கால கட்டத்தை நாம் கடந்துவிட்டோம். எனினும், இவை சாதாரணச் சட்டங்கள் போன்று செல்லுறுத்தப்படும் நிலையையும் எய்தவில்லை.

ஒவ்வொரு நாடும் பிற நாடுகளுடன் கொள்ளும் தொடர்பு நேர்மை, நன்னம்பிக்கை என்ற பண்புகளின் அடிப்படையில் தான் அமைகின்றது. காலப் போக்கில் எழுந்த வழக்காறுகள் நாட்டிடை உறவு முறைகளை வகுத்தாலும் கூட அவ்வழக்காறுகள் இன்று மரபுகளாக மட்டும் இல்லை. அம்மரபுகளைப் பேணும் கடப்பாட்டிலிருந்து நாடுகள் எளிதில் தப்புவது இயலாது. உலக வங்கியிலிருந்து பிற நாடுகள் பெற்றுள்ள கடன் தொகைகளைத் திரும்பிச் செலுத்த வேண்டியது வெறும் அறக்கடமை மட்டுமன்று; சட்டக் கடமையாகவும் உள்ளது. இனி எதிர் காலத்தில் நாட்டிடைச் சட்டவிதிகள் சாதாரணச் சட்டங்கள் போன்று இயங்கினால்தான் உலக அமைதி உறுதி பெறும். இந்த நிலையை நோக்கியே உலக அரசியலும் செல்லுகிறது எனலாம்.

நிலவரைச் சட்டங்களும், இனமுறைச் சட்டங்களும்

(Territorial Laws and Personal Laws)

[இனமுறைச் சட்டம் — நிலவரைச் சட்டம் — அயலக ஒப்படை]

இனமுறைச் சட்டம்

நம் இந்திய நாட்டில் பல மதத்தினர் வாழ்கின்றனர். நெடுங்கால வழக்க நெறியில் எழுந்த வழக்காறுகளை ஒட்டியும், சமய சாத்திரங்களை ஒட்டியும் அந்தந்த மதத்தினரின் வாழ்முறைகள் உருவாகியுள்ளன. அவற்றை ஒட்டி, சட்ட விதிகள் அமைந்துள்ளன. இறங்குரிமை (inheritence), திருமணம் (marriage), போன்ற பல வாழ்முறைகள் குறித்த சட்டங்கள் இந்து சமயத்தினர், முகமதியர்கள், கிருத்துவ சமயத்தினர் இவர்களுக்குத் தனித்தனியாக உள்ளன.

இவ்வாறு ஒரு சமயத்தினர்க்கு மட்டுமே பொருந்துறும் சட்டங்களை 'இந்துச் சட்டம்'(Hindu Law), 'முகமதியர் சட்டம்' (Mohammedan Law) என்று பிரித்துக் கூறுவார்கள். இத்தகைய சட்டங்களை 'இனமுறைச் சட்டங்கள்' (Personal Laws) என்று சட்ட இயலில் குறிப்பிடுகின்றோம்.

நிலவரைச் சட்டம்

'இனமுறைச் சட்டங்கள்' என்பவை அந்தந்த மதத்தினரின் தனிப்பட்ட வாழ்முறையைப் பொறுத்தே உள்ளன. ஆனால், ஒரு

நாட்டின் குடிமக்கள் என்ற முறையில், குடிகள் அனைவரும் அந்நாட்டின் சட்டங்கள் பலவற்றுக்குக் கட்டுபட்டே வாழ்கின்றனர். குற்றவியல் சட்டம் என்றால், இந்துக்களுக்கு என்று ஒரு வகைச் சட்டமும், முகமதியர்களுக்கு என்று வேறுவகைச் சட்டமும் இருப்பதற்கில்லை. திருடியவன் தண்டிக்கப்பட வேண்டும் எனில் அவன் இந்துவானாலும், முகமதியனானாலும் தண்டிக்கப்பட வேண்டியவனே ஆகின்றான். அம்மாதிரியே, ஒப்பந்தங்கள் (Contracts) என்று எடுத்துக் கொண்டால், அவற்றைப் பொறுத்த சட்டம் நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒருங்கே பொருந்துற வேண்டும். இல்லாவிடில் நாட்டில் வாணிப முறையும், வாக்குறுதி நிலையும் சீர்குலைந்து விடும். எனவே, குற்றவியல் சட்டம் (Penal code), ஒப்பந்தச் சட்டம் (Contract Act) போன்ற சட்டங்கள் இந்திய நாட்டில் வாழும் எல்லாக் குடிமக்களையும் கட்டுப்படுத்துகின்றன. இவ்வாறு, இந்திய நாட்டின் நிலவரையனைத்திலும் நிலவும் சட்டங்களை 'நிலவரைச் சட்டங்கள்' (Territorial Laws) என்கிறோம்.

பொதுவாகக் கூறுமிடத்து ஒவ்வொரு நாட்டின் சட்டமும் அந்தந்த நாட்டின் எல்லைக்குள் மட்டுமே செயலுறுத்தப்படுகின்றது. அவ்வாறு செயலுறுத்துவதே இயலும். ஓர் அரசு (state) என்றால் அதற்கு நிலவரை (territory) உண்டு. அது போல், அந்த அரசு இயற்றிச் செல்லுறுத்தும் சட்டங்களும் அந்த நிலவரைக்குள் அடங்குகின்றன. எனவே, ஓர் அரசு இயற்றும் சட்டத்தின் ஆள்வரை (Jurisdiction) அந்த அரசின் நிலவரை (territory) யினைக் கொண்டதேயாகும். ஆதலால், எந்த ஒரு சட்டத்தின் ஆள்வரையும் ஒரு நிலவரையினைப் (territorial) பொறுத்ததாகவே உள்ளது.[1]

ஒரு நாட்டின் நிலவரை (territory) என்பது அந்நாட்டின் நில எல்லையோடு நின்று விடுவதில்லை. அந்நாட்டைச் சேர்ந்த கப்பல்கள், விமானங்கள் எல்லாமே அந்நாட்டின் நில எல்லைக்குள் அடங்குவனவாகக் கொள்ளப்படுகின்றன.

ஒரு நாட்டின் சட்டம் நிலவரை சார்ந்தது (territorial) என்றால், அந்த நிலவரைக்குள் உள்ள எல்லோரையும் அச்சட்டம் கட்டுப்படுத்தும் என்பதாகும். தமிழ்நாடு மாநிலத்தில் மதுவிலக்குச் சட்டம் உண்டு என்றால், வெளிநாட்டினர் ஒருவர்

[1] The enforcement of law is undoubtedly territorial in the same way as a state is territorial - Salmond.

தமிழ் நாட்டில் மது அருந்தினாலும் அல்லது அதை வைத்திருந்தாலும் அது குற்றமேயாகும்.

அயலக ஒப்படை

ஒரு நாட்டில் ஒருவன் குற்றம் இழைத்துவிட்டு வேறொரு நாட்டிற்குத் தப்பிச் சென்று விட்டால், அவனைத் தண்டிப் பதற்கில்லை. இத்தகைய நிலையைச் சீர்படுத்துவதற்கென்று உலக நாடுகளிடை ஒருவகை ஏற்பாடு உண்டு. அதாவது, ஒரு நாட்டில் குற்றம் இழைத்துவிட்டு ஒருவன் வேறொரு நாட்டிற்குச் சென்று விட்டால், எந்த நாட்டில் அவன் உள்ளானோ அந்த நாடு அவனைப் பிடித்துக் கைதுசெய்து அவன் குற்றம் இழைத்த நாட்டிடம் ஒப்படைத்து விடுகிறது. இது 'அயலக ஒப்படை' (extradition) ஏற்பாடு எனப்படும்.

ஆனால், பொதுவாக, உரிமை இயல் வழக்குகளில் 'அயலக ஒப்படை' ஏற்பாடு செயற்படுவதில்லை. இருப்பினும், உரிமை இயல் வழக்குகளிலும் கூட, ஒரு நாட்டு நீதிமன்றம் கூறிய தீர்ப்பினை (judgement) வேற்று நாட்டில் செல்லுறுத்தும் வகையில் ஒவ்வொரு நாடும் சட்ட விதிகளை வகுத்துள்ளது. இந்திய நாட்டு 'உரிமை இயல் விசாரணை முறைச் சட்டத் தொகுப்'பில் (Civil Procedure Code), வேற்று நாட்டுத் தீர்ப்புக்களைச் (Foreign Judgement) செல்லுறுத்தும் வகைபற்றி விதிகள் உள்ளன. அவ்வாறு செல்லுறுத்துவதற்குச் சில கட்டுவரைகள் உண்டு.

உலக நாடுகள் இன்று நெருங்கி வரும் நிலையில், சட்டங்களின் நிலவரைத் தன்மை (territorial nature) குறைந்து வருகின்றது. அயல் நாட்டினரையோ அயல் நாட்டுச் சட்டங்களை மீறியவர்களையோ எங்கு விசாரிப்பது, எந்நாட்டுச் சட்டத்தின் கீழ் விசாரிப்பது போன்ற சிக்கல்களைத் தீர்க்கும் வகையில் 'முரண்படுசட்டங்கள்' (conflict of laws) என்ற சட்டமுறை ஒவ்வொரு நாட்டுச்சட்டநெறியிலும் உருவாகி வருகிறது. நாளடைவில் சட்டங்களின் நிலவரைத்தன்மை மறைந்து போய் விடலாம் என்றே சட்ட இயலறிஞர்கள் கருதுகின்றனர்.

நீதிவழங்கு முறை

(The Administration of Justice)

[உரிமை இயல் நீதிமுறை — குற்ற இயல் நீதி முறை — நீதி முறையின் நேர்மை]

சமுதாய வாழ்வு என்ற அமைப்புமுறை உருவாவதற்கு முன்னர், மனிதன் கட்டுப்பாடற்ற தன்னுரிமையுடன் வாழ்ந்தான். தனக்கு வேண்டிய உணவைத் தேடி உண்பதும் உறங்குவதுமே அன்றைய மனிதனின் தொழிலாக இருந்தன. ஆணும் பெண்ணும் கூடி வாழும் குடும்பம் என்ற கூட்டு வாழ்க்கை நாளடைவில் மலர்ந்தது. வயதிலே பெரியவன் குடும்பத் தலைவனாக இருந்தான். பிறகு பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து வாழத் தொடங்கின.[1]

மனிதர்களுக்கு அப்பொழுது பயிர்த்தொழில் என்ற கலை தெரியாது. விலங்குகளை வேட்டையாடியும் காய்கனிகளை உண்டும் தங்கள் பசியை ஆற்றிக் கொண்டனர். உணவைத் தேடிக் கூட்டமாகப் பல இடங்களுக்கு அலைந்து கொண்டிருந்தனர். நிலைத்து ஓர் இடத்தில் வாழும் வகையினை அவர்கள் மேற்கொள்ளவில்லை.

இயற்கையோடு இசைந்த வாழ்விலே இயற்கைச் சக்திகள் எல்லாம் இணையற்ற ஆற்றலுடையனவாய் அவர்களுக்குப்

1 Society in primitive times was an aggregation of families
— Sir Henry Maine's "Ancient Law"

புலப்பட்டன. இடியும் மின்னலும் அவர்கள் உள்ளத்திலே அச்சத்தை எழுப்பின. புரியாத இயற்கைச் சக்திகளைப் போற்றுதற்குரிய தெய்வங்களாகக் கொண்டு அவர்கள் வழி பட்டனர். அருணனும் அந்தி நிலவும், வருணனும் வாயுவும் வழிபடு தெய்வங்கள் ஆயின. பல நூற்றாண்டுகள் கழிந்த பின்னர், மனிதன் தானியங்களை விளைவிக்கக் கற்றுக் கொண்டான். பயிர்த்தொழில் மக்களை நிலையாக ஒரே இடத்தில் வாழச் செய்துவிட்டது. இனி உணவைத் தேடி அலைய வேண்டிய அவசியமில்லை. பல குடும்பங்கள் கொண்ட கூட்டத்தினர் நிலையான ஓர் இடத்திலே பயிர்செய்து வாழத் தொடங்கினர். அந்த நிலையான வாழ்வினால் கூடாரங்கள் குடிசைகளாக மாறின. ஆடுகளும் மாடுகளும் அவர்களை அண்டி வளர்ந்தன.

இது ஓரளவு அமைதியான வாழ்வுதான். ஆயினும் இடையிடையே இன்னல்களும் எழுந்தன. காட்டு விலங்குகள் கால்நடைகளையும் பயிர்களையும் அழித்து வந்தன. நிலையான வாழ்வு பெறாத மற்றக் கூட்டத்தினர் இவர்களுக்குத் துன்பம் விளைத்தனர். காட்டு விலங்குகளை வேட்டையாடி ஒழிக்கவும், வேற்றுக் கூட்டத்தினரை விரட்டி அடிக்கவும் வல்லமையுள்ள ஒரு தலைவன் அவர்களிடையே உருவானான். அந்த வீரன் அவர்களுக்குத் தலைமை தாங்கி எதிரிகளைப் போரிட்டு விரட்டினான். இன்னல் தரும் விலங்குகளை வேட்டையாடி ஒழித்தான். தலைவனது கட்டளைக்கு அடங்கி நடக்கும் ஒரு நிலை படிப்படியாக ஏற்பட்டது. தாங்கள் வழிபடும் இயற்கையின் சக்திகளுக்கு அடுத்தாற்போல் இந்தத் தலைவனையும் அவர்கள் வழிபாட்டுக்குரிய வல்லவனாகக் கண்டனர். அந்நிலையில் அவன் அரசன என்ற பெயர் பெற்றான். முற்காலத்து அரசர்களின் கடமைகளில் பகைவர்மீது போர் தொடுப்பதும், விலங்குகளை வேட்டையாடுவதும் முக்கியமானவை என்று கொள்ளப்பட்டன.

ஆண்டுகள் ஓடின; மக்கள் பெருகினர்; ஊர்கள் வளர்ந்தன. அரசன் இருந்த இடம் நகரமாக மாறியது. அவனது ஆணை, ஆட்சி விரிந்து பரவியது. ஓர் அரசனின் ஆட்சிக்கு உட்பட்ட நிலப்பரப்பு நாடு எனப் பெயர் பெற்றது. இவ்வாறு பலப்பல நாடுகள் தோன்றின. ஒவ்வொரு நாட்டிற்கும் வரம்பு, அங்கு வாழும் மக்கள் (குடிகள்), ஆளும் அரசன் என்ற அங்கங்களுடன் அரசுகள் உலகில் பல பகுதிகளிலும் எழுந்தன. இந்த முறையில் மக்கள் ஓர் அரசனின் கீழ், அவன் ஆட்சிக்கு உட்பட்டு வாழத் தொடங்கினர்.

இவ்வாறு, ஒரு மன்னன் முழு அதிகாரத்துடன் குடிமக்களை ஆளுவதை ''முடியாட்சி'' (monarchy) என்பார்கள். காலப் போக்கிலே, பல்வகைக் காரணங்களால் முடியாட்சிமுறை குடியாட்சி முறையாகப் பல நாடுகளில் மாறியது. முடியாட்சியாக இருந்தாலும், குடியாட்சியாக இருந்தாலும் அரசின் அடிப்படைத் தன்மைகளும் கடமைகளும் மாறுவதில்லை. அரசின் அதிகாரத்திற்கு ஆதாரமாக அமைவது அரசின் படைவலியே யாகும். வெளிநாட்டுப் பகைவர்களை எதிர்த்துப் போரிடுவதற்கும் பயன்படும் படைவலி, உள்நாட்டிலே மக்களிடை அமைதியைப் பாதுகாக்கவும் பயன்பட்டது.

மக்கள் தங்களிடையே எழும் பூசல்களைத் தீர்ப்பதற்கென்று தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டால் நாட்டின் அமைதி குலைகின்றது. அரசு என்ற அமைப்பு உறுதி பெறுவதற்கு முன்னர், மனிதன் தன் சொந்த வலிமை கொண்டு பூசல்களைத் தீர்த்துக் கொண்டான். தன் பலத்தையே துணையாகக் கொண்டு தன் இச்சைகளை எய்தலானான். அந்நாளில், வேலெடுத்தவன் வெற்றி பெற்றான்; கோலெடுத்தவனின் கொள்கை நிலைத்தது. அரசுமுறை ஏற்பட்ட பின்னரும் மக்கள் தங்களிடையே எழும் பூசல்களைத் தாங்களே சண்டையிட்டுத் தீர்த்துக் கொள்ளும் வழக்கத்தை விடவில்லை. ஒருவருக்கொருவர் தங்கள் அடியாட்களை வைத்துக் கொண்டு ஆயுதச் சண்டையில் இறங்கித் தங்கள் பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ளும் முறை இங்கிலாந்து நாட்டில் பதினெட்டாம் நூற்றாண்டு வரை இருந்தது.

அரசியல் வாழ்வில் முன்னேற்றம் அடைந்த பின்னரே, படிப்படியாக, அரசு தன் வலிமையைப் பயன்படுத்தி, மக்களிடையே தோன்றும் வழக்குகளைத் தீர்த்து வைக்கத் தலைப்பட்டது. தனி மனிதனின் பலத்திற்குப் பதிலாக, சமூகத்தின் கூட்டு வலிமை அரசின் மூலமாகக் குடிமக்கள் ஒவ்வொருவரின் உரிமையையும் பாதுகாக்க முற்பட்டது. இவ்வாறு, உள்நாட்டின் அமைதி பேணப்பட்டது. இந்நிலையில், வெளிநாட்டு எதிரிகளைப் போரிட்டு விரட்டுவதும், நாட்டு மக்கள் இசைந்து வாழும்படி செய்வதும் அரசின் அடிப்படைக் கடமைகள் ஆயின.[1]

---

1 The fundamental purpose and end of political society is defence against external enemies and the maintenance of peaceable and orderly relations within the community itself - Salmond

மனிதன் தன் சொந்த வலிமையைப் பயன்படுத்தித் தன் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் இன்று இல்லை. அப்படித் தனிப்பட்டோர் தங்கள் வலிமையைப் பயன் படுத்துவதை அரசு தடுத்து நிறுத்துகிறது. ஒரு சமுதாயத்திலுள்ள மக்கள் தங்களுக்குள் எழும் வழக்குகளை அரசால் அமைக்கப் பட்ட மன்றங்களின் தீர்ப்புக்கு விட்டு, அவைகளுக்குப் பணிந்து நடக்கும் முறை சமுதாய நாகரிகத்தின் சின்னமாக இன்று விளங்குகிறது.[1]

ஆதிகாலத்தில் இருந்தே, இந்திய நாட்டில் நீதி வழங்குதல் என்பது அரசனின் முக்கிய கடமையாக இருந்து வந்தது. நீதி வழங்குதல் என்பதை 'முறை செய்தல்' என்கிறார் வள்ளுவர். முறை செய்து மக்களைக் காப்பாற்றும் மன்னனை இறைவனாகக் கருதிப் போற்றினர் மக்கள் என்கிறார்:

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும் - *(குறள் — 388)*

இவ்வாறு, அரசு தன் வலிமை கொண்டு, மக்களிடையே எழும் வழக்குகளைத் தீர்த்து நியாயம் அளிப்பதையே 'நீதி வழங்குதல்' — (முறை செய்தல்) என்று கூறுகிறோம்.[2] இதை ஆங்கிலத்தில் Administration of Justice — என்பார்கள்.

மக்கள் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டுமெனில், அந்நலன்களைப் பொறுத்து அவர்களுக்கு உரிமை இருக்க வேண்டும். அந்த உரிமைகளை அடிப்படையாகக் கொண்டுதான் மக்களின் வாழ்வு நிறைவு பெற்று விளங்க முடியும். ஒருவன் தனது சொத்தை அனுபவித்து நலம் பெற வேண்டுமெனில் அவனுக்குச் சொத்துரிமை இருக்க வேண்டும். அவ்வாறே பிறருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தைச் செல்லுறுத்தும் உரிமை இருக்க வேண்டும். இத்தகைய உரிமைகளை அரசு குடிமக்களுக்கு வழங்கிப் பாதுகாக்கிறது.

தங்கள் உரிமைகளுக்கு ஊறு விளையும் போது,

---

1 The administration of justice is the modern and civilised substitute for the primitive practice of private vengeance and violent self-help - Salmond.

2 The administration of justice is the maintenance of right within a political community by means of the physical force of the state - Salmond.

அவற்றைப் பாதுகாப்பதற்கென நீதி மன்றங்களை மக்கள் நாடுகின்றனர். அரசின் அங்கங்களான நீதி மன்றங்கள் நடு நாயகமாக விளங்கி மக்களிடை எழும் உரிமை வழக்குகளைத் தீர்த்து வைக்கின்றன. இவ்வாறு உரிமை வழக்குகளைத் (civil cases) தீர்த்து அரசு நீதி வழங்குவதை 'உரிமை இயல் நீதி முறை' (Civil Justice) என்பார்கள்.

தனி மனிதன் தன் வலிமையைப் பயன்படுத்தித் தன் உரிமைகளைப் பாதுகாத்த நிலை மாறி, அரசு மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது 'உரிமை இயல் நீதி முறை'யாகிறது. தனி மனிதன் தன் வலிமையால் தனக்குத் தீங்கிழைத்தோரைப் பழிதீர்க்கும் நிலை மாறி, அரசு குற்றவாளிக்குத் தண்டனை விதிப்பது 'குற்ற இயல் நீதி முறை'யாகிறது.[1]

என்னிடம் கடன் வாங்கியவர் திருப்பித் தரவில்லை எனில் அது ஒரு தீங்கான (Wrong) செயல்தான். இதைத் 'தனிமத் தீங்கு' (Private Wrong) என்று சட்டம் குறிப்பிடுகிறது. என் கையை இன்னொருவன் வெட்டி விட்டால் அதுவும் ஒரு தீங்கான செயல்தான். இது என்னை மட்டுமே பாதிக்கின்றது. இருந்தாலும் அது சமுதாயத்தின் அமைதியைக் குலைக்கும் செயலாகக் கொண்டு இதைப் 'பொதுமத் தீங்கு' (Public wrong) என்று சட்டம் குறிப்பிடுகின்றது. உரிமை இயல் நீதிமுறை தனிமத் தீங்குகளைப் பொறுத்தது. குற்ற இயல் நீதி முறை 'பொதுமத் தீங்கு'களைப் பொறுத்தது. பொதுமத் தீங்குகளைச் சட்டம் குற்றங்கள் என்று கொள்கின்றது.

தனிமத் தீங்குகளைப் பொறுத்து அவற்றால் பாதிக்கப்பட்ட தனிநபர்களே நீதிமன்றத்தில் வழக்கிட்டுத் 'தீர்வழி' (remedy) பெறுகின்றார். பொதுமத் தீங்குகளைப் பொறுத்து அரசே குற்றவாளிக்கு எதிராக வழக்கிட்டு அவனைத் தண்டனைக்கு உள்ளாக்குகிறது.

தனிமத் தீங்கினைப் பொறுத்த உரிமை வழக்குகளில் வாதியின் உரிமை பாதுகாக்கப்படுகிறது. பொதுமத் தீங்குகளைத் பொறுத்த குற்ற வழக்குகளில் எதிர்வாதி தாம் இழைத்த குற்றத்திற்கு ஏற்ற தண்டனைக்கு உள்ளாகின்றார்.

---

1 Private vengeance is transmuted into the administration of criminal justice; while civil justice takes the place of violent self-help - Salmond

உரிமை வழக்கைத் தொடர்ந்த வாதி தம் விருப்பப்படி வழக்கை நடத்தலாம்; அல்லது நிறுத்திக் கொள்ளலாம். ஆனால், குற்ற வழக்குகளில் அரசே வாதியாக இருப்பதால் அரசு மட்டுமே குற்ற வழக்கை நிறுத்திக் கொள்ள முடியும். குற்றத்தால் பாதிக்கப் பட்டவர் குற்றவாளியை மன்னித்தோ குற்றவாளியுடன் சமாதானம் செய்துகொண்டோ குற்ற வழக்கை நிறுத்திக் கொள்ள முடியாது.

நீதி வழங்கும் முறை இயங்குவது நீதி மன்றங்களின் வாயிலாகத்தான். நீதி மன்ற நடுவர்கள் நடுவுநிலை தவறாது செயலாற்றுகின்றனர். மக்களிடையே அவர்கள் வேற்றுமை பாராட்டுவது இல்லை. வறியோர்க்கு ஒரு நீதி, வளமுடையோர்க்கு ஒரு வகை நீதி என்று வழங்குவதில்லை. நீதிமன்றத்தின் முன் அனைவரும் சமமாகவே கருதப்படுகின்றனர்.

நீதிபதிகள் தம் முன் உள்ள வழக்கின் சிக்கல்களை அணுகி ஓர்தல் வேண்டும். வழக்கில் சம்பந்தப்பட்ட தரப்பினர் எவர் மீதும் இரக்கம் (கண்ணோட்டம்) காட்டுதல் கூடாது. நடுவுநிலை சிறிதும் தவறாமல் வழக்கை ஆய்தல் வேண்டும். இறுதியாக உரிமை வழக்கில் வாதிக்குப் பரிகாரம் அளித்தாலும், குற்ற வழக்கில் குற்றவாளிக்குத் தண்டனை வழங்கினாலும் அதைத் தேர்ந்து செய்தல் வேண்டும். வழக்கிலுள்ள சூழ்நிலைகளுக்கு ஏற்ப எது பொருத்தமானதோ அதைத் தேர்ந்து அதன்படி தீர்ப்பு வழங்க வேண்டும்.

நீதிமுறையின் நீர்மைக் கூறுகளான இப்பண்புகள் இன்றும் போற்றப்பெறுகின்றன. இக்கூறுகளனைத்தையும் இணைத்துக் கூறும் திருக்குறள் இது:

ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்து செய்வஃதே முறை. — (குறள் 541)

முறை செய்தல், நீதி வழங்குதல் என்பதற்கு இதைவிடச் சிறந்த முறையில் இலக்கணம் கூறுதல் இயலாது என்று சொல்லலாம்.

(வழக்கின் கூறுகளை) ஓர்ந்து, (தரப்பினர் எவர் மீதும்) கண்ணோடாது, (நடுவுநிலை தவறாது) இறை புரிந்து, (முடிவை) தேர்ந்து செய்வதே முறை செய்யும் முறைமை ஆகும் என்று கூறும் இக்குறள் சிந்தித்துத் திளைக்கத்தக்கது.

சட்டத்தை ஒட்டிய நீதிமுறை
(Justice according to Law)

[சட்டத்தை ஒட்டிய நீதிமுறை — நிறைபாடுகளும் குறைபாடுகளும்]

மக்களிடையே எழும் வழக்குகளைத் தீர்க்கும் மன்றங்களைப் பொதுவாக 'நீதிமன்றங்கள்' (Courts of Justice) என்று குறிப்பிடுகின்றோம். (Court என்ற சொல்லை 'முறைமன்றம்' என்று தமிழில் சொல்வதே பொருத்தமாகும்.)

அம்மன்றங்கள் சட்டங்களின் அடிப்படையிலேயே நீதி வழங்குகின்றன. ஒரு வழக்கைத் தீர்ப்பதற்கு முன், அவ்வழக்கிலுள்ள சிக்கல்களுக்கு எந்தெந்தச் சட்டவிதிகள் சிக்கல்களுக்கு சம்மந்தப்பட்டவை எனக் கண்டு, அவ்விதிகளுக்குத் தகுந்தவாறே, தீர்ப்பு அளிக்கப்பபடுகிறது. சட்ட விதிகளைச் செல்லுறுத்தும் (enforcement) வகையிலேயே நீதி வழங்கப்படுகிறது. எனவே தான், ஆங்கிலத்தில் நீதிமன்றங்களைச் 'சட்டமுறை மன்றங்கள்' (Courts of law) என்றும் குறிப்பிடுகின்றோம்.

சட்ட விதிகளைப் புறக்கணித்து விட்டு, அவற்றுக்கு மாறாக, வழக்குகளில் தீர்ப்பு அளிப்பது முறையற்ற செயலாகும். சட்டங்கள் என்ற கால்வாய்களின் வழியாகத்தான் நீதி என்ற நீர் பாய வேண்டும். இந்த முறையில் நீதி வழங்குவதுதான் நீதிமன்ற நடுவர்களின் கடமையாகின்றது. நீதி முறையின் செப்பமும் சிறப்பும் அது சட்டத்தின் அடிப்படையில் இயங்குவதேயாகும்.

எனவே தான், வழக்கு மன்றங்களில் வழங்கப்படும் நீதியைச் 'சட்டத்தை ஒட்டிய நீதி (Justice according to law) என்கிறோம்.

சட்டத்தின் அடிப்படையில் நீதி வழங்குவதில் உள்ள நிறைபாடுகளையும் குறைபாடுகளையும் நாம் இனி ஆராய்வோம்.

நிறைபாடுகள்:

வழிகாட்டுகிறது சட்டம்

பொதுவாக, இன்ன சூழ்நிலையில் இன்னது விளைவு என்ற சட்ட விதிகள் தெளிவாகக் கூறுவதால், ஒரு வழக்கைத் தீர்ப்பதற்கு முன், அது சம்பந்தமாகச் சட்டவிதிகள் என்ன கூறுகின்றன என்பதை நடுவர் பார்க்கின்றார். அந்த விதிகளில் கூறியுள்ளபடி தமது தீர்ப்பினை அளிக்கின்றார். இந்நிலையில், நீதிபதிகள் வழக்குகளில் தங்கள் தீர்ப்புகளை வழங்குவதற்கு வழிகாட்டியாகச் சட்டம் உள்ளது.

நிச்சயத் தன்மை (Certainty)

நீதித் தீர்ப்புகள் நிச்சயத்தன்மை (Certainty) உடையனவாக இருத்தல் வேண்டும். இன்ன சூழ்நிலையில் இன்ன முறையில் தான் தீர்ப்பு இருக்கும் என்று மக்கள் முன்னறிந்து கொள்ளும் முறையில் நீதி வழங்கப்பட வேண்டும். இல்லாவிடில், நீதிமன்றத் தீர்ப்புகளைப் பொறுத்து மக்களுக்கு உறுதிப்பாடு இல்லாத, நம்பிக்கையற்ற நிலை ஏற்பட்டு விடும். இயற்றப்பட்ட சட்டங்களை மக்கள் அறிவார்கள். ஆதலால், சட்டப்படியான தீர்ப்பு இன்னபடி தான் இருக்கும் என்று மக்கள் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு உள்ளது. இந்த உறுதிப்பட்டின் அடிப்படையில்தான் மக்களுக்கு நீதிமுறையில் நம்பிக்கை ஏற்பட முடியும்.

சீர்மையுடைமை (Uniformity)

சட்டவிதிகளைப் புறக்கணித்துவிட்டுத் தீர்ப்புகள் அளிக்கப்பட்டால், ஒரு நீதிபதியின் தீர்ப்பு மற்றொருவரின் தீர்ப்பில் இருந்து மாறுபட்டு இருக்கலாம். ஒரே நீதிபதிகூட இன்று ஒரு வழக்கில் ஒருவிதமான தீர்ப்பு அளித்துவிட்டு, அதே போன்ற

வேறொரு வழக்கில் நாளை வேறு விதமான தீர்ப்பு அளிக்கலாம். இவ்வாறு, ஒரே விதமான வழக்குகளில் மாறுபாடான தீர்ப்புகள் அளிக்கப்படுவது நீதிமுறைக்கு உகந்ததன்று. ஆனால், சட்டத்தை ஒட்டித் தீர்ப்புகள் அளிக்கப்பட்டால், ஒரே விதமான வழக்குகளின் மாறுபாடான தீர்ப்புகள் ஏற்படுவதற்கு வழி இல்லாமல் போய்விடுகிறது; தீர்ப்புகள் ஒரே தன்மையுடன் (Uniform) இருப்பதற்கு ஏதுவாகிறது.

நடுவு நிலைமையுடைமை (Impartiality)

சட்டம் குறிப்பிட்ட ஒருவருக்கென்று இயற்றப்படாமல் குடிமக்கள் யாவருக்கும் பொதுவாக அமைவது குடிமக்களுக்குள் அது வேற்றுமை பாராட்டுவது இல்லை. ஆகவே, அச்சட்டத்தின் அடியொற்றி வழங்கப்படும் தீர்ப்புகளும் விருப்பு வெறுப் பற்றனவாக அமைகின்றன.

சட்டம் என்ற வகுக்கப்பட்ட பாதையிலிருந்து நீதிபதி ஒரு சிறிது விலகினாலும் அது மக்களுக்குத் தெரிந்து விடுகிறது. சட்டத்தைப் புறக்கணித்து விட்டு நீதி வழங்குவதானால், இந்தக் கண்காணிப்பு இல்லாமல் போய்விடுகிறது.

சால்புடைய ஞானம் சட்ட ஞானம்

நீதிபதிகள் எவ்வளவு கற்றவர்களாக இருந்தாலும், நடுவுநிலைப்பண்பு உடையவர்களாக இருந்தாலும், வழங்கப் படும் நீதியின் நீர்மை அவரவர்கள் மனநிலையைப் பொறுத்த தாகவே அமைகின்றது. மாறுபட்ட மனநிலை உடைய மனிதர்கள் தம் முன் வந்துள்ள வழக்கின் கூறுகளைக் காண்பதிலும் கணிப்பதிலும் மாறுபடலாம். அதற்கேற்ப தீர்ப்புகளும் வேறுபடலாம். ஆனால், சட்டம் என்ற வரம்பிற்கு உட்பட்டு நீதிபதிகளின் சிந்தனை இயங்கும் பொழுது, தீர்ப்புகளில் ஒரு சிறப்பும் சீர்மையும் அமைகின்றது.

சமுதாயத்தின் கூட்டு ஞானத்தில் (Collective wisdom) பிறந்தசட்டவிதிகள், பொதுவாக, தனிப்பட்ட நீதிபதிகளின் ஞானத்தைவிடச் சிறந்தனவாகவே இருக்கின்றன. ஏதோ சில சட்ட விதிகளில் குறைபாடுகள் இருக்கலாம். ஆயினும், அவ்விதி முறைகள் மொத்தத்தில் நீதிபதிகளுக்கு வழிகாட்டும் தகுதியுடன்

உள்ளன என்பதை மறுப்பதற்கில்லை.[1] 'தனிப்பட்ட மனிதனின் ஞானத்தை விட, சட்டத்தின் ஞானம் மேலானது' என்கிறார் ஆங்கில நாட்டு நீதிபதி லார்டு கோக்.[2]

சட்டத்தின் வழி நிற்காமல் நீதிபதிகள் தங்கள் உளத் தேர்வுப்படி தீர்ப்புகள் கூறலாம் என்றால், தீர்ப்புகளின் சீர்மை மறைந்து விடும்; நீதியின் நீர்மை குன்றி விடும். வழக்கு மன்றங்களில் உற்ற நீதி கிடைக்கும் என்ற உறுதி குலைந்து விடும்.

எனவேதான், 'நாம் சட்டத்திற்கு அடிமை பூண்டு சுதந்திரத்தைக் காத்துக் கொள்ளுகிறோம்',[3] என்கிறார் சிசரோ என்ற அறிஞர்.

இவ்வாறாக, சட்டத்தை ஒட்டி வழங்கப்படும் நீதி முறையில் சீர்மையும், நிச்சயத்தன்மையும், நடுவுநிலையும், பாதுகாக்கப் பெறுகின்றன. இருப்பினும், இம்முறையில் சில குறைபாடுகளும் உள்ளன.

குறைபாடுகள்:

'பெருங்கேடுகளுக்கு மாற்றாக உள்ளது சட்டத்தை ஒட்டிய நீதிமுறை என்பதில் ஐயமில்லை: ஆனால், அதிலும் சில குறை பாடுகள் உண்டு' என்கிறார் ஆசிரியர் ச்சால்மண்ட்.

நெகிழ்வின்மை

மக்கள் அனைவருக்கும் பொருந்துறும் (apply) வகையில் சட்டங்கள் இயற்றப்பெறுகின்றன. பொதுவான விதிகளையே அவை கொண்டுள்ளன. ஆனால், மன்றங்கள் முன் வரும் வழக்கு களோ பல திறப்பட்டவை. ஒவ்வொரு வழக்கிற்கும் சாலப் பொருந்தும் வகையில் சட்ட விதிகள் இருத்தல் இயலாது.

1 The law is not always wise, but on the whole, and in the long run, it is *wiser than those who administer it* — Salmond

2 The wisdom of the law is wiser than any man's wisdom — Lord Coke

3 We are the slaves of the law so that we may be free - Cicero

4 The law is without doubt *a remedy for greater evils, yet it* brings with it evils of its own — Salmond

பெரும்பாலான வழக்குகளுக்கு நலமுறப் பொருந்தி நீதி நல்கும் சட்டவிதிகள், ஒரு சில வழக்குகளில் சிக்கல்களை ஏற்படுத்தலாம். நியாயத்தை ஒட்டித் தீர்ப்புகளை அளிக்க முடியாத நிலையினைச் சட்ட விதிகள் தோற்றுவிக்கலாம். அந்நிலையிலும் சட்டத்தைப் புறக்கணித்து விட்டு நீதிபதிகள் நியாயம் வழங்க முடியாது. பொதுவான சட்ட விதிகளிலிருந்து குறிப்பிட்ட வழக்கிற்கு விலக்களிக்கவும் முடியாது. இக்கட்டான இந்நிலையில், சட்டத்தை ஒட்டிய தீர்ப்புகள் நியாயத்தைவிட்டுச் சிறிது விலகும்படி நேரலாம். இவ்வாறு, சட்ட விதிகளின் நெகிழ்வின்மையால் (inflexibility) நீதி வழங்குவதில் இடர்பாடுகள் சில நேர்வுகளில் எழுவதுண்டு. சட்டத்தை ஒட்டிய நீதிமுறையில் இக்குறைபாட்டைத் தவிர்ப்பதற் கில்லை.

பழமைபற்றி நிற்றல்

பழமை பற்றி நிற்பது (conservatism) சட்டத்தின் மற்றொரு இயல்பாகும். வளரும் சமுதாயத்தில் மக்களின் பழக்க வழக்கங்கள் மாறுகின்றன. வாழ்க்கையின் குறிக்கோள்களும் சமுதாய நோக்கும் மாறுபடுகின்றன. இந்த மாறுதல்களுக்கேற்பச் சட்டம் மாறுவ தில்லை. சென்ற நூற்றாண்டின் இயற்றப் பட்ட சட்டத்தை இந்த நூற்றாண்டிலும் செல்லுறுத்தும் பொழுது, அது, இன்றைய சமுதாயத்தின் வேட்கைகளுக்கும் விழைவுகளுக்கும் தடையாகச் செயல்படுகின்றது. சில நேர்வுகளில், சமுதாய முன்னேற்றத்திற்கே முட்டுக்கட்டையாகச் சட்டம் ஆகிவிடுகின்றது.

சட்டத்தை ஒட்டிய நடைமுறைகளின் (Procedure) படியே நாம் வழக்கு மன்றங்களில் நீதிகோர வேண்டியுள்ளது. சிக்கலான நடைமுறைகளால் நீதி கோரும் முயற்சிக்குத் தடங்கல்கள் விளைவதுண்டு. இத்தகைய குறைபாடுகள் சட்டத்தை ஒட்டிய நீதிமுறையில் உள்ளன.

எந்த ஓர் அமைப்பு முறையிலும் குறைபாடுகளும் நிறைபாடுகளும் இருப்பது உண்டு; சட்டத்தை ஒட்டி நீதி வழங்கும் முறையிலும் குறைகளும் நிறைகளும் உள்ளன. ஆயினும், சமுதாயத்தின் கொள்கைகளையும் குறிக்கோள்களையும் நிறை வேற்றும் வகையில் வகுக்கப் பெறுவதே சட்டமாகிறது. அச் சட்டத்தைச் செல்லுறுத்திச் சமுதாயத்தில் நீதி நிலவச் செய்வதே நீதிமன்றங்களின் கடனாகக் கொள்ளப்படுகிறது. இல்லாவிடில்

சட்டம் பயனற்றுப் போகும். எனவே, அரசியல் நாகரிகம் வளர்ந்துள்ள எல்லா நாடுகளிலும் சட்டத்தை ஒட்டிய நீதி முறையே சாலச் சிறந்த முறையாகப் பேணப்படுகின்றது. எனவே தான், 'சட்ட இயலைப் பொறுத்த வரை சட்டத்திற்கு இசைந்ததே நீதியாகும்', என்கிறார் ஜெத்ரோ பிரௌன்.(Jethro Brown)

சட்ட இயல்

(Jurisprudence)

இரண்டாம் பகுதி

சட்டத்தின் மூலங்கள்

(The Sources of Law)

[அரசமைப்பு, இயற்றுமுறை, முன்தீர்ப்பு நெறி, வழக்க நெறி, சட்ட நூல்கள்]

சட்டத்தின் தன்மைகளைப் பற்றி ஆய்ந்த நாம் சட்டத்தின் மூலங்களாக உள்ளன எவை என்பதையும் காண வேண்டும்.

சட்டங்கள் எவற்றில் இருந்து எழுகின்றனவோ அவற்றைச் சட்டங்களின் மூலங்களாக நாம் கொள்ளலாம்.

பொதுவாக, சட்டங்கள் பின்வருவனவற்றில் இருந்து எழுகின்றன:

1) அரசமைப்பு (Constitution)

2) இயற்றுமுறை (Legislation)

3) முன்தீர்ப்பு நெறி (Precedent)

4) வழக்கநெறி (Custom)

5) சட்டவல்லுநர் நூல்கள் (Writings of Legal Experts)

வழக்கநெறிகளும் சட்டநூல்கள் கூறும் நெறிகளும் நீதி மன்றங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர்தான் சட்ட விதிகளாகக் கொள்ளப்படுகின்றன. ஆதலால், அவற்றை அப்படியே சட்டமூலங்களாகக் கொள்வதற்கில்லை. அரசமைப்பு, இயற்றுமுறை, முன்தீர்ப்புநெறி—இம்மூன்றையுமே நாம் சட்ட

மூலங்களாகக் காணுகிறோம்.

இங்கிலாந்து நாட்டில் எழுத்து வடிவில் அரசமைப்பு (Constitution) கிடையாது. ஆதலால், அங்கு இயற்றுமுறையும் (Legislation) முன்தீர்ப்பு நெறிகளுமே (Precedents) சட்டத்தின் மூலங்கள் ஆகின்றன. இவற்றைச் சட்டமுறையான மூலங்கள் (Legal sources) என்கிறார் ஆசிரியர் பிட்ஸ்ஜெரால்டு (Fitzgerald).

'சட்டமன்றங்கள் இயற்றுவது சட்டவிதி' என்று கூறும் சட்டம் எதுவும் இல்லை. தீர்ப்பு நெறிகள் சட்டவிதிகள் ஆகின்றன என்று விதிக்கும் சட்டமும் இல்லை. சட்டமன்றங்கள் இயற்று வதும், நீதிமன்றங்களின் தீர்ப்புநெறியும் சட்டங்கள் ஆவதற்குக் காரணம் என்ன? அவை சட்டங்களாக இருப்பது தான் காரணம்; வேறு காரணம் எதுவும் இல்லை,[1] என்கிறார் பிட்ஸ்ஜெரால்டு.

எனவே, இத்தகைய சட்டமூலங்களைச் 'சட்டமுறையான மூலங்கள்' (legal sources) என்கிறார்.

இங்கிலாந்து நாட்டைப் பொறுத்து, சட்ட முறையான மூலங்கள் இரண்டு. *1)* இயற்றுமுறை (Legislation). *2)* முன்தீர்ப்பு நெறி (precedent).

ஒரு தீர்ப்புநெறியில் உள்ள கொள்கை ஒரு பழைய சட்ட நூலில் இருந்து எடுக்கப்பட்டிருக்கலாம். அந்தச் சட்டநூலில் சொல்லப்பட்டிருந்தது ஆதிகால வழக்கமுறையாக இருந்திருக் கலாம். அத்தீர்ப்புநெறி சட்டத்தின் மூலம் ஆகிறது. அதோடு, சட்டநூலும், வழக்க முறையும் சட்டத்தின் மூலங்கள் தாம். ஆனால், சட்டநூலும் வழக்க நெறியும் சட்டத்தின் 'வரலாற்று முறையான மூலங்கள்' (Historical sources) என்கிறார் பிட்ஸ் ஜெரால்டு.

சட்டமுறையான மூலங்கள் அதிகாரம் கொண்டவை; வரலாற்றுமுறை மூலங்கள் அதிகார மற்றவை. இயற்றப்பட்ட சட்டத்தையோ நீதிமன்றத் தீர்ப்புநெறியையோ நாம் நீதி மன்றத்தில் சட்டமாகக் கூறலாம். அவை அவ்வாறு கூறப்பெறும் உரிமை படைத்தவை. ஆனால், சட்டநூல் எதையும் எவ்வளவு புகழார்ந்த சட்ட இயலறிஞராக அதன் ஆசிரியர் இருந்தாலும்,

[1] It is the law because it is the law, and for no other reason that it is possible for the law itself to take notice of — Fitzgerald

நீதிமன்றத்தின் முன் சட்டமாக வைக்க முடியாது. ஆதலால்தான் இயற்றப்பட்ட சட்டத்தையும், முன்தீர்ப்புநெறியையும் 'சட்ட முறை மூலங்கள்' என்றும், பிறவற்றை 'வரலாற்றுமுறை மூலங்கள்' என்றும் கூறுகிறார்.

விதிகள் என்றால் எத்தனையோ வகையான விதிகள் உள்ளன. பொழுதுபோக்குச் சங்கங்களுக்கும் விதிகள் உண்டு. வாணிபக் கம்பெனிகளுக்கும் விதிகள் இருக்கின்றன. இவற்றி லிருந்து தனிப்பட்டு உள்ளவை சட்ட விதிகள். அவை மக்களைக் கட்டுறுத்தும் ஆற்றலும் (force), செல்லுறும் தன்மையும் (validity) கொண்டவை. இச்சட்டத் தன்மையினைச் சட்ட விதி களுக்கு அளித்தது யார்? ஒரு விதிக்குச் சட்ட ஆற்றல் (legal force) எப்படி வருகின்றது? அரசுதான் அந்த ஆற்றலைச் சட்டவிதிக்கு அளிக்கின்றது. அரசின் இச்சைப்படியே (the will of the state) சட்டவிதி உருவாகின்றது. ஆதலால், ஒரு விதிக்குச் சட்டத் தன்மையை அளிப்பது அரசின் இச்சையேயாகும். எனவே, சட்டத்திற்கு மூலம் அரசின் இச்சையே ஆகும், என்கிறார் சால்மண்ட்.

'நீதிமன்றத்தின் வாயிலாக இயங்கும் அரசின் இச்சையே சட்டங்களுக்கெல்லாம் மூலமாக உள்ளது' என்கிறார். இந்தச் சட்டமூலத்தை 'முறைவகை மூலம்' (formal source) என்று குறிப்பிடுகின்றார் சால்மண்ட்.

சட்டங்களில் அடங்கும் பொருள் எதிலிருந்து வந்ததோ அதைச் சட்டத்தின் 'பொருள்வகை மூலம்' (material source) என்கிறார்.. வழக்கநெறி (custom) சட்ட நூல்கள், இவை எல்லாம் 'பொருள்வகை மூலம்' (material source) என்கிறார்.

இவ்வாறு, சட்டமூலங்களை, முறைவகை மூலம் (formal source), என்றும் பொருள்வகை மூலம் (material source) என்றும் பிரித்துக் கூறுகின்றார் சால்மண்ட்.

சட்ட அறிஞர் ஆலன் (C.K. Allen) என்பார் வேறுவகையில் சட்டத்தின் மூலத்தைக் கூறுகின்றார்.

'செயலாற்று விதிகளை வரையறுத்துச் சீர்மையாக்கி, கட்டுறுத்தும்படியான சட்டத் தன்மையினை அவற்றுக்கு

அளிக்கும் முகவைகள் (agencies) தாம் சட்டத்தின் மூலங்கள்',[1] என்கிறார்.

இந்த இலக்கணப்படி, சட்டமன்றங்களும் நீதிமன்றங்களும் சட்டத்தின் மூலங்கள் ஆகின்றன.

சட்டத்தின் இலக்கணத்தை நாம் எவ்வாறு வகுக்கின்றோமோ அதற்கேற்ப அதன் மூலங்கள் வகையுறுகின்றன, என்கிறார் ஆசிரியர் பேட்டன் (Paton). 'அரசின் கட்டளையே சட்டம்' என்று கொண்டால் அரசின் இச்சையே சட்டத்தின் மூலமாகிறது. அறநெறியே அதைக் கொண்டுள்ள சட்டத்தைச் செல்லுறச் செய்கிறது எனக் கொண்டால், சட்டத்தின் மூலமாக அறநெறி அமைகின்றது என்கிறார், பேட்டன்.

இனி, சட்டத்தின் மூலங்களாகக் கொள்ளப்படும் இயற்றுமுறை, தீர்ப்பு வழக்க நெறி இவைபற்றி விரிவாகக் காணலாம்.

---

[1] 'Source' denotes those agencies by which the rules of conduct acquire the character of law by becoming objectively definite, uniform and, above all, compulsory. — Allen.

இயற்றுமுறைச் சட்டம்

(Enacted Laws - Legislation)

[சட்டம் இயற்றுதல் — சமயமும் சட்டமும் இணைந்து நின்ற காலம் — இயற்றுமுறைச் சட்டமும் தீர்ப்புநெறிச் சட்டமும் — சட்டத்தொகுப்பு — சட்டமன்றத்தின் தனிநிலை — மேல்நிலை இயற்றுமுறை, கீழமை இயற்றுமுறை — இயற்றப்பட்ட சட்டங்களின் பொருள் விளக்கம்]

சட்டம் இயற்றுதல்

மக்களின் இன்பவாழ்விற்கு ஏற்ற வகையில் அவர்கள் வாழ்க்கை முறை அமைதல் வேண்டும். அவ்வாறு அமைவதற்கு உற்ற கருவிகளாக உள்ளவையே சட்டங்கள். மக்களது வாழ்க்கையை நெறியுறுத்தி அவர்கள் இன்பத்தைப் பாதுகாப்பதே சட்டத்தின் கடனாகின்றது.

அரசியல் முறை வளர்ந்துள்ள நாடுகளில் எல்லாம் சட்டங்கள் இயற்றப் பெறுகின்றன. சட்டம் இயற்றுவது அரசின் சிறப்புரிமை ஆகின்றது. 'தகுதிறம் பெற்ற ஆள்வையால் சட்ட விதிகள் சாற்றப் பெறுகின்றன; இதுவே சட்டம் இயற்றுதலாகும்'[1] என்கிறார் சால்மண்ட்.

'சமுதாயத்தின் சட்டமியற்றும் சாதனங்கள் முறையாகச் சாற்றுவதே சட்டமியற்றல் ஆகும்', என்பது பேராசிரியர் கிரே

---

[1] Legislation is that source of law which consists in the declaration of legal rules by a competent authority - Salmond.

கூறும் வரைவுரை.

'சட்டம் இயற்றுவதற்குத் தகுதிறம் உள்ளதாக நீதிமன்றங்கள் கருதும் ஆள்வையால் அதற்குற்ற படிவத்தில் ஆக்கப்பெறும் சட்டமே இயற்று முறைச் சட்டம்'[2] என்கிறார் பேராசிரியர் டயஸ்.

சட்டத்திற்கான மூலங்களில் ஆற்றல் மிகுந்ததும் அரசாண்மையுடையதும் சட்டமியற்றும் முறையே யாகும். பழைய சட்டங்களை நீக்குவதும், திருத்துவதும் சட்டமியற்றும் முறையில் தான் இயலுவதாகும்.

சட்டமியற்றுவதால் எழும் சட்டங்களை 'இயற்றப்பட்ட சட்டங்கள்' (enacted laws) என்று குறிப்பிடுகின்றோம். பொதுமுறைச் சட்டத்திலிருந்து (Common Law) வேறுபடுத்திக் காட்டும் வகையில் இதை 'இயற்றுமுறைச் சட்டம்' (Statute Law) என்றும் கூறுவார்கள். பிளாக்ஸ்டோன் (Blackstone) போன்ற ஆசிரியர்கள் இயற்றுமுறைச் சட்டத்தை 'எழுத்துருச் சட்டம்' (Written Law) என்பார்கள்.

மக்களாட்சி முறை நிலை பெற்றுள்ள நாடுகளில் எல்லாம் மக்களின் குறைகளைக் களைவதற்கும், வளரும் சமுதாயத்தில் எழும் பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் இயற்றுமுறைச் சட்டங்களே ஏற்ற கருவிகளாக அமைகின்றன. மக்களின் வாழ்க்கையில் பல துறைகளையும் இன்றைய இயற்றப்படும் சட்டங்கள் தொட்டு நிற்கின்றன.

அரசியலில் முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகள் அனைத்திலும் சட்டங்களை இயற்றும் முறையே இயல்பான முறையாகவும், ஏற்ற முறையாகவும் இன்று கொள்ளப்படுகின்றது.

'வளர்ச்சியடையாத சமுதாயத்தில் அரசின் கடமை சட்டத்தைச் செல்லுறுத்துவதே ஆகும். சீரமைப்பது அன்று. முறை செய்வதே அன்றைய அரசின் தலையாய கடன். முறை செய்யும் அரசுக்கு முன்னின்று உதவியவை வழக்க நெறியாக வளர்ந்து நின்ற அறநெறிக் கொள்கைகளே ஆகும். அரசின் இச்சை

---

1 Legislation is the formal utterences of the legislative organs of the society - Prof Gray.

2 Legislation may be described as law made deliberately in a set form by an authority, which the courts have accepted as competent to exercise that function - Dias

அந்நாள்களில் சட்டமாகக் கருதப்படவில்லை; நீதிநெறியே அன்று சட்டநெறியாக நிலவி நின்றது.[1]

சமயமும் சட்டமும் இணைந்து நின்ற காலம்

நினைவுக்கு எட்டாத நீண்ட நெடுங்காலத்திற்கு முன்னே இறைமையால் இயம்பப் பெற்றது வழக்க நெறிமுறை என்று மக்கள் நம்பிய காலம் ஒன்று உண்டு. சமுதாய வாழ்க்கை நெறிகளும் சமய நெறிகளும் இணைந்தவை என்று மக்கள் அன்று கருதினர். எல்லாம் வல்ல இறைவனே எடுத்து இயம்பிய நெறிகளை எவரும் மாற்ற இயலாது என்ற அறுதியான கொள்கை உறுதியாக இருந்த காலம் அது.

காலத்தின் வளர்ச்சியிலே கோலங்கள் மாறின; கொள்கைகள் மலர்ந்தன. மனித மனம் நம்பிக்கை நிலையைவிட்டு நல்லறிவை நாடியது. அச்சம் என்ற இருளை விட்டு அகன்ற மனம், அறிவு என்ற ஒளி கொண்டு அதிவிரைவாக முன்னேறியது. நீண்டநாள் பழக்கத்தால் நிலை பெற்ற வழக்கநெறித் தளைகள் சமுதாய முன்னேற்றத்திற்குத் தடைகளாக இருப்பதை மனிதன் கண்டான். அறிவுக்கு உகந்த நெறிகளே ஆக்கந்தரும் நெறிகள் என்பதை அவன் உணர்ந்தான். வாழ்விற்கு வளந்தரும் வகைமுறைகளே இன்றியமையாதன என்ற உண்மையினை ஓர்ந்து கண்ட மனித சமுதாயம் புதிய நெறி முறைகளைப் புனைய முற்பட்டது. பகுத்தறிவுக்கு உகந்த புூங்கான நெறிகளைச் சட்ட நெறிகள் எனச் சாற்றியது சமுதாயம்.

சமயநெறியும் சட்டநெறியும் ஒன்று எனக் கொண்டு உழன்று வந்த சமுதாயம், நல்வாழ்விற்குத் தேவையான சட்டங்களைத்தானே இயற்றிக் கொள்ளலாம் என்ற நிலைக்கு உயர்ந்த செயல், மனித சமுதாயத்தின் மாபெரும் முன்னேற்றம் என்கின்றனர் சட்ட இயல், சமூகஇயல் அறிஞர்கள். இது இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளுக்கு மட்டுமே பொருந்துவதன்று. இந்திய நாட்டிலும் இந்நிலை அண்மைக் காலம் வரை இருந்தது. இந்தியாவில் பெரும்பான்மையினராக

---

1 Early law is conceived as jus (the principles of justice) rather than as lex (the will of the state) - Salmond.

வாழும் இந்துக்கள் என்போர்களை எடுத்துக் கொண்டால், அவர்களுக்குரிய தனிமுறைச் சட்டங்கள் (Personal Laws) சமய நெறிசார்ந்த வழக்க நெறிகளாகவே இருந்தன. எழுதப்படாத வேதங்களே அவற்றுக்கு மூலம் என்றும், எண்ணத்திற்கு எட்டாத காலத்திலிருந்து அவை வழக்க நெறிகளாக வந்துள்ளன என்றும் கருதப்பட்டது. மனு, யாக்ஞவால்கியர், ஆபஸ்தம்பர், பௌதாயனர் ஆகிய தெய்வீக ஞானிகள் என்போர் தெளிந்துரைத்த விதிமுறைகளை ஏடுகளிலிருந்து எடுத்து எழுதி இந்துக்களைப் பொறுத்த சட்டம் அது எனக் கூறப்பட்டது. திருமணம், வாரிசுமுறை ஆகியவற்றை நெறிப்படுத்தும் விதி முறைகளாக அவை செல்லுறுத்தப்பட்டன.

கோத்திரங்களின் அடிப்படையில் திருமணம் நடக்க வேண்டும்; தந்தை விட்டுச் செல்லும் சொத்தில் பெண் மக்களுக்கு உரிமை கிடையாது; இறந்த கணவனின் சொத்து விதவைக்குச் சேர்வதில்லை; விதவை மறுமணம் செய்தல் செல்லாது என்பன போன்ற சட்டவிதிகள் நீதிமன்றங்களால் செல்லுறுத்தப் பட்டன. 'பெண்ணாகப் பிறந்தவள் திருமணத்திற்கு முன் தந்தைக்கும், திருமணத்திற்குப் பின் கணவனுக்கும், கணவன் இறந்த பின் தன் மகனுக்கும் அடங்கி நடக்க வேண்டும்', என்ற மூதுரைக்கு இணைந்தே நீதி வழங்கப்பட்டது! 'ஒரு குலத்துக்கு ஒரு நீதி' என்ற வேறுபாட்டுடன் 'பிள்ளை ஏற்றல்' (adoption) 'சொத்து இறங்குரிமை' (succession) ஆகியவற்றைக் குறித்த சட்டவிதிகள் செயற்பட்டன. 1954-ஆம் ஆண்டு வரை இந்நிலையே இருந்து வந்தது. 1955-ஆம் ஆண்டில் இந்திய நாடாளுமன்றம் இயற்றிய சட்டங்களின் வாயிலாகத்தான் அறிவுக்கு ஒவ்வாத இந்த அநியாய நெறிகள் ஒழிக்கப்பட்டன. பெண்ணும் ஆணும் சமம் என்பதும், பிறப்பினால் ஏற்றத்தாழ்வு இல்லை என்பதும் நிலைநிறுத்தப் பெற்றன. வழக்கநெறிகள் எவ்வளவு வல்லமை பெற்றிருந்தன என்பதை இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம். சமயப் போர்வையில் இவை சாத்திரங்கள் ஆகி விட்டன! சமயமும் சட்டமும் வேறு என்று பிரிக்கப்பட்ட பின்னரே சமுதாய அறம் நம் நாட்டில் (social justice) அரும்பியது.

சமயமும் சட்டமும் இணைந்து நின்ற அநாகரீக நிலை அருகிய பின்னர்தான், மக்கள் கண்ட வழக்கநெறி மாற்ற முடியாத சமயநெறி என்ற மடமை மறைந்த பின்னர்தான், சட்டம் இயற்றும் சால்பினை மனிதன் உணர்ந்தான். எனவே, இன்றைய சட்ட வளர்ச்சிக்கு ஏற்றதோர் ஆற்றல் மிக்க கருவியாக இயற்றுமுறை

இலங்குகிறது. — இவ்வாறு கூறுகின்றார் சட்டஇயல் அறிஞர் சால்மண்ட்.[1]

சட்டநெறியும் தீர்ப்பு நெறியும்

சட்டமன்றங்களால் இயற்றப்படும் சட்டங்கள் வளர்ந்து வரும் நாடுகளிலும், சட்டமன்றங்களைத் தவிர்த்து நீதி மன்றங்களாலும் சட்டங்கள் உருவாகின்றன. இதைத் தவிர்க்க முடிவதில்லை.

நீதிமன்றங்கள் முன் எத்தனையோ வகைப்பட்ட வழக்குகள் தீர்வுக்கு வருகின்றன. இயற்றுமுறைச் சட்டங்களைச் செல்லு றுத்தும் வகையில்தான் அந்த வழக்குகள் தீர்க்கப்பெறுகின்றன. இயற்றப்பட்ட சட்டங்களில் வழக்குகள் சிலவற்றைத் தீர்ப்பதற்குத் தக்க விதிமுறைகள் இல்லாமல் இருப்பது உண்டு. இந்நிலையில் தகுந்த சட்டக் கொள்கைகளை (legal principle) நீதிமன்றங்களே வகுத்து அவற்றின்படி அவ்வழக்குகளில் தீர்ப்புகளைக் கூறுகின்றன. இவ்வாறு தீர்ப்புகளில் எழும் சட்ட நெறிகளைத் 'தீர்ப்பு நெறி' என்கிறோம். பின் வரும் வழக்குகளில், முன் வழக்குகளில் காணப்படும் தீர்ப்பு நெறிகளைப் பின்பற்று கின்றனர். இவ்வாறு, 'முன்தீர்ப்புநெறி' (precedent) என்பது சட்டநெறியைப் போன்றே நீதிமன்றங்களால் செல்லுறுத்தப் பெறுகின்றது. இம்முறையில் நீதிமன்றங்களால் வகுக்கப்பெறும் சட்ட நெறியினை 'தீர்ப்புநெறிச் சட்டங்கள்' (judge-made law) என்பார்கள்.

எவ்வாறு இயற்றுமுறையில் சட்டங்கள் பிறக்கின்றனவோ அவ்வாறே நீதித்தீர்ப்புகளிலும் சட்டங்கள் பிறக்கின்றன. சட்டங்களுக்கு மூலமாக இயற்றுமுறை அமைவதை 'இயற்று முறை மூலம்' (legislative source) என்பார்கள். நீதித் தீர்ப்புகள் மூலமாக அமைவதை 'தீர்ப்புநெறி' (Judicial source) என்பார்கள்.

சட்டநெறி வளர்ந்துள்ள நாடுகளில் எல்லாம் 'இயற்று

1 Until the petrifying influence of the primitive alliance of law with religion and immutable custom has been to some extent dissolved, the part played by human legislation in the development of legal system is necessarily small; and may even the non-existent. As it is the most powerful, so it is the latest of the instruments of growth - Salmond.

முறைச் சட்டங்களும்' (enacted laws),'தீர்ப்புநெறிச் சட்டங்களும்' (judge-made laws) நீதி வழங்குவதற்கு உற்ற கருவிகள் ஆகின்றன. இயற்றுமுறைச் சட்டங்கள் எவ்வளவு பெருகினாலும் தீர்ப்பு நெறிச் சட்டங்களும் பெருகிக்கொண்டேதான் இருக்கின்றன.

'தீர்ப்புநெறிச்சட்டம்' (judge-made law) அல்லது 'முன்தீர்ப்பு நெறி' (precedent) என்பது பற்றி அடுத்துக் காண இருக்கிறோம். இங்கு இயற்றுமுறைச் சட்டத்தையும் தீர்ப்புநெறிச் சட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பது இருவகைச் சட்டங்களின் இயல்புகளைக் கணிப்பதற்கு ஏதுவாகும்.

இயற்றுமுறைச் சட்டமும் தீர்ப்புநெறிச் சட்டமும்
(Statute law and judge-made law)

ஆக்குவதும், நீக்குவதும் இயற்றுமுறை

இயற்றுமுறைச் சட்டங்கள் மூலம் சட்டங்கள் ஆக்கப் படுவது மட்டுமன்றி சட்டங்கள் நீக்கவும் படுகின்றன. வேண்டாத சட்ட விதிகளை அகற்றுவதற்கும் (abrogate), வேண்டிய சட்டங்களை இயற்றுவதற்கும் ஏற்ற வகையில் செயற்படுவது இயற்றுமுறை. தீர்ப்புநெறியில் சட்டவிதிகள் ஆக்கப் பெறு கின்றன; ஆனால், அவை நீக்கப் பெறுவதில்லை.

தீர்ப்புநெறி வகுக்கும் சட்ட நெறி குறைவுற்றதாக இருந்தால் அதனை நீக்கும் வகையில் தீர்ப்புநெறி இயங்குவ தில்லை. மேலமை நீதிமன்றம் அத்தீர்ப்பு நெறியைத் தவறு எனக் கண்டு அதை நீக்கறவு செய்யலாம் எனினும் அது எளிதில் நடப்பதன்று. எனவே, தீர்ப்புநெறியில் எழும் சட்டநெறி எளிதில் மாற்றப்படுவதன்று இன்று இயற்றப்படும் சட்டத்தை நாளைக்கு மாற்றிவிட முடியும். தீர்ப்புநெறிச்சட்டத்தை இவ்வாறு எளிதில் மாற்றுவது இயலாது. இயற்றப்பெறும் சட்டங்களால்தான் சட்டமுறை செப்பமுறப் பெறுகின்றது; சீரமைக்கப் பெறுகின்றது. இச் சிறப்புத்தன்மை தீர்ப்புநெறிச் சட்டங்களுக்கு இல்லை.

எல்லாருக்கும் தெரிவது

இன்னதுதான் சட்டம் என்பது எல்லாருக்கும் தெரிய

வேண்டும். அப்பொழுதுதான் மக்கள் சட்டங்கள் இன்னவை என்பதைத் தெரிந்து அவற்றுக்கேற்ப ஒழுக முடியும். இயற்று முறையில், சட்டங்கள் முதலில் இயற்றப்பட்டு, சாற்றப்பெறு கின்றன. சாற்றப்பட்ட பின்னர்தான் செல்லுறுத்தப்பெறு கின்றன. இதுவே இயல்பான சட்ட நெறியாகும். ஆனால், தீர்ப்புநெறிச் சட்டங்கள் வழக்குகளில் செல்லுறுத்தப்படும் பொழுதுதான் அவை சாற்றவும் பெறுகின்றன. சாற்றப்பட்ட பின்னரே சட்டங்கள் செல்லுறுத்தப் பெறவேண்டும் என்பது நியாயமான விதியாகும். தீர்ப்புநெறிச் சட்டங்களுக்கு இந்த நியாயமான விதி பொருந்துவதில்லை. செயல்கள் ஆற்றப்பட்டு ஆண்டுகள் பல கழிந்து வழக்குகள் எழுந்த பின்னர்தான், அச்செயல்களைப் பொறுத்த சட்டம் இன்னது என்பதை தீர்ப்புநெறிச் சட்டம் செப்புகின்றது. இது இயல்பான நீதி முறைக்கு ஏற்றதன்று.

பகிர்ந்து ஆற்றப்படும் பணி

பகிர்ந்து பார்க்கப்படும் வேலை முறையே, எந்தத் துறையிலும், சீராக அமையும், சிறப்பாக இயங்கும். சட்ட மன்றங்கள் சட்டங்களை இயற்றுவது, நீதிமன்றங்கள் சட்டங் களைச் செயற்படுத்துவது என்ற பகிர்வு இருக்குமானால்தான் இருதிறப் பணிகளும் செப்பமாக அமையும். தீர்ப்புநெறியில், சட்டவிதிகள் செல்லுறுத்தப்படும் பொழுதே ஆக்கவும் பெறு கின்றன. சட்டத்தைச் செல்லுறுத்தும் நீதிபதிகளே அவற்றை ஆக்கவும் செய்கின்றனர். சட்டங்கள் ஆக்குவதை மட்டுமே தொழிலாகக் கொண்ட சட்டமன்றங்களில் சட்டவிதிகள் சீராகவும் சிறப்பாகவும் ஆக்கப்பெறுகின்றன.

வருமுன்னர்க் காப்பது

வருமுன்னர்க் காப்பதே அரசின் செயல் திறனாகும். மக்களின் தேவைகளை அறிந்து அவற்றுக்கேற்பச் சட்டங்களை ஆக்குவது சட்டமன்றத்தால் தான் இயலும். நீதிமன்றமோ தன் முன் வழக்குகள் வரும்வரை காத்திருக்க வேண்டியிருக்கிறது. அந்த வழக்கிலிருந்துதான் சமுதாயத்தின் தேவையினைக் காண்கிறது.

அதற்கேற்ற நெறியினை வகுக்கிறது. எனவே, தீர்ப்புநெறிச் சட்ட விதிகளில் சீரான அமைப்பு இருப்பதில்லை, முழுமை இருப்பதில்லை, நிச்சயத் தன்மையும் இருப்பதில்லை.[1] எனவே, வருமுன்னர்க் காக்கும் வகையில், சமுதாயத் தேவைகளுக்கேற்ப எழுவன இயற்றுமுறைச் சட்டங்கள்.

தங்க நாணயம் போன்றது

இயற்று முறையில் எழும் சட்டங்கள் வடிவமைப்பிலும் உரையமைப்பிலும் சிறந்து விளங்குகின்றன. சட்டவிதிகளைத் தொகுத்துக் கூறிச் சாற்றுகின்றன சட்டமன்றங்கள். அச்சட்டங்கள் உருவத்திலே அழகும், உள்ளமைப்பில் ஒழுங்கும் பெற்று விளங்குகின்றன. தீர்ப்புநெறிச் சட்டவிதிகளோ எண்ணற்ற தீர்ப்புகளிலே இணைந்து கிடக்கின்றன. தீர்ப்புக் குவியல்களில் புதைந்து கிடக்கும் தீர்ப்புநெறிகளைத் திரட்டிக் காண்பது பெருமுயற்சியாகும். எனவே, இயற்றப்பட்ட சட்டம் என்பது தங்க நாணயம் போன்றது; தீர்ப்புநெறிச் சட்டம் சுரங்கத்தில் கனிப்பொருள்களில் கலந்து கிடக்கும் தங்கத் துகள்கள் போன்றது, என்கிறார் சால்மண்ட்.[2]

திட்டமானது எளிதில் புரியக் கூடியது

இயற்றுமுறைச் சட்டம் திட்பமாக உள்ளது; தீர்ப்புநெறிச் சட்டம் நுட்பமாக உள்ளது. எளிதிலே புரிந்து கொள்ளும்படி தெளிவாக உள்ளன இயற்றப்படும் சட்டங்கள். தீர்ப்புநெறிகளை நாம் எளிதில் புரிந்து கொள்ள முடிவதில்லை. இயற்றப்பட்ட சட்டத்தைப் படித்தவுடன் அதன் கொள்கைகளை நாம் எளிதில் தெரிந்து கொள்ளுகிறோம். ஆனால், நீதிமுறையில் எழும் சட்டக் கொள்கைகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டுமெனில் எத்தனையோ தீர்ப்புகளை நாம் படித்தாக வேண்டும்; அவ்வாறு படித்த பின்னும் கூட அவற்றை ஐயமறத் தெரிந்து கொள்வது கடினமான காரியமாகும்.

---

1 Case law, therefore, is essentially incomplete, uncertain and unsystamatic - Salmond.

2 Case law is gold in the mine-a few grains of the precious metal to the ton of useless matter-while statute law is coin of the realm ready for immediate use - Salmond.

உரையமைதி

இயற்றப்படும் சட்டங்கள் கட்டளை இடுவது போன்ற சொற்களையும் சொற்றொடர்களையும் கொண்டவை. நீண்ட நாள்களாகக் கையாளப்படும் சட்டவாசகங்களின் வழியாகச் சட்டத்தின் கொள்கை வெளிப்படுகின்றது. குறிப்பிட்ட பொருளில் வரும் குறிப்பிட்ட வாசகங்கள் இயற்றப்படும் சட்டங்களின் உரையமைதிக்கு ஆதாரமாகின்றன. நாளடைவில் அந்த உரையமைதி இலக்கிய நயத்துடன் இலங்கும் சிறப்பைப் பெறுகின்றது. தீர்ப்பு நெறிகளில் இருந்து எழும் சட்டவிதி களுக்கும் கொள்கைகளுக்கும் இத்தகைய உரையமைப்பு இருப்பதில்லை. தீர்ப்புகளிலிருந்து நாம் சட்டக் கருத்துக்களை வடித்துக் காணுகின்றோம் என்பதைத் தவிர, அக்கருத்துக்கள் உரையமைதி பெற்று உருவத்துடன் காணப்படுவதில்லை.

இயற்றுமுறையில் சட்டவிதிகள் நேரடியாக வகுக்கப் பெறுகின்றன. குறிப்பிட்ட வழக்கைத் தீர்ப்பதற்குக் கருவி என்று எழாமல், மக்களின் நடத்தையை ஒழுங்குறுத்தும் விதிகளாக இயற்றப்பெறுகின்றன. எனவே, வடிவமைவிலும் வகுத்தமை விலும் சீர்மையுறும் சிறப்புடையன இயற்றப்படும் சட்டங்கள், என்கிறார் ஆஸ்டின்.

இயற்றுமுறைச் சட்டங்களின் சிறப்புக்களை இதுவரை கண்டோம். அவை சட்டவிதிகளை ஆக்குவது மட்டுமின்றி நீக்கவும் செய்கின்றன. எல்லாரும் தெரிந்து கொள்ளும்படி எளிமையாக இருக்கின்றன; சீராக அமைந்து சிறப்பாக இயங்குவன; வருமுன்னர்க் காக்கும் வகையில் மக்களின் குறைகளைப் போக்கும் வகையில் இயற்றப்படுவன; தங்க நாணயங்கள் போன்று உடனே பயன்படத்தக்கன. திட்ப மானவை; உரையமைதியும் உருவமைதியும் கொண்டவை என்றெல்லாம் பலவாறான சிறப்புக்களைக் கண்டோம்.

இயற்றுமுறைச் சட்டத்தின் குறைபாடுகள்

தீர்ப்புநெறிச் சட்டங்களுடன் ஒப்பிடும்போது இயற்றுமுறைச் சட்டங்களிலும் குறைபாடுகள் இருப்பதை நாம் காணுகின்றோம்.

முதலாவதாக, தீர்ப்புநெறிச் சட்டவிதிகள் எழுவதற்குக்

காரணமே இயற்றுமுறைச் சட்டத்திலுள்ள குறைபாடுகள் தாம். வழக்கு களைத் தீர்ப்பதற்கு இயற்றுமுறைச் சட்டத்தில் வழிவகை காணப்படாதபோதுதான் நீதிபதிகள் அவ்வழக்குகளில் தீர்ப்புக் கூறும் வகையில் சட்டநெறிகளை வகுத்துச் செயற்படுத்தும் தேவை எழுகின்றது.

நியாயமான தீர்ப்புக்குத் தேவையான முறையில் தீர்ப்பு நெறி அமைவதால் அந்நெறி நீதிக்கு உகந்ததாய் (just) செயற் படுத்துவதற்கு ஏற்றதாய் (practical) அமைகின்றது. சட்டப் புலமையும் சான்றாண்மையும் பெற்ற நீதிபதிகள் இரு தரப் பினர்களின் வாதத்தையும் கேட்டு வகுக்கும் சட்டவிதிகள் இழைவும் குழைவும் ஏற்றமைவும் (flexibility and adaptability) கொண்டவாய் விளங்குகின்றன. இச்சிறப்புத் தன்மை இயற்றுமுறைச் சட்டங்களில் இருப்பதில்லை.

ஏற்கனவே தைத்து விற்கப்படும் (ready made) சட்டைக்கும் அளவெடுத்துத் தைக்கப்படும் சட்டைக்கும் வேறுபாடு இருக் கத்தானே செய்கிறது? தீர்ப்புநெறிச் சட்டத்தில் குறிப்பிட்ட வழக்கில் எழும் சிக்கல்களை ஆய்ந்து அவற்றைத் தீர்க்கும் வகையில் கொள்கைகள் உருவாகின்றன. எனவே, அவை நீதி யோடு இணைந்து உருவாகும் சிறப்புடையவாகின்றன. தீர்ப்பு நெறிகள் படிப்படியாக இயல்பாக வளர்கின்றன. அவற்றின் வளர்ச்சியிலே ஒரு தொடர்ச்சி உண்டு. ஏதோ திடீரென்று புதுக் கொள்கையினைக் கொண்டு உருவாகும் இயற்றுமுறைச் சட்டத்தைப் போல் எழுவதில்லை நீதிமுறைச் சட்டம்.

இணைந்த இயக்கம்

இவ்வாறு, இயற்றுமுறைச் சட்டமும் தீர்ப்புநெறிச் சட்டமும் ஒன்றையொன்று தழுவியே இயங்குகின்றது. ஒன்றி லுள்ள தவிர்க்க முடியாத குறைகளை மற்றொன்று நிறைவு செய்கிறது. ஒன்றால் இயலாததை மற்றொன்று செய்கின்றது. 'சட்டம் தழுவிய நீதிமுறை' (justice according to law) என்ற கோட்பாடு நிலவும் நாடுகளில் எல்லாம் சட்டநெறி நடப்பதற்கு உதவும் இருகால்களாக இவ்விருமுறைச் சட்டங்களும் இணைந்து இயங்குகின்றன.

எனவே, இயற்றுமுறைச் சட்டங்களை மட்டுமே ஏற்றுக் கொள்வதா அல்லது தீர்ப்புநெறிச் சட்டங்களை மட்டுமே ஏற்றுக்

கொள்வதா என்ற நிலை எந்நாட்டிலும் எழவில்லை. தீர்ப்புநெறிச் சட்டம் தேவையில்லை என்று கொள்ளும்படி இயற்றுமுறைச் சட்டத்தால் இயங்க முடிவதில்லை; ஏனெனில், வழக்குகள் அனைத்தையும் தீர்க்கும் வழியில் அதில் வகையங்கள் (provisions) அமைவதில்லை. அதுபோன்றே, இயற்றுமுறைச் சட்டத்தின் தலையீடு இன்றியே தீர்ப்புமுறைச் சட்டம் இயங்க முடியும் என்றும் நாம் கூறுவதற்கில்லை. தீர்ப்புநெறிச் சட்ட விதிகளைக் கொண்டதே 'தீங்கியல் சட்டம்' (Law of Torts) இச்சட்டத்தில் 'தற்கவனமின்மை', 'அவதூறு' போன்ற துறைகளில் தீர்ப்புநெறிச் சட்டம் வகுத்த விதிகளை மாற்றும் வகையில் சட்டங்கள் இயற்றப்பட்டன.

அறிவியலில் மனிதன் பெற்ற முன்னேற்றத்தால் சமுதாய வாழ்க்கைமுறைகள் மாறியுள்ளன. புதிய சூழ்நிலைகள் பல தோன்றியுள்ளன. இவற்றுக்கான சட்டங்கள் பல ஒவ்வோர் ஆண்டும் இயற்றப் பெறுகின்றன. இயற்றப்படும் பல சட்டங் களுக்கேற்ப, அவற்றை ஒட்டிய தீர்ப்புநெறிச் சட்டவிதிகளும் பெருகுகின்றன.

சட்டத்தொகுப்பு (Codification)

பெருகிவரும் சட்டங்களை ஒழுங்குறுத்த வேண்டுமென்ற முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு பொருளைக் குறித்தும் உள்ள சட்ட விதிகளனைத்தையும் சேர்த்து இணைந்து இயற்றுமுறைச் சட்டவடிவில் தொகுப்பதை ஆங்கிலத்தில் codification என்பார்கள். இவ்வாறு சட்டங்கள் தொகுக்கப் பெற்ற பின்வரும் தீர்ப்புநெறிச் சட்டவிதிகள் தோன்றுவதற்கு இடமில்லாமல் போகும் என்று நாம் கூற முடியாது. தொகுக்கப் பட்ட சட்டங்களிலும் சில இடங்களில் தெளிவின்மை இருப்பதுண்டு, முரண்பாடுகள் தெரிவதுண்டு. எவ்வளவு திறமையுடன் சட்டங்களின் வாசகம் வரையப்பட்டாலும் எதிர்காலத்தில் எழக்கூடிய எல்லா வழக்குகளுக்கும் பொருந்தும் விதிக் கொள்கைகளை அது கொண்டிருத்தல் இயலாது. இந் நிலையில் சட்டத் தொகுப்பில் உள்ள வாசகங்களின் பொருளை விளக்கும் வகையிலும், முரண்பாடுகளை நீக்கும் முறையிலும், தீர்ப்புநெறிச் சட்டவிதிகள் பல எழலாம். இவ்வாறு, தொகுப்புச் சட்டத்தை ஒட்டி தீர்ப்புநெறிச் சட்ட விதிகள் பெருகலாம். மீண்டும் இவ்விதிகளையும் உள்ளடக்கும் வகையில் சட்டத்

தொகுப்பைச் சீரமைக்கும் தேவை ஏற்படும். சட்டவளர்ச்சியில் இது தொடர்ந்து நடக்க வேண்டிய முயற்சியாகும்.

சட்ட மன்றத்தின் தனிநிலை

இங்கிலாந்து நாட்டின் சட்டமன்றத்தை பார்லிமெண்ட் (Parliament) என்கிறோம். பார்லிமெண்டின் அதிகாரம் வரம்பு இல்லாதது என்பது சட்டக் கொள்கையாகும். பார்லிமெண்ட் உச்ச நிலையில் உள்ளது என்பது மட்டுமன்றி, அது சட்டப்படி எல்லாம் வல்லது (omnipotent) என்றும் கொள்ளப்படுகிறது.

பார்லிமெண்டால் நிறைவேற்றப்பட்ட சட்டம் எதையும் செல்லுறாது என்று கூறுவதற்கு எவருக்கும் அதிகாரம் கிடையாது. பார்லிமெண்டின் அரசாண்மைக் கொள்கைப்படி, பார்லிமெண்டின் அதிகாரம் எல்லையற்றது.

எனவே, பார்லிமெண்டால் நிறைவேற்றப்படும் சட்டங்கள் அனைத்தும் செல்லுறத்தக்கவை. பார்லிமெண்ட் சட்டங்கள் இயற்றுவதை 'மேல்நிலை இயற்றுமுறை' (supreme legislation) என்பார்கள்.

'கீழமை இயற்றுமுறை' (subordinate legislation) என்ற வகையில், குடியேற்ற நாடுகள் (colonies), ஆட்சித்துறையினர் (executive), நீதித்துறையினர் (judicial), நகராட்சி மன்றத்தினர் (municipal), தன்னாட்சியங்கள் (autonomous) ஆகிய துறையினரும் சட்டங்களை இயற்றும் அதிகாரம் உள்ளவர்கள். . பார்லிமெண்டிலிருந்து அதிகாரம் பெற்றுள்ளதால் இத்துறையினர் சட்டங்களை இயற்றுகின்றனர்.

நம் நாட்டைப் பொறுத்த வரை கீழமைவில் சட்டங்கள் இயற்றும் துறையினர் நால்வர் எனக் கூறலாம்.

ஆட்சித்துறையினர்

சட்டமன்றத்தால் இயற்றப்படும் சட்டம் ஒன்றைச் செயலுறுத்தவேண்டுமெனில் அதற்கான விதிகள் தேவைப்படுகின்றன. குறிப்பிட்ட ஒரு பொருளில் வாணிபம் செய்வதென்றால் அதற்கு அரசாங்கத்திடமிருந்து உரிமம் (licence) பெற வேண்டும் என்று சட்டம் வாதிக்கலாம். அந்த உரிமம் வழங்குவது எந்த அலுவலர், உரிமத்தைக் கோரி எழுதப்படும் மனு எந்தப்

படிவத்தில் இருக்க வேண்டும், உரிமம் வழங்கப்படவில்லையெனில் அதற்கு மேல் எந்த அதிகாரியிடம் மேல்முறையீடு செய்யவேண்டும் என்பன போன்ற விவரங்கள் சட்டத்தில் இருப்பதில்லை. இவற்றைக் குறித்து ஆட்சித் துறையினரே விதிகளை வகுத்துக் கொள்ளலாம் என்று இயற்றப்பட்ட சட்டப் பிரிவு கூறுகிறது. இவ்வாறு வகுக்கப்படும் விதிகள் சட்டவிதிகள் போன்றே செல்லுறுத்தப்பெறுகின்றன. சட்டமன்றம் இயற்றும் சட்டங்களில் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் ஆட்சித் துறையினர் (executive) இவ்வாறு சட்டவிதிகள் இயற்றுவதை 'கீழமை இயற்று முறை' (subprdinate legislation) என்பார்கள்.

நீதித்துறையினர் நீதிமன்றங்களில் வழக்குகள் இடுவது குறித்தும், வழக்கு விசாரணையைப் பொறுத்துச் செய்ய வேண்டிய பல காரியங்கள் குறித்தும் விதிகள் தேவைப்படுகின்றன. இவ்விதிகளை உயர் நீதி மன்றங்களும் உச்ச நீதிமன்றமும் வகுத்துத் கொள்கின்றன. இவ்விதிகளும் சட்ட நெறி போன்றே செல்லுறுத்தப் பெறுவன.

நகராட்சி மன்றம் (Municipality)

நகராட்சி மன்றங்கள் அவற்றின் அதிகார வரம்பிற்குள் வரும் காரியங்கள் குறித்து விதிகளை இயற்றிக் கொள்ளலாம். இவ்விதிகளும் சட்டவிதிகளாகவே செல்லுறுத்தம் பெறுகின்றன.

தன்னாட்சியங்கள்

பல்கலைக் கழகங்கள், கம்பெனிகள் போன்ற அமைப்புகள் தங்கள் பணி எல்லைகளுக்குள் செல்லுறுத்தப் பெறும் விதிகளை வகுத்துக் கொள்ளச் சட்டம் இடமளிக்கிறது.

இவ்வாறு, ஒரு நாட்டின் சட்டமன்றத்தைத் தவிர்த்து பிற அமைப்புகளும் சட்டவிதிகளை வகுக்கும் முறையை 'கீழமை இயற்றுமுறை' (Subordinate Legislation) என்கின்றனர். சட்ட மன்றம் அளிக்கும் ஏலுரிமையின் (power) கீழ் சட்ட விதிகள் இயற்றப்படுவதை 'ஒப்படைவு இயற்று முறை' (Delegated Legislation) என்றும் கூறுவதுண்டு.

இயற்றப்பட்ட சட்டங்களின் பொருள் விளக்கம்

இயற்றப்பட்ட சட்டங்களின் வாசகம் கட்டளை இடுவது

போன்ற சொற்களைக் கொண்டிருப்பதை நாம் காணுகிறோம். இந்தக் கட்டளை வாசகத்தையே நாம் சட்டம் என்கிறோம். இயற்றுமுறைச் சட்டத்தின் மெய்ப்பொருளை அதன் வாசகத்தில் இருந்துதான் நாம் காணவேண்டியுள்ளது. நீண்டநாட்களாகச் சட்டங்கள் இயற்றப்பட்டு வந்துள்ளதால் சட்ட வரைமுறை (mode of drafting) ஒன்று உருவாகி இருக்கிறது. இன்னென்ன வகையான சொற்றொடர் அல்லது சொல்லாட்சி இன்னென்ன பொருளைக் குறிப்பது என்ற மரபுகள் நிலவுகின்றன.

எனவே, இயற்றுமுறைச் சட்ட வாசகத்தின் அகராதிப் பொருளை நாம் காண்பதை விட அதில் அமைந்துள்ள பொருளைக் காண்பதே அதைச் சரியாகப் புரிந்து கொள்ளும் வழியாகும். சட்ட உரையின் பொருளை விட அதில் உறையும் பொருளையே நாம் காண வேண்டும். இவ்வாறு, சட்ட வாசகங்களின் உற்ற பொருளைக் காண்பதைப் 'பொருள் விளக்கம்' (Interpretation) அல்லது 'பொருள் அமைதி' (construction) என்று கூறுவார்கள்.

இயற்றப்பட்ட சட்டங்களுக்கு இவ்வாறு பொருள் விளக்கம் காணும் பொறுப்பு எவரைச் சேர்கின்றது? சட்டத்தைச் செல்லுறுத்தி நீதி வழங்கும் நீதிபதிகள்தாம் இதைச் செய்கின்றனர். இதுவே பொருத்தமும் ஆகும்.

எனவே, சட்டமன்றம் பகன்றுள்ள கட்டளை வடிவான வாசகங்கள் மூலம் சட்டமன்றத்தின் கருத்து என்ன என்பதை நீதிமன்றம் காணும் முறையே பொருள் விளக்கம் என்கிறார் சால்மண்ட்.[1]

சட்ட வாசகத்தின் சொல்லமைதியிலிருந்து அதன் பொருளைக் காண்பதே 'பொருள் விளக்கம்' அல்லது 'பொருள் அமைதி' ஆகின்றது.

இங்கு 'சட்டம்' என்ற சொல் இயற்றப்பட்ட சட்டத்தையே குறிப்பதாகும். 'பொருள் விளக்கம் காணுதல்' என்றால் நீதிமன்றம் காணுதல் என்பதேயாகும். இதே பொருளில்தான் இனி இங்கு வரும் 'சட்டம்' என்ற சொல்லையும் 'பொருள் விளக்கம் காணுதல்' என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

---

1 By interpretation or construction is meant the process by which the courts seek to ascertain the meaning of the legislature through the medium of the authoritative forms in which it is expressed - Salmond.

ஒரு சொல்லிற்கு பல பொருள்கள் இருக்கும்பொழுது எந்தப் பொருள் ஏற்றது என்பதையும், சட்டவாசகம் தெளிவாக இல்லாத போது அதன் உண்மைப் பொருளை ஊகித்துக் காண்பதையும் நீதிமன்றம் செய்வதால், பொருளமைதி காணுதலை (construction) என்றும் நீதிமன்றத்தின் பணி எனக் கூறுகின்றனர்.

பொருள் காணும் முறைகள் இருவகைப்படுவன

சட்ட வாசகத்திற்கு (litera legis) இணங்கப் பொருள் காணல் ஒருவகை. வாசகத்தைக் கடந்து வாசகத்திற்கு அப்பால் உள்ள சட்டக் கருத்தை—அதாவது, சட்டத்தை இயற்றிய சட்ட மன்றத்தின் கருத்தை – காணல் (sententia legis) மற்றொரு வகை.

இங்கிலாந்து நாட்டில் சட்டத்தின் கருத்தைக் காண்பதே அதற்குப் பொருள் காண்பதாகும். சட்டமன்றத்தின் உண்மையான கருத்து (true intention) என்ன என்பதைக் காண்பதே அந்நாட்டில் நிலவும் மரபாகும்.சட்டத்தின் சாரம் அதன் உள்ளுரை பொருளே, உரைவாசகப் பொருளன்று; உட்கருத்தின் உருவமைப்பாகவே உரைவாசகம் உள்ளது.[1]

சட்டமன்றம், தான் கருதியதையே சொல்லியுள்ளது; அதாவது, சட்டமன்றம் சொல்லியுள்ளது எதுவோ அதுவே அதன் கருத்தாகும், என்றே நாம் பொதுவாகக் கொள்கிறோம். எனவே, பொருள் காண்பதற்கு முதற்படி சட்டத்தின் உரைவாசகத்தின் பொருளைக் காண்பதுதான். சட்டமன்றத்தின் கருத்தை வெளிப்படுத்துவதற்கான வாசகம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற காரணம் காட்டி சட்ட வாசகத்தைக் கூட்டுவதோ குறைப்பதோ மாற்றுவதோ முறையன்று.

சாதாரண மொழி இலக்கணத்தின் அடிப்படையில்தான் சொற்களின் பொருளைக் காண வேண்டும். சாதாரணச் சொற்களுக்கு அகராதியையும், தொழில் நுட்பச் சொற்களுக்கு அவற்றுக்கான அகராதிகளையும் பார்த்து சட்டத்தில் வரும் சொற்களின் பொருளைக் காண்கின்றனர். இவ்வகையில் சில சொற்கள் சிறப்புப் பொருளில் பயன்படுத்தப்பட்டிருந்தால்

1 The essence of the law lies in its spirit, not in the letter, for the letter is significant only as being the external manifestation of the intention that underlies that - Salmond.

சட்டத்தின் வரைவுரைகள் (definitions) கூறும் பகுதியில் அச்சிறப்புப் பொருள் என்ன என்று கூறியிருப்பார்கள். இவ் வகையில் காணப்பெறும் பொருள்தான் சட்டவாசகத்தின் பொருள் ஆகின்றது. இதைச் 'சட்டத்தின் வாசகப் பொருள்' (literary meaning of a statute) என்பார்கள்.

'சட்டத்தின் சொற்கள் எளிமையாகவும் தெளிவாகவும் இருந்தால் அவற்றின் சாதாரணமான பொருளையே நாம் சட்டத்தின் பொருளாகக் கொள்ள வேண்டும்'[1] என்கிறார் நீதிபதி ஜெர்விஸ்

இதைத் 'தெளிவான பொருள் காணும் விதி'(Plain meaning rule)) என்கிறார் டயஸ்.

சொற்களின் பொருளைக் காணும் முறை

பொதுவாக, ஒரு சொல்லின் பொருள் அது எந்தச் சொற்களோடு இணைந்து வருகின்றதோ அவற்றிற்கேற்பவே அமை கின்றது. சட்டத்தின் இதர பிரிவுகள், சட்டத்தின் நோக்கம், சட்ட அமைப்பு இவையனைத்தின் பின்னணியில் சொற்களின் பொருளை உறுதி செய்ய வேண்டியுள்ளது. இந்நிலையில் ஒரு சொல்லின் பொருள் அகராதியில் காணப்படாத தனிப் பொருளாகக் கூட இருப்பதுண்டு. எனவே, சொற்களுக்கான பொருளைக் காண்பதில் இந்தக் கூறுகளையெல்லாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

இனம் கண்டு பொருள் காணல்

நாம் நமது வேலையாளைக் காய்கறிகள் வாங்குவதற் கெனக் கடைக்கு அனுப்பும் பொழுது, 'வாழைக்காய், மாங்காய், கத்தரிக்காய் இன்னும் வேறு நல்லதாக ஏதாவது வாங்கிக் கொண்டு வா', என்று கூறுகிறோம். இப்பொழுது, 'வேறு நல்லதாக ஏதாவது' என்பதில் வேறு வகைக் காய்கறிகள் தான் அடங்குமே தவிர சமையல் பாத்திரமோ, நாற்காலியோ அடங்குவதில்லை. இதுவே பொது அறிவுக்குற்றது. இதே முறையில்தான் சட்டத்தில் வரும் சொற்களையும் நாம் காண

[1] If the precise words used are plain and unambiguous, in our judgement we are bound to construe them in their ordinary sense -Jervis C.J.

வேண்டும் என்பது விதி. பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு என்று இயற்றப்பட்ட சட்டத்தின் பிரிவு ஒன்றில் 'நூற்பிரிவில் வேலை செய்வோர், இயந்திரப் பிரிவில் பணியாற்றுவோர் அல்லது வேறு எவரும்', என்ற வாசகம் வந்தால், அதில் உள்ள 'வேறு எவரும்' என்ற தொடர் பஞ்சாலையில் வேறு வகையில் வேலை பார்ப்பவர்களை மட்டுமே குறிக்குமே அல்லாமல், பொதுவாக வேறு எந்த மனிதரையும் குறிப்பதில்லை. சாதாரணமாக, 'வேறு எவரும்', என்ற தொடருக்கு 'வேறு எந்த மனிதரும்' என்று தான் பொருள்கொள்ளுவோம். ஆனால், அந்த வாசகத்திற்கு முன்னால் உள்ள சொற்கள் அந்த வாசகத்தின் பொருளைக் கட்டுப்படுத்தி அச்சொற்களில் குறிப்பிட்ட பகுதியினர்க்கே பொருந்துமாறு செய்கின்றன. இதுவே அறிவுக்கு உகந்த முறையும் ஆகும். இவ்வாறு பொருள் காணும் முறையை 'இனம் கண்டு பொருள் காணல்' என்பார்கள். இதைச் சுருக்கமாக இலத்தீனில் 'ejusdem genesis rule' என்பதுண்டு.

இவ்வாறு, சட்ட வாசகத்தின் இயல்பான பொருளைக் கொண்டு சட்டமன்றத்தின் கருத்தைக் காணும் முறையே பெரிதும் ஏற்கப்படுகின்றது. ஆயினும் எல்லாச் சூழ்நிலைகளிலும் இந்த முறை ஏற்புடையதாக இருப்பதில்லை.

'நலமிக்க' விதி

சில வேளைகளில் சட்ட வாசகம் நம் பொது அறிவுக்குப் பொருந்தாமல் இருப்பதுண்டு. அது முன்னுக்கு பின் இசைவின்றி இருக்கலாம்; தெளிவு இன்றி இருக்கலாம். இந்நிலையில் சட்ட மன்றத்தின் கருத்தைக் காண்பதற்கு சட்டவாசகத்தையும் தாண்டிச் செல்ல வேண்டிய நிலை எழுகின்றது. வாசகத்தில் தெளிவின்மையோ பொருளில் தெளிவின்மையோ இருக்கும் பொழுது, சட்டவாசகம் பயன் குன்றிப் போகிறது. நீதிமன்றம் சட்ட வாசகத்தை கைவிட்டு, வேறு மூலங்களின் வழி சட்டமன்றத்தின் கருத்தைக் காணமுயலுதல் வேண்டும். இது நீதிமன்றத்தின் உரிமையும் கடமையும் ஆகும். சில நேர்வுகளில் சட்டமன்றத்தின் கருத்தே தெளிவின்றி இருப்பதால் சட்டவாசகம் முன்னுக்குப் பின் முரணாக இருப்பதுண்டு. இந்நிலையில், சட்டமன்றத்தின் கருத்தையும் திருத்த வேண்டும்; அதே நேரத்தில் சட்டவாசகத்தினையும் திருத்த வேண்டும். இதுவும் நீதிமன்றத்தின் கடமை யாகும், என்கிறார் சால்மண்ட்.

சட்டவாசகத்தில் தவறுதல்கள் ஏற்படுவதுண்டு. எழுத்துப் பிழைகள் அல்லது வாசகப் பிழைகள் காரணமாக சட்ட வாசகத்தின் பொருள் விசித்திரமானதாக மாறிவிடலாம். சட்டமன்றம் கருதிய பொருள் இதுவாக இருக்காது என்பது தெளிவாகத் தெரியும். இந்நிலையில் அந்தப் பொருள் எவ்வாறு இருந்திருக்க வேண்டும் என்பதை ஊகித்து அப்பொருளைக் குறிக்கும் வாசகம் சட்டத்தில் இருப்பதாகக் கொண்டு அதற்குப் பொருள் காணப்படுகிறது.

இதுவே, பொருள் காணும் விதிகளில் 'பொன் போன்ற விதி' (golden rule) என்பார்கள்.

'வாசகப் பொருளை வைத்து நாங்கள் சட்டங்களின் பொருளமைதியைக் காண்பதில்லை. சட்டங்களின் நோக்கத்தையும் கருத்தையும் வைத்தே அவற்றின் பொருளமைதியைக் காண்கிறோம்' என்கிறார் லார்டு டென்னிங்.[1]

சட்டக் கருத்தில் விடுபாடுகள் (lacuna) நேர்வதுண்டு. நீதிமன்றங்கள் இத்தகைய விடுபாடுகளைத் தக்க முறையில் நிரப்பிப் பொருள் காண்கின்றன.

இயற்றப்பட்ட சட்டத்திற்குப் பொருள் காணும்பொழுது, நாட்டில் நிலவும் பொதுமுறைச் சட்டத்திற்கு(common law) இசைந்தவாறே பொருள் காணவேண்டும் என்பது விதியாகும். பொதுமுறைச் சட்டத்தை மாற்றுவதற்கென்று இயற்றப்படும் சட்டத்திற்கு இவ்விதி பொருந்தாது.

'கேடு அகற்றும் விதி'

பொதுமுறைச் சட்ட விதிகள் சில குறைகளைக் கொண்டிருக்கலாம். அதனால் கேடு விளைவதைத் தடுப்பதற்கென்று ஒரு சட்டம் இயற்றப்படலாம். இவ்வாறு இயற்றப்படும் சட்டத்திற்குப் பொருள் காணும்பொழுது, அதற்கு முன் இருந்த பொதுமுறைச் சட்டம் என்ன, அதனால் விளையும் எந்தக் கேட்டைப் போக்குவதற்கென்று சட்டம் இயற்றப்பட்டுள்ளது என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். அந்தக் கேடு போக்கப்படும்

---

[1] We no longer construe Acts of parliament according to their literal meaning. We construe them according to their object and intent - Lord Denning

வகையில் சட்டத்தின் பொருளைக் காண வேண்டும் என்பது விதி. இதைக் 'கேடு அகற்றும் விதி' (mischief rule) என்பார்கள். ஹேடன் வழக்கில் (Heydon's case) ஏற்பட்ட தீர்ப்பே இந்த விதிக்கு மூலமாகும்.

ஒரு சட்டம் என்ன நோக்கத்தோடு இயற்றப்பட்டது என்பதைக் காண்பதற்கு ஏற்ற விதம் அச்சட்டத்தை இயற்றுகையில் சட்டமன்றத்தில் அது குறித்த விவாதத்தைப் படிப்பதாகும். ஆனால், ஆங்கிலேய மரபுப்படி இயங்கும் நீதிமன்றங்கள் இதை அனுமதிப்பதில்லை. அமெரிக்க நாட்டில், சட்டமன்ற விவாதத்தையும் பார்த்துத்தான் சட்டமன்றத்தின் கருத்தைக் காண்கின்றனர்.

சாதாரணமாக ஒரு கவிதைக்குப் பொருள் கூறும் உரையாசிரியர்கள் பலவகையில் பொருள்களைக் காண்பதுண்டு. அவரவர்களின் புலமைக்கும் திறனுக்கும் ஏற்ப அவர்கள் கவிதையின் பொருளைக் காண்கின்றனர். கவிஞன் என்ன பொருளில் அதைப்பாடினான் என்பதைக் காட்டிலும், உரையாசிரியர்களின் கற்பனை வளத்தாலேயே நம் கவனம் ஈர்க்கப்படுகின்றது. இது இலக்கியத்தை நுகர்வதற்கு ஏற்றதாக இருக்கலாம். ஆனால், சட்டத்தின் பொருளமைதியைக் காணும் பொழுது, நீதிபதிகள் தங்கள் கருத்துக்களை சட்டவாசகத்தில் ஏற்றிப் பொருள் கண்டால், அது சட்டத்தின் நோக்கத்தை நிறைவேறச் செய்யாமல் தடுப்பதாகிவிடும்.

இந்த உண்மையினை உணர்த்தும் வகையில், நீதிபதிகள் பலரும் 'சட்டத்தின் பொருள் விளக்கம்' எப்படி இருத்தல் வேண்டும் என்பது பற்றி எத்தனையோ தீர்ப்புகளில் கூறிப் போந்துள்ளனர். இதைக் கூறியுள்ள நீதிபதிகளும் தங்கள் தங்கள் கருத்திற்கேற்பப் பொருள் விளக்க நெறிகளைக் கூறியுள்ளதால், அந்த நெறிகளை நாம் நெறிப்படுத்திக் காட்ட இயலுவதில்லை.

'சட்டமன்றத்தின் கருத்து' என்பதே ஒரு வரையறையற்ற, வழுக்கலான சொல்லாட்சியாகும்; சட்டவாசகத்தில் அடங்கும் கருத்தில் தொடங்கி சட்டமன்றம் இவ்வாறுதான் கருதியிருக்கவேண்டும் என்று ஊகித்துக் கூறப்படும் கருத்து வரையுள்ள எல்லாக் கருத்துக்களையும் இச்சொற்றொடர் குறித்து நிற்கிறது. இவ்வாறு கூறுகின்றார் லார்டு வாட்சன் (Lord Watson) என்ற நீதிபதி.

சட்டத்தின் பொருள் காணும் சால்புடைய நெறி

சட்டத்தின் வாசகம் தெளிவாகவும் திட்பமாகவும் இருக்கும்பொழுது அந்த வாசகத்தின் சாதாரணப் பொருளையே சட்டத்தின் பொருளாகக் கொள்ள வேண்டும். வாசகத்தில் தெளிவின்மை இருந்தால் மட்டுமே வாசகத்தை விட்டு வேறு வகையில் பொருள் காணலாம். அத்தகைய தெளிவின்மை இல்லாத நிலையில், சட்ட வாசகத்தைவிட்டுச் சற்றும் விலகிச் செல்லல் ஆகாது. இதுவே நீதிமன்றங்கள் சட்டத்தின் பொருள் காணும் சால்புடைய நெறியாகும் என்பதைப் பல சட்டநூலாசிரியர்களும் நீதிபதிகளும் வலியுறுத்திக் கூறுகின்றனர்.

'சட்டத்தின் பொருள் விளக்கம்' என்ற பொருள் பற்றிப் பல நூல்களும், கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. அந்த நூல்களில் மாக்ஸ்வெல் (Maxwell) என்பாரின் நூல் புகழ் பெற்றதாகும்.

பொதுவாக, ஒரு சட்டத்தின் நோக்கத்திற்கும் குறிக்கோளுக்கும் ஏற்ற வகையில் அதற்குப் பொருள் காண வேண்டும் என்பார்கள். ஒவ்வொரு சட்டத்திலும் "முகப்புரை" (preamble) என்ற தொடக்க வாசகத்தில் அச்சட்டம் எந்தக் குறிக்கோளுடன் இயற்றப்படுகின்றது என்பதை நாம் காணலாம்.

எனவே, சட்டவாசகங்களுக்கும் பொருள் காண்பதற்கு சட்டத்தின் முகப்புரையையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

சட்டத்தில் உள்ள பிரிவுகளின் (sections) பொருளைத் தெளிவாக்கும் வகையில் எடுத்துக்காட்டுகளும் (illustrations) விளக்கங்களும் (explanations) கொடுப்பதுண்டு. இவையும் சட்டவாசகப் பொருளைக் காண்பதற்கு உதவுகின்றன.

'தண்டனைமுறைச் சட்டங்கள்' (Penal laws), 'நல்வாழ்வுச் சட்டங்கள்' (Welfare laws), 'நிதியச் சட்டங்கள்' (Fiscal laws) என்று சட்டங்களை அவற்றின் நோக்கங்களின் அடிப்படையில் பிரிப்பதுண்டு.

தண்டனை முறைச் சட்டம் என்பது அதில் விதிக்கப்பட்ட கடமைகளில் தவறுபவர்களைத் தண்டனைக்கு உள்ளாக்குகிறது. சட்டம் எவர்களைக் கருதி இயற்றப்பட்டதோ அவர்களைத் தவிர பிறர் மீதும் தண்டனைப் பொறுப்பு ஏற்பட்டுவிடக் கூடாது. எனவே, அச்சட்டத்திற்கும் பொருள் காண்பது வரையறுதியுடன் (strict interpretation) இருத்தல் வேண்டும் என்பார்கள். வாசகத்தை

வளைத்தோ நெகிழ்த்தோ பொருள் காண முயலாமல் நேரடியாகச் சட்ட வாசகம் எவர்களைக் குறிக்கிறதோ அவர்களுக்கே அச் சட்டம் பொருந்தும் வகையில் பொருள் காண வேண்டும் என்பது விதியாகும்.

மக்கள் நலனுக்கு என்று பல்வகைச் சட்டங்கள் இயற்றப் பெறுகின்றன. அவற்றுக்குப் பொருள் காணும் பொழுது நெகிழ்வான முறையில் (liberal construction) அணுக வேண்டும் என்பார்கள்.

வரிவிதிக்கக் கூடிய நிதியச் சட்டங்களைப் பொறுத்து, அச்சட்ட வாசகங்கள் என்ன பொருளில் உள்ளனவோ அப் பொருளைத் தவிர வேறு பொருள் எதையும் ஊகிப்பதோ, சட்ட மன்றக் கருத்து இது என்று கொள்வதோ கூடாது என்பது விதியாகும்.

'இசைந்த வகைப் பொருளமைதி'

சாதாரணமாக ஒரு சட்டத்திற்குப் பொருள் காண்பது என்றால் அச்சட்டத்தை முழுதுமாகப் படித்து, அதன் நோக்கம், குறிக்கோள் இவற்றை ஓர்ந்து கண்டு, அச்சட்டத்தின் பொதுவான கருத்தை அறிந்து கொண்டு, அந்தப் பின்னணியில் தான் சட்டத்தின் ஒவ்வொரு பிரிவுகளின் (sections) பொருளைக் காண வேண்டும். சட்டத்தின் ஒரு பிரிவுக்கும் மற்றொரு பிரிவுக்கும் முரண்பாடு இருப்பதாகக் காணப்பட்டால், அந்த முரண் பாட்டைப் போக்கும் வகையில் பொருள் காணுதலே முறை யாகும். சட்டத்தின் பிரிவுகள் ஒன்றுக்கொன்று இசைந்து இயங்கும் வகையில் பொருளமைதி காண்பதை 'இசைந்த வகையில் பொருள் அமைதி' (hormonious construction) என்பார்கள்.

இயற்றப்படும் சட்டங்களின் பொருளமைதியை விளக்கி அவற்றைச் செல்லுறுத்தும் தனியுரிமை நீதிமன்றங்களுக்கே இருப்பதால், இதைக் குறித்த நீதிமன்றத்தின் பொறுப்பு மிகவும் முக்கியமானதாகிறது. சமுதாயம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் சீர்திருத்தம் வேண்டிநிற்கும் நம் நாட்டில் இயற்றப் படும் பல சட்டங்கள் வெற்றி பெற வேண்டுமெனில், அவற்றைச் செல்லுறுத்தும் நீதிமன்றங்கள் அச்சட்டங்களின் கொள்கைகளைக் குறைவற உணர்ந்து பொருளமைதி காண வேண்டும். விரைவிலே

பல சட்டங்களை இயற்ற வேண்டும் என்ற வேகத்தால் மாநிலச் சட்டமன்றங்களிலும், மத்திய நாடாளுமன்றத்திலும் இயற்றப் படும் சட்டங்களில் வரைவுமுறைக் குறைபாடுகள் (defects in drafting) மிகுதியாக இருக்கின்றன என்று நீதிமன்றங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இந்நிலையில், சட்டங்களை வரையும் முறையும் அவற்றுக்குப் பொருள் காணும் முறையும் மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளன நம் நாட்டில்.

தீர்ப்புமுறைச் சட்டம்

(Judge-made Law- Precedent)

[முன்தீர்ப்பு நெறிநிற்றல் — முன்தீர்ப்பு நெறி நிற்றலும், முன்தீர்ப்புத்தடையும் (Doctrine of Precedent and Res Judicata) — *தகுமுறைக் கொள்கை* (Principle of Equity) —*தீர்ப்புநெறி* (Ratio decidendi) — *புறவுரை* (Obiter dicta)*]*

முன்தீர்ப்பு நெறி நிற்றல்

பண்டைய நாள்களில், சமுதாயத்தில் நிலவிய வழக்கநெறி முறைகள் மக்களால் பேணப்பட்டு வந்தன என்றும், அவ்வழக்க நெறியை (Custom) ஒட்டியே நீதிபதிகள் தீர்ப்புகளை வழங்கினார்கள் என்றும் கண்டோம். ஆயினும், பல்வகையான வழக்குகளைத் தீர்ப்பதற்கு வழக்கநெறி மட்டுமே போதுமானதாக இருப்பதற்கில்லை. இந்நிலையில், நீதிபதிகள் தங்கள் அறிவாலும் அனுபவத்தாலும், தீர்ப்புக்கு வந்த வழக்குகளை ஆய்ந்தனர்; நீதி வழுவாத நெறிமுறைகளை வகுத்து அவ்வழக்குகளில் தீர்ப்புக் கூறினர். சட்டப் புலமையும் சான்றாண்மையும் நடுவுநிலை தவறாத நற்பண்புகளும் ஒருங்கே பெற்று உயர்ந்த நீதிபதிகள் வழங்கிய தீர்ப்புகள் நீதி நெறிக் கொள்கைகளையும் விளக்கங் களையும் கொண்டிருந்தன. இங்கிலாந்து நாட்டில் இத்தீர்ப்பு களை எல்லாம் வகைப்படுத்தித் திரட்டி வைத்துப் போற்றினர். இவ்வாறு, பல நூற்றாண்டுகளாக வளர்ந்து வந்த தீர்ப்புகளில் கூறப்பட்ட கொள்கைகளும் கோட்பாடுகளும், நெறிகளும் நேர்மைகளும் நாட்டின் சட்டத்தை நவிலும் நன்னூல்களாக விளங்கின. இந்த வகையில், சட்டமன்றங்களால் இயற்றப் படாமல் நாட்டின் வளமைச் சட்டமாக வளர்ந்து வந்த விதி முறைகளை ஆங்கிலத்தில் 'பொதுமுறைச் சட்டம்' அல்லது

'இயற்றப்படாத சட்டம்'[1] (Common Law or Unwritten Law) என்பார்கள்.

தீர்ப்புக்குவரும் வழக்குகள் பல்வகைப்படுவன. ஆயினும், அவற்றைத் தீர்த்து, தீர்ப்பு வழங்குவதற்கு உதவும் சட்டக் கொள்கைகளும் கோட்பாடுகளும் பல வழக்குகளிலும் பொது வான தன்மையுடன் இருப்பதுண்டு. இக்கொள்கைகளைத் (Principles) தேர்ந்து அந்தந்த வழக்குகளைத் தீர்ப்பதற்கு உதவும் வகையில் முன்தீர்ப்புகளில் உள்ள நெறிமுறைகள் அமைவதுண்டு. முன்னால் கூறப்பட்ட ஒரு தீர்ப்பில் உள்ள அறுதியான சட்டக் கொள்கை பின்னால் எழும் அதையொத்த வேறொரு வழக்கைத் தீர்ப்பதற்கு வழிகாட்டலாம். முன்வழக்குத் தீர்ப்பின் சட்டநெறி பின்வழக்குத் தீர்ப்புக்கு பொருத்தமாக அமையலாம். எனவே, தம்முன் உள்ள ஒரு வழக்கை விசாரித்துத் தீர்ப்பு எழுத முற்படும் நீதிபதி அதற்கு முன்னால் அதை ஒத்த வழக்கில் எவ்வாறுதீர்ப்பு எழுதப்பட்டுள்ளது; எந்த வகையில் சட்டக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது என்பதைப் பார்ப்பது இயல்பேயாகும். இவ்வாறு, பார்க்கப்படவில்லை எனில், ஒத்த கூறுகளையுடைய வழக்குகளில் வெவ்வேறு வகையான தீர்ப்புகள் எழுவதற்கு ஏதுவாகலாம். ஒரே வழக்குகளில் ஒத்த தீர்ப்புகள் இருப்பது தானே நீதிமுறையின் நீர்மையாகும்? எனவே, முன் தீர்ப்புகளில் உள்ள சட்டக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பின் தீர்ப்புகளில் பின்பற்றுவது தவிர்க்க முடியாதது என்று கருதப்பட்டது. இத்தகைய பின்பற்றுதல் இல்லையெனில், நீதி நெறியின் நீர்மை குன்றிவிடும் என்பதை உணர்ந்த நீதிபதிகள், முன்தீர்ப்பு நெறிகளை முனைந்து பின்பற்றினர். இந்த முறை, இங்கிலாந்து நாட்டின் நீதிநெறியின் சிறந்த பண்பாகப் போற்றப்பட்டது. இதனை 'முன்தீர்ப்பு நெறிக் கோட்பாடு' (The doctrine of Precedent) என்பார்கள்.

பத்தொன்பதாவது நூற்றாண்டில்தான் முன்தீர்ப்பு நெறிநிற்கும் கோட்பாடு இங்கிலாந்து நாட்டில் நீதி முறையின் நிலைத்த பண்பாக உறுதிப்பட்டது. அதற்கு முன்பெல்லாம், முன்தீர்ப்புக் கொள்கைகளை நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் எடுத்துரைப்பார்கள்; நீதிபதிகளும் அவற்றை அக்கறையுடன் படித்து அவை ஏற்றுக்கொள்ளத்தக்கனவா என்று ஆய்வார்கள். அவற்றை ஏற்றுக் கொள்வதும் கொள்ளாததும் நீதிபதிகளின்

[1] Inpractice, if not in theory, the common law of England has been created by the decisions of English judges -Salmond

விருப்பத்தைப் பொறுத்தது. இந்த நிலைதான் இன்றும் ஐரோப்பாவிலுள்ள பலநாடுகளிலும் உள்ளது. அதாவது, முன் தீர்ப்பு நெறியைப் பின்பற்றியே ஆக வேண்டும் என்ற கட்டாயம் பிரான்சு, இத்தாலி, ஜெர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகளில் இன்றும் இல்லை. ஆனால், இங்கிலாந்து நாட்டில் பத்தொன் பதாம் நூற்றாண்டின் இறுதியில் 'முன்தீர்ப்பு நெறி நிற்றல்' என்பது கட்டாயமாக்கப்பட்டு, அந்நாட்டு நீதி முறையின் நிலைத்த பண்பாக ஆகிவிட்டது.

'முன்தீர்ப்பு நெறி நிற்றல்' என்ற கோட்பாடு நல்ல முறையில் செயல்படுவதற்குத் தேவையானது தீர்ப்புகளை வகைப்படுத்தி வழங்கும் 'தீர்ப்பு இதழ்களை' (Law Reports) வெளியிடுவதாகும். இரண்டாவதாக, நீதிமன்றங்கள் அடுக்கு முறையில் அமைந்திருக்க வேண்டும். கீழமை நீதிமன்றங்களே மேலமை நீதிமன்றத்தின் முன்தீர்ப்புநெறியில் நின்று தீர்ப்புகளை வழங்குகின்றன.

இங்கிலாந்திலும் ஆங்கில நீதிமுறையைப் பின்பற்றி இயங்கும் இந்தியாவிலும் 'முன்தீர்ப்பு நெறிநிற்கும்' கொள்கை கடுமையாகச் செயலுறுகின்றது. இந்திய நாட்டு அரசமைப்பின் 141வது பிரிவு, உச்சநீதி மன்றத்தின் (Supreme Court) தீர்ப்புகள் இந்தியாவின் இதர நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்துவன என்று விதிக்கின்றது. உயர்நீதிமன்றங்களின் தீர்ப்பு அதன் கீழுள்ள மற்ற நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்துவன.

எனவே, இந்தியாவில் ஒவ்வொரு நீதிமன்றமும் அதற்கு மேலுள்ள நீதிமன்றத்தில் தீர்ப்பு நெறிகளைப் பின்பற்றுகின்றது.

உயர்நீதிமன்றத்தின் ஒரு நீதிபதி, இருவரைக் கொண்ட ஆயத்தின் (Bench) தீர்ப்புநெறிக்குக் கட்டுப்பட்டவராகின்றார்.

உயர்நீதிமன்றத்தின் இரு நீதிபதிகளைக் கொண்ட ஆயம் (Division Bench) அதற்கு மேல் எண்ணிக்கை கொண்ட நீதிபதிகள் அமரும் முழு ஆயத்தின் (Full Bench) தீர்ப்பு நெறிகளுக்குக் கட்டுப்படுகின்றது.

எல்லாநீதிமன்றங்களும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு நெறிகளுக்குக் கட்டுப்பட்டே இயங்குகின்றன.

உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் மற்றொரு நீதிபதி வழங்கிய தீர்ப்பு நெறியை ஏற்க முடியாத நிலையில் இருந்தால், அந்தப்

பிரச்சினை இருநீதிபதிகள் அடங்கிய ஆயத்திற்கு அனுப்பப்படுகிறது.

அம்மாதிரியே, உயர்நீதி மன்றத்தின் இருநீதிபதிகள் கொண்ட ஆயம் அதே போன்ற மற்றொரு ஆயம் அளித்துள்ள தீர்ப்புநெறியுடன் இசைய முடியவில்லையெனில், அப்பிரச்சினை மூன்று நீதிபதிகளைக் கொண்ட முழு ஆயத்திற்கு அனுப்பப் படுகிறது.

உச்சநீதி மன்றத்தைப் பொறுத்த வரை, அந்நீதிமன்றத்தின் தீர்ப்புநெறி அதைக் கட்டுப்படுத்துமா என்பது சிக்கலான வினாவாகும். அரசமைப்புச் சட்டத்தில் 141—ஆவது பிரிவுப்படி பார்த்தால், உச்சநீதி மன்றத்தின் தீர்ப்புநெறி அம்மன்றத்தைக் கட்டுப்படுத்தும் என்று கூறுவதற்கு ஆதாரம் ஏதுமில்லை. பொதுவாக, உச்சநீதிமன்றத் தீர்ப்புநெறியினை அதே நீதிமன்றம் ஏற்காமல் இருப்பது கூடாது என்பதே பெரும்பாலரின் கருத் தாகும். ஆனாலும், காலத்தின் வேகமான போக்கைப் பொருட்படுத்தாமல் முன்தீர்ப்புநெறிக்கு உச்ச நீதிமன்றம் கட்டுப் பட்டிருந்தால், சட்டத்தின் வளர்ச்சி தடைப்படலாம் என்ற கருத்தும் வலுப்பெற்றது. எனவே, தகுந்த, தவிர்க்க முடியாத காரணங்கள் இருந்தால் தனது தீர்ப்புநெறியை மாற்றும் திறன் உச்சநீதி மன்றத்திற்கு வேண்டும் என்ற கருத்து மேலோங்கி நின்றது. புகழ் பெற்ற 'கேசவானந்த பாரதி' வழக்கில் இந்திய உச்சநீதி மன்றம் தனது முன்தீர்ப்புநெறியினை மாற்றியது.

1966—ஆம் ஆண்டில் பிரித்தானிய நாட்டின் உச்சநீதி மன்றமான பிரபுக்கள் சபை (House of Lords) முக்கியமான ஒரு கொள்கையை அறிவித்தது. அதாவது, பிரபுக்கள் சபையின் முன்தீர்ப்பு நெறிகள் பிரபுக்கள் சபையைக் கட்டுப்படுத்துகின்றன; என்றாலும், அது முறையான சட்ட வளர்ச்சியைத் தடையுறுத் தும்படி விடுவதற்கில்லை என்றும், குறிப்பிட்ட ஒரு வழக்கில் நீதி வழங்குவதற்கு முன்தீர்ப்புநெறியை விட்டு விலக வேண்டுமென்ற நிலை ஏற்பட்டால், அவ்வாறு விலகுவதே முறையாகும் என்றும் சாற்றப்பட்டது. எனவே, பிரித்தானிய நாட்டிலும் பிரபுக்கள் சபையின் முன்தீர்ப்புநெறியை, அதே பிரபுக்கள் சபை மாற்றலாம் என்ற கொள்கை ஏற்கப்பட்டுச் செயற்படுகின்றது.

பிரித்தானியநாட்டின் பிரபுக்கள் சபையின் (House of Lords) தீர்ப்புநெறிகளும், அமெரிக்க நாட்டு உச்சநீதி மன்றத் தீர்ப்புநெறிகளும், இந்திய நாட்டு உச்சநீதி மன்றத்தைக் கட்டுப்படுத்தாவிட்டாலும், அவற்றைக் கருத்திற் கொள்ளத் தக்க

நீதி நெறிகளாக உச்சநீதிமன்றம் மதிக்கின்றது.

எனவே, தீர்ப்பு நெறிகளைக் 'கட்டுப்படுத்துவன' (authoritative) என்றும், 'கவனத்திற்குரியன' (persuasive) என்றும் இரண்டு வகைப்படுத்திக் காண்கின்றார் ஆசிரியர் சால்மண்ட்.

'முன்தீர்ப்புநெறி நிற்றல்' (Doctrine of Precedent) என்ற கொள்கையினை Stare decisis என்றும் கூறுவதுண்டு. முன்தீர்ப்பு முறையினை ஏற்று நீதிமன்றங்கள் ஒழுகும் முறையினை Stare decisis என்ற தொடர் குறிக்கின்றது.

முன்தீர்ப்பு நெறிநிற்றலும், முன்தீர்ப்புத் தடையும்

இரண்டு தரப்பினரிடையே வழக்கு ஏற்பட்டுத் தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டால், அந்தத் தீர்ப்பு அத்தரப்பினரையும் அவர்களின் வழிமுறையினரையும் கட்டுப்படுத்துவதாகும். எனவே, அந்த வழக்குத் தரப்பினரோ அவர்களது மரபுவழி வந்தவர்களோ மீண்டும் அதே வழக்கு மூலத்தை வைத்துக் கொண்டு வழக்காட இயலாது.இதைச் சட்டம் தடை செய்கிறது. இவ்வாறு, ஒருமுறை அறுதியிடப்பட்ட தீர்ப்பு இருதரப் பினரையும் கட்டுப்படுத்துவதை Res judicata என்பார்கள். இது ''முன்தீர்ப்புத் தடை'' எனப்படும்.

'முன்தீர்ப்புத் தடைக்கும்' (Res judicata) 'முன்தீர்ப்பு நெறிநிற்றல்' (Stare decisis) என்பதற்கும் உள்ள வேறுபாட்டை நாம் காண வேண்டும்.

1) 'முன்தீர்ப்புத் தடை' என்பது வழக்கின் தரப்பினர் களையும் அவர்கள் வழி வருவோரையுமே கட்டுப்படுத்துகிறது; 'முன் தீர்ப்பு நெறி நிற்றல்' என்பது எல்லோருக்கும் பொருந்துவது.

2) 'முன்தீர்ப்புத் தடை' என்பது வழக்கின் தீர்ப்பை மட்டுமே பொறுத்ததாகும்; முன்தீர்ப்பு நெறி நிற்றல் என்பது 'தீர்ப்பு நெறி'யினைப் பொறுத்தது.

3) முன்தீர்ப்புத்தடை என்பது எல்லா நீதிமன்றத் தீர்ப்புகளுக்கும் பொருந்துவது; 'முன் தீர்ப்பு நெறி நிற்றல்' என்பது உயர்நிலை நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கு மட்டுமே பொருந்துவதாகும்.

வாழ்க்கையில் பல துறைகளைப் பொறுத்தும் சட்டங்கள் இயற்றப்பட வேண்டிய இன்றியமையா நிலை இன்று எழுந்துள்ளது. ஆனால், பிரித்தானிய நாட்டில், வரலாற்றுப்

பின்னணி காரணமாக, இயற்றப்பட்ட சட்டங்கள் மிகவும் குறைவானவை. பெரும்பாலான சட்டங்கள் இயற்றப்படாத சட்டங்களாகவே (Common law) உள்ளன. அதாவது, நீதித் தீர்ப்புகளைக் கொண்ட தொகுப்புக்களாகவே அச்சட்டங்களை நாம் காணுகின்றோம். தம்முன் வந்துள்ள வழக்கில் தீர்ப்புக்கு உற்ற பொருள் என்ன என்பதைக் கண்டு, அதற்கு உரிய சட்டம் யாது என்பதையும் ஆய்ந்து, தீர்ப்புக்கு உற்ற பொருளைக் குறித்த சட்டக் கொள்கையைத் தெளிவாக விளக்கி, அந்த விளக்கத்தை ஒட்டி நீதிபதிகள் தீர்ப்பு வழங்குகின்றனர். எனவே, அந்தத் தீர்ப்பில் குறித்த சட்டப்பகுதியின் கொள்கை தெளிவாக நீதி பதியால் விளக்கப்பட்டிருக்கும். இத்தகைய சட்ட விளக்கங் களைக் கொண்ட தீர்ப்புகளின் தொகுப்பே பிரித்தானிய நாட்டின் பொது முறைச் சட்டமாக (Common law) விளங்குகிறது.

எனவே, குறிப்பிட்ட ஒரு சட்டத்தின் வளர்ச்சியைக் காண்பதென்றால், அச்சட்டத்தைக் குறித்து எழுந்த தீர்ப்பு களையும் அவற்றில் விளக்கப்பட்டுள்ள சட்டநெறிகளையும் நாம் காணவேண்டும். சட்டக்கல்வியிலும், நீதித்தீர்ப்புகளின் வழியாக எவ்வாறு சட்டநெறி வளர்ந்துள்ளது என்பதையே போதிக் கின்றனர். ஆகவே, பிரித்தானிய நாட்டில் சட்டநெறியினை விளக்கும் தீர்ப்புகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படு கின்றது. 'முன்தீர்ப்பு நெறி நிற்றல்' என்ற கொள்கை நீதிமுறையின் அடிப்படைக் கொள்கையாக ஆகிவிட்டது.

இங்கிலாந்து நாட்டில், தீர்ப்புகளை வழங்கும் நீதி பதிகள் சட்ட வல்லுநர்களாகவும் நடுவுநிலை தவறாத சால் புடையோராகவும் அரசனுக்கு எதிராக மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்குடையோராகவும் இருந்ததால், அத்தகைய சான்றோர்கள் எழுதிய தீர்ப்புநெறிகளுக்குப் பதிலாகச் சட்டங்களை இயற்றுவதற்கு மக்கள் ஒப்பவில்லை. ஏதோ சில நேர்வுகளில் குறிப்பிட்ட சில கூறுகள் குறித்து மட்டுமே சட்டங்கள் இயற்றப்பட்டன. எனவே, இயற்றப்பட்ட சட்டத்தொகுப்புகள் (Codes) இல்லாத நிலையில், தீர்ப்புகள் இன்றி, சட்டத்தைக் காண இயலாத நிலை எழுந்தது. வழக் குரைஞர்களும் தீர்ப்புகளை ஆய்ந்து அவற்றில் உறையும் சட்ட நெறிகளை விளக்குவதில் புலமையும் திறமையும் பெற்று விளங்கினர். இந்நிலையில், 'முன்தீர்ப்பு நெறிநிற்றல்' என்ற கொள்கை புனித மரபாகப் போற்றப்பட்டது, இன்றும் போற்றப்படுகிறது.

தீர்ப்புரைகளில் (judgements) காணப்படும் சட்டநெறிகள்

நீதிபதிகளால் புதிதாக ஆக்கப்படுகின்றனவா என்ற கேள்வி எப்பொழுதும் எழுவதுண்டு. 'தீர்ப்புநெறி' என்று கூறப்படுவது ஒரு தீர்ப்பை எழுதிய நீதிபதி முதன்முறையாக வகுத்துரைக்கும் சட்டநெறியா என்பது வினா. வழக்கநெறி (custom) பேணப்பட்டு வந்த நாள்களில், தீர்ப்புநெறி என்பது வழக்கநெறிக்கு மாறானது என்றோ, வழக்க நெறியினின்றும் வேறுபட்டது என்றோ கூறினால் மக்கள் தீர்ப்புநெறியை ஏற்கமாட்டார்கள். எனவே, தீர்ப்புநெறி என்பது புதிய சட்டநெறி அன்று; ஏற்கனவே வழக்கநெறியாக இருப்பதையே மக்கள் அறிந்து கொள்ளும்படி நீதிபதிகள் தங்கள் தீர்ப்புரைகளில் சாற்றுகின்றனர் என்று கூறப்பட்டது. எனவே, இருப்பதை எடுத்துச் சாற்றும் முறையில் (declaratory) ஏற்கனவே உள்ள வழக்கநெறியை எடுத்துரைக் கின்றனர் நீதிபதிகள். அவ்வாறு, சாற்றப்படுவதே தீர்ப்பு நெறியாகும் என்ற ஒரு கொள்கை நிலவியது. இந்தக் கொள்கையை, 'சாற்று முறைக் கொள்கை' (Declaratory theory) என்பார்கள். ஹேல் (Hale) என்பார் எழுதிய 'பொதுமுறைச் சட்டத்தின் வரலாறு' (History of the Common law) என்ற நூலில் இந்தச் 'சாற்றுமுறைக் கொள்கையே' வலியுறுத்தப்படுகிறது.

தகுமுறைக் கொள்கை

இங்கிலாந்து நாட்டின் சட்டவளர்ச்சி வரலாற்றிலே காணப்படும் சிறப்பு ஒன்று உண்டு. நீதி வழங்குவதில் கண்ணுங் கருத்தும் கொண்ட நீதிபதிகள் சில வேளைகளில் இக்கட்டான நிலைக்கு உள்ளாகின்றனர். அதாவது, சட்டப்படி தீர்ப்புக் கூறினால் அது நீதிக்கு உகந்ததாக இருப்பதில்லை என்ற நிலை எழுவதுண்டு. நீதிபதிகளோ சட்டப்படியே தீர்ப்ப வழங்கக் கடமைப்பட்டவர்கள்; சட்டவிதிகளோ நீதிக்கு இணையாக இல்லை. இந்த இக்கட்டான நிலையில் நீதிபதிகள் ஓர் உத்தியைக் கண்டனர். 'தகுமுறைக் கொள்கை' (Principle of Equity) என்ற ஒரு கொள்கையினைப் புதிதாகக் கையாண்டனர். சட்டவிதிகளை நெகிழ்த்திப் பொருள் கண்டு, நீதி வழங்குவதற்கு ஏற்ற முறையில் அவற்றைப் பொருந்தும் படி செய்து, நீதிபதிகள் தீர்ப்புக் கூறினார்கள்.

இதைவைத்துக்கொண்டு ஏதோ சட்ட முறைக்குப் புறம்பாகத் தகுமுறை (equity) செயல்பட்டது என்று நினைப்பது தவறு. சட்டமுறைக்குத் துணையாகவே தகுமுறையை நீதிபதிகள்

கையாண்டனர். சட்டத்தின் நோக்கம் நீதி வழங்குவதேயாகும். எனவே, நீதி வழங்குவதற்கு உதவும் தகுமுறை சட்டமுறைக்குத் துணையாகவே உள்ளது; சட்டமுறை தனது குறிக்கோளை எய்துவதற்குத் துணைபுரிகின்றது தகுமுறை. சட்டமுறையின் குறிக்கோள் நிறைவேறுவதற்குத் தகுமுறை உதவியாகின்றது.

ஒரு தீங்கிற்கு ஆளானவர் அதற்கான தீர்வழியை (remedy) நாடி நீடுமன்றம் செல்கின்றார். அந்தத் தீர்வழியானது சட்டமுறைத் தீர்வழியாகவோ (legal remedy) தகுமுறைத் தீர்வழியாகவோ (equitable remedy) இருக்கலாம். இங்கிலாந்து நாட்டில், வரலாறு காரணமாக, இத்தீர்வழிகளை வழங்கும் நீதிமன்றங்கள் தனித் தனியாக இருந்தன. சட்டமுறைத் தீர்வழி அளிக்கும் நீதிமன்றத்தை 'பொதுமுறைச் சட்டநீதிமன்றம்', (Court of Common law) தகுமுறைத் தீர்வழி அளிக்கும் நீதிமன்றத்தைச் 'சான்சரி நீதிமன்றம்' (Court of Chancery) என்றும் குறிப்பிட்டனர். நீதிமன்றங்களைப் பொறுத்து இவ்வேறுபாடு இப்பொழுது இல்லையென்றாலும், ஒரு தீர்வழி சட்டமுறையானது (legal) அல்லது தகுமுறையானது (equitable) என்ற வேறுபாடு இன்றும் உள்ளது. நெகிழ்வற்ற சட்டவிதிகளை நெகிழ்வுறச் செய்து, நீதிக்கு உகந்த முறையில் பொருள்கண்டு, தம் முன் உள்ள வழக்குகளைத் தீர்வு செய்யும் நீதிபதிகள் மக்களால் பெரிதும் மதிக்கப்பெற்றனர்.

இவ்வாறு தகுமுறையில் நீதிவழங்கும் நீதிபதிகள் புதிய சட்டவிதிகளை ஆக்குவதில்லை, நீண்ட நெடுங்காலமாக இருந்து வரும் விதிகளையே சாற்றுகின்றனர் என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? 'இங்கிலாந்து நாட்டுச் சட்டத்தின் பெரும்பகுதி நீதிபதிகளால் ஆக்கப்பெற்றது',[1] என்கிறார் ஆசிரியர் டைசி.

எனவே, நீதிபதிகள் சட்டவிதிகளைச் சாற்றுவதோடு, வழக்குகளில் நீதி வழங்குவதற்கு ஏற்ப, புதிய சட்டவிதிகளை வகுக்கின்றனர், முந்திய விதிகளைத் திருத்துகின்றனர்; சீர்படுத்துகின்றனர் என்ற உண்மை நாளடைவில் ஒப்புக் கொள்ளப்பட்டது. பொதுமுறைச் சட்டவிதிகளை வழக்குகளுக்கு ஏற்ப விரிவாக்கிப் பொருள்கண்டு, அவ்விதிகளில் இருந்து கொள்கைகளை வகுத்து, அவற்றைச் சீரமைத்துச் செப்பமுறச் செய்து முறைசெய்த நீதிபதிகளின் தீர்ப்புரைகள் (judgements) வளரும் சட்டநெறிக்கு வற்றாத ஊற்றுக்கண்கள் ஆயின. இந்த உண்மையினை ஆஸ்டின், பெந்தம் போன்ற ஆசிரியர்களும்

[1] A large part of the law of England is judge-made law - Prof. Dicey.

ஒப்புக் கொள்ளுகின்றனர்.

இந்த முறைதான் இன்றும் நிலவி வருகின்றது. இயற்றப் பட்ட சட்டங்களில் (enacted laws) எல்லா வகை வழக்குகளுக்கும் பொருந்துறும் வகையில் விதிகள் இருப்பதில்லை. சட்டம் கூறும் விதிகளை அப்படியே செயற்படுத்தினால் சிலவேளைகளில் நீதிக்கு முரணாகிவிடலாம். இவ்வாறான நிலைகளில், இயற்றப் பட்ட சட்டவிதிகளை ஏற்றவகையில் நெகிழ்வு பெறச் செய்து, நீதிவழுவாத நெறிமுறையினைப் பேணிக் காக்கின்றனர் நீதி பதிகள். எனவே, அன்றும் இன்றும், நீதிபதிகள் சட்டத்தைச் செயற்படுத்துவது மட்டுமன்றிச் சீர்படுத்துகின்றனர்,[1] என்கிறார் சால்மண்ட்.

ஆயினும்,நீதிபதிகள் புதிய சட்டங்களை இயற்றுகின்றனர்; புதிய கொள்கைகளை வகுக்கின்றனர் என்று நாம் சொல்லுவதற் கில்லை. சட்டவிதிகளுக்குப் பொருள்காணும் வகையில் புதிய கொள்கைகளை உருவாக்க நேரலாம் என்பதைத் தவிர, இயற்றப் பட்ட சட்டவிதிகளை மாற்றும் வகையில் புதிய விதிகளையும் கொள்கைகளையும் அவர்கள் புனைவதில்லை. சட்டத்தை ஒட்டிய நீதிமுறையே அவர்களால் செயலாக்கப்பெறுகின்றது.

இருப்பினும்,சட்ட நெறியின் வளர்ச்சி வரலாற்றைப் படிக்கும் நாம், காலப்போக்கில் வழங்கப்பெறும் நீதித்தீர்ப்பு களே, சட்ட வளர்ச்சியின் மைல்கற்களாக விளங்குகின்றன என்ற உண்மையினைக் காண்கிறோம். வழக்குகளைத் தீர்க்கும் வகையிலே வளரும் நீதிமுறை விதிகள் அவ்வப்போது வகுக்கப் படுவனவாய், ஒரு சீரான வளர்ச்சியற்றனவாய் உள்ளன என்பதையும் நாம் மறப்பதற்கில்லை. எனவே, சட்டநெறி என்ற ஓவியக் காட்சியிலே ஆங்காங்கு ஒளிவிடும் வண்ணச்சுடர்களாக விளங்குகின்றன தீர்ப்புமுறைகள்.

'முன்தீர்ப்பு நெறிநிற்றல்' என்ற கொள்கைப்படி, முன் தீர்ப்பு நெறிகள் பின்வரும் வழக்குகளைத் தீர்ப்பதற்கு வழி காட்டும் வகையில் உள்ளன என்றும், முன்தீர்ப்பு நெறிகளைப் பின்பற்றியே பின்வரும் வழக்குகளைத் தீர்க்கவேண்டும் என்ற கட்டாயமான மரபுநெறி உண்டு என்றும் கண்டோம்.

---

1 Courts then have the power of developing the law at the same time that they administer it - Salmond.

தீர்ப்பு நெறி

'முன்தீர்ப்பு நெறி' என்று எதைக் கூறுகிறோம்? ஒரு வழக்கைத் தீர்த்துத் தீர்ப்புரை கூறப்படுகிறது. அத்தீர்ப்புரையில் எந்தப்பகுதி 'தீாப்புநெறியாகக்' கொள்ளப்படுகிறது?

தீர்ப்புரை என்றால் அதில், அந்த வழக்கின் தரப்பினர்களின் வாதுரைகள், அவர்கள் இட்ட சான்றுகள், வழக்கறிஞர்களால் கூறப்பட்ட வாதங்கள், நீதிபதியின் தீர்வு, தீர்வுக்கான காரணங்கள், இவையனைத்தும் அடங்கியிருக்கின்றன. இவற்றை எல்லாம் கொண்டுள்ள தீர்ப்புரையில் எந்தப் பகுதி பின்வருவோரால் பின்பற்றத்தக்கதெனக் கொள்ளப்படுகின்றது?

அந்த வழக்கின் தீர்வு எந்த விதியை அல்லது கொள்கையை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்டதோ அந்த விதியை அல்லது கொள்கையையே அத்தீர்ப்பின் 'நெறி' என்று கூறுகிறோம். அவ்வழக்குத்தீர்ப்பில் கூறப்பட்ட தீர்வுக்குக் காரணமான விதியோ கொள்கையோ தீர்ப்பின் நெறி ஆகின்றது. தீர்ப்புரையில் காணப்படும் இந்தத் 'தீர்ப்பு நெறி'யினை இலத்தீனில் ratio decidendi என்பார்கள்.

தம்முன் உள்ள ஒரு வழக்கை விசாரிக்கும் நீதிபதி, இருதரப்பினரின் வாதங்களையும் கேட்டு, அவ்வழக்கில் நீதி தவறாத தீர்வு அளிப்பதற்கு உற்ற விதியோ கொள்கையோ என்ன என்பதைத் துணிந்து, அந்த விதியை அல்லது கொள்கையைச் செயற்படுத்தித் தீர்ப்புக் கூறுகின்றார். அத்தகைய விதியோ கொள்கையோதான் அத்தீர்ப்பின் நெறி ஆகின்றது. எனவே, ஒரு தீர்ப்பில் வகுக்கப்படும் விதி அத்தீர்ப்பிலேயே செயற்படுத்தப்படுகிறது. இவ்விதிகள் நீதிபதிகளால் வகுக்கப்படுகின்றன. வழக்கை விசாரித்து, தீர்வு கூறும் முயற்சியில் இவை வகுக்கப்பெறுகின்றன. வகுக்கப்பெற்ற விதிகள் உடனேயே செயற்படுத்தவும் பெறுகின்றன. இத்தனை கூறுகளையும் கொண்டதுதான் 'தீர்ப்புநெறி' ஆகின்றது.[1]

வழக்குகளைத் தீர்க்கும் அதிகாரம் படைத்த நீதிபதிகள் வேறு சந்தர்ப்பங்களில் ஆற்றும் உரைகளிலும், எழுதும் நூல்களிலும் நீதிக்கு உகந்த கொள்கைகளாகவோ விதிகளாகவோ பல கருத்துக்களைக் கூறலாம். அவையெல்லாம் தீர்ப்புநெறிகள்

[1] The ratio decidendi the rule acted on by the court in the case - Salmond.

ஆவதில்லை. நீதிபதி ஒருவர் தம் முன் தீர்வுக்குள்ள வழக்கில் எழும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கென்று வகுத்து செயலுறுத்தும் கொள்கைகளையே 'தீர்ப்பு நெறி' என்கிறோம். இலத்தீன் மொழியில் ratio decidendi என்றால் 'தீர்வுக்கான காரணம்' - the reason for the decision-என்று பொருளாகும். தீர்வுக்குக் காரணமாகக் கூறப்படும் சட்டவிதி அல்லது கொள்கையே 'தீர்ப்பு நெறி' ஆகின்றது.

'தீர்ப்புநெறி' என்பது முதலில் கூறப்படும் ஒரு வழக்கின் தீர்ப்புடன் நின்றுவிடுவதில்லை என்ற கருத்தும் கூறப்படுகிறது. அதன் பின்னர் அதையொத்த வழக்கினை விசாரிக்கும் நீதிபதியும் முந்திய வழக்கில் கூப்பட்ட கொள்கையினை ஏற்புடையது எனக் கொண்டு விளக்குகிறார். இவ்வாறு, பல ஒத்த வழக்குகளில் தொடர்ந்து அக்கொள்கை ஏற்கப்படுவதால்தான் அதை 'நெறி' என்கிறோம். ஆதலால், 'தீர்ப்பு நெறி' என்பது தொடர்ந்து வரும் ஒத்த வழக்குகளில் ஏற்கப்படும் நெறியாகிறது.

எனவே, ஒரு வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பு எந்தக் கொள்கையின் அடிப்படையில் எழுந்ததோ அந்தக் கொள்கை பின்வரும் ஒப்புமை உள்ள வழக்குகளிலும் ஏற்கப்பட்டுச் செயற்படுத்தப்படும் நிலையில்தான் 'தீர்ப்பு நெறி' எது என்பது தெளிவாகிறது, என்கிறார் ஆசிரியர் டயஸ் (R W.M Dias).

இதை வேறு சில ஆசிரியர்கள் ஏற்பதில்லை. பின் வழக்குகளைப் பொறுத்து எழுவதே 'தீர்ப்பு நெறி' என்றால், பின் வழக்குகளில் குறிக்கப்படாத முன்தீர்ப்புகளில் 'தீர்ப்பு நெறி' என்று ஏதும் இல்லை என்று கூற வேண்டிய நிலை ஏற்படுகிறது.

ஒரு வழக்கை ஐந்து நீதிபதிகள் விசாரிக்கின்றனர். வழக்கைப் பொறுத்த முடிவு ஒன்றாகவே உள்ளது. அதாவது ஐந்து நீதி பதிகளும் ஒரே முடிவுக்கு வந்துள்ளனர். ஆனால், நீதிபதிகள் ஒவ்வொருவரும் அவரவர் வந்த முடிவுக்குக் கூறும் காரணங்கள் வெவ்வேறானவை. அதுமட்டுமல்ல, ஒவ்வொருவரும் பிற நால்வர் கூறும் காரணங்களை மறுக்கின்றனர் என்றும் வைத்துக் கொள்வோம். இப்பொழுது, அத்தீர்ப்புகளில் உள்ள 'தீர்ப்பு நெறி' என்று எதைக் கொள்ளுவது? இந்நிலையில் எதையுமே தீர்ப்புநெறி என்று கொள்ளுவதற்கில்லை, என்கிறார் ஆசிரியர் டயஸ்.

எனவே, ஐந்து நீதிபதிகள் கொண்ட ஆயத்தில் குறைந்தது மூன்று பேர்களோ, மூன்று நீதிபதிகள் கொண்ட ஆயத்தில் குறைந்தது இரண்டு பேர்களோ ஒரே முடிவுக்கு வருவதுடன் ஒருமித்த காரணங்களுக்கு வந்திருக்க வேண்டும். அப்பொழுது

தான் அவர்களின் தீர்ப்புரைகளில் இருந்து நாம் 'தீர்ப்பு நெறி' யைக் காண முடியும்.

ஐந்துநீதிபதிகள் கொண்ட ஆயத்தில், மூன்று நீதிபதிகள் வெவ்வேறு காரணங்களுக்காக ஒரு முடிவுக்கு வருகின்றனர்; இரண்டு நீதிபதிகள் ஒரேவித காரணங்களுக்காக வேறொரு முடிவுக்கு வருகின்றனர். இந்நிலையிலும் 'தீர்ப்பு நெறி' என்று எதையும் ஏற்பதற்கில்லை என்கிறார் ஆசிரியர் டயஸ்.

ஒரு வழக்கில் ஏற்பட்ட தீர்ப்புநெறி பல நாள்களாக ஒப்புமையுள்ள வழக்குகளில் ஏற்கப்பட்டு வந்தால் அத்தீர்ப்பு நெறியின் மதிப்பு உயர்கின்றது. பொதுவாக, ஆயத்தில் இருந்த நீதியதிகளின் எண்ணிக்கை, அவர்களின் கருத்தொற்றுமை, அவர்களுக்குற்ற புகழ், வழக்கின் கூறுகளனைத்தையும், சட்டக் கூறுகளனைத்தையும் அலசி ஆய்ந்த வாதங்கள், நீதிபதிகள் உன்னிப்பாக ஓர்ந்து ஓர்ந்து கண்ட முடிவுகள், கண்ட முடிவு களுக்கான காரணங்கள் இவையனைத்துமே ஒரு 'தீர்ப்பு நெறி' யின் சிறப்பினை ஓங்கச் செய்கின்றன.

பின்பற்றுதல் , பொருந்துறச் செய்தல்.

முன்தீர்ப்பில் உள்ள பொருண்மைகளைப் (facts) போன்றே பின் வழக்கிலும் பொருண்மைகள் இருந்தால் முன் தீர்ப்பின் முடிவைப் பின் வழக்கிலும் ஏற்றுக்கொள்வார்கள். இவ்வாறு, முன்தீர்ப்பு முடிவை ஏற்பதை, 'முன்தீர்ப்பைப் பின்பற்றுதல்' (followed) என்கிறோம்.

முன் தீர்ப்பின் தீர்ப்பு நெறியினைப் பின் வழக்குத் தீர்ப்பில் ஏற்றுப் பின் வழக்கில் உள்ள பொருண்மைகளுக்கு பொருந்துமாறு செய்வதை'பொருந்துறச் செய்தல்'(applying) என்கிறோம்.

புறவுரை (Obiter dicta)

ஒரு தீர்ப்புரையில், தீர்ப்புக்கு மிகவும் தேவையான விவரங்களைத் தவிர வேறு விவரங்களையும் நீதிபதி கூறி யிருக்கலாம். தீர்ப்புரையில் தாம் மேற்கொள்ளும் வாதத்தை விளக்கும் வகையில் சில உதாரணங்களைக் கூறலாம்.

வழக்கில் தீர்வுக்கு உற்றதான பொருண்மைகள் பல இருந்தாலும் ஒரு முக்கியமான பொருண்மை குறித்த தீர்வே

வழக்கில் தீர்ப்புக் கூறுவதற்குப் போதுமானதாக இருக்கும். இந்நிலையிலும், நீதிபதி மற்ற பொருண்மைகளைக் குறித்தும் தம் தீர்வுகளை வழங்கி இருக்கலாம்.

இவ்வாறான விவரங்கள் எல்லாம் தீர்ப்புரையில் இருப்பதுண்டு. இவற்றுக்கும் தீர்ப்பு நெறிக்கும் சம்பந்தம் இருப்பதில்லை. தீர்ப்புரையில் உள்ள இத்தகு விவரங்களைப் 'புறவுரை' (Obiter dicta) என்பார்கள். பின் வழக்குகளில் தீர்ப்புக் கூறுவதற்கு இந்தப் 'புறவுரை' பயன்படுவதில்லை. பின்வரும் வழக்குகளில் இது பின்பற்றத்தக்கதும் இல்லை.

வழக்குமுறைச் சட்டம்
(Customary Law)

['வழக்கநெறி' என்றால் என்ன? — 'வழக்கநெறி' சட்டத்தின் மூலம் ஆகிறது — வழக்கநெறியில் குறைபாடுகள் — எத்தகைய வழக்க நெறிகளை நீதி மன்றங்கள் ஏற்றுக் கொள்ளுகின்றன? — இங்கிலாந்தில் இன்றைய நிலை — வழக்கநெறியும் நீளுடைமையும் — நாட்டிடைச் சட்டத்திலும், அரசியலமைப்பு முறையிலும் வழக்க நெறிகள்.]

சட்டத்தின் மூலங்களில் வழக்கநெறியும் ஒன்று எனக் கண்டோம். சட்டவிதிகளாகக் கொள்ளப்பட்ட வழக்கநெறிகளை, 'வழக்க நெறிச் சட்டம்' (Customary Law) என்பார்கள். இதுபற்றி இங்கு விரிவாகக் காணுவோம்.

வழக்கநெறி என்றால் என்ன?

பழக்கம் வழக்கம் ஆகிறது. பலர் பல நாள் நடந்து சென்ற தடம் பாதை ஆவது போல், பலநாள் செய்யப்பட்ட செயல் வழக்கம் ஆகிறது. வழக்கம் வகுக்கும் பாதையில் வாழ்வு செல்கிறது.

சமுதாயத்தின் நேர்மையுணர்வு, சூழ்நிலைத் தேவைகள், சமயக் கோட்பாடுகள் போன்றவைக்கு ஏற்ப வாழ்க்கையின் பல கூறுகளில் செயற்பாடுகள் நாளடைவில் ஒழுங்குறுத்தப் படுகின்றன. இவ்வாறு ஒழுங்குறுத்தப்படும் செயல்கள் வழக்கநெறியாகப் (custom) பின்பற்றப் படுகின்றன. காலம் செல்லச் செல்ல வழக்கநெறிகளை மக்கள் புனித நெறிகளாகப் போற்றுகின்றனர்.

தொடர்ந்து மக்களால் செய்யப்பட்ட செயல்கள் எல்லாம் வழக்கநெறி ஆவதில்லை. நேர்மையானவை, பயனுள்ளவை என்று கருதி எச்செயல்களை உறுதியுடன் மக்கள் கடைப்பிடித்து வந்தார்களோ அச்செயல்களே வழக்க நெறி ஆகின்றன. (VIA TRITA VIA TUTA- 'பலர் நடந்த பாதை பாதுகாப்பான பாதை' என்பது இலத்தீன் பழமொழி).

மக்களின் உணர்வோட்டமும் உள்ளப் போக்கும் அவர்களிடை நிலவும் வழக்கநெறியிலே வெளிப்படுகின்றன. வழக்கநெறியிலிருந்து வழுவாமையே ஒழுக்க நெறியாகக் கருதப்படுகிறது.

அரசுமுறை தோன்றிச் சட்டங்கள் இயற்றப்படுவதற்கு முன், சமுதாய மக்களின் வாழ்க்கையை ஒழுங்குறச் செய்தது வழக்கநெறியே ஆகும். பழங்காலத்தில் வழக்கநெறியை அடிப்படையாகக் கொண்டே நீதி வழங்கப்பட்டது. வழக்க நெறிக்கு மாறாக நடந்தவர்கள் தண்டிக்கப் பட்டனர். 'தண்டமாவது அவ்வொழுக்க நெறியினும் வழக்கு நெறியினும் வழீஇனாரை அந்நெறி நிறுத்தற்பொருட்டு ஒப்ப நாடி அதற்குத் தக ஒறுத்தல்', என்று பரிமேலழகர் திருக்குறளில் உரைப் பாயிரத்தில் கூறுகின்றார். இதிலிருந்து, முற்காலத்தில் வழக்க நெறியினின்றும் வழுகியவர்கள் தண்டிக்கப்பட்டனர் என்பது தெளிவாகும்.

வழக்கநெறி சட்டத்தின் மூலமாகிறது.

நியாயமானவையாகவும் பயனுள்ளவையாகவும் சமுதாயத்தால் ஏற்கப்படும் கொள்கைகளே வழக்கநெறியாக வளர்ந்து நிலை பெறுகின்றன. சட்டத்தை அரசு இயற்றுவது போல், வழக்கநெறியைச் சமூகம் ஏற்றுப் பேணுகிறது. அரசு வகுக்கும் கொள்கைகள் சட்ட நெறி; சமூகம் பேணும் கொள்கைகள் வழக்கநெறி.[1]

ஆதிகாலச் சட்டங்கள் வழக்கநெறியை ஒட்டியே இயற்றப்பட்டிருக்க வேண்டும். சட்டங்களில் உள்ள கொள்கைகள் பல வழக்கநெறிகளின் அடிப்படையில் அமைந்தவை. இவ்வாறு, வழக்கநெறி, சட்ட விதிகள் பலவற்றின் தோற்றுவாயாக அமைந்திருந்தது வழக்கநெறிக் கொள்கைகளுக்கு உருக்கொடுக்கும்

1 Custom is to the society what law is to the state - Salmond.

வகையில் உதித்தனவே அக்காலத்திய சட்டங்கள். சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழக்கநெறிக் கொள்கை களைச் சட்டங்களாக உருவாக்குவதுதான் எளிதாகவும் இயல்பாகவும் அன்று இருந்தது. வழக்கநெறியை ஒட்டி எழுந்த சட்டங்களை மக்கள் மதித்தனர். ஆனால், இது சட்டமுறை வளராத காலத்தில் இருந்த நிலையாகும்.

நம் இந்திய நாட்டிலும் அண்மைக்காலம் வரை 'இந்துச் சட்டம்' என்பது தொன்று தொட்டு வந்த வழக்க நெறியினைக் கொண்டதாகவே இருந்தது. இதனால், மராட்டியப் பகுதியில் நிலவிய இந்துச் சட்டம் வங்காளப் பகுதியில் நிலவிய சட்டத்திலிருந்து சில கூறுகளில் வேறுபட்டிருந்தது. கேரளப் பகுதியில் நிலவிய வழக்கநெறிகள் பல பிற பகுதிகளில் இல்லாததால் கேரளத்தில் வாழ்ந்த இந்துக்களின் இறங்குரிமைச் சட்டம் (Law of Inheritance) தனித்தன்மை கொண்டதாக இருந்தது. சாதிப் பிரிவுகளின் அடிப்படையில் எழுந்த திருமண விலக்குகள் போன்ற பல வழக்கங்கள் நீதிமன்றங்களால் ஏற்கப்பட்டுச் சட்ட விதிகளாகச் செல்லுறுத்தப்பட்டன. **1956** ஆம் ஆண்டில் தான் இந்துச் சட்டம் என்பது இயற்றப்பட்ட சட்டங்களாக (statutes) உருவாக்கப்பட்டது.

இவ்வாறு, முற்காலச் சமுதாயங்களில் வழக்கநெறிகளே வாழ்க்கை முறைகளை வகுத்து அமைத்தன.

வழக்கநெறியில் குறைபாடுகள்:

காலப்போக்கில் மக்களிடையே கல்வி பரவியது; அறிவு வளர்ந்தது. இருண்ட காலத்தில் எழுந்த வழக்கநெறிகளில் உள்ள சில இழுக்கு முறைகளை மக்கள் காணத் தலைப்பட்டனர். ஆனால், அவர்களால் இழுக்கு முறைகளில் இருந்து தப்ப முடிய வில்லை. வழக்கநெறியைப் புனிதமாகக் கொள்ளும் மக்களால் அதனை மீற இயலவில்லை. இந்நிலையில், சமுதாய அமைப்பான அரசின் (State) வலிமை வளர்ந்து கொண்டு வந்தது. பல சட்டங்களை அரசு இயற்றியது. அரசின் அங்கமான நீதிமன்றங்கள் இயற்றப்பட்ட சட்டங்களை ஏற்றுக் கொண்டதைப் போல் வழக்கநெறிகளையும் ஏற்று நீதி வழங்கின.

அரசின் ஆதிக்கம் வளர வளர, சமுதாயத் தேவைகளுக்கு ஏற்ப இயற்றப்பட்ட சட்டங்களில் பல, வழக்கநெறிகளுக்கு மாறுபட்டிருந்தன. காலத்திற்குப் பொருந்தாத வழக்கநெறிகளை ஒழிப்பதற்கும் இயற்றப்பட்ட சட்டங்கள் பயன்பட்டன. இவ்வாறு, ஒழிக்கப்பட்ட தீய வழக்கநெறிகளில் முக்கிய மானவையாக, இந்தியாவில் நிலவிய 'சதி' என்ற—இறந்த கணவனின் உடலோடு விதவையையும் சேர்த்து எரித்தல்—கொடிய வழக்கத்தையும், மேலை நாடுகளில் நிலவிய அடிமைமுறை வழக்கத்தையும் கூறலாம்.

'வளர்ச்சியடைந்த அரசு வலிமை பெற்றவுடன் தன்னம்பிக்கையோடு செயற்படுகிறது. அந்நிலையில், சட்டத்தை வழக்காறுகளுக்கு இணங்கச் செய்வதைவிட்டு, வழக்காறுகளைச் சட்டத்திற்கு இணங்குமாறு செய்கின்றது'[1] என்கிறார் சால்மண்ட்.

இவ்வாறு, தீய வழக்கங்கள் சில சட்டங்களால் ஒழிக்கப்பட்டாலும், பிற நல்ல வழக்கநெறிகள் பேணப்பட்டு வந்தன. அவற்றை நீதிமன்றங்களும் ஏற்றுச் செயற்படுத்தும் முறையில் நீதி வழங்கின. இவ்வகையில், வழக்க நெறிகள் சட்டத்தின் மூலமாக (Sources of law) இன்றும் அமைகின்றன.

எத்தகைய வழக்கநெறிகளை நீதிமன்றங்கள் ஏற்கின்றன?

இருப்பினும், நிலவும் வழக்கநெறிகள் அனைத்தையுமே மக்களைக் கட்டுப்படுத்தும் விதிகளாக நீதிமன்றம் ஏற்பதில்லை. பல வகைகளில் மாறியுள்ள சமுதாய வாழ்வில் பழங்கால வழக்கநெறிகளில் சில பொருந்துவதில்லை. பகுத்தறிவுக்கு மாறுபட்ட பல வழக்கங்கள் இன்றும் சில பகுதி மக்களால் பின்பற்றப்படுகின்றன. இயற்றப்பட்ட சட்டங்களுக்கு மாறாகக் கூடச் சில வழக்கங்கள் உள்ளன. எனவே, நிலவும் வழக்க நெறிகளை ஏற்றுச் சட்டத்தின் மூலமாகக் கொள்ளுவதற்குச் சில நெறிமுறைகளை நீதிமன்றங்கள் கடைப்பிடிக்கின்றன. அவற்றுள் சில வருமாறு:

[1] When the state has grown to its full strength and stature, it requires more self-confidence, and seeks to conform national usage to the law, rather than the law to national usage - Salmond.

1) அறிவுக்கு உகந்ததாய் இருத்தல்:

மக்களின் பகுத்தறிவிற்கும் பொது நலனுக்கும் முரண் பட்டனவாக உள்ள வழக்கங்களை நீதிமன்றங்கள் ஏற்பதில்லை மனிதர்கள் வளர்வது போல் சமுதாயமும் வளர்கின்றது. ஒரு காலத்தில் சமுதாய மக்கள் உவந்த வழக்கம் பிற்காலத்தில் மக்களால் வெறுக்கப்படலாம். விலங்குகளைப் பலியிட்டு வழிபடும் வழக்கம் ஒரு காலத்தில் இருந்தது. இன்றைய மக்கள் அத்தகைய வழிபாட்டு முறையை வெறுக்கின்றனர். ஒருகாலத்தில் விதவைகள் மறுமணம் செய்வது தகாத செயல் எனக் கருதப் பட்டது. இன்று அவ்வாறு கருதப்படுவதில்லை. இவ்வாறு, எத்தனையோ வழக்கங்கள் அன்று ஏற்கப்பட்டிருந்தன. அவை இன்றையச் சமுதாயத்தினரின் பகுத்தறிவுப் பாங்கிற்கும் அறவுணர்விற்கும் பொருந்துவதில்லை. எனவே, அத்தகைய வழக்கநெறிகளை நீதிமன்றமும் சட்டவிதிகளாகக் கொள்வ தில்லை. பகுத்தறிவிற்கும் அறவுணர்விற்கும் ஏற்ற வழக்க நெறிகளையே நீதிமன்றங்கள் ஏற்றுக்கொள்கின்றன.

2) நேரிய நெறி என்று கொள்ளப்பட்டிருத்தல்:

வல்லந்தமாக மக்கள்மீது திணிக்கப்பட்ட செயலாறுகள் வழக்கநெறி ஆவதில்லை. மக்களே ஒரு வழக்கத்தை நேர்மையானது எனக் கருதி அதன்படி ஒழுகியிருத்தல் வேண்டும். அந்த வழக்கம் நேரியது என்ற உறுதிப்பாட்டுடன் மக்கள் அதைக் கடைப்பிடித்திருக்க வேண்டும். எனவே, ஒரு வழக்கத்தை நீதிமன்றம் ஏற்பதற்கு முன், சமுதாய மக்கள் அதை நேரியது என்ற உறுதிப்பாட்டுடன் கடைப்பிடித்தனரா என்பதையும் அது ஆய்கின்றது.

3) இயற்றப்பட்ட சட்டங்களுடன் முரண்பாடின்மை:—

எந்த வழக்கநெறியும் சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களுக்கு முரண்பட்டிருத்தல் கூடாது. இயற்றப்பட்ட சட்டங்களுக்கு ஏற்பவே நீதிமன்றங்கள் இயங்குகின்றன. அச் சட்டங்களுக்கு மாறாக உள்ள வழக்காறுகளை நீதிமன்றம் ஏற்பதில்லை.[1]

[1] No custom or prescription can take away the force of an Act of parliament - Lord Coke

வழக்கநெறிகளை மாற்றுவதற்கென்றே சில ச்சட்டங்கள் இயற்றப் பெறுகின்றன. பெண்களுக்குச்சொத்துரிமை கிடையாது என்று வழக்கநெறி இருந்த காலம் உண்டு. அதை மாற்ற வேண்டுமென்றே பெண்களுக்கு இறங்குமுறைச் சொத்துரிமை இன்று சட்டத்தின்மூலம் அளிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு, சட்டம் இயற்றப்பட்டபின், முன் இருந்த வழக்கநெறி செல்லுறுவதில்லை. இந்த முறையில், இயற்றப்பட்ட சட்டங் களுக்குப் பொருந்தாத எல்லாவழக்க நெறிகளும் மதிப்பற்றுப் போகின்றன.

4) நீண்ட நெடுங்காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டிருத்தல்:

ஒருசில ஆண்டுகள் மட்டுமே பழக்கத்திலுள்ள ஒன்றை வழக்கநெறியாக நீதிமன்றங்கள் ஏற்பதில்லை. நினைவிற்கு எட்டாத காலத்திலிருந்து தொடர்ந்து அது பின்பற்றப் பட்டிருத்தல் வேண்டும். 'இன்ன காலத்திற்கு முன் இந்த வழக்கம் இருந்ததில்லை', என்று எவரும் கூறமுடியாதபடி தொன்று தொட்டுக் கடைப்பிடிக்கப்படும் வழக்கமாக அது இருக்க வேண்டும்.

இங்கிலாந்து நாட்டில் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தின் விளைவாக, முதலாவது ரிச்சர்டு என்ற மன்னன் ஆட்சி தொடங்கிய ஆண்டான கி.பி.1189-ஆம் ஆண்டிலிருந்து ஒரு வழக்கம் பின்பற்றப்பட்டு வந்தால், அது நினைவிற்கு எட்டாத காலத்திலிருந்து வழக்காறாக இருந்தது எனக் கொள்ளுகின்றனர்.

5) தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டிருத்தல்:—

வழக்கநெறி என்பது தொடர்ந்து மக்களால் கடைப் பிடிக்கப்பட்டிருத்தல் வேண்டும். இடையில் சில காலம் ஒரு வழக்கம் பின்பற்றப்படவில்லையெனில், அதன் தொடர்ச்சி அறுந்து போகின்றது. அவ்வாறு தொடர்ச்சி அறுந்து போன வழக்கங்களை நீதிமன்றங்கள் ஏற்பதில்லை.

6) எவரும் அறிந்ததாய், தெளிவுடையதாய் இருத்தல்:

ஒரு செயலை வழக்கநெறி என்று கொள்ளுவதாயிருந்தால்

அது சமுதாயத்தில் உள்ள பலருக்கும் தெரிந்திருத்தல் வேண்டும். மேலும், இதுதான் வழக்கம் என்று தெளிவாகத் தெரியும் வகையில் அது எந்தவித ஐயப்பாட்டிற்கும் இடமின்றி இருத்தல் வேண்டும். மறைபொருளாகப் பின்பற்றப்படுவது எதுவும் வழக்க நெறி ஆவதில்லை.

7) உரிமையை நிலைநாட்டுவதாக இருத்தல்:

வழக்கநெறி என்றால் அதனால் ஒருவனுக்கு உரிமை எழ வேண்டும். எவருடைய நலனுக்காகவும் இல்லாத ஒரு வழக்கத்தைச் சமுதாய மக்கள் ஆய்ந்து ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று சொல்வதற்கில்லை. மக்களிடை உரிமைகளையும் கடமைகளையும் உறுதிசெய்யும் வகையில் சமூகம் ஒரு வழக்கத்தைக் கடைப் பிடித்திருந்தால்தான் அந்த வழக்கத்திற்கு மதிப்பு உண்டு. அவ்வாறு இல்லாத வழக்கத்தை நீதி மன்றங்கள் ஏற்பதில்லை.

குறிப்பிட்ட சில வாணிபங்களில் கடைப்பிடிக்கப்படும் வழக்கங்கள் உண்டு. அவற்றை 'வழக்காறுகள்' (Usages) என்று பாகுபடுத்திக் காண்கின்றார் பேராசிரியர் டயஸ் (Dias) என்பார்.

இந்த 'வாணிப வழக்காறுகளை' (trade usages) நீதி மன்றங்கள் ஏற்பது என்றாலும் மேலே கண்ட கட்டுவரைகளுக்கு உட்பட்டே ஏற்கின்றன. மேலும், அந்த வழக்காறுகள் தரப் பினர்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு மாறாக இருந்தால், அவற்றை நீதிமன்றம் ஏற்பதில்லை.

இவ்வாறாக, உரிமைபற்றிய ஒரு வழக்கநெறியினை நீதி மன்றங்கள் ஏற்றுச் செயலுறுத்த வேண்டுமெனில், அது தொன்மையானதாய், தொடர்ச்சியுடையதாய், அறிவுக்கு உகந்ததாய், சட்ட முரண் இல்லாததாய், தெளிவுடையதாய் எவரும் அறிந்ததாய், நேரியது என மக்கள் கொள்ளுவதாய் இருத்தல் வேண்டும்.

இத்தனைக் கட்டுவரைகள் இல்லையெனில், சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு பிரிவினரும் ஒவ்வொரு வழக்கநெறியினைப் பேணுவதாகக் கூறலாம்; அவற்றை ஏற்பதெனில், இயற்றப்பட்ட சட்டங்களின் சீர்மையும் நாடளாவுந்தன்மையும் மறைந்து விடும். எனவே, மக்களிடையே நீண்ட நெடுங்காலமாக நிலவி நின்று, மக்களால் நேரியனவென்று கொள்ளப்பட்ட வழக்கநெறிகளை மட்டுமே நீதிமன்றங்கள் சட்டவிதிகளாகக் கொண்டு நீதி வழங்குகின்றன.

இந்த வகையில், வழக்கநெறி சட்டத்திற்கு மூலமாக ஓரளவு அமைகின்றது.

இவ்வாறு, நீதிமன்றங்களால் ஏற்கப் பெறும் வழக்க நெறிகளை 'வழக்கநெறிச் சட்டங்கள்' (Customary Laws) என்பார்கள்.

ஆனால், இப்பொழுது வழக்கநெறிகள் சட்டநெறிகளாகக் கொள்ளப்படுவது மிகவும் குறைந்துவிட்டது. காரணம், வழக்கநெறிகள் பலவற்றை மாற்றும் வகையில் சட்ட நெறிகள் வகுக்கப்பட்டுவிட்டன. இந்திய நாட்டைப் பொறுத்த மட்டில், சட்ட நெறிகள் ஏதும் பொருந்தாத நிலைகளில் தான் வழக்கநெறி கணக்கிலெடுக்கப்படுகிறது.

வழக்க நெறியும் (Custom) நீளுடைமையும் (Prescription)

பின்னர் வரும் 'சொத்து' என்ற தலைப்பில் 'நீளுடைமை' (Prescription) என்பது பற்றிக் காண இருக்கிறோம்.

'நீளுடைமை' என்றால் நீண்ட காலமாக ஒரு சொத்தைத் தம்முடையதாக அனுபவிப்பவர் அச்சொத்தின்மீது உரிமை பெறுகின்றார் என்பதாகும். சொத்துரிமை பெறுவதற்கு 'நீளுடைமை' என்பது ஒரு வழியாகிறது.

வரலாற்றின்படி கண்டால், நாம் மேலே கண்ட வழக்கநெறியின் ஒரு வளர்ச்சியே 'நீளுடைமை' என்ற கொள்கையாகும். எவ்வாறு, நீண்டகாலமாகப்பேணப்பட்டு வந்த வழக்க நெறி சட்டவிதியாகக் கொள்ளப்படுகின்றதோ, அவ்வாறே ஒரு சொத்தைத் தம்முடையதெனக் குறிப்பிட்ட காலத்திற்கு மேல் அனுபவித்து வந்தவர் அச்சொத்தின் மீதான சொத்துரிமை யினைப் பெறுகின்றார். நீண்டகால வழக்கத்தை மதிக்கும் சட்டம், நீண்ட கால உடைமையினையும் மதிக்கின்றது.

வழக்கநெறி தொன்றுதொட்டு வந்திருக்க வேண்டும், நீளுடைமையும் நீண்டகாலம் இருந்திருக்க வேண்டும். நீளுடைமையைப் பொறுத்த வரை அந்தக் கால அளவு எவ்வளவு என்பதைச் சட்டத்தின் மூலம் வரையறை செய்துள்ளனர்.

வழக்கநெறி குறிப்பிட்ட வட்டாரத்தில் அல்லது எல்லைக்குள் நிலவும் வழக்கமாகும். நீளுடைடை என்பது

குறிப்பிட்ட நபர், அவர் மூதாதையர் - இவர்கள் அனுபவித்த உடைமையாகும். தனிநபரின் வழக்கநெறியால் விளையும் உரிமையே 'நீளுடைமை' என்பது.

வழக்கநெறி சட்டவிதியாகக் கொள்ளப்படுவதற்கான கட்டுவரைகள் நீளுடைமைக்கும் பொருந்துகின்றன.

வழக்கநெறியைப் போன்றே நீளுடைமையும் நேரியதாய், எவருமறிந்ததாய், தெளிவுடையதாய், சட்டமுரண்பாடு அற்ற தாய் இருத்தல் வேண்டும்.

வழக்க நெறியின்வழித் தனிப்பட்டோர்க்குப்புது உரிமை கள் சட்டப்படி எழுகின்றன என்பதற்கு 'நீளுடைமை' என்பது ஓர் எடுத்துக்காட்டாக உள்ளது.

இங்கிலாந்தில் இன்றைய நிலை

பிரித்தானிய நாட்டைப் பொறுத்தவரை, அந்நாட்டின் ஆதிகால வழக்கநெறிகளுள் தக்கனவெல்லாம் நீதிமன்றங்களால் ஏற்கப்பட்டுத் தீர்ப்பு நெறிகளாக (case law) மாறிவிட்டன. 'பொதுமுறைச் சட்டம் எல்லாம் பொதுவழக்க நெறி' என்று கூறுவது பழைய கோட்பாடாகும். மேல்நிலை நீதிமன்றங்களில் தீர்ப்புகள் கூறும் தீர்ப்புநெறியே இன்றைய பொதுமுறைச் சட்டமாக (Common Law) உள்ளது.

நாட்டிடைச் சட்டத்திலும், அரசியலமைப்பு முறையிலும் வழக்க நெறிகள்:

டென்னிஸ் லாய்டு (Dennis Lloyd) என்ற சட்டஇயலறிஞர் வழக்கநெறிகளைப் பற்றி ஆயும் வகையில் கூறுகின்றார்:

சட்டம் என்பது இயற்றப்படுவது; வழக்கநெறி இயற்றப்படாது தொன்றுதொட்ட வழக்கத்தால் எழுவது. சட்டத்தைச் செல்லுறுத்துவதற்கென நீதிமன்றங்கள் உள்ளன; பழஞ் சமுதாயங்களில் வழக்க நெறிகளைச் செயலுறுத்தும் ஆள்வைகள் (authorities) ஏதும் இல்லை.

சட்டத்திற்கும் வழக்கநெறிக்கும் உள்ள இந்த வேறு பாட்டினைக் கருத்திற்கொண்டு சிந்தித்தால், நாட்டிடைச் சட்டமும் (International law) ஒரு வகையில் வழக்கநெறிகள் தாம் என்பது தெளிவாகும். சுதந்திரமான இரு நாடுகளிடையே

உள்ள உறவுகள்பற்றி வரையறுத்துக் கூறும் சட்டங்கள் இல்லை: மரபுகளே உள்ளன. வழக்கநெறிகளில் எழுந்தவையே நாடுகளிடையுள்ள மரபுமுறை உறவுகள்.

இரு நாடுகளிடை எழும் ஒப்பந்தங்களை விளக்குவதற்கென்றோ செல்லுறுவதற்கென்றோ ஆள்வை எதுவும் இல்லை. இவ்வகையில் நாட்டிடைச் சட்டங்களும் வழக்காறுகள்தாம் என்கிறார். சாதாரண வழக்கநெறி மக்களைக் கட்டுப்படுத்தினால் நாட்டிடைச் சட்ட வழக்கநெறி நாடுகளைக் கட்டுப்படுத்துகிறது.

அடுத்து, இங்கிலாந்து நாட்டு அரசியல் அமைப்பில் வழக்கநெறி என்பது எவ்வளவு ஆற்றல்மிக்கதாய் உள்ளது என்பதைக் காட்டுகின்றார்.

எழுதப்படாதது இங்கிலாந்து நாட்டின் அரசியலமைப்பு. ஆயினும், அது எவ்வாறு இயங்குகிறது? வழக்கநெறியின்படியே அது இயங்குகிறது. பார்லிமெண்ட் சபைகளில் நிறைவேற்றப் பட்ட சட்டவரைவுகளில் மன்னர் கையெழுத்து இடவேண்டும் என்றோ, பார்லிமெண்ட்டின் கீழவையில் அரசு தோற்று விட்டால் பிரதமமந்திரி பதவி விலகவேண்டும் என்றோ விதிக்கும் சட்டம் ஏதும் இல்லை. வழக்க நெறியாக உள்ள மரபுகளே அவை. ஆயினும் அவை மீறப்படுவதில்லை; இதுவரை மீறப்பட்டதில்லை. இந்த வழக்கநெறிகளுக்குச் சட்டப்படியான ஆற்றல் எதுவும் இல்லையாயினும், அரசியல்முறையாகவும் ஒழுக்கமுறையாகவும் அவற்றுக்கு உள்ள ஆற்றல் அளவிட முடியாததாகும்.

இந்த அரசியலமைப்பு முறையில் எழும் வழக்காறுகளை ஆட்சியாளரும், பொதுமக்களும், சட்டத்துறையினரும், நீதிபதிகளும் ஒருங்கே ஏற்றுத் தலைமுறை தலைமுறையாகப் போற்றி வருகின்றனர்.

இவ்வாறு, வழக்கநெறியில் உதித்த மரபுகளே நாடுகளிடை எழும் உறவுகளை உருவாக்குகின்றன. எழுதப்படாத அரசியலமைப்பினை இயக்குகின்றன, என்கிறார் டென்னிஸ்லாய்டு.

உலக நாடுகளில் உறவுமுறை மரபுகளும் (International conventions), எழுதப்படாத அரசியலமைப்பைக் கொண்ட நாடுகளின் அரசியலமைப்புமுறை மரபுகளும் (Constitutional conventions) வழக்க நெறிகளின் பாற்பட்டவை என்கிறார் அவர்.

சட்ட நூல்கள்

(Juristic Writings)

[நூலாசிரியர்களின் சிறப்பு — நீதிமன்றங்கள் அளிக்கும் மதிப்பு.]

சட்டத் தொகுப்புகள் இயற்றப்பட்ட சட்டங்களைத் தொகுத்துத் தருகின்றன. ஆனால், குறிப்பிட்ட ஒரு பொருளைக் குறித்த இயற்றப்பட்ட சட்டம் என்ன, தீர்ப்புநெறிகள் எவ்வாறு வளர்ந்துள்ளன என்பவை பற்றி எல்லாம் விரிவாக விவாதித்துக் கூறுவன சட்டநூல்கள் தாம்.

நூலாசிரியர்களின் சிறப்பு:

தன்முன் உள்ள வழக்கின் கூறுகளை ஆய்ந்து, வாதங்களைக் கேட்டு, அதுபற்றிய சட்டங்களை அலசிப் பார்த்துத் தீர்ப்புக் கூறும் நீதிபதியின் நிலை வேறு; அதே பொருள் குறித்து எழுந்துள்ள பல்வேறு தீர்ப்புகளையும் சட்ட நெறிகளையும் ஒப்பிட்டு எழுதும் சட்ட நூலாசிரியரின் நிலை வேறு.

ஒரு துறையைக் குறித்த சட்டத்தைப் பற்றி நூல் எழுதும் ஆசிரியருக்கு அச்சட்டத்தைக் குறித்து முழுக்காட்சிப் பார்வை இருக்கிறது. அச்சட்டத்தின் வளர்ச்சி வரலாறு, அந்த வரலாற்றில் தீரப்பு நெறிகளின் பங்கு, சட்டமன்றத்தின் பங்கு, சமுதாயப் பின்னணி இவ்வாறான பல்வகைக் கூறுகளையும் அமைதியான

சூழலில் ஆய்ந்து எழுதப் பெறும் சட்டநூல்கள் தனிச்சிறப்புப் பெறுகின்றன.

'தீங்கியல்' (Law of Torts) பற்றி போலக் (Pollock), சால்மண்ட் (Salmond) போன்ற புகழ்பெற்ற ஆசிரியர்கள் எழுதிய நூல்கள் அச்சட்டத்தைப் பற்றிய ஈடற்ற இலக்கியங்களாகப் போற்றப் பெறுகின்றன. அந்தந்தத் தலைப்பின் கீழ்க் கூறப் பெற்றுள்ள முக்கியமான தீர்ப்புகளைத் திரட்டிக் கொடுப்பதோடு ஆசிரியர்கள் அமைந்து விடுவதில்லை. அத்தீர்ப்புகளில் உள்ள திட்பநுட்பங்களை ஆய்வதோடு, சட்டம் எந்த வகை முறையில் வளர வேண்டும் என்பதையும் சுட்டிக் காட்டுகின்றன அந்நூல்கள். நூலாசிரியர்களின் புலமை செறிந்த கருத்துகளை சட்ட மாணவர்கள் மட்டுமன்றி, எல்லாருமே படித்துப் பயன்பெறு கின்றனர்.

பொதுவாக, நூலாசிரியர்களின் நடுவுநிலைமை நீதிபதிகளின் நடுவுநிலைமையை விட ஒரு படி உயர்ந்தது என்று கூடச் சொல்லலாம்.

நீதிமன்றங்கள் அளிக்கும் மதிப்பு:

சமுதாயத்தின் சட்டச் சிந்தனையைச் சால்புடையதாக்கும் சக்திபடைத்த சட்டச் சான்றோர்களின் நூல்கள் நீதிபதி களுக்கும் வழிகாட்டும் நீர்மையுடன் விளங்குகின்றன. ஆங்கிலச் சட்ட வளர்ச்சியில் கடந்த ஐந்து அல்லது ஆறு நூற்றாண்டுகளில் Glanvil, Bracton, Littleton, Coke, Blackstone போன்ற சட்ட நூலறிஞர்களின் நூல்கள் சட்டநூலறிவு வளர்ச்சியில் மைல் கற்களாக இயங்குகின்றன. அண்மையில் Dicey, Cheshire போன்ற சட்ட நூலறிஞர்கள் புகழ் பெற்ற சட்டநூலறிஞர்கள் ஆவார்கள். சட்ட இதழ்களில் பல அறிஞர்களின் கட்டுரைகள், சட்டங்களில் உள்ள இருட்டுப் பகுதிகளில் ஒளி வீசும் தன்மையுடன் உள்ளன.

இங்கிலாந்து நாட்டைவிட அமெரிக்க நாட்டில் உள்ள நீதிமன்றங்கள் சட்டநூல்களுக்கு அதிக மதிப்பளிக்கின்றன. எனவேதான் ராஸ்கோ பவுண்ட் (Roscoe Pound) அமெரிக்க நாட்டின் சட்டத் தொகுப்பான The American Restatement of the law என்ற பெருநூல், சட்டக் கல்வித் துறையிலும் போற்றப்படுவதாகும். பிரான்சு நாட்டில் Domat, Pothier என்பவர்களின் சட்டநூல்கள்

புகழார்ந்தவை. ஐரோப்பிய நாடுகளில் சட்டப் பேராசிரியர்களின் பெருமையும் பெற்றிமையும் உயர்ந்த நிலையில் உள்ளன என்கிறார் பேட்டன்.

எனவே, சட்டநூல்களின் ஏற்றத்திற்கு ஏற்ப அவை நீதி மன்றங்களால் மதிக்கப் பெறுகின்றன. இவ்வாறு, அந்நூல்களும் சட்ட மூலங்களாக விளங்குகின்றன.

நம் நாட்டைப் பொறுத்தவரை சீரிய வழக்கறிஞர்கள் பலர் உள்ளனர்;ஆனால், சட்டநூலறிஞர்கள் மிகச் சிலரே காணப்படுகின்றனா. காரணம், ஆங்கிலச் சட்டமுறையைப் பின்பற்றும் நம் நாட்டில் தனிப்பட்ட சட்டத் தத்துவங்கள், கோட்பாடுகள் வகுக்கப் பெறுவதற்கான வாய்ப்பு மிகக் குறைவாக இருக்கின்றது. காலப் போக்கிலே இந்நிலை மாறும் என நாம் எதிர்பார்க்கலாம்.

மூன்றாம் பகுதி

"நீதி" என்றால் என்ன?
(What is Justice?)

[நீதி என்றால் என்ன? — ஒழுக்கம் வேறு, நீதி வேறு — நன்மை வேறு, நீதி வேறு — சட்டம் வேறு, நீதி வேறு — நீதியும், நீதிமன்றத் தீர்ப்புகளும் — தனி நீதி, பொது நீதி — நெஞ்சத்தின் நீர்மையே நேர்மையாகும் — நடுவு நிலைமையே நீதியாகும் — சமுதாயத்தின் சமநிலை அமைதி — சீர்தூக்கும் கோல்போற் கோடாமை — நெஞ்சத்துக் கோடாமை — சீர்தூக்கும் சீர்மை — சீர்தூக்கி முறைசெய்தல் — தகுதிக்கேற்பச் சமநிலை பேணுதல் — பகுதியால் பாற்பட்டு ஒழுகுதல் — நடுவுநிலைப் பண்பற்றி நல்வாழ்வு இல்லை — பிறவுந் தமபோற் பேணிச் செய்தல் — செப்பம் உடையவர் ஆக்கம் — முறைசெய்தலின் முறைமை — கண்ணோட்டம் இன்மை — இறைபுரிதல் — வழக்கினை ஓர்தல் — முடிவினைத் தேர்ந்து கூறுதல்.]

'சட்டம் என்றால் என்ன?' என்பது பற்றி ஓரளவு கண்டோம்.

சட்டத்தின் குறிக்கோள் என்ன? எதனை எய்துவதற்காகச் சட்டம் இயங்குகிறது?

சட்டத்தின் குறிக்கோள் 'நீதி' என்பதில் ஐயமில்லை. 'நீதி வழங்கும் பொழுது ஏற்றுக் கையாளப்படும் கொள்கைகளே சட்டம் ஆகின்றன' என்று அறிஞர் சால்மண்ட் கூறியதை முன்னர்க் கண்டோம். எனவே, நீதியை எய்தும் கருவியாகவே சட்டம் இயங்குகிறது.

நீதியின் கருவியாகச் சட்டத்தைக் கொள்ளாத ஆஸ்டின் போன்ற அறிஞர்கள் கூட, சட்டத்திற்கும் நீதிக்கும் உள்ள அடிப்படைத் தொடர்பை மறுப்பதில்லை.

எனவே, சட்ட இயலில் 'நீதி' என்ற கோட்பாடு முக்கியமானதாகின்றது. 'நீதி என்றால் என்ன?' என்ற வினாவிற்கு விடை காண்பது சட்ட இயல் ஆராய்ச்சியின் முக்கியக்கடனாகும்.

நீதி என்றால் என்ன?

'நீதி'யின் அடிப்படைத் தன்மை என்ன? நீதியின் நீர்மை என்ன?

'நீதியை' ஆங்கிலத்தில் Justice என்பார்கள். Justice என்ற சொல் 'அறம்' என்ற பொருளிலும் பயன்படுகிறது; பொதுவாக 'அறம்' என்ற பொருளில் அச்சொல்லைப் பயன்படுத்தும் பொழுது, Natural justice 'இயற்கை நீதி' என்று கூறுவார்கள்.

நீதி (Justice), நேர்மை (Just) என்ற சொற்கள் எந்த அடிப்படைக் கருத்தைக் குறித்து நிற்கின்றன? அச்சொற்களில் அடங்கும் உட்பொருள் என்ன? என்பது மேலை நாட்டுச் சட்ட அறிஞர்கள் ஆராய்ச்சி செய்து பல நூல்களை எழுதியுள்ளனர்.

'அறம்' என்ற சொல்லின் பொருளைப் போன்றே 'நீதி' என்ற சொல்லின் கருத்தும் ஒரு வரையறையான இலக்கணத்தில் எளிதில் அடங்குவதன்று.

நீதியின் உருவாகவே இறைவனைக் கண்டனர்.

பொதுவாக, நீதியை ஒரு தெய்வப் பண்பாகவே நம் முன்னோர்கள் போற்றினர். கடவுளை 'நீதியாக'வும் 'நேர்மையாகவும்' கண்டனர். 'நீதியை நிறைவை' என்றும், 'நீதியாய் நிலனாகி நெருப்பாய் நீராய்' என்றும் நாவுக்கரசர் இறைவனைப் போற்றிப் பாடுகின்றார். கிறித்துவ சமயப் பெரியார்களும் ஆண்டவனை நீதியின் உருவாகவே கண்டனர். முற்காலத் துதிப்பாடல்களில், 'ஆண்டவனே! என்னைவிட்டு அகன்று விடாதே. எனக்கு நீதி வழங்க எழுந்தருள்வாய். நாயகனே! உனது கருணை காட்டும் நீதியை எனக்கு அளிப்பாய்' (Psalms 35:25) என்று இறைவனைக் கிறித்துவ சமய அடியார்கள் வழுத்தியிருக்கின்றனர். 'கடவுளை நீதியின் உருவாகக் கண்டதால், கடவுள் மீதுள்ள வேட்கை நீதி மீதான வேட்கையாகவே அமைந்திருந்தது', என்று சட்ட அறிஞர் கெல்சன் கூறுகிறார்.[1]

ஆனால், அறிவியலான சட்ட இயலிற்கு அடிப்படையாக அமையும் 'நீதி', 'நேர்மை' என்ற சொற்களின் பொருளை ஓரளவு தெளிவாகக் காண வேண்டுமே? 'புலன்களுக்கெட்டாத தெய்வத் தன்மை கொண்டது நீதி' என்று கூறுவது அறிவியல்

---

[1] Since God personifies Justice, the longing for God is the longing for justice. This is the key note of the Psalms and the Prophets - Kelson in "What is Justice?"

ஆராய்ச்சிக்குப் பயனற்றதாகிவிடுகிறது. எனவே, சட்ட நூலறிஞர்கள் நீதியின் நீர்மையை ஆராய்ந்து காண முற்பட்டனர்.

பொதுவாக, மக்கள் எண்ணத்தால் மிகவும் வேறுபட்டவர்கள். எனவே, அவர்கள் எது நீதி, எது நியாயம் என்று உறுதி செய்வதிலும் வேறுபடுகின்றனர். 'சிறந்த சிந்தனையாளர்களாலும் நீதி என்றால் என்ன? என்ற வினாவிற்கு எல்லாரும் ஒப்புக் கொள்ளும் விடையைக் கண்டு கூற இயலவில்லை. அவர்கள் காணும் விடைகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டனவாகவே இருக்கின்றன'[1] என்று கெல்சன் கூறுகிறார்.

ஒழுக்கம் வேறு, நீதி வேறு:

நல்லொழுக்கம் என்பது வேறு; நீதி அல்லது நேர்மை என்பது வேறு.

தாம் செய்துகொண்ட ஓர் ஒப்பந்தத்தை ஒருவர் மீறும் செயலை நேர்மையற்ற செயல் என்கிறோம். ஆனால், அதை ஒழுக்கத்துக்கு மாறாவது என்று நாம் கூறுவதில்லை. கள்ளுண்ணலை ஒழுக்கத்துக்கு மாறானது செயல் என்கிறோம்; அதை நீதிக்கு மாறானது என்று நாம் கூறுவதில்லை. அன்புடைமையும் அடக்கமுடைமையும் நல்லொழுக்கங்கள்; அவற்றை நீதிப் பண்புகள் என்று கூறுவது பொருந்தாது. புறங் கூறுவோரையும், சூதாடுவோரையும் ஒழுக்கமில்லாதவர்கள் என்கிறோம்; ஆனால், அவர்களை நியாயத்திற்கு முரணாக நடப்பவர்கள் என்று கூறுவதற்கில்லை. எனவே, ஒழுக்கம் வேறு, நீதி வேறு என்பதை நாம் காணுகிறோம்.

நன்மை வேறு, நீதி வேறு:

தம்மிடம் பொருள் உதவி நாடியவருக்கு ஒருவர் பொருள் அளித்து உதவுகிறார். இதை நன்மையான செயல் என்கிறோம்; ஆனால், இதை நீதியான செயல் என்று கூறுவதில்லை. ஏழை மாணவர்களுக்கு இலவசமாக உணவும், உடையும் கொடுப்பதற் கென்று ஒருவர் தமது பொருளை அளித்து அறக்கட்டளை ஒன்று

---

1 Since men differ very much in their feelings, their ideas of justice are very different. This is the reason why in spite of the attempts made by the most illustrious thinkers of mankind to solve the problem of justice, there is not only no agreement but the most passionate antagonism in answering the question, 'What is just?' - Kelsen in 'What is Justice'.

நிறுவுகின்றார். இது ஒரு நற்செயலாகும். ஆயினும், இதை நீதியான செயல் என்று எவரும் குறிப்பிடுவதில்லை.

எனவே, நன்மை என்பது வேறு, நீதி என்பது வேறு.

சட்டம் வேறு, நீதிவேறு:

சட்டப்படியான செயல்களனைத்தும் நீதியை யொட்டிய செயல்களென்று நாம் கொள்ளுவதற்கில்லை.

மக்களின் நடத்தையைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் அரசால் இயற்றப்படுகின்றன. அச்சட்டங்கள் அனைத்துமே நியாயமான சட்டங்கள் என்று நாம் கூறமுடியாது.

ஒரு நாட்டின் அரசு பொதுமக்களுக்கென ஒரு பூங்காவையோ, ஒரு பள்ளியையோ நிறுவுகிறது. அந்நாட்டில் கறுப்பு நிறத்தவர்களும், வெள்ளை நிறத்தவர்களும் குடிமக்களாக உள்ளனர். கறுப்பு நிறத்தவர்களுக்கு அந்தப் பூங்காவிலோ, பள்ளியிலோ. அனுமதி இல்லையென்று சட்டமியற்றப்பட்டால், அச்சட்டத்தை நீதியின் அடிப்படையில் எழுந்த சட்டமென்று நாம் கொள்ள இயலாது.

ஒரு கடனொப்புச் சீட்டு (Promissory note) எழுதிக் கொடுத்த ஒருவர் மற்றொருவரிடமிருந்து கடன் பெறுகிறார். ஒப்புச் சீட்டு எழுதிக் கொடுத்த நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் கடன் கொடுத்தவர் வழக்கிட்டுக் கடனை வரப்பற்றலாம்; அல்லது அந்தச் சீட்டில் புதியதோர் ஒப்புக் குறிப்பினை அவர் பெறுதல் வேண்டும். இவ்வாறன்றி, மூன்று ஆண்டுகள் கடந்துவிட்டால், கடன்கொடுத்தவர் கடன்பெற்றவர் மீது வழக்கிட்டுக் கடனை வரப்பற்ற இயலாது. இது .இன்றையச் சட்டமாகும். கடன் கொடுத்தவரின் கவனக்குறைவால், ஒப்புச் சீட்டு எழுதிய தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலத்திற்குள் அவர் வழக்கிடவில்லை. புதியபோர் ஒப்புக் குறிப்பும் பெறவில்லை என வைப்போம். இப்பொழுது, கடன் பெற்றவர் கடனைத் திருப்பித் தர மறுக்கின்றார் என்றால், அதைச் சட்ட முரணான செயல் என்று நாம் கூற முடியாது. ஏனெனில், சட்டப்படி அவர்மீது வழக்கிடுவதற்கு இயலாது. ஆனால் வாங்கிய கடனைச் செலுத்த மறுப்பது நியாயமற்ற செயல்தானே? ஆதலால், அவர் செயலை நாம் நீதிக்கு முரணான செயல் என்று கொள்ளுகிறோம். இவ்வாறு, சட்டத்திற்கு முரண்பாடில்லாத செயல் நீதிக்கு முரணான செயலாவதும் உண்டு.

எனவே, ஒரு செயல் ஒழுக்கத்தை ஒட்டியதாக இருக்கலாம்; நன்மை பயப்பதாக இருக்கலாம்; சட்டப்படியானதாக இருக்கலாம்; ஆயினும், அது நீதியை ஒட்டியதாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

இதிலிருந்து, 'நீதி' என்ற சொல் ஒழுக்கத்தையோ, நன்மையையோ, சட்டத்தையோ குறிப்பதில்லையென்பது தெளிவாகும்.

நீதியும் நீதிமன்றத் தீர்ப்புகளும்.

நீதிமன்றங்களின் தீர்ப்புகளில்மட்டுமே நீதியின் தன்மை உள்ளது என்று நாம் கூறுவது பொருந்துமா? நீதி மன்றங்களின் தீர்ப்புகள் (Judgements) நீதியின் அடிப்படையிலேயே அளிக்கப் படுகின்றன என்பது உண்மைதான். ஆனால், நீதி என்பது அத் தீர்ப்புகளில் மட்டுமே அடங்குவதன்று.

மக்களிடையுள்ள உறவு, நீதியின், நேர்மையின் அடிப்படையில்தான் அமைந்து இயங்குகிறது. அவ்வாறு இயங்காத பொழுதுதான் நீதிமன்றங்களின் தலையீடு எழு கின்றது. நீதி மன்றத்தினர் தங்கள் தீர்ப்புகளின் வாயிலாக நீதியை வழங்குகின்றனர். எனவே, நீதி மன்றத்தினரை 'நீதி வழங்குவோர்' என்று கூறுகிறோம்; 'நீதியைப் படைப்போர்' என்று அவர்களைக் கூறுவதில்லை.

மக்களில் சிலர் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டு அமைதியைக் குலைக்கும்பொழுது போலீசார் வந்து அமைதியை நிலைநாட்டுவது போல், மக்களுள் சிலர் நீதியைப் புறக்கணித்துச் செயல்படும்பொழுது, நீதிமன்றத்தினர் நீதியை நிலவச் செய்கின்றனர். தாம் வாங்கிய கடனை ஒருவர் திருப்பிக் கொடுக்காத செயல் நீதிக்கு முரணானது. தாம் செய்துகொண்ட ஒப்பந்தப்படி ஒருவர் நடக்காத செயல் நீதிக்கு மாறுபட்டது. இச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்திலே வழக்கிடு கின்றனர். நீதியைப் புறக்கணித்தவர்களை நீதியையொட்டி ஒழுகுமாறு நீதிமன்றங்கள் கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கின்றன. இவ்வாறு, அமைதி குலையும்பொழுது 'போலீசார்' செயல் படுவது போல், நீதி குலையும்பொழுது நீதிமன்றம் செயலாற்று கிறது. போலீசாரின் தலையீடு இன்றியே அமைதி நிலவுவது போல், நீதிமன்றங்களின் துணையின்றியும் நீதி நிலவுகிறது என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும்.

எனவே, 'நீதி' என்பது நீதிமன்றத் தீர்ப்புகளில் மட்டுமே அடங்குவதன்று.

தனி நீதி, பொது நீதி

இக்கருத்தைத் தெளிவாக விளக்கும் வகையில், சட்ட அறிஞர் சால்மண்ட் நீதியைத் 'தனி நீதி' (Private Justice), 'பொது நீதி' (Public Justice) என்று இருவகையாகப் பிரித்துக் கூறுகின்றார். மக்களிடை நிலவும் உறவுமுறை நீதியின் அடிப்படையில் இயல்பாக அமைவதைத் 'தனி நீதி' என்றும், நீதிமன்றங்கள் வழங்குவதைப் 'பொது நீதி' என்றும் அவர் குறிக்கின்றார். 'தனி நீதியைக் காத்து நிலைநிறுத்துவதற்கே நீதிமன்றங்கள் பொது நீதியை வழங்குகின்றன' என்றும் சால்மண்ட் விளக்கிக் கூறுகின்றார்.[1]

உடல்நலம் கெட்டபொழுது வைத்தியர் மருந்து கொடுத்து உடல்நலத்தைக் காப்பதுபோல், தனிநீதி குலையும் பொழுது நீதிமன்றம் பொது நீதி வழங்கித் தனி நீதியைக் காக்கிறது என்பது அறிஞர் சால்மண்டின் விளக்கமாகும்.

இதிலிருந்து தெரிவது என்ன? 'நீதி' என்பது மக்களிடை நிலவவேண்டிய உறவு முறையின் தன்மை என்றும், அது நன்மை, ஒழுக்கம், சட்டம் இவற்றிலிருந்து வேறுபட்டது என்றும், நீதிமன்றத் தீர்ப்புகளில் மட்டுமே அது அடங்குவதன்று என்றும் நாம் காணுகின்றோம்.

மக்களிடை நிலவும் உறவு முறையில் அமைய வேண்டிய நீதியின் தன்மை என்ன?

நெஞ்சத்தின் நீர்மையே நேர்மையாகும்

அறத்தின் உருவாக ஆண்டவனைக் கண்ட பண்டைய மக்கள் நீதியின் உருவாகவும் இறைவனைக் கண்டார்கள். எனவே,

[1] Justice is either private or Public. The rule of Private justice is concerned with the dealings of men with each other, the rule of Public Justice is concerned with the dealings of a judicial tribunal with those who come before it as subject to its jurisdiction. Private justice is that which the courts are appointed to maintain or enforce; public justice is that which they are appointed to administer or dispense - Salmond in 'Jurisprudence'.

நீதியும் ஓர் அறப்பண்புதான் என்பது தெளிவாகும். மனத்துக்கண் மாசின்றி அமைதலே 'அறம்' என்று அறநூல் கூறுகிறது. எனில், நீதியும் அத்தகைய ஒரு தூய மன நிலையைத் தானே குறிக்க வேண்டும். மாசில்லாத மனத்தை 'அறம்' என்பது போல், நெஞ்சத்தின் நீர்மையையே 'நேர்மை' என்கிறோம்.

'நீதியை ஓர் அறப்பண்பாகக் காணும் பொழுது அதை 'நேர்மை' என்கிறோம். அது ஒருவரின் குண நலப்பண்பாகும்'[1] என்று ஆலன் என்ற அறிஞர் கூறுகிறார்.

'நேர்மை' என்பது குணநலப் பண்பு எனில் அப்பண்பு எத்தகையது?

'நீதி' அல்லது 'நேர்மை' என்பதன் அடிப்படையான பொருள் ஒருதலைச் சார்பற்ற தன்மையாகும். பொதுக் கொள்கைகளை நடுவுநிலையுடன் ஒருதலைச் சார்பின்றிச் செயல்படுத்தி மக்கள் உறவுநிலையை அமைப்பதே நீதியாகும்'.[2] இவ்வாறு மாரிஸ் கின்ஸ்பர்க் என்ற அறிஞர் கூறுகிறார்.

நடுவு நிலைமையே நீதியாகும்

ஆங்கிலத்தில் impartiality, 'exclusion of arbitrariness என்ற சொற்றொடர்கள் ஒருதலைச் சார்பற்ற மனநிலையைக் குறிக்கின்றன. இத்தகைய மனநிலையை, 'நடுவுநிலைமை' என்று வள்ளுவர் குறிக்கின்றார். 'நடுவுநிலைமை' என்ற தலைப்பில் ஓர் அதிகாரத்தையே வள்ளுவர் வகுத்துள்ளார்.

'நடு' என்ற நிலை எப்பொழுது எழுகின்றது? ஒருபுறம் ஒருவரும் மற்றொருபுறம் இன்னொருவரும் இருக்கும்பொழுது தான் 'நடு' என்ற நிலை தோன்றும் வாய்ப்புண்டு. 'நீதி' என்ற கருத்து இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களிடை எழும் உறவு முறையில் எழும் பண்பு என்ற சட்ட இயல் கருத்தை 'நடுவுநிலை' என்ற சொற்றொடர் தெளிவாகக் குறித்து நிற்கிறது.

---

1 Justice, in its purely ethical aspect, is justness, a moral quality residing in a disposition of character - C.K Allen in his 'Aspects of Justice'.

2 The central core of the idea of justice is the exclusion of arbitrariness . . . . Justice, in the broadest sense, consists in the ordering of human relations in accordance with general principles impartially applied -Morris Ginsberg in "On Justice in Society".

சமுதாயத்தில் சமநிலை அமைதி

சமுதாய வாழ்வில் ஒருவர் கடைப்பிடிக்க வேண்டிய இன்றியமையாத பண்பினையே 'நடுவுநிலை' என்கிறோம். மக்களிடை ஒரு சமநிலை நோக்கு வேண்டும். 'பிறரும் நமக்குச் சம நிலையில் ..ள்ளவர்கள்; பிறரையும் நமக்குச் சமமாக மதித்தல் வேண்டும்' என்ற உயர்ந்த எண்ணத்தில் அமைவதே 'நடுவுநிலை' என்ற பண்பாகும். உள்ளத்தில் உறைய வேண்டிய இந்த 'நடுவுநிலை'ப் பண்பினையே, 'நேர்மை' என்கிறோம். மக்களிடம் தோன்றும் இந்தப் பண்பின் பயனாய்ச் சமுதாய வாழ்விலே ஒரு 'சமநிலைச் சீர்மை' (equilibrium) மலர்கிறது. இத்தகைய சமநிலை அமைதியைச் சமுதாய மக்களிடை நிலைபெறச் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டது 'நீதி' என்ற 'சமுதாய நற்பண்பு'[1] என்று ஆலன் கூறியுள்ளார்.

'சமுதாயத்தில் பகுதியால் பாறபட்ட சமநிலையை நிலவச் செய்வதே நீதியாகும்'[2] என்கிறார் ஹார்ட் என்ற பேராசிரியர்.

இவ்வாறு, ஒருதலைச் சார்பு இன்றி, சமநிலையில் சீராக அமைந்து ஒழுகும் பண்பே நீதியாகும் என்று இன்றைய சட்ட வல்லுநர்கள் கூறுகின்றனர். இதை விளக்குவதற்கு 'balance', 'equilibrium' என்ற சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர். 'balance' என்ற சொல்லிற்குச் 'சமநிலை' என்றும், 'துலாக்கோல்' என்றும் பொருள் உண்டு. 'equilibrium', என்றால் 'சமநிலைச் சீர்மை' என்பது பொருளாகும்.

சீர்தூக்கும் கோல்போற் கோடாமை

வள்ளுவர் சமநிலைச் சீர்மையைச் 'சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைவது' என்றும், ஒருதலைச் சார்பின்மையை 'ஒருபாற் கோடாமை' என்றும் விளக்கி, அதுவே சான்றோர்க்கு அழகாகும் 'நடுவுநிலைமை' என்று கூறுகிறார்.

'சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி'

---

[1] The purpose of justice as a 'Social virtue' is to maintain, or to restore, an equillibrium in human affairs - C.K. Allen in 'Aspects of Justice'.

[2] Justice is traditionally thought of as maintaining or restoring a balance or proportion - A.Hart in 'The Concept of Law'.

நாம் கண்ணாற் காணும் துலாக்கோல் பண்டங்களைச் சீர்தூக்கும்பொழுது ஒருபாற்கோடாது நடுவாக அமைவதுபோல் நமது மனநிலையும் ஒருபாற்கோடாது அமைதல் வேண்டும் என்று கூறி, 'நடுவுநிலைமை'யின் நயத்தினை வள்ளுவர் விளக்குகிறார். புறப்பொருளான துலாக்கோலின் ஒருபாற் கோடாமையைக் காட்டி, 'நெஞ்சத்துக் கோடாமை' என்ற அகநிலைப் பண்பினை அவர் நமக்கு உணர்த்துகிறார்.

நெஞ்சத்துக் கோடாமை

'நீதி' என்பது நேரிய செயலில் மட்டும் அடங்குவதன்று; அது, ஒழுக்க மனநிலையை, உயரிய குண நலனைக் குறிப்பதும் ஆகும்,[1] என்று ஆலன் வலியுறுத்திக் கூறுகின்றார்.

இந்த ஒழுக்க மனநிலையை 'நெஞ்சத்துக் கோடாமை' என்று அறநூல் குறிக்கின்றது.

> கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
> கோடாமை சான்றோர்க் கணி
> (குறள்-115)

நெஞ்சத்துக் கோடாமையே நடுநிலைக்கு ஆதாரமாகும். "நடுவு நின்ற நன்னெஞ்சினோரின்' சிறப்பினைப் பண்டை நூல்கள் பலவும் போற்றுகின்றன.

நிலத்தை விரும்பி உழுது பயிரிடும் உழவரது வளைந்த மேழியின் நீண்ட நுகத்திற் பதித்த பகலாணி போல 'நடுவுநின்ற நன்னெஞ்சினோரான' வணிகர்களின் சிறப்பினைப் 'பட்டினப் பாலை'யும் பகருகின்றது.

> கொடுமேழி நசையுழவர்
> நெடுநுகத்துப் பகல்போல
> நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
> (பட்டினப்பாலை 205—207)

'நடுவுநிலை' என்ற மிக உயர்ந்த அறப் பண்பினைத் தெய்வப்

---

1 It follows that Justice does not consist in merely doing what is just; it consists in a certain moral disposition or a state of character - C.K Allen in 'Aspects of Justice'.

பண்பாகவே நம் முன்னோர்கள் கொண்டனர். எனவே, கடவுளை 'இறைவன்' என்று அழைத்தனர். 'இறை' என்ற சொல்லிற்கு 'நடுவுநிலை' என்ற பொருள் உண்டு. உலகத்தார்க்கெல்லாம் நடுவு நிலையில் நின்று அருள்புரியும் ஆண்டவனை 'இறைவன்' என்று குறிக்கும் சிறப்பை என்னென்பது!

இத்தகைய நடுவுநிலைப் பண்பே மக்களிடை நிலவும் உறவு முறையில் அமைதல் வேண்டும்; நீதிமன்றத் தீர்ப்புகளிலும் நிகழ்தல் வேண்டும். இதுவே 'நீதி' என்பதாகும்.

'நீதி' (நேர்மை) என்பது 'ஒருதலைச் சார்பால் கோட்டமில்லாத மனநிலை' என்றும், 'சமநிலைச் சீர்மை' என்றும் சட்ட அறிஞர்கள் விளக்கியுள்ளனர். வள்ளுவரோ, நீதியின் நீர்மை தெளிவாகத் தெரியும்படி அதனை 'நடுவுநிலைமை' என்று குறிப்பிடுகிறார். நெஞ்சத்து உட்கோட்டமும், சொற்கோட்டமும் இன்றி, 'நடுஒரீஇ' அல்ல' செய்யாது, 'சீர்தூக்கும் கோல்போல் ஒருபாற் கோடாது அமைவதுதான்' 'நடுவுநிலைமை' என்று அவர் அதை விளக்குகிறார். இவ்வாறு, சிந்தனை, சொல், செயல் மூன்றிலும் ஒருதலைச் சார்பின்றி அமைவதே 'நடுவு நிலைமை'யின் நயம் என்பதை வள்ளுவர் வகுத்த அறநூல் தெள்ளிதிற் காட்டுகிறது.

துலாக்கோல் போல் அமைந்து ஒருபாற்கோடாது இருத்தல் நடுவுநிலை என்று கண்டோம். துலாக்கோலின் தன்மை என்ன? அது சமன்செய்து சீர்தூக்குகிறது. சமன்செய்து சீர்தூக்குவது எவ்வாறு?

சீர்தூக்கும் சீர்மை

மக்கள் எல்லாரும் சமநிலையில் உள்ளனரா? இல்லை. அறிவில் நிறைந்தவர்கள் சிலர்; அறிவில் குறைந்தவர்கள் பலர். செல்வமுடையவர் சிலர்; இல்லாதவரோ பலர். இவ்வாறு உற்ற அறிவாலும், பெற்ற செல்வத்தாலும், மக்களிடையே வேறுபாடுகள் உள்ளன. இவர்களைச் சமமாகப் பாவித்தல் தகுமா?

எனவேதான், 'சமன்செய்து சீர்தூக்க' வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார் வள்ளுவர். மக்கள் சமநிலையில் இல்லை. எனவே, அவர்களைச் சமமாக்க வேண்டும் என்கிறார். 'மக்கள்

அனைவரையும் சமமாகப் பாவித்தல் வேண்டும்' என்று மட்டும் கூறி நிறுத்திவிட்டால், அது நீதியின் முழுத் தன்மையையும் கூறுவ தாகாது. அவர்களைச் 'சமன்செய்த' பிறகு தான் சமமாகப் பாவித்தல் வேண்டும். மக்களைச் சமநிலையில் வைத்த பின்னரே ஒருபாற்கோடாது நிற்றல் முறையாகும்; நீதியாகும்.

சீர்தூக்கும் கோல் எந்நிலையில் ஒருபாற் கோடாது அமைகிறது? ஒருபுறம் எடை அதிகமாகவும், மற்றொருபுறம் எடை குறைவாகவும் இருந்தால், துலாக்கோல், எடை அதிகமாக உள்ள பக்கமே சாய்ந்திருக்கும். இருபுறமும் எடை சமமாக இருக்கும் பொழுதுதான் ஒருபாற் கோடாது நிறுவைக்கோல் நிற்கின்றது. அதுபோன்றே, சமநிலையில் உள்ள மக்களிடையே ஒருபாற் கோடாது இருத்தலே நடுவுநிலையாகும். சமநிலையில் இல்லாத, ஏற்ற தாழ்வுள்ள மக்களிடையே, ஒருவர் ஒருபாற் கோடாது இருத்தல் என்ற நிலை எழுவதில்லை. எனவேதான், முதலில் சமன்செய்து, சீர்தூக்கி, அந்நிலையில் ஒருபாற் கோடாது இருத்தலே சாற்றோர்க்கு அணியான நடுவுநிலை என்று விளக்கிக் கூறுகின்றார் வள்ளுவர்.

இக் கருத்தை விளக்கும் வகையில் சில மேற்கோள்களைக் காணலாம்.

சீர்தூக்கி வரிவிதிக்கும் முறை

பொதுவாக, அரசு ஒரு சட்டத்தை இயற்றினால் அது எல்லா மக்களுக்கும் ஒரே வகையில் பொருந்துமாறு இருத்தல் வேண்டும் என்பதே முறை. அவ்வாறு இருந்தால்தான் அது ஒருதலைச் சார்பற்ற, பாரபட்சமற்ற சட்டமாகிறது. வருமான வரிச் சட்டத்தை (Income Tax) எடுத்துக் கொள்வோம். இச்சட்டம் மக்கள் வருமானத்திற்குத் தக்கபடி வரி விதிக்கிறது. ஆண் டொன்றில் பதினைந்தாயிரம் அல்லது இருபதாயிரம் ரூபாய் வருமானத்திற்குக் குறைந்தவர்களுக்கு இச்சட்டம் வரி விதிப்ப தில்லை. இவ்வாறு, சிலரைமட்டும் வரி விதிப்பிலிருந்து விலக்குவது நியாயமா? அது மட்டுமன்று, வரி விகிதமும் வருமான உயர்வுக்குத் தக்கபடி உயர்ந்துகொண்டே போகிறது. ஆண்டொன்றுக்கு இருபத்தையாயிரம் ரூபாய் வரை வருமான முள்ளவர் ஐந்து சதவிகிதம் வருமானவரி செலுத்த வேண்டு மெனில் அத்தொகைக்கு மேற்பட்ட வருமானம் உள்ளவர் பத்து அல்லது பதினைந்து சதவிகிதம் வரி செலுத்த வேண்டும். மிக அதிகமான வருமானம் உடையவர்கள் எழுபது அல்லது எண்பது சதவிகிதங்கூட வரி செலுத்துகின்றனர். இவ்வாறு, குறைந்த

வருவாயுள்ளவர்களுக்கு வரியே கிடையாதென்று விதிப்பதும், வருமான உயர்வுக்குத் தக்கபடி உயர்விகித வரி என்று விதிப்பதும் நியாயமா? இது மக்களிடை வேற்றுமை காட்டுவது ஆகாதா?

இத்தகைய வேற்றுமை சட்டத்தில் இல்லாவிடில் அதுவே நியாயமற்ற நிலையாகும் என்பது, சிறிது சிந்தித்தால் நமக்குப் புலப்படும். ஏழையாக இருப்பவர்களிடம் வருமான வரியென்று பெறுவது தவிர்க்கத் தக்கது. அது போன்றே, அதிக வருமானக்காரர்களிடம் அதிக விகித வரியைப் பெறுவது விரும்பத் தக்கது. இலட்ச ரூபாய் ஆண்டு வருமானம் உள்ள வரிடம் ஐம்பது சதவிகிதம் வரியாகப் பெறுவதுபோல், இருபதாயிரம் ரூபாய் வருமானம் உள்ளவர்மேல் பத்தாயிரம் ரூபாய் வரி விதித்தால், அந்த முறை மக்கள்மீது வரிப்பளுவைச் சீராக அமையச் செய்வதாகாது. வரிவிகிதம் ஒன்றாக இருந்தாலும், வரிப்பளு இலட்ச ரூபாய் வருமானம் உள்ளவருக்கு எளிதாயும், பத்தாயிரம் வருமானம் உள்ளவருக்குத் தாங்க முடியாததாகவும் அமைகின்றது. எனவே, அதிக வருமானம் உள்ளவர்கள் அதிக விகிதம் வரி செலுத்த வேண்டுமென்று சட்டம் விதிக்கின்றது. குறைந்த வருமானம் பெறும் ஏழை நிலையி லுள்ளவர்களுக்கு வரிவிலக்கை அளிக்கிறது.

இவ்வாறு, மக்களின் செல்வ நிலைக்குத் தக்கவாறு வரிமுறையை அமைப்பதே, சீர்தூக்கி வரி விதிக்கும் சீர்மை யாகும்; நீதியாகும்.

சீர்தூக்கி முறைசெய்தல்

வட்டிக்குக் கடன் கொடுத்து வாங்கும் ஒருவர் தம்மிடம் கடன் வாங்கிய இருவர் மீது வழக்கிடுகின்றார். கடன் வாங்கியவர்களில் ஒருவர் தக்க செல்வமுடையவர்; மற்றொருவர் ஏழை நிலையில் உள்ளவர். கடன்வாங்கியவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டுமென நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. ஆனால், ஏழையான கடன்காரர், மாதாமாதம் ஒரு குறிப்பிட்ட தொகையைத் தவணை மாறாமல் செலுத்திக் கடனைத் தீர்க்கலாம் என்று நீதிமன்றம் கூறுகிறது. செல்வம் படைத்த கடன்காரர்மீது ஏற்பட்ட வழக்கில், கடன் தொகையை அவர் உடனே செலுத்தவேண்டுமென ஆணை பிறப்பிக்கிறது. இவ்வாறு, ஒரு கடனாளியைத் தவணைகளில் கடனைச் செலுத்துமாறும், மற்றொருவரை உடனே கடன் தொகையைச் செலுத்துமாறும்

நீதிமன்றம் உத்தரவிடுகிறது. கடன்வாங்கிய இருவரிடையே வேற்றுமை காட்டுவது சரியல்லவே; என்று நாம் வினவலாம். ஆனால், உண்மையில், ஏழைக்குக் காட்டப்பட்ட சலுகை, பணம் படைத்தவருக்குக் காட்டப்பட வேண்டிய அவசியம் இல்லை; அவ்வாறு காட்டுவது முறையுமன்று.

'அவரவர்களின் தேவைகளையும், திறன்களையும், சூழ்நிலைகளையும் ஆய்ந்தால்தான் மக்களிடையுள்ள வேற்றுமைகளை உணர்ந்து, அவற்றிற்கேற்ப அவர்கள் கொண்டாடும் பாத்தியங்களை ஒருதலைச் சார்பின்றி நாம் காணமுடியும்'[1] என்கிறார் மாரிஸ் கின்ஸ்பர்க்.

மேலே கூறப்பட்ட இருமேற்கோள்களிலும் சட்டமும், நீதிமன்றமும் மக்களின் தகுதிக்குத் தக்கவாறு இசைந்து ஒழுகு வதைக் காணுகிறோம். அவ்வாறு இசைந்து ஒழுகுவதே முறையானது என்பதையும் அறிகின்றோம்.

ஆனால், சட்டம் பதினைந்தாயிரம் ரூபாய்க்குக் குறைந்த வருமானமுள்ள இராமன் என்பவருக்கு வருமான வரி இல்லை யென்றும், அதே வருமானமுள்ள முருகன் என்பவருக்கு வரி உண்டு என்றும் கூறினால் அது நீதியாகாது. அம்மாதிரியே, தவணை முறையில் கடனைச் செலுத்தும் சலுகையை ஏழை நிலையில் உள்ள ஒருவருக்கு அளித்துவிட்டு, அதே ஏழை நிலையில் உள்ள மற்றொருவருக்கு அச்சலுகையை அளிக்க நீதிமன்றம் மறுத்தால் அது முறையாகாது.

தகுதிக்கேற்பச் சமநிலை பேணுதல்

எனவே, சமநிலையில் உள்ளவர்களைச் சமமாகப் பாவிப்பதே நீதியாகும், முறையாகும் என்பது தெளிவாகின்றது. சமநிலையில் இல்லாதவர்களைச் சமமாகப் பாவித்து நடத்துவது நீதியன்று என்பதும் தெளிவாகின்றது. ஆதலால், மக்களின் தகுதியை மறந்து எல்லாரையும் சமமாகப் பாவித்து ஒழுகுவது நீதியன்று; மக்களின் தகுதிக்குத் தக்கவாறு இசைந்து ஒழுகுவதே உண்மையான சமநிலைப் பண்பாகும், நீதியாகும்.

---

1 To weigh claims impartially, to decide what differences between the claimants are relevant or irrelevant, it is necessary to take into consideration differences in needs, capacities and circumstances - Morris Ginsberg in 'On Justice in Society'.

'சமநிலையில் உள்ளவர்களைச் சமமாகப் பாவித்து ஒழுகத் தவறுவது எவ்வாறு நீதிக்கு முரணானதோ, அவ்வாறே சம நிலையில் இல்லாதவர்களைச் சமமாகப் பாவித்து ஒழுகுவதும் நீதிக்கு மாறானதாகும்' [1] என்று அறிஞர் மாரிஸ் கின்ஸ்பர்க் கூறுகிறார்.

கிரேக்க அறிஞரான அரிஸ்டாட்டிலும் (Aristotle) இதே கருத்தைக் கூறியுள்ளார்.

பகுதியால் பாற்பட்டு ஒழுகுதல்

தன்மையிலும் தரத்திலும் வேறுபட்டுப் பல பகுதி களாகவே மக்கள் உள்ளனர். அந்தந்தப் பகுதியில் உள்ளோருக்குத் தக்கவாறு இசைந்து ஒழுகுதல் வேண்டும். இவ்வாறு, 'பகுதியால் பாற்பட்டு ஒழுகுதல்' தான் நீதியாகும், தகுதியாகும் என்று குறள் கூறுகிறது. இத்தகைய தகுதியால்தான் நன்மை விளைகிறது.

''தகுதி எனவொன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்.'' (குறள், 111)

'வேறுபட்ட மக்கட் பகுதியினரைத் தக்க முறையில் நடத்தும் முறையையும் 'நீதி' என்பது குறிக்கின்றது என்கிறார் ஹார்ட் என்னும் பேராசிரியர்.[2]

இவ்வாறு, அவரவர்களின் தகுதியை ஆய்ந்து அதற்கேற்ப நடுவுநிலையை மேற்கொள்ளுதலை, 'பகுதியால் பாற்பட்டு ஒழுகுதல்' என்கிறார் வள்ளுவர். பகுதியால் பாற்பட்டு ஒழுகுதலைத் 'தகுதி' என்று குறிக்கின்றார்.

ஆங்கிலச் சட்டத்தில், ஒரே நிலையில் உள்ளவர்களைச் சமமாக நடத்தும் பண்பினை Arithmetical equality என்பார்கள். வேறுபட்ட நிலையில் உள்ளவர்களுக்கேற்ப அவர்களை நடத்தும் வகையினை Proportionate equality என்பார்கள்.[3]

---

[1] It is as unjust to treat unequals equally as to treat equals unequally - Morris Ginsberg in 'On Justice in Society'.

[2] 'Justice constitutes one segment of morality primarily concerned not with individual conduct but with the ways in which classes of individuals are treated' - A. Hart in 'The Concept of Law'.

[3] Equality, in short, has to be considered in relation to the grounds on which the claims are made. It then means arithmetical equality for equal claims, proportionate equality when there are relevant grounds for differentiation - Morris Ginsberg in "On Justice in Society".

அறிவியலில் பல துறைகள் உள்ளன. அந்தந்தத் துறையில் தேர்ச்சியுற்றோர் ஏற்ற தொழிலை ஏற்று நடத்துகின்றனர். தேர்ச்சி ஏதும் இன்றி எவரும் எந்தத் தொழிலும் நடத்தலாம் என்று கொள்ளுதல் முறையா? வைத்திய நூலறிவு இல்லாதவர் வைத்தியராகப் பணிபுரிவது தகுமா? கல்வியறிவே இல்லாதவர் கல்லூரிப் பேராசிரியராக முடியுமா? எல்லோரையும் சமயாகப் பாவிக்க வேண்டுமென்ற கொள்கையைக் காட்டி, தகுதி ஏதும் இல்லாதவர் தகுதியான பதவிகளை நாடுவது தகாதது அன்றோ?

அரசு, சமுதாயத்தில் பின்தங்கிய வகுப்பினருக்குக் கல்வி, பதவி முதலியவற்றில் சலுகைகள் காட்டுகிறது. பின் தங்கி யிருப்போர் மற்றையோரைப் போல் முன்னேற வேண்டுமென்ற நோக்குடன் இச்சலுகைகள் காட்டப்படுகின்றன. இதை வைத்து அரசாங்கம் மக்களிடை நடுவுநிலையில் ஒழுகவில்லையென்று கொள்ளலாமா? வேறுபட்ட நிலையிலுள்ள மக்களிடை அரசும் வேறுபாடு காட்டுகிறது என்பது உண்மைதான். ஆனால், அது அவரவர் தகுதிக்குத் தக்கவாறு, 'பகுதியாற் பாற்பட்டு ஒழுகும்' பாங்கேயாகும். எனவே, இந்நிலையில், அரசு மக்களில் சில பகுதியினருக்குக் காட்டும் சலுகை தகுதியின் பாற்பட்டது; நீதிக்கு உகந்தது.

'மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பு, சட்டத்தை நிறை வேற்றுவது முதலிய கடமைகளில் குடிமக்கள் அனைவரையும் அரசு சமமாகப் பாவித்தே நடக்கிறது. அவர்களுக்கிடையிலுள்ள ஏற்றத் தாழ்வுகளைப் பார்ப்பது இல்லை. ஆனால், கல்வி, பண உதவி முதலிய சலுகைகளையும், பட்டம் பதவிகளையும் மக்களின் தகுதிக்குத் தக்கவாறு அரசு அளிக்கிறது. இதுவே தகுதிக்கேற்ப ஒழுகும் முறையாகும்',[1] என்கிறார் மாரிஸ் கின்ஸ்பர்க்.

தகுதிக்கேற்ப ஒழுகுதலே தகுதி

மக்களிடையுள்ள வேறுபாடுகளுக்கேற்ப இசைந்து ஒழுகுதல் அரசின் செயல்களுக்குமட்டும் பொருந்துவதன்று;

---

1 It will then be found that, in reference to certain rights such as those concerned with the security of the person, all alike are entitled to protection irrespective of any differences. In the case of other rights, on the other hand, such as the right to education or the payment for services, proportionate equality may have to be applied taking into consideration differences in needs or capacities . . . . - Morris Ginsberg in 'On Justice in Society'.

தனிமனிதர்களும் அத்தகைய இசைவுடன் ஒழுகினால்தான் அது 'பகுதியால் பாற்பட்டு ஒழுகு'வதாகும். மக்களின் தகுதிக்கேற்ப இசைந்து ஒழுகுதலே தகுதியாகிறது.

எனவே, 'நடுவு நிலைமை' என்பது, சூழ்நிலைகளுக்கேற்ப எல்லாரையும் சமமாகப் பாவித்து ஒழுகுவதும், மக்களின் நிலைக்கேற்ப முறையோடு பொருந்தி ஒழுகுவதுமாகும். மக்களின் வேறுபட்ட நிலைகளை ஆய்ந்து அவற்றிற்கேற்ற ஒழுக்கத்தை உறுதி செய்தல் எளிதன்று. அதில் சிக்கல்கள் தோன்றுவது இயல்பு. இச்சிக்கல்களைத் தீர்த்துச் செயலாற்றுவதே 'தகுதி' என்ற தகைமையாகிறது. 'மக்களின் நிலைகளைச் சீர்செய்து சமநிலை காணுவதிலுள்ள சிக்கல்களைத் தீர்ப்பதே நீதியாகும்',[1] என்கிறார் மாரிஸ் கின்ஸ்பர்க்.

ஆதலால், மக்களின் தகுதிக்கு ஏற்ப முயன்று ஒழுகுவதே தகுதியின் தகைமையாகும்.

இவ்வாறு, 'பகுதியால் பாற்பட்டு ஒழுகுவதே' தகுதியாகும்; நன்மை பயக்கும் 'நடுவு நிலைமை'யாகும் என்று தெளிவாகச் சட்டமும் அறமும் கூறுகின்றன.

தகுதி எனவொன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்

(குறள், 111)

'நடுவு நிலைமை' என்பது ஒருதலைச் சார்பின்றி ஒழுகுதல் என்றும், 'பகுதியால் பாற்பட்டு ஒழுகும் தகுதி' என்றும் கண்டோம். நீதி மன்றங்கள் வழங்கும் தீர்ப்புகளில் மட்டுமன்றி, மக்களிடை நிலவும் உறவு முறையிலும் உறைவது நடுவுநிலையாகிறது.

நடுவுநிலைப் பண்பின்றி நல்வாழ்வு இல்லை

இந்த நீதிப் பண்பு, அறமும் சட்டமும் போற்றிப் பேணும் உயர் பண்பாகும். அதை ஒரு தெய்வப் பண்பாகவே சான்றோர்கள் கண்டனர். நீதியுணர்வு மக்கள் மனத்திலே இல்லையெனில் இவ்வுலக வாழ்வு இருண்டுவிடும். நடுவுநிலை

[1] Justice is concened with problems of balance adjustment - Morris Ginsberg, in 'On Justice in Society'.

என்ற நல்லுணர்வே நம் வாழ்வில் ஒளி வீசி ஒண்மை பயக்கிறது. மக்களை மக்கள் நிலையில் நிறுத்தி மாண்புறச் செய்வது இப் பண்பேயாகும்.

'எத்தகைய சமுதாயமாயினும், அச்சமுதாய மக்கள் ஒருவருக்கொருவர் கொள்ளும் எல்லா வித உறவுகளிலும் ஓர் அமைதியை அமைப்பது நீதிப் பண்பாகும். நீதிக் கொள்கை நிலவாத வாழ்வு இருக்க முடியாது; என்றும் இருந்ததுமில்லை'[1] என்று சட்ட அறிஞர் ஆலன் கூறுகிறார்.

பிறவுந் தமபோற் பேணிச் செய்தல்

'மக்களிடை எழும் உறவு முறைகளிலே ஓரளவு நேர்மையும் நாணயமும் இருக்கவேண்டும் என்று ஆங்கில நாட்டுச் சட்டம் விதிக்கிறது. இதை எய்துவது இயலாததன்று. இது மக்கள் சமுதாயத்திற்கு, அதிலும் வாணிகத்தினருக்கு மிக முக்கியமான, இன்றியமையாத நல்லொழுக்கமாகும்'[2] இவ்வாறு அட்கின் என்ற நீதிபதி நேர்மையின் இன்றியமையாத் தன்மையினை விளக்கி யுள்ளார்.

வாணிகத்திலே நேர்மை வேண்டும் என்பதை நம் பண்டைய நூல்கள் பலவும் கூறுகின்றன.

தமக்கு வடுவாகும் என்று அஞ்சி, மெய்யே சொல்லி, தம் சரக்குகளையும் பிறர் சரக்குகளையும் ஒப்பக் கண்டு, தாம் கொள்ளும் சரக்கை, தாம் கொடுக்கும் பொருளுக்கு அதிகமாகக் கொள்ளாமல், தாம் கொடுக்கும் சரக்கையும் தாம் வாங்கும் பொருளுக்குக் குறைவாகக் கொடாமல், தாம் பெறும் இலாபத்தையும் வெளிப்படையாகக் கூறி, வாணிகம் நடத்தும்

---

1 Justice which I have attempted to sketch is known to mankind as a necessary moderating force in all human relationships in all societies which it is possible to conceive, or, to put it conversely, life without some principle of Justice has never been lived and is not livable - C.K. Allen in 'Aspects of Justice'.

In dealings as between man and man the English law does set up a high, but not too high, attainable standard of honesty and fair dealing which, to my mind, is of the very greatest value to the whole community and especially to the commercial community - Lord Atkin in his presidential address in Birmingham University.

முறையினைப் பட்டினப்பாலையில் காணுகிறோம்:

". . . . .
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவுமொப்ப நாடிக்
கொள்வதூஉ மிகைகொளாது
கொடுப்பதூஉங் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்து வீசுந்
தொல்கொண்டித் துவன்றிருக்கை
. . . ."

(பட்டினப்பாலை 208—212)

பிறர் பொருளையும் தம் பொருளாகப் பேணி வாணிகம் செய்தலே வாணிகமுறை என்று வள்ளுவர் கூறுகிறார்.

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்

(குறள், 120)

நீதி, நேர்மை, நடுவுநிலைமை என்றெல்லாம் கூறுகிறோம். நேரிய வழியிலே ஒழுகுபவர், நடுவுநிலையில் நழுவாது நிற்போர் உலக வாழ்வில் பெறுவது என்ன? பெரும்பாலும், வளமை யின்மையும் வறுமையுந்தானே அவர்கள் வாழ்விலே வந்தடை கின்றன? 'பிறவுந் தமபோற் பேணிச் செய்யும்' வாணிபத்தால் பெரும் பொருள் ஈட்ட இயலாதே? வஞ்சனை புரிந்து வாழ்வோர் வளம் பெற்று ஓங்குதலை, நெஞ்சங் கோடாது நிற்போர் நினைந்து உளைகின்றனர். இந்நிலையில், நீதிநெறியால் நமக்கு விளையும் பயன் என்ன? இதற்கு விடை கூறும்பொழுது, சட்ட அறிஞர்கள் அறவோராக அமைந்து விடுகின்றனர். ஆலன் என்ற சட்ட அறிஞர் கூறும் அறவுரை இது:

'நேர்மைவழி நிற்போருக்கு நேருந் துன்பங்கள் மக்கள் மனத்தை உறுத்துகின்றன என்பது உண்மை. ஆயினும், நடுவுநிலை என்ற பண்பாட்டைப் பேணுவது பரிசு எதையும் எதிர்பார்த்து அன்று. எத்தகைய இன்னல்கள் வந்தாலும் ஏற்றமிகு மனிதன் என்றும் தனது நடுவுநிலைக் கொள்கையை நழுவ விடுவதில்லை. உயிர் வாழ்க்கைக்கு உயர்வளிப்பது, மரணத்

திலும் மாண்பளிப்பது இச்சிறந்த பண்புதான் என்பதை அவன் அறிவான்'.[1]

கேடும் ஆக்கமும் வாழ்வில் இல்லாதவை அல்ல; இவற்றைப் பொருட்படுத்தாமல் நெஞ்சத்துக் கோடாமையைப் பேணி நடுவுநிலையில் நிற்பதே சான்றோர்க்கு அழகாகும் என்று மேலும் வள்ளுவர் கூறுகிறார்:

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

(குறள், 115)

'நடுவுநிலை நின்றதால் நீ நல்கூர்ந்தாயா? கவலை வேண்டாம். உன் வறுமை என்ற தாழ்வைக் கண்டு உலகம் பழிக்காது; அதைக் கேடு என்று உலகம் ஒரு நாளும் கொள்ளாது' என்று திருவள்ளுவர் அறிவுறுத்துகிறார்.

செப்பும் உடையவர் ஆக்கம்.

செப்பம் உடையவரது ஆக்கத்திற்குச் சிதைவு இல்லை; அந்த ஆக்கத்தால், அவர் வழித் தோன்றுவாரும் ஏற்றமடைகின்றனர் என்று வள்ளுவர் கூறுகின்றார்:

"செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப்பு உடைத்து"

கல்வி எவ்வாறு கேடில் விழுச்செல்வமோ, அவ்வாறு செப்பம் என்பது சிதைவில்லாத ஆக்கம் ஆகிறது. இவ்வாறு, நடுவு நிலைமையை இன்றியமையா ஒரு நன்னெறியாகவே, பயன் கருதாது பேணப்பெறும் பண்பாடாகவே சட்டமும் அறமும் கொள்ளுகின்றன.

'ஒருபாற் கோடாமை' (Impartiality), 'பகுதியால் பாற்பட்டு ஒழுகுதல்' (Principle of Proportionate Equality), 'சமன்செய்து சீர்தூக்குதல்' (Equality of Consideration) இம்மூன்று பண்புகளும் 'நீதி' (Justice) என்ற கருத்திலே அமைவன என்று

1 The mind and heart of man have always been troubled by the common experience that the just and the righteous are often the victims of cruel adversity in this world .... Need it be said that advantage and reward are totally irrelevant to the goodness of justice? The man of principle will follow its dictates wherever they lead even to the stake ...... because he knows no other principle which makes life desirable or death honourable - C.K. Allen in 'Aspects of Justice'.

சட்ட இயல் கூறுகிறது. நீதி என்பது முறை செய்தலுக்கு மட்டுமன்றி அன்றாட வாழ்வில் அமையவேண்டிய ஒழுக்கப் பண்பு என்றும், சிறந்த வாணிக முறை என்றும், பெறும் பயனைக் கருதாது பேணத்தக்க அறம் என்றும் சட்ட நூலறிஞர்கள் விளக்கியுள்ளனர்.

முறைசெய்தலின் முறைமை

'நீதி' என்ற சொல் அறக் கருத்தினையே குறிக்கிறது

இன்று நீதிமன்றங்கள் எல்லாம் சட்டத்தின் அடிப் படையில்தானே நீதி வழங்குகின்றன? சட்டத்தை ஒட்டிய நீதிமுறையில் அறப்பண்புகளுக்கு அவசியம் ஏன் என நாம் எண்ணலாம். 'நீதி', 'நிதி முறை' என்ற சொற்கள் எப்பொழுதுமே அறப்பண்பினையே உணர்த்தி நிற்கின்றன. 'சட்டத் துறையில் பயன்படுத்தும்பொழுதுகூட ''நீதி'', ''நீதிமுறை'' என்ற சொற்களில் அடங்கி நிற்கும் அறக்கருத்து மறைந்து விடுவ தில்லை'[1] என்று சட்ட அறிஞர் 'போலக்' கூறுகிறார்.

நீதி நெறிக்கு முரணானதாக ஒரு சட்டம் இருக்கலாம். ஆயினும் அச்சட்டத்தைச் செயற்படுத்தி வழக்குகளைத் தீர்க்கும் முறையிலே நீதி அமைதல் வேண்டும். 'ஒரு சட்டத்தின் தன்மை எதுவாக இருந்தாலும், அச்சட்டத்தைச் செயற்படுத்தும் நெறியின் இன்றியமையாத பண்பு 'நீதி'யாகும். 'நீதி வழங்குதல்' (முறை செய்தல்) என்றால் அறத்தின் அடிப்படையில் சட்டங்களைச் செயற்படுத்தி வழக்குகளைத் தீர்த்தல் என்பதே பொருள்'[2] என்கிறார் ஆலன்.

நீதிவழங்குவதில் அமையும் அறம் என்ன? முறைசெய்தலின் முறைமை என்ன?

---

[1] The Words 'Just' and 'Justice' have never quite lost ethical significance even in the most technical legal context - Pollock in 'Jurisprudnce'.

[2] Law is not necessarily justness . . . In the application of law, however, justice is an absolute requirement, whatever the quality of the law may be. When we speak of the 'administration of justice' we really mean the application of the moral principle of justice to existing laws when rights and duties are disputed by rival claims - C.K. Allen in 'Aspects of Justice'.

'செங்கோன்மை' என்ற அதிகாரத்தின் முதற் குறள் முறைசெய்தலின் முறையைத் தெளிவாகக் கூறுகிறது:

ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை

(குறள், 541)

கண்ணோட்டம் இன்மை

'நீதி என்ற தேவதைக்குக் கண்கள் இல்லை', The Goddess of Justice is blind என்று ஆங்கிலத்தில் கூறுவதுண்டு. தம்முன் நிற்பவர்கள் யார் என்று கண்டால் அவர்கள்மீது பரிவு ஏற்படலாம். எனவே, தம்முன் நிற்போர் யார் என்று காண இயலாத நிலையில் கண்களின்றி அமைகிறது நீதி தேவதை என்பார்கள்.

சட்ட இயலறிஞர்களும் நீதி வழங்குவதில் கண்ணோட்டம் கூடாது என்பதைக் கூறியுள்ளனர். 'இரக்கம், நீதி இவ்விரண்டும் வெவ்வேறு நிலையில் எழும் நற்பண்புகள்'[1] என்று ஆலன் கூறுகிறார்.

கண்ணோட்டம் என்பது வேறு, கருணை என்பது வேறு. குற்றவாளிகள் தண்டனைத் தீர்ப்புகளைப் பெற்றபின்னர், அரசின் கருணையை வேண்டுகின்றனர். மாநிலத் தலைவர் (Governor) அல்லது குடியரசுத் தலைவர் (President) கருணைகாட்டித் தண்டனை பெற்ற குற்றவாளிகளை விடுவிப்பதும் உண்டு. முறைசெய்து முடிந்தபின், தண்டனை பெற்றவர்மீது அரசு கருணை காட்டலாம். ஆனால், குறள்நெறியும் சட்டநெறியும் கூறுவது, வழக்கை விசாரணை செய்யும்பொழுது கண்ணோட்டம் காட்டுவது கூடாது என்பது, முறை செய்யும் வகையில் கண்ணோட்டம் தகாது என்பதுமேயாகும்.

இறைபுரிதல்

அடுத்து. நீதிவழங்குவோர் கைக்கொள்ள வேண்டிய நெறி 'இறைபுரிதல்' ஆகும். 'இறைபுரிதல்' என்றால் 'நடுவுநிலை தவறாது ஒழுகுதல்' என்பது பொருள்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் அரசு பொதுவானது. நீதி வழங்கும் பொழுது மக்களிடை அது வேற்றுமை காட்டுவதில்லை. எனவே, நீதி வழங்கும் சான்றோர் நடுவுநிலையிலிருந்து

1 Mercy and justice, then, seem to lie in different spheres of viurue - C.K. Allen in 'Aspects of Justice'

அணுவளவேனும் அகலாது, ஒருபாற் கோடாது, அமைந்து ஒழுகுகின்றனர். வலியார் மெலியார், செல்வம் உள்ளவர் இல்லாதவர், ஆட்சி நடத்துபவர் ஆளப்படுபவர் என்ற பாகுபாடு காட்டாமல், எல்லாரையும் ஒரே நிலையில் வைத்து நீதி வழங்கப் படுகிறது.

'சட்டக் கொள்கைகளை மக்களிடை வேறுபாடு காட்டாமல் நீதி மன்றத்தினர் செயற்படுத்துகின்றனர். நீதி வழங்குகையில், ஒருவரைவிட மற்றொருவர்மீது அதிகமாக மதிப்புக் காட்டுவது முறையன்று',[1] என்கிறார் போலக்.

'சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து ஒருபாற் கோடாமை' மக்களிடையுள்ள உறவின் பண்பாகும் பொழுது, முறைசெய்வோர் எந்த அளவிற்கு 'நடுவு நிலை'யைப் பேணுதல் வேண்டும்? நீதி மனறத்தில் அமர்ந்து முறைசெய்வோர்கள் 'நடுவு நிலை' தவறாது ஒழுகுவதால்தான், அவர்களை 'நடுவர்கள்' என்று நாம் சிறப்பித்துக் குறிப்பிடுகிறோம்.

நீதி வழங்கித் தீர்ப்புக் கூறுவதை 'நடுவுகூறுதல்' என்று பண்டை நூல்கள் குறிக்கின்றன, நீதி வழங்கும் அவையத்தினரை.

"நவைநீங்க நடுவுகூறும் அவை மாந்தர்"

என்று புறப்பொருள் வெண்பாமாலை (வரி 173) கூறுகிறது.

"அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்
செற்றமும் உவகையும் செய்யாது காத்து
ஞெமன்கோ லன்ன செம்மைத் தாகிச்

சிறந்த கொள்கை அறங்கூ றவையம்".

என்று மதுரைக் காஞ்சியிலே அறங்கூறவையத்தினரின் 'ஞெமன் கோலன்ன' செம்மையினைக் காணுகிறோம்.

எனவே, ஒருதலைச் சார்பின்றி நடுவுநிலை நின்று (இறைபுரிந்து) நடுவுரை வழங்க வேண்டும் என்பது சட்டமும் குறளும் கூறும் நெறியாகும்.

[1] Rules of law being once declared, the rule must have the like application to all persons and facts coming within it. Respect of persons is incompatible with justice - Pollock in 'Jurisprudence'.

வழக்கினை ஓர்தல்

முறைசெய்வோர் முதலாவதாக வழக்கின் கூறுகளை நன்கு ஓர்தல் வேண்டும். வழக்கில் அடங்கும் பல்வேறு கூறுகளையும் ஆராய்ந்த பின்தான், அவ்வழக்கின் இயல்பினை நடுவர் உணர்தல் இயலும். ஆதலால், வழக்கின் தன்மையை ஆராய்ந்து அறிதல் முறைசெய்வோரின் முதற்கடனாகிறது. இந்த ஆராய்ச்சியை 'ஓர்தல்' என்று குறள் குறிக்கிறது.

முடிவினைத் தேர்ந்து கூறுதல்

வழக்கின் கூறுகளை ஓர்ந்து, கண்ணோட்டம் இன்றி, இறைபுரிந்து, அதன்பின்னர்த் தீர்ப்புக் கூறுகின்றனர். அந்தத் தீர்ப்பினையுந் தேர்ந்து கூறவேண்டும் என்கிறது அறநூல்.

பல குற்றங்களுக்கும் தண்டனையின் உச்ச அளவினையே சட்டம் கூறுகிறது. அந்த அளவிற்கு உட்பட்டு எந்த அளவு தண்டனை விதிக்க வேண்டுமென்பது நீதிபதியின் உளத்தேர்வைப் (discretion) பொறுத்தது. திருட்டுக் குற்றத்திற்கு மூன்றாண்டுக் காலம்வரை சிறைத் தண்டனை விதிக்கலாம் என்று சட்டம் கூறினாலும், திருடர்கள் ஒவ்வொருவருக்கும் மூன்றாண்டுச் சிறைத் தண்டனையை நீதிமன்றத்தினர் விதிப்பதில்லை. திருட்டுக் குற்றத்திலடங்கிய செயலுக்கேற்பத் தண்டனையின் அளவினை நீதிபதிகள் தீர்மானிக்கின்றனர். ஒரு குற்றத்திற்குச் சிறைத் தண்டனை அல்லது அபராதம் என்று சட்டம் விதிக்கிறது. அக்குற்றத்தைச் செய்த சிலருக்குச் சிறைத் தண்டனையையும் சிலருக்கு அபராதத்தையும் நீதிமன்றத்தினர் விதிக்கின்றனர். ஒரே குற்றத்தைச் செய்த முதற் குற்றவாளிக்கு அபராதம் விதிக்கப் படலாம். பழங் குற்றவாளிக்குச் சிறைத் தண்டனை விதிக்கப் படலாம். இளங் குற்றவாளிகளைத் திருத்துவதற்கென்ற தண்டனை வேறு; கொடுங்குற்றவாளிகளுக்கு விதிக்கப்படும் தண்டனை வேறு. இவ்வாறு, தண்டனையின் அளவும் முறையும் நீதிமன்ற நடுவரின் உளத்தேர்வைப் பொறுத்தே அமைகின்றன. அம்மாதிரியே ஏழை நிலையிலுள்ளோருக்குக் கடனைச் செலுத்துவதற்குத் தவணைச் சலுகை அளிக்கும் நீதிமன்றம் அதே சலுகையைப் பணம் படைத்தவருக்கு அளிப்பதில்லை. இன்னும் எவ்வளவோ முறைகளில் வழக்குகளிலே அளிக்கப்பெறும் தீர்ப்புகள் நீதிமன்ற நடுவர்களின் உளத்தேர்வையொட்டி அமைகின்றன.

ஒரே மாதிரியான 'குற்ற வழக்கு'களில் விதிக்கப்படும்

தண்டனையின் அளவும், ஒரே வகையான 'உரிமை வழக்கு'களில் அளிக்கப்படும் பரிகாரங்களும் (remedies) ஒரே சீராகத்தானே இருக்கவேண்டும்? நீதிபதிகளின் உளத்தேர்விற்கேற்ப அவை மாறினால், அது சட்டத்தின் சமநிலை நோக்கிற்கு மாறான தன்றோ என்று நாம் நினைக்கலாம். ஆனால், சட்டத்தின் பொதுவிதிகளைச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப இசையும்படி செயற்படுத்துவதுதான் சமநிலைச்சீர்மைக்கு உகந்ததாகும். எல்லாச் சூழ்நிலைகளையும் எதிர்பார்த்து அவற்றிற்கேற்ப எண்ணிறந்த சட்டவிதிகளை இயற்றுவது இயலுவதன்று. எனவே, பொதுவான சட்ட விதியை வழக்கிற் காணப்படும் சூழ்நிலை களுக்கேற்பப் பொருத்தமாகச் செயற்படுத்துவதே முறையாகும். ஆதலால், நீதிபதிகள் காட்டும் உளத்தேர்வு சமநிலைக் கொள்கைக்கு மாறுபட்டதன்று; சமநிலைக் கொள்கையைச் சரிவர நிறைவேற்றுவதற்கு அதுவே உதவுகிறது என்று கூறலாம்.[1]

வழக்கின் கூறுகளை ஓர்தல் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியமானது தேர்ந்து முடிவு சொல்லுதல் என்பது இப்பொழுது தெளிவாகும்.

இவ்வாறு, 'வழக்கின் தன்மையினை ஓர்தல், கண்ணோடாமை, நடுவுநிலை நின்று இறைபுரிதல், தேர்ந்து முடிவு கூறுதல், இந்நான்கு கூறுகளும் முறைசெய்யும் முறைமையில் அடங்குவன'என்று வள்ளுவர் தெளிவாகக் கூறுகிறார்.

ஓர்ந்து கண்ணோடாது இறை புரிந்து யார்மாட்டும்
தேர்ந்து செய்வஃதே முறை

(குறள்,541)

முறைசெய்யும் முறைமையை இவ்வளவு தெளிவாகவும், வரையறை செய்தும் கூறும் விளக்கம் ஆங்கிலச் சட்ட இயல் நூல்களிலுங் கூட இல்லையென்றே சொல்லலாம்.

---

[1] Judicial discretion is not an exception to the principle of equality, but comes in aid of it where an inflexible rule omitting to take account of conditions that cannot be defined before-hand would really work inequality - Pollock in 'Jurisprudence'.

குற்றமும் தண்டனையும்
(Crime and Punishment)

['குற்றம்' என்றால் என்ன?–'குற்றமனம்', 'கடும் சான்றுறுத்தும்' என்ற கோட்பாடுகள் — தண்டனையின் இன்றியமையாமை — தண்டனையின் அளவு — (குற்றத்தின் தன்மை, குற்றத்தின் நோக்கம், குற்றவாளியின் பண்பு நிலை) — 'தக்காங்கு நாடி ஒத்தாங்கு ஒறுத்தல்' — குற்றவாளிகள் எவ்வாறு உருவாகின்றனர்? — தண்டனையின் நோக்கம் — 'அச்சுறுத்துவது தண்டனை' என்ற கொள்கை — 'பழிவாங்குவது தண்டனை' என்ற கொள்கை — 'குற்றங்களைத் தடுப்பது தண்டனை' என்ற கொள்கை — 'சீர்திருத்துவது தண்டனை' என்ற கொள்கை — இறுதியுரை]

'குற்றம்' என்றால் என்ன?

'குற்றம்' என்றால் என்ன? சட்டத்தில் 'குற்றம்' என்ற சொல் எதைக் குறிக்கின்றது?

'குற்றம்' என்றதும் 'தண்டனை' என்பது நம் நினைவில் வருகின்றது. தண்டனைக்குரிய செயலைத்தான் குற்றம் என்கிறோம்.

ஒரு செயல் தண்டனைக்குரியது என்று விதிப்பது யார்? அரசுதான் சில செயல்களைத் தண்டனைக்கு உரிய செயல்கள் என விதிக்கின்றது.

எந்த அடிப்படையில், இவ்வாறு சில செயல்கள் தண்டனைக்குரிய குற்றங்கள் எனச் சட்டம் விதிக்கின்றது?

குற்றச் செயல் தீங்கான செயலாக இருக்கவேண்டும் என நாம் நினைக்கிறோம். நான் வாங்கிய கடனைத் திரும்பக் கொடுக்காமல் இருப்பது தீங்கான செயல் (wrong) தான். அது குற்றமாகி விடுமா?

வாங்கிய கடனைத் திரும்பக் கொடுக்காமல் இருக்கும்

தீங்கு, கடன் கொடுத்தவரை மட்டுமே பாதிக்கின்றது. அதைத் 'தனிமத் தீங்கு' (Private wrong) என்று சட்டம் குறிக்கின்றது. தனிமத் தீங்கு தனிநபர்களை மட்டுமன்றி சமுதாயத்தையே பாதிப்பதாகச் சட்டம் கொள்கிறது. திருடும் செயலால் பாதிக்கப்படுபவர் திருட்டுக் கொடுத்த தனிநபராக இருந்தாலும், அச்செயல் சமுதாயத்தின் அமைதியைப் பாதிப்பதாகச் சட்டம் கருதுகின்றது. எனவே, தீங்கான அச்செயலைப் 'பொதுமத் தீங்கு' (Public wrong) என்று சட்டம் குறிப்பிடுகின்றது.

சமுதாயத்தைப் பாதிக்கும் இப் பொதுமத் தீங்குகளைச் சட்டம் தடை செய்கிறது; அவற்றைச் செய்பவர்களைத் தண்டனைக்கு உள்ளாக்குகின்றது. இவ்வகைத் தீங்குகளே குற்றங்கள் ஆகின்றன.

எனவே, தண்டனைக்குரிய சமுதாயத் தீங்குகள் என்று சட்டத்தால் விதிக்கப்படும் செயல்களே 'குற்றங்கள்' (Crimes) ஆகின்றன.

'சமுதாயத்தைப பாதிக்கும் வகையில் ஒன்றைச் செய்தலை அல்லது செய்யத் தவறுதலைச் சட்டம் தவிர்த்துத் தண்டனைக்கு உள்ளாக்குகிறது. இதுவே 'குற்றம்' எனப்படும்'[1] என்கிறார் ஆசிரியர் ஆஸ்பர்ன்.

ஏதாவது ஒரு தரநிலையின் (standard) அடிப்படையில் ஒரு செயலை அரசு குற்றம் எனக் கொள்ளுகிறதா என்றால், 'இல்லை' என்றுதான் கூற வேண்டும். ஒன்றைக் குற்றம் என்று கொள்ளுவதும் கொள்ளாததும் அரசின் விருப்பத்தைப் பொறுத்தது.

நம்நாட்டில், சில ஆண்டுகளுக்கு முன் பலதார மணம் குற்றம் ஆவதில்லை; இன்று இருதார மணம் குற்றமாகிறது. தமிழ் நாட்டில், சில ஆண்டுகளுக்கு முன் மதுக்குடிப்பது குற்றமாக இருந்தது; இன்று அது குற்றம் ஆவதில்லை.

ஒரு நாட்டில் குற்றமெனக் கருதப்படாத செயல் மற்றொரு நாட்டில் குற்றமாகக் கொள்ளப்படலாம். ஒரு நாட்டிலேயே ஒரு காலத்தில் குற்றமற்ற செயல் வேறொரு காலத்தில் குற்றச்

1 Crime is an act or default which tends to the prejudice of the community and forbidden by law on pain of punishment inflicted at the suit of the State
- Prof. Osborn

செயலாகலாம். சமுதாயத்தின் ஒழுக்க உணர்வுகளுக்கேற்பச் செயல்களின் குற்றத் தன்மை தோன்றலாம், மறையலாம். ஆதலால், குற்றச் செயல்களைக் குறியிட்டுக் காட்டுதல் இயலாது. எந்த ஒரு அளவையையும் வைத்து ஒரு செயலைக் குற்றம் என்றோ அல்ல என்றோ நாம் கூறுவதற்கில்லை. அரசின் விருப்பப்படியே ஒரு செயல் குற்றமாகிறது.

எனவேதான் கீழ்க்கண்டவாறு நீதிபதி லார்டு அட்கின் (Lord Atkin) குற்றம் என்பதற்கு விளக்கம் அளிக்கின்றார்:

'குறிப்பிட்ட காலத்தில், எந்தெந்தச் செயல்களைக் குற்றங்கள் என்று அரசு அறிவிக்கின்றதோ அச்செயல்களைப்பற்றி ஆய்வதுதான் குற்றஇயல் சட்டத்தின் பணியாகும். அச்செயல்கள் அரசால் தடைசெய்யப்பட்டவை; அவற்றைச் செய்வோர் தண்டிக்கப்படுகின்றனர் என்ற இருகூறுகள் மட்டுமே குற்றமான செயல்களின் பொது இயல்பாகக் காணப்படுகின்றன' (1931 AC. 310)

எனவே, அந்தந்தக் காலத்தில் நிலவும் சமுதாயக் கொள்கைகளுக்கேற்ப, அரசால் விலக்கப்பட்டு, தண்டனைக்கு உரிய செயல்களே 'குற்றங்கள்' எனச் சட்டத்தில் குறிக்கப் பெறுகின்றன.

அரசால் தண்டிக்கத் தக்கதான செயல்தான் குற்றம் என்ற முறையில், அரசின் தண்டனையே குற்றத்தின் சிறப்புத் தன்மையாகிவிடுகிறது. ஆதலால் 'தண்டனைக்குற்ற தீங்கு குற்றமாகும்',[1] என்கிறார் வின்பீல்டு.

இவ்வாறு ஒரு குற்றத்திற்கு விதிக்கப்படும் தண்டனை அக்குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் மனநிறைவுக்கென விதிக்கப் படுவதில்லை. ஒரு பொருளைத் திருட்டுக் கொடுத்தவர் திருட்டுக் குற்றம் செய்தவன் மீது இரக்கம் கொண்டு, அவனுக்குத் தண்டனை விதிக்க வேண்டாம் என்ற கருத்துடன் அக்குற்ற வழக்கை நிறுத்திக்கொள்ள முடியாது. அவ்வாறு, ஒரு குற்ற வழக்கை நடத்தாமல் நிறுத்திக் கொள்ள வேண்டுமெனில், அதற்கான ஏலுரிமை (power) அரசுக்கு உண்டு. இந்தக் கூறுபாட்டை முன்னிறுத்தி, குற்றத்திற்கான வரைவுரையினைக் கூறுகின்றார் ஆசிரியர் கென்னி: 'தண்டனைக் குற்ற தீங்குகளே குற்றங்கள்; அத்தண்டனையை மன்னிப்பது என்றால் அரசுதான் மன்னிக்க

1 Crime is a wrong the sanction of which involves punishment - P.H. Winfield.

முடியும்; தனிம நபரால் மன்னிப்பது இயலாது '.[1]

சமுதாயத்தின் பொது அமைதியைக் காக்கும் நோக்குடன் வளர்ந்த குற்றஇயல் சட்டமுறை, நாளடைவில், பொதுமக்களின் உடல்நலம், போக்குவரத்து ஒழுங்காறு, இவற்றைப் பொறுத்துள்ள விதிகளாலும் பல குற்றங்கள் உருவாகும் வகையில் இன்று விரிந்துள்ளது. கலப்பட உணவை விற்பது குற்றம்; விளக்கு இல்லாமல் இரவில் காரை ஓட்டுவது குற்றம்; வரிகளைக் காலவரம்பிற்குள் செலுத்தாமை குற்றம் என்று பல்வகைக் குற்றங்கள் இன்று பெருகியுள்ளன.

'குற்றமனம்', 'கடும்சான்றுறுத்தம்' என்ற கோட்பாடுகள்

குற்றங்களுக்கான பொறுப்படைவு தண்டனையாக இருப்பதால், குற்றமற்றவர்களும் குற்றத்தை வேண்டுமென்றே செய்யாதவர்களும் தண்டனைக்கு உள்ளாகி விடக்கூடாது என்பதில் சட்டம் அக்கறை கொள்ளுகிறது.

எனவே, முதலாவதாக, ஒருவரைக் குற்றவாளி எனத் தீர்மானிப்பதற்கு முன் அவர் குற்ற மனத்தோடு (guilty mind) குற்றச் செயலைச் செய்தாரா என்பதைச் சட்டம் உன்னிப்பாகக் கவனிக்கின்றது. (குற்றமனம் வேண்டுமென்ற கொள்கை பற்றி 'பொறுப்படைவு' என்ற தலைப்பில் விரிவாகக் கண்டோம்) இதற்கான விதிவிலக்கு சில வகைக் குற்றங்களுக்கே உண்டு.

அடுத்து, குற்றவழக்கிலே குற்றத்தை மெய்ப்பிக்கும் முறையில் கடுமையான சான்றுறுத்தம் (strict proof) வேண்டுமெனச் சட்டம் விதிக்கின்றது. குற்றம் சாட்டப்பட்டவரே குற்றம் இழைத்தார் என்பதையும், அவரைத் தவிர வேறு எவரும் அக்குற்றத்தைச் செய்திருக்க முடியாது என்பதையும் நேரிய ஐயப்பாட்டிற்குச் (reasonable doubt) சிறிதும் இடமின்றி மெய்ப்பிக்க வேண்டும் எனச் சட்டம் விதிக்கின்றது.

குற்றஇயல் நீதிமுறையில், குற்றமனக் கோட்பாடு, (Doctrine of mens rea) 'கடும் சான்றுறுத்தக் கோட்பாடு' (Doctrine of strict proof)' இரண்டும் அடிப்படைக் கோட்பாடுகளாக

1 Crimes are wrongs whose sanction is punitive, and is in no way remissible by any private person, but is remissible by the Crown alone, if remissible at all

அமைந்துள்ளன. இதனால், குற்ற வழக்கு விசாரணையில் கண்ணியமும் கருணையும், நடுவு நிலை பிறழாத நற்பண்பும் ஒளிரும் உயர்வினை நாம் காணுகிறோம்.

தண்டனை இன்றியமையாத தாகின்றது

குடிபுறம் காத்தோம்பிக் குற்றம்கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில் — (குறள் 549) என்பது அறநூலின் கூற்று.

குடிகளைக் காத்துப் பேணும் வகையில் குற்றங்களைத் தக்கபடியான தண்டனையால் ஒழித்தல் வேண்டும்; இவ்வாறு தண்டிப்பது பழி அன்று; அரசனின் தொழில் என்கிறார் அறநூலாசிரியர். எனவே, ஒறுத்தல் முறையின்றி ஒழுங்கான வாழ்க்கை முறை அமைவதில்லை.

ஆயினும், தண்டனை விதிப்பது என்பது ஒரு கலை, 'கையை உயரமாக ஓங்க வேண்டும்; ஆனால், அடி மெதுவாக விழ வேண்டும்' என்று தண்டனை முறையில் நுட்பத்தை நயம்படக் கூறுகின்றார் வள்ளுவர்:

கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர் — (குறள் 562)

தண்டனையின் அளவு (Measure of Punishment)

குற்றங்களுக்கான தண்டனையின் அளவு எவ்வாறு அறுதியிடப்படுகிறது என்று காண்போம்.

ஆதிகால நீதிமுறையில் அளிக்கப்பட்ட தண்டனைகள் கொடுமை நிறைந்தனவாக இருந்தன. குற்றவாளிகளின் உடலுறுப்புகளை வெட்டிவிடுவது போன்ற சித்திரவதைத் தண்டனைகள் உலகில் பல நாடுகளிலும் கையாளப்பட்டன. இங்கிலாந்தில் கான்யூட் (Canute) மன்னன் காலத்தில், கற்பிழந்த பெண்ணின் காதுகளையும் மூக்கையும் அரிந்து விடுவது வழக்கமாக இருந்தது. நம் நாட்டிலும் சித்திரவதைத் தண்டனைமுறை நிலவியது. கசையடி கொடுக்கும் தண்டனை அண்மைக்காலம் வரை நம் நாட்டுச் சட்டத்தில் இருந்தது. 1955 — ஆம் ஆண்டில்தான் அத்தண்டனையை நீக்கினார்கள். நாகரிகம் வளர்ந்துள்ள சமுதாயத்தில் சித்திரவதைத் தண்டனைகள்

அகற்றப்பட்டு விட்டன. 'கையிகந்த தண்டம்' அதாவது, அளவு மீறிய தண்டனை அரசனின் வலிமையை நாளடைவில் நலியச் செய்யும் என்கிறார் வள்ளுவர். (குறள் 567)

இப்போது, நீதிமன்றங்கள் தண்டனை விதிப்பதற்கு முன் முக்கியமாக மூன்று கூறுகளை ஆய்கின்றன:

1. குற்றத்தின் தன்மை
2. குற்றம் இழைக்கப்பட்டதன் நோக்கம்
3. குற்றவாளியின் பண்புநிலை.

குற்றத்தின் தன்மை

குற்றங்களின் கொடுமைக்கேற்பத் தண்டனையின் கடுமை அமைகின்றது. திருட்டுக் குற்றத்திற்கு ஓராண்டுகாலம் சிறைத் தண்டனை என்றால், வீடு புகுந்து திருடுபவனுக்கு அதிகத் தண்டனையும், வல்லந்தமாகப் பொருளைப் பறிப்பவனுக்கு இன்னும் அதிகத் தண்டனையும், கொலை செய்தவனுக்கு மரண தண்டனையும் விதிக்கப்படுகின்றன.

திருட்டுக் குற்றத்திற்கும் கொலைக் குற்றத்திற்கும் மரண தண்டனை என்று சட்டம் விதித்தால், திருடத் துணிபவன் கொலை செய்யவும் துணிந்துவிட ஏதுவாகிறது. எனவே, குற்றங்களின் கொடுமைக்குத் தக்கவாறு தண்டனையின் கடுமை உள்ளது. இவ்வாறு அமைவதே நேர்மையாகும்.

குற்றம் இழைக்கப்பட்டதன் நோக்கம்

ஒரு செயல் குற்றமா அல்லவா என்பதைத் தீர்மானிப்பதற்குச் சட்டம் குற்றம் இழைத்தவரின் கருத்தையே (intention) காண்கிறது; நோக்கத்தைக் காண்பதில்லை என்று முன்னர்க் கண்டோம். ஆனால், குற்றத்திற்கான தண்டனை விதிக்கும் பொழுது, அக்குற்றம் எந்த நோக்கத்துடன் செய்யப்பட்டது என்பதை நீதிமன்றம் ஆய்கின்றது.

பசியின் கொடுமையால் பழம் ஒன்றைத் திருடுவதற்கும், பணத்தின் ஆசையால் இளைத்தவர் பையிலிருந்து பணத்தை எடுப்பதற்கும் எவ்வளவு வேறுபாடு? இரண்டும் திருட்டுக் குற்றம் என்றாலும் ஒரே தண்டனை விதிப்பது பொருந்தாதல்லவா?

வேண்டுமென்றே திட்டமிட்டுக் கொலை செய்வதற்கும், விளைக்கப்பட்ட அவமானத்தால் திடீரென்று ஆத்திரம் கொண்டு கொன்று விடுவதற்கும் உள்ள வேறுபாட்டைச் சட்டம் கவனிக்கின்றது.

பத்து ரூபாய் நகைக்காகப் பச்சிளஞ் சிறார்களைக் கொல்லும் பாதகர்கள் மீது பரிவு காட்டுவதில்லை நீதிமன்றங்கள்.

ஒரு குற்றத்தைச் செய்வதற்கான உந்துதல் எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ, அவ்வளவு கடுமையாக அக்குற்றத்திற்கான தண்டனை இருக்க வேண்டும் என்பது பொதுவான கொள்கையாகும். எனவேதான், காமவெறியால் உந்தப்பட்டுக் கற்பழிக்கும் கயவனுக்குக் கடுமையான தண்டனை விதிக்கின்றது சட்டம். காமவெறி என்றது இழிந்த மனநிலையில் எழும் உந்துதலாகும். இத்தகைய இழிந்த உந்துதலை அடக்குவதற்குக் கடுந்தண்டனை என்ற அச்சுறுத்தல் தேவையாகிறது. இதற்கு மாறாக உயர்ந்த மனநிலையில் உதிக்கும் உந்துதலும் உண்டு. மது ஒழிப்புச் சங்கத்தில் சேர்ந்த தொண்டர்கள் இருவர், மது அருந்தும் மடமையினை ஒழிக்க வேண்டும் என்ற ஆர்வத்தால் ஒரு மதுக்கடையினுட் புகுந்து மதுப்புட்டிகளை எடுத்து உடைத்து விடுகின்றனர் என்று வைத்துக்கொள்வோம். இவர்கள் செயலும் குற்றந்தான். ஆயினும், உயர்ந்த நோக்கத்தால் உந்தப்பட்டுச் செயல்புரிந்த இவர்கள் மீது சட்டம் பரிவுகாட்டிக் குறைந்த தண்டனை விதிக்கின்றது.

இவ்வாறு, குற்றம் இழைத்தவரின் நோக்கத்தையும் இதர சூழ்நிலைகளையும் ஆய்ந்து தண்டனையின் அளவு அறுதியிடப்படுகிறது.

குற்றவாளியின் பண்பு நிலை:

நாம் அனைவருமே சட்டத் தண்டனைக்கு அஞ்சியே குற்றம் இழைக்காமல் இருக்கிறோம் என்று கூறுவதற்கில்லை. தன்மானம், புகழ்வேட்கை, பிறர் மதிப்பைப் பேணல், இயல்பான ஒழுக்கம், இறையுணர்வு இவை போன்ற நற்பண்புகளே, நம்மைக் குற்ற வழியில் செல்லாமல் தடுக்கின்றன. ஏதோ ஒருசிலர்தாம் இப்பண்புகள் இன்றிக் குற்றச் செயல்களில் இறங்கி விடுகின்றனர்.

நல்லோர்களும் உள்ளம் உறுதியற்ற நிலையில் இழிவான குற்றங்களில் இடறிவீழ்கின்றனர். இவர்களைச் சட்டம் பரிவுடன்

பார்ப்பது இயல்பேயாகும். தீங்குகள் புரிவதிலேயே திளைத்து நிற்போர் தண்டனை பெற்றும் தயங்காமல் மீண்டும் குற்றத் தொழிலில் ஈடுபடுகின்றனர். இந்த வாடிக்கைக் குற்றவாளிகளை (habitual offenders) வன்மையாகத் தண்டிக்கிறது சட்டம்.

அற்பமான பொருளைக் கருதி அடாத குற்றங்களை இழைப்போர், ஈரமில்லா நெஞ்சோடு ஈனக் குற்றங்களை இயல்பாகச் செய்வோர் இவர்களைக் குணநலமில்லாக் கொடியோர்கள் எனக் கொண்டு கடுந்தண்டனை விதிக்கப்படு கிறது. பெற்ற தந்தையைக் கூடக் கொல்லும் பித்தர்களும் உள்ளனர் உலகில். இவர்களை மனித நலமில்லா மாக்கள் எனக் கொண்டு கடுமையாகச் சட்டம் தண்டிக்கின்றது. தூக்குத் தண்டனையையும் துச்சமாகக் கருதும், வீரர்களை அல்ல, வெறியர்களைச் சட்டம் சமாளிக்க வேண்டியிருக்கிறது.

கொடுங்குற்றவாளிகளுக்குக் கடுந்தண்டனை விதிக்கும் சட்டம், முதற் குற்றவாளிகளையும் முதிராத நிலையிலுள்ள இளங்குற்றவாளிகளையும் பரிவுடன் கண்டித்து விட்டு விடுவது, சீர்திருத்தப் பள்ளிகளில் சேர்ப்பது போன்ற முறைகளைக் கையாண்டு திருத்த முயலுகிறது.

குற்றத்தை மட்டும் பார்க்காமல் குற்றவாளியையும் கருத்திற்கொண்டு தண்டிக்க வேண்டும் என்பது குற்றஇயல் நீதிக் கொள்கையாகும்.

'தக்காங்கு நாடி ஒத்தாங்கு ஒறுத்தல்'

'குற்றத்தின் தன்மை, அது செய்யப்பட்ட இடம், காலம், இவற்றோடு குற்றவாளியின் வலிமை, வயது, குணம், செல்வம் முதலியவற்றையும் ஆராய்ந்துதான் தண்டனை விதிக்கப்படுதல் வேண்டும்'— யாக்ஞவல்கியர் — அத்: 1-பிரிவு 13: விதி 368.

தண்டனை முறையின் அடிப்படையான நோக்கம் குற்றங்கள் நிகழாமல் தடுப்பதேயாகும். எனவே, குற்றவாளியைத் தண்டிப்பது மீண்டும் அவன் குற்றங்கள் செய்யாமல் தடுக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடுதான்.

தண்டனை முறையின் தகைமைகள் அனைத்தையும் எடுத்துக் கூறும் குறள் இது:

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து (குறள் 561)

'தலைச் செல்லா வண்ணம் ஒறுத்தல் வேண்டும்', என்கிறார் வள்ளுவர். 'தலைச்செல்லா வண்ணம்' என்றால் மீண்டும் குற்றத்தைச் செய்யா வண்ணம் என்பது பொருள். குற்றத்தைத் தடுப்பதே (prevention of crime) தண்டனையின் குறிக்கோள் என்பதை இங்குக் காண்கிறோம்.

குற்றத்திற்குத் தக்கபடி தண்டனை என்பது 'தக்காங்கு நாடி' ஒறுத்தல் வேண்டும் என்பதில் அடங்கியுள்ளது.

குற்றவாளிக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்பத் தண்டனை அமைதல் வேண்டும் என்பதை 'ஒத்தாங்கு ஒறுத்தல்' என்பது வலியுறுத்துகிறது.

'தக்காங்கு நாடி ஒத்தாங்கு ஒறுத்தல்' என்ற தொடர் எத்தகைய பொருளை உள்ளடக்கி விளக்குகிறது?

'தலைச் செல்லா வண்ணம்' ஒறுத்தல் அமைய வேண்டும்; அதற்குத் 'தக்காங்கு நாடி ஒத்தாங்கு ஒறுத்தல் வேண்டும்'. இது அரசின் கடமை என்கிறார் வள்ளுவர்.

இதுவே, தண்டனையின் அளவை அறுதியிடும் இன்றைய சட்டநெறியாகும்.

குற்றவாளிகள் எவ்வாறு உருவாகின்றனர்?

குற்றவாளிகள் எவ்வாறு உருவாகின்றனர்? குற்றங்கள் இழைக்கப்படுவதன் காரணம் என்ன? இந்த வினாக்கள் இடைவிடாது கேட்கப்படுகின்றன. இவற்றுக்கு விடைகள் கண்டுபிடிக்கும் முயற்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இருப்பினும் இசைவான விடைகளை இன்னும் கண்டுபிடித்த பாடில்லை.

உடலமைப்பின் காரணமாகக் குற்றவாளிகள் உருவாகின்றனர் என்பது லோம்ப்ரோஸா (Lombroso) என்பவரின் கொள்கை. பிற்காலத்தில் வந்த குற்ற நூலறிஞர்கள் இதை ஏற்கவில்லை. வயது, பால், இனம் இவற்றின் அடிப்படையில் ஆராய்ச்சிகள் நடந்தன. வறுமைதான் குற்றங்களுக்குக் காரணம் என்று கூற முடிவதில்லை. செல்வம் உடையவர்களும் குற்றங்களில் ஈடுபடுகின்றனர். அறிவுநிலை மட்டமாக உள்ளவர்கள் குற்றங்களில் அதிகமாக ஈடுபடுவதாகச் சிலர் கருதினர். ஆனால், கூரிய அறிவுடையோரும் குற்றங்கள் இழைப்பதில் கூசாமல் ஈடுபடுவது

மன்றி, தம் அறிவுத் திறனைப் பயன்படுத்திக் குற்றத் தொழிலை நுட்பத்தொழிலாகவும் மாற்றுகின்றனர்.

பொதுவாக, சிற்றூர்களை விட நகரங்களில் குற்றங்கள் அதிகமாக உள்ளன. நெருக்கமாக மக்கள் வாழும் நகரப் பகுதிகளில் குற்றவாளிகளின் சதவிகிதம் அதிகமாக உள்ளது. நாகரிக வளர்ச்சியால் குற்றங்கள் மறையவில்லை; மாறாக, குற்றங்களைச் செய்யும் திறனில் முன்னேற்றம் உள்ளது.

எனவே, குற்றங்கள் இன்ன காரணத்தால் தான் செய்யப்படுகின்றன என்று குறிப்பிட்டுக் கூற இயலுவதில்லை. பண்புநலமின்மையே பலகுற்றங்களுக்குப் பிறப்பிடம் என்று கூறப்படுகிறது. பண்புக்கேடு எவ்வாறு விளைகின்றது? பரம்பரையாக அது வருவது என்பார் சிலர்; சூழ்நிலை காரணமாகத் தோன்றுவது என்பார் சிலர். இரண்டும் இணைந்தே இதைத் தோற்றுவிக்கின்றன என்றும் கூறுகின்றனர்.

ஒரே பெற்றோர்க்குப் பிறந்த பிள்ளைகள் பலதிறப்பட்டு இருப்பதைக் க்ாணுகிறோம். உள நூலறிவும் (Psychology), உயிர் நூலறிவும் (Biology) ஓரளவு இத்துறை ஆராய்ச்சிக்கு உதவு கின்றன.

பெற்றோர்கள் தம் பிள்ளைகளை நடத்தும் விதம், அவர்களுக்குப் பயில்விக்கும் பண்பாடு இவற்றுக்கு ஏற்பப் பிள்ளைகளின் மனப்பக்குவம் உருவாகின்றது. சமுதாயச் சூழலே இசைந்திருப்பதும் இல்லாததும் வளரும் குழந்தைகளின் மன வளர்ச்சியின் போக்கைப் பொறுத்ததாகின்றது. பெற்றோர்களால் பேணப்படாமல், வறுமையிலே வாடி வளரும் சிறார்கள் நாளடைவில் சமுதாயத்தின் மீது வெறுப்புக் கொள்ளும் நிலை தோன்றுகிறது. அன்பு நீரும், அரவணைப்பு உரமும் இன்றி எப்படியோ வளரும் சிறார்கள் என்ற செடிகள், மணங்கம்ழும் மலர்ச் செடிகளாக வளராமல் மட்டமான கள்ளிச் செடிகளாக மாறிவிடுகின்றனர்.

தண்டனையின் நோக்கம் என்ன?

குற்றம் இழைத்தவர்களைச் சட்டப்படி தண்டிக்கும் பொழுது, நீதிமன்றங்கள் குற்றவாளிகள் சமுதாயத்தில் தோன்றுவதற்கான பின்னணியினை மறப்பதற்கில்லை. எனவே, சட்டம் விதிக்கும் முறையில் நீதிபதிகள் தண்டனையை

வழங்கினாலும், அத்தண்டனையால் விளையும் பயனையும் அவர்கள் சிந்திக்க வேண்டியுள்ளது. தண்டனைக்காகவே தண்டனை விதிப்பதில்லை.

இந்நிலையில் தண்டனை விதிப்பதன் நோக்கம் என்ன? என்ற வினா எழுகின்றது.

'அச்சுறுத்துவது தண்டனை' என்ற கொள்கை

'எல்லா உயிர்களும் தண்டனைக்கு அஞ்சியே ஒழுகு கின்றன. தண்டனை முறையின் பயனாகத்தான் வாழ்வதற்கு உகந்த இடமாக உலகம் அமைகின்றது. தண்டனையினாலேயே உலகம் திருத்தப்பட வேண்டும்'. (மனு: அத்:7: விதி 22)

சிறைத் தண்டனையை அனுபவிக்கும் குற்றவாளிக்கு உடலில் வேதனையும் உள்ளத்தில் அச்சமும் தோன்றுகின்றன. இதனால், எதிர் காலத்தில் குற்றங்கள் செய்வதற்கு அவன் அஞ்சுகிறான். குற்றவாளி தண்டனையில் உழல்வதைச் சமூகத்தில் உள்ள பிறரும் பார்க்கின்றனர். குற்றங்கள் புரிந்தால் இது போன்ற தண்டனைக்குத் தாமும் உள்ளாக வேண்டும் என்ற அச்சம் அவர்கள் மனத்திலும் எழுகின்றது. குற்றம் செய்வதில் ஓரளவு நாட்டமுள்ளவர்களும், குற்றவாளி படும் பாட்டைக் கண்டு மனம் திருந்துகின்றனர். இந்த வகையில், தண்டனை அதை அனுபவிக்கும் குற்றவாளியையும் அச்சுறுத்துகிறது; பிறரையும் அச்சுறுத்தி நல்வழி நிற்கச் செய்கிறது.

குற்றம் செய்யும் நிலையில், குற்றவாளியின் எண்ணம் எப்படி இயங்குகிறது? தான் செய்யும் குற்றத்தால் பிறருக்குக் கேடு விளைகிறது; ஆனால், தனக்கு நன்மை விளைகிறது என்று எண்ணுகிறான். பிறருக்குத் தீமை செய்வதன்மூலம் தனக்கு நன்மை கிடைப்பதாக அவன் கருதுகிறான். தான் செய்த தீமையால் தனக்கே கேடு சேர்கின்றது என்பதைத் தண்டனையை அனுப விக்கும் பொழுதுதான் அவன் உணருகின்றான். தான் செய்த தீமைச்செயல் நிழல் போல் தன்னையே தொடர்ந்து வந்து கேடு விளைக்கின்றது என்ற உண்மையைத் தண்டனையின் வாயிலாக ஒருவன் உணருகிறான்.

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடிஉறைந் தற்று — (குறள் 208)

என்று தண்டனையின் மெய்த்தன்மையினைப் பொய்யாமொழி உணர்த்துகின்றது.

தான் செய்த குற்றத்தால் தனக்கே கேடு விளைகின்றது என்பதைத் தண்டனையின் வழி உணரும் குற்றவாளி தண்டனையின் அச்சத்தால் மனம் திருந்துகிறான். விதிக்கப்படும் தண்டனை குற்றவாளியையும் பிறரையும் அச்சுறுத்தி, இனிக் குற்றம் செய்வதைத் தடுக்கும் வகையில் அமைகின்றது.

இவ்வாறு, 'அச்சுறுத்தித் தடுக்கிறது தண்டனை' என்பதை ஆங்கிலத்தில் 'Deterrent Theory of punishment' என்பார்கள்.

'அச்சமே கீழ்களது ஆசாரம்' என்பது குறள் நெறி. கீழ்மக்கள் ஒழுக்கத்துடன் வாழ்வது அச்சத்தால்தான் என்கிறார் வள்ளுவர். தண்டனையால் எழும் அச்சமே கீழ்மக்களை நல் வழியில் நிறுத்துகிறது.

'பழி வாங்குவது தண்டனை' என்ற கொள்கை

தீமையை அகற்ற வேண்டும், தீயோரை ஒறுத்தல் வேண்டும் என்ற உணர்வு நமக்கு இயல்பாகவே எழுவதாகும். குற்றம் இழைத்தவன் தண்டனை பெறாமல் தப்பிவிடக் கூடாது என்று இயற்கையாகவே நம் மனம் ஏங்குகிறது. குற்றத்திற்குத் தக்க தண்டனை விதிக்கப்பட்டவுடன் ஒரு மனநிறைவு நமக்கு ஏற்படுகின்றது. இவ்வாறு, அக்கிரமத்திற்கு எதிராக ஆத்திரம் கொள்ளுதல் மனிதனின் மாண்பாகும்.

குற்றங்களுக்கு எதிரான இத்தகைய சீற்றம், மக்களிடையே நிலவுவது சமூக நல்வாழ்விற்கு உகந்ததேயாகும். குற்றவாளிமீது பழிதீர்க்க வேண்டும் என்ற சமுதாய உணர்வைச் சட்டம் புறக்கணிப்பதற்கில்லை. குற்றவாளி இழைத்த குற்றத்திற்குக் கழுவாயாக அவன் தண்டனையின் அழுந்த வேண்டும் என்ற நம் ஆர்வத்தைச் சட்டம் மதிக்கின்றது.

'திருமணத்திற்கும் சிற்றின்ப வேட்கைக்கும் உள்ளது போன்ற உறவைக் கொண்டது குற்றவியலும் பழிதீர்க்கும் ஆர்வமும்'[1] — என்கிறார் ஸ்டீஃபன்.

[1] The criminal law stands to the passion of revenge in much the same relation as marriage to the sexual appetite - Sir James Stephen.

இந்த அடிப்படையில் தான், பழங்காலத்தில் சில நாடுகளில், ஒருவன் இன்னொருவனின் கையை வெட்டிவிட்டால், அதற்குத் தண்டனையாகக் குற்றவாளியின் கையை வெட்டினார்கள், மனுநீதிச் சோழமன்னனின் மகன் தனது தேரை ஓட்டி ஒரு பசுவினது கன்றைக் கொன்றுவிட்டான். கன்றை இழந்த பசுவின் நிலை கண்டு இரங்கிய மன்னன், அக்குற்றத்திற்குக் கழுவாயாக, குற்றம் செய்த தன்மகன் மீது தேரைச் செலுத்தினான் என்பது புராணநீதிக் கதை.

ஒருவன் செய்த குற்றத்தால் தீங்குற்றவர் தனிநபராக இருந்தாலும், அக்குற்றம் சமூகத்திற்கு எதிரான செயலேயாகும். எனவே, சமூகம் அக்குற்றவாளிக்குத் தண்டனை விதித்து அவன்மீது வஞ்சம் தீர்த்துக் கொள்கிறது. இழைத்த குற்றத்திற்குப் பழிவாங்கும் வகையில் அவனுக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது.

இவ்வாறு, பழிவாங்கும் வகையில் தண்டனை விதிக்கப் படுகிறது என்ற கொள்கையை ஆங்கிலத்தில் 'Retributive Theory of punishment' என்பார்கள்.

பழிவாங்கும் கொள்கையினை இன்றைய சட்டஅறிஞர்கள் பலரும் ஏற்பதில்லை. ஏனெனில் தண்டனையின் பயனைப் பற்றிக் கருதாமல் தண்டனைக்கான காரணத்தை மட்டுமே இக்கொள்கை கூறுகின்றது. சமுதாயத்தின் சீற்றத்திற்கு இலக்காகும் குற்றவாளியின் எதிர்காலம் பற்றி இக்கொள்கை ஏதும் கூறுவதில்லை. கருதிச் செய்த தீங்கிற்குக் கழுவாயாக மட்டுமே தண்டனையைக் காண்கிறது இக்கொள்கை.

'குற்றங்களைத் தடுப்பது தண்டனை' என்ற கொள்கை

தண்டனையால் குற்றவாளிகளுக்கும் குற்ற நாட்டம் உள்ளவர்களுக்கும் அச்சம் ஏற்படுகிறது என்பது உண்மைதான்; 'பழிவாங்க வேண்டும்' என்ற சமுதாயத்தின் உணர்ச்சி தணிகின்றது என்பதும் உண்மைதான். எனினும், குற்றச்செயல்களில் இருந்து சமுதாயத்தைப் பாதுகாப்பதுதானே சட்டத்தின் தலையாய கடமை? இவ்வாறு பாதுகாப்பதற்குக் குற்றங்களைத் தடுப்பதே முக்கியமாகின்றது.

குற்றங்களைத் தடுப்பதற்கு ஏற்ற வழி குற்றவாளிகளைச் சிறையில் அடைப்பதுதானே? திருடியவனைச் சிறையில்

அடைத்தால், சிறையில் இருக்கும் வரை திருடும் வாய்ப்பு அவனுக்கு இல்லை. சிறைத் துன்பம் அவன் மனத்தைத திருத்தி, மீண்டும் அவன் அக்குற்றத்தைச் செய்யாதவாறு தடுக்கின்றது. ஆதலால், குற்றங்களைத் தடுப்பதற்குத் தண்டனை அவசிய மாகின்றது.

நச்சுப்பாம்பை நாம் ஏன் அடித்துக் கொல்லுகிறோம்? அதை உயிருடன் விட்டால் நம்மைக் கடித்துவிடலாம் என்பதால் தான். இந்த அடிப்படையில்தான் கொலைக் குற்றம் செய்த வனுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. கொலையாளியைக் கொன்றுவிட்டால் அவன் மீண்டும் அதே குற்றத்தைச் செய்யும் வாய்ப்பு ஏது? அவன் வாழ்ந்தால் மீண்டும் மற்றொரு கொலையை அவன் செய்துவிடலாம். அது முற்றுமாகத் தடுக்கப் படவேண்டும் என்பதற்காகத்தான் கொலைக் குற்றவாளியின் வாழ்வே மரண தண்டனையின் வாயிலாக முடிக்கப்படுகிறது.

சமுதாயம் என்ற பயிர் காக்கப்பட வேண்டுமெனில், கொலைக் குற்றவாளிகள் என்ற களைகள் அகற்றப்பட வேண்டும். பயிருக்குக் கேடு விளையாமல் தடுப்பதற்காகக் களையெடுப்பது போன்றது, கொலைக் குற்றவாளிகளை உலகிலிருந்து அகற்றுவது என்ற உண்மையினை உணர்த்துகிறது இக்குறள்:

கொலையிற் கொடியாரை வேந்துஒறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர் — (குறள் 550)

'குற்றங்களைத் தடுப்பது தண்டனை' என்ற கொள்கையை Preventive Theory of punishment என்பார்கள்.

'சீர்திருத்துவது தண்டனை' என்ற கொள்கை

'அச்சுறுத்துவது தண்டனை' என்ற கொள்கை முற்றிலும் சரியானதாக இருந்தால் ஒருமுறை தண்டனை பெற்றவர் மீண்டும் குற்றம் இழைக்காமல் அல்லவா இருக்க வேண்டும்? மாறாக, கணிசமான குற்றவாளிகள் மீண்டும் மீண்டும் குற்றச் செயல்களில் இறங்குகின்றனரே! அப்படியானால், தண்டனை அச்சுறுத்துகிறது என்பதை முழுதுமாக ஏற்பதற்கில்லை. மேலும், சிறைத் தண்டனையின் பயனாகக் குற்றவாளி சில வேளைகளில் ஊறிப்போன குற்றவாளியாக மாறிவிடுகின்றானே!

சிறையில் அடைத்துப் போடுவதன் நோக்கம் குற்ற வாளிக்குக் குற்றங்கள் இழைக்க வாய்ப்பில்லாமல் தடுப்பது

என்கின்றனர். தண்டனைக் காலம் முடிந்து வெளியே வரும் போது மீண்டும் அவனுக்கு அந்த வாய்ப்பு கிடைத்துவிடுகிறதே! உடலைச் சிறைப்படுத்துவதால் என்ன பயன்? அவன் உள்ளம் முன் போலவேதான் இருக்கிறது.

தமக்குக் கிடைக்க இருக்கும் மரணதண்டனைக்கு அஞ்சித்தான், கொலை செய்ய முனைவோர் அதைத் தவிர்க்கின்றனர் என்பது மரண தண்டனையை ஆதரிப்போரின் வாதமாகும். ஆனால், ஆத்திரத்தால் கொலை செய்ய முற்படுவோர் எவரும் தூக்குக் கயிற்றுக்கு அஞ்சி அச்செயலைக் கைவிட்டனர் என்று சொல்லுவதற்குப் போதிய ஆதாரம் இல்லை என்பது இங்கிலாந்தில் நியமிக்கப்பட்ட ஆணையத்தின் (Royal Commission) முடிவாகும்.

பையிலிருந்து பணத்தைத் திருடுவோர் இங்கிலாந்தில் ஒரு காலத்தில் பொது இடங்களில் தூக்கிலிடப்பட்டனர். இதைப் பார்ப்பதற்குக் கூடியிருந்த கூட்டத்தினரின் பைகளில் இருந்து பணம் திருடப்பட்டது என்று கூறுகின்றார் ஆசிரியர் கோஸ்லர் (Koestler). மரண தண்டனைக்குக்கூட அஞ்சாமல் திருடர்கள் தங்கள் தொழிலைத் துணிந்து செய்கின்றனர் என்பதற்கு இந் நிகழ்ச்சி உதாரணமாகக் கூறப்படுகிறது. ஆதலால், சில நாடுகளில் மரண தண்டனையைச் சட்டப்படி ஒழித்துவிட்டனர்.

எனவே, இக்காலத்தில், குற்றவாளியின் உடலை வருத்துவதை விட உள்ளத்தைத் திருத்துவதே முக்கியமானது என்று கருதுகின்றனர். சிறைத் தண்டனை என்பது அவனைச் சீர்திருத்தும் முறையில் அமைய வேண்டும் என்கின்றனர்.

தீயகருத்து இன்றித் தீச்செயல் எழுவதில்லை. தீயகருத்து குற்றவாளியின் மனத்தில் எதனால் தோன்றியது என்பதை அறிந்து, அக் காரணத்தை அகற்ற வேண்டும். அத்தீய கருத்து இனி அவன் மனத்தில் தோன்றாதவாறு செய்தல் வேண்டும். இதுவே தண்டனையின் நோக்கமாக இருத்தல் வேண்டும் என்பதை உள நூலறிஞர்கள் பலரும் வலியுறுத்துகின்றனர்.

உள்ளத்தில் நோயுள்ளவர்களின்செயலே பிறருக்கு நோயை விளைவிக்கிறது. மாசற்ற மனத்திலே மறுவுற்ற எண்ணங்கள் உதிப்பதில்லை. அழுக்காறு, அவா, வெகுளி முதலிய தீய குணங்களால் மனம் பீடிக்கப்பட்டிருக்கும் பொழுதுதான் தீச் செயல்கள் எழுகின்றன. எனவே, குற்றவாளிகளில் பெரும் பாலோர் நோயுற்ற மனத்தோடு உள்ளவர்கள். உடல்

நோயுள்ளவர்களுக்கு மருந்து கொடுப்பது போல், உளநோயுள்ள குற்றவாளிகளுக்கு அளிக்கப்படும் தண்டனை அவர்களுடைய உள்ளத்தைக் குணப்படுத்தித் திருத்த வேண்டும். தண்டனையின் குறிக்கோள் குற்றவாளியின் உள்ளத்தை வருத்துவதாக இன்றி, அதனை உயர்த்துவதாக அமைதல் வேண்டும். எனவே, குற்றவாளி நோயாளி ஆகின்றான்; தண்டனை மருந்தாகின்றது; நீதிபதி வைத்தியர் ஆகின்றார்.[1]

குற்றத்தை மட்டுமே கருத்தில் கொண்டு குற்றவாளிகளை நாம் மறந்துவிடுகிறோம். ஆதலால், தண்டனை நீண்டகாலம் பயனுள்ளதாக இருக்கவேண்டும் என்பதை நாம் கருத்திற் கொள்வதில்லை.

குற்றவாளிகள் அனைவரும் கொடியவர்கள் என்று கூறுதல் தகாது. நல்லவர்களும் கூட சூழ்நிலைகள் காரணமாக உள்ளம் தடுமாறி, உறுதி இழந்து குற்றங்களை இழைத்துவிடுகின்றனர். வறுமையால் வாடுவோரும், வஞ்சினத்தால் சாடுவோரும் தந்நிலை தடுமாறிக் குற்றங்களுக்கு இரையாகிவிடுகின்றனர்.

எனவே, குற்றவாளியின் குணநலம் என்ன; குற்றம் செய்யும் பொழுது அவனது மனநிலை என்ன என்பனவற்றை நன்கு ஆய்ந்து அதற்கு ஏற்பவே தண்டனை விதித்தல் வேண்டும். அப்போதுதான் தண்டனையால் பயன் விளையும் என்கிறார் பேட்டன் என்ற சட்டஅறிஞர்.[2]

'குற்றவாளிகள் மனநோயாளிகள் என்றும், சிறைகள் அவர்களுக்கான — உள நோய், ஒழுக்க நோய் — மருத்துவ மனைகள் என்றும் கூறும் காந்திய விளக்கமே, 'குற்றநோய் போக்கும் மருந்தாகிறது தண்டனை' என்ற கோட்பாட்டிற்கு ஆதாரமாக உள்ளது. உலகில் முற்போக்கு உடைய குற்றஇயல் வல்லுநர்கள் அனைவரும் இதனை ஒப்புக் கொள்கின்றனர்'.

1 'The Judge stands to the criminal in the position of the doctor who selects his remedy after diagnosing the disease and the resources of the patients' organisation' Vinogradoff in 'Historical Jurisprudence'

2 Punishment based on a real understanding of the mind of the particular criminal is more likely to be effective than that which makes out the same punishment for the same act irrespective of the individual's character Paton

இவ்வாறு அண்மையில் இந்திய நாட்டின் உச்சநீதி மன்றம் கூறியுள்ளது. (Justice V R Krishna Iyer - AIR 1977 S.C 1926)

குற்றவாளிகளுக்கு வந்த மனநோய் சமுதாயச் சூழ் நிலையால் விளைந்ததாகும். வறுமை என்ற நோயால் வாடும் சமுதாயத்தில் வாழ்வோர் சிலரைக் குற்றமனம் என்ற கொடு நோய் பற்றிக்கொள்ளுகிறது. சமுதாயம் விளைத்த அந்த நோயைச் சமுதாயமே தீர்க்கவேண்டும்.

பிழைப்பதற்கு வழியின்றிப் பெருங்குற்றங்கள் செய்வோர் பலர். அவர்கள் கண்ணியமாய் வாழ்வதற்குக் கைத்தொழில்கள் பலவற்றைக் கற்பித்தல் நலமாகும். சிறைக் கூடங்கள் சித்திரவதைக் கூடங்கள் ஆகாமல் சீர்திருத்தப் பள்ளிகளாக மாறவேண்டும். சமுதாய வாழ்வில் அவர்களுக்குத் தக்கதோர் இடம் காட்டி நல்வாழ்வில் அவர்களை நாட்டமுறச் செய்தல் வேண்டும்.

தண்டனை என்பது குற்றத்திற்கு அன்று, குற்றவாளி களுக்கு. எனவே, அவரவர்களுக்கு ஏற்றாற்போல் தண்டனை அமைதல் வேண்டும் என்பதே இன்றைய குற்ற நூலறிஞர்கள் கூறுவதாகும்.[1]

இந்த முறையில், தண்டனை, அச்சுறுத்துவதாக அன்றிப் அறிவுறுத்துவதாக, பழிவாங்குவதாக அன்றி பண்பூட்டுவதாக மாறுகின்றது. உடலை வருத்தும் ஒறுத்தல் முறை உள்ளத்தைத் திருத்தும் உயர்ந்த முறையாக மாறுகின்றது. இதனால், நீதியோடு கருணையும் நிலவி நிற்கும் நெறியாக, ஒறுத்தல் முறை உயர் கின்றது; அதற்கு உள்ளானவர்களை உயர்த்துகிறது.[2]

இவ்வாறு, சீர்திருத்தும் தண்டனை முறையை Reformation theory of punishment என்பார்கள்.

குற்றவாளிகள் சீர்திருந்துவதற்கு வாய்ப்பே அற்றுப் போகிறது, மரண தண்டனையால். எனவே, மரணதண்டனை ஒழிக்கப்படவேண்டும் என்ற கருத்து பரவலாக ஆதரிக்கப்

1 The cry is for the individualisation of the penalty, not to let the punishment fit the crime, but the personality of the criminal - Paton.

2 'By the means law from being vindictive had become just and from being just, it became charitable; and it completed the act of punishing by the art of healing' Prof. Zioy: 'The Philosophy of Right'.

படுகின்றது. 1965ஆம் ஆண்டு இங்கிலாந்தில் கொலைக் குற்றத்திற்கு மரணதண்டனை விதிப்பதை ஒழித்து ஒரு சட்டம் இயற்றினார்கள். இது சோதனை முறையாக ஐந்தாண்டு காலத்திற்கு என்று இயற்றப்பட்டது. 1970ஆம் ஆண்டில் மரணதண்டனை ஒழிக்கப்பட்டுவிட்டது. இந்திய உச்சநீதி மன்றம் அண்மையில் மரணதண்டனை விதிப்பது அரசமைப்பு நெறிக்கு முரணானதன்று என்று தீர்ப்பளித்தது.

இறுதியுரை

'அரசன் கடமையைச் செய்யும் பொருட்டும், அனைத்துயிர்களையும் காக்கும் பொருட்டும் தருமமே உருவான தெய்வீக ஒளியுடன் கூடிய தண்டனையைக் கடவுள் படைத்தார்' ' (மனு, அத்:7; விதி:14)

தண்டனை விதிப்பது அரச தர்மம் என்பது பண்டைய கொள்கை.

அறநெறியின் அடிப்படையிலேயே ஒறுத்தல்முறை அமைகின்றது''என்பது பண்டைய உலக நாடுகள் பலவும் ஏற்றுக் கொண்ட நெறியாகும்.

இந்த அடிப்படை இன்றும் மாறவில்லை. ஆயினும், நீதியின் குறிக்கோளாகத் தண்டனையை இன்று நாம் கொள்வதில்லை; நீதியின் கருவியாகவே அதைக் கொள்கிறோம். நீதிக் கருவியாகத் தண்டனை எவ்வாறு செயல்பட வேண்டுமெனச் சிந்திக்கின்றோம்.

தண்டனை விதிப்பதன் நோக்கம் குற்றவாளிகளை அச்சுறுத்துவதா; அவர்களைச் சீர்திருத்துவதா; சமுதாயத்தைப் பாதுகாப்பதா என்பதை நாம் சிந்தித்தால், அந்நோக்கம் குறிப்பிட்ட ஒன்று மட்டுமே என்று நாம் கூற இயலாது. மனித இயல்பு எத்தனையோ வேறுபாடுகளைக் கொண்டது. திருந்தும் குற்றவாளிகளும் உள்ளனர். தீராக் குற்றவாளிகளும் உள்ளனர்; தங்கள் செயலை நினைத்து வருந்துவோரும் உண்டு, வன்கண்மையாளரும் உண்டு. இது குற்றவாளிகள் நிலை.

சமுதாயத்தின் நிலையை எடுத்துக் கொண்டால், உலக நாடுகள் பலவும் கல்வி, பொருளாதாரம், பண்பாடு இவற்றில் ஒரே நிலையில் இல்லை. கல்வியிலும் செல்வத்திலும

முன்னேற்றமடைந்த சமுதாயத்திற்குப் பொருந்தும் முறை முன்னேற்றமடையாத சமுதாயத்திற்குப் பொருந்துவதில்லை. ஒழுக்க உணர்விலும் உலக நாடுகள் மாறுபட்டுள்ளன. எனவே, சமுதாய நிலைக்கேற்ப குற்றநீதி முறை இயங்க வேண்டியுள்ளது.

முதற் குற்றவாளிகளையும் (First offenders) இளம் குற்றவாளிகளையும் (Juvenile offenders) சட்டம் பரிவுடன் நடத்துகிறது. சிலவகையான முதற் குற்றவாளிகளை நீதிமன்றம் கண்டித்து விட்டுவிடுகிறது. இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர். சிறைவாசம் இதயத்தை இறுக்கி கடுங்குற்றவாளிகளாக மாற்றிவிடக்கூடாது என்பதால் குறுகிய காலச் சிறைத் தண்டனை தவிர்க்கப்படுகிறது.

அச்சுறுத்தும் தண்டனைமுறை அறிவுறுத்தவும் வேண்டும். சீர் திருத்துவது தண்டனை என்பதால் சிறைச்சாலைகள் சிங்காரக்கூடங்களாக மாறிவிடு ும் கூடாது. தண்டனையில் கொடுமை கூடாது என்பதற்காக அதில் கடுமையே கூடாது என்றால் தண்டனையின் தன்மையே மறைந்துவிடுகிறது.

'குற்றமும் தண்டனையும்' என்ற பிரச்சினை சட்டத்தை மட்டும் பொறுத்ததன்று; சமுதாயத்தையும் பொறுத்ததாகும். இது பற்றிய ஆய்வு தொடர்ந்து நடக்கின்றது.

'தண்டனைத் தீர்ப்புக் கூறுவதற்கு முன் பல்வேறு கூறுகளையும் கருத்திற்கொள்ள வேண்டும். குற்றத்தின் தன்மை, குற்றம் இழைக்கப்பட்ட சூழ்நிலை, அதற்கான பின்னணி, குற்றவாளியின் முன் நடத்தை, பழைய குற்றவாளியாக இருந்தால் அதன் விவரம், குற்றவாளியின் வயது, கல்வி, வீட்டு வாழ்க்கை, சமுதாயத்தொடர்பு நிலை, குற்றவாளியின் எண்ணப்போக்கு, அவனைச் சீரமைத்து வாழவை''பதற்கான வாய்ப்பு, அதற்கு வேண்டிய சீர்திருத்தப் பயிற்சி, தண்டனையால் அவனுக்கும் பிறருக்கும் ஏற்படலாகும் அச்சவுணர்வு, சமூகத்தேவை இவையனைத்தையும் கருதியே தண்டனைவிதிப்பு அமைதல் வேண்டும்' — இவ்வாறு இந்திய அரசு அண்மையில் அமைத்த சட்ட ஆணையம் (Law Commission) தனது அறிக்கையில் கூறியுள்ளது.

ஒருவனுக்கு ஊறு விளைவிப்பதால் அவனை உயர்த்திவிட முடியாது, சித்திரவதையால் சீர்திருத்த முடியாது, துன்பம் இழைப்பதால் தூயோனாக்க இயலாது. எனவேதான், "தக்காங்கு நாடி ஒத்தாங்கு ஒறுத்தல்" வேண்டும் என்கிறார் குறளாசிரியர்.

சட்ட இயல்

(Jurisprudence)

நான்காம் பகுதி

உரிமைகள்
(Rights)

['உரிமை' என்றால் என்ன? — உரிமையும், கடமையும் — 'உரிமை' என்பதில் உள்ள கூறுபாடுகள் — உரிமைக்கு இலக்காகும் பொருள்கள் — 'உரிமை' என்பதில் அடங்கும் கருத்தமைவு — 'உரிமை' என்ற கருத்தமைவின் பகுப்பாய்வு — 'தன்னுரிமை' — 'ஏலுரிமை' — 'காப்பு நிலையுரிமை.' — சட்ட உரிமைகளின் வகைகள்: செயலுறும் உரிமை; செயலுறா உரிமை — பொதுமுக உரிமை, தனிமுக உரிமை — சொத்துநிலை உரிமை, தனிநிலை உரிமை — சொத்தமை உரிமை, மேலமை உரிமை — சட்ட முறை உரிமை, தகுமுறை உரிமை — நிறைவுற்ற உரிமை, நிறைவுறா உரிமை — தலையுரிமை, துணையுரிமை — முதல்நிலையுரிமை, தீர்வுநிலையுரிமை — பொதும உரிமை, தனிம உரிமை.]

'உரிமை' என்றால் என்ன?

சட்ட முறையான உரிமைகளையும் கடமைகளையும் செல்லுறுத்துதல் நீதிவழங்குவது ஆகும், என்று கண்டோம்.

எனவே, இங்கு 'உரிமை' என்றும் 'கடமை' என்றும் கூறும்பொழுது, சட்ட முறையான உரிமையையும் சட்ட முறையான கடமையையுமே குறிப்பிடுகின்றோம்.

முதலில் 'சட்டமுறை உரிமை' (legal right) என்றால் என்ன என்பது பற்றிக் காணலாம்.

நம் இன்ப வாழ்விற்கு அடிப்படையாக அமைவன நம் வாழ்க்கை நலன்களே (interests) ஆகும். நம் உடல்நலம், பொருள், புகழ் முதலிய நலன்களைப் பொறுத்தே நம் வாழ்வின் இன்பம் நிலைக்கின்றது. மக்களின் இன்பவாழ்வைக் குறிக்கோளாகக் கொண்டு இயங்கும் சட்டம் நம் நலன்களைப் பாதுகாக்கின்றது. ஆனால், எல்லா நலன்களையும் சட்டம் பாதுகாப்பது இல்லை; பாதுகாப்பதும் இயலாது. சில நலன்களை மட்டுமே சட்டம் பாதுகாக்கின்றது.

நான் என் நண்பரிடம் கடனாக ஆயிரம் ரூபாய்

கேட்கிறேன். அவர் மறுத்து விடுகின்றார். கடனைப் பெறுவது என் நலனுக்கு உகந்ததுதான். ஆனால், சட்டம் நண்பரைக் கட்டாயப்படுத்திக் கடன் கொடுக்குமாறு செய்வதில்லை. அதாவது, எனக்குக் கடன் கொடுக்கும்படி கேட்டு நண்பர் மீது நான் வழக்கிட முடியாது.

அந்த நண்பர் என்னிடம் ஆயிரம் ரூபாய் கடனாகப் பெற்றிருந்தார், ஆனால், அக்கடனைத் தவணைக்குள் திரும்பத் தரவில்லை என்று வைத்துக் கொள்வோம். எனக்கு வரவேண்டிய கடனை வரப்பற்றுவதும் எனது நலனே ஆகும். இந்த நலனைச் சட்டம் பாதுகாக்கின்றது. அதாவது, நான் நண்பர் மீது வழக்கிட்டு வரவேண்டிய கடனைத் திரும்பப் பெறுகிறேன்.

இவ்வாறு, நான் கடன் வாங்குவதற்குச் சட்டம் உதவுவதில்லை; கொடுத்த கடனை வரப்பற்றுவதற்குச் சட்டம் உதவுகின்றது. எனக்குள்ள இருவகை நலன்களின் ஒரு நலனைக் சட்டம் பாதுகாக்கின்றது; மற்றொரு நலனைச் சட்டம் பாதுகாப்பதில்லை.

கொடுத்த கடனை வரப்பற்றும் எனது நலன் சட்டத்தால் பாதுகாக்கப் பெறுவதால், அது என் 'உரிமை' (right) ஆகின்றது. கடன் பெறுவதற்கான எனது நலன் சட்டத்தால் பாதுகாக்கப் பெறாததால் அது என் உரிமை ஆவதில்லை.

இக்கருத்தைக் கூறும் வகையில், 'உரிமை' என்பதற்கு எளிதாக ஒரு வரைவுரை கூறுகின்றார் ஐரிங் என்ற பேராசிரியர்:

'சட்டத்தால் பாதுகாக்கப்பெறும் நலன்களே உரிமைகள் ஆகின்றன'[1] என்கிறார்.

இந்த வரைவுரையில் குறைபாடு காண்கின்றனர் பிற சட்ட நூலறிஞர்கள்.

உரிமை என்பது சட்டப்பாதுகாப்புள்ள நலன் என்று கூறுகையில் உரிமையும் நலனும் ஒன்று என்ற கருத்து தோன்றுகிறது.

ஆனால், உரிமையும் நலனும் ஒன்றல்ல. உரிமை வேறு, நலன் வேறு. எனது சொத்து, புகழ் இவை எனது வாழ்க்கை நலன்கள். 'எனது வீட்டின் மீது எனக்கு உரிமை இருக்கிறது'

1 Rights are legally protected interests - Ihering.

என்றால் பொருள் என்ன? 'எனது வீட்டைப் பொறுத்து எனக்கு உரிமை உள்ளது', என்பது பொருள்: 'எனது வீட்டை அனுபவிக்கும் 'நலனைப் பொறுத்து எனக்கு உரிமை உள்ளது' என்பதாகும். எனது உரிமைக்கு இலக்கானது வீட்டை அனுபவிக்கும் நலன். எனவே, வீட்டை அனுபவிக்கும் நலன் வேறு, அதனைப் பொறுத்துள்ள உரிமை வேறு என்பது தெளிவாகும். உரிமை வேறு, உரிமைக்கு உற்ற நலன் வேறு. ஆதலால், 'நலன்' (interest) என்பதும், 'உரிமை' (right) என்பதும் ஒன்றல்ல. நலனை அனுபவிக்க உதவுவதே உரிமை.

இதனைக் காட்டும் வகையில் பேராசிரியர் கிரே என்பார் உரிமைக்கு வரைவுரை வகுக்கின்றார்:

'நலனே உரிமையாகி விடுவதில்லை. அந்நலனை நுகர்வதை உறுதி செய்யும் சாதனமே உரிமையாகும்' [1] — என்கிறார்.

ஒரு நலனை நுகர்வதற்கு உற்ற சாதனமே உரிமை என்றால் என்ன பெர்ருள்?

'ஒரு நலனை நுகர்வதற்குச் சட்டம் அளிக்கும் பாதுகாப்பே உரிமை' என்று பொருள். இவ்வாறு கூறுவதிலும் குறைபாடு உள்ளது என்கிறார் சால்மண்ட்.

விலங்குகளைக் கொடுமைப் படுத்தக் கூடாது என்று சட்டம் உள்ளது. கொடுமைப் படுத்தினால் அது குற்றம் ஆகிறது. இவ்வாறு, விலங்குகளின் நலன் சட்டத்தால் பாதுகாக்கப் படுவதால் விலங்குகளுக்கு உரிமை உண்டு என்று கூற முடியுமா? ஒருவன் தற்கொலை செய்வதைச் சட்டம் தடுக்கிறது; தற்கொலை முயற்சியைக் குற்றம் என விதிக்கிறது. இவ்வாறு, அவன் நலனைக் சட்டம் பாதுகாக்கின்றது. இதனால், அவனுக்கு உரிமை உள்ளது என்றால் சரியா? அவனுக்கு எதிராகவே அவனுக்கு உரிமை உள்ளது என்றல்லவா ஆகிவிடும்.

ஆதலால், ஒரு நலன் உரிமைக்கு உற்றதாக இருக்க வேண்டுமெனில், அது சட்டத்தால பாதுகாக்கப் பெறுவதோடு

1 The right is not the interest itself; it is the means by which the enjoyment of the interest is secured - Prof.Gray

சட்டத்தால் ஏற்கப்படவும் வேண்டும் என்கிறார் சால்மண்ட்.[1]

எனவே, சட்ட ஏற்பு (legal recognition) சட்டப்பாதுகாப்பு (legal protection) இரண்டும் உள்ள நலன்களே உரிமை ஆகின்றன.

உரிமையும் கடமையும்

அடுத்து நாம் காண வேண்டியது 'உரிமை — கடமை' என்ற உறவாகும்.

ஒருவருக்கு ஓர் உரிமை இருக்கிறது என்றால், அந்த உரிமைக்கு எதிரிணையான (Correlative) 'கடமை' இன்னொருவருக்கு வேண்டும் என்பது பெரும்பாலான சட்ட அறிஞர்களின் கருத்தாகும்.

எனது நண்பருக்கு நான் கொடுத்த கடனைத் திரும்பப் பெறும் 'உரிமை' எனக்கு இருக்கிறது என்றால், கடனைத் திரும்பக் கொடுக்க வேண்டிய 'கடமை' (Duty) எனது நண்பருக்கு இருக்கிறது.

கடனைத் திரும்பப்பெறும் எனது உரிமைக்கு (right) எதிரிணையாக, கடனைத் திரும்பக் கொடுக்க வேண்டிய கடமை (Duty) என் நண்பருக்கு உள்ளது.

எனவே, சட்டத்தில் உரிமையும் கடமையும் எதிரிணையானவை (Correlatives) ; அதாவது உரிமை என்றால் அதன் தொடர்பான கடமை உண்டு; கடமை என்றால் அதன் தொடர்பான உரிமை உண்டு என்பார்கள்.[2]

'நாம் உரிமை பற்றிப் பேசும் பொழுது, உண்மையில், இருநபர்களிடையுள்ள உரிமை — கடமை என்ற உறவைத்தான்

---

1 It is to be noticed that in order than an interest should become the subject of a legal right, it must obtain not merely legal protection, but also legal recognition - Salmond.

2 Rights and duties are correlatives, that is, we cannot have a right without a corresponding duty or a duty without a corresponding right - Paton.

குறிக்கின்றோம்' [1] — என்கிறார் பேட்டன்.

'மனைவி இல்லாமல் கணவன் என்ற உறவுடன் ஒருவா இருக்க முடியாது; பிள்ளை இல்லாமல் தந்தை என்று ஒருவர் தன்னைச் சொல்லிக் கொள்ள இயலாது. அதுபோல், சம்பந்தப்பட்ட கடமை இன்றி உரிமை இல்லை; சம்பந்தப்பட்ட உரிமை இன்றிக் கடமையும் இல்லை. உரிமைகளும் கடமைகளும் எதிரிணைகளாக இருந்தே தீர வேண்டும். இது ஒரு சாராரின் கொள்கை' — என்கிறார் சால்மண்ட்.

மறுசாராரின் கொள்கையினை ஆஸ்டின் கூறுகின்றார். கடமைகளை அவர் இரு வகைகளாகப் பிரிக்கின்றார்: (1) அடிப்படைக் கடமைகள் (Absolute duties). (2) தொடர்புடைக் கடமைகள் (Relative duties). சட்டத்தால் விதிக்கப்படும் கடமைகள் அடிப்படைக் கடமைகள். பொதுமக்களுக்குத் தொல்லை விளைக்கும் செயல்களைச் (Public nuisance) செய்தல் கூடாது என்று சட்டம் விதிக்கிறது. இந்தக் கடமைகள் தொடர்பான உரிமை எவருக்கும் இல்லை. குறித்த நபருக்கு உற்ற கடமைகள் என்றால், அவற்றைப் பொறுத்த உரிமைகள் அந்த நபர்களுக்கு உண்டு. முன்னவை, அடிப்படைக் கடமைகள்; பின்னவை, தொடர்புடைக் கடமைகள்.

பேராசிரியர் ஆலன் என்பாரும் ஆஸ்டின் கொள்கையை ஆதரிக்கின்றார். குழந்தைகள் கட்டாயமாகப் பள்ளிக்குச் செல்ல வேண்டும்; கட்டாயமாக அம்மை குத்திக்கொள்ள வேண்டும் என்று சட்டம் உள்ளது. இக்கடமைகளுக்கு எதிரிணையான உரிமைகள் எவருக்கும் இல்லை என்கிறார். குற்றஇயல் சட்டப் படியான கடமைகள் எல்லாம் அடிப்படைக் கடமைகள், என்கிறார் ஆலன்.

ஆசிரியர் ஹாலண்ட் போன்றோர் அடிப்படைக் கடமைகள் என்ற கொள்கையை ஏற்பதில்லை. சால்மண்ட், பேட்டன் போன்றவர்களும் உரிமைகளும் கடமைகளும் எதிரிணையானவை என்றே கருதுகின்றனர். அடிப்படைக் கடமைகள் பொறுத்த உரிமைகள் எவருக்கும் இல்லை என்று கூற முடியாது; அந்த உரிமைகள் அரசுக்கு உண்டு என்பது அவர்கள் கொள்கை.

---

1 When we speak of a right, we are really referring to a right - duty relationship between two persons - Paton

'உரிமை — கடமை' என்ற உறவைக் குறிக்கும் வகையில் 'உரிமை' என்பதற்கு வரைவுரை கூறுகின்றார் பேராசிரியர் ஹாலண்ட் என்பார்:

'பிறர் செயல்களை, அரசின் ஒப்புதலுடனும் உதவி யுடனும், கட்டுப்படுத்துவதற்கு ஒருவருக்குள்ள திறனே சட்ட உரிமை என்பது'[1] என்கிறார்.

'ஒருவரது உரிமை என்பது அவரைக் குறித்து அல்லது அவரைப் பொறுத்து ஒன்றைச் செய்யவோ செய்யாது இருக்கவோ சட்டத்தால் பிறர் கட்டுப்பட்டிருத்தல் ஆகும்' என்கிறார் ஆஸ்டின்.[2]

ஹாலண்ட், ஆஸ்டின் இவர்கள் கூறும் வரைவுரைகளில் உரிமையால் பாதுகாக்கப்பெறும் நலன்கள் பற்றி எதுவும் கூறப்படவில்லை.

இனி, 'உரிமை' என்பதில் அடங்கும் கூறுபாடுகளை, சால்மண்ட் விளக்கும் விதத்தைக் காணலாம்.

'உரிமை' என்பதில் உள்ள கூறுபாடுகள்

சட்ட உரிமை ஒவ்வொன்றிலும் ஐந்து கூறுபாடுகள் உண்டு என்கிறார் சால்மண்ட். அவையாவன:

1) உரிமைக்கு உரித்தான நபர்-(உரிமையர்)

2) அந்த உரிமைக்கு எதிரிணையான கடமையைச் செய்ய வேண்டிய நபர் — (கடமையர்)

3) உரிமையின் பயனாகச் செய்ய வேண்டிய கடமைச்செயல் — (கடமையாற்றம்)

4) உரிமையைச் சார்ந்த பொருள் — (உரிமைக்குற்ற பொருள்)

---

1 'Legal right is a capacity residing in one man, of controlling, with the assent and assistance of the State, the actions of others' - Prof. Holland.

2 'A person has a right when another or others are bound or obliged by law to do or forbear towards or in regard of him' - Austin.

5) உரிமையருக்கு உரிமை சேர்த்த நிகழ்வுகள்—(உரிமை மூலம்)

ஒப்புச்சீட்டு எழுதிக் கொடுத்து என்னிடமிருந்து கடன் வாங்கியவரிடமிருந்து, அந்தக் கடனைத் திரும்பப் பெறும் 'உரிமை' எனக்கு உண்டு. எனக்குள்ள இந்த 'உரிமையில்' உள்ள ஐந்து கூறுகள்:

1) கடனைத் திரும்பப் பெறும்
உரிமையுடைய நான் — உரிமையர்

2) கடன் வாங்கியவர் அதைத்
திரும்பச் செலுத்தும்
கடமையுடையவர் ஆவர் — கடமையர்

3) உரிமையின் பயனாகச் செய்ய வேண்டியது
கடனைத் திரும்பச் செலுத்துதல் ஆகும்.
— இது கடமையாற்றம்

4) திரும்பச் செலுத்த வேண்டிய
பணம்.
— இது உரிமைக்குற்றபொருள்

5) கடன் வாங்கியவர் எழுதிக் கொடுத்த
ஒப்புச் சீட்டு. — இது உரிமை மூலம்

பேராசிரியர் பேட்டன் உரிமைக்கு உற்ற கூறுபாடுகளாக நான்கு சொல்லுகிறார்

1. உரிமையர்
2. கடமையர்
3. கடமையாற்றம்
4. உரிமைப் பொருள்

இவ்வாறு, உரிமை என்பது இரண்டு அல்லது மேற்பட்ட நபர்களிடையே எழும் சட்ட உறவைக் குறிக்கின்றது. சட்டப் படியான நபர்கள்தாம் (legal persons) உரிமையர்களாகவோ கடமையர்களாகவோ இருக்க முடியும் என்கிறார் பேட்டன்.

உரிமைக்கு இலக்காகும் பொருள்கள்

உரிமைக்கு இலக்காகும் பொருள்கள் பலவகைப்படுவன.

நிலம், வீடு, பணம் போன்ற பருப்பொருள்கள் மீது ஒருவருக்கு உரிமை இருக்கலாம். ஒருவரது உடலும் உயிரும் உரிமைப் பொருள்கள் தாம். நம் உடலுக்குப் பிறர் ஊறு விளைக்காமல் இருக்க வேண்டும் என்ற உரிமை நமக்கு உண்டு. நம் புகழ் மீது நமக்கு உரிமை இருக்கிறது. நுண்பொருள்களான பதிப்புரிமை, புதுப்புனைவுரிமை போன்றவையும் உரிமைக்கு உற்றவை. ஒருவர் தமது வீட்டை எனக்கு விற்பதாக என்னுடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். இந்த ஒப்பந்தத்தின் பயனாக, அந்த வீட்டின் மீது அவருக்குள்ள சொத்துரிமையை எனக்கு மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று கோரும் உரிமை எனக்கு ஏற்படுகிறது. எனவே, ஒப்பந்தத்தால் எழும் உரிமை வீட்டை எனக்கு மாற்றிப் பெறும் உரிமையைப் பொறுத்த உரிமையாகும். இது உரிமைமீது எழும் உரிமை.

இவ்வாறு, உரிமைக்கு இலக்காகும் பொருள்கள் பருப் பொருள்களாகவும், நுண்பொருள்களாகவும், உரிமைகளாகவும் வாழ்வின் பல நலன்களாகவும் இருக்கின்றன.

'உரிமை' என்பதில் அடங்கும் கருத்தமைவு

மேலே கண்ட ஆய்விலிருந்து தெளிவான உரிமை பற்றிய மூன்று தன்மைகள்: (1) சட்டத்தால் பாதுகாக்கப்படுவதால்தான் ஒன்றைச் சட்ட உரிமை என்கிறோம். (2) உரிமை பெற்றவர் தமக்குள்ள நலனை அடைய இச்சித்து இயங்குகின்றார். (3) தாம் நாடிய நலனை அவர் எய்துகின்றார்.

எனவே, சட்டப்பாதுகாப்பு, உரிமை பெற்றவரின் இச்சை, எய்தும் நலன் என்ற மூன்று தன்மைகளும் உரிமை என்ற கருத்தமைவில் அடங்கியுள்ளன என்கின்றனர். உரிமைக்கு உள்ள வரைவுரைகள் வேறுபடுவதன் காரணம் இந்த மூன்று தன்மை களில் ஏதாவது ஒன்றுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுப்ப தால்தான். சிறிது சிந்தித்தால் இந்த மூன்று தன்மைகளிலுமே தொய்வுகள் இருப்பதை 'நாம் காணுகின்றோம்.

சட்டப்பாதுகாப்பு என்றால், உரிமைகளைச் சட்டம் செல்லுறுத்த (enforce) வேண்டும்; அரசு தனது வலிமையால் உரிமைகளை நிறைவேறும்படி செய்தல் வேண்டும். எல்லா நேர்வுகளிலும் இந்தச் செல்லுறுத்தம் நடப்பதில்லை; சில நேர்வுகளில், ஒருவருக்குள்ள உரிமை மீறப்பட்டபின் அந்த

இழப்பிற்கு ஈடு அளிக்கப்படுகிறது. என்னுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை ஒருவர் மீறிவிட்டால், அதனால் எனக்கு ஏற்பட்ட இழப்பைச் சரிசெய்துகொள்ளும் வகையில் இழப்பீடு (damages) அளிக்கப்பெறுகின்றது. இங்கே நேரடியான உரிமைச் செல்லுறுத்தல் இல்லை. நாட்டிடைச் சட்டத்தில் (International law) உலக நீதி மன்றத்தின் (World Court) தீர்ப்புகளைச் செல்லுறுத்தும்படியான வாய்ப்புகள் இல்லை. ஆதலால்தான் சால்மண்ட் தமது வரைவுரையில் 'சட்ட உரிமை என்பது சட்ட விதிகளால் உரிமை எனக் கொள்ளப்பட்டுப் பாதுகாக்கப்படுவது' என்று கூறி, செல்லுறுத்தம் பற்றிக் கூறாமல் விட்டு விடுகின்றார்.[1]

மனிதனது இச்சையை (human will) முக்கியமாகக் கொண்டு ஹோம்ஸ் (Holmes) என்ற அறிஞர் உரிமைக்கு இலக்கணம் வகுக்கின்றார். 'அரசின் உதவியுடன் பாதுகாப்போ இழப்பீடோ பெறும் வகையில் மனிதன் தனது இயல்பான திறனைப் பயன்படுத்துவதுதான் 'சட்ட உரிமை', என்கிறார். மனிதன் தனது திறனைப் பயன்படுத்துவது அவனது இச்சையின் (will) அடிப்படையில்தான் என்றாலும் கூட, உரிமை என்பது அவன் இச்சையை மட்டுமே கொண்டதில்லை. உரிமை என்று சட்டத்தால் கொள்ளப்படுவது சமுதாய நலனைக் கருதித்தான்; தனிமனிதனது இச்சையைக் கருதி அல்ல, சமுதாய நலன் என்ற அடிப்படையில்தான் தனிப்பட்டவர்களின் நலன்களில் சில வற்றை உரிமைகளாகச் சட்டம் கொள்கின்றது. மேலும், ஒருவயதுள்ள குழந்தைக்கும் சட்டப்படியான உரிமைகள் உண்டு. அதற்கு இச்சை (will) என்று ஒன்றும் இல்லை. மனநலம் இல்லாத பைத்தியக்காரர்களுக்கும் உரிமைகள் உண்டு. ஆனால், அது அவர்களது இச்சையைச் சார்ந்தது அல்ல.

ஆதலால், ஐரிங் போன்ற அறிஞர்கள் சட்டத்தால் ஏற்கப்படும் நலன்களே உரிமைகள் என்று கூறித் தனிமனித இச்சைகளைக் கூறாமல் விடுகின்றனர்.

இதனால்தான் சி.கே.ஆலன் என்ற அறிஞர் சட்ட உரிமையின் சாரத்தை இவ்வாறு விளக்குகிறார்:

'சட்ட உரிமை என்பதன் சாரம் சட்ட உறுதி பெற்ற அதிகாரம் மட்டுமன்று; சட்டம் பாதுகாக்கும் நலன் மட்டுமன்று.

---

1 A legal right is an interest recognised and protected by a rule of law - Salmond.

ஆனால், அது, ஒரு நலனை எய்துவதற்கான சட்ட உறுதி பெற்ற அதிகாரம் ஆகும்'.[1]

'உரிமை' என்ற கருத்தமைவின் (concept) உண்மையான பண்பினையும் பாங்கினையும் தெரிந்துகொள்வது சட்ட இயலுக்கு மட்டுமன்றி அரசியல், சமுதாய இயல் போன்ற பிறதுறைகளுக்கும் இன்றியமையாததாகும்.

உரிமை என்பது தனிமனிதனின் நலன மட்டுமன்று; அதை எய்த வேண்டுமென்ற அவன் இச்சை மட்டும் அன்று; அதைப் பாதுகாக்கும் அரசின் துணை மட்டுமன்று. சமுதாயத்தின் நலனுக்கென்று சட்ட விதிமுறை வகுத்துள்ள பொதுநலக் கோலத்திற்குப் பொருந்துறும் வகையிலுள்ள தனிமனித நலனை ஒருவன் அரசின் உதவியால் அடையும் திறனே 'உரிமை', என்று நாம் கூறலாம்.

சமுதாய நலனுக்காக இயங்குவது சட்டம். தனிமனித நலன் இன்றிச் சமுதாய நலன் இல்லை. வரம்பற்ற தனிமனித நலன் சில வேளைகளில் பொதுநலக் கோலத்தில் பொருந்துவது இல்லை. பொது நலனோடு பொருந்தும் தனி நலனே சமுதாய நல்வாழ்வின் சாரமாகும். இத்தகைய தனி நலன் பேணப்பட வில்லையெனில் பொதுநலன் என்பது பொய்த் தோற்றமாகி விடும். எனவே, பொது நலனுக்கு உகந்த தனிநலன்களைச் சட்டம் ஏற்றுக் காக்கின்றது.

இவ்வகைத் தனி நலன்களை மனிதன் துய்க்கும் திறப் பண்பினையே 'உரிமை' என்கிறது இன்றைய சட்ட இயல்.

'உரிமை' என்ற கருத்தமைவின் பகுப்பாய்வு

இதுவரை, கடமையை எதிரிணையாகக் கொண்ட உரிமையின் தன்மைகள் எவை என்று கண்டோம்.

'உரிமை — கடமை' என்ற கருத்தமைவினைப் பகுத்து ஆய்ந்து, நுட்பமான வேறுபாடுகள் கொண்ட கூறுபாடுகளைத்

1 'The essence of legal right seems to me to be not legally guaranteed power by itself, nor legally protected interest by itself, but the legally guaranteed power to realise an interest' - C.K. Allen.

தொகுத்துள்ளார் ஹோஃபீல்டு (Hohfield) என்ற அமெரிக்க நாட்டுச் சட்டநூலறிஞர். வேறு பல அறிஞர்களாலும் ஏற்கப் பட்ட அக்கூறுபாடுகளை நாம் இங்குக் காணுவோம்:

அவை யாவன:

(1) தன்னுரிமை (Liberty)

(2) ஏலுரிமை (Power)

(3) காப்புநிலையுரிமை (Immunity)

தன்னுரிமை (Liberty) X (உரிமை இன்மை)

உரிமை என்பதில் எனது நலனுக்கு உகந்ததைப் பிறர் செய்கின்றனர். தன்னுரிமை என்பதில் எனது நலனுக்கு உகந்ததை நானே செய்து கொள்கிறேன்.

சில காரியங்களைப் பொறுத்து என் விருப்பப்படி நான் நடப்பதற்குச் சட்டம் உரிமை அளிக்கிறது. இவ்வித உரிமைகள் குறித்துப் பிறருக்குக் கடமை ஏதும் இல்லை. பொது வீதியில் விதிகளுக்குட்பட்டு நடந்து செல்லும் உரிமை எனக்கு இருக்கிறது. இந்த உரிமைக்கு எதிரிணையான கடமை எவருக்கும் இல்லை. எனவே, இந்த வகையான உரிமையைத் 'தன்னுரிமை' (Liberty) என்று கூறுகிறோம்.

ஒரு செயல் வட்டத்திற்குள் என் விருப்பப்படி நான் நடந்து கொள்ளலாம் எனச் சட்டம் விட்டுவிடுகிறது. அதுவே, எனது தன்னுரிமை வட்டம். இந்த வட்டத்திற்குள் தலையிட்டு எனது தன்னுரிமையைத் தடை செய்யும் உரிமை எவருக்கும் இல்லை.[1]

எனவே, எனது தன்னுரிமை குறித்துப் பிறருக்குக் கடமை எதுவும் இல்லாவிட்டாலும், எனது தன்னுரிமையில் குறுக்கிடும் உரிமை எவருக்கும் கிடையாது.

இந்திய நாட்டில் எங்கும் நான் செல்லலாம் என்பது எனது தன்னுரிமை. இதை ஒருவர் தடை செய்கிறார் என்றால் நான் வழக்கிட்டு அவருக்கு எனது தன்னுரிமையைத் தடைசெய்யும் உரிமை கிடையாது என்று கூறி, அவரது தடையை விலக்கலாம்.

1 Liberty respresents what I can do for myself, free of the possibility of legal inteference by others - Paton.

அதாவது, எனக்குத் தன்னுரிமை உள்ள ஒரு செயலைத் தடை செய்ய எவருக்கும் உரிமை இல்லை. எனவே, 'தன்னுரிமை'க்கு எதிரிணையாக உள்ளது 'உரிமையின்மை' (No—right) என்கிறார் ஹோஃபீல்டு (Hohfield) என்ற ஆசிரியர்.

நான் தன்னுரிமையாகச் செய்யும் ஒரு காரியத்தைத் தடுக்கும் உரிமை எவருக்கும் இல்லை. அது போல், நான் அந்தக் காரியத்தைச் செய்யாமல் இருந்தால் அதைச் செய்யும்படி கட்டாயப்படுத்தும் உரிமையும் எவருக்குமில்லை. எனவேதான், தன்னுரிமைக்கு எதிரிணை 'உரிமையின்மை' எனப்படுகிறது.

'உரிமை' என்பதற்குக் 'கடமை' என்பது எதிரிணை யாவதுபோல், 'தன்னுரிமை' (Liberty) என்பதற்கு எதிரிணை உரிமையின்மை' (No—right).

ஆங்கிலத்தில் No—right என்ற சொல் செயற்கையாக ஆக்கப்பட்ட சொல்லாகும். ஆசிரியர் ஹோஃபீல்டுவால் ஆக்கப்பட்டது: ஒன்றைக் குறித்து உரிமை இல்லாத நிலையைக் காட்டுவது அச்சொல். எனவே, அதை 'உரிமையின்மை' என்று தமிழில் சொல்லுகிறோம்.

ஏலுரிமை (Power) X பொறுப்படைவு (Liability)

இன்னொரு வகையான சட்ட உரிமையை 'ஏலுரிமை' (Power) என்பார்கள்.

எனது சொத்தை இன்னொருவருக்கு விற்கவோ, எனது சொத்துகளைப் பொறுத்து விருப்பாவணம் (will) எழுதி வைக்கவோ, எனக்கு வரவேண்டிய கடனை வரப்பற்றுவதற்கென வழக்கிடவோ எனக்குள்ள உரிமையை 'ஏலுரிமை' (Power) என்பார்கள். அரசாங்க அதிகாரிகள் நீதிபதிகள் ஆகியோருக்கு அவர்கள் கடமைகளை ஆற்றுவதற்கென உள்ள சட்ட உரிமைகளையும் ஏலுரிமைகள் (Powers) என்பார்கள்.

நான் எனது நிலத்தை விற்கலாம் என்றால் அந்த உரிமைக்கு எதிரிணையான கடமை எவருக்கும் இல்லை. எனவே, இதை உரிமை என்ற பொதுவான பொருளில் சொல்வதற்கில்லை.

ஒன்றைச் செய்வதற்கு இயலும் திறனை ஏலுமை என்கிறோம். சட்டம் ஒருவருக்கு அளிக்கும் இந்த ஏலுமையினை 'ஏலுரிமை' என்பது பொருத்தமாகும்.

(பொதுவாகப் பேச்சு வழக்கில் Power என்பதை அதிகாரம்' என்று கூறுகிறோம். அதிகாரம் என்ற வடமொழிச் சொல்லின் பொருள் 'உரிமை' என்பதுதான். உரிமையிலிருந்து வேறுபடுத்திக் கூறவேண்டிய ஒன்றை உரிமை என்று பொருளையுடைய அதிகாரம் என்ற சொல்லால் குறிப்பது பொருத்தம் அன்று).

நான் எனது வீட்டை விற்கும்பொழுது, அந்த வீட்டின்மீது எனக்குள்ள சொத்துரிமையை, வாங்குபவருக்குக் கொடுக்கிறேன். இதனால், வீட்டை வாங்குபவருக்கு வீட்டின்மீது சொத்துரிமை உண்டாகிறது. எனக்கிருந்த சொத்துரிமை மறைகிறது. இவ்வாறு, உரிமையினை மாற்றும் ஏலுரிமையுடைய உரிமை 'ஏலுரிமை' ஆகின்றது.

'தன்னுடைய அல்லது பிறருடைய உரிமைகள், கடமைகள், பொறுப்படைவுகள், அல்லது பிறவகையான சட்ட உறவு நிலைகள் இவற்றைத் தனது விருப்பப்படி மாற்றுவதற்கென ஒருவருக்குச் சட்டம் அளிக்கும் ஏலுமையே (ability) 'ஏலுரிமை' எனப்படும் என்கிறார் சால்மண்ட்.[1]

ஏலுரிமை இருவகைப்படும்.

'பொதும ஏலுரிமை' (Public power) 'தனிம ஏலுரிமை' (Private power) என்று பிரித்துக் கூறுவார்கள்.

அரசின் நீதித்துறை நிர்வாகத்துறை இவற்றைச் சேர்ந்த அதிகாரிகள், அரசின் முகமையராகச் (agents) செயல் படுகின்றனர். இவர்கள் பொதுமக்கடமைகளை (public duties) ஆற்றுவதற்கு ஏலும் வகையில் அரசாங்கம் அளித்துள்ள ஏலுரிமையினை 'ஆள்வை' (authority) என்பார்கள். தனி மனிதர்கள் தங்கள் காரியங்களைச் செய்வதற்கான ஏலுரிமை யைத் 'திறன்' (capacity) என்பார்கள். பிறருடைய சட்ட உறவு நிலைகளைப் பாதிப்பது 'ஆள்வை', தனக்குற்ற சட்ட உறவு நிலையினை உறுதிசெய்வது 'திறன்'.

ஏலுரிமைக்கு எதிரிணையாக உள்ளது 'பொறுப்படைவு'

---

1 A power may be defined as ability conferred upon a person by the law to alter, by his own will directed to that end, the rights, duties, liabilities or other legal relations, either of himself or of other persons - Salmond.

(Liability) ஆகும். எவருக்கு எதிராக ஒருவரது ஏலுரிமை உள்ளதோ அவரைப் பொறுப்படைவுற்றவர் என்பார்கள்.

'அரசு விதிக்கும் வரிகளைச் செலுத்தும் பொறுப்படைவு மக்களுக்கு உண்டு' என்று கூறும்பொழுது, மக்களின் பொறுப்பு உணர்த்தப்பெறுகின்றது. ஏலுரிமையின் இயக்கம் எப்பொழுதும் பொறுப்பைச் சுமத்துகிறது என்று நாம் கூறுவதற்கில்லை.

ஒருவர் பிறருக்கு நன்கொடை (gift) அளிக்கும் ஏலுரிமை இருக்கிறது. அவ்வாறு நன்கொடை அளிக்கும் ஏலுரிமையால் விளைவது எவர் மீதும் பொறுப்பன்று. நன்கொடையைப் பெறுவோர் கொடை என்ற பொருள் நலனைப் பெறுகின்றார்; அவரது பொறுப்படைவு அவருக்கு நன்மையை விளைவிக்கின்றது. இந்த நிலையில் எழும் பொறுப்படைவு ஒருவரின் நலனுக்கு உகந்ததாகும்; இகந்ததன்று.

'காப்புநிலை உரிமை (Immunity) X (ஏலாமை)

இன்னும் ஒருவகை உரிமையைக் 'காப்புநிலையுரிமை' (Immunity) என்று குறிப்பிடுவார்கள். பிறரது ஏலுரிமையால் பாதிக்கப்படாமல் பாதுகாப்பு அளிக்கும் உரிமை இது.

சட்ட உறவுநிலையை மாற்ற இயலுவது ஏலுரிமை என்றால், அவ்வாறு மாற்றம் பெறுவதிலிருந்து விலக்கு பெறுவது 'காப்பு நிலையுரிமை' ஆகின்றது. பொறுப்படைவு அற்ற நிலைதான் காப்புநிலை ஆகும். சுருங்கக்கூறினால், காப்புநிலையுரிமை என்பது பொறுப்படைவு இன்மை என்பதேயாகும்.

அரசின் உயர்ந்த பணிகளை ஆற்றுவோர் அவற்றை அச்சமும் அவலமும் இன்றி ஆற்றல் வேண்டும். ஆதலால் சட்டமன்ற உறுப்பினர்கள், நீதிமன்ற நடுவர்கள் ஆகியோர் தங்கள் கடமையினை ஆற்றும் வகையில் எந்தவிதச் சட்ட நடவடிக்கைகளுக்கும் உள்ளாதல் கூடாது. நீதிமன்ற நடுவர் தமது தீர்ப்பில் ஒருவரைப் பற்றி அவதூறான வாசகத்தை எழுதலாம். நீதி வழங்குகையில் அவ்வாறு கூறுவது இன்றியமையாதது ஆகலாம். அது போன்றே, சட்டமன்ற விவாதங்களில் பலரைப் பற்றியும் அவர்கள் செயலாற்றும் விதம் குறித்தும் உறுப்பினர்கள் பேசுகையில் அது அவதூறான வாசகங்களைக் கொண்டிருக்கலாம். ஆனால், அவர்கள் மீது அவதூற்றுக்கான நடவடிக்கை

ஏதும் எடுக்கக் கூடாது என்று சட்டம் விதிக்கின்றது. இவ்வாறு, சட்டம் அவர்களுக்கு அளிக்கும் பாதுகாப்பைத்தான் 'காப்பு நிலையுரிமை' (Immunity) என்கிறோம்.

'சட்ட முறையான உறவுநிலையை இன்னொருவர் மாற்றுவதிலிருந்து மற்றொருவருக்குள்ள விலக்குரிமையே காப்பு உரிமை',[1] என்கிறார் சால்மண்ட்.

காப்புநிலையுரிமைக்கு எதிரிணையாக உள்ளது 'ஏலாமை' (disability). என்பதாகும். ஏலாமை என்றால் ஏலுரிமை இல்லாமை.

இவ்வாறு நான்கு வகை உரிமைகளைச் சுருக்கமாக சால்மண்ட் கூறுகின்றார்:

உரிமை: இதில், சட்டம் எனக்காகப் பிறரது தன்னுரிமைக்கு வரம்பிடுகிறது.

தன்னுரிமை: இதில், சட்டம் ஒரு செயல் எல்லைக்குள் எனது இச்சை வரம்பற்று இயங்குவதற்கு இடமளிக்கிறது.

ஏலுரிமை: இதில், சட்டம் எனது இச்சைக்குப் பயனுறுதி சேர்க்கும் வகையில் உரத்து உதவுகிறது.

காப்புநிலை யுரிமை

இதில், சட்டம், குறிப்பிட்ட ஏலுரிமையினைப் பிறர் என்மீது செலுத்துவதை மறுக்கிறது.

பிறர் ஒன்றை எனக்காகச் செய்ய வேண்டியது 'உரிமை'.
நானே ஒன்றை எனக்காகச் செய்து கொள்ளலாம் என்பது 'தன்னுரிமை'.
பயனுறுதியுடன் ஒன்றை நான் செய்ய இயலுவது 'ஏலுரிமை'.
பிறர் பயனுறுதியுடன் ஒன்றை என்னைப் பொறுத்துச் செய்ய இயலாதது 'காப்புநிலையுரிமை'.

எனக்காகப் பிறர் செயல்களைச் சட்டம் கட்டுப் படுத்துவதன் வாயிலாக என் உரிமைகளை நான் அனுபவிக்கிறேன்.

---

1 Immunity is an exemption from having a given legal relation changed by another - Salmond.

சட்டத்தின் ஒத்திசைவால் எனது தன்னுரிமைகளை நான் பயன்படுத்துகிறேன்.

எனது இச்சையின் கருவியாக இயங்கும் சட்டத்தின் உரத்த உதவியுடன் என் ஏலுரிமைகளைச் செலுத்துகிறேன்.

பிறருக்கு இத்தகைய உதவியைச் சட்டம் அளிக்க மறுப்பதன் வாயிலாக எனது காப்புநிலை உரிமைகளைக் கவசமாகக் கொள்ளுகிறேன்.

இவ்வாறெல்லாம் எடுத்துக் கூறி, உரிமை, தன்னுரிமை, ஏலுரிமை, காப்புநிலையுரிமை என்ற கருத்தமைவுகளை விளக்குகின்றார் ஆசிரியர் சால்மண்ட்.

இக்கருத்தமைவுகளைத் தெளிவாக்கும் வகையில் அவற்றின் எதிரிணைகளைக் காட்டி விளக்குகின்றனர் சட்ட நூலறிஞர்கள்.

உரிமை (Right)	X	கடமை (Duty)
தன்னுரிமை (Liberty)	X	உரிமையின்மை (No-right)
ஏலுரிமை (power)	X	பொறுப்படைவு (Liability)
காப்பு நிலையுரிமை (Immunity)	X	ஏலாமை (Disability)

மேலே கண்டபடி 'உரிமை' என்பதைப் பகுத்தாய்ந்து விளக்கிய பெருமை அமெரிக்க நாட்டு அறிஞர் ஹோஃபீல்டு என்பாரைச் சேருவதாகும்.

வளர்ந்து வரும் சமுதாய அமைப்பில் மக்களிடையே எழும் சிக்கலான சட்ட உறவுநிலைகளை உள்ளவாறு உரைப்பதில் ஆங்கிலமொழி அல்லற்படுகிறது என்கின்றனர் அறிஞர்கள். எனவேதான் No-right போன்ற நயமற்ற சொற்பதங்களை நாம் நாட வேண்டியுள்ளது.

இன்றைய புகழ்பெற்ற சட்ட நூலறிஞரான குசரச் (Kocovrek) என்பார் 'சட்ட உறவுநிலைகள்' (Jural Relations) என்ற தம் நூலில் உரிமைத் தத்துவம்பற்றி மிக விரிவாகவும் தெளிவாகவும் ஆய்ந்துள்ளார்.

மக்களாட்சி முறையில், மக்களின் பொதும நலனும் (Public Interest), தனிம நலனும் (Private interest) இசைந்து இயங்க வேண்டும். எனவே, சட்டஇயலின் அடிப்படைத் தத்துவங்களில் ஒன்றான 'உரிமை' என்பதை அறிவியல் கண் கொண்டு ஆய்ந்து, அதன் கருத்தமைவினை விரிவாகவும் விளக்கமாகவும், தெளிவாகவும் திட்பமாகவும் எடுத்துக் கூறும்

ஏற்றமிகு முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் இன்றைய சட்ட நூலறிஞர்கள். அந்த முயற்சி இன்னும் முற்றுப் பெறவில்லை என்றுதான் கூறவேண்டும்.

சட்ட உரிமைகளின் வகைகள்

உரிமை என்ற கருத்தமைவின் நுண்மைகளைக் கண்டோம்.

உரிமையும் கடமையும் செயல்படும் சீர்மையினைக் கொண்டு, உரிமையைப் பலவகைகளாகப் பிரித்துக் காண்கின்றனர் சட்ட இயலர். இதனை இனிக் காணலாம்.

செயலுறும் உரிமை (Perfect right)

செயலுறா உரிமை (Imperfect right)

பொதுவாகச் சட்டம் உரிமையினை ஏற்கிறது (recognise) என்றால், அதைச் செல்லுறுத்தவும் (enforce) செய்கின்றது. சில நேர்வுகளில், சட்டம் ஓர் உரிமையை ஏற்றாலும் செல்லுறுத்து வதில்லை.

ஒருவர் என்பெயருக்குக் கடனொப்புச் சீட்டு (Pro-note) எழுதிக் கொடுத்துக் கடன் பெற்றிருந்தால், அந்த ஒப்புதல் நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் வழக்கிட்டு அந்தக் கடனை நான் வசூலிக்கலாம். கடனைத் திரும்பப் பெறும் என் உரிமையினைச் சட்டம் ஏற்று இவ்வாறு செல்லுறுத்துகிறது. இவ்வாறு, சட்டம் ஏற்றுச் செல்லுறுத்தும் (enforce) உரிமையினைச் 'செயலுறும் உரிமை' (perfect right) என்பார்கள்.

கடன் ஒப்புதல் நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் கடந்துவிட்டால், காலவரையறைச் சட்டப் (Limitation Act) படி அக்கடனைப் பெறுவதற்கு நான் வழக்கிட இயலாது. அது காலங்கடந்த கடனாகி விடுகின்றது. ஆனால் ஒன்று.

காலவரையறைச் சட்டம் எனக்கிருந்த வழக்கிடும் உரிமையைத்தான் அழிக்கின்றது. ஆயினும், அந்தக் கடன் அழிந்து போவதில்லை. கடனைப் பொறுத்த என் உரிமை அழிந்து போவதில்லை. காலங்கடந்த கடனுக்கென புதிய கடனொப்புச் சீட்டு எழுதித் தரப்படலாம். அதைச் சட்டம் ஏற்கின்றது. ஆனால், புதிய கடனொப்புச்

சீட்டு இல்லாத நிலையில், காலங்கடந்த கடனை வசூலிப்பதற்கென்று நான் வழக்கிட முடியாது. இந் நிலையில், காலங்கடந்த கடனைப் பொறுத்த எனது உரிமையைச் 'செயலுறா உரிமை' (Imperfect right) என்பார்கள்.

ஓர் உரிமையைச் சட்டம் ஏற்றுச் செல்லுறுத்தும்பொழுது அது 'செயலுறும் உரிமை'; அதைச் சட்டம் ஏற்கிறது; ஆனால், செல்லுறுத்துவதில்லை என்றால் அது 'செயலுறா உரிமை'.

ஒரு நாடு பிற நாடுகளிடமிருந்து கடன் பெறுகின்றது. இந்தக் கடனைத் திருந்தப் பெறுவதற்கு என்று எந்தச் செல்லுறுத்த ஆள்வையும் (enforcing authority) கிடையாது. எனவே, அது போன்ற நாட்டிடைக் கடன்களைப் பொறுத்த உரிமைகளையும் 'செயல்படா உரிமைகள்' என்பதுண்டு.

பொதுமுக உரிமை (Right in rem),
தனிமுக உரிமை (Right in Personam).

கடனொப்புச் சீட்டு எழுதிக் கொடுத்து என்னிடம் கடன் வாங்கினவரிடமிருந்து, நான் அந்தக் கடனை வரப்பற்றும் உரிமையுடையவன். இந்த உரிமைக்கு எதிரிணையான கடமை கடனொப்புச் சீட்டு எழுதிக் கொடுத்தவருக்கு மட்டுமே உண்டு; வேறு எவருக்கும் கடமை இல்லை.இவ்வாறு, ஒரு நபர் அல்லது சில நபர்களுக்கு மட்டுமே எதிராக உள்ள உரிமையினைத் 'தனிமுக உரிமை' (Right in personam) என்பார்கள்.

பொதுவாக, தனி நபர்களிடை எழும் ஒப்பந்தங்களால் விளையும் உரிமைகள் 'தனிமுக உரிமை'களாகவே இருக்கும்.

ஒரு சொத்தின் மீது நமக்கு உரிமை இருந்தால், அந்த உரிமைக்கு ஊறு விளைக்கும் விதத்தில் குறிப் பிட்ட ஒரு தனி நபரோ நபர்களோ அன்றி, பொதுவாக எவருமே நடத்தல் கூடாது. எனது உடைமையில் உள்ள நிலத்தில் பொதுவாக எவருமே அத்துமீறி நுழைதல் கூடாது. இந்த உரிமை குறிப்பிட்ட எந்த நபருக்கும் எதிரானதன்று; பொதுவாக எல்லாருக்குமே எதிரான உரிமை இது. இத்தகைய உரிமையினை 'பொதுமுக உரிமை' (Right in rem) என்பார்கள்.

நான் ஒரு வீட்டை விலைக்கு வாங்குகிறேன் என்றால், அந்த வீட்டின்மீது நான் பெறும் உரிமை 'பொதுமுக உரிமை' யாகும். அந்த வீட்டின்மீது எனக்குள்ள உடைமையிலோ வேறுவகையான அனுபவத்திலோ மற்றவர் எவரும் குறுக்கிடுதல் கூடாது. எனது அனுபவத்தில் குறுக்கிடுதல் கூடாது என்ற பொதுவான தடையைத் தவிர வேறு எவருக்கும் குறிப்பிட்ட கடமைச் செயல் எதுவும் கிடையாது. பிறர்மீது தடை உள்ளது. ஆனால், இன்னதைச் செய்ய வேண்டும் என்ற கடமை எதுவும் இல்லை. ஆதலால், இந்த வகை உரிமையினை, 'தடையுறுத்தும் உரிமை' (Negative right) என்றும் கூறுவதுண்டு.

நான் அந்த வீட்டை ஒருவருக்கு வாடகைக்கு விடுகிறேன் என்றால், அவரிடமிருந்து வாடகையைப் பெறும் உரிமை எனக்கு உண்டு. இவ்வாறு, வாடகைக்கு இருக்கும் தனிநபருக்கு எதிரான இந்த உரிமை 'தனிமுக உரிமை' (right in personam) ஆகிறது. அந்த உரிமை எவருக்கு எதிராக இருக்கிறதோ, அவர் வாடகையைச் செலுத்தும் கடமையுள்ளவர் ஆகின்றார். வாடகைப் பணத்தைச் செலுத்துதல் என்ற குறிபிட்ட செயலைச் செய்யும் கடமை அவருக்கு உண்டு. எனவே, இந்த உரிமையினைச் 'செயலுறுத்தும் உரிமை' (Positive right) என்றும் கூறுவார்கள்.

குறிப்பிட்ட நபர் அல்லது நபர்கள் என்று இல்லாமல் பொதுவாக எல்லாரையும் கட்டுப்படுத்தும் உரிமை 'பொதுமுக உரிமை'யாகும். சொத்துக்கள் மீதுள்ள உரிமைகள் அனைத்துமே பொதுமுக உரிமைகளாகவே இருக்கும். தனி நபர்களிடையே எழும் ஒப்பந்தங்களால் தோன்றும் உரிமைகள் அவர்களை மட்டுமே கட்டுப்படுத்துகின்றன. எனவே, அவை 'தனிமுக உரிமைகள்'.

சொத்துநிலை யுரிமை (Proprietary right)

தனிநிலையுரிமை (Personal right)

ஒருவருக்கு நிலம், வீடு, வாணிபம், தொழில் நிறு வனங்களில் பங்குகள், பிறரிடமிருந்து வரவேண்டிய கடன்கள், பதிப்புரிமை போன்ற பல்வகைப்பட்ட பருப்பொருள்கள், நுண்பொருள்கள் மீது உரிமை இருக்கலாம். இவ்வுரிமைகளை யெல்லாம் சேர்த்து மொத்தமாக அவருடைய 'சொத்து' என்று சாதாரண வழ்க்கில் கூறுகின்றோம். இவ்வாறு, சொத்து என்று நாம் கருதும் பொருள்கள்மீது ஒருவருக்குள்ள உரிமை

'சொத்துநிலையுரிமை' (Proprietary right) எனப்படும்.

இத்தகைய பொருள்களைத் தவிர ஒரு மனிதனுக்கு உற்ற பிற மதிப்புகளும் உண்டு. சமுதாயத்தில் அவனுக்கென்று சில மதிப்பு நிலைகள் உண்டு. அவன் மனைவி மக்களோடு வாழ்வதால், 'கணவன்','தந்தை' என்ற நிலை; நாட்டின் குடிமகனாக (citizen) இருப்பதால் அந்நாட்டில் வாக்குரிமை பெற்ற 'குடிமகன்' என்ற நிலை; அவனுக்குற்ற 'புகழ்' நிலை; அவன் உடலுக்கு எவரும் ஊறு விளைவித்தலைத் தடுக்கும் உரிமை நிலை இவற்றை ஒருவனது 'மதிப்புநிலை' (Status) யும் அவனது உரிமைக்குற்றதேயாகும். இந்த மதிப்பு நிலை யென்பது ஒரு மனிதனின் தனிப்பட்ட சிறப்பாலும், இதர சூழலாலும் எழுவது. சமுதாயத்தில் அவனுக்குற்ற தனிநிலையின் பயனாக விளைவது. எனவே, அவனது மதிப்பு நிலை குறித்து அவனுக்குள்ள உரிமை 'தனிநிலையுரிமை' (Personal right) எனப்படும்.

வங்கியிலுள்ள என்பணத்தின்மீது எனக்குற்ற உரிமையைப பாதுகாப்பது போலவே சமுதாயத்தில் எனக்குற்ற புகழையும் சட்டம் பாதுகாக்கின்றது. ஒன்றைச் 'சொத்து நிலையுரிமை' என்கிறோம்; மற்றொன்றைத் 'தனி நிலையுரிமை' என்கிறோம்.

பெரும்பாலும், சொத்துநிலையுரிமை என்பது பண மதிப்புடையது; ஆனால், தனிநிலையுரிமை நேரடியான பணமதிப்பு இல்லாதது. முன்னது ஒருவனின் வாழ்க்கை வசதி என்றால், பின்னது அவனுடைய வாழ்க்கை நலம்.

ஒருவரது சொத்து நிலையுரிமை அவரது மரணத்திற்குப் பின் அவர் வாரிசுகளுக்கு இறங்குகிறது. ஆனால், தனிநிலை யுரிமை அவ்வாறு இறங்கும் தன்மை படைத்தது அன்று; அது இறந்தவரோடு மறைந்து விடுகிறது.

தனிநிலை (Status) என்பதில் உரிமை மட்டும் இல்லை, கடமைகளும் பொறுப்படைவுகளும் (liabilities) சேர்ந்து இருக்கலாம்.

பொதுமுக உரிமை, தனிமுக உரிமை இரண்டுமே 'சொத்து நிலை உரிமை' என்பதில் அடங்கும். என் சொந்த வீட்டின்மீதுள்ள உரிமை பொதுமுக உரிமை; ஓர் ஒப்பந்தத்தால் எனக்குப் பணம் வரவேண்டுமெனில் அது தனிமுக உரிமை. இந்த இரண்டுவகை உரிமைகளுமே 'சொத்து நிலையுரிமை' ஆகின்றன.

சொத்தமை உரிமை (Right in re propria)

மேலமை உரிமை (Right in re aliena):

எனக்குச் சொந்தமான நிலத்தை இன்னொருவருக்குக் குத்தகைக்கு (lease) விடுகிறேன். அந்த நிலத்தின் மீது எனக்குச் 'சொத்துரிமை' இருக்கிறது. எனது சொத்துரிமையில் இருந்து பிரித்துக் கொடுக்கப்பட்டதுதான் குத்தகை உரிமை. அடிப்படையான சொத்துரிமைக்கு மேல் அமைவது குத்தகை உரிமை. எனவே, குத்தகை உரிமையை 'மேலமை உரிமை' (Right in re aliena) என்பார்கள். அடிப்படையான உரிமையைச் 'சொத்தமை · உரிமை' (Right in re propria) என்பார்கள்.

தமக்குச் சொந்தமான சொத்தின் மீது ஒருவருக்குள்ள உரிமை 'சொத்தமை உரிமை'. வேறொருவருக்குச் சொந்த மான சொத்தின் மீது எழும் உரிமை 'மேலமை உரிமை'. இங்குச் 'சொத்து' என்று கூறும்பொழுது நிலைபொருள், அசைபொருள் இரண்டையும் சேர்த்தே கூறுகின்றோம்.

ஒருவருக்குத் தமது நகையின்மீதுள்ள உரிமை 'சொத்தமையுரிமை'; அதை வேறொருவரிடம் அடகு வைத்தார் எனில், அந்த அடகுதார் பெறும் உரிமை 'மேலமை உரிமை' யாகும்.

மேலமை உரிமை என்பது சொத்துரிமையுடன் தொடர்ந்து செல்வது. குத்தகைக்கு விட்டவர் அந்தக் குத்தகை தீருவதற்கு முன்னர் தம் நிலத்தை விற்று விட்டார் எனில், வாங்கியவருக்குச் சொந்தமாகும் அந்த நிலத்தின்மீது குத்தகை தொடர்ந்து இருக்கிறது. எனவேதான், 'மேலமை உரிமைகளை' 'வில்லங்கங்கள்' (encumbrances) என்றும் கூறுவதுண்டு.

குத்தகை (lease), வசதியுரிமை (servitude), பிணையம் (security), பொறுப்பமைப்பு (Trust) என்று வில்லங் கங்கள் நான்கு வகைப்படுவன. இவற்றின் விவரங்களைச் 'சொத்துரிமை' என்றத் தலைப்பில் காணலாம்.

சுருக்கமாகக் கூறினால்:

'குத்தகை' என்பது ஒருவருக்குச் சொந்தமாயுள்ள சொத்தின் மீதான உடைமையுரிமை இன்னொருவருக்கு

இருப்பதாகும்.

'வசதியுரிமை' என்பது சொத்துரிமை அல்லது உடைமையுரிமை இரண்டும் இல்லாத நிலையிலும், ஒரு நிலத்தைக் குறிப்பிட்ட காரியத்திற்கெனப் பயன்படுத்தும் உரிமையாகும். (வழியுரிமை போன்ற வசதியுரிமைகள்)

'பிணையம்' என்பது கடனை வரப்பற்றுவதற்கு உறுதிக் கோடாக, கடனாளியின் சொத்தின்மீது கடன் கொடுத்தவருக்கு உள்ள உரிமை.

'பொறுப்பமைப்பு' என்பது பிறர் நலனுக்குப் பயன்படும் வகையில், சொத்துரிமை, நேர்மைநெறிக் கடப்பாட்டினால் வரம்புக்குட்படுதல். இங்கு, சொத்துரிமையுடையவர் 'பொறுப்புரிமையர்' (Trustee) என்றும், சொத்தின் பயனுக்கு உரிமையுடையர் 'பயனுரிமையர்' (beneficiary) என்றும் குறிக்கப் பெறுகின்றனர்.

சட்ட முறை உரிமை (Legal right)

தகுமுறை யுரிமை (Equitable right)

இங்கிலாந்து நாட்டில் அந்த நாள்களில் இருவகையான நீதிமன்றங்கள் செயல்பட்டு வந்தன. ஒன்று, சட்டமுறை நீதிமன்றம் (Court of Common law); மற்றொன்று தகுதிமுறை நீதிமன்றம் (Court of Chancery) சட்டவிதிகளின்படியான உரிமைகளைச் சட்டமுறை நீதிமன்றங்கள் ஏற்றுச் செல்லுறுத்தின. சட்ட விதிகளில் தளர்ந்த, ஆனால், நேர்மை நெறியின்படியான உரிமைகளைத் தகுதிமுறை நீதிமன்றங்கள் ஏற்று நீதிவழங்கின.

இந்த வரலாறு காரணமாகவே சட்டமுறை உரிமை (Legal right) தகுதிமுறையுரிமை (Equitable right) என்று இரு வகைகளாக உரிமைகள் பிரிக்கப்படுகின்றன. இப்பொழுது இருவகையுரிமைகளும் சட்டமுறை நீதிமன்றங்களால் ஏற்றுச் செயலுறுத்தப் படுகின்றன.

ஆயினும், இந்த வேறுபாடு இன்றும் முக்கியத்துவம் உடையதாக உள்ளது.

எடுத்துக் காட்டாக ஒன்றைக் கூறலாம். 'அடைமானம்' என்றால், அது குறித்து ஆவணம் இருத்தல் வேண்டும்; இது சட்ட முறையான அடைமானம் (Legal morgage). ஆவணம் எதுவும்

இன்றியே, ஒரு சொத்தின் சொத்துரிமை மூல ஆவணங்களைக் கொடுப்பதன் வழியிலேயே அடைமானம் எழலாம். இதைத் 'தகுதிமுறை அடைமானம்' (equitable mortgage) என்பார்கள்.

சட்டமுறை உரிமையும் தகுதிமுறையுரிமையும் முரண்படும்பொழுது சட்டமுறை உரிமையே நீதி மன்றங்களால் ஏற்கப்பெறும்.

நிறைவுற்ற உரிமை (Vested right)

நிறைவுறா உரிமை (Contingent right)

ஓர் உரிமையை ஒருவர் அடைவதற்கு முன் நிகழவேண்டிய காரியங்கள் அனைத்தும் நிகழ்ந்து விட்டால் அவர் அதை அடைந்துவிடுகின்றார். அந்நிலையில் அது 'நிறைவுற்ற உரிமை' (Vested right) எனப்படுகிறது.

அக்காரியங்களில் சில மட்டும் நிகழ்ந்து சில நிகழாத நிலையில் அந்த உரிமை அவரை இன்னும் சேரவில்லை. இந் நிலையில் அதை 'நிறைவுறா உரிமை' (Contingent right) என்கிறோம்.

தலைமையுரிமை (Principal right)

துணையுரிமை (Accessory right)

ஒரு நிலம் எனக்குச் சொந்தமானது; அதற்குப் போய்ச் சேர்வதற்கு இன்னொருவர் நிலத்தின்மீதான வழிவசதி உரிமை எனக்கு இருக்கிறது. இப்பொழுது, எனது நிலத்தின் மீதான உரிமையைத் 'தலையுரிமை' (Principal right) என்றும், அடுத்தவர் நிலத்தின் மீதான வழிவசதியுரிமையைத் 'துணையுரிமை' (Accessory right) என்றும் கூறுவதுண்டு.

எனது நிலத்தைக் குத்தகைக்கு விட்டிருக்கிறேன் என்றால், என் நிலத்தின் மீதான சொத்துரிமையைத் 'தலையுரிமை' என்றும், குத்தகைக்கு விடும் உரிமையைத் 'துணையுரிமை' என்றும் கூறு வார்கள்.

ஓர் உரிமையை விரிவாக்கும் வகையில் உள்ள மற்றோர் உரிமையைத் 'துணையுரிமை' என்றும், விரிவாக்கப் பெறும் உரிமையைத் 'தலையுரிமை' என்றும் சட்டம் கொள்கிறது.

முதல்நிலை யுரிமை (Primary right)

தீர்வுநிலை யுரிமை (Sanctioning right)

நமக்கு எத்தனையோ உரிமைகள் உள்ளன. அவற்றைச் சட்டம் செல்லுறுத்துகிறது. என்றாலும், செல்லுறுத்தும் விதம் உரிமைகளின் தன்மைக்கேற்ப மாறுகின்றது. சில உரிமைகளைச் சட்டம் அப்படியே செல்லுறுத்துகிறது; சில உரிமைகள் மீறப்பட்ட பின்னர்தான் அதற்கான பரிகாரத்தைச் சட்டம் அளிக்கின்றது.

நான் இன்னொருவருடன் ஒப்பந்தம் செய்து கொள்ளு கிறேன். அந்த ஒப்பந்தப்படி அவர் நடக்கவில்லை. இதனால் எனக்கு இழப்பு ஏற்படுகிறது. இந்நிலையில் சட்டம் எனக்கு அளிக்கும் பரிகாரம் (தீர்வழி) என்ன? ஒப்பந்தத்தை மீறியவரிடமிருந்து, நான் இழப்பீடு பெறுவதற்குச் சட்டம் உதவுகிறது. அதாவது, நான் அவர்மீது வழக்கிட்டு இழப்பீடு பெறலாம். இந்நிலையில் இருவகை உரிமை இயக்கங்கங்களை நாம் காணுகின்றோம்.

ஒன்று, ஒப்பந்தப்படி எனகுக்குள்ள உரிமை; மற்றொன்று அது மீறப்பட்டதால் இழப்பீடு பெறும் உரிமை. முதல் உரிமையை முதல் நிலை உரிமை (Primary right) என்பார்கள். இரண்டாவதைத் 'தீர்வுநிலை உரிமை' (sanctioning right) என்பார்கள். இவற்றை Antecedent right என்றும் Remedial right என்றும் கூறுவதுண்டு.

எனவே, ஓர் உரிமை மீறப்பட்டதால் விளையும் தீங்கிற்குத் தீர்வு காணும் வகையில் உள்ளது 'தீர்வு நிலையுரிமை' என்பது, 'மீறப்பட்ட உரிமை', 'முதல் நிலையுரிமை' ஆகும்.

என்னிடம் கடன் வாங்கியவர் திருப்பித் தர வில்லை என்றால், அவர் மீது வழக்கிட்டுக் கடன் தொகையைத் திரும்பப் பெறுகின்றேன். இங்கு, கடனைத் திரும்பப் பெறுவதற்கு எனக்குள்ள முதல்நிலை யுரிமையைச் சட்டம் அப்படியே செல்லுறுத்து கிறது.

இவ்வாறு, முதல்நிலையுரிமையை அப்படியே செல் லுறுத்துவது சில சூழ்நிலைகளில் இயலுவதில்லை: செல்

லுறுத்துவது முறையும் ஆவதில்லை. ஓர் ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொள்வதாக ஒப்பந்தம் செய்து கொண்டு, அதற்குப் பின், அவர்களில் ஒருவர் ஒப்பந்தப்படி நடக்க மறுத்து விடுகிறார் என்று வைத்துக் கொள்வோம். இப்பொழுது, ஒப்பந்தத்தை நிறைவேற்ற மறுப்பவரைச் சட்டம் கட்டாயப் படுத்தி மணம் செய்யுமாறு விதிப்பதில்லை; அவ்வாறு விதிப்பதும் சமுதாய நலனுக்கு உகந்தது அன்று. எனவே, ஒப்பந்தத்தை மீறியவரை அடுத்தவருக்கு இழப்பீடு செலுத்துமாறு சட்டம் விதிக்கின்றது. இச்சூழ்நிலையில், தீர்வுநிலை உரிமை அளிப்பதன் வாயிலாகத்தான் ஒப்பந்தத்தில் அடங்கியுள்ள முதல்நிலையுரிமையைச் சட்டம் செல்லுறுத்த வேண்டியுள்ளது.

'முதல்நிலையுரிமை' என்பது, என் உடலை எவரும் தாக்குதல் கூடாது என்ற வகையிலுள்ள 'பொதுமுக உரிமை' (right in rem) யாகவும் இருக்கலாம்; அல்லது, நான் பிறருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் மீதான 'தனிமுக உரிமை' யாகவும் (right in personam) இருக்கலாம். ஆனால், 'தீர்வுநிலையுரிமை' என்பது எப்பொழுதும் தனிமுக உரிமையாகவே இருக்கின்றது. ஏனெனில், தீர்வுநிலையுரிமை எழுவது எனக்குள்ள ஓர் உரிமையை மீறியவர் எவரோ அவருக்கு எதிராகத்தான். எனவே, தீர்வுநிலையுரிமை எப்பொழுதும் தனிமுக உரிமையே (right in personam) ஆகும்.

பொதும உரிமை (Public right)

தனிம உரிமை (Private right)

அரசுக்கு உள்ள உரிமைகளைப் 'பொதும உரிமைகள்' (Public rights) என்பார்கள். பொதுமக்களின் சார்பில், அவர்களின் நலனுக்காக உள்ளனவே அரசின் உரிமைகள். ஆதலால், அவ்வுரிமைகள் 'பொதும உரிமைகள்'.

தனி நபர்களுக்குள்ள உரிமைகளைத் 'தனிம உரிமைகள்' (private rights) என்பார்கள்.

இன்னொரு நோக்கிலும் இவற்றைக் காண்பதுண்டு.

தனிநபருக்குள்ள உரிமை அரசின் நிர்வாகத்தைப் பொறுத்ததாகவோ அரசாங்கப் பணிகளுடன் இணைந்ததாகவோ இருந்தாலும், அதைப் 'பொதும உரிமை' என்பது உண்டு. பொதுத் தேர்தலில் ஒரு

நபருக்குள்ள 'வாக்களிக்கும் உரிமை' பொதும உரிமையாகும். ஏனெனில் அது அரசின் பொது நிர்வாகத்தைப் பொறுத்த உரிமை. தமது நலனுக்காக மட்டுமே ஒருவருக்குள்ள உரிமை 'தனிம உரிமை'யாகும்.

இவ்வாறு, உரிமைகளின் நோக்கத்தை வைத்து அவற்றைப் 'பொதும உரிமை', 'தனிம உரிமை' என்று வகைப்படுத்துகின்றனர்.

இவ்வாறாக, உரிமைகளின் தன்மைகளைப் பல்வேறு கோணங்களில் ஆய்ந்து, அவற்றைப் பகுத்து, வகைசெய்து விளக்குகின்றனர் சட்டநூலறிஞர்கள்.

சொத்துரிமை
(Ownership)

['சொந்தம்' என்றால் என்ன? — சொத்துரிமை — சொத்தைப் பொறுத்த உரிமைகள் — சொத்துரிமைக்கான இலக்கணம் — ஆஸ்டின் கூற்று; அது பற்றிய ஆய்வு — பிற அறிஞர்கள் கூறும் வரைவுரைகள் — சால்மண்டின் கருத்தும் ஆய்வும் — சொந்தம் கொண்டாடத்தக்க பொருள்கள் — தனிச் சொத்துரிமையும், கூட்டுச் சொத்துரிமையும் — பொறுப்பமைப்பு — நிறைவுற்ற சொத்துரிமை, நிறைவுறாச் சொத்துரிமை — சொத்துரிமையும் இன்றைய சமுதாயமும்]

'சொந்தம்' என்றால் என்ன?

'சொந்தம்' என்றால் என்ன?

'இராமனுக்கு முருகன் சொந்தம்' என்று கூறும் பொழுது, 'சொந்தம்' என்ற சொல் 'உறவு' என்ற பொருளில் பயன் படுகின்றது.

'இராமனும் முருகனும் உறவினர்கள்' என்ற பொருளில் இராமனுக்கு முருகன் சொந்தம்' என்கிறோம்.

ஆகவே, 'சொந்தம்' என்பது உறவைக் குறிக்கும் சொல்லாகிறது.

சட்டத்திலும், 'இந்த வீடு எனக்குச் சொந்தமானது' என்றால்'இந்த வீட்டிற்கும் எனக்கும் உறவு உள்ளது' என்பதே பொருளாகும்.

'சொந்தம்' என்பது ஒரு நபருக்கும் அவருக்குச் சொந்தமான பொருளுக்கும் உள்ள உறவைக் குறிப்பதாகும்' என்கிறார் பிட்ஸ்ஜெரால்டு என்ற ஆசிரியர் [1]

---

[1] Ownership denotes the relation between a person and an object forming the subject matter of his ownership - Fitzgerald.

இரு மனிதர்களிடையே உறவு இருக்கலாம். ஆனால், ஒரு மனிதனுக்கும் உயிரற்ற பொருள்களுக்கும் இடையே உறவு எப்படி எழுகின்றது?

உரிமையில் எழுவது சொந்தம் என்ற உறவு

ஒரு பொருளைப் பொறுத்த உரிமைகள் எவரைச் சேர்த்துள்ளனவோ அவருக்கும் அப்பொருளுக்கும் இடையே உறவு எழுகின்றது. ஒருவருக்கு ஒரு பொருளின் மீதுள்ள உரிமைகளால் எழும் உறவையே 'சொந்தம்' என்ற சொல் குறிக்கின்றது.

அந்த உரிமை எத்தகையது?

ஒரு வீட்டை நான் வாடகைக்கு எடுத்துக் குடி இருக்கிறேன். ஒரு நிலத்தைக் குத்தகைக்கு எடுத்திருக்கிறேன். இதனால், வீட்டில் குடியிருக்கும் உரிமையும், நிலத்தின் மீதான குத்தகை உரிமையும் எனக்கு உள்ளன. இருந்தாலும், வீட்டையோ நிலத்தையோ எனக்குச் 'சொந்தம்' என்று கூறுவதில்லை.

அப்படியானால், ஒரு பொருளை எனக்குச் சொந்தமானது என்று கூறுவதற்கு அப்பொருளின் மீதான உரிமை எத்தன்மை யுடையதாக இருத்தல் வேண்டும்?

ஒரு பொருள் மீதான அனைத்து உரிமைகளும் ஒருவருக்கு இருக்கும் நிலையில்தான், அவருக்கு அந்தப் பொருள் சொந்த மானது என்கிறோம்

'ஒரு பருப்பொருளின் பயன்கள் அனைத்தின் மீதும் உரிமை உள்ளவரே அப்பொருளின் மீது சொந்தம் உடையவர்' என்கிறார் பிட்ஸ்ஜெரால்டு.[1]

ஒருவர் தமக்குச் சொந்தமான பொருளைப் பிறருக்குக் குத்தகைக்கு விடலாம். அடைமானம் வைக்கலாம்; ஒத்தி ஏற்படுத்தலாம்; அதை இன்னொருவருக்கு விற்கவும் செய்யலாம். இவ்வாறு தமக்குச் சொந்தமான பொருள் மீது எத்தனையோ வகை உரிமைகள் உள்ளன.

இத்தனை உரிமைகளும் சேர்ந்து ஒருவருக்கு ஒரு பொருள் மீது உள்ள நிலையில்தான் அவருக்கு அந்தப் பொருள் சொந்தமானது என்று கூறப்படுகிறது.

---

1 The owner of a material object is he who owns a right to the aggregate of its uses - P J Fitzgerald.

'ஒரு பொருளைப் பொறுத்த எல்லா உரிமைகளும் ஒருவரிடம் குவிந்துள்ள நிலையில்தான் அவருக்கு அந்தப் பொருள் சொந்தமாகிறது' [1] என்கிறார் மார்க்பி என்ற பேராசிரியர்.

எனவே, ஒருவருக்குச் சொந்தமான பொருள் மீதுள்ள உரிமை என்பது அச்சொத்தைப் பொறுத்த பல்வகை உரிமைகளும் இணைந்த உரிமையாகும்; அனைத்து உரிமை களையும் அடக்கி நிற்கும் ஆதார உரிமையாகும்.

சொத்துரிமை

இத்தகைய ஆதார உரிமையினைப் பிற உரிமைகளில் இருந்து வேறுபடுத்திக் காட்ட வேண்டும்.

எனவே, இதைச் 'சொத்துரிமை' எனலாம். சொத்தைப் பொறுத்த எல்லா உரிமைகளும் இணைந்து இலங்கும் உரிமை 'சொத்துரிமை' என்பது.

ஒரு பொருள் மீது 'சொத்துரிமை' நமக்கு உள்ளது என்றால் வேறு எவருக்கும் அந்த உரிமை இருப்பதில்லை. வேறு எவரும் அப்பொருளை அனுபவிப்பதற்கு உரிமையுடையவ ரல்லர். அவ்வாறு, எவராவது அப்பொருளை அனுபவிக்க முயன்றால் அதைத் தடுக்கும் அதிகாரம் சொத்துரிமை யுடையவருக்கு உண்டு.

'ஒரு பொருளைப் பயன்படுத்தவோ, கையாளவோ இயலாதபடி மற்ற நபர்களைத் தடுக்கும்படியான உறுதிப்பாடு தான் சொத்துரிமையின் ஆதாரமாகும்.'[2]— என்கிறார் விக்மோர் என்ற அறிஞர்.

மேலே கண்ட வாசகத்தில் விக்மோர் Ownership என்பதை 'Property right' 'அதாவது சொத்துரிமை' என்றே குறிப்பிடு கின்றார்.

சொத்தின்மீதான உரிமைகளை Rights in re propria என்று இலத்தீன் மொழியில் கூறுவார்கள். இதையே ஆங்கிலத்தில் Proprietory rights என்றும் Ownership என்றும் கூறுகின்றனர்.

---

1 If all the rights over a thing were centred in one person, that person would be the owner of the thing - Markby.

2 The property-right is essentially a gurantee of the exclusion of other persons from the use or handling of the thing - J.H. Wigmore.

Proprietory rights என்பதை நாம் தமிழில் 'சொத்துரிமை' என்பதே சாலப் பொருந்தும்.

ஒருவருக்கும் ஒரு பொருளுக்கும் உள்ள உறவைக் காட்டுவதற்குச் 'சொந்தம்' என்ற சொல்லையும், அப்பொருள் மீதுள்ள உரிமையைக் காட்டுவதற்குச் 'சொத்துரிமை' என்ற தொடரையும் நாம் பயன்படுத்தலாம்.

'சொத்துரிமை' என்பதில் அடங்கும் சொத்தைப் பொறுத்த உரிமைகள் என்னென்ன?

அந்த உரிமைகளாவன:

முதலாவதாக, சொத்தரிமையாளர் அச்சொத்தைத் தமது உடைமையில் வைத்துக் கொள்ளும் உரிமையுள்ளவர்.

இரண்டாவதாக, சொத்துரிமையாளர் அச்சொத்தைப் பயன்படுத்தி தம் விருப்பம்போல் அனுபவிக்கும் உரிமையுள்ளவர்.

மூன்றாவதாக, சொத்துரிமையாளருக்கு அச்சொத்தைப் பிறருக்கு உரிமை மாற்றம் (alienate) செய்யவும் அதிகாரம் உண்டு.

நான்காவதாக, சொத்துரிமையாளர் அச்சொத்தை அழிக்கவும் செய்யலாம். எனது வீட்டை நான் இடிக்கலாம்; எனது தோட்டத்தை நான் அழிக்கலாம். எனது தங்க நகையை அழித்து வேறு விதமாகச் செய்யலாம்.

ஐந்தாவதாக, சொத்துரிமையாளர் தம் சொத்தை அடைமானம் வைக்கலாம்; ஒத்தியாகப் பிறரிடம் ஒப்படைக்கலாம். ஆயினும், கடனைக் கொடுத்து, சொத்தைத் திருப்பிப் பெறும் 'எஞ்சுரிமை' (residuary right) சொத்துரிமையாளரிடமே உள்ளது.

ஆறாவதாக, சொத்துரிமையாளர் தமது சொத்தைத் தம் ஆயுளுக்குப் பின் இன்னாருக்குச் சேர வேண்டும் என்று விருப்பாவணத்தின் மூலம் எழுதி வைக்கலாம். எனவே, சொத்துரிமை என்பது ஒருவருடைய ஆயுளுடன் முடிந்து போவதில்லை; சொத்துரிமையரின் வாரிசுகளுக்குப் போய்ச் சேருகின்றது.

இவ்வாறான உரிமைகள் அனைத்தையும் இணைத்துக் கூறும்பொழுது 'சொத்துரிமை' என்ற சொல்லால் நாம் குறிக்கின்றோம்.

ஆஸ்டின் கருத்து

சட்டஇயலறிஞர் ஆஸ்டின் என்பார் சொத்துரிமை என்பதை வரையறுத்துக் கூறுகின்றார்:

'குறிப்பிட்ட ஒரு பொருள் மீதான சொத்துரிமை என்பது அப்பொருளைப் பயன்படுத்துவதில் வரையேதுமில்லாதது, உரிமை மாற்றம் செய்வதில் தடையேதுமில்லாதது, கால வரையில் அளவேதுமில்லாதது'[1] என்கிறார்.

இன்றைய சட்டவிதிகளின் படி ஆய்ந்தால், ஆஸ்டின் கூறும் இலக்கணம் அப்படியே ஏற்றுக் கொள்ளத் தக்கதன்று.

சொத்துரிமை உள்ளவர் அப்பொருளை வரம்பு ஏதும் இன்றிப் பயன்படுத்த இயலாது. ஒரு கத்தி மீது சொத்துரிமையுள்ளவர் அக்கத்தியைக் கொண்டு மற்றவரைக் குத்த முடியாது, — குத்தினால் கொடுங்குற்றமாகிறது.

வீட்டின் மீது சொத்துரிமையுடையவர் இன்றுள்ள வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டப்படி (Rent Control law) எத்தனையோ கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகின்றார். அவர் விருப்பப்படி எவருக்கும் அவர் வீட்டை வாடகைக்கு விடுவது இயலாது; குடியிருப்போரை வெளியேற்றவும் முடியாது.

நகரங்களில் கட்டிடங்களை வைத்திருப்போர் பல கட்டுதிட்டங்களுக்கு உட்பட்டே அக்கட்டிடங்களைப் பயன் படுத்த முடிகிறது.

ஒரு சொத்தைப் பயன்படுத்துபவர் அடுத்த சொத்தில் வாழ்வோர்க்குத் தொல்லைகள் ஏற்படுத்தா வண்ணம் இயங்க வேண்டும் என்று 'தீங்கியல் சட்டம்' (Law of Torts) கூறுகின்றது.

ஒருவர் தம் சொத்தை உரிமைமாற்றம் செய்வதிலும் கட்டுப்பாடுகள் உள்ளன. தம் கடன்காரர்களை ஏமாற்றும் வகையில் தம் சொத்துக்களை ஒருவர் உரிமைமாற்றம் செய்வதைச் சட்டம் தடை செய்கிறது.

சொத்துரிமையர் பிறருடன் செய்யும் உடன்பாடுகளின் பயனாகவும் அதை அவர் அனுபவிப்பதில் கட்டுவரம்புகள் இருக்கலாம்.

---

[1] Ownership is a right over a determinate thing indefinite in point of user, unrestricted in point of disposition and unlimited in point of duration - Austin

இவ்வாறு, ஒருவர் தமக்குச் சொந்தமான ஒரு பொருளை அனுபவிப்பதில் பல கட்டுவரம்புகள் உள்ளன. இருப்பினும் அந்தச் சொத்தைப் பொறுத்த வேர்உரிமை அவரிடமே உள்ளது.

ஆஸ்டினின் கூற்று அது எழுதப்பெற்ற பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் ஓரளவு பொருத்தமுடையதாக இருந்திருக்கலாம். இக்காலத்தில் வளர்ந்துள்ள சட்டக் கோட்பாடுகள் சொத்துரிமையினைப் பல வகைகளில் கட்டுப்படுத்தியுள்ளன.

எனவே, சொத்துரிமை என்பது சொத்தைப் பயன்படுத்துவதற்கான முழுதுமான உரிமையாகும். ஆனால், அந்த உரிமை எல்லயற்றதன்று, வரம்பற்றதன்று.[1]

ஒருவர் தமது சொத்தைப் பயன்படுத்துவதில் இருவகையான வரம்புகள் உண்டு. ஒன்று, பொது நலன்; அண்டையில் வாழ்வோர் நலன் இவற்றைக் கருத்திற் கொண்டு சட்டம் விதிக்கும் வரம்புகள். இரண்டு, சொத்துரிமையரே தாம் பிறருடன் செய்து கொண்ட உடன்பாடுகளின்படி, அதாவது, குத்தகை, ஒத்தி முதலிய வகைகளில் பிறருக்கு ஏற்படுத்திய உரிமைகளின் படி, எழும் வரம்புகள். இத்தகைய வரம்புகள் எவ்வளவு இருப்பினும், சொத்துரிமை சொத்துரிமையரிடமிருந்து மறைந்து விடுவதில்லை.

எனவே, மேலும், சொத்துரிமை நிலைத்து நிற்பதாகும். அதாவது, அந்தப் பொருள் இருக்கும் வரை, அதன் மீதான சொத்துரிமையும் நிலைத்து நிற்கின்றது. நிலைத்து நிற்கும் இந்தச் சொத்துரிமை, சொத்துரிமையால் வாரிசுகளுக்குச் சேருகிறது. சொத்துரிமை என்பது சொத்துரிமையரின் மரணத்தோடு அவரிடமிருந்து பிரிந்து விடுகிறது. ஆனால், அது மறைந்து விடுவதில்லை. அது அவருடைய வாரிசுகளையே சேருகிறது.

'ஒரு பருப்பொருள் சொத்துரிமை என்பது, அச்சொத்தைப் பயன்படுத்துவதைப் பொறுத்து முழுதுமான, நிலையான, வழிமுறையினருக்கு இறங்குவதுமான உரிமையாகும்' —[2] என்று சொத்துரிமைக்கு இலக்கணம் வகுக்கிறார் பதிப்பாசிரியர் பிட்ஸ்ஜெரால்டு.

---

[1] Ownership is the right of general use, not that of absolute or unlimited use

[2] We may define the right of ownership in a material thing as the general, permanent and inheritable right to the uses of the thing - P.J. Fitzgerald

'சட்டத்தால் அனுமதிக்கப்படும் பயன்பாடு, உரிமை மாற்றம் இவற்றை முழுதுமாகச் செயற்படுத்தும் அதிகாரமே சொத்துரிமை என்பது'[1] — என்று சொத்துரிமைக்கு வரையறை வகுக்கின்றார் ஆசிரியர் போலக்.

எனவே சொத்துரிமை என்பது சட்டப்படி சொத்தைப் பயன்படுத்துவதற்கான முழுதுமான உரிமையாகும். அந்த உரிமையிலிருந்து பிரித்துப் பல சிறு உரிமைகளைப் பிறருக்குச் சொத்துரிமையர் மாற்றலாம். ஆயினும், மாற்றப்பட்ட உரிமைகளனைத்திற்கும் மிஞ்சிநிற்கும் எஞ்சுரிமை (residuary right) சொத்துரிமையரிடமே அமைந்திருக்கிறது. சொத்துரிமை நிலைத்து நிற்பது. எனவே, சொத்துரிமையரின் ஆயுளுக்குப் பின் அவரது வாரிசுகளுக்கு அது இறங்குகிறது. தமது சொத்து ரிமையை அவர் எவருக்கும் மாற்றலாம். இக்கருத்துக்கள் அனைத்தையும் உள்ளடக்கும் வகையில் 'சொத்துரிமை' என்ற தொடர் பயன்படுகிறது.

ஆசிரியர் சால்மண்டின் கருத்து

'சொந்தம் என்பது ஒரு நபருக்கும் அவருக்குற்ற உரிமைகளுக்கும் உள்ள உறவுதான். சட்டத்தில் உரிமைகளைத் தவிர வேறு எதையும் சொந்தத்திற்கு இலக்கான பொருளாகச் சொல்ல முடியாது. ஒருவருக்குச் சொந்தமானது என்று கூறினால், அந்தச் சொந்தம் எந்நிலையிலும் ஓர் உரிமையைப் பொறுத்ததேயாகும்'.[2]

இது ஆசிரியர் சால்மண்டின் கருத்து.

எனவே, சால்மண்டின் கருத்துப்படி ஒரு மனிதனுக்குச் சொந்தமானது என்று பருப்பொருள் எதுவும் இருக்க முடியாது; உரிமைகளை மட்டுமே அவனுக்குச் சொந்தமானவை என்று கூற முடியும். உரிமைகளைச் சொந்தமானவை என்று கூறுவதற்குப் பதிலாக, உரிமைகளுக்கு உற்ற பருப்பொருளைச் சொந்தமானது என்று இலக்கணையாகக் கூறுகிறோம் என்பது அவர் விளக்கம்.

இந்தக் கருத்தை இன்றைய சட்டநூலறிஞர்கள் ஏற்பதில்லை.

---

1 Ownership may be described as the entirety of the powers of use and disposal allowed by law - Pollock

2 Ownership, in its most comprehensive signification, denotes the relation between a person and any right that is vested in him. That which a man owns is in all cases a right -

மனிதனுக்கு எத்தனையோ வகை உரிமைகள் இருக்கின்றன. ஆனால், ஒரு பொருளைப் பொறுத்த உரிமைகள் அனைத்தும் ஒருமுகப்பட்ட உரிமை ஒருவனுக்கு இருக்கும் பொழுதுதான், அவனுக்கு அப்பொருள் சொந்தமானது என்று கூறுகிறோம்.

சொத்துரிமை என்பதில் பிறர் அச்சொத்தை அனுபவிக்காமல் தடுக்கும் ஏலுரிமை (Power), விருப்பப்படி பிறருக்கு உரிமைமாற்றம் செய்யும் தன்னுரிமை (liberty) இவையெல்லாம் அடங்கியுள்ளன. ஆதலால், சொத்துரிமை என்பதை மற்ற உரிமைகள் போல் கொள்வதற்கில்லை. இவ்வாறு, பேட்டன் (Paton) என்ற ஆசிரியர் கூறுகிறார்.

சால்மண்ட் நூலின் பதிப்பாசிரியர் பிட்ஸ்ஜெரால்டும் (Fitzgerald) சால்மண்டின் கருத்தை ஆதரிக்கவில்லை. அவர் கூறுவதாவது:

ஒருவருக்குச் சொந்தம் என்று உள்ளது ஒரு சமயம் ஓர் உரிமையாகவும் வேறொரு சமயம் ஒரு பருப்பொருளாகவும் எவ்வாறு இருக்க முடியும் என்பதே சால்மண்டின் கேள்வி.

ஆனால், ஒருவருக்குச் சொந்தமானது என்று எப்பொழுதும் உரிமை மட்டுமே இருக்க முடியும் என்றால் அது சட்ட மரபுக்கு மாறாகின்றது. ஒருவருக்கும் அவருக்குச் சொந்தமான பருப்பொருளுக்கும் உள்ள சிறப்பு உறவைக் காட்டும் வகையில்தான் 'சொந்தம்' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறோம். அந்தச்சிறப்பு உறவு, உரிமையின் அடிப்படையில் எழுவதுதான். எனவே, அந்தப் பொருள் சொந்தமானது என்று கூறாமல், அந்தப் பொருளைப் பொறுத்த உரிமைகள் சொந்தமானவை என்றால், அது உரிமைகள் மீது உரிமை கொண்டாடுவது போலாகிவிடும். உரிமைகள் மீது உரிமை என்பது சட்டமரபுக்கு உகந்ததாகாது.

பொதுவாக, ஒருவருக்கு ஓர் உரிமை இருக்கிறது என்றால், 'அவருக்கு அந்த உரிமை உள்ளது' என்கிறோமே அன்றி 'அவருக்கு அந்த உரிமை சொந்தமானது' என்று நாம் கூறுவதில்லை. அப்படிக் கூறுவது மரபும் அன்று.

'ஒருவருக்குப் பேச்சுரிமை உண்டு' என்கிறோம். 'அவர் பேச்சுரிமைக்குச் சொந்தமானவர்' என்று சொல்லுவதில்லை. ஒருவர் பேச்சுரிமை உடையவராகிறார்; பேச்சுரிமைக்குச் சொந்தக்காரர் ஆவதில்லை.

ஒருவர் தமக்குச் சொந்தமான பொருளை அடைமானம் வைக்கலாம், அல்லது விற்கலாம். ஆனால், அவருக்குற்ற பேச்சுரிமையை அவ்வாறு விற்கவோ, உரிமைமாற்றம் செய்யவோ இயலாது. எதை உரிமை மாற்றம் செய்யலாமோ அந்தப் பொருளைத்தான் சொந்தமானது என்கிறோம்.

எனவே, சாதாரண உரிமையையும், சொத்துரிமையையும் ஒன்றாகக் காணுதல் தவறாகும்.

இவ்வாறு பிட்ஸ்ஜெரால்டு என்ற பதிப்பாசிரியர் சால்மண்டின் கோட்பாட்டினை மறுக்கின்றார்.

சொந்தம் கொண்டாடத் தக்க பொருள்கள்

பொதுவாக, நிலம், வீடு, கால்நடைகள் போன்ற பருப் பொருள்கள்தாம் நமக்குச் சொந்தமானவை என்று கூறத்தக்க பொருள்களாக இருக்கின்றன.

இவற்றைத் தவிர கம்பெனிகளில் பங்குகள் (shares), பதிப்புரிமை (copy rights), புதுப்புனைவுரிமைகள் (Patents), கடனைத் திரும்பப் பெறும் உரிமைகள் இவையும் ஒருவருக்கு உற்ற செல்வங்களாகின்றன. இவையனைத்தும் பருப்பொருள்கள் அல்ல. உண்மையில் இவை ஒரு வகை உரிமைகளே. இவற்றின்மீதும் நாம் சொத்துரிமை கொண்டாடுகிறோம். இவற்றை உரிமைமாற்றம் செய்யச் சட்டம் இடமளிக்கிறது.

சில பருப்பொருள்கள்மீது எவரும் சொத்துரிமை கொண்டாடுவதற்கு இல்லை. எல்லாருக்கும் பொதுவான காற்று, கடல், எட்டமுடியாத இடத்திலுள்ள சூரியன், விண்மீன்கள் இவை போன்றவைமீது எவரும் சொந்தம் கொண்டாடுவதில்லை. இவையெல்லாம் சொத்துரிமைக்கு அப்பாற்பட்டவை ஆகின்றன.

எனவே, நிலம், வீடு போன்ற பருப்பொருள்கள், பங்குகள், பதிப்புரிமை போன்ற நுண்பொருள்கள், இந்த இருவகைப் பொருள்களும் சொத்துரிமைக்கு உற்றவை ஆகின்றன.

தனிச் சொத்துரிமையும் (Sole ownership)
கூட்டுச் சொத்துரிமையும் (Co-ownership)

பொதுவாக ஒரு பொருளின் மீது ஒருவருக்கு மட்டுமே சொத்துரிமை இருக்கும். அதைத் 'தனிச் சொத்துரிமை' (Sole ownership) என்கிறோம்.

சில நேரங்களில் ஒரே காலத்தில் ஒரு பொருள்மீது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களுக்குச் சொத்துரிமை இருப்பதுண்டு.

ஒரு நிலத்தை இரண்டு பேர்கள் சேர்ந்து விலைக்கு வாங்கினால் அந்த இருவருக்கும் அந்நிலத்தின்மீது சொத்துரிமை எழுகின்றது. இதைக் 'கூட்டுச் சொத்துரிமை' (Co-ownership) என்பார்கள்.

நான்கு பேர்கள் சேர்ந்து கூட்டாக வாணிபம் நடத்தலாம். அந்நிலையில் அந்த வாணிபப் பொருள்கள்மீது கூட்டாளிகள் நான்கு பேருக்கும் சொந்தம் உண்டு. அதைக் கூட்டுச் சொத்துரிமை என்கிறோம்.

கூட்டுச் சொத்துரிமையில் உள்ள சிறப்புக் கூறு ஒன்றை நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

ஒரு நிலம் இரண்டு பேர்களுக்குக் கூட்டுச் சொந்தமாக இருக்கிறது என்றால், நிலத்தின் கீழ்ப்பகுதி ஒருவருக்கும் மேற்பகுதி மற்றொருவருக்கும் சொந்தம் என்பதல்ல. அந்த நிலத்தின் எல்லாப் பகுதியிலும் இருவருக்கும் சொத்துரிமை உண்டு. நான்கு வீடுகள் இரண்டு பேர்களுக்குக் கூட்டுச் சொந்தமாக உள்ளது என்றால், ஒவ்வொருவருக்கும் இரண்டு வீடுகள் சொந்தமானவை என்பதன்று. அந்த வீடுகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவருக்கும் சொத்துரிமை உண்டு.

எனவே, கூட்டுச் சொத்துரிமையில், சொந்தத்துக்குரியது பிரிக்கப்படாத முழுமையாக உள்ளது.[1]

கூட்டுச் சொத்துரிமையர் பிரிந்து போக வேண்டுமென்றால், தங்கள் உரிமைக்கேற்ப சொத்தைப் பிரித்துக் கொள்ளலாம். அதைப் 'பாகப் பிரிவினை' (Partition) என்கிறோம்.

கூட்டுச் சொத்துரிமை இருவகைப்படும்.

ஒரு வகையில், கூட்டுச் சொத்துரிமையாளர் ஒருவர் இறந்துவிட்டால் அவருக்குரிய உரிமை அவருடைய வாரிசுகளைச் சேருகிறது. இதைப் 'பொதுவிலான சொத்துரிமை' (Ownership in common) என்பார்கள்.

மற்றொரு வகையில் இறந்தவரின் சொத்துரிமை அவர் மரணத்தோடு அற்றுப் போய் விடுகிறது. எஞ்சியிருக்கும் சொத்துரிமையாளர்களுக்கு அது சேர்ந்து விடுகிறது. இந்த வகைக்

[1] Co-ownership involves the undivided integrity of what is owned
— Salmond

கூட்டுச் சொத்துரிமையை 'இணைந்த சொத்துரிமை' (Joint ownership) என்று கூறுவர்.

இறந்தவர் உரிமை எஞ்சியிருப்போர்க்குச் சேர்வதை, 'எஞ்சுநர் உரிமை' (right of Survivorship) என்பார்கள்.

பொறுப்பமைப்பு (Trust)

பொறுப்புரிமையரின் சொத்துரிமையும் (Trust ownership) பயனுரிமையரின் சொத்துரிமையும் (Beneficial ownership)

'பொறுப்பமைப்பு' (Trust) என்ற ஏற்பாட்டிலும் இரட்டைச் சொத்துரிமை (duplicate ownership) இயங்குகிறது.

ஓர் அனாதை மாணவர் இல்லம் இருக்கிறது. எனது சொத்தின் வருமானம் என் ஆயுளுக்கு பிறகு அந்த அனாதை மாணவர்களுக்கு உதவும் வகையில் பயன்பட வேண்டும் என நான் எண்ணுகிறேன். அச்சொத்தை மாணவர்கள் பெயருக்கு எழுதி வைத்தால் அவர்களால் சொத்தை மேல்பார்க்க முடியாது. மேலும், அந்த இல்லத்திற்கு அடுத்து அடுத்து வரும் மாணவர்களுக்கும் அச்சொத்து பயன்பட வேண்டும். எனவே, இப்பொழுது அந்த இல்லத்தில் இருக்கும் மாணவர்களுக்குச் சொத்தை எழுதிவைப்பதில் பயனில்லை.

இந்நிலையில் நான் என்ன செய்வது?

சட்டம் இதற்கு ஓர் ஒப்பற்ற உத்தியைக் கையாளுகிறது.

நான் எனக்கு நம்பிக்கையுள்ள ஒருவரை 'பொறுப்புரிமை யராக' (Trustee) நியமித்து 'பொறுப்பமைப்பு' (Trust) ஒன்றை ஏற்படுத்துகிறேன். அந்தப் பொறுப்பமைப்பில் அடங்கும் என் சொத்தைப் பேணிப் பாதுகாக்கும் உரிமை பொறுப்புரிமையருக்கு உண்டு.ஆனால், அவருக்கு அச்சொத்தின் வருமானத்தை அனுபவிக்கும் உரிமை கிடையாது. அதற்கு உரிமையுள்ளவர்கள் அனாதை இல்லத்து மாணவர்கள்தாம். சொத்தின் வருமானத்தை அனாதை இல்லத்தின் மாணவர்கள் அடையும்படி பொறுப்புரி மையர் செய்தல் வேண்டும். அது அவரது பொறுப்பு. அச்சொத்தின் பயனை அடையும் மாணவர்கள் தாம் 'பயனுரிமையர்' (Beneficiaries) இவ்வாறு செய்யப்படும் ஏற்பாட்டை 'பொறுப்பமைப்பு ஏற்பாடு' (Trusteeship) என்பார்கள்.

பொறுப்பமைப்பு (Trust) ஏற்பாட்டில், பொறுப்பமைப்புச் சொத்தின் மீது இருவகை நபர்களுக்குச் சொத்துரிமை இருக்கிறது. ஒரு நபர் பொறுப்புரிமையர் (Trustee). அவர்தாம் அச்சொத்தை வாடகைக்கு விடவோ, குத்தகைக்கு விடவோ செய்து மேல்பார்க்கின்றார்.அதற்கான உரிமை அவருக்கு வேண்டும். எனவே, அவருக்கு அச்சொத்தின் மீது சொத்துரிமை உண்டு எனச் சட்டம் கொள்ளுகிறது. அதைப் 'பொறுப்புரிமையர் சொத்துரிமை' (Trust ownership) என்பார்கள். அதே நேரத்தில் அச்சொத்தின் பயனுக்கு உரியவர்கள் பயனுரிமையர்தாம். அவர்களுக்கும் சொத்துரிமை இருத்தல் வேண்டும். இல்லையெனில் சொத்தின் பயனைப் பெறும் உரிமை செயல்பட முடியாது. எனவே, பயனுரிமையருக்கும் சொத்துரிமை உண்டு எனச் சட்டம் கொள்கிறது. அதைப் 'பயனுரிமையர் சொத்துரிமை' (Beneficial ownership) என்பார்கள்.

இவ்வாறு, 'பொறுப்புரிமையர் சொத்துரிமை' 'பயனுரிமையர் சொத்துரிமை' என்ற இரட்டைச் சொத்துரிமைகள் ஒரே சொத்தின்மீது இயங்குகின்றன.

சிறிது சிந்தித்தால் ஓர் உண்மை விளங்கும். பொறுப்புரிமையருக்கு உள்ள சொத்துரிமை பெயரளவில் மட்டுமே உள்ளதாகும். சொத்தைப் பேணிக் காப்பதற்காகத்தான் அவர் சொத்துரிமையுடையவராகக் காணப்படுகிறார். பொறுப்பமைப்புச் சொத்துக்களைக் கட்டிக் காக்கும் பொறுப்புதான் உண்மையில் அவருக்கு உரிமையாக உள்ளது. தம் கடமையினை ஆற்றுவதற்குச் சொத்துரிமை என்ற போர்வை அவருக்கு தேவைப்படுகிறது. சொத்தின் பயனை அனுபவிப்பவர் பயனுரிமையர் மட்டுமேதான். எனவே, பயனுரிமையர் தாம் உண்மையில் சொத்துரிமை உடையவர்கள். ஆயினும், பயனுரிமையரால் அச்சொத்தை குத்தகைக்கு விடவோ, வேறு வகையில் மேல்பார்க்கவோ முடியாது. அவருக்கு அந்த உரிமை இல்லை. எனவே, உலகத்தைப் பொறுத்தவரை, பொறுப்புரிமையரே சொத்துரிமை உடையவராகக் காணப்படுகிறார். பொறுப்புரிமையரையும் பயனுரிமையரையும் பொறுத்தவரை பயனுரிமையரே சொத்துரிமையுடையவராகக் கொள்ளப் படுகிறார். இவ்வாறு, இரட்டைச் சொத்துரிமை (duplicate ownership) இயங்குகிறது.

தம் நலன்களைப் பேண இயலாத நிலையில் இருப்போர், இனிப் பிறக்க இருக்கும் குழந்தைகள், சொத்தை நிர்வகிக்க

இயலாதோர் இவர்களின் நலனைப் பாதுகாக்கும் வகையில் பொறுப்பமைப்புக்கள் (trusts) நிறுவப்படுகின்றன. ஒரு சொத்தின் நலனைப் பெற வேண்டியர்கள் பலராக இருக்கும் நிலையிலும், அவர்கள் சார்பில் அச்சொத்தைப் பேணுவதற்கு ஏற்ற ஏற்பாடாகவும் பொறுப்பமைப்பு இயங்குகிறது.

இரட்டைச் சொத்துரிமையுடன் இயங்கும் இந்தப் பொறுப்பமைப்பு ஏற்பாடுதான் சமுதாயத்தில் பல அற நிலையங்களும் ஆலயங்களும் சீராகச் செயல்படுவதற்கு வகை செய்கிறது.

பொறுப்புரிமையர் தம் சொத்துரிமையைப் பிறருக்கு மாற்றலாம், இதனால் பயனுரிமையர் பாதிக்கப்படுவதில்லை. மாற்றம் பெற்றவர் பொறுப்புரிமையர் ஆகின்றார்; அவ்வளவுதான். அதுபோல், பயனுரிமையரும் தம் சொத்துரிமையை மற்றவர்க்கு மாற்றலாம். அதனால், பொறுப்புரிமையரின் நிலை பாதிக்கப் படுவதில்லை. எனவே, பொறுப்புரிமையர் சொத்துரிமையும், பயனுரிமையர் சொத்துரிமையும் ஒன்றையொன்று சார்ந்து நிற்பன அல்ல; அவை தனித்தே இயங்குகின்றன.

'இந்திய பொறுப்பமைப்புச் சட்டம்' (Indian Trust Act) இந்த அமைப்பின் பல்வேறு கூறுகள் பற்றி விரிவாகச் சொல்லுகிறது.

நிறைவுற்ற சொத்துரிமை (Vested Ownership)

நிறைவுறாச் சொத்துரிமை (Contingent Ownership)

சொத்துரிமை என்பது நிறைவுள்ளதாகவும், சில நேர்வுகளில் நிறைவுறாததாகவும் இருப்பதுண்டு.

ஒருவர் தமது சொத்தைத் தன் மனைவிக்கும், மனைவியின் ஆயுளுக்குப் பின் தன் மகனுக்கும் சேர வேண்டும் என்று எழுதி வைக்கிறார். இதனால் மனைவிக்கு அச்சொத்து கிடைக்கிறது. இப்பொழுது மனைவிக்கு அச்சொத்தின் மீதுள்ள சொத்துரிமை நிறைவுற்ற சொத்துரிமையாகும். மனைவி உயிருடன் இருக்கும் காலத்திலும் மகனுக்கு அச்சொத்தின்மீது உரிமை உண்டு; ஆனால், அது நிறைவுறாத சொத்துரிமையாகிறது. ஏனெனில், எழுதி வைத்தவரின் மனைவி இறந்த பின்னர்தான், சொத்து மகனுக்கு வந்து சேருகிறது. மனைவியின் மரணம் நேர்வதைப் பொறுத்துத் தான் மகனுக்குச் சொத்து வருகிறது. இவ்வாறு, ஒரு நிகழ்வைப்

பொறுத்து, வந்து சேரவிருக்கும் சொத்தில் உள்ள உரிமை 'நிறைவுறாச் சொத்துரிமை' ஆகிறது.

'நிறைவுற்ற சொத்துரிமையை' Vested ownership என்றும், 'நிறைவுறாத சொத்துரிமையை' Contingent ownership என்றும் கூறுவார்கள்.

நான் ஒரு நிலத்தை வாங்க இருக்கிறேன். இவ்வாறு நான் வாங்கப் போகிறேன் என்பதை வைத்துக் கொண்டு எனக்கு அந்த நிலத்தில் நிறைவுறாத சொத்துரிமை உள்ளது என்று கூற முடியாது.

ஒருவர் இறந்த பிறகு, அவரது வாரிசான எனக்கு அவரது சொத்து வரப் போகிறது. இதன் அடிப்படையில், எனக்கு அச்சொத்தில் நிறைவுறாச் சொத்துரிமை உண்டு என்று கூறுவ தற்கில்லை. அதை 'எதிர் பார்க்கும் இறங்குரிமை' (Spes successionis) என்றுதான் குறிப்பிட முடியும். இதை எவ்வித உரிமையாகவும் சட்டம் கருதுவதில்லை

'நிறைவுறாச் சொத்துரிமை' என்றால், இன்று இருக்கும் சொத்துரிமை குறைவுள்ளது, ஆனால், ஒரு நிகழ்வு நேர்ந்தபின் நிறைவுறுவது என்பதாகும்.

சொத்துரிமையும் இன்றைய சமுதாயமும்

சொந்தமாக வீடு வேண்டும். சொந்த நிலம் வேண்டும் என்ற வேட்கை மக்களுக்கு இயல்பாகவே எழுகின்றது.

'என் வீடு', 'என் நிலம்', 'உனது சொத்து', 'உனது தோட்டம்' என்று 'எனது' 'உனது' என்ற எண்ணம் தோன்றுவதே மக்கள் ஒரு சமுதாயமாக வாழும் பொழுதுதான். பாலைவனத்திலோ மலைக்குகையிலோ தன்னந்தனியாக மனிதன் இருந்தால் 'என் பொருள்' என்று எதையும் தனதாக்கிச் சொல்லவேண்டிய அவசியம் இருப்பதில்லை. சமுதாயம் இல்லையெனில் சட்டமும் இல்லை; சொத்துரிமையும் இல்லை. 'சட்டம் பிறப்பதற்கு முன் சொத்துரிமை என்று ஏதும் இல்லை, சட்டம் மறைந்து விட்டால் சொத்துரிமையும் மறைந்துவிடும்', என்கிறார் பெந்தம் (Bentham).

பொதுவாக, சமுதாயத்தில் சொத்துரிமை என்பது ஒரு மனிதனின் மதிப்பை உயர்த்துகிறது. அதே நேரத்தில், தனி மனிதனின் சொத்துரிமை சமுதாய நலனுக்கு ஊறு விளைக்காத வகையில் இயங்க வேண்டும் என்ற கொள்கை எல்லா

அரசுகளாலும் இன்று ஏற்கப்பட்ட ஒன்றாகும். தனி மனிதனின் சொத்துரிமைக்கும் சமுதாய நலனுக்கும் முரண்பாடு எழுந்தால் சமுதாய நலனே காக்கப்பட வேண்டும் என்பது உலக நாடுகள் ஒப்புக் கொண்ட கோட்பாடாகி விட்டது.

நம் பாரத நாட்டின் அரசமைப்புச் சட்டத்தில் 'சொத்துரிமை' என்பது அடிப்படை உரிமைகளில் ஒன்றாகக் கூறப்பட்டிருந்தது. ஆனால், அண்மையில் அது நீக்கப்பட்டது. மேலும், பொது நலனுக்கென்று தனியார் சொத்துக்களை அரசு எடுக்கும் முறையும் மிகவும் எளிதாக்கப்பட்டுள்ளது. உணவு உற்பத்திக்கு அடிப்டையான சாகுபடி நிலத்தை ஓர் அளவுக்கு உட்படுத்தான் எவரும் சொந்தமாக வைத்துக் கொள்ள முடியும் என்ற வகையில் சட்டங்கள் உள்ளன. 'உழுபவனுக்கே நிலம்' என்ற கொள்கை நிலத்தின் மீதிருந்த சொத்துரிமையில் மிகுந்த மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

கார்ல் மார்க்ஸ் வகுத்துள்ள கொள்கைப்படி தனியாரின் சொத்துரிமை முறை சமுதாயத்திற்குச் தீங்கு விளைக்கிறது. உற்பத்திச் சாதனங்கள் எல்லாம் அரசுக்குச் சொந்தமானவையாக இருக்க வேண்டும். இவை தனியார்களுக்குச் சொந்தமாக இருந்தால், சமுதாயத்திற்குத் தேவையான பொருள்களை முடக்கிப் போட்டுக் கொண்டு சமுதாய மக்களுக்குக் கேடு விளைக்க ஏதுவாகிறது என்கிறார் அவர்.

இவ்வாறு, பொதுவுடைமைவாதிகள், தனியார் சொத்துரிமை அகற்றப்பட வேண்டும் என்று பாடுபடுகின்றனர்.

ஆனால், கார்ல் மார்க்ஸ் அஞ்சியபடி தனியார் சொத்துரிமை மேலை நாடுகளில் சமுதாயக் கேட்டிற்கு வழி வகுக்கவில்லை என்றுதான் கூற வேண்டும். இதற்கு முக்கியமான காரணம், தனியார் சொத்துரிமைக்கு எத்தனையோ கட்டு வரம்புகளை அந்நாடுகள் விதித்துள்ளன. நிலம், கட்டிடங்கள் இவற்றின் மீதான சொத்துரிமை பல கட்டுதிட்டங்களுக்கு உட்பட்டே அந்நாடுகளில் இயங்குகின்றன. ஏறுமுகமான வருமான வரி விதிப்பு முறையால் அளவுக்கு மீறிய பொருள் குவிப்பு தடுக்கப்படுகிறது. வாணிபத்தில் மிதமிஞ்சிய இலாபம் ஈட்டுவதையும் சட்டம் கட்டுப்படுத்துகிறது. தொழில் உற்பத்திச் சாதனங்கள் பலவும் நாட்டுடைமை ஆக்கப்பட்டு விட்டன. தொழில்நுட்ப நிறுவனங்கள் அனைத்திலும் அதிகாரம் பங்கு தாரர்களிடமோ கம்பெனியிடமோ இல்லாமல் தொழில் நுட்ப மேலாளர்களிடமே (managerial experts) உள்ளது.

இவ்வாறு தனியாரின் சொத்துரிமை சமுதாயக் கட்டு நெறிகளுக்கு அடங்கியே இன்று இயங்குகிறது. இருந்தாலும் மனிதனுக்குள்ள 'எனது', 'என்னுடையது' என்ற பாசப்பற்றினை அறவே நீக்குவது ஆகாத காரியமாகும். பாரத நாட்டின் பண்டைச் சமயங்கள், மனிதனுக்கு 'எனது' என்ற உணர்வு அற்றுப் போக வேண்டும் என்று அழுத்தமாகக் கூறுகின்றன. 'நான்' என்ற உணர்வோடு ஒட்டிய 'எனது' என்ற உணர்வை இல்லாத தாக்குவது இயலாததொன்றாகும். பொதுவுடைமைக்குத் தாயகமாக இலங்கும் சோவியத் நாட்டிலும் கூட தனியாரின் சொத்துரிமை ஓரளவு பேணப்படுகிறது. அறிஞர் பெந்தம் கூறியபடி சட்டம் உள்ளளவும் சொத்துரிமைக் கோட்பாடும் இருக்கும் என்றே எண்ண வேண்டியுள்ளது.

உடைமை
(Possession)

['உடைமை' என்றால் என்ன? — இலக்கணம் கூறுவதில் எழும் சிக்கல்கள் — பருப் பொருள் உடைமை, நுண்பொருள் உடைமை — உடைமை எண்ணம், உடைமைச் செயல் — மெய்ந்நிலை உடைமையும், சட்டம் கொள் உடைமையும் — நேரடி உடைமை, பகர உடைமை — கொள்நிலை உடைமை, மெய்ந்நிலை உடைமை — ஒருங்கியல் உடைமை — உடைமையினை ஈட்டும் வழிகள் — எடுத்தல், ஒப்படைத்தல் — மெய்ந்நிலை ஒப்படைப்பு, கொள்நிலை ஒப்படைப்பு — சொத்துரிமையும், உடைமையும் — எவ்வித உடைமைக்கும் சட்டப் பாதுகாப்பு]

ஒருவனது செல்வத்தை அவனது 'உடைமை' என்கிறோம்.

பொதுவாக, ஒருவனுக்குச் சொந்தமான பொருள் அவனது உடைமையில் இருக்கிறது. தன் உடைமையில் உள்ள பொருளைத்தான் ஒருவனால் துய்க்க முடிகின்றது.

உண்பதற்கு உணவு, உடுக்க உடை, குடியிருக்க வீடு இவை மனித வாழ்விற்கு இன்றியமையாதவை. தன் கைவசமுள்ள உணவைத்தான் ஒருவன் உண்ண முடியும்; தன்னிடமுள்ள உடைகளைத்தான் ஒருவன் அணிந்து கொள்ள இயலும். தன் ஆளுகையில் உள்ள வீட்டில்தான் ஒருவன் குடியிருக்க முடியும். எனவே, உணவு, உடை, வீடு போன்ற பருப்பொருள்கள் நம் உடைமையில் இருந்தால் மட்டுமே நம்மால் அவற்றைத் துய்க்க முடிகின்றது.

இவ்வாறு,வாழ்விற்கு இன்றியமையாத பொருள்கள் நம் உடைமையில் இருந்தால்தான் நம்மால் வாழ முடியும். இத்தகைய உடைமை இல்லையேல் உயிர் வாழ்வு இல்லை.

ஒருவன் வைத்திருக்கும் உணவுப் பொருளை இன்னொருவன் தட்டிப் பறித்துக் கொள்ளலாம் என்றால், ஒருவன் அணிந்துள்ள உடைகளை மற்றொருவன் பிடுங்கிக் கொள்ளலாம் என்றால்,ஒருவன்

குடியிருக்கும் வீட்டைவிட்டு அவனைப் பிறர் துரத்தி விடலாம் என்றால் மனித வாழ்க்கை என்பதே இயலாததாகிவிடும்.

ஆதலால், ஒருவனது உடைமையைப் பாதுகாப்பது சட்டத்தின் தலையாய கடனாகின்றது.

மனிதனுக்கும் மற்ற பொருள்களுக்கும் உள்ள இந்த 'உடைமை' என்ற இணைப்பு உலக வாழ்விற்கு இன்றியமை யாததாக இருப்பதால், சட்டத்திலும் இது முக்கியமான இடம் பெறுகின்றது.

ஒருவனது உடைமையை உன்னிப்பாகக் காத்து நிற்கும் சட்டம், அந்த உண்மையின் தன்மைகள் பற்றி ஆய்கின்றது.

ஆனால், இந்த ஆய்விலே எத்தனையோ சிக்கல்கள் எழுகின்றன.

எனது பேனாவை என் கையிலோ சட்டைப் பையிலோ வைத்திருக்கிறேன். இப்பொழுது அந்தப் பேனா என் உடைமையில் இருக்கிறது எனக் கூறி விடலாம். அதே பேனாவை என் வீட்டில் வைத்துவிட்டு வெளியே போகிறேன். பேனா என் கையில் இல்லை. இதை வைத்துக் கொண்டு பேனா என் உடைமையில் இல்லை என்று கூறலாமா?

என் வீட்டிற்குள் நான் இருக்கும் பொழுது வீடு என் உடைமையில் இருக்கிறது என்று எளிதாகக் கூறி விடுகிறோம். வீட்டைப் பூட்டி விட்டு நான் வெளியூருக்குச் செல்லுகிறேன். இந்நிலையில் வீட்டின் உடைமை என்னிடம் இல்லை என்று கொள்ள முடியுமா?

இரயிலில் வந்து இறங்கிய நான் எனது பெட்டியைக் கூலிக்காரனிடம் கொடுக்கிறேன். கூலியாளின் தலையில் உள்ள பெட்டி, கூலியாளின் உடைமையில் உள்ளதா? என் உடைமையில் உள்ளதா?

இவ்வாறாகப் பல சிக்கல்கள் எழுகின்றன.

எனவே, 'உடைமை' என்றால் என்ன என்று எல்லாச் சூழ்நிலைகளுக்கும் பொருந்தும் வகையில் வரையறுத்துக் கூற இயலுவதில்லை என்கின்றனர் சட்ட இயல் வல்லுநர்கள்.

'உடைமை என்ற சட்டக் கருத்தமைவு (legal concept)

போல் சிக்கல் நிறைந்தது சட்ட நூலில் வேறெதுவும் இல்லை' என்கிறார் சால்மண்ட்.[1]

'உடைமை என்ற சொல் எப்பொழுதும் சிக்கலை எழுப்புகிறது. எந்தச் சூழ்நிலையில் இது பயன்படுகின்றதோ அதற்கேற்ப அதன் பொருளும் அமைகின்றது'[2] என்று கூறுகின்றார் பார்க்கர் என்ற நீதிபதி.

சூழ்நிலைக்கு ஏற்ப 'உடைமை' என்ற சொல்லின் பொருள் மாறுகின்றது என்ற அடிப்படையில்தான் சட்ட இயல் அறிஞர்கள் இச்சொல்லை விளக்க முற்படுகின்றனர்.

ஆயினும் ஆங்கிலச் சட்டநூல் எதுவும் 'உடைமை' என்ற சொல்லிற்குத் தெளிவான, முழுமையான இலக்கணம் ஒன்றைக் கூறவில்லை.

இந்தப் பின்னணியுடன் 'உடைமை' என்பதைச் சட்ட நூலறிஞர்கள் ஆராயும் விதத்தைக் காணலாம்.

'ஒரு பொருளைத் தன் கையால்கைப்படுத்த வேண்டும் என்ற உறுதியோடு அதைக் கைவசப்படுத்தும் திறனும் கொண்ட நிலையே உடைமை என்பது'[3] மார்க்பி என்பார் கூறும் இலக்கணம் இது.

'வேறு எவரும் அப்பொருளை அனுபவிப்பதைத் தடுக்கும் நிலையும் இருத்தல் வேண்டும்', என்கிறார் போலக் (Pollock) என்ற ஆசிரியர்.

தான் மட்டுமே அப்பொருளை அனுபவிக்க வேண்டும் என்ற பாத்தியதையைத் தொடர்ந்து செயலுறுத்த வேண்டும் என்கிறார் சால்மண்ட்.

உடைமைப் பொருள்களில் இருவகை

உடைமையின் கூறுகளை ஆய்வதற்கு ஏதுவாக,

1 In the whole range of legal theory there is no conception more difficult than that of Possession - Salmond.

2 The term possession is always giving rise to trouble. The meaning of possession depends on the context in which it is being used - Lord Parker; Towers & Co Ltd V.Gray — (1961) — Z.W.L.R.553.

3 Possession is the determination to exercise physical control over a thing on one's own behalf coupled with the capacity of doing so - Markby.

உடைமைக்கு இலக்காகும் பொருள்களின் அடிப்படையில், உடைமையினை இருவகைப் படுத்திக் கூறுகின்றனர்.

'பருப்பொருள் உடைமை' (Corporeal Possession) என்றும், 'நுண்பொருள் உடைமை' (Incorporal possession) என்றும் இருவகையாக உடைமையைப் பகுப்பார்கள்.

நம் ஆள்கையிலுள்ள வீடு நிலம் போன்ற பருப் பொருள்களின் மீது நமக்குள்ள உடைமையினை 'பருப் பொருள் உடைமை' என்றும் நமக்குற்ற உரிமைகள் மீதான உடைமையினை 'நுண் பொருள் உடைமை' என்றும் கூறுவார்கள். நாம் கொடுத்த கடனைத் திரும்பப் பெறும் உரிமை, ஒரு பதவியைப் பொறுத்து நமக்குள்ள உரிமை இவை போன்ற உரிமைகள் மீது நமக்குள்ள உடைமை 'நுண் பொருள் உடைமை' எனப்படுகிறது.

பருப்பொருள் உடைமையை நம்மால் பார்க்க முடிகிறது. காரணம், உடைமைக்குற்ற பொருள்கள் காணக் கூடிய பருப் பொருள்கள். நுண்பொருள் உடைமையில் உடைமைக்கு இலக்கான பொருள்கள் காண முடியாத நுண்பொருள்கள்; அதாவது உரிமைகள்.

பருப் பொருள் உடைமை
(Corporeal Possession)

பருப் பொருள் உடைமையில் உள்ள இரு கூறுகள்

'ஒரு நபருக்கும் ஒரு பருப்பொருளுக்கும் இடையே தொடர்ந்திருக்கும் இணைப்பையே பருப்பொருள் உடைமை' என்கிறார் சால்மண்ட்[1]

இந்தத் தொடர்பு அல்லது இணைப்பு புறநிகழ்வானது மட்டும் அன்று; அக நிகழ்வானதும் ஆகும் என்பது சால்மண்டின் கருத்து.

அதுபற்றிக் காண்போம்.

நகைக் கடையிலுள்ள ஒரு குறிப்பிட்ட நகையை விலைக்கு வாங்க நான் விரும்புகிறேன். அதற்கான விலையையும் கடைக்காரருக்கு அனுப்பி விட்டேன். கடைக்காரர் அந்த

---

1 Corporeal possession is clearly some form of continuing relation between a person and a material object - Salmond

நகையை எடுத்து எனக்கு அனுப்புவதற்கென்று தனியாக வைத்திருக்கிறார். ஆனால், என் கைக்கு நகை இன்னும் வந்து சேரவில்லை.

இப்பொழுது அந்த நகையின் உடைமை யாரிடம் இருக்கிறது?

அதன் உடைமை கடைக்காரரிடமே இருக்கிறது; என்னிடம் இல்லை என்பது சட்டம்.

அந்த நகை என்னுடையது என்ற எண்ணம் எனக்கிருக்கிறது. ஆனால், என்னுடையது என்ற எண்ணத்தின்படி அதன் மீதான ஆள்கை (Control) என் கைக்கு வரவில்லை. எனது உடைமை எண்ணம், உடைமைச் செயலாக இன்னும் ஆகவில்லை. எனவே, நகையின் 'உடைமை' என்னிடம் இல்லை என்ற நிலை ஏற்படுகிறது.

என் வீட்டிற்கு விருந்தினராக வந்திருக்கும் நண்பர், அவரது பெட்டியை என் வீட்டில் ஓர் அறையில் வைத்துவிட்டு வெளியே சென்றிருக்கிறார். அவரது பெட்டி என் வீட்டில், என் ஆளுகையில் இருக்கிறது.

இந்நிலையில் அந்தப்பெட்டி என் உடைமையில் இருக்கிறது என்று கூறலாமா?

பெட்டி என் வசத்திலிருப்பது உண்மைதான். ஆனாலும், அப்பெட்டி என்னுடையது என்ற எண்ணம் எனக்கு இல்லை. அது நண்பருக்குச் சொந்தமானதால், அது என்னுடையது என்ற எண்ணம் எனக்கு எழவில்லை. எனவே, அந்தப் பெட்டி என் வசத்தில் இருந்தாலும் அதன் மீதான உடைமை என்னிடம் உள்ளது என்று கூறுவதற்கில்லை.

முதல் எடுத்துக் காட்டில், நகை என்னுடையது என்ற எண்ணம் மட்டும் இருந்தது; ஆனால், அதன் ஆள்கை என் கைக்கு வரவில்லை. உடைமை எண்ணம் இருந்தது; ஆனால், உடைமைச்செயல் இல்லை. எனவே, நகையின் உடைமை என்னிடம் இல்லை என்றாகிறது.

இரண்டாவது எடுத்துக்காட்டில், பெட்டி என் ஆள்கையில் தான் உள்ளது; ஆனால், அது என்னுடையது என்ற எண்ணம் எனக்கு இல்லை. உடைமைச் செயல் இருந்தது; ஆனால், உடைமை எண்ணம் இல்லை. எனவே, பெட்டியின் உடைமை என்னிடம் இல்லை என்கிறோம்.

'பருப்பொருள் உடைமை' என்பதில் இரண்டு கூறுகள் உள்ளன. முதலாவது, எண்ணம். அதாவது, ஒரு பொருள் நம் உடைமையில் உள்ளது என்ற எண்ணம். இரண்டாவது செயல், அந்தப் பொருள் நம் ஆள்கையில், உடைமையில் இருக்கும் செயல்.

முன்னது, 'உடைமை எண்ணம்' (Animus possidendi) அடுத்தது, 'உடைமைச் செயல்' (Corpus possessionis)

உடைமை எண்ணமும் உடைமைச் செயலும் ஒன்றிய நிலையில்தான் உண்மையான உடைமை ஏற்படுகின்றது.

உடைமை எண்ணம் மட்டும் இருந்தால் பயனில்லை; உடைமைச் செயல் மட்டும் இருந்தாலும் பயனில்லை. புற நிகழ்வான உடைமைச் செயல், அக நிகழ்வான உடைமை எண்ணம் இரண்டும் இணையும் நிலையில்தான் சட்டப்படியான உடைமை உதிக்கின்றது.

இவ்வாறு, சால்மண்ட் (Salmond) என்ற சட்ட இயல் அறிஞர் கூறுகின்றார்.

'உடைமை எண்ணம்' (Animus Possidendi)

ஒரு பருப்பொருள் மீது நமக்கு 'உடைமை எண்ணம்' இருக்கிறது என்றால்,என்ன விளக்கம்?

அந்தப் பருப்பொருள் நமது தனிப்பட்ட ஆள்கையில் (exclusive-control) இருக்கிறது; வேறு எவருக்கும் அதன் மீது ஆள்கையுரிமை கொண்டாடும் பாத்தியதை இல்லை; எவருடைய குறுக்கீடுமின்றி அப்பொருளை நாம் தனித்துத் துய்க்கலாம். இத்தகு எண்ணங்கள்தாம் அப்பொருள் மீதான உடைமை எண்ணத்திற்கு அடிப்படையாகின்றன.

ஒரு பொருளின் சொந்தக்காரருக்குத்தான் 'உடைமை எண்ணம்' இருக்க வேண்டும் என்பதில்லை. ஒரு வீட்டின் சொந்தக்காரர் ஒருவராகவும், குடியிருப்பவர் இன்னொருவராகவும் இருக்கலாம்; வாடகை ஒப்பந்தம் முடியும் வரை குடியிருப்பவர்தாம் அந்த வீட்டின் உடைமையாளராக இருக்கிறார். அவருக்கே வீட்டைப் பொறுத்த உடைமை எண்ணம் உள்ளது. முதலாளியின் பொருள் வேலையாளின் உடைமையில் இருக்கலாம், இந்நிலையில் அந்தப் பொருளைப் பொறுத்த உடைமை எண்ணம் வேலையாளுக்கே உள்ளது.

அது போல், ஒரு நகையை ஈடாகப் பெற்றவர் அல்லது இரவலாகப் பெற்றவர் ஆகியோருக்கும் அந்த நகையைப் பொறுத்த 'உடைமை எண்ணம்' உண்டு என்பதைச் சட்டம் ஏற்கிறது. எனவே, அந்த நகையின் உடைமை அதை ஈடு பெற்றவரிடம் அல்லது இரவலாகப் பெற்றவரிடம் உள்ளதாகவே சட்டம் கொள்ளுகிறது.

ஒரு பொருளைத் திருடி வைத்திருப்பவன் கூட, அந்தப் பொருள் தன் உடைமையில் உள்ளது என்று எண்ணுகிறான். அவனது உடைமை சட்டத்திற்கு முரணானதாக இருக்கலாம். இருப்பினும் அவனுக்குள்ள உடைமை எண்ணத்தை மறுப்பதற் கில்லை.

'உடைமை எண்ணம்' என்பது ஒரு குறிப்பிட்ட பொருளைப் பற்றி இருக்க வேண்டும் என்பதில்லை.

என் அலமாரியிலுள்ள எல்லாப் புத்தகங்களும் என்னுடையன; என் உடைமையில் உள்ளன; என்ற எண்ணம் இருந்தாலே போதுமானது. அலமாரியிலுள்ள ஒவ்வொரு புத்தகத்தைக் குறித்தும் அந்த எண்ணம் இருக்க வேண்டியதில்லை. அவ்வாறு இருத்தலும் இயலாது.

மீனவன் தனது வலையில் சிக்கியுள்ள மீன்கள் அனைத்தும் அவன் உடைமையில் உள்ளனவாக எண்ணுகிறான். வலையில் சிக்கியுள்ள மீன்கள் எத்தனை என்றோ, எந்தெந்த வகையின வென்றோ அவனுக்குத் தெரிவதில்லை; தெரியவும் வேண்டிய தில்லை.

ஒருவருக்குச் சொந்தமான ஆட்டு மந்தையிலுள்ள ஆடுகளின் எண்ணிக்கை அவருக்குத் தெரியாமல் இருக்கலாம். அவருக்குத் தெரியாமலே ஆடுகளின் எண்ணிக்கை பெருகி யிருக்கலாம். இருப்பினும், மந்தையைப் பொறுத்த பொதுவான உடைமை எண்ணம் இருந்தாலே போதுமானது.

இவ்வாறு, உடைமை எண்ணம் என்பது பொருளுக்கு உரியவருக்கு மட்டுமே இருக்க வேண்டியதில்லை. அவரது வேலையாளுக்கும் இருக்கலாம். அதை இரவல் பெற்றவருக்கும் இருக்கலாம், அதைத் திருடி வைத்திருப்பவனுக்கும் இருக்கலாம். அது போல், உடைமை எண்ணம் குறிப்பிட்ட பொருளைக் குறித்துத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை.

'உடைமைச் செயல்' (Corpus Possessionis)

உடைமைச் செயல் எவ்வாறு இருக்க வேண்டும்? உடைமை

எண்ணம் செயலுருவில் எப்படி அமைதல் வேண்டும்?

உடைமைச் செயலைப் பற்றிச் சட்டம் ஆராயும் பொழுது, இரு கோணங்களில் இருந்து பார்க்கின்றது. (1) உடைமை யாளருக்கும் பிறருக்கும் உள்ள உறவு நிலை. (2) உடைமை யாளருக்கும் உடைமைப் பொருளுக்கும் உள்ள இணைப்பு.

உடைமையாளருக்கும் பிறருக்கும் உள்ள உறவு நிலை

தம் உடைமையிலுள்ள பொருள்கள் அனைத்தையும் ஒருவர் நேரடியாகத் தம் வசமே வைத்திருத்தல் இயலாது. எனக்கு மூன்று வீடுகள் இருந்தாலும், நான் ஒரு வீட்டில் தான் குடியிருக்கிறேன். மற்ற இரண்டு வீடுகளையும் நான் வாடகைக்கு விடுகிறேன். வாடகைக்கு விடப்பட்ட வீடுகள் எனது நேரடி வசத்தில் இல்லை என்பதால் அவற்றின் மீது எனக்கு உடைமை இல்லை என்று ஆகிவிடுமா? ஆகாது.

எனது உடைமையைப் பிறர் மதித்து நடப்பார்கள் என்ற உறுதிப்பாடு எனக்கு வேண்டும். பிறரால் என் உடைமைக்கு ஊறு விளையாது என்ற நம்பிக்கை உண்டாகும் வகையில் எனக்கும் பிறருக்கும் உள்ள உறவு அமைதல் வேண்டும்.

எனது பணத்தைப் பாதுகாப்பாகப் பெட்டியில் பூட்டி வைத்துக் கொள்ளுகிறேன். விலையுயர்ந்த நகைகளை மறைவாகப் பாதுகாப்பான இடத்தில் வைத்துக் கொள்ளுகிறேன். இந் நிலையில், பிறர் எவரும் பணத்தையோ நகைகளையோ எடுத்து எனது உடைமைக்குக் குந்தகம் விளைவிப்பார்கள் என்ற கவலைக்கே இடமில்லாமல் போகிறது. உடைமை பற்றிய பாதுகாப்புணர்ச்சி வலுவடைகிறது.

உடைமைப் பொருள்களின் அருகில் இருப்பதால் அல்லது அந்தப் பொருளோடு நாம் ஒன்றியிருப்பதால் பாதுகாப்புணர்வு அதிகமாகிறது.

பாதுகாப்புணர்வுக்குச்சமுதாய வழக்கமும் ஆதாரமாகும். சென்ற ஆண்டு வேளாண்மை செய்த நிலத்தில், இந்த ஆண்டும் நானே வேளாண்மை செய்வதைப் பிறர் தடுக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையால், உடைமை பற்றிய பாதுகாப்புணர்வு உறுதிப் படுகின்றது.

நியாயமான உரிமைகளுக்குமக்கள் அளிக்கும் மதிப்பும் உடைமைச் செயலுக்கு உறுதி பயப்பதாகின்றது.

உடைமையாளருக்கும் உடைமைப் பொருளுக்கும் உள்ள இணைப்பு

இந்த இணைப்பு உடைமைப் பொருளின் தன்மையைப் பொறுத்தது.

அணிகலன்களையோ உடைகளையோ உடலில் அணிந்து கொள்ளுகிறோம்; வீட்டிலே குடியிருக்கிறோம்; பல மைல்களுக்கு அப்பாலுள்ள நம் வீட்டை மற்றொருவருக்கு வாடகைக்கு விட்டு நம் உடைமையினைப் பேணுகிறோம்.

இவ்வாறு அந்தந்தப் பொருளின் தன்மைக்கேற்ற முறையில் உடைமையாளருக்கும் உடைமைப் பொருளுக்கும் உள்ள இணைப்பு அமைகின்றது.

மெய்ந்நிலை உடைமையும் (Possession in fact) சட்டம் கொள் உடைமையும் (Possession in law)

சாதாரணமாக ஒரு பொருள் எவர் கைவசம் உள்ளதோ அவரே அப்பொருளின் உடைமையாளர் என்று கருதுகிறோம். இத்தகைய நேரடி உடைமையை 'மெய்ந்நிலை உடைமை' (Possession in fact) என்பார் சால்மண்ட்.

ஆனால், பல சூழ்நிலைகளில் பொருளைக் கைவசம் வைத்திருப்பவரைச் சட்டம் உடைமையாளராகக் கொள்வ தில்லை. மாறாக, எவர் கைவசம் அப்பொருள் இல்லையோ அவரையே உடைமையாளர் எனச் சட்டம் கொள்கிறது. இவ்வாறு சட்டம் கொள்ளும் உடைமையினைச்'சட்டம் கொள் உடைமை' (Possession in law) என்று சால்மண்ட் கூறுகின்றார்.

இதைச் சற்று விரிவாகக் காண்போம்.

சூழ்நிலைகளுக்கேற்பவே உடைமை உறுதிசெய்யப்படுகிறது

சூழ்நிலைகளுக்கேற்பவே ஒரு பொருளுக்கு உடைமை யாளர் எவர் என்பதைச் சட்டம் தீர்மானிக்கின்றது.

ஒரு பொருள் ஒருவரின் கைவசம் இருக்கலாம்; ஆயினும், அவரை உடைமையாளராகச் சட்டம் கொள்வதில்லை.

கூலியாளின் கையில் நம் பெட்டியைத் தருகின்றோம். பெட்டியைச் சுமந்து வரும் கூலியாளிடம் பெட்டியின் உடைமை இருந்தாலும், அந்த உடைமை நம்மிடம் இருப்பதாகவே சட்டம்

கொள்ளுகிறது. எனவே, கூலியாள் நமது பெட்டியைத் தூக்கிக்கொண்டு ஓடிவிட்டாரெனில், அவர் நமது சம்மதமின்றி நமது பெட்டியை நம் உடைமையிலிருந்து அகற்றிய திருட்டுக் குற்றத்திற்கு ஆளாகின்றார்.

எனவே, ஒருவர்வசம் ஒருபொருள் இருப்பதால் மட்டுமே அவர் அப்பொருளின் உடைமையாளர் ஆகி விடுவதில்லை.

ஒரு பொருளின்மீது ஒருவருக்குள்ள நேரடி உடைமையை மட்டும் வைத்து அவரை அந்தப் பொருளின் உடைமையாளராகச் சட்டம் ஏற்பதில்லை.

ஒருவர் மற்றொருவருக்கு ஓர் அலமாரியை விலைக்கு விற்கின்றார். விலைக்கு வாங்கியவர் கைக்கு அலமாரி போய் விட்டது. அந்த அலமாரியிலுள்ள மறைவான அறை ஒன்றில் தங்க நகை ஒன்று இருக்கிறது. இவ்வாறு, தங்க நகை அலமாரிக்குள் இருப்பது, அலமாரியை விற்றவர், வாங்கியவர் இருவருக்கும் தெரியாது. இந்நிலையில், தங்க நகை யாருடைய உடைமையில் உள்ளது?

நாம் சாதாரணமாக எண்ணுவோம் அலமாரியை வாங்கியவர்தாம் இந்த நகையின் உடைமையாளர் என்று.

சட்டம் அப்படிக் கொள்வதில்லை.

அலமாரியும் அதனுள் இருக்கும் பொருள்களும் அதை வாங்கியவருக்குச் சேர வேண்டும் என்ற எண்ணத்தோடு அதை விற்றவர் கொடுத்திருந்தால், அதை வாங்கியவரிடமே நகையின் உடைமை உள்ளது என்று நாம் கூறலாம். ஆனால், இத்தகைய எண்ணம் ஏதும் இன்றி, அலமாரியை மட்டுமே விற்பதாக எண்ணி அது விற்கப்பட்டிருந்தால், வாங்கியவர் நகையின் உடைமையாளர் ஆவதில்லை. எனவே, அலமாரியை வாங்கியவர் பின்னால் நகையைக் கண்டுபிடித்து அதைத் தமக்கு வைத்துக் கொண்டாரெனில் அது குற்றமேயாகும்.

ஆதலால், நேரடி உடைமை கொண்டவர் எல்லாரும் சட்டப்படி உடைமையாளர் ஆகிவிடுவதில்லை.

ஒரு நிலம் யாருடைய உடைமையில் உள்ளதோ, அவர் உடைமையிலேயே அந்நிலத்தில் புதைந்துள்ள அல்லது இணைந்துள்ள பொருள்களும் உள்ளன என்று சட்டம் கொள்ளுகிறது. என் உடைமையிலுள்ள நிலத்தில் தங்க நகை ஒன்று புதைந்து கிடக்கிறது. அது பற்றி எனக்குத் தெரியாது. இருப்பினும் அந்த நகை எனது உடைமையிலேயே உள்ளது.

உடைமை எண்ணம் இல்லாத நிலையிலும் உடைமை, நிலத்துக்கு உரியவரிடம் இருப்பதாகச் சட்டம் கொள்கிறது.

ஒருவர் ஒரு பொருளைக் கைதவற விட்டுத் தொலைத்து விடுகிறார். அதை எங்குத்தவற விட்டார் என்பதும் அவருக்குத் தெரியாது. எனினும், அந்தப் பொருளின் உடைமை அதைத் தவற விட்டவரிடமே இருப்பதாகக் கொள்ளுகிறது சட்டம். இங்கு உடைமைச் செயல் இல்லாவிட்டாலும் கூட, உடைமை, பொருளுக்குரியவரிடம் இருப்பதாகச் சட்டம் கொள்கிறது.

ஒரு பொருளை எனக்கு வேண்டாம் என்று வீசிஎறிந்து விட்டேன் என்றால் மட்டுமே அந்தப் பொருளின் உடைமை என்னிடமிருந்து அகலுகின்றது.

பொருளைத் தன்வசம் வைத்திருப்பவர் ஒரு நிலையில் உடைமையாளர் ஆகின்றார்; இன்னொரு நிலையில் உடைமை யாளர் ஆவதில்லை

எனது பொருள் ஒன்றை எனது வேலையாளிடம் கொடுத்து வைத்திருக்கிறேன். அந்த வேலையாளிடமிருந்து அப்பொருளை ஒருவன் திருடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். இப்பொழுது திருடன் மீதான குற்றச்சாட்டு வேலையாளின் உடைமையில் இருந்த பொருளைத் திருடி விட்டான் என்பதாகும். வேலையாள் அந்தப் பொருளை என்னிடம் திருப்பிக் கொடுக்காமல் தீய எண்ணத்துடன் கொண்டு போய் விட்டான் என்றால், அது என் உடைமையில் இருந்த பொருளை வேலையாள் அகற்றிய குற்றமாகும்.

இவ்வாறு, வேலையாளையும் திருடனையும் பொறுத்த வரை, பொருளின் உடைமை வேலையாளிடம் உள்ளதாகச் சட்டம் கருதுகிறது. வேலையாளையும் என்னையும் பொறுத்த வரை, அப்பொருளின் உடைமை என்னிடம் உள்ளதாகச் சட்டம் கொள்கிறது. அந்தப் பொருள் வேலையாளின் கைவசம் இருந்தாலும், திருடனைப் பொறுத்து அது வேலையாளின் உடைமையில் இருப்பதாகவும், என்னைப் பொறுத்து அது என் உடைமையில் இருப்பதாகவும் சட்டம் கொள்ளுகிறது.

எனவே, ஒரு பொருள் யாருடைய உடைமையில் உள்ளது என்பதைத் தீர்மானிப்பதற்கு முன் அந்த உடைமை எவரைப் பொறுத்துக் கோரப்படுகிறது, எவருக்கு எதிராகக் கோரப்படுகிறது என்பதைச் சட்டம் கவனிக்கின்றது. இதற்கேற்பவே, உடைமையாளர் எவர் என்பது தீர்மானிக்கப்படுகிறது.

சட்டத்திற்கு அப்பால் நின்று பார்ப்பதென்றால், ஒரு பொருள் எவர் கையாள்கையில் இருக்கின்றதோ அவரே அந்தப் பொருளின் உடைமையாளர் என்று எளிதாகக் கூறிவிடலாம். ஆனால், சட்டக் கண்கொண்டு காணும் பொழுது உடைமைக்கான உரிமை, பொருளின் தன்மை, இதர சூழ்நிலைகள் இவற்றை யெல்லாம் கருத்திற் கொண்டே ஒரு பொருளின் உடைமையாளர் எவர் என்பது உறுதி செய்யப்படுகிறது.

இவ்வாறு, சட்டம்கொள் உடைமை (Possession in law) தீர்மானிக்கப்படுவதால்தான், உடைமை என்பது இதுதான் என்று அறுதியிட்டுக் கூறுதல் இயலாததாகி விடுகிறது. எனினும், உடைமைக் கோட்பாட்டினைச் சட்டம் எவ்வாறு சூழ்நிலைக் கேற்பத் தீர்மானிக்கிறது என்பதைச் சில தீர்ப்புகளிலிருந்து காணலாம்.

குற்ற இயல் வழக்குகளில் 'உடைமை' பற்றிய சிக்கல் அடிக்கடி எழுவதுண்டு.

திருட்டுக் குற்றம் என்றால் அது ஒருவருடைய உடைமைக்கு எதிரான குற்றமாகும். ஒருவர் உடைமையில் உள்ள பொருளை அவர் சம்மதம் இன்றித் தீயநோக்குடன் அகற்றுவதே திருட்டுக் குற்றம். ஆதலால், அக் குற்றம் பற்றிய வழக்குகளில், உடைமை எவரிடம் இருந்தது என்ற வினாவுக்கு விடை கூறும் வகையில் பல தீர்ப்புகள் இங்கிலாந்தில் எழுந்தன. அவற்றுள் சிலவற்றைக் காணலாம்.

(Rex vs .Ashwell)

ஒருவன் தன் நண்பனிடம் பத்து ரூபாய் கடன் கேட்டான். நண்பன் இருட்டிலே தனது பெட்டியைத் திறந்து ஒரு 'கரன்சி' நோட்டைக் கொடுத்தான். அதை வாங்கிச் சென்றவன் வெளிச்சத்தில் பார்க்கும்போது அது நூறு ரூபாய் நோட்டாக இருப்பதைக் கண்டான். ஆனால், அதைத் தனதாக்கிச் செல வழித்து விட்டான்.

இதுபோன்று எழுந்த வழக்கில், தான் கொடுத்தது நூறு ரூபாய் நோட்டு என்று நண்பனுக்குத் தெரியாத நிலையில், கடன் பெற்றவன் அதைத் தனதாக்கிக் கொண்டது திருட்டுக் குற்றமேயாகும என்று தீர்ப்பளித்தனர்.

(Rex vs .Moore)

ஒரு கடைக்காரர் தமது கடையில் தரைமீது, கடைக்கு

வந்தவர் எவரோ தவறவிட்டுச் சென்ற பணப் பையைக் கண்டார். அதை எடுத்துத் தமதாக்கிக் கொண்டார்.

தம் கடையில் கிடந்ததால் அந்தப் பணப் பையின் உடைமை கடைக்காரருக்கு வந்துவிட்டது என்ற வாதத்தை நீதிமன்றம் ஏற்கவில்லை. பணப் பையைத் தவற விட்டவர் உடைமையில் அது தொடர்ந்து இருந்ததாகவே கொள்ள வேண்டும் என்று கூறி, கடைக்காரரைத் தண்டித்தது நீதிமன்றம்.

(Cartwright vs .Green)

ஒரு பெட்டியைப் பழுதுபார்ப்பதற்காக அது தச்சன் ஒருவனிடம் கொடுக்கப்பட்டது. பெட்டியை எடுத்துச் சென்ற தச்சன் அந்தப் பெட்டியின் இழுப்பறையில் (drawer) பணம் இருப்பதைக் கண்டான்; அதைத் தனதாக்கிக் கொண்டான்.

எழுந்த வழக்கில், பெட்டியின் உடைமை கொடுக்கப் பட்டாலும், அதிலிருந்த பணத்தின் உடைமை தச்சனிடம் மாறவில்லை. பணத்தின் உடைமை பெட்டிக்கு உரியவரிடமே தொடர்ந்து இருந்தது எனத்தான் கொள்ள வேண்டும். அவர் இசைவின்றித் தச்சன் பணத்தை எடுத்தது குற்றந்தான் என்பது தீர்ப்பு.

உரிமை இயல் வழக்குகள்

(Bridges vs .Hawkesworth)

ஒரு கடையின் தரைமீது பணப்பை ஒன்றைக் கண் டெடுத்தார், கடைக்கு வந்த ஒருவர். ஆனாலும், அந்தப் பணப்பையின் உடைமை தம்மிடம் இருந்ததாகவே கொள்ள வேண்டும் என்று கடைக்காரர் வாதிட்டார். கடைக்கு வந்தவர் அதைக் கண்டெடுப்பதற்கு முன்னர், பணப்பை கிடந்தது கடைக்காரருக்குத் தெரியாதாகையால், அவரிடம் அதன் உடைமை இருந்ததாகக் கொள்வதற்கில்லை என்று தீர்ப் பளிக்கப்பட்டது.

(South Staffordshire Water Company vs .Sharman)

நம் வீட்டுத் தண்ணீர்த் தொட்டியை ஒருவர் சுத்தப் படுத்துகிறார். அத் தொட்டியின் அடியில் ஒரு தங்கச் சங்கிலி புதைந்து கிடந்தது. அதைக் கண்டெடுக்கிறார் சுத்தப்படுத்தும் வேலையாள். இந்தச் சங்கிலி யாருக்கு உரியது?

நம் வீட்டில் கிடந்த பொருளின் உடைமை நம்முடையதுதான்; எனவே, வேலையாளுக்கு அச்சங்கிலியின் உடைமை சேர்வதில்லை என்று தீர்மானிக்கப் பட்டது.

(Armory vs. Delamirie)

ஒரு வீட்டின் புகைக் கூண்டைச் சுத்தம் செய்கையில் நகையொன்றைக் கண்டெடுத்தான் வேலையாள். அதை ஒரு நகைக் கடைக்காரனிடம் செப்பனிடக் கொடுத்தான். நகைக் கடைக் காரன் நகையைத் திரும்பித் தர மறுத்தான்.

நகையைத் திரும்பப் பெறும் உரிமை வேலையாளுக்கு உண்டு என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

இவ்வகைத் தீர்ப்புகளில் இருந்து தெளிவாகும் உடைமை பற்றிய கோட்பாடுகள்

ஓர் அசை பொருளின் கட்டாள்கையைப் (Control) பெற்றதால் மட்டுமே ஒருவர் அதன் உடைமையைப் பெற்று விடுவதில்லை. அந்த அசை பொருளில் அடங்கியுள்ளது எது என்பதையும் அதன் தன்மையையும் தெரிந்த பின்னர் அப் பொருளின் கட்டாள்கையைப் பெற்றால்தான், உடைமை மாறுகிறது. (R V Ashwell).

ஒரு நிலத்தில் என்ன இருக்கிறது என்பதைத் தெரியாத நிலையிலும், அந்த நிலத்திற்கு உரிய உடைமையாளர் அந் நிலத்தில் கிடக்கும் அசை பொருளின் உடைமைக்கு உரியவராகின்றார். (R V Rowe)

பிறர் தவறி விட்டுச் சென்ற பொருள் ஒன்று ஒரு கடையின் தரையில் கிடந்தாலும், அவ்வாறு அது கிடக்கிறது என்பது கடைக்காரருக்குத் தெரியவந்த பிறகுதான் அப்பொருளின் உடைமை அவரைச் சேருகிறது. (R V Moore)

இவ்வாறு, எத்தனையோ வழக்குகளில் 'சட்டம்கொள் உடைமை' (Possession in law) என்பது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

'மெய்ந்நிலை உடைமை' என்றும், 'சட்டம் கொள் உடைமை' என்றும் உடைமையைப் பாகுபடுத்திச் சால்மண்ட்

கூறுவதைப் பிற்காலப் பேராசிரியர்களில் சிலர் ஏற்பதில்லை. பேராசிரியர் ஜி.எல்.வில்லியம்ஸ் (Prof G L Williams) என்பார், 'மெய்ந்நிலை உடைமை'யைச் சட்டம்தான் தீர்மானிக்கிறது; எனவே, 'சட்டம் கொள் உடைமை' என்று எதுவும் இல்லை என்கிறார்.

இருவகை உடைமைகள்

நேரடி உடைமை (Immediate or direct possession)
பகர உடைமை (Mediate possession)

உடைமையை இரு வகையாகக் காண்கிறார் சால்மண்ட்.

நான் என் வேலையாளை அனுப்பி ஒரு பொருளை விலைக்கு வாங்கிவரச் சொல்லுகிறேன். வேலையாளும் அந்தப் பொருளை வாங்கிக்கொண்டு என் வீட்டிற்கு வருகின்றார்.

இப்பொழுது அந்தப் பொருள் வேலையாளின் கையில் தான் இருக்கிறது. அதாவது, வேலையாள் என் சார்பில் அதை வைத்திருக்கிறார்.

இந்நிலையில், வேலையாளின் உடைமையை அவர் நேரடியாகக் கொண்டுள்ள உடைமையை, 'நேரடி உடைமை' (Immediate possession) என்கிறோம். வேலையாளின் உடைமை உண்மையில் என் உடைமைதான். என் சார்பில்தான் வேலையாள் அப்பொருளைத் தம் வசம் வைத்துக் கொண்டிருக்கிறார். என் உடைமைச் செயல், என் வேலையாள மூலமாக நிகழ்கின்றது. எனவே, என் உடைமையைப் 'பகர உடைமை' (mediate possession) என்கிறோம்.

வேலையாள் அந்தப் பொருளை என்னிடம் கொடுத்து விட்ட பின், அப்பொருளின் நேரடி உடைமை என்னிடம் வந்துவிடுகிறது. எனது பகர உடைமை நேரடி உடைமையாக மாறிவிடுகின்றது.

ஒருவர் தமக்குச் சொந்தமான பருப்பொருள்கள் எல்லாவற்றின் உடைமையையும் நேரடியாகத் தம்மிடமே வைத்திருப்பது இயலாது.

எனக்குச் சொந்தமான பல வீடுகளில் ஒன்றில் மட்டுமே நான் குடியிருக்கிறேன். மற்ற வீடுகளை வாடகைக்கு விடுகிறேன். குடியிருப்பவர் வசத்தில் இருப்பதால் அந்த வீடுகள்மீது

எனக்குள்ள உடைமை மறைந்து விடுவதில்லை. குடியிருப்பவர் களின் வழியாக எனது உடைமை இயங்குகிறது. எனவே, எனது உடைமை 'பகர உடைமை' ஆகின்றது. குடியிருப்பவரின் உடைமை 'நேரடி உடைமை'யாக உள்ளது.

எனது சாமான் ஒன்றை நண்பர் ஒருவர் இரவலாகப் பெற்றுச் செல்லுகிறார். உடனே, எனக்கு அந்தப்' பொருளின் மீதிருந்த உடைமை மறைந்து விடுவதில்லை. நண்பரது நேரடி உடைமை எனது பகர உடைமையாக உள்ளது.

இது போன்றே, நான் எனது நகை ஒன்றை அடகு வைத்தால், அடகு பெற்றவரிடம் எனது நகையின் 'நேரடி உடைமை' இருக்கிறது; என்னிடம் அதன் 'பகர உடைமை' இருக்கிறது.

இவ்வாறு, நேரடியான உடைமை இல்லாத நிலையிலும் கூட, பொருளுக்கு உரியவரிடம் உடைமை இருப்பதாகச் சட்டம் கொள்ளுகிறது. சட்டத்தால், இவ்வாறு, கொள்ளப்படும் உடைமையை 'கொள்நிலை உடைமை' (Constructive possession) என்று கூறுவார்கள். மெய்யாகவே உடைமை நேரடியாக எவரிடம் உள்ளதோ அதை 'மெய்ந்நிலை உடைமை' (actual possession) என்பார்கள்.

ஒருவருக்கு ஒரு பொருளின் மீதுள்ள உடைமையினைப் பாதுகாப்பது சட்டத்தின் கடன் ஆகின்றது. அந்த உடைமைக் கான உரிமை எவரிடம் உள்ளதோ அவரது உடைமையே சட்டப் பாதுகாப்பில் முன்னிடம் பெறுகின்றது. ஒரு பொருளின் உடைமைக்கான உரிமையுள்ளவர் (right to possess) அப் பொருளைத் தன் கைவசமே வைத்திருத்தல் சில சூழ்நிலைகளில் இயலுவதில்லை. இச்சூழ்நிலைகளிலும், அவரிடமே உடைமை இருப்பதாகச் சட்டம் கொள்கிறது. அதே நேரத்தில் அப்பொருள் எவர் கைவசம் உள்ளதோ அவரது உடைமையையும் சட்டம் புறக்கணித்து விடுவதில்லை. எனவே, ஒரே நேரத்தில் ஒரே பொருள்மீது இரு நபர்களுக்கு உடைமை உள்ளதாகச் சட்டம் காண்கிறது.

நேரடியாக உடைமை கொண்டவரது உடைமையினை 'மெய்ந்நிலை உடைமை' (actual Possession) என்றும், அப்பொருளின் உரிமையாளருக்கு உள்ள உடைமையினை 'கொள்நிலை உடைமை' (constructive possession) என்றும் சட்டம் பகுத்துக் காண்கிறது.

இவ்வாறு, ஒரே பொருளின்மீது ஒரே நேரத்தில் இரு நபர்களுக்கு உடைமை இருப்பதாகச் சட்டம் கொள்ளும் நிலையில், அந்த இருவருக்கும் உள்ள உடைமையினை ஒருங்கு இயங்கும் உடைமை, அதாவது 'ஒருங்கியல் உடைமை' (Concurrent possession) என்பார்கள்.

இரண்டு அல்லது மேற்பட்ட நபர்கள் ஒரு பொருளைப் பொதுவில் அனுபவித்துக் கொண்டிருக்கலாம். அப்பொழுது, அந்தப் பொருள் மீதான உடைமை அவர்கள் அனைவருக்கும் ஒரே நேரத்தில் உள்ளது. இந்தக் கூட்டு உடைமையும் ஒரு வகையான ஒருங்கியல் உடைமை என்று கூறப்படுகிறது.

இவ்வாறு, உடைமை என்ற கருத்தைச் சட்டக்கண் கொண்டு பகுத்துக் காணுகின்றார் சட்ட இயலறிஞர் சால்மண்ட்.

உடைமையினை ஈட்டும் வழிகள்

எடுத்தல் (Taking) ஒப்படைத்தல் (Delivery) என்ற இரு முறைகளிலும் நாம் ஒரு பொருளின் உடைமையினை ஈட்டு கின்றோம்.

எவருடைய இசைவும் இன்றி ஒரு பொருளை நம் உடைமையில் கொண்டு வருதலை 'எடுத்தல்' (Taking) என்கிறோம்.

நாம் அவ்வாறு எடுப்பதற்கு முன் அந்தப் பொருள் இன்னொருவரின் உடைமையில் இருந்திருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம். நாம் எடுத்த செயல் நியாயமானதாகவோ நியாயமற்றதாகவோ இருக்கலாம். எந்த வகையிலும் எவருடைய இசைவும் இன்றி ஒரு பொருளை நமது உடைமையில் கொண்டு வருதலை 'எடுத்தல்' என்கின்றனர்.

முந்தைய உடைமையாளரின் இசைவுடன் அவரிடமிருந்து ஒரு பொருளின் உடைமையைப் பெறுதல் 'ஒப்படைத்தல்' (Delivery) ஆகின்றது. ஒருவர் தமது உடைமையில் உள்ள பொருளை இசைந்து இன்னொருவரிடம் ஒப்படைக்கின்றார். அந்த ஒப்படைப்பை ஏற்பவர் அந்தப் பொருளின் உடைமையைப் பெறுகின்றார்.

'ஒப்படைப்பு' இரு வகைப்படும். ஒன்று 'மெய்ந்நிலை

ஒப்படைப்பு' (actual delivery), மற்றொன்று 'கொள்நிலை ஒப்படைப்பு' (constructive delivery)

ஒருவரது நேரடி உடைமையில் உள்ள பொருள் இன்னொருவரின் நேரடி உடைமைக்கு மாறும் பொழுது, அது 'மெய்ந்நிலை ஒப்படைப்பு' ஆகின்றது.

எனது புத்தகத்தை இன்னொருவரிடம் கொடுக்கிறேன். என் வீட்டைப் பூட்டி அதன் திறவுகோலை இன்னொருவரிடம் கொடுக்கிறேன். இவ்வாறு, உடைமை நேரடியாக ஒப்படைக்கப் படுவது 'மெய்ந்நிலை ஒப்படைப்பு' ஆகும்.

இவ்வாறு உடைமை நேரடியாக ஒப்படைக்கப்படாமல் வேறு வகையில் இருந்தால் அது 'கொள்நிலை ஒப்படைப்பு' எனப்படும்.

எனது நகையை நண்பர் ஒருவருக்கு இரவலாகக் கொடுத்திருக்கிறேன். நகையின் நேரடி உடைமை நண்பரிடம இருக்கிறது. அந்நிலையில் அந்த நகையை அந்நண்பருக்கு விற்று விடுகிறேன். விற்றதற்கு அடையாளமாக நகையை நண்பரிட மிருந்து பெற்று மீண்டும் அவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதில்லை. அவர் உடைமையில் உள்ள நகையை அவரே வைத்துக் கொள்ளலாம் என்று நான் சொன்னாலே போதுமானது. நேரடி உடைமையினைக் கொண்ட நண்பருக்கு என்னிடம் உள்ள பகர உடைமையினை வாய்மொழி வழியாக மாற்றி நகையை ஒப்படைக்கிறேன். இது ஒரு வகையான 'கொள்நிலை ஒப்படைப்பு'.

நான் குடியிருந்து கொண்டிருக்கும் எனது வீட்டை இன்னொருவருக்கு விற்றுவிடுகிறேன். விற்பனை ஆவணம் பதிவு செய்யப்படுகிறது. இதன் விளைவாக வீட்டின் பகர உடைமை மட்டுமே வீட்டை வாங்கியவருக்கு மாற்றப்டுகிறது. ஏனெனில், நான் தொடர்ந்து வீட்டில் குடியிருப்பதால் வீட்டின் நேரடி உடைமை என்னிடமே உள்ளது. ஆயினும், பகர உடைமை வீட்டை வாங்கியவருக்கு மாற்றப்பட்டுவிட்டது. எனக்குள்ள நேரடி உடைமை என்னிடம் இருந்தாலும், நான் வீட்டை விலைக்கு விற்று விட்டதால், வீட்டை வாங்கியவர் பகர உடைமையினைப் பெறுகின்றார். இவ்வாறு, ஒப்பந்த ஆவணத்தின் பயனாகப் பகர உடைமை மாற்றப்படுவதும் ஒரு வகை 'கொள்நிலை ஒப்படைப்பு' ஆகும்.

எனது வீட்டில் ஒருவர் குடியிருக்கிறார். அந்த வீட்டை நான்

மூன்றாமவருக்கு விற்று விடுகிறேன். இப்பொழுதும் வீட்டை வாங்கியவருக்கு வீட்டின் பகர உடைமை மட்டுமே மாற்றப் படுகிறது. நேரடி உடைமையுடன் அந்த வீட்டில் குடியிருப்பவர், அந்த வீட்டின் பகர உடைமை என்னிடமிருந்து . வீட்டை வாங்கியவருக்கு மாற்றப்பட்டு விட்டது என்பதை ஒப்பி ஏற்கும் வகையில், வீட்டை வாங்கியவர் பெயருக்கு வாடகை ஆவணத்தை எழுதிக் கொடுக்கிறார். இவ்வாறு, நேரடி உடைமையாளர், பகர உடைமை ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு மாற்றப்படுவதை ஏற்று ஒப்புதலை 'மாறுதல் ஏற்பு'(attornment)என்பார்கள். இதுவும் ஒரு வகையான கொள்நிலை ஒப்படைப்பு ஆகும்.

இவ்வாறு மூன்று வகையில் பகர உடைமை மாறலாம். ஒன்று, நேரடி உடைமை எவரிடமிருக்கிறதோ அவருக்கே பகர உடைமையும் மாறுவது. இரண்டாவது, நேரடி உடைமை எவரிடமிருக்கிறதோ அவர் ஒப்பந்தம் செய்துகொண்டபடி பகர உடைமை இன்னொருவருக்கு மாறுவது. மூன்றாவது, நேரடி உடைமை தொடர்ந்து ஒருவரிடம் இருக்க, பகர உடைமை ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு மாறுவது. இவ்வாறாகக் 'கொள்நிலை ஒப்படைப்பு' என்பது மூன்று வகையாக நிகழலாம்.

உடைமை எண்ணம் (பகர உடைமை), உடைமைச் செயல் (நேரடி உடைமை) இரண்டும் ஒரே நேரத்தில் மாறும் பொழுது அதை 'நேரடி ஒப்படைப்பு' என்கிறோம். உடைமை எண்ணம் (பகர உடைமை) மட்டும் மாறும் பொழுது அதைக் 'கொள்நிலை ஒப்படைப்பு' என்கிறோம்.

இதுவே, நேர் ஒப்படைப்பிற்கும், கொள்நிலை ஒப்படைப்பிற்கும் உள்ள வேறுபாடு.

இவ்வாறு, எடுத்தலும் (Taking) ஒப்படைத்தலும் (Delivery) உடைமையினை அடையும் வழியாக அமைகின்றன என்கிறார் சால்மண்ட்.

நுண்பொருள் உடைமை (Incorporeal possession)

இதுவரை, பருப்பொருள் உடைமையின் தன்மைகள், அதன் வகைகள், அதை அடையும் வழிகள் இவை பற்றி ஆராய்ந்தோம்.

இனி நுண்பொருள் உடைமை பற்றிக் காண்போம்.

ஒரு நிலம் எனது உடைமையில் இல்லாமல் இருக்கலாம்; ஆனால்,அந்த நிலத்தின்மீது நடந்து செல்லும் உரிமை (right of way)

எனக்கு இருக்கலாம். எனது வீட்டிற்கு இன்னொருவரின் நிலத்தின்வழி வரும் வெளிச்சத்திற்கான (right to light) உரிமை எனக்கு இருக்கலாம். ஒரு பதவியைப் பொறுத்து எனக்குள்ள உரிமை, எனது புகழ், மதிப்பு சிறப்புரிமைகள் இவற்றைப் பொறுத்த உரிமைகள் எனக்கு இருக்கலாம். இந்த உரிமைகள் அனைத்தும் எனது உடைமைப் பொருள்கள் ஆகின்றன. அவை எனது உடைமையில் உள்ள நுண்பொருள்கள். இவற்றை நாம் அனுபவிப்பதை 'நுண் பொருள் உடைமை' என்கிறோம்.

பருப்பொருள்கள்மீது நாம் கொண்டாடும் தனித்த அனுபவத்தைப் 'பருப்பொருள் உடைமை' என்கிறோம். நுண் பொருள்கள் (உரிமைகள்) மீது நாம் பாத்தியதை கொண்டாடி அவற்றை அனுபவிப்பதை 'நுண்பொருள் உடைமை' என்று கூறுகின்றோம்.

பருப்பொருள் உடைமைக்கும் நுண்பொருள் உடைமைக்கும் உள்ள வேறுபாடு இது ஒன்றுதான். பருப்பொருள் உடைமை என்பது ஒரு புலனாகும் பொருள் (a thing) மீதான உடைமை; நுண்பொருள் உடைமை என்பது ஓர் உரிமை மீதான உடைமை என்கிறார் சால்மண்ட்.[1]

சொத்துரிமையும், உடைமையும்
(Ownership and Possession)

ஒரு பொருள்மீது நமக்குள்ள சொத்துரிமையும், அதன் உடைமையும் எவ்வாறு ஒன்றுக்கொன்று தொடர்புடையன என்று காண்போம்.

சொத்துரிமை என்பது ஒரு பொருள் மீது எனக்குள்ள உரிமை, உடைமை என்பது அந்தப் பொருளை நான் அனுபவிக்கும் 'செயல்'. ஒரு பொருள்மீது எனக்குள்ள சொத்துரிமையானது உடைமை என்ற செயலாக உருவெடுக்கிறது.

'சொத்துரிமையின் புற அனுபவமே உடைமையாகிறது'[2] என்கிறார் ஐரிங்.

எனக்கு ஒரு பொருள் மீதுள்ள சொத்துரிமை எனது

[1] Incorporeal possession is commonly called possession of a right, and a corporeal possession is distinguished from it as the possession of a thing - Salmond.

[2] Possession is the objective realisation of ownership - Ihering.

உடைமையாகிய புறச்செயலாக வெளிப்படுகிறது. முன்னது உரிமை; பின்னது செயல். சட்டத்தின் அடிப்படையில் தோன்றுவது சொத்துரிமை; செயலின் அடிப்படையில் இயங்குவது உடைமை.

'சட்டத்தின்படியான சொத்துரிமை, உடைமையாகிய செயல் மூலம் பேணப்படுகிறது'[1] என்கிறார் சால்மண்ட்.

சொத்துரிமையும் உடைமையும் ஒருவரிடம் இருக்கும் பொழுது, சொத்துரிமை என்ற உயிரானது உடைமை என்ற உடலோடு இயங்குவது போன்றது.

ஒரு பொருள் எனக்குச் சொந்தமானது என்றால் அந்தப் பொருளை நானே வைத்திருக்கிறேன்; அல்லது எனது உடைமையில் வைத்திருக்கப் பாடுபடுகிறேன். ஒரு பொருள் நீண்ட நாள்கள் எனது உடைமையில் இருந்தால், அதை வைத்து, அந்தப் பொருள் மீது சொத்துரிமை கொண்டாடுகிறேன்; அல்லது, அதைப் பெற முயலுகிறேன். இவ்வாறு, சொத்துரிமை உடைமையாகச் செயல்பட முயலுகின்றது; உடைமை சொத்துரிமையாக மலர்ந்து நிலைபெற முயலுகின்றது.

எனக்கு ஒரு பொருள் மீது சொத்துரிமை இருக்கலாம். ஆனால், நீண்ட நாள்கள் அந்தப் பொருள்மீது எனக்கு உடைமை இல்லையெனில், சொத்துரிமை, நாளடைவில் மங்கி மறைந்து விடுகின்றது.

இவ்வாறு, சொத்துரிமையும் உடைமையும் ஒன்றோடொன்று இணைந்து நிற்கின்றன.

எவ்வித உடைமைக்கும் சட்டப் பாதுகாப்பு

எந்த ஒரு பொருளையும் ஒருவர் அனுபவிப்பது என்றால் அந்தப் பொருளின் உடைமை அவரிடம் இருக்க வேண்டும். உடைமை இன்றி அதை அனுபவிப்பது இயலாது. உடைமை என்பது வாழ்விற்கு இன்றியமையாததாகிறது; ஆதலால், மக்கள் தங்கள் உடைமையினை எளிதில் விட்டு விடுவதில்லை.

எனவே, ஒருவர் உடைமையை மற்றொருவர் பறிக்க முயன்றால், மோதல் ஏற்படுகிறது. சமுதாய வாழ்வில் ஒழுங்கும் அமைதியும் குலைந்து போகின்றன.

---

1 Possession is the de-facts exercise of a claim; ownership is the de-jure recognition of one - Salmond.

ஆதலால், சட்டம் ஒவ்வொருவருடைய உடைமையையும் பாதுகாப்பதில் முனைந்து நிற்கிறது.

ஒரு பொருளின் உடைமையாளர் எவராக இருந்தாலும், — அப்பொருள் மீதான சொத்துரிமை அவருக்கு இருந்தாலும் இல்லாவிட்டாலும் — அவரது உடைமையை வன்முறையில் பிறர் பறிப்பதைச் சட்டம் தடுக்கின்றது. அப்பொருளின்மீது சொத்துரிமை கொண்டவர்கூட தம் உடைமையிலிருந்து பிறர் உடைமைக்குப் போய்விட்ட பொருளை மீட்க வேண்டுமானால், நீதிமன்றத்தில் வழக்கிட்டுத்தான் அதை மீட்க வேண்டும். சொத்துரிமையாளர் வன்முறையில் சொத்தின் உடைமையைக் கைப்பற்றுதல் கூடாது எனச் சட்டம் விதிக்கின்றது.

நான் வெளிநாடு சென்றிருந்தபொழுது எனது வீட்டை இன்னொருவர் ஆக்கிரமித்துக் கொண்டு குடியிருந்து வருகிறார்; ஒரு வருட காலமாகக் குடியிருந்து வருகிறார். இந்நிலையில், வீட்டின் சொத்துரிமையாளன் என்ற உரிமையின் அடிப் படையில் நான் வன்முறையில் வீட்டிற்குள் புகுந்துவிடமுடியாது. நீதிமன்றத்தில் வழக்கிட்டுத்தான் வீட்டின் உடைமையை நான் பெறமுடியும். அது மட்டுமன்று; வன்முறையில் நான் அந்த ஆக்கிரமிப்பாளரை அகற்றிவிட்டேன் என்றால், அவர் என்மீது வழக்கிட்டு அந்த வீட்டின் உடைமையை மீண்டும் பெற்றுக் கொள்ளலாம். ஏனெனில், கடந்த ஆறு மாதத்திற்கு மேல் அந்த வீடு அவரது உடைமையில் இருந்தது. எனவே, அந்த வீட்டின் உடைமையைப் பாதுகாக்கும் வகையில் அவர் நீதிமன்றத்தின் உதவியை நாடலாம் என்று 'குறித்தவகை மாற்றீட்டுச் சட்டம்' வகை செய்கின்றது (Specific Relief Act)

இம்மாதிரியே குற்ற விசாரணைமுறைச் சட்டத் தொகுப்பின் (Criminal Procedure Code) 145 வது பிரிவு, இரண்டு மாத காலத்திற்கு மேல் ஒரு சொத்தின் உடைமைஎவரிடமிருந்ததோ அவரது உடைமையினைப் பாதுகாக்கின்றது. அந்த உடைமையினை மறுப்பவர் யாராக இருப்பினும் அவர் நீதி மன்றத்தில் வழக்கிட்டுத்தான் உரிமை ஏதுமில்லாத உடைமை யாளரைச் சொத்திலிருந்து அகற்றமுடியும். வேறு வகையான வன்முறையில் அகற்ற முற்படுதல் கூடாது.

ஒரு சொத்தின் உடைமையாளராக இருப்பவர் எவரோ அவரையே சொத்துரிமையாளராக எடுத்த எடுப்பில் சட்டம் கருதுகிறது. உடைமையாளர் சொத்துரிமையாளர் அல்லர் என்று

எவர் வாதாடுகின்றாரோ அவர்தாம் தமது கூற்றை மெய்ப்பித்தல் வேண்டும் என்று இந்தியச் சான்றியல் சட்டத்தின் 110 ஆவது பிரிவு கூறுகின்றது.

இவ்வாறு, சொத்துரிமையாளருக்கு எதிராகக்கூட சொத்துடைமையாளர் தமது உடைமையினைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்குச் சட்டம் வகை செய்கின்றது.

சொத்துடைமையாளர் தம் உடைமையைக் காத்துக் கொள்ளுவதற்குச் சட்டம் வகைசெய்வதை 'உடைமையாளருக்குரிய தீர்வழிகள்' (Possessory remedies) என்பார்கள். சொத்துரிமையாளர் தம் உடைமையைக் காத்துக் கொள்ளும் அல்லது இழந்த உடைமையைப் பெறுவதற்கான தீர்வழிகளை 'சொத்துரிமையாளருக்குரிய தீர்வழிகள்' (Proprietary remedies) என்பார்கள்.

ஒருவர் இன்னொருவருடைய பொருளைத் திருடித் தம்வசம் வைத்திருக்கிறார். இதைத் தெரிந்துகொண்ட நான் அந்தப் பொருளை இவரிடமிருந்து பறித்துக் கொள்ளுகிறேன். இப்பொழுது அவர் அந்தப் பொருளின் உடைமையைத் தன்னிடம் கொடுக்குமாறு என்மீது வழக்கிடலாம். அந்த வழக்கில் அந்தப் பொருளின் சொத்துரிமையாளர் அவர் அல்லர் என்று கூறி நான் வழக்காட முடியாது. அந்தப் பொருளின் உடைமையை அவரிடம் கொடுத்தே ஆக வேண்டும். இவ்வாறு, திருடியவரின் உடைமை கூடச் சட்டத்தால் பாதுகாக்கப்படுகிறது. அந்தப் பொருளைத் திருட்டுக் கொடுத்தவர் திருடனின் உடைமையிலிருந்து அந்தப் பொருளைப் பெறலாம்; வேறு எவரும் திருடனின் உடைமையைக் குலைக்க முடியாது.

இவ்வாறு, சொத்துரிமை இல்லாதவரின் உடைமையை அந்தப் பொருளின் சொத்துரிமை எவருக்கு உள்ளதோ அவர்தான் மறுக்க முடியும். வேறு எவரும் அதை மறுக்க இயலாது.

உடைமையாளர்க்குச் சொத்துரிமை இல்லை என்ற காரணம் காட்டி அவரது உடைமையினைப் பிறர் எவரும் எதிர்க்க முடியாது.

இவ்வாறு, சட்டம் ஒருவரின் உடைமையினைக் காக்கவில்லை என்றால் சமுதாயத்தில் வன்முறை மலிந்து விடும். ஒருவர் உடைமையினை மற்றொருவர் வன்முறையில் பறித்ததைச் சட்டம் அனுமதித்தால், ஒழுங்கும் அமைதியும் சமுதாய வாழ்வில் நிலைகுலைந்து விடும். சொத்துரிமை உடையவராலும் தம்

உடைமையைக் காப்பது இயலாததாகிவிடும்.

எனவே தான் ‘உடைமையினை ஓம்பிச் சட்டம் காக்கிறது’ (Possession is nine points of the law) என்கின்றனர் சட்ட இயலறிஞர்கள்.

நபர்கள்
(Persons)

['நபர்' என்பதன் கருத்தமைவு — இயல்பான நபர்களும், சட்டமுறை நபர்களும் — இறந்தவர்களின் தகுநிலை — இனிப்பிறக்க இருப்போரின் தகுநிலை — விலங்குகளின் தகுநிலை — சட்டமுறை நபர்கள் — கூட்டமைப்பின் தனித்தன்மை — கூட்டமைப்பிற்கும் கூட்டு வாணிபத்திற்கும் உள்ள வேறுபாடு — தனிநிலைக் கூட்டமைப்பும், தொகுநிலைக் கூட்டமைப்பும்]

சமுதாயத்தில் உரிமைகளையும் கடமைகளையும் ஒழுங்குறுத்தும் சட்டம், அவ்வுரிமைகளுக்கும் கடமைகளுக்கும் உரித்தானவர்கள் எவர் என்பதையும் உறுதி செய்கிறது. அவ்வாறு உரித்தானவர்களை ஆங்கிலத்தில் persons என்று குறிப்பிடுகின்றனர்.

மனிதர்களைப் போன்றே வேறு சில பொருள்களும் உரிமைக்கும் கடமைக்கும் உரித்தானவை எனச் சட்டம் கொள்கிறது. கோவில்களில் உள்ள திருவுருவங்கள் (idols), கூட்டமைப்புகள் (Corporations) போன்றவைகளும் சட்ட வழக்கில் person என்ற சொல்லில் அடங்குகின்றன.

எனவே, சட்டத்தைப் பொறுத்தவரை person என்பதை 'ஆள்' என்றோ 'மனிதன்' என்றோ தமிழில் குறிப்பிட்டால் அது குழப்பத்திற்கு ஏதுவாகும். ஆதலால், சாதாரணமாகப் பழக்கத்தில் இருக்கும் 'நபர்' என்ற அரபிச் சொல்லையே நாம் person என்ற ஆங்கிலச் சொல்லிற்குப் பதிலாகப் பயன்படுத்தலாம்.

'நபர்' என்பதன் கருத்தமைவு என்ன?

உரிமைகள் கடமைகள் இவற்றுக்கு உற்றவராகச் சட்டம் எவரைக் கொள்கின்றதோ அவரையே 'நபர்' என்று சட்டம்

குறிக்கின்றது. அவர் மனிதராக இருக்கலாம்; இல்லாமலும் போகலாம். உரிமைக்கும் கடமைக்கும் உரித்தானவராக இல்லையெனில் அவர் மனிதராக இருந்தாலும் அவரைச் சட்டம் 'நபர்' என்று குறிப்பதில்லை. இவ்வாறு, சால்மண்ட் கூறு கின்றார்.[1]

உரிமைக்கும் கடமைக்கும் உற்றவையே சட்டப்படியான நபர்கள்'.[2] என்கிறார் பேராசிரியர் பேட்டன்.

மனிதர்கள் எல்லாரும் சட்டப்படியான நபர்கள் ஆவதில்லை. அந்த நாள்களில் அடிமைகளுக்கு (slaves) உரிமை, கடமை என்ற எதுவும் இல்லை. எனவே, அவர்கள் நபர்களாகக் கருதப்படவில்லை. இப்பொழுதும், இளஞ்சிறார்கள், மன நோயுடையவர்கள் இவர்களைச் சட்டம் முழுமையான நபர் களாகக் கொள்வதில்லை. ஆனால், கூட்டமைப்புகள். (corporation) 'கம்பெனிகள்' இவை நபர்கள் ஆகின்றன.

இன்றைய சட்ட இயலறிஞர் குசௌரக் (Kocourek) என்பார், person என்ற சொல்லிற்குப் பதிலாகச் சட்டத்தில் personateness — ஆளமை — (ஆளாக அமைக்கப்படுவது) என்ற ஒரு சொல்லை ஆக்கி, அதைப் பயன்படுத்தினால், person என்ற சட்டச் சொல்லால் விளையும் குழப்பம் தீரும் என்கிறார் (Jural Relations)

'நபர்' என்ற சட்டச்சொல் சட்டத்தால் புனையப்பட்ட சொல். சமுதாய அமைப்பில் எழும் மாறுதல்களுக்கு ஏற்பத் தோன்றும் உரிமைகளையும் கடமைகளையும் செல்லுறுத்து வதற்குச் சாதனமாக சட்டத்தால் கையாளப்படும் ஓர் உத்தியே 'நபர்' என்ற கருத்தமைவு ஆகும்.

இயல்பான நபர்களும், சட்டமுறை நபர்களும்

சட்டத்தில் 'நபர்கள்' என்று கூறும்பொழுது

---

1 'So far as legal theory is concerned, a person is any being whom the law regards as capable of rights and duties. Any being that is so capable is a person, whether a human being or not, and no being that is not so capable is a person, even through he be a man' - Salmond.

2 Legal persons are all entities capable of being right-and-duty- bearing units - G W. Paton

இருவகையான நபர்கள் குறிக்கப்பெறுகின்றனர். ஒருவகை, உயிரும் உடலும் கொண்ட மனிதர்கள்; மற்றொருவகை சட்டத்தால் கொள்ளப்படும் கூட்டமைப்பு, 'கம்பெனி' போன்றவை. மனிதர்களை நபர்கள் எனக்கொள்வது இயல்பானது. அவர்கள் உண்மையிலே நபர்கள். எனவே, மனிதர்களை 'இயல்பான நபர்கள்' (Natural persons) என்பார்கள். சட்டத்தால் புனையப்படும் பிறவகை நபர்களைச் 'சட்டமுறை நபர்கள்' (Legal persons) என்பார்கள்.

இயல்பான நபர்கள் (Natural persons)

இயல்பான நபர்கள் என்று நாம் மனிதர்களையே குறிக்கின்றோம். வாழும் மனிதர்களுக்கு உள்ள உரிமைகளும் கடமைகளும், அவர்களுக்குச் சமுதாயத்தில் உள்ள மதிப்பு நிலையையும், அவர்கள் செய்துகொண்ட ஒப்பந்தங்களையும், சொத்துநிலையையும் பொறுத்தே அமைகின்றன.

மரணம் எய்திய பின் மனிதனுக்கு உரிமை உண்டா?

இறந்தவர்களின் தகுநிலை (The Legal status of the dead)

மனிதனுக்கு உரிய உரிமைகள் பிறப்பிலே தோன்றி இறப்பிலே முடிந்து விடுகின்றன என்பார்கள். 'இறந்தோர்க்கு இல்லை எவ்வுரிமையும் தீங்கும்', என்று கூறுவதுண்டு. (The dead have no rights and can suffer no wrongs)

எனவே, இறந்தவரை ஒரு நபர் என்று சட்டம் கொள்வதில்லை. உரிமையோ கடமையோ அவருக்கு இருப்பதாகவும் கொள்வதில்லை. ஆயினும், சமுதாயப் பண்பாட்டினைக் கருத்திற்கொண்டு, இறந்தவர்களைப் பொறுத்தும் சில நலன்களைச் சட்டம் ஏற்றுப் பேணுகிறது.

இறந்தவரின் சடலத்தை எவரும் அவமதிப்பதற்குச் சட்டம் அனுமதிப்பதில்லை. உடலானது உரிய சடங்குகளுடன் அடக்கம் செய்யவோ எரியூட்டவோ செய்யப்படுகிறது. மேலும், இறந்தவர் தமது விருப்பத்தைத் தெரிவித்திருந்தால் அல்லாமல், அவரது சடலத்திலிருந்து கண்கள் போன்ற உறுப்புக்கள் எதையும் அகற்றுவது கூடாது. ஒருவரின் கல்லறையின் புனிதத்தைக் கெடுப்பது குற்றம் எனக் குற்றஇயல் சட்டம் கூறுகிறது.

இறந்தவரின் புகழுக்குப் புன்மை சேர்க்கும் வகையில் அவதூறாக எவரும் பேசுவதையும் எழுதுவதையும் சட்டம் குற்றம் எனக் கொள்கிறது. அவருக்குப் பின் வாழும் அவரது குடும்பத்தினருக்கு மனவேதனை அளிக்கும் வகையில் உள்ள அவதூறுகளைச் சட்டம் தண்டிக்கிறது.

இறந்தவர் விட்டுச் சென்ற விருப்பாவணத்தின் (will) படியேதான் அவரது சொத்துக்கள் பயன்படுகின்றன; பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

இவ்வாறு, ஒருவர் இறந்த பின்னரும் அவரது உடல், உற்றபுகழ், பொருள் இவற்றைப் பேணுவதில் சட்டம் அக்கறை காட்டுகிறது. அவர் உயிருடன் இருந்த காலத்தில் வெளியிட்ட விருப்பத்தை நிறைவேற்றுகிறது.

இனிப்பிறக்க இருப்போரின் தகுநிலை
(The legal status of unborn persons)

இறந்தவர்களை 'நபர்கள்' எனக் கருதாத சட்டம், இனிப்பிறக்க இருப்போர்களை வேறு வகையாகக் கருதுகிறது.

சட்டப்படி, ஒரு சொத்து இனிப்பிறக்க இருக்கும் குழந்தைகக்குச் ள சொந்தமானதாக இருக்கலாம். அது பிறந்த பிறகுதான் சொத்துரிமை அதைச் சேருகிறது. பிறப்பதற்கு முன் நிறைவுறாச் சொத்துரிமையாக (contigent ownership) இருந்தது, பிறந்தபின் நிறைவுற்ற சொத்துரிமை (vested ownership) ஆகின்றது. எனவே, ஒருவர் தமது சொத்தை இனிப் பிறக்க இருக்கும் ஒரு குழந்தைக்குச் சேரவேண்டும் என எழுதிவைப்பதைச் சட்டம் அனுமதிக்கிறது. ஆனால், காலவரம்பின்றி ஒருவரது சொத்து எவருக்கும் சொந்தமாகாமல் இருப்பது உகந்ததில்லை. எனவே, குறிப்பிட்ட காலவரம்பிற்குள் பிறக்கப் போகும் குழந்தைக்குச் சேரவேண்டும் என்று கூறி ஒரு சொத்து எழுதிவைக்கப்படலாம் என்பது சட்டம்.

கருவில் உருவாகும் குழந்தையைப் பிறந்துவிட்ட குழந்தையாகவே சட்டம் கொள்கிறது. சொத்துரிமை பெறுவதுபோன்ற சில காரியங்களில் அது ஏற்கனவே பிறந்த குழந்தை என்றே சட்டம் பாவிக்கின்றது.

ஒருவர் இறக்கும்பொழுது அவர் மனைவி கருவுற்றிருந்தால், கருவில் இருக்கும் பிள்ளை பிறந்தவுடன் தன் தந்தையின் சொத்தில் அதற்குற்ற பங்கை அடைகின்றது.

கருவுற்றிருக்கும் ஒரு பெண்ணிற்கு மரணதண்டனை விதிக்கப்பட்டால், குழந்தை பிறக்கும்வரை அவளைத் தூக்கில் இடுவதில்லை.

சொத்துநிலை உரிமை (proprietary right) தனிநிலை உரிமை (personal right) இவை கருவில் உருவாகும் குழந்தைக்கு எந்த அளவு பொருந்தும் என்பது குறித்து நீதிமன்றங்களிடையே கருத்து வேறுபாடுகள் உண்டு. எனவே, இது குறித்த சட்டக் கொள்கை இன்னும் தெளிவாகவில்லை என்றே கூற வேண்டும்.

தாயின் உயிரைக் காப்பதற்காக அல்லாமல் கருச்சிதைவு செய்தால் அது குற்றமேயாகும்.

கருவில் வளரும் குழந்தைக்கெனச் சட்டம் பேணும் உரிமைகள் குழந்தை உயிருடன் பிறந்தால்தான் செயற்படுகின்றன. உயிருடன் பிறக்காத நிலையில், அந்த உரிமைகளும் உயிர்பெறுவதில்லை. இந்த எடுத்துக்காட்டு இதை விளக்கும். கருவில் வளரும் குழந்கைக்கு ஒரு சொத்து எழுதி வைக்கப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். அது உயிருடன் பிறந்து ஒரு நாள்தான் வாழ்கின்றது, மறுநாள் மரித்து விடுகின்றது. இந்நிலையில் அச்சொத்து அந்தக் குழந்தைக்கு வாரிசுகள் யாரோ அவர்களையே சேரும். ஏனெனில், பிறந்தவுடன் சொத்து'ரிமை குழந்தைக்கு வந்துவிட்டது. ஆனால், அது கருவிலே சிதைந்து போனதால் உயிருடன் பிறக்கவில்லையென்று, அச்சொத்துரிமை அக்குழந்தைக்குச் சேர்ந்ததாகவே சட்டம் கருதுவதில்லை. அந்தக் குழந்தை கருவில் உதித்திராவிட்டால், சொத்து யாருக்குச் சேருமோ, அவருக்கே அதுபோய்ச் சேருகின்றது.

கருவிலே உருவாகும் குழந்தை சாதாரணமாக உயிருடன் பிறப்பது உறுதி. எனவே, அது உலகில் உதித்துவிட்ட உயிராகின்றது. ஆதலால், சட்டம் அதைப் புறக்கணிப்பதற்கில்லை. இவ்வாறாக, கருவில் வளரும் குழந்தையையும் கருத்திற்கொண்டு சட்டம் இயங்குகிறது.

விலங்குகளின் தகுநிலை
(The legal status of the lower animals)

விலங்குகளை நாம் அஃறிணைப் பொருள்கள் என்றே

குறிக்கின்றோம்.

மக்களைப் போல் விலங்குகளும் செயல்களில் ஈடுபடுகின்றன ; அவற்றிற்கான நலன்களும் உண்டு. ஆயினும் அவற்றுக்கு உரிமைகளோ கடமைகளோ உண்டெனச் சட்டம் கொள்வதில்லை.

அந்த நாள்களில் சில நாடுகளில் விலங்குகளைத் தண்டிப்பது உண்டு. கிரேக்க நாட்டில் ஒரு காளைமாடு எவரையாவது கொம்புகளால் குத்திக் கொன்றுவிட்டால், அந்த மாட்டைக் கற்களால் அடித்துக் கொல்வார்களாம். நம் நாட்டு மனுநீதிச் சோழன் புராணக்கதையில்கூட, கன்றை இழந்த பசு மன்னனிடம் வந்து, வாயில் மணி அடித்து நீதி கேட்டதாகக் கூறப்படுகிறது.

இன்றைய சட்டம் விலங்கினத்திற்கு உரிமையோ கடமையோ இருப்பதாகக் கருதுவதில்லை. சட்டங்கள் மக்களுக்காக இயற்றப்படுகின்றன. அவை மக்களுக்கும் மற்ற விலங்கினத்திற்கும் தொடர்பு எதையும் ஏற்படுத்துவதில்லை. விலங்குகளைக் கொடுமைப்படுத்தி வருத்துவதைத் தடுக்கும் சட்டங்கள் உண்டு. ஆனால், அவை விலங்கினத்திற்கு உரிமை எதையும் அளிப்பதில்லை. விலங்குகளை வருத்தக்கூடாது என்பது சமுதாயத்திற்கு உற்ற உரிமையேயாகும். எனவே, இதற்கான கடமையும் சமுதாயத்திற்கே உரியது.

குறிப்பிட்ட வகை விலங்கினத்தின் நலனுக்கென்று பொறுப்பமைப்பு (Trust) ஏற்படுத்தலாம் எனச் சட்டம் கூறுகிறது. ஆனால், தனிப்பட்ட ஒரு விலங்கிற்கென்று பொறுப்பமைப்பு ஏற்படுத்துவது இயலாது. இத்தகைய ஏற்பாடுகள் சமுதாய நலனுக்கென்றே கொள்ளப்படுகின்றன.

சட்டமுறை நபர்கள் (Legal persons)

வளரும் சமுதாயத் தேவைகளுக்கு ஏற்பச் சட்டம் 'நபர்' என்ற கருத்தமைவினைப் (concept) புனைகின்றது. புனையப்பட்ட அந்தக் கருத்தமைவிற்கு உருவமும் உயிரும் ஊட்டும் வகையில், அதற்கு உரிமைகள் கடமைகள் என்ற போர்வையினைப் போர்த்துகிறது; அது இயங்குவதற்கான உத்தியையும் காண்கின்றது. இவ்வாறு சட்டத்தால் புனையப்படும் நபர்களைத் தான் 'சட்டமுறை நபர்கள்' (Legal persons) என்கின்றனர்.

இயந்திரத் தொழிற் புரட்சி மேலைநாடுகளில் ஏற்பட்ட காலத்தில் பெரிய தொழில் நிறுவனங்கள் உருவாகும் சூழ்நிலை தோன்றியது. அதில் முடக்கவேண்டிய பணம் கோடிக்கணக்கில் தேவைப்பட்டது. ஒருவரோ ஒரு சிலரோ பெருந்தொகைகளை முடக்க முடியாததாகையால், நூற்றுக் கணக்கான மக்களிட மிருந்து பங்குத்தொகைகளைப் (shares) பெற்றனர். பங்குத் தொகைகளைப் கொடுப்பவர்கள் தொழிலில் நட்டம் ஏற்பட்டு விடக்கூடாது; அப்படி ஏற்பட்டாலும் அது பங்குப் பணத்தைப் பாதிப்பதோடு நின்று விடவேண்டும்; பிற சொத்துக்களைப் பாதிப்பதுகூடாது என்று எண்ணுவது இயல்பேயாகும். இது மட்டுமல்ல.

அந்தத் தொழிலை யார் நிர்வகிப்பது? பங்குத் தொகைகள் அளித்த நூற்றுக் கணக்கானவர்கள் சேர்ந்து கூட்டாக அதை நிர்வகிப்பது இயலாத காரியம். அவர்கள் கூட்டாக இயங்குவது இயலாத நிலையில், தொழிலின் சார்பாக ஒப்பந்தம் செய்வது எவ்வாறு? பொருள்களை வாங்குவதும் விற்பதும் எப்படி?

பங்கு பெற்றவர்களில் சிலர் வயதுவராத சிறார்களாக இருக்கலாம். அவர்களால் நிர்வாகத்தில் ஈடுபட இயலாது. பங்குதாரர்களில் ஒருவர் இறந்து விட்டால் என்ன விளைவு? தொழிலைக் குலைத்து விடுவதா? பங்குதாரர்களில் சிலர் தொழிலை விட்டு விலக வேண்டுமென விரும்பினால் அதற்கு வழியென்ன? விளைவு என்ன? இவை போன்ற சிக்கல்கள் இடர்ப்பாடுகள் எத்தனையோ எழுந்தன.

இச்சிக்கல்களைத் தீர்ப்பதற்குச் சட்டம் கண்ட வழிதான் 'சட்டமுறை நபர்' (Legal person) என்ற உத்தியாகும்.

இந்த உத்தி எப்படிச் செயற்படுகிறது?

நூற்றுக் கணக்கானவர்களுக்குச் சொந்தமான கூட்டுமுறைச் சொத்துரிமையைத் (Collective ownership) தனிமுறைச் சொத்துரிமையாகச் (individual ownership) சட்டம் மாற்றுகிறது. பங்குதாரர்களுக்கெல்லாம் அப்பாலாகத் தனிப்பட்ட 'நபர்' என்று ஒன்றைப் புனைகின்றது. அவ்வாறு புனையப்பட்ட நபருக்கு அச்சொத்தைச் சொந்தமாக்குகிறது. அந்தப் புனை நபரின் சார்பில் செயல்படுவதற்கெனச் சிலருக்குச் சட்ட அதிகாரம் அளிக்கின்றது. இவ்வாறு, நூற்றுக்கணக்

கானவர்களின் சார்பில் சட்டத்தால் உருவாக்கப்பட்ட புனைவு நபரால் (fictitious person) தொழில் நிர்வகிக்கப்படுகிறது.

அந்த நபருக்கு இயல்பான இறப்பு இல்லை. பங்குதாரர்களில் பலர் இறந்தாலும், விலகிக் கொண்டாலும், சட்டத்தால் புனையப்பட்ட நபர் வாழ்ந்து கொண்டே இருக்கும். அதன் இயக்கம் நிற்க வேண்டுமெனில் சட்டம்தான் அதைச் செய்ய முடியும். இவ்வாறு, ஓர் ஒப்பற்ற உத்தியைக் கையாண்டு பெருந்தொழில்கள் எளிதாக நடைபெறுவதற்குச் சட்டம் உதவுகிறது. இந்த உத்தியில் உதிப்பதுதான் 'கம்பெனி' (company) என்ற புனை நபர். இதைக் 'கூட்டமைப்பு' (Corporation) என்றும் கூறுவார்கள்.

கூட்டமைப்பின் தனித்தன்மை

இந்த ஏற்பாட்டில் நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது 'கம்பெனி' அல்லது 'கூட்டமைப்பு' என்பதன் தனித்தன்மையாகும்.

'கம்பெனி' என்பது நூற்றுக்கணக்கான பங்குதார்களினின்றும் (share holders) தனித்து நிற்பதாகும். 'கம்பெனி' என்ற நபர் வேறு; பங்குதார்கள் வேறு. கம்பெனியின் சொத்துக்கள் பங்குதார்கள் சொத்துக்கள் அல்ல. கம்பெனியின் கடன்களும் பங்குதார்களின் கடன்கள் அல்ல. கம்பெனி நொடித்துப் (insolvent) போகலாம்; ஆனால் பங்குதார்கள் இதனால் பாதிக்கப்படுவதில்லை. அதன் பங்குதார் ஒருவருடன் கம்பெனி ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். பங்குதார்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்து ஒரே ஒரு பங்குதார் மட்டும் இருக்கலாம். இந்நிலையிலும், கம்பெனி என்ற நபர் தனித்தே இயங்குகிறது. எனவே, கூட்டமைப்பில் அடங்கும் உறுப்பினர்கள் வேறு; கூட்டமைப்பு என்ற நபர் வேறு.[1]

Salomon Vs. Salomon and Co (1897-A.C 22) என்ற வழக்கு, கூட்டமைப்பின் தனித்தன்மையினைத் தெளிவாக எடுத்துக் காட்டுவதாகும்.

---

[1] The aggregate of members who compose a corporation differs essentially from the corporation itself - Savigny.

சாலமன் என்பவர், தாம், தம் மனைவி, தம் பிள்ளைகள் இவர்களைக் கொண்ட கம்பெனி ஒன்றைச் சட்டப்படி உண்டாக்கி வாணிபம் நடத்தி வந்தார். சில நாள்களில் கம்பெனி நொடிப்புநிலை (bankruptcy) அடைந்தது. கம்பெனியால் கொடுக்கப்பட வேண்டிய கடனில், 10,000 பவுன்கள் சாலமனுக்கும், 7,000 பவுன்கள் இதரப் பொதுமக்களுக்கும் கொடுக்க வேண்டியிருந்தது. அதன் சொத்து 6,000 பவுன்கள்தான். சாலமனுக்குச் சேரவேண்டிய கடன் பிணையக் கடனாகவும் (secured debt), பிறருக்குச் சேரவேண்டிய கடன் பிணையமில்லாக் கடனாகவும் இருந்தன. கீழமை நீதிமன்றங்கள் சாலமனே கம்பெனியாக இருப்பதால் அவருக்குக் கொடுபட வேண்டிய கடனைவிட, முந்துரிமை (priority) கடன் பிறருக்குச் சேர வேண்டிய கடன்தான் என்று தீர்ப்பளித்தன. ஆனால்,House of Lords என்று கூறப்படும் ஆங்கில நாட்டு உச்சநீதிமன்றம், சாலமன் என்ற தனிநபர் வேறு, அந்தப் பெயர் கொண்ட கம்பெனி வேறு; எனவே, சாலமனுக்குச் சேர வேண்டிய கடன் பிணையக் கடனாக இருப்பதால், அதற்கே முந்துரிமை உண்டு என்று தீர்ப்பளித்தது.

எனவே, 'ஒரு கம்பெனியின் பங்குகளை உடையவர்கள் (shareholders) வேறு; அவர்கள் அனைவரிடமிருந்தும் கம்பெனி தனித்து நிற்பதாகும்'[1] என்கிறார் எவர்ஷெட் என்ற நீதிபதி.

ஒரு கம்பெனியில் பங்குடையவர்கள் அனைவருமே இல்லாமல்போய் விட்டாலும் கூட, கம்பெனி என்ற நபர் தனித்து நிற்கும் என்கிறார் பேராசிரியர் கவர் (Gower) பொது உறுப்பினர்கள் கூட்டம் நடந்து கொண்டிருந்த பொழுது, அக்கட்டிடத்தின் மீது குண்டு விழுந்ததால் அவர்கள் அனைவரும் மாண்டனர். ஆயினும், கம்பெனி என்ற நபர் பாதிக்கப்பட வில்லை என்று தீர்ப்புக் கூறப்பட்டது.

கூட்டமைப்பில் உறுப்பினர்களாக, அதாவது, பங்கு தார்களாக இருப்பது உயிருள்ள மனிதர்களாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. கூட்டமைப்புக்களே மற்றொரு கூட்டமைப்பின் பங்குதார்களாக இருக்கலாம். இங்கு கூட்டமைப்பு என்ற கருத்தமைவு இரட்டிக்கப்படுகிறது. எனவே, புனை நபர்கள் கூட்டாகச் சேர்ந்து இன்னொரு புனைவுநபரை உண்டாக்கலாம்.

---

[1] Shareholders are not, in the eye of law, part owners of the undertaking. The undertaking is something different from the totality of the shareholders.

புனை நபரான கம்பெனிக்கு உயிரோ உடலோ இல்லை. ஆனாலும், அது சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். அவ்வாறு செயலாற்றுவதற்கு இயல்பான நபர்கள் (natural persons) வேண்டியிருக்கிறது. அந்த நபர்களைக் கம்பெனியின் இயக்குநர்கள் (Directors) என்பார்கள். இவர்கள் பங்குதாரர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பங்குதார்களின் முகவர்களாக (agents) இயங்குகின்றனர். கம்பெனியன் தொழில்களனைத்தையும் அவர்களே ஏற்று நடத்துகின்றனர். அன்றாட அலுவல்களை நடத்திச் செல்லும் இயக்குநரை 'நிர்வாக இயக்குநர்' (Managing Director) என்பார்கள்.

ஒரு கம்பெனியைத் தொடங்கும்பொழுது அதன் நோக்கங்கள், அலுவல்முறைகள் என்ன என்பதைக் காட்டும் 'அமைப்புக் கொள்கைகள்' (Articles of Association) வகுக்கப் பெறுகின்றன. இந்தக் கொள்கைகள் என்ற வரம்பிற்கு உட்பட்டே கம்பெனியின் இயக்குநர்கள் செயல்பட வேண்டும். இந்த வரம்பிற்கு அப்பாற்பட்ட செயல்கள் செல்லுறாத (invalid) செயல்கள் ஆகிவிடுகின்றன.

ஒரு கம்பெனி மீது குற்றப் பொறுப்படைவு (Criminal liability) ஏற்படுமா என்பது சில வேளைகளில் சிக்கல்களை எழுப்புவதுண்டு. பொதுவாக, கொலை, திருட்டுப் போன்ற குற்றங்களுக்கு ஒரு கம்பெனி பொறுப்பாவதில்லை. ஏனெனில், அத்தகைய செயல்கள் 'கூட்டமைப்புக் கொள்கைகளுக்கு' முரண் பட்ட செயல்களாகவே இருப்பவையாகும். ஆனால், கம்பெனிச் சட்டப்படி ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்றாது இருக்கையில், அத்தகைய செயலின்மைக்கு (Omission) கம்பெனி பொறுப்பா கின்றது. இத்தகைய குற்றங்களுக்கு அபராதமும் விதிக்கின்றது.

மேலும், கம்பெனியின் அலுவல்களைச் செய்யும் பொழுது, அதன் வேலையாள்களின் கவனமின்மையால் பிறருக்குக் கேடு விளையலாம். அதற்கு ஈடுசெய்யும் பொறுப்பு கம்பெனியையே சேருகின்றது.

பொதுவாக, வேலையாளின் செயலுக்கு மேலாள் பொறுப்பாகின்றார். இந்தக் கொள்கைப்படி, கம்பெனியின் முகவர்களாக இயங்குபவர்களின் செயல்களுக்குப் பங்குதார் களைக் கொண்ட கம்பெனி பொறுப்பாவது முறையேயாகும் எனக் கருதப்படுகிறது.

இந்த ஏற்பாட்டில் உள்ள மிக முக்கியமான கோட்பாடு, கம்பெனியின் நட்டம் பங்குதார்களின் பங்குத்தொகையை மட்டுமே பாதிக்கும்; அவர்களின் வேறு சொத்து எதையும் பாதிக்காது என்பதாகும். இதைக் காட்டும் வகையில்தான் limited என்ற சொல்லைக் கம்பெனிகளின் பெயர்களோடு காண்கிறோம். 'பொறுப்படைவு வரம்புக்குட்பட்டது' (liability limited) என்பதை limited என்ற சொல் குறிக்கின்றது. எனவே, மக்கள் பலரும் துணிந்து பங்குகளை வாங்கி கம்பெனிகளுக்கு வேண்டிய மூலதனத்தை ஆர்வத்துடன் அளிக்கின்றனர். இந்த ஏற்பாடு இல்லையெனில், கம்பெனிக்கு ஒருவேளை ஏற்படும் பெருத்த இழப்புகளுக்குத் தங்கள் சொத்துக்கள் பொறுப்பாகும் என்ற நிலையில், எவருமே பங்குதார்களாகச் சேரமாட்டார்கள். பெரிய தொழில்கள் தோன்றுவதற்கான வாய்ப்பே இல்லாமல் போய்விடும்.

கம்பெனி சட்டத்தின்கீழ் தொடங்கப்பெற்ற கம்பெனி, பங்குதார்களிடமிருந்து தனித்து நின்று இயங்குவதால் சட்டப்படி அது கலைக்கப்படும் (dissolution) வரை அதற்கு முடிவு இல்லை.

இவ்வாறு, சட்டப்புனைவான கம்பெனிகள் பல்லாயிரக் கணக்கான மக்களிடமிருந்து பங்குப்பணம் பெற்று பெரிய தொழிற்சாலைகளை நடத்துவதிலும் பெரிய வாணிபங்களை நடத்துவதிலும் ஈடுபட்டு பெருமளவில் ஊதியங்களை ஈட்டுகின்றன. அவற்றின் நிர்வாகமானது தொழில்நுட்பத்திறம் பெற்றவர்களிடம் இருப்பதால், இழப்பு ஏற்படும் சூழ்நிலை தோன்றுவதில்லை. இத்தகைய கம்பெனிகள் நம் நாட்டில் மட்டுமன்றி, உலகில் பல நாடுகளிலும், பொருளாதாரத் துறையில் மிகுந்த செல்வாக்குடன் இயங்குகின்றன. இதன் விளைவாக, நாட்டின் கைத்தொழில், உற்பத்தித்திறன் முதலியவை பெருகுகின்றன.

இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் நம் இந்தியநாட்டை ஆங்கிலேயரின் ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தது, வாணிபத் திற்கென்று வந்த 'கிழக்கு இந்தியக் கம்பெனி'யே (East India Company) ஆகும். இன்னும் இத்தகைய கம்பெனிகளின் பொருளாதார ஆற்றல் நாட்டின் பொருளாதார நிலைக்கு ஆதாரமாக அமைகின்றது.

இந்த வகையில், உயிரும் உடலும் இல்லாமல், சட்டத்தின் கண்களுக்கு மட்டும் புலப்படுவதாய், சட்டத்தால் புனையப்பட்டு

'கற்பனை நபராக' இயங்கும் கூட்டமைப்புக்கள் (Corporation) நாட்டின் நலனை வளர்ப்பதில் பெரும்பங்கு கொள்கின்றன. அரசாங்கமே நடத்தும் பெருந்தொழில்கள்கூட பெரும்பாலும் கூட்டமைப்பு முறையிலேயே இயங்குகின்றன.

கூட்டமைப்பிற்கும் (Corporation or Company) கூட்டுவாணிபத்திற்கும் (Partnership or Firm) உள்ள வேறுபாடுகள்

ஒரு சிலர் சேர்ந்து கூட்டாக வாணிபம் செய்கின்றனர். அதைக் 'கூட்டுவாணிபம்', அல்லது 'கூட்டுத் தொழில்' (Partnership or Firm) என்பார்கள். இந்தக் கூட்டுவாணிபத்திற்கும் கூட்டமைப்பிற்கும் உள்ள வேறுபாடுகள் அடிப்படையானவை.

'கூட்டமைப்பு' என்பது சட்டம் புனையும் நபராக உள்ளது; கூட்டுவாணிபம் அத்தகைய நபர் ஆவதில்லை. கூட்டாளிகளின் ஒரு சேர்க்கையாகவே சட்டம் கூட்டு வாணிபத்தைக் காணுகின்றது. கூட்டாளிகளுக்கு அப்பாற்பட்ட, தனித்த ஒரு நபராகக் கூட்டுவாணிபத்தைச் சட்டம் கொள்வதில்லை.

கூட்டமைப்பின் பங்குதார்கள் (share holders) கூடினாலும் குறைந்தாலும், கூட்டமைப்பு பாதிக்கப்படுவதில்லை. ஆனால், கூட்டு வாணிபத்தில் உள்ள ஒரு கூட்டாளி விலகினாலும் கூட கூட்டுவாணிபம் சட்டப்படி கலைந்து விடுகிறது.

கூட்டமைப்பின் சொத்தும் கடன்களும் பங்குதார்களைச் சேர்வதில்லை. கூட்டுவாணிபத்தின் சொத்தும் கடன்களும் கூட்டாளிகளையே சேருகின்றன. கூட்டுவாணிபத்தில் மூன்று பேர்கள் கூட்டாளிகளாக இருக்கலாம். ஒவ்வொருவரும் பத்தாயிரம் ரூபாய் மட்டுமே அத்தொழிலில் முடக்கி இருக்கலாம். ஆனால், அந்த வாணிபத்திலே ஐம்பதாயிரம் ரூபாய் நட்டம் ஏற்பட்டதென்றால் கூட்டாளிகளின் தனிப்பட்ட சொத்துக்கள்மீது கடன்காரர்கள் செல்லலாம்.

ஒரே ஒரு பங்குதார் மட்டுமே இருக்கும் நிலையிலும் கூட்டமைப்பு என்ற நபர் இயங்குகிறது. கூட்டாளி ஒருவரை மட்டுமே கொண்ட கூட்டுத்தொழில் இயங்குவது இயலாது.

இவ்வாறு, கூட்டமைப்பும் கூட்டுவாணிபமும் அடிப்படை வேறுபாடுகளைக் கொண்டவை.

தனிநிலைக் கூட்டமைப்பு (Corporation sole)

கூட்டமைப்பின் முக்கியத்தன்மை அது தொடர்ந்து அழியாமல் இருப்பது என்று கண்டோம்.

அரசு இயங்க வேண்டுமெனில் சில பதவிகள், அரசின் அங்கங்களான பதவிகள், இடையின்றித் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

நம் இந்தியக் குடியரசின் அலுவல்கள் பலவும் குடியரசுத் தலைவரின் (president) பெயரிலேயே நடைபெறுகின்றன. நம் அரசமைப்புச் சட்டப்படி குடியரசுத் தலைவரே நாட்டின் தலைவராகவும் முப்படைகளின் தலைவராகவும் விளங்குகிறார். எனவே, அந்தப் பதவியை அழியாத ஒரு நபராகச் சட்டம் கருதவேண்டியுள்ளது. ஒருவர் பதவியிலிருந்து விலகி, இன்னொருவர் பதவி ஏற்கும் வரையுள்ள இடைக்காலத்தில் அப்பதவி காலியாகிவிடுகிறது. அதாவது, மறைந்துவிடுகிறது என்றால், பல சிக்கல்கள் எழுகின்றன. எனவே, அப்பதவியைத் தொடர்ந்து நிலைத்திருக்கும் நபராகவே சட்டம் கொள்கிறது. இதைத் 'தனிநிலைக் கூட்டமைப்பு' (Corporation sole) என்பார்கள்.

அப்பதவிக்கு ஒருவர்பின் ஒருவராக வரும் அனைவரையும் கூட்டாக இணைத்து, அப்பதவியின் பெயரிலேயே, 'தனிநிலைக் கூட்டமைப்பு' நபரைச் சட்டம் புனைகின்றது. அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர் தொடர்ந்து இருக்கும் அப்பதவியில் அமர்கின்றார்.

'குடியரசுத் தலைவர்' என்றால் அதில் இரு நபர்கள் உள்ளனர். ஒருவர் அப்பதவியை ஏற்றுவகிக்கும் இயல்பான நபர் (Natural person) அவரே அப்பதவியின் பணிகளை ஆற்றுபவர். இவர்தான் நம் கண்களுக்குப் புலனாகின்றார். இன்னொரு நபர் நம் கண்களுக்குப் புலப்படாது சட்டத்தின் கண்களுக்கு மட்டுமே புலனாகும் சட்டப்புனைவு நபர். அவர்தான் உண்மையில் தலைவர் பதவியை வகிப்பவர்; தலைவர் என்ற பெயரையும் உடையவர். அவர் மாறுவதில்லை; மறைவதில்லை; அவருடைய பாகத்தை ஏற்றுத்தான் உயிருள்ள நபர் பதவியில் அமர்ந்து பணிகளைப் புரிகின்றார்.

'உயிருடன் பணியாற்றும் நபர் பதவிக்கு வரலாம், போகலாம். ஆனால், சட்டத்தின் தோன்றலான புனைவுநபர்

என்றும் மாறாதவர், மறையாதவர்'[1] என்கிறார் சால்மண்ட்.

இது போன்றதுதான் மாநிலங்களின் 'ஆளுநர்' பதவியும், பல்கலைக் கழகங்களின் 'துணைவேந்தர்' பதவியும்.

இவ்வாறு, சில பதவிகளைப் பொறுத்துச் சட்டம் 'தனிநிலைக் கூட்டமைப்பு' என்ற ஏற்பாட்டின்படி, அப் பதவியின் பெயரிலேயே ஒரு நபரைக் கற்பனையில் உருவாக்கி, அப்பதவிகளைத் தொடர்ந்து நிலைபெறச் செய்கின்றது. இவ்வாறு செய்வதால்தான், அந்தப் பதவியின் பெயரால் செய்யப்பட்ட காரியங்களும் ஒப்பந்தங்களும் இடையீடின்றி இயங்க ஏதுவாகின்றன.

ஒருவர் பின் ஒருவராக ஒரு பதவிக்கு வரும் பலரையும் இணைத்து அதில் ஒரு கற்பனை நபரைத் தோற்றுவிக்கும் முறையைத் 'தனிநிலைக் கூட்டமைப்பு' (Corporate sole) என்கிறோம். ஒரே சமயத்தில் இயங்கும் பலரைக் கூட்டாக இணைத்து அதில் கற்பனை நபரைத் தோற்றுவிப்பதை 'தொகுநிலைக் கூட்டமைப்பு' (Corporation Aggregate) என்கிறோம். கம்பெனி போன்றவை தொகுநிலைக் கூட்டமைப்பு.[2]

நம் நாட்டின் குடியரசுத்தலைவர் பதவியைப் போன்றே, இங்கிலாந்து நாட்டின் மன்னரையும் தனிக் கூட்டமைப்பு நபராகவே சட்டம் காண்கிறது. 'மன்னர்' என்றால் அப்பொழுது பட்டத்தில் இருப்பவரை மட்டுமே குறித்துவிடும் என்பதால், அந்தக் கற்பனை நபரை — Crown — ஆட்சிமுடி என்று குறிப்பிடுகின்றனர். ஆட்சிமுடியைத் தரிப்பவர்கள் தொடர்ந்து பலராக இருக்கலாம்; ஆனால், ஆட்சிமுடி என்பது தொடர்ந்து, இடையின்றி, நீடித்து, நிலைத்து நிற்பதாகிறது.

'கூட்டமைப்பு' என்பது சட்டத்தின் கற்பனை என்று சால்மண்ட் கூறுவதை கியர்க் (Gierke) போன்ற ஆசிரியர்கள் ஏற்பதில்லை. கூட்டமைப்பு என்பது உண்மையிலேயே ஒரு நபர்தான்; சிந்தனையும் செயலாற்றலும் உள்ள நபர்தான் என்கிறார் ஜெர்மானிய அறிஞர் கியர்க். இதை realistic theory என்கின்றனர்.

1 The living official comes and goes, but this offspring of the law remains the same for ever - Salmond.

2 A corporation aggregate is an incorporated group of co-existing persons, and a corporation sole is an incorporated series of successive persons - Salmond.

பலரைச் சுட்டுவதற்குப் பதிலாகச் சுருக்கமாகக் 'கூட்டமைப்பு' என்கிறோம். அது. ஒரு பட்டியலைக் குறிப்பதன்வழி பட்டியலில் உள்ள பெயர்களனைத்தையும் குறிப்பது போன்றது என்கிறார் ஐரிங் (Ihering). இதை Bracket theory என்பார்கள்.

'கூட்டமைப்பு' என்பதைக் கற்பனை நபராகக் கொண்டாலும், வேறு வகையில் அதைக் கண்டாலும், உண்மையில் அது சட்டம் கைக்கொள்ளும் ஓர் உத்தியேயாகும் (technique) அதாவது, பலர் சேர்ந்து பணம் போட்டு ஒரு தொழிலை நடத்துவது என்றால் எழும் சிக்கல்களைத் தீர்க்கும் வகையில், அந்த முயற்சியை ஒரு நபரின் முயற்சியாகக் கொண்டு, அந்த நபருக்கு உரிமை, கடமைகளை ஏற்றிச் சட்டம் வகுத்துள்ள உத்தியே 'கூட்டமைப்பு' என்ற முறையாகிறது.

சட்டவழிச் செயல்களால் எழும் உரிமைகள்

(Rights created by juristic acts)

['உரிமைமூலம்' என்றால் என்ன? — சட்டவழிச் செயலும், சட்டத்தின் செயலும் — ஒருதலைச் செயலும், உடன்படு செயலும் — உடன்பாடுகள் — உடன் பாட்டின் கூறுகள் உடன்பாட்டின் வகைகள்: ஒப்பந்தம், வழங்கடைவு, மாற்றடைவு, விடுப்படைவு — செல்லுறும் உடன்பாடு, செல்லுறாத உடன்பாடு — இல்லாநிலை உடன்பாடு, தனித்தகு உடன்பாடு — உடன்பாடு செல்லுறாமைக்குக் காரணங்கள் — தற்கால வளர்ச்சி]

'உரிமைமூலம்' என்றால் என்ன?

ஓர் உரிமை நமக்கு இருந்தால், அந்த உரிமை நமக்கு வந்த வழி ஒன்று இருக்கவேண்டும். உரிமை வந்த வழியை 'உரிமைமூலம்' (Title) என்று கூறுகின்றோம்.

ஒரு பொருளை நான் விலைக்கு வாங்குகிறேன். அதனால், அந்தப் பொருள் எனக்குச் சொந்தமாகிறது. எனக்கு அப்பொருள் மீதுள்ள சொத்துரிமை வந்த வழி, அதை நான் விலைக்கு வாங்கிய செயலாகும். அச்செயலே அந்தப் பொருள்மீது எனக்குள்ள சொத்துரிமைக்கு மூலமாக, காரணமாக இருக்கிறது. ஆகவே, நான் அப்பொருளை வாங்கிய செயல், 'உரிமை'மூலம்'. அச்செயலில் இருந்து பிறந்தது எனது சொத்துரிமை.

'உரிமைமூலம்' முன்னிகழ்வான செயல்; அதன் சட்ட விளைவு 'உரிமை'.[1]

நமது உயிர்மீது நமக்குள்ள உரிமை, புகழ்மீதுள்ள

[1] The title is the de facts antecedent of which the right is the de jure consequent - Salmond.

உரிமை, இவை போன்ற உரிமைகளை மனிதர்களாகப் பிறந்தவுடனேயே நாம் பெற்றுவிடுகிறோம். வேறு சில உரிமைகளை நாம் ஈட்டுகிறோம். இயல்பாய் எழும் உரிமைகளாயினும், ஈட்டப்படும் உரிமைகளாயினும் அவ்வுரிமைகளுக்கு மூலமான பொருண்மைகள் (facts) இருக்கின்றன.

பொருண்மைகள், செயல்களாக (acts) இருக்கலாம்; நிகழ்வுகளாகவும் (events) இருக்கலாம். மனித முயற்சியில் எழுவன 'செயல்கள்' மனித முயற்சியின்றி எழுவன 'நிகழ்வுகள்'.

உரிமைமூலங்கள் இருவகைப்படுவன: *(1)* முதல் உரிமைமூலம் (Original title); *(2)* மாறிய உரிமைமூலம் (Derivative title).

மீனவர் ஒருவர் கடலிலிருந்து மீன்களைப் பிடிக்கின்றார். அம்மீன்கள் அவருக்குச் சொந்தமாகின்றன. மீன்களைப் பிடித்த செயல் மீன்கள்மீதான உரிமைக்கு மூலமாக இருக்கிறது. இச் செயலை 'முதல் உரிமை மூலம்' (Original title) என்கின்றனர். ஏனெனில், முதன்முதலாக அந்த மீன்கள்மீது எழும் சொத்துரிமை அவற்றைப் பிடித்த மீனவருக்கே ஏற்படுகிறது. அதற்கு முன்னர் அவ்வுரிமை எவரிடமும் இருந்ததில்லை. ஆதலால், கடலிலிருந்து மீன்களைப் பிடித்த செயல் 'முதல் உரிமைமூலம்' ஆகும்.

அந்த மீனவரிடமிருந்து மீன்களை நான் விலைக்கு வாங்குகிறேன். அதனால், அவற்றின்மீதான சொத்துரிமை எனக்கு வருகிறது. எனது உரிமைக்கு மூலமான செயலை, அதாவது நான் மீனவரிடமிருந்து வாங்கிய செயலை, 'மாறிய உரிமைமூலம்' (Derivative title) என்பார்கள். ஏற்கனவே, அம் மீன்கள்மீதான சொத்துரிமை மீனவருக்கு ஏற்பட்டுவிட்டது. அந்தப் பழைய உரிமையைத்தான் அவரிடமிருந்து நான் பெறுகிறேன். நான் விலைகொடுத்து வாங்கியதால் அவரது உரிமை எனக்கு மாறுகின்றது. எனவே, நான் வாங்கிய செயலை 'மாறிய உரிமைமூலம்' என்கின்றனர்.

சட்டவழிச் செயலும் (acts in the law)

சட்டத்தின் செயலும் (acts of the law)

விற்றல், வாங்குதல், அளித்தல் ஆகிய செயல்களின் விளைவாகத்தான் உரிமைகள் தோன்றுகின்றன, மாறுகின்றன அல்லது மறைகின்றன.

இந்த உரிமைமூலச் செயல்களில் சில நம் இச்சைப்படி செய்யப்படுகின்றன; சில சட்டத்தின் விளைவாக நிகழ்கின்றன.

என் விருப்பத்தின்படி எனது பொருளை இன்னொருவருக்கு விற்றால், அது 'சட்டவழிச் செயலா'கிறது (acts in the law). என்மீது வழக்கிட்டுப் பெற்ற தீர்ப்பாணையை நிறைவேற்றும் வகையில் என் பொருளை இன்னொருவர் எடுத்துக் கொள்வது 'சட்டத்தின் செயலா'கிறது (act of the law)

ஓர் உரிமையை உண்டாக்கவோ மாற்றவோ அழிக்கவோ செய்யும் வகையில் தங்கள் இச்சையை அல்லது கருத்தை வெளிப்படுத்தி உடன்பாட்டின் தரப்பினர்கள் செய்து கொள்ளும் சட்டப்படியான ஒப்பந்தத்தைச் 'சட்டவழிச் செயல்' (act in the law) என்கிறார் சால்மண்ட்.

சம்பந்தப்பட்ட தரப்பினரின் இசைவு ஏதும் இன்றிச் சட்டத்தின் இயக்கத்தால் உரிமை உண்டாவதோ, மாறுவதோ, மறைவதோ ஏற்பட்டால், அது 'சட்டத்தின் செயல்' (act of the law) என்கிறார்.

ஒரு வீட்டை விற்கவேண்டுமெனில் அதை விற்பதற்கான ஏலுரிமை (Power) எனக்கு இருத்தல் வேண்டும். அந்த ஏலுரிமையைச் செயலுறுத்தியே நான் எனது வீட்டை விற்கிறேன். வீட்டை விற்கும் செயல் 'சட்டவழிச் செயல்' ஆகின்றது. எனவே, எனது விருப்பப்படி ஒரு சட்டவழிச் செயலை நான் செய்வது எனக்குள்ள ஏலுரிமையைச் செயலுறுத்துவதுதன் வாயிலாகத்தான்.

எனது ஏலுரிமையைச் செயலுறுத்தும்போதெல்லாம் எனக்கும் பிறருக்கும் இடையிலுள்ள சட்ட உறவிலே மாற்றம் நிகழ்கிறது; உரிமை மாறுகின்றது, அல்லது மறைகின்றது. எனவே ஏலுரிமைச் செயலுறுத்தம் ஒவ்வொன்றும் 'சட்டவழிச் செயல்' ஆகின்றது.

'சட்டவழிச் செயல்' என்பது சட்டப்படியான ஏலுரிமையைச் செயலுறுத்துவது ஆகிறது; சட்டப்படியான ஒரு ஏலுரிமையைச் செயலுறுத்துவது என்பது சட்டவழிச் செயல் ஆகிறது [1] – என்கிறார் சால்மண்ட்.

---

[1] Every act in the law is the exercise of a legal power, and the exercise of any legal power is an act in the law - Salmond.

ஒருதலைச் செயலும், உடன்படு செயலும்.

சட்டவழிச் செயல்களை இரண்டு வகைகளாகச் சட்டம் பிரிக்கின்றது.

ஒருவர் தமது சொத்தை இனனொருவருக்கு அளித்து விருப்பாவணம் (will) எழுதிவைக்கிறார். இது ஒருவராகவே தமது இச்சைப்படி செய்யும் செயல். இதை 'ஒருதலைச் செயல்' (unilateral act) என்பார்கள்.

குத்தகை, அடைமானம், வேறு ஒப்பந்தங்கள் இவையெல்லாம் இரண்டு அல்லது மேற்பட்ட நபர்கள் இசைந்து செய்யும் செயல்கள். எனவே, இச்செயல்களை 'உடன்படு செயல்கள்' (Bilateral acts) என்பார்கள்.

உடன்படு செயல்களைச் சட்டத்தில் 'உடன்பாடுகள்' (agreements) என்றும் கூறுவார்கள்.

உடன்பாடுகள் (Agreements)

இரண்டு அல்லது மேற்பட்ட பேர்கள் கருத்து ஒன்றி, ஒரு காரியத்தைக் குறித்து இசைந்தால், அப்பொழுது 'உடன்பாடு' (Agreement) பிறக்கின்றது.

பெரும்பாலும், மக்களுக்கு உரிமைகள் சேர்வதும், மாறுவதும், மறைவதும், உடன்பாடுகளின் வழியேதான நிகழ்கின்றன. சட்டமும் உடன்பாடுகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கின்றது.

உடன்பாட்டை உரிமையின் சான்றாக மட்டுமன்றி, உரிமைக்கு உயிரளிப்பதாகவும் சட்டம் காண்கிறது. மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் நலன்களை அறிந்தவர்கள்; அவற்றைப் பேணுவதிலும் கருத்துக் கொண்டவர்கள். எனவே, அவர்கள் மனநிறைவோடு தங்களுக்குள் செய்துகொள்ளும் உடன்பாடுகள் நியாயத்தை ஒட்டியே இருக்கும் . மேலும், ஒருவருக்கொருவர் இசைந்து செய்துகொண்ட உடன்பாடுகளின்படி காரியங்கள் நடக்கும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர். இந்த நியாயமான எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதில் சட்டம் கண்ணுங்கருத்துமாக இருக்கிறது. மக்கள் இசைந்து ஏற்றுக் கொண்டதை நிறைவேற்றுவதைவிடச் சிறந்த நீதி ஏது? எனவே, மக்களிடையே எழும் உடன்பாடுகளைப் புனிதமாகச் சட்டம் கருதுகிறது.

உடன்பாட்டின் கூறுகள்

இரண்டு அல்லது மேற்பட்ட நபர்கள் தங்கள் இடையுள்ள சட்ட உறவுகளைப் பாதிக்கும்படியான பொதுக்கருத்தை வெளிப் படுத்தி ஒருவருக்கொருவர் தெரிவித்துக் கொள்வதுதான் 'உடன்பாடு' (agreement) ஆகின்றது.[1]

உடன்பாட்டில் ஐந்து கூறுகள் உண்டு என்கிறார் ஆன்சன் (Anson) என்ற ஆசிரியர்:

1) குறைந்தது இருதரப்பினர் இருக்க வேண்டும்.
2) அவர்களிடை தெளிவான பொதுக் கருத்து (Common intention) இருக்க வேண்டும்.
3) அக்கருத்தை ஒருவருக்கொருவர் தெரிவித்திருக்க வேண்டும்.
4) அந்தப் பொதுக்கருத்து சட்ட உறவுகளைப் பாதிப் பதாக இருத்தல் வேண்டும்.
5) பாதிக்கப்படும் சட்ட உறவுகள் தரப்பினர்களைப் பொறுத்ததாக இருத்தல் வேண்டும்.

இத்தகைய உடன்பாடுகளின் பயனாக உரிமைகள் தோன்றலாம், மாறலாம், அல்லது மறையலாம்.

உடன்பாடுகளின் வகைகள்

உரிமைகளைத் தோற்றுவிக்கும் உடன்பாடுகள் இரு வகைப்படும்.

1. ஒப்பந்தம் (Contract)
2. வழங்கடைவு (grant)

தனிமுக உரிமைகளையோ (rights in personam) கடமை களையோ உண்டாக்கும் உடன்பாடுகளை 'ஒப்பந்தம்' (contract) என்பார்கள்.

குத்தகை, வசதியுரிமை, பதிப்புரிமை போன்ற பிறவகை உரிமைகளை உண்டாக்கும் உடன்பாடுகளை 'வழங்கடைவு' (grant) என்பார்கள். இவை பொதுமுக உரிமைகள் (rights in rem).

உரிமைகளை ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு மாற்றும் உடன்பாட்டை 'மாற்றடைவு' (Assignment) என்பார்கள்.

---

1 Agreement has been defined as the expression by two or more persons communicated each to the other of a common intention to affect the legal relation between them - G.W Paton.

உரிமைகளை அழிக்கும் இல்லது அறவுசெய்யும் உடன்பாட்டை 'விடுப்படைவு' (Release or Discharge or Currender) என்பார்கள்.

எனவே, உடன்பாடுகள் நான்குவகைப்படுவன:

1. ஒப்பந்தம் (contract)
2. வழங்கடைவு (Grant)
3. மாற்றடைவு (Assignment)
4. விடுப்படைவு (Release)

ஒப்பந்தம் (Contract)

'ஒப்பந்தம் என்பது தரப்பினர்களிடையே தனிமுக உரிமையைத் (right in personam) தோற்றுவிக்கும் கருத்துடன் எழும் உடன்பாடு'[1] — என்கிறார் சால்மண்ட்.

புதித்தாகத் தோற்றுவிக்கப்பட்ட தனிமுக உரிமையால் தரப்பினரிடையே ஒரு பந்தம் ஏற்படவேண்டும். இந்தச் சட்டப் பிணைப்பை இலத்தீன் மொழியில் ((Vinculum Juris) என்பார்கள். இவ்வாறு தரப்பினர்கள் தங்களிடையே ஒப்புதல் செய்து ஏற்றுக்கொண்ட 'பந்தம்'தான் 'ஒப்பந்தம்' (contract) என்பதின் சாரமாகும்.

தரப்பினர் ஒருவர் மறுதரப்பினருக்கு அளிக்கும் வாக்குறுதியே (Promise) ஒப்பந்த உரிமைக்கு ஆதாரமாகிறது.

ஆனால், அந்த வாக்குறுதி சட்டமுறையில் இருத்தல் வேண்டும். நாம் வாக்களிப்பதெல்லாம் 'ஒப்பந்தம்' ஆகிவிடுவதில்லை.

எனது நண்பர் தம் வீட்டிற்கு விருந்துண்ண வருமாறு என்னை அழைக்கின்றார். நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். இதை வைத்து எனக்கும் நண்பருக்கும் 'ஒப்பந்தம்' (contract) ஏற்பட்டுவிட்டது என்று கூற முடியாது. என்னை அவர் அழைத்ததும், நான் அதை ஏற்றுக் கொண்டதும், எங்களிடையே உரிமையோ கடமையோ ஏற்பட வேண்டும் என்ற எண்ணத்தில் செய்யப்பட்டதல்ல. என் நண்பரிடமிருந்து வாங்கிய கடனைத் திரும்பித் தருவதாக நான் வாக்களிக்கும்போது, அந்தக் கடனைத் திரும்பிப்பெறும் உரிமையை நண்பருக்கு ஏற்படுத்துவதாக நாங்கள் இருவரும் இசைகின்றோம். அதனால், கடனைச்

---

1 A contract is an agreement intended to create a right in personam between the contracting parties - Salmond

செலுத்தும் கடமை என்னைச் சேருகின்றது. இவ்வாறு, உரிமையும் கடமையும் தோற்றுவிக்கும் உடன்பாடுகளே 'ஒப்பந்தங்கள்' ஆகின்றன.

எனவே, வாக்குறுதி (promise) ஒவ்வொன்றும் ஒப்பந்தம் ஆவதில்லை. ஒன்றைச் செய்வதாகக் கூறும் வாக்குறுதியால் மட்டும் பயனில்லை; அதைச் செய்வது சட்டக் கடமை (legal duty) என்ற வாக்குறுதி வேண்டும். மற்றவர் அதைப் பெறுவது அவரது சட்டஉரிமை (legal right) என்பதும் தெளிவாக இருத்தல் வேண்டும். இவ்வாறு, சட்டக் கடமையும் சட்ட உரிமையும் ஏற்படும் வகையில் உருவாவதே 'ஒப்பந்தம்' ஆகின்றது.[1]

வழங்கடைவு, மாற்றடைவு, விடுப்படைவு போன்றவை களும் இத்தகைய கூறுகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

நம் வாழ்வில் ஒப்பந்தங்கள் மிக முக்கியமான பங்குபெறுகின்றன. உடன் பாடுகளிலிருந்து பிறந்தவையே நமக்குள்ள பல உரிமைகளும் கடமைகளும். விலைக்கு வாங்கிய ஒப்பந்தத்தால் நான் குடியிருக்கும் வீட்டின் மீதான சொத்துரிமை எனக்குக் கிடைக்கிறது. வங்கியில் நான் போட்டுவைத்துள்ள பணத்திற்கான வட்டி, அதற்கான ஒப்பந்தப்படி எனக்குக் கிடைக்கிறது. என்னிடம் கடன் வாங்கியவர் ஒப்பந்தப்படி எனக்குத் திருப்பித்தரக் கடமைப்பட்டிருக்கிறார். எனது வீட்டை அடைமானம்வைத்து நான் பெற்றிருக்கும் கடனை ஒப்பந்தப்படி நான் திருப்பிக் கொடுக்கும் கடமை எனக்கிருக்கிறது. இப்படியாக, பல உரிமைகளும் கடமைகளும் ஒப்பந்தங்களின் அடிப்படையில் தோன்றுகின்றன. எனவே, உடன்பாடுகள் (agreements) மிக முக்கியமான உரிமைமூலங்கள் (Titles) ஆகின்றன.

செல்லுறும் உடன்பாடு, செல்லுறாத உடன்பாடு, இல்லாநிலை உடன்பாடு, தவிர்தகு உடன்பாடு.

சட்டப்படியான பயனுறுதியின் (legal efficacy) அடிப்படையில் உடன்பாடுகள் மூன்று வகைப்படுவன:

உடன்பாடு செய்துகொண்ட நபர்களின் கருத்துப்படி முழுமையாகச் செயற்படும் உடன்பாட்டை 'செல்லுறும் உடன்பாடு' (Valid agreement) என்பார்கள். சட்டம் இத்தகைய

1 To constitute a contract there must be not merely a promise to do a certain act, but a promise. express or implied. to do this act as a legal duty - Salmond

உடன்பாடுகளைச் செல்லுறுத்துகிறது (enforce).

சட்டத்தால் ஏற்கப்படாததும், தரப்பினரால் உடன் பாட்டில் கூறப்பட்ட இச்சை (will) சட்டப் பயனுறுதி இல்லாததும் ஆன உடன்பாடு 'இல்லாநிலை உடன்பாடு' (void agreement) எனப்படும்.

இந்த இருவகை உடன்பாடுகளுக்கும் இடையில் உள்ளது 'தவிர்தகு உடன்பாடு' (avoidable agreement) என்பது. உடன் பாட்டில் உள்ள குறைபாடு காரணமாக, தரப்பினர் எவரும் அந்த உடன்பாட்டைப் புறக்கணித்து நீக்கலாம். அவ்வாறு நீக்கம் (cancel) செய்யப்பட்டவுடன், அந்த உடன்பாடு தொடக்கத்தில் இருந்தே இல்லாநிலையில் இருந்ததாகக் கொள்ளப்படுகிறது. எனவே, 'தவிர்தகு உடன்பாடு' என்பது தரப்பினர் ஒருவரின் விருப்பப்படி செல்லுறுவதாகலாம் அல்லது இல்லாநிலையது ஆகலாம்.

தவிர்தகு உடன்பாடுகளும் இல்லாநிலை உடன்பாடு களும் 'செல்லுறாத உடன்பாடுகள்' (Invalid agreements) என்று குறிக்கப்பெறுகின்றன.

உடன்பாடுகள் செல்லுறாமல் போவதற்கான காரணங்கள் ஆறு வகையாவன:

1) திறன்இன்மை (Incapacity)
2) வினைமுறை இன்மை (Informality)
3) சட்டமுரண்பாடு (Illegality)
4) தவறு (Error)
5) வல்லந்தம் (Coercion)
6) எதிர்பயன் இன்மை (want of consideration)

1. திறனின்மை (Incapacity)

வயது வராதவர்கள், மனநலம் இல்லாதவர்கள் இவர் களால் தங்கள் நலன் எது என்பதை அறிய முடிவதில்லை. அவர்கள் இசைந்து ஒன்றை ஏற்றுக் கொண்டாலும் அது அவர்கள் நலனுக்கு உகந்தது என்று கொள்வதற்கில்லை. எனவே, சிந்தனைத்திறன் போதுமான அளவு இல்லாத இவர்கள் பிறருடன் செய்துகொள்ளும் உடன்பாடுகளைச் சட்டம் ஏற்பதில்லை. அவை செல்லுறாத ஒப்பந்தங்கள் ஆகின்றன.

2. வினைமுறையின்மை (Informality)

சில உடன்பாடுகளின் உண்மைத்தன்மையினை உறுதி செய்யும் வகையில் சட்டம் சில வரையறைகளை வகுத்துள்ளது. நூறுரூபாய் மதிப்பிற்கு மேற்பட்ட ஒரு நிலைபொருளை (immovable property) விற்பது என்றால், அது முத்திரைக் காகிதத்தில் எழுதப்பெறவேண்டும்; பதிவு (register) செய்யப் படவேண்டும். சில உடன்பாடுகள் சான்றாளர்கள் முன் கையெழுத்திடப்பட வேண்டும். நன்கொடை உடன்பாட்டில் அளிக்கப்படும் பொருளின் உடைமை, கொடையினைப் பெறுவோர்க்கு மாற்றப்பட வேண்டும். இத்தகைய வினை முறைகளைச் (formalities) சட்டம் வகுத்துள்ளது. இந்த வினைமுறைகளைப் புறக்கணித்துச் செய்யப்பெறும் உடன் பாடுகள் சட்டப்படி செல்லுறாதவை ஆகின்றன.

வினைமுறைகளைச் சட்டம் விதிப்பதன் காரணம், முக்கியமான சொத்துரிமைகள் மாற்றப்படும்பொழுது அது பற்றிச் சம்பந்தப்பட்டவர்கள் தீரச் சிந்தித்து, தெளிவான முறையில் எவருக்கும் தெரியும்படியாகச் செயலாற்ற வேண்டும் என்பதுதான். அப்பொழுதுதான் உடன்பாடு செய்து கொண்டவர்களின் சம்மதம் சரியானது, இசைவு ஏற்றுக் கொள்ளத்தக்கது எனச் சட்டம் கருதுகிறது.

3. சட்டமுரண்பாடு (Illegality)

மக்கள் எதைக்குறித்தும் உடன்பாடு செய்துகொள்ளலாம் என்றாலும், உடன்பாட்டின் நோக்கம் சட்டத்திற்கு முரண் பட்டதாக இருத்தல் கூடாது.

குறிப்பிட்ட ஒருவரைக் கொலை செய்தால், கொலை செய்தவருக்குப் பத்தாயிரம் ரூபாய் தருவதாக ஓர் உடன்பாடு செய்துகொள்ளப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். இதனைச் சட்டம் செல்லுறுத்துதல் தகாது . அல்லவா? செல்லுறுத்தினால் கொலைக் குற்றத்திற்குச் சட்டம் துணை நிற்பதாக அல்லவா ஆகிவிடும்! 'சட்டமுரண் உடன்பாட்டைச் சார்ந்து எழாது வழக்குரிமை' — என்பது இலத்தீனிலுள்ள விதிமொழியாகும் (ex pacto illicito non oritur actio)

எனவே, சட்டமுரணான அல்லது சட்ட இசைவற்ற செயல்களைக் குறித்த உடன்பாடுகளைச் சட்டம் செல் லுறாதவையாகக் கொள்கின்றது.

4. தவறு (Error)

சில வேளைகளில் உடன்பாடு செய்துகொள்வோர் அடிப்படைத் தவறுகளுக்கு ஆளாவதுண்டு.

விற்பவர் தமக்குச் சொந்தமான குறிப்பிட்ட ஒரு வீட்டை விற்பதாக எண்ணுகிறார். ஆனால், வாங்குபவர் விற்பவருக்குச் சொந்தமான வேறொரு வீட்டை வாங்குவதாக எண்ணிக் கொள்கின்றார். இந்நிலையில் விற்பனை உடன்பாடு ஏற்படு கின்றது என்றால், சட்டம் இதைச் செல்லுறுத்துவதில்லை.

விற்பனை ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள வீட்டை, ஒருவர் ஒன்றாகவும் மற்றொருவர் வேறொன்றாகவும் கருதும் நிலையில், விற்பவருக்கும் வாங்குபவருக்கும் உண்மையான இசைவு இல்லை என்பது தெளிவு. எனவே, இது செல்லுறாத ஒப்பந்தம் ஆகின்றது.

இவ்வாறு நேரும் பிழை ஒருவருடைய கவனக் குறைவால் நேர்ந்தால் அதைச் சட்டம் மன்னிப்பதில்லை. போதிய கவனம் செலுத்தியும் புகுந்துவிட்ட பிழைகள் தான் உடன்பாட்டைப் பாதிக்கின்றன.

ஆனால், அற்பமான பிழைகளால் உடன்பாடு பாதிக்கப் பெறுவதில்லை. அந்தப் பிழை ஒப்பந்தத்திற்கான பொருளையே குறித்தபிழையாக, ஒப்பந்தத்தின் தன்மையினையே பொறுத்த அடிப்படைப் பிழையாக, இருந்தால் மட்டுமே உடன்பாடு உலைகிறது.

தவறாக நினைத்தல் ஒன்று, ஒருவரைத் தவறாக நினைக்கும்படி தூண்டுதல் அல்லது ஏமாற்றுதல் வேறொன்று, உடன்பாட்டுத் தரப்பினர் ஒருவர் மறுதரப்பினரை ஏமாற்றி, அதனால் ஏமாற்றப்பட்டவர் ஒப்பந்தத்தம் குறித்துத் தவறாக ஒன்றைப் புரிந்துகொள்ளுகின்றார் என்று வைப்போம். இந்தத் தவறு அடிப்படைத் தவறாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஏமாற்றப்பட்டவர் அந்த ஒப்பந்தத்தைத் தவிர்க்கலாம் எனச் சட்டம் விதிக்கின்றது.

5. வல்லந்தம் (Coercion)

ஓர் உடன்பாட்டில் தரப்பினர்களின் இசைவு தன்னிச் சையில் எழுந்ததாக இருத்தல் வேண்டும். இல்லையெனில் அது உண்மையான இசைவு ஆவதில்லை.

ஒருவர் மற்றொருவரை அச்சுறுத்தி அல்லது ஆசைகாட்டி அவரது இசைவைப் பெற்று அவருடன் உடன்பாடு செய்து கொள்ளுகிறார் என்றால் அது உண்மையான உடன்பாடு அன்று. எனவே, சட்டம் அத்தகைய உடன்பாட்டைச் செல்லுறாத உடன்பாடெனக் கொள்ளுகிறது.

6. எதிர்பயன் இன்மை (want of consideration)

ஒப்பந்தங்களைப் (contracts) பொறுத்தவரை எதிர்பயன் (consideration) என்பது இன்றியமையாததொன்றாகும்.

ஒருவர் தம்மை ஓர் ஒப்பந்தத்திற்கு உட்படுத்திக் கொள்ளுகிறார் என்றால், அதற்கு ஒரு காரணம், நோக்கம், தூண்டுதல் இருக்க வேண்டும். ஒரு பயனை எதிர்நோக்கித்தான் ஒருவர் உடன்பாட்டில் இறங்குகிறார். என் வீட்டை விற்கிறேன் என்றால் அதன் விலைப் பணம் நான் எதிர்பார்க்கும் பயனாகும். என் வீட்டை என் மகள் பெயருக்கு எழுதிவைக்கிறேன் என்றால், என் மகள் மீதுள்ள இயல்பான அன்பும் ஆர்வப்பற்றும் அதற்குத் தூண்டுகோலாகின்றன.

இவ்வாறு, ஓர் உடன்பாட்டிற்குக் காரணமாக அல்லது தூண்டுதலாக உள்ளதை அந்த உடன்பாட்டிற்கான 'எதிர்பயன்' (consideration) என்பார்கள்.

ஒருவர் மற்றொருவருக்கு ஒரு வாக்குறுதி (promise) அளிக்கிறார் என்றால், அந்த வாக்குறுதிக்குப் பதிலாக மற்றவர் ஒன்றைச் செய்திருக்க வேண்டும்; அல்லது செய்யாது இருந்திருக்க வேண்டும்; அல்லது அதைச் செய்வதாகவோ செய்யாதிருப்பதாகவோ வாக்குறுதி அளிக்க வேண்டும். இவ்வாறு, ஒரு வாக்குறுதிக்குப் பதிலாகச் செய்யப்படுவதை 'எதிர்பயன்' என்கிறோம்.

உடன்பாட்டிற்கான 'எதிர்பயன்' சரியானதா, போதுமானதா என்பதைச் சட்டம்தான் தீர்மானிக்கின்றது. எதிர்பயன் என்றால் அது ஏதோ ஒரு மதிப்பமைவு (value) பெற்றதாக இருத்தல் வேண்டும் எனச் சட்டம் கருதுகிறது. உடன்பாட்டின் தரப்பினர்கள் எதிர்பயன் சரியானது என்று கருதினாலும் சட்டம் அதை ஏற்பதில்லை. செல்லுறும் எதிர்பயனாகக் கொள்ளத்தக்க பொருண்மைகள் (facts) எவை என்பதைச் சட்டம் வரையறுக்கின்றது. வேறு பொருண்மைகளை எதிர்பயனுக்கு ஏற்றதாகச் சட்டம் கொள்வதில்லை.

'மறுபயனில்லாத ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழக்கிட இயலாது' என்பது இலத்தீன் விதி மொழியாகும். (Ex nudo pacto non oritur actio)

'நான் இதை உனக்குச் செய்கிறேன்; இதற்கு எதிர்பயனாக நீ இன்னதைச் செய்யவேண்டும்' என்ற முறையில் அமைவதே சட்டப்படியாகச் செல்லுறும் ஒப்பந்தமாகிறது.

விதிவிலக்காக, சில சூழல்களில் மதிப்பமைவு இல்லாதவற்றையும் ஏற்கப்படத்தக்க எதிர்பயனாகச் சட்டம் கொள்ளுகிறது. ஏற்கனவே இருக்கும் சட்டக் கடப்பாடு ஒன்றை நிறைவேற்றுவதாக அளிக்கும் வாக்குறுதியைச் சட்டம் செல்லுறுத்துகிறது. காரணம், அந்த சட்டக் கடப்பாட்டை வாக்குறுதிக்கு எதிர்பயனாகச் சட்டம் கொள்ளுகிறது.

இங்கிலாந்து நாட்டுச் சட்டத்தில், முத்திரையுடன் உள்ள ஆவணம் வினைமுறைப்படி ஆக்கப்பட்டிருந்தால் அதற்கு எதிர்பயன் தேவை இல்லை எனச் சட்டம் விதிக்கின்றது.

ஐரோப்பிய நாட்டுச் சட்டங்கள், உடன்பாட்டில் தரப்பினர்களை இயக்கிய நோக்கம் அல்லது தூண்டுதல் எதுவாக இருந்தாலும் அதையே போதுமான எதிர்பயனாகக் கொள்கின்றன.

இவ்வாறு, ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் சட்டப்படி போதுமான எதிர்பயன் உள்ளதா என்பதைச் சட்டம் பார்த்து, அவ்வாறு எதிர்பயன் உள்ள ஒப்பந்தங்களை மட்டுமே செல்லுறுத்துகிறது.

ஒப்பந்தங்களின் செல்லுறுமை (validity) பற்றி இந்திய ஒப்பந்தச் சட்டம் (Indian Contract Act) விரிவாகக் கூறுகின்றது.

தற்கால வளர்ச்சிகள் (Modern developments)

ஒப்பந்தம் என்பது தரப்பினர்களின் தன்னிச்சையால் எழும் உடன்பாடுகள் என்றாலும், தற்காலத்தில் தரப்பினர்களின் இச்சைகள் செயல்படுவதில் சட்டம் குறுக்கிடுகிறது.

பொருளாதார நிலையில் நலிந்த மக்களின் நலனைக் காக்கவும், நாட்டின் தொழில் வளர்ச்சியில் ஏற்படும் இன்னல்களை அகற்றவும் அரசு முனையும் போது, ஒப்பந்தம் குறித்து

தரப்பினர்களுக்கு உள்ள தன்னுரிமை பாதிக்கப்படுகின்றது. மேல்நிலையில் உள்ளவர்கள் நலிந்திருப்போரைக் கட்டுறுத்தி நடுநிலையற்ற ஒப்பந்தங்களைச் செய்துகொள்கின்றனர். இந்நிலையில் சட்டம் குறுக்கிடுவது இன்றியமையாதது ஆகின்றது.

மக்களிடை எழும் ஒப்பந்தங்களில் அரசு தலையிடுவது உகந்ததா அல்லவா என்பதைச் சமுதாய, பொருளாதாரத் தத்துவவாதிகள் முடிவுசெய்யலாம். ஆனால், அத்தகைய தலையீடு இல்லையெனில், பொருளாதார நிலையில் நலிந்த மக்கள் மேலும் நசுக்கப்படுகின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

உரிமை என்ற பெயரால் மக்கள் செயற்படும்போது, சில நேர்வுகளில் அந்த உரிமைக்கே ஆபத்து விளைகிறது; உரிமையில் குறுக்கீடாகத் தோன்றும் செயல்கள் அந்த உரிமையினைக் காக்கும் அரண்களாக அப்பொழுது அமைகின்றன.

எனவே சட்டம் எதிர்கால ஒப்பந்தங்களை மட்டும் அன்றி, ஏற்கனவே செய்துகொண்ட ஒப்பந்தங்களையும் பாதிக்கும் வகையில் தற்காலத்தில் இயங்குகிறது.

நம் நாட்டிலே நிலவும் வட்டிக் கட்டுப்பாடு சட்டங்கள், நலிந்தோர் கடன் ஒழிப்புச் சட்டங்கள், வாடகைக் கட்டுப்பாடு சட்டங்கள் போன்றவை மக்களுக்குள்ள ஒப்பந்த உரிமைகளில் குறுக்கிட்டாலும் சமுதாய நலன் என்ற பெருநோக்குடன் இயங்குகின்றன.

சட்டத்தால் எழும் உரிமைகள்

(Rights directly created by Law)

[உரிமைத் தீங்கு — கவனமின்மை — தற்கவனமின்மை — கடும் பொறுப்பு — பகரப் பொறுப்படைவு — தீங்கு ஆகாத கேடுகள் — உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்துதல் — கொள்நிலை ஒப்பந்தம் — முறையற்ற பொருளடைவு — 'தீங்கியல் சட்டத்தின்' வளர்ச்சி — உரிமைகள் தீர்வுறுதல்.]

'உரிமைத் தீங்கு'

உடன்பாடு, (ஒப்பந்தம்) போன்ற சட்டவழிச் செயல்களால் (acts in the law) எழும் உரிமைகளைக் கண்டோம். இனி, சட்டத்தால் நேரடியாக எழும் (acts of the law) உரிமைகள் பற்றி இங்குக் காணலாம்.

சில வேளைகளில், ஒருவர் தமக்கு உற்ற கடமைகளைப் புறக்கணித்துவிட்டுச் செயலாற்றுவதால், பிறரது உரிமைக்கு ஊறு (injury) விளைகின்றது. பிறரது உரிமை சட்டத்தால் எழுவதாகும். எவருடைய உரிமைக்கு ஊறு விளைக்கப்பட்டதோ அவருக்கு ஊறு விளைத்தவர் இழப்பீடு தரவேண்டும் என்று சட்டம் விதிக்கின்றது.

உரிமைக்கு விளைக்கப்பட்ட தீங்கு, 'உரிமைத் தீங்கு' (Tort) எனப்படும் இத்தீங்கால் விளைந்த கேட்டிற்கு ஈடுசெய்யும் வகையில் செலுத்தப்படும் தொகையை 'இழப்பீடு' (damages) என்பார்கள். இது பற்றிய சட்டம் 'தீங்கியல் சட்டம்' (The Law of Torts) ஆகும்.

உரிமைத்தீங்கு (civil wrong) என்பதைத் 'தீங்கு' என்றே சுருக்கிக் குறிப்பிடலாம்.

எனது புகழ் பிறரால் மாசுபடுத்தப்படக்கூடாது என்ற வகையில் எனக்கு என் புகழைப் பொறுத்த உரிமை உண்டு. என் புகழுக்குப் புன்மை சேர்க்கும் வகையில் பிறர் அவதூறு இழைத்தால், அவ்வாறு அவதூறு இழைத்தவர் தாம் இழைத்த தீங்கிற்கு ஈடு செய்யவேண்டும் என்பது தீங்கியல் சட்டவிதி.

என் புகழ்மீதான எனது உரிமைக்கு எவருமே கேடு விளைத்தல் கூடாது. எனவே அந்த உரிமை 'பொதுமுக உரிமை' (right in rem) ஆகும். இதற்குத் தீங்கு விளைத்தவர் இழப்பீடு செலுத்தும் பொறுப்படைவுக்கு உட்படுகின்றார்.

எனவே, 'தீங்கு' (Tort) என்பது பொதுமுக உரிமைக்கு ஊறுவிளைக்கும் தீங்குச் செயலாகும்; அதற்கான தீர்வழி (remedy) இழப்பீடு பெறுவது. இவ்வாறு, தீங்கு என்பதற்கு இலக்கணம் கூறுவதுண்டு.[1]

சட்டவழிச் செயலான ஓர் ஒப்பந்தம் மீறப்பட்டால், அதற்கான இழப்பீடு ஒப்பந்தத்திலே கூறப்பட்டிருக்கலாம். ஆனால், இங்கு மீறப்படும் உரிமை ஒப்பந்தத்தால் எழுந்தது அன்று. எனவே, இழப்பீடு வரையறை செய்யப்படாததாகும்.

'உரிமைத் தீங்கால் எழும் பொறுப்படைவு சட்டத்தால் குறிக்கப்பட்ட கடமையை மீறியதால் எழுவதாகும். இதற்கான தீர்வழி அறுதியிடப்படாத இழப்பீடு பெறுவதாகும்' — இவ்வாறு உரிமைத்தீங்கை விளக்குகின்றார் ஆசிரியர் வின்ஃபீல்டு (Winfield) என்பார்.

குற்றவழக்கில் குற்றவாளியைத் தண்டிப்பதே குறிக்கோளாகும். தீங்கியல் வழக்கில் தீங்கு இழைத்தவர் தீங்கு இழைக்கப்பட்டவருக்கு இழப்பீடு செலுத்த வேண்டும் என்பதே குறிக்கோளாகும்.

ஒரு மனிதனுடைய உடல், பொருள், புகழ் இவற்றுக்குப் பிறர் செயலால் கேடு நேராமல் பாதுகாப்பதே தீங்கியல் சட்டத்தின் நோக்கம்.

இவ்வாறு விளையும் கேடு வேண்டுமென்றே செய்யப் படலாம்; கவனமின்மையாலும் செய்யப்படலாம். இரு நேர்வுகளிலும் கேடு விளைத்தவர் பொறுப்பாகின்றார்.

---

[1] The simplest definition of tort in English law is that it is a civil wrong which infringes a right in rem and is remediable by an action for damages - Paton.

கவனமின்மை (Negligence)

'ஒரு காரியத்தைப் பொறுத்து, நேரறிவுள்ள மனிதன் எதைச் செய்வானோ அதைச் செய்யாதிருத்தலும், எதைச் செய்யமாட்டானோ அதைச் செய்தலும் 'கவனமின்மை' ஆகின்றது.

'குற்றப் பொறுப்படைவு' என்ற தலைப்பில் கவனமின்மை, கவனமின்மையில் தரநிலை, இவை பற்றிக் கூறப்பட்டுள்ளது அனைத்தும் தீங்கியல் சட்டத்திற்கும் பொருந்துவதாகும்.

கவனமின்மை காரணமாகப் பிறருக்குத் தீங்கு இழைத்தவர் அதற்கான இழப்பீட்டைச் செலுத்தும் பொறுப்படைவுக்கு உள்ளாகின்றார்.

திறமைமிக்க தொழில் நடத்துவோர்கள்கூட தங்கள் திறக்குறைவால் பிறருக்குக் கேடுவிளைத்தால் அதற்கான பொறுப்பு அவர்களைச் சேருகின்றது.

நோயுள்ளோர்களைச் சிகிச்சைசெய்யும் வைத்தியர்கள் தகுந்த கவனத்துடன் தொழிலாற்ற வேண்டும். தக்க திறமை யின்றிச் சிகிச்சை செய்தோ கவனமின்றிச் செய்தோ நோயாளிக்குக் கேடு விளைத்தால் அதற்கான பொறுப்படைவு வைத்தியரைச் சேருகின்றது. போதிய திறமையின்றிச் சிகிச்சை செய்யத் துணிந்தது அவரது கவனமின்மையான செயலாகின்றது; அதனால் விளையும் கேட்டிற்கான பொறுப்படைவு அவரைச் சேருகின்றது.

நல்ல வைத்தியராகவோ திறமையான வழக்கறிஞராகவோ ஒருவர் இருக்கவேண்டும் என்று சட்டம் விதிக்கவில்லை. ஆனால், அத்தொழிலில் போதுமான திறமை இருந்தாலன்றி வைத்திய ராகவோ வழக்கறிஞராகவோ பணிபுரிதல் ஆகாது. அது கவனமின்மைச் செயல் என்கிறது சட்டம்.[1]

தற்கவனமின்மை (Contributory negligence)

பிறருடைய கவனமின்மைச் செயலால் நமக்குக் கேடு

1 No man is bound in law to be a good surgeon or a capable attorney, but all men are bound not to act as surgeons or attorneys until and unless they are good and capable as such - Salmond

விளைகிறது; ஆனால், நாம் தக்க கவனத்துடன் இருந்திருந்தால் அந்தக் கேட்டைத் தவிர்த்திருக்கலாம் என்ற நிலை எழுவதுண்டு. அந்நிலையில் நாம் தக்க கவனத்துடன் நடக்காமல் இருப்பது 'தற்கவனமின்மை' (contributory negligence) ஆகின்றது.

'தற்கவனமின்மை' என்பது பிறருடைய கவனமின்மைக்கு ஏதுவாக நாமும் கவனமின்றி நடந்து கொள்வதாகும். எனவே, நமக்கு விளைந்த கேட்டிற்குக் காரணம் இருவருடைய கவன மின்மையுமாகும். தற்கவனமின்றி நடந்து கொண்டதால் தீங் குற்றவர் அதற்கான இழப்பீட்டை முழு அளவில் பெறுவதில்லை.

வீதியில் நடந்து செல்லும் ஒருவர் திடீரென்று குறுக்கே ஓடுகின்றார்; அதனால், வேகமாக வந்த காரில் அடிபட்டுக் காயமுறுகின்றார். கார் வேகமாக வந்தாலும், அடிபட்டவர் வீதியின் குறுக்கே திடீரென்று பாய்ந்து செல்லவில்லை என்றால் விபத்து நேர்ந்திருக்காது. எனவே, காரில் அடிபட்டவரின் தற்கவனமின்மையும் அவருக்கு விளைந்த தீங்கிற்குக் காரணமாகச் சட்டம் கொள்கிறது.

கடும் பொறுப்படைவு (Absolute Liability)

தீங்கியல் சட்டத்தைப் பொறுத்தவரை சில நேர்வுகளில் 'வரம்பற்ற பொறுப்படைவு' (absolute - Strict - liability) எழுகின்றது.

தப்பிச் சென்றால் பிறருக்குக் கேடுவிளைவிக்கும் தன்மை யுடைய பொருளையோ, விலங்கையோ தம் நிலச் சொத்தில் வைத்திருப்பவர், அப்பொருளால் பிறருக்கு விளையும் கேடுகளுக்கும் பொறுப்பாகின்றார். (Packard vs Smith) தாம் மிகக் கவனமாக இருந்ததாகவும், அப்பொருளோ விலங்கோ தப்பிச்சென்றது தவிர்க்க முடியாதது என்றும் கூறி எதிர்வாதி வாதிட முடியாது. ஏனெனில், ஆபத்தான பொருளை அல்லது விலங்கைத் தம் நிலச்சொத்தில் வைத்திருப்போரது பொறுப்பு வரம்பற்ற கடும் பொறுப்பாகும் (absolute strict liability)

தம் நிலத்தில் பெரிய அளவில் நீரைத் தேக்கி வைத்திருந்தார் ஒருவர். தடுப்புச் சுவர்களை உடைத்துக்கொண்டு நீர் அடுத்தவர் நிலத்தில் புகுந்து சேதம் விளைத்தது. இதற்கு நீரைத் தேக்கி வைத்திருந்தவர் பொறுப்புடையவர், அவர் இழப்பீடு

செலுத்தக் கடமைப் பட்டவர் என்பது புகழ்பெற்ற தீர்ப்பு (Rylands vs. Fletcher)

இம்மாதிரியே, ஒருவரது ஆடுமாடுகள் பிறர் நிலத்தில் புகுந்து சேதம் விளைத்தால், அதற்கான பொறுப்படைவு அவரைச் சேருகிறது. இத்தகைய பொறுப்பு 'கடும் பொறுப் படைவு' எனப்படும்.

பகரப் பொறுப்படைவு (Vicarious Liability)

குற்றஇயல் சட்டத்தில் குற்றம் இழைத்தவரே தண்டனைக்கு உள்ளாகின்றார்; வேறு எவரும் உள்ளாவதில்லை. ஆனால், தீங்கியல் சட்டத்தில், சில நேர்வுகளில், ஒருவர் செயலுக்கான பொறுப்பு வேறொருவரையும் சேர்கின்றது.

வேலையாள் (Servant) செய்த தீங்கிற்கான பொறுப்படைவு அந்த வேலையாளின் மேலவரைச் (Master) சேர்கின்றது.

ஒருவர், தாம் செய்யவேண்டிய வேலைகளைத்தான் தமது வேலையாள் மூலமாகச் செய்கின்றார்.

வேலையாள் செயலாற்றுவதும் மேலவரின் நெறியுறுத்தப் (directions) படியேயாகும்.

ஆதலால், வேலையாளின் செயல்கள் மேலவரின் செயல்களே ஆகின்றன. வேலையாளின் பணிச் செயல்களால் பயன்பெறும் மேலவர் பணிச் செயல்களால் விளையும் தீமைகளுக்கும் பொறுப்பேற்க வேண்டும் என்கிறது சட்டம்.

'பிறர் மூலம் செயல்புரிவோர், தாமே செய்தவர் ஆவார்' — என்பது இலத்தீன் விதிமொழி.

(Qui facit per alium facit per se.)

பணியாளர் செயலுக்குப் பணித்தவர் பொறுப்பாவதைச் சுருக்கமாக இலத்தீனில் 'மேலவர் பொறுப்பாகுக' (Respondeat Superior) என்பார்கள்.

போதுமான கவனமின்றி வேலையாள காரை ஓட்டியதால், ஒருவர் மீது கார் மோதி அவரது கால் ஒடிந்து விடுகிறது. இப்பொழுது, காரை ஓட்டிய வேலையாள் கவனமின்றிக் காரை ஓட்டிய குற்றத்திற்கான தண்டணைக்கு உள்ளாகின்றார். ஆனால், கால் ஒடிந்தவருக்கு ஏற்பட்ட தீங்கிற்கு ஈடுசெய்யும் பொறுப்பு காரை ஓட்டியவரையும் அவர் மேலவரையும் சேர்கின்றது.

வேலையாளின் கவனக் குறைவால் (negligence) விளைந்த தீங்கிற்கு மேலவரும் பொறுப்பாக்கப்படுகின்றார். இவ்வாறு, பணியாளரின் செயலுக்கும், பணித்தவர்மீது எழும் பொறுபபைப் 'பகரப் பொறுப்படைவு' (Vicarious Liability) என்பார்கள்.

வேலையாள் எந்தப் பணியைச் செய்வதற்கென்று உள்ளாரோ அந்தப் பணியை ஆற்றும்பொழுது எழும் தீங்குகளுக்கே மேலவர் பொறுப்பாகின்றார். தோட்டக்காரனாக உள்ள வேலையாள், மேலவருக்குத் தெரியாமல் அவரது காரை ஓட்டிச் சென்று பிறர்மீது மோதிவிட்டால், அதற்கு மேலவர் பொறுப்பாவதில்லை. பணிக்கப்பட்ட செயலைப் பணியாளர் செய்கையில் எழும் விளைவுகளுக்குத்தான் பணித்தவர் பொறுப்பாகின்றார்.

பணியாற்றும் முறையைப் பணித்தவர் வகுத்திருக்கலாம்; அந்த முறையை மீறிப் பணியாளர் செயற்பட்டிருக்கலாம். அப்பொழுதும் பணித்தவருக்கு உள்ள பொறுப்பு நீங்குவதில்லை. 'நான் இவ்வளவு வேகத்திற்கு மேல் காரை ஓட்டக்கூடாது என்று பணிந்திருந்தேன். ஆனால், என் பணியாளர் அதை மீறி அதிக வேகத்தில் ஓட்டியதால்தான் பிறர் மீது மோதிவிட்டார். எனவே, நான் அதற்குப் பொறுப்பில்லை' என்று மேலவர் வாதிட முடியாது.

பணித்த செயலைப் பணியாளர் ஆற்றுகையில் எழும் விளைவுகளுக்குப் பணித்தவர் பொறுப்பாகின்றார் என்ற சட்ட நெறி நேர்மை நெறியை ஒட்டியதே ஆகும்.

பிறருக்கு இழப்பீடு (compensation) வழங்கும் சக்தி இல்லாதவர்களாகவே பணியாளர்கள் உள்ளனர். பணித்தவரை இவ்வாறு சட்டம் பொறுப்பாக்காவிடில், பணியாளர்களால் விளைக்கப்படும் கேடுகளுக்குப் பிறர் இழப்பீடு பெறுவது இயலாததாகி விடும்.

சாலைப் போக்குவரத்தில் ஏற்படும் பல விபத்துக்களால் தீங்குற்றவர்களுக்கு நீதிமன்றங்கள் இழப்பீடு வழங்குவது மேலே கண்ட விதிமுறையின் கீழ்த்தான்.

தீங்கு ஆகாத கேடுகள் (Damnum sine injuria)

பொதுவாக, எல்லாத் தீங்குகளும் கேடுபயப்பன என்றாலும், கேடுபயக்கும் செயல்களையெல்லாம் தீங்குகளாகச் சட்டம் கொள்வதில்லை.

சில நேர்வுகளில் ஒருவர் பிறருக்கு வேண்டுமென்றே கேடு விளைக்கலாம். ஆயினும், சட்டம் அச்செயலைத் தீங்கானதாகக் கொள்வதில்லை. இச்செயலைத் 'தீங்கு ஆகாத கேடுகள்' (Damnum sine injuria) என்பார்கள்.

ஒருவர் ஓர் இடத்தில் வாணிபம் நடத்துகிறார். இவர் கடைக்கு எதிரில் போட்டியாக இன்னொருவர் கடைதிறந்து வாணிபம் நடத்துகிறார். இதனால் முதல் நபருக்கு நட்டம் விளைகின்றது. ஆனாலும், இது சட்ட முரணான செயல் ஆவதில்லை. வேண்டுமென்றே இழப்பு ஏற்படுத்தப்பட்டாலும் இச்செயலைச் சட்டம் தீங்காகக் கொள்வதில்லை. என் நிலத்தில் மிக ஆழமாகக் கிணறு தோண்டியதால், அடுத்துள்ள நிலத்துக் கிணற்றில் நீர் குறையத் தொடங்குகிறது. ஆயினும், என் செயல் சட்டப்படி தீங்கு ஆகாது. சமுதாய நலனைக் கருத்திற்கொண்டு, பிறருக்குக் கேடு விளைக்கும் இச்செயல்களைச் சட்டம் தீங்கு எனக் கொள்ளுவதில்லை.

தீங்கியல் சட்டம் என்பது இயற்றப்படாத சட்டமாகவே உள்ளது. பல தீர்ப்புகளிலும் விதிக்கப்பட்ட கொள்கைகளின் தொகுப்பாகவே இச்சட்டம் இன்றுள்ளது. தீர்ப்புக் கொள்கைகள் காலத்திற்கேற்ப வளர்ந்து வருகின்றன.

'நியாயம் இன்றிப் பிறருக்குக் கேடு விளைவிப்பவர் அந்தக் கேட்டிற்குப் பொறுப்பாக வேண்டும்' என்ற தெளிவான கொள்கையைத் தீங்கியல் சட்டம் சாற்றவில்லை.

இன்றுள்ள சட்டப்படி நான் அடுத்தவருக்கு, என் அண்டை வீட்டுக்காரருக்கு, பல வழிகளில் கேடு விளைக்கலாம்; ஆனால், சட்டப்படி அதற்கான பொறுப்படைவு என்னைச் சேர்வதில்லை.

தீங்கியல் சட்டம் என்பது வளர்ந்து வரும் சட்டமாகும்.

உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்துதல்

(Abuse of Rights)

பொதுவாகச் சட்டம் மக்களின் நலன்களைப் பேணும் வகையில்தான் உரிமைகளை அவர்களுக்கு அளிக்கின்றது. அந்த உரிமைகள பிறர் நலன்களைப் பாதிக்கும் வகையில் செலுத்தப்படுவது சட்டத்தின் நோக்கத்திற்கு முரணானதாகும். எனவே சில நாடுகளின் சட்டங்கள் அவ்வாறு உரிமைகள் செலுத்தப் படுவதைத் தடுக்கின்றன.

சுவிட்சர்லாந்து, சீனா, சோவியத் யூனியன் முதலிய நாடுகளில், ஒருவர் தம் உரிமையினைப் பிறருக்குக் கேடு பயக்கும் வகையில் பயன்படுத்துவதைத் தடுக்கும் சட்டங்கள் உள்ளன. பிரான்சு நாட்டிலும் இக்கொள்கை ஏற்கப்பட்டுள்ளது.

தனி நபர் ஒருவரின் நலனைக் காப்பதுதான் 'உரிமை' என்ற கருத்திற்குப் பதிலாக, சமுதாய நலனுக்கும் உகந்ததே 'உரிமை' என்ற கருத்து அமையும் வகையில் உரிமைகள் செல்லுறுத்தப்பட வேண்டும் என்கிறார் ஜோஸரேண்ட் (Josserand)என்ற சட்ட இயலறிஞர்.

இன்று, பல நாடுகளிலும், தனிம நலம் (individualism) என்பது பல கட்டுகளுக்கு உட்பட்டுள்ளது. அடுத்தவர் தம் சொத்தை அனுபவிப்பதற்கு ஊறுவிளைக்கும் வகையில் ஒருவர் தம் நிலத்தில் உயரமான கட்டிடம் கட்டுவது, தம் நிலத்தில் கிணறுகள் தோண்டி பிறர் நிலத்தடி நீரை வற்றச் செய்வது போன்ற செயல்களைப் பிரான்சு நாட்டுச் சட்டம் தடை செய்கின்றது. சோவியத் யூனியனில் சமுதாய நலனுக்கு முரண்படும் வகையிலும், நாட்டின் பொருளாதார நலனைப் பாதிக்கும் வகையிலும் தனிம உரிமைகள் எதுவும் செல்லுறுத்தப்படுவதில்லை.

இங்கிலாந்திலும் ஓரளவு இக்கொள்கை ஏற்கப்பட்டுள்ளது. இரண்டு அல்லது மேற்பட்ட நபர்கள் தங்களுக்குள் ஒப்பந்தம் செய்துகொண்டு வேண்டுமென்றே மூன்றாவது நபர் ஒருவருக்குக் கேடு விளைத்தல் கூடாது என்பது சட்டமாகும். அமெரிக்க நாட்டிலும், அடுத்தவர் சொத்திற்கு ஊறு விளைக்க வேண்டும் என்ற ஒரே கருத்துடன் ஒருவர் தமது சொத்தைப் பயன் படுத்துவதைச் சட்டம் அனுமதிப்பதில்லை.

இந்தக் கொள்கையினைத் திட்டவட்டமாகக் கூறிச் செயல்படுத்தும் வகையில் இன்னும் சட்டங்கள் இயற்றப்பட வில்லை. காரணம் தனிம நலம், பொதும நலம் இரண்டிற்கும் உள்ள வரம்பினை வரையறுத்துத் தெளிவு படுத்துவதில் உள்ள இடர்ப்பாடுகள்தாம்.

தொழிற் சட்டங்கள், நகரமைப்புச் சட்டங்கள் போன்ற சட்டங்கள் பல, தனிம உரிமைகள் பொதும நலனுக்கு முரணாகச் செயல்படுவதைத் தடுக்கும் வகையிலேயே இயற்றப்பட்டுள்ளன. வருங்காலத்தில் இன்னும் இவை தீவிரப்படுத்தப்படலாம்.

'கொள்நிலை ஒப்பந்தம்' (Quasi - Contract)

உரோமானியச் சட்டத்திலும் இங்கிலாந்துச் சட்டத்திலும், சில கடப்பாடுகள் (obligations) ஒப்பந்தம் எதன்படியும் எழாவிட்டாலும், ஓர் ஒப்பந்தத்தின்கீழ் எழுவதாகச் சட்டம் கொள்கிறது. உண்மையில் தரப்பினர் இடையே ஒப்பந்தம் எதுவும் இல்லை. கற்பனையாகச் சட்டம் ஒப்பந்தம் இருப்பதாகவும் அந்த ஒப்பந்தப்படி கடப்பாடு எழுவதாகவும் கொள்ளுகிறது. இது சட்டத்தின் உத்தியாகும். (legal technique)

நீதிமன்றத் தீர்ப்பின்படி ஒருவர் மற்றொருவருக்குப் பணம் கொடுக்க வேண்டியதையும் கூட, அது ஓர் ஒப்பந்தப்படி எழும் கடன் என்று சட்டம் கொள்கிறது.[1]

ஒருவருக்குச் சேர வேண்டிய பணம் தவறுதலாகவோ வேறு வகையிலோ இன்னொருவர் கைக்குப் போய்ச் சேர்ந்துவிடுகிறது. இப்பொழுது, அந்தப் பணத்தைப் பெறுவதற்கு உரிமையுள்ளவர் நியாயமின்றிப் பணத்தைப் பெற்றுக் கொண்டவரிடமிருந்து அதை வரப்பற்ற முடியுமா? முடியும் என்றால் எந்த அடிப் படையில்?

அவ்வாறு வரப்பற்ற முடியும். நியாயமின்றிப் பெற்றுக் கொண்ட பணத்தைத் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்று ஓர் ஒப்பந்தம் பணத்திற்கு உரியவருக்கும் பணத்தைப் பெற்றுக் கொண்டவருக்கும் இடையே உள்ளதாகச் சட்டம் கொள்கிறது. உண்மையில் அத்தகைய உடன்பாடு ஏதும் இல்லை. ஆயினும் ஒப்பந்தம் இருப்பதாகச் சட்டம் கொண்டு, அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றும் வகையில் பணத்தை வைத்திருப்பவர் உரிமை யாளரிடம் அதைக் கொடுக்கும்படி சட்டம் விதிக்கின்றது.

ஒருவருடைய சொத்தின் வருமானத்தை நான் நியாய மின்றி எடுத்துக் கொண்டேன் என்றால், அந்த வருமானத்தைச் சொத்துரிமையருக்குத் திருப்பித் தரும் பொறுப்படைவு எனக்கு உள்ளது எவ்வாறு? இந்நிலையிலும், நியாயமின்றி நான் பெற்றுக்கொண்ட பயனைச் சொத்துரிமையருக்குக் கொடுத்து விட நான் ஒப்புக் கொண்டுள்ளதாகச் சட்டம் ஓர் ஒப்பந்தத்தைக் கற்பனை செய்து, அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றும் வகையில் நான் முறையின்றிப் பெற்றுக்கொண்ட வருவாயின் மதிப்பைச் சொத்துரிமையருக்குச் செலுத்தும்படி சட்டம் விதிக்கின்றது.

---

1 The liability of the defendant arises upon the implied contract to pay the amount of the judgement - Lord Esber.

நியாயத்திற்கு மாறாகத் தாம் அடைந்த நலனை, ஒருவர் அதற்கு உரியவரிடம் சேர்த்து விட வேண்டும் என்பது சட்டக்கொள்கை. இதனை 'முறையற்ற பொருளடைவுக் கொள்கை' (Doctrine of Unjust Enrichment) என்பார்கள்.

'முறையற்ற பொருளடைவு' (Unjust enrichment)

பிறருக்கு உற்ற பொருளை முறைதவறி நான் பெறுவதால் அவருக்குக் கேடு விளைகின்றது. அவரது உரிமைக்கு ஊறு நேர்கின்றது. எனவே, அந்தத் தீங்கிற்கு ஈடுசெய்யும் வகையில் நான் முறையின்றிப் பெற்றுக்கொண்ட பணத்தைத் திருப்பித்தரக் கடமைப்பட்டுள்ளேன். இக்கொள்கையினை அமெரிக்க நாட்டில் 'மீட்டடைவித்தல்' (Restitution) என்று குறிப்பிடுகின்றனர்

'முறையற்ற பொருளடைவுக் கொள்கையை' (Doctrine of unjust enrichment) 'மீட்டடைவித்தல்' (Restitution) என்ற சட்டநெறியின் அடிப்படையில் விளக்குவதே பொருந்தும் என்றும், 'கொள்நிலை ஒப்பந்தம்' (Quasi - contract) அடிப்படையில் விளக்குவது பொருந்தாது என்றும் சட்ட அறிஞர் பேட்டன் கூறுகின்றார். நீதிபதி லார்டு ரைட் (Lord Wright)என்பாரும் 'மீட்டடைவித்தல்' என்ற விளக்கமே சிறந்தது என்று ஒரு தீர்ப்பில் கூறியுள்ளார்.

முறையற்ற பொருளடைவு உரியவருக்கே சேரவேண்டும் என்ற கொள்கை பல நாட்டுச் சட்டங்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நெறியாகும்.

தீங்கியல் சட்டத்தின் வளர்ச்சி

உரிமை இயல் சட்டத்தின்பாற்பட்ட தீங்கியல் சட்டத்தின் (The Law of Torts) முக்கிய நோக்கம், ஒருவருடைய உரிமைக்கு ஊறு செய்யப்பட்டால் (தீங்கு இழைக்கப்பட்டால்) அதற்கான இழப்பீடு செலுத்தப்பட வேண்டும் என்பதாகும். 'உரிமை உண்டெனில் தீர்வழி உண்டு' (Ubi jus, - Ubi remedium) என்ற இலத்தீன் விதிமொழியின் அடிப்படையில் எழும் கொள்கையே, எவருக்குத் தீங்கு இழைக்கப்பட்டாலும், அவருக்கு இழப்பீடு தரப்படவேண்டும் என்ற சட்டநெறியாகிறது.

பொதுவாகத்'தவறு' (fault) எவர்மீது உள்ளதோ அவரே இழப்பீடு செலுத்தவேண்டும். தவறு எழுவது கடமையில் தவறும்

நிலையில்தான். ஆகவே, எவருடைய செயலால் தீங்கு விளைக்கப்படுகிறதோ அவர் தமது கடமையில் தவறினாரா என்பதைச் சட்டம் காண வேண்டியுள்ளது. இதைத் தீர்மானிப்பதில் எத்தனையோ இடர்ப்பாடுகள் எழுகின்றன.

நண்பர் ஒருவர் வீட்டிற்குள் போகின்றேன். அவர் வீட்டுத் தரையில் மறைவாகச் சிறுபள்ளம் இருக்கிறது. அதில் நான் இடறி விழுந்ததால் என் கால் எலும்பு முறிகின்றது. இப்பொழுது, இதற்கு ஈடு செய்வது யார்? வீட்டுக்காரரான என் நண்பருக்கு உள்ள கடமை என்ன? இம்மாதிரியே ஒரு கடைக்குள் நுழையும்பொழுது விபத்துக்கு உள்ளாகிறேன். இப்பொழுது கடைக்காரரின் கடமை என்ன? இம்மாதிரியான ஆபத்துக்கள் விளையாமல் தடுப்ப தற்கான கடமை வீட்டக்காரருக்கும் கடைக்காரருக்கும் உள்ளதா? உண்டு என்றால், அக்கடமையின் தன்மை என்ன?

நான் இரவில் காரில் செல்லும்பொழுது வீதியின் நடுவில் இருந்த பள்ளத்தில் கார் இறங்கியதால் கார் பழுதடைகிறது. நான் உடற்காயம் உறுகிறேன். இதற்கு, சாலைகளைப் பராமரிக்கும் பொறுப்புள்ள நகரசபை இழப்பீடு கொடுக்க வேண்டுமா? நான் கவனமாகக் காரை ஓட்டியிருந்தால் பள்ளத்தில் இறங்காமல் தவிர்த்திருக்கலாமல்லவா? எனவே, எனது தற்கவனமின்மையும் விபத்திற்குக் காரணம் என்றால் நகரசபையின் பொறுப்பு அகன்று விடுகிறதா? இவ்வாறான, வினாக்களுக்கெல்லாம் விடைகூறும் வகையில் பல தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆயினும், அந்தந்தச் சூழ்நிலைகளை ஆய்ந்து அவற்றுக்கு ஏற்றபடி எழும் தீர்ப்புகளில் இருந்து பொதுவான விதிமுறை எதையும் தெளிவாக நம்மால் தெரிந்து காணுவதில் இடர்ப் பாடுகள் எழுகின்றன.

ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் ஒருவரது தனியுறை நிலையைப் (Privacy) பாதிக்கும் செயல்கள் தீங்குகளாகக் கொள்ளப்படுகின்றன. இங்கிலாந்து நாட்டில் இன்னும் இது தெளிவாக ஏற்கப்படவில்லை என்கிறார் ஆசிரியர் பேட்டன்.

இந்தியா போன்ற கல்வியறிவு அதிகமாகப் பரவாத நாடுகளில் மக்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாப்பதில் முனைப்பாக இருப்பதில்லை. நகரசபைகளின் கவனமின்மை யாலும், பொதுநிறுவனங்களின் அசட்டை மனப்போக்காலும் மக்களுக்கு எத்தனையோ கேடுகள் விளைகின்றன. மூடிகள் இல்லாத பாதாளச் சாக்கடைக் குழிகளில் விழுந்து கேடுறுவோர்

எத்தனையோ பேர்கள், சாலையின் நடுவில் தோண்டப்பட்டு நிரப்பப்படாத பள்ளங்களில் எத்தனையோ பேர்கள் விழுகின்றனர், காயமுறுகின்றனர். இவர்கள் எல்லாம் தங்கள் உரிமைகளைக் கண்டறிந்து இழப்பீடு கோருவதில்லை. மக்கள் அனைவரும் தங்களுக்குச் சட்டத்தால் அளிக்கப்பட்டுள்ள உரிமைகளை உணர்ந்து, அவ்வுரிமைகளுக்கு ஊறுவிளையும் பொழுது அதற்கான இழப்பீட்டை வரப்பற்றுவதற்கு நடவடிக்கைகள் எழுந்தால் அரசாங்க நிறுவனங்களின் நிர்வாகம் எவ்வளவோ சீரடைந்து விடும்.

முன்னரே கூறியபடி, தீங்கியல் சட்டம் இயற்றப்படாத (unenacted) சட்டமாகும். தீர்ப்புக் கொள்கைகளால் வளரும் சட்டநெறியாகும். மக்களின் உரிமையுணர்வும் கடமையுணர்வும் பெருகி உறுதிபெறும்பொழுதுதான், இச்சட்டநெறியால் எழும் நலன்களனைத்தையும் நாம் பெறுவது இயலும்.

உரிமைகள் தீர்வுறுதல் (Extinction of Rights)

சட்டவழிச் செயல்களால் முதல்நிலைஉரிமைகள் எழுகின்றன என்று கண்டோம். அவ்வுரிமைகள் மீறப்பட்டால் தீர்வுநிலை உரிமைகள் தோன்றுகின்றன. நீதிமன்றங்கள்மூலம் அவை செல்லுறுத்தப்பெறுகின்றன.

முதல்நிலையுரிமைகள் மீறப்படாமல் அவை தீர்வுறலாம். எந்தெந்த வழிகளில் அவ்வுரிமைகள் தீர்வுறப்பெறுகின்றன என்று காண்போம்.

1) நிறைவேற்றம் (Performance)
2) இசைவு (Consent)
3) மறு தரப்பினரால் கடமை அகற்றப்படுதல் (Avoidence by one party)
4) நிறைவேற்றம் இயலாது போதல் (Impossibility of performance)
5) சட்டத்தின் இயக்கம் (operation of law)
6) காலக்கெடு (Prescription)

1. நிறைவேற்றம்

ஓர் ஒப்பந்தத்தின் படி என்ன செய்யப்பட

வேண்டுமோ அதைச் செய்துவிட்டால், அதற்கான உரிமை முடிந்து போகின்றது. எனக்கு ஆயிரம் ரூபாய்க்குக் கடனொப்புச் சீட்டு எழுதிக் கொடுத்தவர் அக்கடனை வட்டியுடன் செலுத்தியபின், அச்சீட்டை வைத்துப் பணத்தைக் கேட்கும் எனது உரிமை அழிந்து விடுகிறது. எனவே, உரிமைக்கு உற்ற கடமை நிறைவேற்றப்படுவதால் அவ்வுரிமை தீர்வுறுகின்றது.

2. இசைவு

உரிமைக்கு உற்ற செயல் எவர் நலனுக்காகச் செய்யப்பட வேண்டுமோ, அந்த உரிமையர் தன் உரிமையை விடுப்படைவு (release) செய்யலாம். ஒப்பந்தத்தால் எழும் உரிமையினை மற்றோர் ஒப்பந்தத்தால் தீர்வுறச் செய்வதற்கு உரிமையருக்கு ஏலுரிமை (அதிகாரம்) உண்டு.

3. மறுதரப்பினரால்கடமை அகற்றப்படுதல்

ஓர் ஒப்பந்தத்தின்கீழ் இரு தரப்பினரும் அவர வருக்குற்ற கடமைகளை ஆற்ற வேண்டும் என்ற நிலை இருக்கலாம். ஒருவர் தம் கடமையைக் குறிப்பிட்ட காலத்திற்குள் ஆற்றவில்லையெனில், அடுத்தவர் தமக்குற்ற கடமையை ஆற்றும் பொறுப்பிலிருந்து விடுபடுகின்றார்.

4. நிறைவேற்றம் இயலாது போதல்

ஒப்பந்தத்தில் வாக்களிக்கப்பட்ட செயலைச் செய்ய முடியாத நிலை தோன்றுவதுண்டு. திடீரெனப் போர் மூண்டதாலோ, சூழ்நிலைகளில் அடிப்படையான மாற்றங் கள் ஏற்பட்டதாலோ அத்தகைய நிலை எழலாம். ஐந்து வருடங்கள் பணியாற்றுவதாக எழுதிக் கொடுத்தவர் இரண்டு ஆண்டுகளில் இறந்துவிடலாம்; அல்லது கடுமை யான நோய்க்கு ஆளாகிவிடலாம். இந்நிலைகளில் ஒப் பந்தக் குலைவு (frustraction of contract) ஏற்பட்டதெனக் கொள்ளப்படுகிறது; ஒப்பந்த உரிமை தீர்வுறுகின்றது.

5. சட்டத்தின் இயக்கம்

ஒருவர் நொடிப்பு நிலையர் (insolvent) என்று சட்டத்தால் சாற்றப்பட்டால் அவர் செலுத்தவேண்டிய கடன்கள் அற்றுப் போகின்றன. கடன் ஒழிப்புச் சட்டங்களின் பயனாகக் கடனைத் திரும்பப் பெறும் உரிமை தீர்வுறுகின்றது.

6. காலக்கெடு

ஒப்பந்தங்களால் எழும் உரிமைகளை இந்தக் காலவரைக்குள் செல்லுறுத்த வேண்டும் என்று கால வரையறைச் சட்டம் (Limitation Act) கூறுகின்றது. அந்தக் காலக் கெடு கடந்து விட்டால் உரிமைகளும் அற்றுப் போகின்றன.

என்னுடைய நிலத்தில் அத்துமீறி நுழைந்திருப்பவரை வெளியேற்றும் உரிமை எனக்கு உண்டு. ஆனால், பன்னிரண்டு ஆண்டுகாலத்திற்கும் அதிகமாக அந்த அத்துமீறியிருக்கை நீடித்து (நீளுடைமை) விட்டால், அவரை வெளியேற்றும் உரிமையை நான் இழந்து விடுகிறேன்; அந்த உரிமை அறுதியாகிறது.

இவ்வாறாக உரிமைகள் தீர்வுறப்பெறுகின்றன.

தீர்வுநிலை உரிமைகள்

(Remedial Rights)

[தீர்வுநிலை உரிமை — தன் உதவி — சாற்றுவகைத் தீர்ப்பு — தடையுறுத்தும் தீர்ப்பு — செயலுறுத்தும் தீர்ப்பு — இழப்பீடு அளிக்கும் தீர்ப்பு]

தீர்வுநிலை யுரிமை

உரிமைகளை 'முதல்நிலை உரிமைகள்' (Primary rights) என்றும், 'தீர்வுநிலை உரிமைகள்' (sanctioning or remedial rights) என்றும் பிரிப்பது உண்டு என்பதை 'உரிமைகள்' என்ற தலைப்பில் கண்டோம்.

சட்டவழிச் செயல்களாலும் சட்டத்தால் நேரடியாகவும் உரிமைகள் எழுகின்றன. அவை 'முதல்நிலை உரிமைகள்'. ஒப்பந்தப்படி ஒருவர் எனக்கு ஆயிரம் ரூபாய் தர வேண்டும். இதனால் எனக்குள்ள உரிமை, ஒப்பந்தம் என்ற சட்டவழிச் செயலால் பிறந்த முதல்நிலை உரிமையாகும். எனது புகழைப் பொறுத்து, வேறு எவரும் அதற்கு மாசுசேர்ப்பது கூடாது என்ற உரிமை எனக்கு உள்ளது. இது சட்டத்தால் எழும் முதல்நிலை உரிமை.

ஒப்பந்தப்படி எனக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டியவர் கொடுக்கவில்லை என்று வைத்துக் கொள்வோம். முதல்நிலை உரிமை மீறப்பட்டுவிட்டதால், எனக்குச் சட்டம் அளிக்கும் தீர்வழி (remedy) என்ன? நீதிமன்றத்தில் நான் வழக்கிட்டு அந்தப் பணத்தை அவரிடமிருந்து வரப்பற்றலாம்.

இந்த உரிமையைச் சட்டம் எனக்குத் தீர்வழியாக அளிக்கின்றது. எனவே, இதைத் 'தீர்வுநிலை யுரிமை' (remedial right) என்கிறோம்.

எனது புகழுக்குப் புன்மைசேரும் வகையில் ஒருவர் அவதூறாக என்னைப் பற்றி எழுதிப் பலர் அறியச் செய்து விட்டார். புகழைப் பொறுத்துச் சட்டம் எனக்கு அளித்துள்ள முதல்நிலை உரிமைக்கு ஊறு விளைக்கப்பட்டுவிட்டது. இதற்குத் தீர்வழி என்ன? நான் நீதிமன்றத்தில் அவதூறு இழைத்தவர்மீது வழக்கிட்டு எனக்கு ஏற்பட்ட அவதூற்றுக்கு ஈடுசெய்யும் வகையில் இழப்பீடு (தீங்கீடு) (damages) பெறலாம். இது எனக்குச் சட்டம் அளிக்கும் 'தீர்வுநிலை உரிமை' .

உரிமை மீறப்பட்டதால் விளைந்த தீங்கிற்குத் தீர்வழியாக (remedy) எழுவது 'தீர்வுநிலை உரிமை'.

எனவே, சட்டவழிச் செயல்களாலோ (Juristic acts) சட்டத்தால் நேரடியாகவோ எழும் முதல்நிலை உரிமைகள் மீறப்பட்டால், அவற்றுக்கு மாற்றீடாகச் சட்டம் அளிக்கும் உரிமைகள் தீர்வுநிலை உரிமைகள் எனப்படுகின்றன.

முதல்நிலை உரிமை முறிவதால் எழுவது தீர்வுநிலை உரிமை.

இனித் தீர்வுநிலை யுரிமைகளின் வகைகளைக் காணலாம்.

1) தன் உதவி.
2) சாற்றுவகைத் தீர்ப்பு.
3) தடையுறுத்தும் தீர்ப்பு.
4) செயலுறுத்தும் தீர்ப்பு.
5) இழபபீடு அளிக்கும் தீர்ப்பு.

'தன் உதவி' என்பது நீதிமன்றம் செல்லாமலே நாம் செல்லுறுத்தும் உரிமை மற்றவை நீதிமன்றத்தின் வழியாக நாம் பெறும் உரிமைகள்.

1) தன் உதவி (Self-help)

நம் உரிமைகள் அற்பமான வகையில் மீறப்படும்பொழுது எல்லாம் நாம் நீதிம றம் செல்ல வேண்டும் என்பதில்லை.

நம் நிலத்திற்கு அடுத்து இருக்கும் நிலத்தில் உள்ள மரத்தின்

கிளைகள் நம் நிலத்திற்கு நேர் மேலாகப் பரவியுள்ளன. அதனால், விழும் நிழல் நம் நிலத்தின் பயிர்களுக்குக் கேடாக உள்ளது. இந்நிலையில் நம் நிலத்திற்கு மேல் படர்ந்துள்ள கிளைகளை நாம் வெட்டி அகற்றி விடலாம். இதைத் 'தொல்லை அகற்றல்' (Abatement of nuisance) என்பார்கள்.

நம் நிலத்திற்குள் பிறரது கால்நடைகள் நுழைந்து சேதம் விளைக்கின்றன. நாம் அவற்றைப் பிடித்துப் பட்டியில் (Pound) அடைக்கலாம்.

இவை உரிமை இயலைப் பொறுத்த உதவிச் செயல்கள்.

குற்ற இயலைப் பொறுத்தவரை, நம்மைத் தாக்க வருபவர்களிடமிருந்து தப்புவதற்குச் சட்டம் அனுமதிக்கும் படியான தற்காப்புச் செயல்களை (Self-defence) நாம் மேற்கொள்ளலாம்.

இவ்வாறு, நம் உரிமைகளுக்கு ஊறு விளைவதைத் தடுக்கும் வகையில் நாமே செயல்படலாம் என்று சட்டம் விதிக்கின்றது. இத்தகைய தீர்வுநிலை உரிமையைத் 'தன் உதவி' (self-help) என்கிறோம்.

இனி நீதிமன்றத்தின்வழி நாம் பெறும் தீர்வுநிலை உரிமைகளைக் காண்போம்:

2) சாற்றுவகைத் தீர்ப்பு (Declaratory judgment)

'வருமுன்னர்க் காத்தலே' சிறந்த வழியாகும். சில வேளைகளில், ஒருவருக்குள்ள உரிமையினை மற்றவர் மறுக்கலாம்; அதனால் எதிர்காலத்தில் இடர்ப்பாடுகள் எழலாம் என்ற நிலையில், அவர் தம் உரிமைக்கு வரஇருக்கும் ஆபத்தைத் தவிர்க்கும்பொருட்டு நீதிமன்றத்தை நாடலாம். தமக்குக் குறிப்பிட்ட உரிமை உண்டு என்பதை உலகறியச் சாற்றும் வகையில் (declaration) தீர்ப்பினைக் கோரலாம். அத்தகைய தீர்ப்பைச் 'சாற்றுவகைத் தீர்ப்பு' (Declaratory judgement) என்பார்கள். எதிர்வாதி இன்ன செய்யவேண்டும், இன்ன செய்யக்கூடாது என்று இத்தீர்ப்பு கட்டளை ஏதும் இடுவதில்லை. வாதிக்கு இன்ன உரிமை உண்டு என்பதை மட்டும் சாற்றுகின்றது.

ஒருவருடைய பிறப்பு முறைமை (legitimacy) மணவிலக்கு (nullity of marriage) இவை போன்ற நிலைகுறித்து சாற்றுவகைத் தீர்ப்புகள் கோரப்படுவதுண்டு.

3) தடையுறுத்தும் தீர்ப்பு (Prohibitory judgment)

என்னுடைய நிலத்தின்மீது எனக்குள்ள சொத்துரிமையை மறுத்து, மற்றொருவர் அத்துமீறி நுழைந்து என் உடைமையைப் பறிக்கத் திட்டமிட்டுள்ளார் என்பதைத் தெரிந்த நான் நீதி மன்றத்தை நாடுகிறேன். அந்த நிலத்தின்மீது எனக்குள்ள சொத்துரிமையை நிலைநாட்டி, மற்றவர் என் நிலத்தில் நுழையாதபடி தடுக்கும் வகையில் தீர்ப்பினைக் கோருகிறேன். இரு தரப்புச் சான்றுகளையும் ஆய்ந்து எனக்கே உரிமை உண்டு என்பதைக் கண்டபின் எதிர்வாதி என் நிலத்தில் நுழையக் கூடாது என்று தடுத்து உத்தரவிட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்குகிறது. இத்தீர்ப்பின் பயனாக எழும் தீர்ப்பாணை (decree) எதிர்வாதி என் நிலத்தில் நுழையாதவாறு தடையுறுத்தும் கட்டளையாகச் (prohibitory injunction) செயல்படுகிறது. இதைத் தடையுறுத்தும் தீர்ப்பு என்கிறோம்.

4) செயலுறுத்தும் தீர்ப்பு (Mandtony judgement)

பொதுவாக, முதல்நிலை யுரிமை மீறப்படும் நிலையில் இருந்தாலோ அல்லது மீறப்பட்டு விட்டாலோ, அந்த முதல்நிலை யுரிமையை நிறைவேற்றும்படி நீதிமன்றம் எதிர்வாதிக்கு உத்தர விட்டுத் தீர்ப்பளிப்பது உண்டு.

ஒரு வீட்டை எனக்கு விற்பதாக ஒப்பந்தம் செய்த ஒருவர், அந்த ஒப்பந்தத்தை மீறுகின்றார் என்றால், அந்த வீட்டை எனக்கு விற்குமாறு உத்தரவிட்டுத் தீர்ப்பளிக்கின்றது நீதிமன்றம். முதல் நிலை உரிமையில் அடங்கும் காரியத்தை அப்படியே நிறை வேற்றும் வகையில் எழும் தீர்ப்பை, ஆங்கிலத்தில் specific performance என்பார்கள்.

என் வீட்டிற்கு வரும் ஒளியையும் காற்றையும் தடுக்கும் வகையில் அடுத்த நிலத்தில் கட்டிடம் எழுப்பப்படுகிறது. எனவே, அக்கட்டிடத்தை இடித்து அகற்றும்படியான கட்டளையைக் கோரி நான் வழக்கிடலாம்.

இன்ன காரியத்தை எதிர்வாதி செய்தல்வேண்டும் என்று இடப்படும் தீர்ப்பாணையைச் 'செயலுறுத்தும் கட்டளை' (mandatory injunction) என்று கூறுவார்கள்.

5) இழப்பீடு அளிக்கும் தீர்ப்பு

தடையுறுத்தும் தீர்ப்பு, செயலுறுத்தும் தீர்ப்பு இவற்றால்

முதல்நிலை யுரிமை நிறைவேற்றப்படுகிறது. என் நிலத்தில் அத்துமீறி நுழைந்தவர் அகற்றப்படுதல், நுழையாது தடுக்கப் படுதல், நான் கொடுத்த கடனை வரப்பற்றுதல், ஒப்பந்தப்படி ஒரு வீட்டை நான் விலைக்கு வாங்குதல் இவற்றிலெல்லாம் முதல்நிலை யுரிமை நிறைவேற்றம் பெறுகிறது.

சில நேர்வுகளில் இவ்வாறு முதல்நிலை யுரிமையை நிறைவேற்றுவது இயலுவதில்லை; அல்லது நிறைவேற்றுவது சமுதாய நலனுக்கு உகந்ததாக இருப்பதில்லை.

திருமண ஒப்பந்தம் செய்துகொண்ட இருவரில் ஒருவர் ஒப்பந்தத்தை மீறுகிறார் என்றால், அவரைக் கட்டாயப்படுத்தித் திருமணம் செய்துகொள்ளுமாறு சட்டம் விதிப்பதில்லை. ஒப்பந்தத்தை மீறியவர் மற்றவருக்கு இழப்பீடு செலுத்த வேண்டும் என்றே சட்டம் விதிக்கின்றது.

காரில் அடிபட்டுக் கணவன் இறந்துவிடுகிறான் என்றால், மனைவிக்குக் கணவனை மீட்டுக்கொடுக்கச் சட்டத்தால் எப்படி முடியும்? எனவே, கவனமின்மையாக,காரை ஓட்டியவர், கணவனை இழந்துநிற்கும் விதவைக்கு இழப்பீடு (damages) செலுத்தும்படி சட்டம் விதிக்கின்றது.

அவ்வாறே, ஒப்பந்தத்தை மீறியவர் அத்தகைய மீறுகையால் வாதிக்கு ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்யும் வகையில் இழப்பீடு செலுத்தும்படி நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

நீதிமன்றம் உத்தரவிடும் இழப்பீட்டின் தன்மை வழக்குகளின் நிலைக்கேற்ப வேறுபடுகிறது. சில நேர்வுகளில், ஏதோ உரிமை இருக்கிறது என்ற அடிப்படையில் வம்புக்காக வழக்கிடுவர் சிலர். அவர்களுக்கு வழங்கப்படும் இழப்பீடு அற்பமாக (contemptuous damages) இருக்கும். சில நேர்வுகளில் கேடு நேராவிட்டாலும் உரிமைஉண்டு என்பதையும், அது மீறப்பட்டது என்பதையும் காட்டும் வகையில் 'பெயரளவு இழப்பீடு' (nominal damages) அளிக்கப்படுகிறது. வேண்டு மென்றே வன்மத்தால் (malice) பிறரைப் பற்றி அவதூறு இழைப்போருக்கு எதிராக வழங்கப்படும் இழப்பீடு 'எச்சரிக்கை இழப்பீடாக' (exemplary damages) அதிகத் தொகையைக் கொண்டதாய் இருப்பதுண்டு. இதைப் 'பழிவாங்கும் இழப்பீடு' (vindictive damages) என்றும் கூறுவார்கள்.

சாதாரணமாக, இழப்பீடு, நேர்ந்த இழப்பினைச் சரி

செய்யும் வகையில் (compensatory) தான் வழங்கப்படும். ஆனால், விபத்தால் ஏற்படும் மரணத்தால் எழும் இழப்பிற்கு ஏற்ற ஈட்டினை உறுதி செய்வது சிக்கல் நிறைந்ததாகும்.

இவ்வாறு, முதல்நிலை உரிமைகளின் நிறைவேற்றம் செல்லுறுத்த இயலாத நிலையில் இழப்பீடு வழங்கப்பெறுகின்றது.

இழப்பீடு என்பது தீங்குற்றவர் அடைந்த கேட்டிற்கு ஈடாக இருப்பதோடு, தீங்கிழைத்தவருக்கும் ஒரு தண்டனையாகவும் அமைகின்றது. எனவே, இழப்பீடு அளிக்கும் முறையை ஒறுத்தல்வகைத் தீர்வழி (penal redress) என்று கூறுவார்கள்.

தீர்வுநிலை உரிமைகளே உண்மையான உரிமைகள் என்று சில அமெரிக்க நாட்டு ஆசிரியர்கள் கூறுகின்றனர். முதல்நிலை உரிமைகள் நிறைவேற்றப்பட இயலாத நிலையில், உண்மையில் செயல்படுவது தீர்வுநிலை உரிமைகள் தானே? எனவே, நிறைவேற்றத்தக்க முதல்நிலை உரிமைகளை நீக்கிவிட்டால், மற்ற உரிமைகள் அனைத்தும் தீர்வுநிலை உரிமைகள்தான் என்கின்றனர் அவர்கள்.

ஓர் ஒப்பந்தம் மீறப்படுகிறது. இதற்குத் தீர்வழி என்ன? இழப்பீடு பெறுவதுதானே. ஆதலால் அந்த ஒப்பந்தத்தில் அடங்கும் உரிமை, இழப்பீடு பெறும் தீர்வுநிலை உரிமைதான் என்பது அவர்கள் வாதம். இது ஏற்கத் தக்கதன்று என்கிறார் சால்மண்ட். இப்படிச் சொல்லுவது, அந்த ஒப்பந்தத்தால் எழும் கடமை இழப்பீடு செலுத்துவதுதான்; அதை நிறைவேற்றுவது அல்ல என்று ஆகிவிடும். முதல்நிலை உரிமை எது என்பதையும், அது மீறப்பட்டுள்ளது என்பதையும் கண்ட பின்னர்தாம் தீர்வுநிலை யுரிமையை நீதிமன்றம் செயற்படுத்துகிறது. எனவே, முதல்நிலை உரிமை இல்லாத நிலையில் தீர்வுநிலை யுரிமை எழுவதற்கே இடமில்லை. முதல்நிலை உரிமையின் மாற்றுருவமாகத் தீர்வுநிலை யுரிமை எழுகின்றது என்று கூறலாமே தவிர, முதல்நிலை உரிமை என்று எதுவும் இல்லை என்பது பொருந்தாத கூற்றாகும்.

நான் எழுதிக் கொடுத்த ஒப்பந்தத்தை மீறுகிறேன்; அதாவது அந்த ஒப்பந்தத்தால் எழும் கடமையில் நான் தவறுகிறேன். அதனால், இழப்பீடு செலுத்தும் புதுக் கடமை என்மீது சட்டத்தால் சுமத்தப்படுகிறது. 'முதற் கடமையில்

தவறுவதால் எழுவதே புதுக்கடமை. எனவே, முதற்கடமை என்று எதுவும் இல்லை என்பது தவறாகும்' என்கிறார் ஆசிரியர் சால்மண்ட்.

சொத்து
(Property)

['பொருள்' என்றால் என்ன? — சொத்தின் வகைகள் — பருப்பொருட் சொத்துக்கள், நுண்பொருட் சொத்துக்கள், (கலையமைப்புப் பதிப்புரிமை, இசையமைப்புப் பதிப்புரிமை, நாடகப் பதிப்புரிமை, இலக்கியப் பதிப்புரிமை, புதுப்புனைவுரிமை, வாணிபப்பெயர்கள்), மேலமை நுண் பொருட் சொத்துக்கள் (குத்தகை, வசதியுரிமை, பிணையம்) — சொத்தை அடையும் வழிகள் — (உடைமை, நீளுடைமை, உடன்பாடு, இறங்குரிமை)]

ஒரு மனிதனின் வாழ்க்கைக்கு வளம்சேர்ப்பது அவனது செல்வமேயாகும். 'செல்வம்' என்று நாம் கூறும்பொழுது, பருப்பொருள்களை மட்டுமன்றி பிறவகை நலன்களையும் சேர்த்தே கூறுகின்றோம்.

கல்வி நலனும், கேள்வி நலனும் வாழ்க்கைச் செல்வங்கள் என்கிறார் வள்ளுவர். (குறள். 400,411). அருளுடைமையும் அரிய செல்வம் என்று உணர்த்துகின்றார்.

ஆனால், சட்டத்திலே நாம் ஆய்வது அருட்செல்வத்தை யன்று, பொருட்செல்வத்தைத்தான்.

> பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
> பொருளல்லது இல்லை பொருள் (கு. 751)

என்ற வாய்மொழிப்படி, பொருள் உடையவர்தாம் உலகத்தில் மதிக்கப்பெறுகின்றனர். பொருள் இலலாதவர்க்கு இவ்வுலகத்து வாழ்க்கை இல்லை.

நம்முடைய பொருள்களையே நம் வாழ்வுக்குற்ற செல்வ மாகச் சட்டம் காண்கிறது. 'செல்வம்' என்றால் பிற நலன்களும் குறிக்கப்படலாம் என்பதால் நமக்குற்ற பொருள்களைச் 'சொத்து'

(property) என்ற சொல்லால் சட்டம் குறிக்கின்றது.

'சொத்து' என்பதன் கருத்தமைவு

சட்ட இயலில் 'சொத்து' என்ற சொல்லின் கருத்தமைவு (concept) எவ்வாறு உள்ளது என்று காணலாம்.

சட்டத்தில் 'சொத்து' என்ற சொல் பலவகைப் பொருளில் பயன்படுகின்றது. சிலவேளைகளில், அது சொத்துரிமையைக் (ownership) குறிக்கின்றது. சிலவேளைகளில், இது சொத்துரிமைக்கு இலக்கான பருப்பொருள்களைக் குறிப்பிடுகின்றது.

பருப்பொருள்களையும் அவற்றின்மீதான சொத்துரிமை களையும், தனித்துக் காட்டி விளக்கும் தெளிவு இன்றைய சட்ட நூல்களில் காணப்படவில்லை, என்கிறார் டென்னிஸ் லாய்டு (Dennis Lloyd) என்ற பேராசிரியர்.

பரந்த பொருளில் கூறினால், ஒருவரது சட்ட உரிமைகள் அனைத்தும் அவரது 'சொத்து' எனலாம். சட்டப்படி ஒரு மனிதனுடையதாக உள்ளவை அனைத்தும் அவனது சொத்தா கின்றன.[1]

ஆனால், இன்றைய வழக்கில் இவ்வாறு சொல்லுவதில்லை. பொருள்கள்மீது ஒருவருக்குள்ள சொத்துரிமைகளை அவரது சொத்து என்று கூறலாம். இன்னும், குறுகிய நோக்கில், ஒருவருக்குச் சொத்துரிமையுள்ள பருப்பொருள்கள் மட்டுமே அவரது சொத்துக்கள் என்றும் கூறலாம்.

இன்றைய சட்டத்தில் 'சொத்து' என்ற சொல் பலவகைப் பொருள்களையும் உரிமைகளையும் அடக்கி நிற்கிறது. அவையனைத்தையும் இணைத்துக் கூறும் வகையில் 'சொத்து' என்பதற்கான வரைவுரை (definition) இன்னும் வகுக்கப்பட வில்லை என்றுதான் கூற வேண்டும்.

எனவே, 'சொத்து' என்ற கருத்தமைவில் அடங்கும் பல்வேறு கூறுகளையே சட்டநூல்கள் கூறுகின்றன.

சட்ட இயல் அறிஞர் சால்மண்ட் 'சொத்து' என்பதை இருவகைகளாகப் பிரிக்கின்றார்.

1) பருப்பொருட் சொத்து (Corporeal property)..
2) நுண்பொருட் சொத்து (Incorporeal property).

பருப்பொருள், நுண்பொருள் என்பதில் 'பொருள்' (Thing)

[1] A man's property is all that is his in law - Salmond

என்ற சொல் வருகின்றது.

பொருள் (Thing) என்றால் என்ன?

சாதாரணப் பேச்சுவழக்கில் 'பொருள்' என்ற சொல்லை இடத்திற்கு ஏற்றவாறு பயன்படுத்துகிறோம்.

ஒரு செங்கல்லைப் 'பொருள்' (Thing) என்கிறோம். செங்கற்களைக் கொண்டு கட்டிய வீட்டையும் 'பொருள்' என்றே குறிப்பிடுகிறோம். ஒரு மாட்டைப் 'பொருள்' என்கிறோம். பல மாடுகள் சேர்ந்த மந்தையையும் 'பொருள்' என்றே குறிப்பிடு கிறோம். ஆதலால், பொருள் என்பதை வரையறுத்துக் கூற இயலாது. இருப்பினும் பொருள் என்ற கருத்தமைவில் அடங்கும் கூறுகளைக் காட்டுகின்றார் ஆசிரியர் பேட்டன்:

1. பருப்பொருள் என்ற நிலையில் தொட்டுணரத்தக்க உருவங்களைக் குறிக்கின்றது:

ஒரு குதிரை, ஒரு நாற்காலி, வீடு, போன்றவை.

2. பருப்பொருள்களின் தொகுப்பு அல்லது கூட்டு:

ஆட்டு மந்தை போன்றது.

3. பருப்பொருள் சார்ந்தது· ஆனாலும், சடப் பொருளல்லாதது:

மின்விசை.

4. பருப்பொருளாகவோ, சடப்பொருளாகவோ, தொட்டுணரத்தக்கதாகவோ இல்லாதது. ஆயினும், ஒருவகைச் செல்வமாக இருப்பது — பதிப்புரிமை, புதுப்புனைவுரிமை.

5. பருப்பொருளாகவும், செல்வமாகவும் கூற இயலாதது — புகழ்:

எனவே, 'பொருள்' என்ற சொல்லில் பருப்பொருள், நுண்பொருள், கூட்டுப்பொருள், மேலும் 'புகழ்' போன்ற பேறுகள் இவையெல்லாம் அடங்குகின்றன.

எவையெல்லாம் உரிமைக்கு உற்றவையோ, உரிமைக்கு இலக்காக உள்ளவையோ, அவையெல்லாம் சட்டத்தின் கண்களில் 'பொருள்' ஆகின்றன.

சொத்தின் வகைகள்

இனி, பருப்பொருட் சொத்து, நுண்பொருட் சொத்து என்ற இருவகைச் சொத்துக்களையும் சால்மண்ட் விளக்குவதைக் காணலாம்.

ஆடு, மாடு, நகை, வீடு, நிலம் போன்ற பருப்பொருள்கள் மீது ஒருவருக்குள்ள சொத்துரிமையைப் 'பருப்பொருட் சொத்து' என்கிறோம்.

சொத்துரிமைக்கு இலக்காகும் இப்பொருள்கள் கண்களுக்குப் புலப்படும் பருப்பொருள்கள் (material things); எனவே, இவற்றின்மீதான சொத்துரிமை 'பருப்பொருட் சொத்து' (Corporeal property) எனப்படுகிறது.

நாம் எழுதும் நூல்கள்மீது நமக்குள்ள 'பதிப்புரிமை' நாம் புதிதாகக் கண்டுபிடித்த இயந்திரம், கருவி போன்றவைமீது நமக்குள்ள 'புதுப்புனைவுரிமை' (Patent right) போன்றவையும் சொத்துக்கள்தாம். இங்கு, சொத்துரிமைக்கு இலக்காகும் பொருள்கள் நுண்பொருள்களாக உள்ளன. எனவே, இவை 'நுண்பொருள் சொத்து' எனப்படுகின்றன.

இன்னொருவகை நுண்பொருள்களும் உண்டு. ஒருவர் நிலத்தின்மீது இன்னொருவருக்குக் 'குத்தகை (lease) உரிமை' இருக்கிறது. ஒருவர் வீட்டின்மீது மற்றவருக்கு 'அடைமான (mortgage) உரிமை' இருக்கிறது. குத்தகை உரிமையும் அடைமான உரிமையும் கண்களுக்குப் புலனாகாத நுண்பொருள்கள். வீடும் நிலமும் பருப்பொருள்கள். ஆனால், அவற்றின்மீது எழும் அடைமான உரிமையும் குத்தகை உரிமையும் நுண்பொருள்களாக உள்ளன. அவையும் சொத்துக்கள்தாம்.

பருப்பொருட் சொத்தின்மீது எழும் குத்தகை, அடைமானம் போன்ற சொத்துரிமைகளை 'மேலமை நுண் பொருட் சொத்து' (Jura in re aliena) என்பார்கள். பதிப்புரிமை, புதுப்புனைவுரிமை போன்ற சொத்துரிமைகளை 'நுண்பொருட் சொத்து' (Jura in re propria) என்பார்கள்.

பருப்பொருட் சொத்து (Corporeal property)

பருப்பொருள் ஒன்றின்மீதுள்ள சொத்துரிமையே 'பருப்பொருள் சொத்து' (Corporeal property) எனப்படுகிறது.

பருப்பொருள் சொத்துரிமை பற்றி விரிவாகச் 'சொத்துரிமை' (Ownership) என்ற தலைப்பிலே கண்டோம்.

'பருப்பொருட் சொத்து' என்பது, பருப்பொருள் மீதுள்ள சொத்துரிமை. அந்த உரிமை முழுதுமானது; நிலையானது; உரிமையரின் வாரிசுகளுக்கு இறங்கும் தன்மையது.

பருப்பொருட் சொத்தை 'அசைபொருட் சொத்து' (Movable property) என்றும் 'நிலைபொருட் சொத்து' (Immovable property) என்றும் இருவகைகளாகப் பிரிக்கலாம்.

பணம், நகை, கால்நடைகள் இவை அசைபொருட் சொத்து. நிலம், வீடு இவை நிலைபொருட் சொத்து.

நிலைபொருளான நிலம் என்று எடுத்துக்கொண்டால், அச்சொத்தின் கூறுகளை நாம் காணவேண்டும்.

நிலச்சொத்தின் கூறுகளாவன:—

1. பூமியின் மேற்பரப்பில் வரையறைசெய்யப் பட்ட நிலப்பகுதி.
2. அந்த நிலப்பகுதிப் பரப்பின்கீழுள்ள நிலம்; அதாவது பூமிக் கோளத்தின் மத்திவரை செல்லும் கீழ்நிலம்.
3. அந்த நிலப்பகுதிப் பரப்பிற்கு நேராக மேலேயுள்ள காற்று வெளிப்பகுதி. அதாவது நிலப்பகுதியை அனுபவிப்பதற்குத் தேவையான காற்று—வெளிப்பகுதி.
4. அந்த நிலப்பகுதிக்குக் கீழே புதைந்து கிடக்கும் பொருள்கள், கனிமங்கள், இயற்கைத் தாவரங்கள் போன்றவை.
5. நிலைத்த இணைப்பாக அந்த நிலப்பகுதிகளில் கட்டப்பட்ட அல்லது பதிக்கப்பட்ட பொருள் கள்—கட்டிடம், சுவர், வேலி ஆகியவை.

அசைபொருள்கள்

நிலைபொருள்களைத் தவிர்த்து மற்றப் பருப்பொருள்கள் எல்லாம் அசைபொருள்கள்.

பூமியோடு நிலையாக இணைக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் இன்றிப் பதிக்கப்படும் பொருள்கள் நிலை பொருள் ஆவதில்லை. வண்ணப் பாய்களும் அலங்காரப் பொருள்கள் பலவும் கட்டிடத்தின் தரையிலும் சுவரிலும் பதிக்கப்படலாம்.

ஆனால், அவை கட்டிடத்தோடு இணைந்த நிலைபொருள் ஆவதில்லை.

பூமியில் புதைத்துவைக்கப்பட்ட பணமோ வேறு பொருளோ இருந்தால் அதுவும் அசைபொருளே ஆகும்.

நுண்பொருட் சொத்துக்கள்

நம் சொத்துரிமைக்கு உற்ற பொருள் பருப்பொருளாக (material thing) இருக்கலாம்; அல்லது நுண்பொருளாகவும் (immaterial thing) இருக்கலாம் என்று கண்டோம்.

சொத்துச் சட்டம் (Law of property) என்பது பொதுவாக பருப்பொருள் சொத்துரிமை பற்றியே உள்ளது.

பருப்பொருள்களைக் காட்டிலும் உயர்ந்த பொருள்கள் உள்ளன. அவை நுண்பொருள்கள். மனித முயற்சியிலே மலரும் மதிப்புமிக்க பொருள்கள் அவை.

மனிதன் தனது அறிவால் ஆக்கும் பொருள்கள் எல்லாம் அவனுக்குச் சொந்தமானவை என்று இன்றைய சட்டம் விதிக்கின்றது. எனவே, மனிதன் தன் உழைப்பாலும் உத்தியாலும், கலையுணர்வாலும் கற்பனையாலும் எத்தனையோ நுண் பொருள்களை ஆக்குகிறான். அப்பொருள்களின் வகைகள் பற்றியும் அவற்றின் மீதான சொத்துரிமை பற்றியும் இங்குக் காணுவோம்.

கலையமைப்புப் பதிப்புரிமை (Artistic copyright)

ஒருவர் வரைந்த ஓவியம் அல்லது வனைந்த சிற்பம் அவரது சொத்து என்றால், அவர்தம் சொத்தாக உள்ளது, அந்த ஓர் ஓவியமோ, சிற்பமோ மட்டுமன்று. அதன் மறுபதிப்புக்களும் அவர்தம் சொத்துக்கள் ஆகின்றன என்கிறது சட்டம். எனவே அந்தப் படைப்பின் நுட்பமான அழகமைப்பைப் (abstract sense of artistic form) பிறர் அவ்வாறே படிவம் எடுத்து வெளியிடுதல் கூடாது. பிறரும் அவ்வாறு வெளியிடலாம் என்றால் முதற் படைப்பின் மீதுள்ள சொத்துரிமை பயனற்றதாகிவிடும். ஒரு கலைப்படைப்பை முதலாவதாக எவர் உருவாக்கினரோ அவருக்கே அதைப் படிவம் எடுத்து வெளியிடும் உரிமை உண்டு. இந்த நுண்பொருள் சொத்துரிமையைக் 'கலையமைப்புப் பதிப்புரிமை' (Artistic copyright) என்பார்கள்.

இசையமைப்புப் பதிப்புரிமை (Musical copyright)

இது போன்றே, ஒருவர் தம் கலையுணர்வாலும் கற்பனையாலும் இன்னிசை மெட்டு ஒன்றை இயற்றுகின்றார். அதனை அப்படியே அமைத்துப் பிறர் பரப்புதல்கூடாது என்கிறது சட்டம். அந்த இன்னிசை மெட்டமைப்பைப் பதிவு செய்து வெளியிடும் உரிமை அதை முதலில் இசைத்தோருக்கே உண்டு. இந்த உரிமையினை 'இசையமைப்புப் பதிப்புரிமை' (Musical copyright) என்பார்கள்.

நாடக அமைப்பாளருக்கும் இத்தகைய உரிமை உண்டு. அது 'நாடகப் பதிப்புரிமை' (dramatic copyright) எனலாம்.

இலக்கியப் பதிப்புரிமை (Literary copyright):

தம் ஆழ்ந்த சிந்தனையாலும் அறிவின் திறனாலும் மொழிப்புலமையாலும் அரிய நூல்களைப் படைக்கின்றனர், ஆசிரியர்கள். அத்தகைய நூல்களைப் புதுப்பித்து வெளியாக்கும் உரிமை அதை ஆக்கியோருக்கே உண்டு. இந்த உரிமையினை 'இலக்கியப் பதிப்புரிமை' (Literary copyright) என்று கூறுவார்கள்.

ஏற்றம் மிகுந்த இலக்கியப் படைப்பாளர்கள் எல்லாரும் தங்கள் படைப்புக்கள் பாரிலுள்ளோர் அனைவருக்கும் பயன் படவேண்டும் என்ற பெருநோக்கு உடையவர்கள்.

அதிலும் கவிஞர்கள் பலரும்,

'என்தன் பாட்டுத் திறத்தாலே வையத்தைப் பாலித்திட வேண்டும்', என்ற உயர்ந்த குறிக்கோளுடன் பாடுபவர்கள்.

எனவே, பதிப்புரிமை என்ற பெயரால் அவர்கள் படைப்புக்களின் பயன் குன்றிவிடக்கூடாது. ஆதலால், அப் பதிப்புரிமை நீடிக்கும் காலத்தை வரையறைசெய்து பல நாடுகளிலும் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

புதுப்புனைவுரிமை (Patent right)

ஒருவர் தமது ஆராய்ச்சியின் பயனாகப் புது இயந்திரம் ஒன்றை உண்டாக்கலாம்; கருவிகளைத் தயாரிக்கலாம்; புதுவகையான மருந்து ஒன்றைக் கண்டு பிடிக்கலாம். இத்தகைய புதுப்புனைவுப் பொருள்கள் அவற்றைக் கண்டுபிடித்தோரின் சொத்துக்கள் ஆகின்றன. இந்த உரிமையைப் 'புதுப்புனை வுரிமை' (Patent right) என்று குறிப்பிடுவார்கள்.

வாணிபப் பெயர்கள்; வணிகக் குறிகள்.

(Trade names and Trade marks)

ஒரு வணிகர் நேர்மையுடனும் திறமையுடனும் வாணிபம் நடத்துகின்றார். நாளடைவில் அந்த வாணிபம் பெருகுவதுடன் அவர் நடத்தும் வாணிபப் பெயருக்கும் (Trade name) புகழ் வளர்கின்றது. அதுபோல், ஒருவர் தயாரித்து விற்கும் பொருளின் தரத்தால் அதற்கு மக்களிடையே மதிப்பு பெருகலாம். அந்தப் பொருளைக் குறிக்கும் 'வணிகக் குறி' (trade-mark) நாளடைவில் மிகுந்த பெயர் பெற்றதாகிவிடுகின்றது. இந்நிலையில் வேறொருவர் அதே வாணிபப் பெயரில் வாணிபம் நடத்தினாலும், அதே வணிகக் குறி இட்டுத் தம் பொருளை விற்றாலும், முதல் வணிகர் பெருநட்டம் அடையலாம். நாட்டு மக்களும் இதனால் ஏமாந்து நட்டமடையலாம்.

இதைத் தடுக்கும் வகையில், வாணிபப் பெயர், வணிகக் குறி இவற்றின் மீது சொத்துரிமை ஏற்படுத்துகிறது சட்டம். ஒருவர் நடத்தும் வாணிபப் பெயரிலோ வணிகக் குறியைப் பயன்படுத்தியோ வேறொருவர் வாணிபம் நடத்துவதைச் சட்டம் அனுமதிப்பதில்லை.

பருப்பொருள் சொத்துக்களைவிட உலகத்தார்க்கு உயர் நலம் அளிப்பவை கலை, இலக்கியம் போன்ற நுண்கலைச் செல்வங்கள்தாம். எனவேதான், சட்டம் இவற்றையும் சொத்துக்கள் எனக் கொண்டு அவற்றின் பொருட்பயனை அவற்றை ஆக்கியோருக்கு அளிக்கிறது.

மேலமை நுண்பொருட் சொத்துக்கள்

நுண்பொருள் சொத்துரிமைகளில் ஒருவகைபற்றி மேலே காண்போம். இனி, இன்னொருவகையான நுண்பொருள் உரிமைகளைக் காணலாம். இவை பருப்பொருட் சொத்துரிமைகளில் இருந்து எழும் மேலமை உரிமைகளாக உள்ளன.

பருப்பொருட் சொத்துரிமை என்பது பல உரிமைகளின் கூட்டு அல்லது இணைப்பு என்று முன்னர்க் கண்டோம். எனவே, சொத்துரிமையர் தமக்கு அச்சொத்தின் மீதுள்ள சில உரிமைகளைப் பிறருக்கு மாற்றுகின்றார். இதனால், அச்சொத்தின்மீது மற்றவர் பெறும் உரிமைகளை, மேலமை உரிமைகள் (rights in re aliena) என்கிறோம்.

மேலமை உரிமைகள் பலவகைப்படுவன. அவற்றில் முக்கியமான மூன்றுவகை உரிமைகளை இங்குக் காணலாம். அவையாவன: 1) குத்தகை 2) வசதியுரிமை 3) பிணையம்.

1) குத்தகை (Lease)

என் தங்க மோதிரத்தைப் பிணையம் வைத்துக் கடன் வாங்குகிறேன். இதை 'அடகு' (pledge) என்பார்கள். என் நிலத்தையோ வீட்டையோ இவ்வாறு பிணையமாகக் கொடுத்துக் கடன்வாங்கினால் அதைக் 'குத்தகை' (lease) என்பார்கள். இரண்டும் ஒரே வகைச் செயல்தான். ஆனாலும், அது அசைபொருளைப் பொறுத்து 'அடகு' என்றும், அசையாப் பொருளைப் பொறுத்து 'குத்தகை' என்றும் வேறுபடுத்திக் கூறப்படுகிறது.

ஒருவருக்குச் சொந்தமான நிலச்சொத்தின்மீது இன்னொருவருக்கு உரிமை எழும்பொழுது அதை அச்சொத்தின் மீது ஏற்படும் 'வில்லங்கம்' (encumberance) என்கிறோம். 'குத்தகை' என்பது ஒருவகை வில்லங்கமாகும்.

சொத்துரிமையர் தம் சொத்தின்மீது தமக்குள்ள உடைமையுரிமையை (right to exclusive possession) இன்னொருவருக்கு மாற்றிக் கொடுப்பதே 'குத்தகை' (lease) ஆகின்றது. குத்தகை உடன்பாட்டில், சொத்துரிமையிலிருந்து உடைமையுரிமை பிரிக்கப்படுகிறது. சொத்துரிமை ஒருவரிடமும் உடைமையரிமை மற்றொருவரிடமும் இருக்கின்றன.

குத்தகையாளர் நிலத்தின் உடைமையைப் பெறுகின்றார். ஆனால், நிலத்தின் சொத்துரிமை அவரிடம் இல்லை. தமக்குச் சொந்தமில்லாத நிலத்தைத் தம் உடைமையில் வைத்திருக்கும் உரிமையுடையவர் குத்தகையாளர் (lessee). குத்தகைக்கு விட்டவரிடம் சொத்துரிமை உள்ளது. ஆனால், உடைமை இல்லை; ஏனெனில், அதை அவர் பிறருக்குக் கொடுத்துவிட்டார்.

குத்தகையாளர் தம் குத்தகை உரிமையை மூன்றாவது நபர் ஒருவருக்கு உட்குத்தகை (Sub-lease) விடலாம்.

நுண்பொருட் சொத்துரிமைகளான பதிப்புரிமை, புதுப்புனைவுரிமை போன்றவற்றையும் குறிப்பிட்ட காலத்திற்குக் குத்தகைக்கு உட்படுத்தலாம்.

2) வசதியுரிமை (Servitude or easement)

ஒருவருக்குச் சொத்துரிமையோ உடைமையோ இல்லாத ஒரு நிலத்தை ஒரு வரம்புக்குட்பட்டு அவர் பயன்படுத்தும் உரிமை **'வசதியுரிமை'** (Servitude) எனப்படும்.

நமது வீட்டிற்குச் செல்வதற்குப் பிறர் உடைமையிலுள்ள அடுத்த நிலத்தின்மீது நடந்து செல்லும் உரிமை நமக்கு இருந்தால், அது *'வழி வசதியுரிமை'* (right of way) ஆகும். அவ்வாறே, அந்நிலத்தின் மீதாக வரும் காற்று, வெளிச்சம் இவற்றைப் பெறும் உரிமைகள் *'வளி வசதியுரிமை'* (right to air), *'ஒளி வசதியுரிமை'* (right to light) எனப்படும்.

நமக்குப் பிறர் நிலத்தின்மீது வசதியுரிமை இருக்கிறது என்றால், அதன் உடைமை நம்மிடம் இல்லை; அதை வரம்புக் குட்பட்டுப் பயன்படுத்தும் உரிமைதான் நமக்கு உண்டு என்பதாகும்.

குத்தகையாளர்களுக்கு உடைமையுரிமை இருக்கிறது; சொத்துரிமை இல்லை. வசதியுரிமையாளருக்கு உடைமை யுரிமையும் இல்லை; சொத்துரிமையும் இல்லை; பயன்படுத்தும் உரிமை மட்டுமே உண்டு.

ஒரு நிலச்சொத்தை அனுபவிப்பதற்கு அதற்குற்ற வசதியுரிமைகள் இன்றியமையாதன ஆகின்றன. பொது வீதியில் இருந்து என் வீட்டிற்கு வருவதற்கு இடையில் மற்றொருவரின் நிலத்தைக் கடந்துதான் வரவேண்டியுள்ளது என்றால், அந்த நிலத்தின்மீது நடந்து வரும் உரிமை, (வழி வசதியுரிமை) எனக்கு உண்டு. அதுபோன்றே என் வீட்டிற்கு நீண்டகாலமாக வரும் காற்றையோ, வெளிச்சத்தையோ தடுக்கும் வகையில் அவர் தமது நிலத்தைப் பயன்படுத்துவது கூடாது. வழக்கமாக வரும் காற்றுக்கும் வெளிச்சத்திற்கும் எனக்குள்ள உரிமைகளை வளி வசதியுரிமை, ஒளி வசதியுரிமை என்கிறோம். மேலும், என் வீட்டிற்குக் கேடுபயக்கும் வகையில் அண்டை நிலத்துக்குரியவர் அதைத் தோண்டிப் பள்ளமாக்குவது கூடாது. ஏனெனில், எனது கட்டிடத்தைப் புறத்திலே தாங்கி நிற்கும் அவர் நிலம் அவ்வாறே தாங்கி நிற்க வேண்டும் என்ற உரிமை எனக்குண்டு. இதைத் *'தாங்கு வசதியுரிமை'* (right tp support) என்பார்கள்.

இத்தகைய வசதியரிமைகள் இன்றியமையாத் தேவை யாலோ, ஒப்பந்தத்தாலோ, நீண்டகால அனுபவத்தாலோ எழுகின்றன.

எந்த நிலச்சொத்தின் நலனுக்காக வசதியுரிமை உள்ளதோ அந்த நிலச்சொத்தை 'மேலமை இருப்பு' (Dominant tenement) என்றும், அந்த வசதியுரிமைக்கு உட்பட்ட நிலத்தைக் 'கீழமை இருப்பு' (Servient tenement) என்றும் குறிப்பிடுவார்கள்.

3) பிணையங்கள் (Securities)

ஒருவர் தமக்குச் சேரவேண்டிய உரிமையை (கடனை) வரப்பற்றுவதற்கு ஏதுவாக ஒரு சொத்தின் மீது ஏற்படுத்தும் வில்லங்கம் (encumberence) 'பிணையம்' எனப்படுகிறது.

நான் எனது சொத்தை ஒருவர் பெயருக்குப் பிணையம் வைத்து அவரிடம் இருந்து கடன் பெறுகிறேன். கடன் கொடுத்தவர் தாம் கொடுத்த கடனை வரப்பற்றுவதற்கு ஏதுவாக என் சொத்தின் மீதான பிணையத்தை ஏற்றுக் கொள்கிறார். நான் கடனைச் செலுத்தத் தவறினால் அவர் எனது சொத்தைச் சட்டப்படி விற்பனைக்குக் கொண்டு வந்து, அந்த விற்பனைத் தொகையிலிருந்து தமக்கு வரவேண்டிய கடன் தொகையை எடுத்துக் கொள்ளலாம். நான் குறித்த காலப்படி அவருக்குச் சேரவேண்டிய கடன்தொகையைக் கட்டி விட்டால், பிணையச் சொத்தை நான் மீட்டுக் கொள்ளலாம்.

இவ்வாறு, பிணையம் (Security) என்பது ஒருவருக்குற்ற உரிமையை நிறைவேற்றுவதற்கான உறுதிக்காப்பாக அமைகின்றது.

பிணையம் என்பதில் இருவகையான வில்லங்கங்கள் உண்டு; ஒன்று, அடைமானம் (mortgage); இரண்டு, பற்றுமானம் (lien).

அடைமானத்தில் கடனாளி (debtor) தம் சொத்தின் மீதான உரிமையொன்றைக்கடன்கொடுத்தவருக்கு மாற்றுகின்றார். எந்த வகையான உரிமை மாற்றப்படுகிறது என்பதைப் பொறுத்து அடைமான வகைகள் அமைகின்றன.

நான் எனது கடிகாரத்தைப் பழுதுபார்ப்பதற்கென்று ஒருவரிடம் கொடுக்கிறேன். பழுதுபார்த்ததற்கான கூலியைக் கொடுத்த பிறகுதான் அந்தக் கடிகாரத்தைப் பழுதுபார்த்தவரிடமிருந்து நான் பெற முடியும். அந்தக் கூலியை நான் கொடுக்கும்வரை கடிகாரத்தைத் தம் வசம் வைத்திருப்பதற்கு அவருக்கு உரிமையுண்டு. இதைச் சட்டம் அனுமதிக்கின்றது.

இந்த உரிமையைத்தான் 'பற்றுமானம்' (lien) என்பார்கள்.

ஒருவர் தமக்குச் சேர வேண்டிய கடன் கொடுக்கப்படும் வரை தம் வசம் உள்ள பொருளை நிறுத்திவைத்துக் கொள்ளலாம். இதைச் சட்டம் அனுமதிக்கிறது. இது தான் பற்றுமானம் என்பது.

அடைமானத்திற்கும் பற்றுமானத்திற்கும் உள்ள வேறுபாடுகள்

அடைமானம் என்பது சம்பந்தப்பட்டவர்களிடை ஏற்பட்ட ஒப்பந்தத்தால் எழும் ஒருவகைப் பிணையமாகும். பற்றுமானம் என்பது ஒப்பந்தம் ஏதும் இன்றியே சட்டப்படி எழும் பிணையமாகும்.

அடைமானத்தில், கடன்காரருக்குக் குறிப்பிட்ட அசையாச் சொத்தின் மீதிருக்கும் நலன், கடன் கொடுத்தவருக்கு மாற்றப்படுகிறது. பற்றுமானத்தில் இத்தகைய மாற்றம் எதுவும் இல்லை.

அடைமானம் என்பது தனித்து நிற்கும் ஓர் உரிமையாகும், மற்றோர் உரிமை எதற்கும் பிணையமாக இருப்பதில்லை அடைமானம். ஆனால், பற்றுமானம் வரவேண்டிய கடனுக்குப் பிணையமாக இருக்கிறது. கடன் செலுத்தப்பட்ட உடனேயே பற்றுமான உரிமை அற்றுப்போய்விடுகிறது.

கடன் அடைபட்ட பிறகுகூட அடைமானம் தொடர்ந்து இருக்கலாம். அடைமானம் பெற்றவர் தமக்கு வரவேண்டிய கடன் வந்தபின் அடைமானச் சொத்தைச் சொத்துரிமையருக்குத் திருப்பி மாற்றவேண்டும். அடைமானச் சொத்தைத் திரும்பப் பெறும் உரிமை 'மீட்புரிமை' (right of redemption) எனப்படும். அந்த மீட்புரிமையினை வைத்தே அடைமானத்தை நாம் அடையாளம் கண்டு கொள்கிறோம். பற்றுமானத்தில் மீட்புரிமை உண்டு என்று எதுவும் இருப்பதற்கில்லை. கடன் அடைபட்ட உடனேயே பற்றுமானம் அற்றுப் போகிறது, எனவே, மீட்புரிமை என்று எழுவதற்கு இடமெதுவுமில்லை.

நுண்பொருள் அசைபொருள்களா? நிலை பொருள்களா?

பருப்பொருள்களை அசை பொருள், நிலைபொருள் என்று

பிரிப்பதைப் போல், நுண்பொருள்களையும், அதாவது உரிமைகளையும், அவ்வாறே பிரிக்கின்றது சட்டம். இவ்வாறு உரிமைகளைப் பிரிப்பது முறையன்று என்கிறார் அறிஞர் சால்மண்ட். ஆயினும், சட்ட வழக்கிலே அத்தகைய பகுப்பு காணப்படுகின்றது.

நிலைபொருள்கள் ஒட்டிய உரிமைகளையும் நிலை பொருள்கள் என்றே சட்டம் கொள்ளுகிறது. எனவே, நிலை பொருட் சொத்துரிமையும் அதிலிருந்து பிரிந்து மாற்றப்பட்ட ஒத்தி, அடைமானம், குத்தகை போன்ற உரிமைகள் அனைத்தும் நிலைபொருள்களாகவே கொள்ளப்படுகின்றன.

அசைபொருள்கள் மீதுள்ள உரிமைகள் அசைபொருள் களாகக் கொள்ளப்படுகின்றன. என் நகைமீது எனக்கு உள்ள சொத்துரிமை அசை பொருள். அதை அடகு வைத்திருக்கிறேன் என்றால் அடகுபெற்றவருக்கு உள்ள உரிமையும் அசைபொருள்.

இவ்வாறு, பருப்பொருள்களின் தன்மைக்கேற்ப அவற்றை ஒட்டியுள்ள உரிமைகளையும் அசைபொருளாகவோ நிலை பொருளாகவோ சட்டம் காண்கிறது.

பருப்பொருள் எதனோடும் ஒட்டாத உரிமைகளும் உண்டு. பதிப்புரிமை (Copy right), புதுப்புனைவுரிமை (Patent), வணிகக் குறியுரிமை (trade mark) இவை போன்ற உரிமைகளையும் சட்டம் அசைபொருளாகக் கொள்கின்றது.

நிலைபொருள் எதனோடும் ஒட்டாத உரிமைகள் அசை பொருள் ஆகின்றன.

நுண்பொருள்கள் உரிமைகளின் உறைவிடம்

உரிமைகளை அசைபொருள், அசையாப்பொருள் என்று பகுப்பதோடு சட்டம் நின்றுவிட வில்லை. உண்மைகளின் உறைவிடம் எது என்பதையும் அது உறுதி செய்கின்றது.

'ஓர் உரிமை இருக்கிறதா என்பதோடு அது எங்கிருக்கிறது என்பதையும் சட்டம் காண்கிறது'[1] என்கிறார் சால்மண்ட்.

'சொத்து' என்ற கருத்தமைவில் (Conception) அது இருக்கும் இடம் ஒன்று உண்டு என்ற கருத்தமைவும் அடங்கியுள்ளது.

[1] Law undertakes to say not merely whether a right exists, but where it exists - Salmond

'உறைவிடம் இல்லாத சொத்து' என்று கூறுவதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை'' என்கிறார் லிண்ட்லே (Lord Lindley) என்ற நீதிபதி.

எந்தப் பொருளைப் பொறுத்து ஓர் உரிமை உள்ளதோ அந்தப் பொருளே அவ்வுரிமையின் உறைவிடம் என்று சட்டம் கொள்ளுகிறது. அசையாப் பொருளைப் பொறுத்த உரிமை என்றால் அப்பொருளோடு அவ்வுரிமையும் அசையாப் பொருளாக உள்ளது. அது சொத்துரிமையாகவோ குத்தகை ஒத்தி போன்று மேலமை உரிமையாகவோ இருக்கலாம். அசை பொருளைப் பொறுத்த உரிமை என்றால் அவ்வுரிமை அந்த அசைபொருளோடு இசைந்து செல்லுகிறது.

இசைந்த பொருள் என்று எதுவும் இல்லாத உரிமைகளான பதிப்புரிமை (copy right), கடனைத் திரும்பப் பெறும் உரிமை போன்றவை எங்கு இருப்பதாகக் கருதப்பட வேண்டும் என்பதற்கான பல்வேறு சட்ட விதிகள் உள்ளன.

இசைந்த பொருள் என்று எதுவும் இல்லாத உரிமைகளான பதிப்புரிமை (Copy right), கடனைத் திரும்பப் பெறும் உரிமை போன்றவை எங்கு இருப்பதாகக் கருதப்பட வேண்டும் என்பதற்கான பல்வேறு சட்ட விதிகள் உள்ளன.

ஓர் உரிமை குறித்து எந்த இடத்தில் வழக்கிட வேண்டும் என்ற வினா எழும்போது, அந்த உரிமையின் உறைவிடம் எது என்ற வினாவும் எழுகின்றது. 'உரிமை வழக்குமுறைச் சட்டத் தொகுப்பு' (Civil procedure code) இதற்கான விதிகளைக் கூறுகின்றது.

ஒரு கடனை வரப்பற்றுவதற்கு வழக்கிட வேண்டிய இடம் கடனாளி இருக்கும் இடம் என்று இச்சட்டம் கூறுகிறது. எனவே, கடனை வரப்பற்றும் உரிமை இருக்குமிடம் கடனாளி இருக்கும் இடம் எனச் சட்டம் கொள்கிறது.

சொத்தை அடையும் வழிவகைகள்

ஒரு சொத்தை ஒருவர் எவ்வாறு அடைகின்றார்?

ஒருவருக்கு ஒரு பொருளின்மீது சொத்துரிமை எவ்வாறு உண்டாகிறது?

நான்கு வழிவகைகளில் சொத்துரிமை பிறப்பதாகச்

சட்டம் கொள்ளுகிறது. அவையாவன:

1. உடைமை (Possession)
2. நீளுடைமை (prescription)
3. உடன்பாடு (Agreement)
4. இறங்குரிமை (Inheritance)

1. உடைமை (Possession)

மீனவர்கள் கடல் மேற்சென்று பல வகையான மீன்களைப் பிடித்துக் கொண்டு திரும்புகின்றனர். அவர்கள் பிடித்த மீன்கள் அவர்களுக்கே சொந்தமாகின்றன. வானத்துப் பறவைகள் அவற்றைப் பிடித்தவர்களுக்குச் சொந்தமாகின்றன. எனவே, ஒரு பொருளை உடைமை கொண்டவர்கள் அதன் மீது சொத்துரிமை பெறுகின்றனர்.

நம் நாட்டில் ஆதிகால அறநூல்களும் உடைமையைச் சொத்துரிமைக்கு மூலமாகக் கூறுகின்றன.

'மரங்களை வெட்டி நிலத்தைச் சீர்ப்படுத்தியவனுக்கு நிலம் சொந்தமாகின்றது. அம்பினால் ஒரு மானை அடித்தவன் அதன் சொந்தக்காரனாகிறான்'— மனு - அத்.9—விதி44 .

இதுவே இன்றைய சட்டத்தின் கொள்கையாகும். பருப் பொருள் மீதான உடைமை அதன் மீதான சொத்துரிமைக்கு மூலமாகிறது. எந்நிலையில்? அப்பொருள் வேறு எவருக்கும் சொந்தம் இல்லாத நிலையில். எவருக்கும் சொந்தம் இல்லாத பொருளை உரோமானியச் சட்டம் res nullius என்று குறிக்கின்றது. கடலில் வாழும் மீன்களும் காட்டுப் பறவைகளும் எவருக்கும் சொந்தமானவை அல்ல. எனவே, அவற்றை எவர் முதலில் பிடித்து உடைமை கொள்ளுகிறாரோ அவரே அவற்றின் சொந்தக்காரர் ஆகிறார். இலத்தீன் மொழியில் இந்த முறையை occupatio என்பார்கள்.

பிறருக்குச் சொந்தமான பொருளைத் தம் உடைமையில் கொள்வோரின் உடைமையும் சட்டத்தால் பாதுகாக்கப்படுகிறது. அப்பொருளின் சொந்தக்காரரைத் தவிர வேறு எவரும் அந்த உடைமையைக் குலைப்பது கூடாது என்பது சட்டம். நான் அணிந்திருக்கும் மோதிரம் என்னுடையதாக இருக்கலாம்; அல்லது பிறரிடமிருந்து திருடியதாக இருக்கலாம். ஆயினும், அதை வேறு எவராவது என்னிடமிருந்து திருடினால் அதை நான் மீட்பதற்குச் சட்டம் உதவுகிறது. அந்த மோதிரத்தை நான் விற்கலாம்.

என்னிடம் வாங்கியவரிடமிருந்தும் அதன் சொந்தக்காரரைத் தவிர வேறு எவரும் அதைக் கோரிப் பெறுதல் முடியாது.

ஒரு பொருளின் சொந்தக்காரர் ஒருவராகவும் அதன் எதிர் உடைமையாளர் மற்றொருவராகவும் இருக்கும் நிலையில், அப்பொருளுக்கு உண்மையில் இரண்டு சொந்தக்காரர்கள் உள்ளனர். ஒருவரது சொத்துரிமை முழுமையானது, குறைவற்றது; மற்றவரின் சொத்துரிமை நிறைவற்றது. உடைமையாளருக்கு உள்ள நிறைவற்ற சொத்துரிமையை 'உடைமைச் சொத்துரிமை' (Possessory ownership) என்கிறார் சால்மண்ட்.

உடைமைச் சொத்துரிமையரிடமிருந்து அப்பொருளை அதன் உண்மையான சொந்தக்காரரைத் தவிர வேறு எவரும் கோரிப் பெறுதல் இயலாது என்று சட்டம் விதிக்கிறது. மூன்றாவது நபர் எவரும் அந்தப் பொருளின் உண்மையான சொத்துரிமை அதன் அப்போதைய உடைமையாளரிடம் இல்லை என்ற காரணம் காட்டி, அப்பொருளைப் பெறுதல் இயலாது. உண்மையான சொந்தக்காரரின் சொத்துரிமையைத் தமக்குச் சாதகமாகக் காட்டி வாதாடுவதை (jus tertii) என்று இலத்தீனில் கூறுவார்கள். இந்த வாதம் உடைமைச் சொத்துரிமையருக்கு எதிராக எடுபடுவதில்லை என்று சட்டம் விதிக்கிறது.

சட்டத்தின் கொள்கை இவ்வாறு இல்லை எனில், உண்மையான சொத்துரிமையற்றவர்கள் பலரும் பிறர் சொத்தைப் பொறுத்து உரிமை கொண்டாடும் கணக்கற்ற வழக்குகள் எழுவதற்கு வழிவகுப்பதாகிவிடும்.

2) 'நீளுடைமை' (prescription)

காலம் என்பது மிகவும் ஆற்றல் வாய்ந்தது. கால வெள்ளத்திலே கரைந்து போன பேரரசுகள் எத்தனை? மறைந்து போன மாவீரர்கள் எத்தனை?

கடமைகளையும் உரிமைகளையும் வகுக்கும் சட்டம் காலத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்கிறது. காலத்திற்கு உரிமைகளை ஆக்கும் ஆற்றலும், அழிக்கும் ஆற்றலும் இருப்பதாகச் சட்டம் கொள்ளுகிறது.[1]

---

1 Prescription may be defined as the effect of lapse of time in creating or destroying rights - Salmond

Prescription என்ற ஆங்கிலச் சொல் Precriptio என்ற இலத்தீன் சொல்லின் மருவுதல் ஆகும். அச்சொல்லை மொழி பெயர்க்காமல் அச்சொல்லின் கருத்தமைவினை உணர்த்தும் வகையில் அதை 'நீண்டகால உடைமை' அதாவது 'நீளுடைமை' என்று தமிழில் கூறுகிறோம். (நீள் + உடைமை = நீளுடைமை).

அதாவது, சொத்துரிமை அடைவதற்கான வழிவகைகளில் 'நீளுடைமையும்' ஒன்று என்பதாகும். இது எவ்வாறு என்று காண்போம்.

ஓர் இயந்திரம் ஓடாது நீண்ட நாள்கள் இருந்தால் நாளடைவில் அது இற்றுப் போய்விடுகிறது. அது போன்றே, ஓர் உரிமை இயங்காமல் நீண்ட நாள்கள் இருந்தால் நாளடைவில் அது உயிரற்றுப் போகிறது.

உரிமை இயங்குவது எப்படி?

பருப்பொருளைப் பொறுத்த சொத்துரிமை என்றால், அச்சொத்துரிமையர் அந்தச் சொத்தைத் தமது உடைமையில் வைத்து அனுபவிக்க வேண்டும். அவ்வுரிமையும் உடைமையும் ஒன்றியிருக்கும் பொழுதுதான் அந்த உரிமை இயங்குகிறது என்று கூற முடியும்.

ஒரு வீட்டின்மீது சொத்துரிமை உள்ளவர் அந்த வீட்டைத் தம் உடைமையில் வைக்காமல் விட்டுவிடுகிறார். வேறு ஒருவர் அந்த வீட்டைத் தமது வீடாகக் காட்டிக்கொண்டு பன்னிரண்டு ஆண்டுகள் தம் உடைமையில் வைத்திருக்கிறார். இவ்வாறு, பன்னிரண்டு ஆண்டுக்காலம் முடிந்து விட்டால், அந்த வீடு எவர் உடைமையில் இருக்கிறதோ அவருக்குச் சொந்தமாகி விடுகின்றது. முதலில் சொத்துரிமை எவருக்கு இருந்ததோ அவர் அதை இழந்து விடுகிறார். இது இன்றைய சட்டம்.

இவ்வாறு, ஒருவருக்குள்ள சொத்துரிமை குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு இயங்காமல் இருந்துவிட்டால், அந்த உரிமை அற்றுப்போய்விடுகிறது. அந்தக் காலம் முழுவதும் எவர் உடைமையில் அச்சொத்து இருந்ததோ அவர் சொத்துரிமையர் ஆகி விடுகின்றார். இவ்வாறு, நீளுடைமையால் சொத்துரிமை எய்தப்பெறுகிறது.

எனவே, காலக் கழிவால் இரு பயன்கள் விளைகின்றன. ஒருவர் தமது சொத்துரிமையை இழக்கின்றார்; இன்னொருவர்

இவ்வுரிமையைப் பெறுகின்றார். இவ்வாறு, நெடுங்கால உடைமையால் உரிமை உண்டாகிறது; நெடுங்கால உடைமை யின்மையால் உரிமை அழிகிறது. ஒரு புறம் உரிமை காலத்தால் கனிகின்றது. மறுபுறம் அது காலத்தால் கருகுகின்றது.

உரிமையை உண்டாக்கும் நெடுங்கால உடைமையினை ஆக்கும் நீளுடைமை' (Positive prescription) என்றும், உரிமையை அழிக்கும் நெடுங்கால உடைமையின்மையை 'அழிக்கும் நீளுடைமை' (negative prescription) என்றும் இருவகையாகப் பிரிக்கின்றார் சால்மண்ட். அவற்றை 'ஈட்டும் நீளுடைமை' (acquisitive prescription) என்றும், 'இழக்கும் நீளுடைமை' (extinctive prescription) என்றும் அவர் கூறுகின்றார்.

சில நேர்வுகளில் ஒருவர் உடைமையின்மையால் தம் சொத்துரிமையினை இழந்து விடலாம்.ஆனால், அச்சொத்தின் மீது இன்னொருவருக்கு உரிமை எழாமலும் இருக்கலாம். ஏனெனில், அச்சொத்தைப் பன்னிரண்டு வருடம் எதிர் உடைமையாக அனுபவித்தவருக்குத்தான் சொத்துரிமை எழுகின்றது. எவரும் தொடர்ந்து பன்னிரண்டு வருடங்கள் அவ்வாறு அதை அனுபவிக்காத நிலையில் எவருக்கும் சொத்துரிமை பிறப்பதில்லை.

பொதுவாக, ஒரு சொத்துரிமையர் அச்சொத்தின் உடைமையாளராகவும் இருக்கிறார்; சொத்தின் உடைமையாளர் அதன் உரிமையாளராகவும் இருக்கிறார். இது பொதுவாக நிகழ்வது. உரிமையும் உடைமையும் ஒன்றியே உள்ளன. ஆதலால், உடைமையினைச் சட்டம் உரிமைக்குச் சான்றாகக் கொள்கிறது; உடைமையின்மை உரிமையின்மைக்குச் சான்றாகிறது. நீண்டநாள் உடைமையின்மை உரிமையின்மைக்கு வலுவான சான்றாகின்றது. எனவே, ஒரு வீட்டில் பன்னிரண்டு ஆண்டுகளாக நான் குடியிருந்து வருகிறேன் என்றால் — எனது வீடாகப் பாவித்து அதை என் உடைமையில் வைத்துள்ளேன் என்றால் — அந்த வீட்டிற்கு நான்தான் சொந்தக்காரன் என்பதற்கு வேறு என்ன சான்று வேண்டும்? நெடுநாள் உடைமை நிச்சயமாக்குகிறது என் சொத்துரிமையை.

காலப்போக்கிலே, உரிமையைக் காட்டும் ஆவணங்கள் தொலைந்து விடலாம்; சாட்சிகள் மாண்டு போகலாம். ஆனால், உடைமை தொடர்ந்து இருக்கும் பொழுது, அது உரிமையை நிலைநாட்டும் உறுதியான சான்று ஆகின்றது. அது போன்றே,

தொடர்ந்த உடைமையின்மை, உரிமையின்மையைக் காட்டும் உறுதிச் சான்றாகிறது.

இவ்வாறு, சொத்துரிமைக்குச் சான்றான நெடுங்காலச் சொத்துரிமையினைச் சான்றாக மட்டுமே கொள்ளாமல், சொத்துரிமைக்கு மூலமாகவே கொள்ளுகிறது சட்டம். சொத்துரிமையின் பிறப்பிடமாகின்றது நீளுடைமை.[1]

உரிமைக்குச் சான்றான உடைமை (evidence of title) நாளடைவில் உரிமைக்கு மூலமாக (Source of title) மாறுகின்றது.

இந்த இடத்தில் உடைமை என்பதன் உண்மைப் பொருளை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். எனது வீட்டில் இருபது வருடங்களாக ஒருவர் வாடகை கொடுத்துக் குடியிருந்து வருகிறார் என்றால், அவர் உடைமையினால் எனது சொத்துரிமை சிறிதும் பாதிக்கப்படுவதில்லை. ஏனெனில் எனக்குப் 'பக்ர உடைமை' (Mediate possession) அந்த வீட்டின் மீது உள்ளது. மேலும், அவர் எனக்கு வாடகையைக் கொடுப்பதன்வழியாக எனது சொத்துரிமையை ஒப்புக் கொண்டு குடியிருந்து வருகிறார். எனது உரிமையை அழிக்கும் உடைமை என்றால், அது என் சொத்துரிமையை மறுக்கும் உடைமையாக இருத்தல் வேண்டும். குடியிருப்பவர் நகராட்சி ஆவணங்களில் வீட்டைத் தனது பெயருக்கு மாற்றிக் கொண்டு, எனக்கு வாடகை தர மறுத்து, அந்த வீடு அவருக்குத்தான் சொந்தமானது என்பதை வெளிப்படையாகக் காட்டும் வகையில் அவரது உடைமை இருத்தல் வேண்டும். இத்தகைய உடைமையை 'எதிர் உடைமை' (adverse possession) என்பார்கள். அதாவது, உண்மையான சொத்துரிமையரின் உரிமையை மறுக்கும் வகையில், அதற்கு எதிரான உடைமையாக இருத்தல் வேண்டும். 'நெடுங்கால உடைமை' என்று கூறும் போது அத்தகைய எதிர்உடைமையே குறிக்கப்படுகின்றது.

இங்கு நமக்கு ஓர் ஐயப்பாடு எழலாம். தம் சொத்து டைமையினை ஒருவர் ஏதோ பன்னிரண்டு வருடங்கள் இழந்து விட்டார் என்பதற்காக, அவருக்கு உள்ள சொத்துரிமையை மறுப்பதா? உடைமையினை இழந்ததால் உரிமையையும் இழக்க

---

1 Lapse of time is recognised as creative and destructive of rights, instead of merely as evidence for and against their existence - Salmond

வேண்டும் என்று சட்டம் கூறுவது நியாயமா? இந்த ஐயப்பாடு எழுகின்றது.

ஒருவர் ஒரு வீட்டில் பதினைந்து ஆண்டுகளாகக் குடியிருந்து வருகிறார். நகராட்சி ஆவணங்களில் அந்த வீடு அவர் பெயரில் இருக்கிறது. அந்த வீட்டை அவர் பிறருக்குப் பல முறை அடைமானம் வைத்திருக்கிறார்; மீட்டிருக்கிறார். இந்த ஆவணங்களில் இருந்து தெரிவதென்ன? அவர் அந்த வீட்டின் சொந்தக்காரர் என்பதுதான். நான் அவரிடமிருந்து அந்த வீட்டைத் தக்க விலைகொடுத்து வாங்குகிறேன். அதற்குப் பிறகு இரண்டு வருடங்கள் கழித்து ஒருவர் வந்து அந்த வீடு தமக்குத்தான் சொந்தம் என்று அதற்கான ஆவணங்களைக் காட்டுகிறார்; காட்டி என் மீது வழக்கிடுகிறார் என்று வைத்துக் கொள்வோம். வழக்கிட்டவரின் பூர்வீகச் சொத்து அந்த வீடு என்பதும் தெரிகிறது என்று வைத்துக் கொள்வோம். இந்நிலையில் விலைகொடுத்து வாங்கிய நான் வீட்டை இழப்பது நியாயமா? சொத்துரிமை உடையவரின் கவனமின்மையால்தானே, இன்னொருவர் அந்த வீட்டைத் தனதாக்கி உடைமை கொண்டிருந்தார். அவர்தான் சொத்துரிமையர் என்று நல்லெண்ணத்துடன் நம்பித்தானே நான் அந்த வீட்டை வாங்கினேன். இதற்குக் காரணம் சொத்துரிமையரின் மன்னிக்க முடியாத அசட்டைப் போக்குத்தானே? அவர் உடைமையினைத் துறந்துஇருந்தது என்ன ஓராண்டு காலமா, ஈராண்டு காலமா? பதினைந்து ஆண்டுகளாக, சொத்தின் உடைமையினைத் துறந்தவர் இன்று வந்து அந்தச் சொத்தைக் கோருவது எப்படி நியாயம் ஆகும்?

'சட்டம் உதவுவது விழிப்புடன் இருப்போர்க்கே, தூங்கிக் கிடப்பவர்க்கன்று' என்பது இலத்தீன் பழமொழியாகும்.[1]

எனவேதான், நெடுங்கால உடைமையின்மை சொத்துரிமையை அழித்துவிடுகிறது என்று கூறுகிறது சட்டம். அவரது கவனமின்மைக்கு அவரது உரிமை இழப்பே சரியான தண்டனை ஆகின்றது.

இந்தக் கோட்பாடுதான், 'நீளுடைமை' என்ற சட்டக் கொள்கைக்கு ஆதாரமாகின்றது.

பாரதநாட்டின் பழங்காலச் சட்ட நெறிகளிலும் இந்தக் கொள்கையைக் காணுகின்றோம்:

[1] Vigilantibus non dormientribus jura subveniunt — Laws come to the assistance of the vigilant, not of the sleepy

'ஒருவன் தனது சொத்தை இன்னொருவன் அனுபவித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தும்கூட பத்தாண்டுகள் வரை வாளாவிருந்து விட்டால், அதன் பின் அச்சொத்தைப் பெறும் உரிமை அவனுக்கு இல்லை.' — மனு — அத்.விதி 147

'ஒருவருக்கு ஒரு பொருள் விலைக்கோ கொடையாகவோ கிடைத்ததில்லை என்றாலும், அந்தப் பொருளை அவர் எவ்விதத் தடையுமின்றி அறுபது ஆண்டுகள் அனுபவித்துவிட்டால், அப்பொருளில் அவருக்கன்றி வேறு எவருக்கும் உரிமை இல்லை.' — சுக்கிர நீதி.

'தனக்குச் சொந்தமான நிலத்தை இன்னொருவன் அனுபவிப்பதைப் பார்த்தும், அதை இருபது ஆண்டுகள்வரை தடைசெய்யாது இருந்தவனும், தனது இதர பொருள்களைப் பிறர் அனுபவிப்பதைக் கண்டும் பத்து ஆண்டுகள் வரை வாளா இருந்தவனும், அந்தப் பொருள்களைப் பொறுத்த தன் உரிமைகளை இழந்து விடுகிறான்.' — யாக்ஞவல்கியர்-2—2—24.

இவ்வாறு இன்றைய சட்டம் இல்லையெனில் நம் சொத்துரிமைகள் அனைத்தும் நிலயற்றனவாகிவிடும். எவருடைய சொத்துரிமை பற்றியும் உறுதிப்பாடு இருக்க முடியாது.

3) உடன்பாடு

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் தங்களுக்குள் செய்து கொள்ளும் உடன்பாட்டின் பயனாகவும் சொத்துரிமை ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு மாறலாம். ஒருவருக்குச் சொந்தமான நிலத்தை நான் விலைகொடுத்து வாங்குகிறேன். விலைக்கு விற்பவர் தமது சொத்துரிமையை எனக்கு மாற்றும் வகையில் விற்பனை ஆவணத்தை எழுதிக் கொடுக்கிறார். இந்த விற்பனை உடன்பாட்டின் பயனாக நிலத்தின் சொத்துரிமை எனக்குக் கிடைக்கிறது.

ஒருவர் தமக்குச் சொந்தமான சொத்தின்மீது குத்தகை உரிமையை ஏற்படுத்தி அதை இன்னொருவருக்கு அளிக்கிறார் என்றால் அதை 'அளித்தல்' (grant) என்பார்கள். குத்தகை பெற்றவர் அந்த உரிமையினை இன்னொருவருக்கு மாற்றி அளித்தால் அதை 'மாற்றியளித்தல்' (assignment) என்பார்கள்.

'தன்னிடம் இல்லாததை எவரும் அளித்தல் இயலாது' என்பது இலத்தீன் பழமொழி.[1]

'அளிப்பவரின் உரிமையைவிட பெறுபவரின் உரிமை பெரிதாக இருத்தல் இயலாது' — என்பது சட்டத்தின் தலையாய கொள்கையாகும். இந்தச் சட்ட விதிக்கு முக்கியமான விலக்குகள் உண்டு.

பொறுப்பமைப்பு (Trust) ஏற்பாட்டில் பொறுப்புரிமையருக்கு (Trustee) உள்ள சொத்துரிமை பயனுரிமையரின் (Beneficiary) உரிமைகளுக்கு உட்பட்டது என்று கண்டோம். பொறுபபுரிமையர் பெயரளவில்தான் சொத்துரிமையர் என்றும் கண்டோம். அனால், பொறுப்பமைப்புச் சொத்தின்மீதுள்ள இந்த வில்லங்கம் பற்றித் தெரியாத ஒருவர் பொறுப்புரிமையரிடமிருந்து அச்சொத்தை விலைக்கு வாங்கினார் என்றால், அவ்வாறு வாங்கியவர் அந்தச் சொத்தின் முழுதுமான சொத்துரிமையினைப் பெறுகின்றார், என்கிறது சட்டம். அவரை பொறுப்பமைப்பு ஏற்பாடு கட்டுப்படுத்துவதில்லை. காரணம் பொறுப்புரிமையரின் சொத்துரிமை சட்டமுறையானது (legal) என்றும், பயனுரிமையரின் சொத்துரிமை தகுமுறையானது (equitable) என்றும் சட்டம் கொள்கிறது. சட்டப்படியான சொத்துரிமையின்மீது இன்னொருவருக்குள்ள தகுமுறையான சொத்துரிமை, அதனைப்பற்றி ஏதும் தெரியாமல் அச்சொத்தை வாங்கியவரைப் பாதிப்பதில்லை என்பது சட்டவிதியாகும். இதைச் சட்டவிதி என்று கூறுவதைவிட, சட்டநெறி பயிலும் தகுமுறைக் கொள்கை என்றே கூறலாம்.[2]

இது போன்றே, சொத்துரிமை ஒருவரிடமும் அந்தச் சொத்துடைமை மற்றொருவரிடமும் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். உடைமையாளர் சொத்துரிமையராகவே பிறரிடம் நடந்து வருகிறார். அதைச் சொத்துரிமையர் கண்டும் காணாதது போல் இருக்கிறார். இந்நிலையில் உடைமையாளரே சொத்துரிமையாளர் என்று நம்பிய ஒருவர் அச்சொத்தை உடைமையாளரிடம் இருந்து விலைக்கு வாங்குகிறார் என்றால், அவ்வாறு வாங்கியவர் முழுதுமான சொத்துரிமை பெறுகின்றார்.

---

[1] Nemo dat qui non habet — No one gives what he does not possess.

[2] This rule is known as the equitable doctrine of purchase for value without notice.

'அளிப்பவரின் உரிமையைவிடப் பெறுவரின் உரிமை பெரிதாக இருத்தல் இயலாது' — என்ற சட்டக் கொள்கைக்கு இவ்வாறான விலக்குகளைத் தகுமுறைக் கோட்பாட்டின் (doctrine of equity) அடிப்படையில் சட்டம் அளிக்கிறது.

4) இறங்குரிமை (Inheritance)

இறந்தபின் எவருக்கும் சொத்துரிமை கிடையாது என்பது உண்மைதான். ஆனால், ஒருவர் இறந்தவுடன் அவர் சொத்து ரிமைகளும் இறந்து விடுவதில்லை. அவை அவரை விட்டுப் பிரிந்து அவரது வழித்தோன்றல்களுக்குப் போய்ச் சேருகின்றன. இறந்தவர் விருப்பாவணம் (will) எழுதி வைத்திருந்தால் அதில் கண்டவர்களுக்கு அவர் சொத்துக்கள் சேருகின்றன. விருப்பா வணம் ஏதும் இல்லையெனில் சட்டப்படியான இறங்குரிமை யருக்கு இறந்தவர் சொத்து சேர்கின்றது. இறந்தவருக்குக் கடன்கள் இருந்தால் அவற்றை அச்சொத்துக்களிலிருந்து அடைக்க வேண்டும். இதற்குட்பட்டு, இறந்தவரின் சொத்து இறங்குரிமை யர்களுக்குச் (வாரிசுகள்) சேருகின்றது.

தமக்குப் பிறகு தமது சொத்து இன்னாருக்குச் சேர வேண்டும் என்று கூற ் விருப்பாவணம் எழுதும் உரிமை ஒருவருக்கு இருந்தாலும், அந்த உரிமைக்குச் சில கட்டு வரம்புகள் உண்டு. அவை யாவன:

1) இறந்தவர் விட்டுச் செல்லும் சொத்துக்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் முழுதுமான உரிமையுடன் இறங்குரிமையர்களைச் சேர வேண்டும். அவரது விருப்பாவணத்தில் காணப்படும் கட்டுவரம்புகள் காலவரம்பின்றி நீடித்தல் இயலாது.

இதற்கான சட்டவிதியை 'சொத்து மாற்றுச் சட்டத்தில்' (Transfer of Property act) காணுகின்றோம். விருப்பாவணம் எழுதுபவர் தம் சொத்துக்கள் தமது பிள்ளைகளுக்கும், அவர்கள் ஆயுளுக்)ப் பின் அவர்கள் பிள்ளைகளுக்கும் என்று முடிவே இல்லாமல் எழுதிவைத்தல் கூடாது. அவர் இறக்கும் போது உயிரோடிருப்பவர்களின் ஆயுட்காலம் வரையிலும், அதற்குப் பின் பதினெட்டு ஆண்டுகள் வரையிலும், விருப்பாவணக் கட்டு வரம்புகள் செல்லுபடியாகும். அதற்குப் பின் அச்சொத்து, வரம்பு ஏதுமில்லாத முழுதுமான உரிமையுடன், இறங்குரிமையர்களைச் சேருகிறது.

2) விருப்பாவணம் எழுதுபவர் தமது சொத்து அனைத்தையும் தம் விருப்பப்படி எழுதிவைத்தல் இயலாது. சட்டப்படி அச்சொத்தில் இருந்து வாழ்க்கைப் பணம் பெறு வதற்கு உரிமையுடையவர்கள் இருந்தால், அவர்களின் உரிமைக்கு உட்பட்டே இறங்குரிமையர் அச்சொத்தைப் பெறுகின்றனர்.

3) விருப்பாவணம் எழுதுபவர் தமது சொத்துக்களை எவரும் பயன்படுத்தல் கூடாது என்றோ, தம் நிலங்கள் தரிசாகக் கிடக்க வேண்டும் என்றோ எழுதி வைத்தால் அது செல்லுடைமையாவதில்லை. பிறருக்குப் பயன்படும் வகையில் தான் தம் சொத்துக்களை அவர் எழுதி வைக்க வேண்டும். அவ்வாறு பயன்படாமல் பாழாக்குவதற்குச் சட்டம் இடமளிப் பதில்லை.

இவ்வாறாக, உடைமை, நீளுடைமை, உடன்பாடு, இறங்குரிமை என்ற நான்கு வழிவகையில் ஒருவர் சொத்துக்களை அடைகின்றார்.

கடமைகளும், கடப்பாடுகளும்

(Duties and Obligations).

[கடமை — உரிமையும் கடமையும் எதிரிணையானவை — ஆஸ்டினின் கொள்கை — அடிப்படைக் கடமைகள் — கடமைகள் பற்றி ஆசிரியர் டயஸ் கூறுவது — கடமைகள் ஆணைகளா? —கடமைகள் செல்லுறுத்தப்படுவனவா? — கடமைகள் என்றால் சட்ட மேலுறுத்தம் இருக்க வேண்டுமா? கடமையின் இயக்கம் — கடப்பாடுகள் — வழக்கடைபொருள் — இணைவுறு கடப்பாடுகள்]

கடமை (Duty)

'கடன் என்ப நல்லவை எல்லாம்' — நல்லவை அனைத்தும் நம் கடமை — என்பது அறநெறி. சட்ட நெறியில் நல்லவை எல்லாம் நம் கடமைகள் ஆவதில்லை. நாம் எதைச் செய்ய வேண்டும் எனச் சட்டம் விதிக்கின்றதோ அது நம் 'சட்டமுறைக் கடமை' (legal duty) ஆகின்றது.

'ஒருவர் எதைக் கட்டாயமாகச் செய்யவேண்டும் என்று சட்டம் விதிக்கின்றதோ அது அவரது கடமையாகும்; அதைச் செய்யாதிருத்தல் 'தீங்கு' (wrong) ஆகும்' என்கிறார் சால்மண்ட்.[1]

'ஒருவருக்குள்ள உரிமையைப் பொறுத்து ஒன்றைச் செய்தல்வேண்டுமென்றோ, செய்தல் ஆகாது என்றோ அரசு விதிப்பது கடமை ஆகிறது; அக்கடமையை மீறுதல் தீங்கு ஆகிறது' — என்பது பேராசிரியர் கீட்டன் (Prof. Keeton) என்பாரின் விளக்கம்.

எதைக் 'கடமை' (Duty) என்று சட்டம் ஏற்கின்றதோ அதன்

1 A duty is roughly speaking an act which one ought to do, an act the opposite of which would be a wrong - Salmond

நிறைவேற்றத்தைச் (Performance) சட்டம் செல்லுறுத்துகிறது; நிறைவேற்றத் தவறியவரைத் தண்டிக்கிறது.

உரிமையும் கடமையும் எதிரிணையானவை

'உரிமை' என்ற சொல்லுக்கு எதிரிணையானது (correlative) 'கடமை'.

ஒருவருக்கு ஓர் உரிமை இருந்தால் அதன் தொடர்பான கடமை இன்னொருவருக்கு இருக்கும். அந்த உரிமையைக் குறித்தே இந்தக் கடமை எழுகின்றது. உரிமை இன்றிக் கடமை இல்லை; கடமை இன்றி உரிமை இல்லை. உரிமையும் கடமையும் ஒரே நாணயத்தின் இருபக்கங்கள் போன்று உள்ளன.

ஒருவருக்குச் செலுத்தப்பட வேண்டியது கடமை; ஒருவருக்கு எதிராகக் கோரப்படுவது உரிமை. எனவே, கடமை என்றால் அதற்கான உரிமை உண்டு; உரிமை என்றால் அதற்குற்ற கடமை உண்டு.[1]

ஹாலண்ட் (Holland), சால்மண்ட், பேட்டன் போன்ற சட்ட இயலறிஞர்கள் உரிமையும் கடமையும் எதிரிணையானவை (Correlatives) என்று கூறுவதை ஆஸ்டின் (Austin) ஆலன் (Allen) போன்ற அறிஞர்கள் ஏற்பதில்லை.

ஆஸ்டினின் கொள்கை

ஆஸ்டின் கடமைகளை இருவகைகளாகப் பிரிக்கின்றார்.

அடிப்படைக் கடமைகள் (Absolute duties), தொடர்புடைக் கடமைகள் (Relative duties) என இருவகைக் கடமைகள்.

அடிப்படைக் கடமைகளுக்கு எதிரிணையானஉரிமைகள் எவருக்கும் இல்லை. அவை சட்டத்தால் விதிக்கப்படும் கடமைகள். ஆனால், தொடர்புடைக் கடமைகளுக்கு இணைந்த உரிமைகள் உண்டு. எனவே, உரிமையும் கடமையும் எதிரிணைகள் என்பது தொடர்புடைக் கடமைகளுக்கே பொருந்துவதாகும். அது அடிப்படைக் கடமைகளுக்குப் பொருந்துவதில்லை. இது ஆஸ்டினின் கொள்கை.

---

1 There can be no duty unless there is someone to whom it is due; there can be no right unless there is someone from whom it is claimed - Salmond

அடிப்படைக் கடமைகள்

அடிப்படைக் கடமைகளை நான்கு வகைகளாகப் பிரிக்கின்றார் ஆஸ்டின்:

1) நபர்களைப் பொறுத்து இல்லாத கடமைகள். (கடவுளைப் பொறுத்த, விலங்குகளைப் பொறுத்த கடமைகள்)

2) குறிப்பிட்ட நபர்களைப் பொறுத்து இல்லாத கடமைகள். (சமுதாயத்தைப் பொறுத்த கடமைகள்)

3) தன்னைப் பொறுத்த கடமைகள்.

4) அரசைப் பொறுத்த கடமைகள்.

இக்கடமைகளுக்கு எதிரிணையான உரிமைகள் எவருக்கும் இல்லை என்கிறார் ஆஸ்டின்.

ஆஸ்டின் கூறும் அடிப்படைக் கடமைகள் ஆயும் ஆசிரியர் பேட்டன் இவ்வாறு கூறுகின்றார்.

1) கடவுளைப் பொறுத்த கடமைகள் சட்டத்தால் விளைவன அல்ல; சமயத்தால் எழுவன. விலங்குகளைத் துன்பப்ப்டுத்தக் கூடாது என்ற எனது கடமைக்குத் தொடர்பான உரிமை விலங்குகளுக்கு இல்லை என்றாலும், சமுதாயத்திற்கு அந்த உரிமை உண்டு.

2) குறித்த நபர்களைப் பொறுத்து இல்லாத கடமைகள் 'பொதுவான கடமைகள்' (general duties). ஒருவருக்கு அவதூறு விளைத்தல் கூடாது என்பது எனக்குள்ள கடமை. இதற்கான உரிமை சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் உண்டு. நான் எவரைக் குறித்தும் அவதூறு இழைத்தல் தீங்காகிறது. எனவே, ஒவ்வொருவருக்கும் அதன் தொடர்பான உரிமை உள்ளது.

3) தன்னைப் பொறுத்த கடமை என்று எதுவும் இருக்க முடியாது. ஒருவர் தற்கொலை செய்வது கூடாது என்றால், அது அவரைப் பொறுத்த கடமை அன்று; குற்றஇயல் சட்டம் விதிக்கும் கடமை இது.

4) அரசைப் பொறுத்த கடமைகளுக்கான உரிமை அரசுக்கு உண்டு. அரசுக்கும் குடிமக்களுக்கும் இடையில் உரிமை கடமை உறவு இருக்க முடியாது என்பது ஆஸ்டினின் கருத்தாகும். இரண்டு நபர்களுக்கு இடையில் உரிமை—கடமை உறவு இருந்தால் அதைச் செல்லுறுத்துவதற்கு மேலதிகாரம் பெற்ற ஒரு நபர்

இருத்தல் வேண்டும். ஆனால், அரசுக்கு மேலாக எதுவும் இல்லை. எனவே, அரசுக்கும் குடிமகனுக்கும் உரிமை—கடமை உறவு இருக்க முடியாது என்பது ஆஸ்டினின் கோட்பாடு. 'சட்டம் என்பது அரசின் ஆணை?' என்ற ஆஸ்டினின் கருத்தின் அடிப்படையில் எழுவதே இக்கோட்பாடு. எனவே, 'சட்டம் என்பது அரசின் ஆணையா?' என்ற வினாவிற்கான விடையைப் பொறுத்தே, அரசுக்கும் குடிமகனுக்கும் இடையே உரிமை—கடமை உறவு எழ முடியுமா என்ற பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்.

கூட்டமைப்புகளை (corporations) உரிமையும் கடமையும் உள்ள சட்டமுறை நபர்கள் (legal persons) என்று சட்டம் கொள்ளுகின்றது. அப்படியானால் அரசையும் (state) அத்தகைய நபராகக் கொள்வதில் என்ன தவறு இருக்க முடியும்? சட்டத்தை வகுப்பது அரசாக இருக்கலாம். அந்தச் சட்டம் மாற்றப்படாதவரை, அரசும் அச்சட்டத்திற்கு உட்பட்டுத்தானே இயங்குகிறது? எனவே, குற்ற இயல் சட்டம் விதிக்கும் கடமைகளுக்கான உரிமை அரசுக்கு உண்டு என்று கொள்வது பொருத்தமேயாகும். ஆதலால், குற்றவியல் சட்டம் விதிக்கும் கடமைகளும் அடிப்படைக் கடமைகள் அல்ல.

இவ்வாறு, ஆசிரியர் பேட்டன், ஆஸ்டின் வகுத்துள்ள 'அடிப்படைக் கடமைகள்' என்ற கோட்பாட்டினை மறுக்கின்றார்.

அமெரிக்க அறிஞர் ஹோஃபெல்டு (Hohfeld) என்பாரும் 'அடிப்படைக் கடமைகள்' என்ற கொள்கையை ஆதரிக்கவில்லை.

இருப்பினும் ஆங்கிலச் சட்ட அறிஞர்களான டென்னிஸ் லாய்டு (Dennis Lloyd), டயஸ் (Dias) போன்றோர் கெல்சனைப் பின்பற்றி, சட்டமுறையின் அடிப்படைக் கோட்பாடு 'கடமை' என்பதேயாகும் என்கின்றனர். சில கடமைகள் குறித்து மட்டுமே உரிமைகள் இருக்கலாம். எந்தெந்த வகைக் கடமைகளை இயக்குவதற்கு குடிமக்களுக்கு ஏலுரிமை இருக்கவேண்டுமோ அந்த வகைக் கடமைகளைப் பொறுத்து மட்டும் சிலருக்கு உரிமைகளைச் சட்டம் அளித்துள்ளது. அதுவும், 'தனிமச் சொத்து' (private property) உள்ள சமுதாயத்தில் சொத்துரிமையைச் செல்லுறுத்தும் வகையில் உரிமைகள் தேவைப்படுவதால் சில உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளன. தனிம உரிமைகள் (individual rights) என்பது 'தனிமச் சொத்து' (private property) முறையைப் பேணும் சமுதாயத்திற்கு மட்டுமே

உரியனவாகும் என்பது டென்னிஸ் லாய்டுவின் விளக்கம்.

டயஸ் (Dias) போன்ற ஆசிரியர்கள், சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடாகத் தாம் கொள்ளும் கடமை என்பதைப் பற்றிய தங்கள் நூல்களில் ஆய்வுரை அளித்துள்ளனர்.

கடமைகள் பற்றி ஆசிரியர் டயஸ் கூறுவது

'கடமைகள்' (Duties) என்பது குறித்து ஆசிரியர் டயஸ் (R.W D Dias) கூறுவதன் சுருக்கம் வருமாறு:

ஒருவரது ஒழுகுமுறையைக் (behaviour) கடமைகள்தான் சீரமைக்கின்றன.

1. ஒழுகு முறையை மட்டும் குறிக்கும் கடமைகள்:

(எ—கா.) ஒப்பந்தத்தால் ஒன்றைச் செய்ய வேண்டும், செய்தல் ஆகாது என்ற வகையில் எழும் கடமைகள்.

2. சூழ்நிலையைப் பொறுத்து ஒழுகுமுறையைக் குறிக்கும் கடமைகள்:

(எ—கா.) காரைப் பொது இடத்தில் ஓட்டும்பொழுது மது அருந்திய நிலையில் ஓட்டுதல் கூடாது என்பது போன்ற கடமை.

3. சூழ்நிலை, விளைவு இரண்டையும் பொறுத்து ஒழுகு முறையைக் குறிக்கும் கடமைகள்:

(எ—கா.) குற்ற இயல் விதிக்கும் கடமைகள் பல இத்தன்மையுடையன.

கருத்தியலாக, 'கடமை' என்பதற்கு இலக்கணம் கூறுவதென்றால், 'நீதிமன்றங்கள் ஏற்கும் வகையில் உள்ளதான வகையுறுத்தப்படும் செயலாற்று அமைதியே கடமையாகும்' எனலாம்.[1]

எனவே, 'கடமை' என்பது 'வகையுறுத்தப்பட்ட செயலாற்று அமைதியாகும்'. இதை 'இதையுறு செயலாறு'' என்று சுருக்கமாகக் கூறலாம்.

கடமைகள் ஆணைகளா?

பொதுவாக, கடமைகள் என்றால் அவை ஆணைகளாக

1 In its most abstract form the idea of duty may be stated simply as a prescriptive pattern of conduct that is recognised by courts - Dias

இடப்படுபவை என்ற எண்ணம் நிலவுகின்றது. சட்டவாசகமும் 'ought', 'must', 'shall' என்ற கட்டளைச்சொற்களைக் கொண்டிருப்பதால் இத்தகைய எண்ணம் எழுகின்றது.

உண்மையில் ஒருவர் ஆணையிட்டு அதன்வழிக் கடமைகள் எழுவதில்லை. மொழியின் அமைதி கட்டளை போல் உள்ளது. எனவே, கட்டளையிடும் வகையில் வாசகம் அமைந்திருந்தாலும், கடமைகள் எல்லாம் ஆணைகள் அல்ல.

கடமைகள் செல்லுறுத்தப்படுவனவா?

ஒப்பந்தத்தால் எழும் கடமையை ஒருவர் நிறைவேற்றவில்லை எனில், அதற்கான இழப்பீட்டை அவர் மற்றொருவருக்குச் செலுத்த வேண்டும் என்பது சட்டம். ஒப்பந்தத்தால் எழும் கடமையினை 'முதல்நிலைக் கடமை' (Primary Duty) என்றும், இழப்பீடு செலுத்துவதைச் 'சார்புநிலைக் கடமை' (Secondary Duty) என்றும் கூறுகிறோம்.

ஒரு சில முதல்நிலைக் கடமைகளைத்தான் குறித்தவகையில் செயலுறுத்த (enforcement of specific performance) முடிகின்றது. பெரும்பாலான நேர்வுகளில், ஒப்பந்தத்தை முறித்தவர் இழப்பீடு கொடுக்க வேண்டிய நிலையிலேயே உள்ளார். கொடுக்கப்படும் இழப்பீடு தீங்குற்றவருக்கு விளைந்த கேட்டினைச் சரிசெய்வதற்கு என்று அமைவதோடு, கடமையில் தவறியவருக்குத் தண்டனை விதிக்கும் வகையிலும் உள்ளது.

கடமைகள் செல்லுறுத்தப்படும் வகையில் 'இழப்பீடு' என்ற தண்டனை விதிக்கப்படுவதால், இத்தண்டனையைக் கடமைகளைப் பொறுத்துள்ள 'சட்ட மேலுறுத்தம்' (legal sanction) என்று கூறுவதுண்டு. எனவே, ஒன்று சட்டப்படியான கடமையா என்று காண்பதற்கு உரைகல்லாக 'சட்ட மேலுறுத்தம்' உள்ளதா என்பதைப் பார்க்க வேண்டும் என்ற கொள்கை உண்டு.

'கடமை' என்றால் 'சட்ட மேலுறுத்தம்' இருக்க வேண்டுமா?

கடமையில் தவறியவர் இழப்பீடு செலுத்தவேண்டும் என்ற விதி இருப்பதால் 'மேலுறுத்தம்' (sanction) இல்லாத கடமை இல்லை என்றே கெல்சன் போன்ற பல ஆசிரியர்களும் கூறியுள்ளனர். ஆனால், மேலுறுத்தத்தைக் கடமையைக் கணிப்பதற்கான உரைகல்லாகக் காண்பதை ஆசிரியர் டயஸ் தவறு என்கிறார்.

கடமை கைவிடப்படும்பொழுதுதான் இழப்பீடு என்ற மேலுறுத்தம் எழுகின்றது. எனவே, மேலுறுத்தமானது கடமை என்ற கருத்திலிருந்து தனியாகவே உள்ளது.

நீதிமன்றங்கள் முதலில் காண்பது கடமை உள்ளதா என்றுதான். மேலுறுத்தம் உள்ளதா என்று பார்த்து, அதற்குப் பின் கடமையை ஊகிப்பது இல்லை.

செயலாற்றை வகுப்பது என்பது ஒன்று; அதன்படி நடக்கச் செய்வது என்பது மற்றொன்று. வகுத்த செயலாற்றின்படி நடக்கச் செய்வதற்கு மேலுறுத்தம் ஒரு சாதனமாக, கருவியாக இருக்கலாம். ஆனால், இரண்டும் வெவ்வேறானவை.

பேராசிரியர் ஹார்ட் கூறுகின்றார் 'கடப்பாடு உடைமை' (having an obligation) என்பதும், 'கடப்பாட்டிற்கு உட்படுதல்' (being obliged) என்பதும் வெவ்வேறானவை. கடமை என்றால் 'கடப்பாடு உடைமை' என்பதே பொருளாகும். கடப்பாட்டிற்கு உட்படுதல் அன்று கடமை. துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தி ஒன்றைச் செய்யும்படி ஒருவரைக் கூறினால் அவர் அதைச் செய்யும் கடப்பாட்டிற்கு உட்படுகின்றார். அது போன்றே, மேலுறுத்தம் என்பது கடமையைச் செய்யும் கடப்பாட்டிற்கு ஒருவரை உட்படுத்தலாம். ஆனால், 'கடப்பாடு உடைமை' என்பது கடப்பாட்டிற்கு உட்படும் நிலையன்று. எனவே, மேலுறுத்தம் என்பது, கடமையோடு இணைந்தது என்றால், 'கடப்பாடு உடைமை' என்பதும் 'கடப்பாட்டிற்கு உட்படுதல்' என்பதும் ஒன்று என்று கூறுவது போலாகும்.

பல சட்டங்களில் 'மேலுறுத்தம்' இல்லாத கடமைகள் உண்டு என்று கூறும் ஆசிரியர் டயஸ், எடுத்துக்காட்டாக காலவரைச் சட்டத்தின் விளைவைக் கூறுகின்றார். காலவரை கடப்பதால் வழக்கிடும் உரிமை அழிகின்றது; ஆனால், கடனைச் செலுத்த வேண்டும் என்ற கடமை மறைவதில்லை. வழக்கிடும் உரிமை மறைவதால் மேலுறுத்தம் இல்லாது போய்விடுகிறது. எனவே, மேலுறுத்தம் இல்லாத கடமை இருப்பதை இங்குக் காணுகின்றோம்.

மேலுறுத்தம் இல்லாத இக்கடமையை ஆற்றும் வகையில் பணம் செலுத்துவதும் பெறுவதும் சட்ட முறையானவையாகவே கொள்ளப்படுகின்றன. எனவே, கடமை என்ற கருத்தமைவோடு மேலுறுத்தம் என்பதையும் இணைத்துக்காண்பது தவறு என்பதை வலியுறுத்துகிறார் டயஸ்.

எனவே, எல்லாக் கடமைகளைப் பொறுத்தும் சட்ட மேலுறுத்தம் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. எல்லாக் கடமைகளையும் சட்டம் செல்லுறுத்துவதும் இல்லை.

கடமையின் இயக்கம்

கடமை என்பது 'வகையுற்று செயலாறு' என்று கண்டோம். கடமையின் நோக்கம் ஒழுக்கநலன் அல்லது சமுதாய நலன் அல்லது வேறு சீரிய குறிக்கோள் இவற்றைக் குறித்ததாக இருக்கிறது. மேலும் கடமைகள் பலவும் ஒழுக்கத்தை ஒட்டியனவாக உள்ளன.

மக்கள் எதனால் கடமைக்கு மதிப்பளித்து அதை ஆற்றுகின்றனர்?

அச்சத்தால் என்பது ஆஸ்டினின் கொள்கை. நாம் மேலே கண்டோம் மேலுறுத்தம் இல்லாத கடமைகள் உண்டு என்று. இருந்தும், மக்கள் ஏன் அத்தகைய கடமைகளைப் போற்றி ஆற்றுகின்றனர்? காலக்கெடு கடந்த கடனையும் பலர் செலுத்துகின்றனரே! அவர்களை அச்சுறுத்த மேலுறுத்தம் ஏதும் இல்லையே? இருந்தும் அவர்கள் அக்கடமைகளுக்குப் பணிவது எதனால்? அச்சத்தால் அன்று; ஏனென்றால், மேலுறுத்தம் இல்லாத கடமைகளை ஆற்றுமாறு அச்சுறுத்துவது எதுவும் இல்லை. எனவே, அச்சவுணர்வு சில சூழ்நிலைகளில் சிலருக்கு எழலாம். எல்லாச் சூழ்நிலைகளிலும் எல்லாரையும் கடமைகளை ஆற்றச் செய்வது அச்சவுணர்வுதான் என்று கூறுதல் தகாது.

பிரைஸ் (Bryce) என்பார் சொல்லுறுகிறார்: மந்தையில் எப்படி மாடுகள் ஒன்றன் பின்னொன்றாகச் செல்லுகின்றனவோ, அப்படியே மற்றவர்கள் செல்லும் வழியில் தானும் செல்லலாம் என்ற எண்ணம் மனிதனுக்கு இயல்பாக உள்ளதாகும். பெரும் பான்மையோர் கடமை ஆற்றுகின்றார்கள்; எனவே, தானும் ஆற்றுவோம் என்ற எண்ணத்தால் இயக்கப்பட்டு கடமைகளை ஆற்றுகின்றனர் மக்கள் என்கிறார் பிரைஸ்.

சட்டம், சட்டத்தின் கட்டாயம், தவறினால் தண்டனை என்ற எண்ணங்கள் எல்லாருடைய மனத்திலும் ஊறி இருப்பதால், இயல்பாகவே கடமைகளை ஆற்றும் பண்பு மக்களின் மனத்திலே வேரூன்றி உள்ளது.

சட்டம், நீதிமன்றம், சிறை இவை எல்லாம் மனக்

கண்ணில் எழும்பொழுது, மக்கள் சட்டத்திற்குப் பணிவதுபோல் சட்டக்கடமைகளுக்கும் பணிய வேண்டும் என்ற உணர்வு உறுதிப்படுகின்றது.

சமுதாய உணர்வு என்பது, முறையான செயல், முறையற்ற செயல் என்ற அடிப்படையில் இயங்குகிறது. முறைதவறி நடந்து கடமையில் தவறுவதை மக்கள் தவிர்க்கின்றனர்.

இவ்வாறாக, ஒழுக்க உணர்வு, சமுதாய உணர்வு, சட்டத்திற்கு மதிப்பளிக்கும் மரபுணர்வு எல்லாமாக மக்களை ஊக்கிக் கடமைகளை ஆற்றும் நெறியிலே நிறுத்துகின்றன என்கிறார் ஆசிரியர் டயஸ்.

எனவே, மக்களின் செயலாற்றை (conduct) ஒழுங்குறுத்தும் கருவிகளாகக் கடமைகள் இலங்குகின்றன. கடமைகளில் தவறுதல், வேண்டுமென்று கருதியோ கவனமின்றியோ, அசட்டைத் துணிவாலோ விளையலாம். எந்த வகையில் கடமை தவறுதல் விளைந்தாலும் அதனை ஆய்ந்து குற்றம் என்றோ (crime) 'தீங்கு' என்றோ (Tort) அல்லது கடமை மீறல் என்றோ கணித்து அதற்கேற்ற தண்டனையை அல்லது மாற்றீட்டைச் (relief) சட்டம் வழங்குகின்றது.

கடப்பாடுகள் (Obligations)

சாதாரணமாக, 'கடமை' (duty) என்பதும், 'கடப்பாடு' (obligation) என்பதும் ஒன்றுதான் என்று எண்ணுகிறோம். 'கடமை' என்பதற்கு மறுபெயர் 'கடப்பாடு' என்று நினைக்கிறோம்.

சட்ட வழக்கில் 'கடமை' என்பதும் 'கடப்பாடு' என்பதும் வேறு வேறானவை.

சிறிது சிந்தித்தால் சாதாரணப் பேச்சு வழக்கில்கூட அந்த வேறுபாடு புலப்படுவதை நாம் காணலாம்.

ஒருவரிடம் நூறு ரூபாய் கடனாக நான் வாங்கியிருக்கிறேன். அதைத் திருப்பிக் கொடுக்க வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது. இதை நான் கூறும் விதம் என்ன?

'அவரிடமிருந்து கடனாக வாங்கிய நூறு ரூபாயைத் திரும்பித் தரவேண்டிய கடப்பாடு உடையேன்' என்று கூறுகிறேன். 'கடமை உடையேன்' என்று கூறுவதில்லை.

குற்றங்களைச் செய்யாதிருத்தல் ஒருவரின் 'கடமை' என்கிறோம். இங்குக் 'கடப்பாடு' என்ற சொல்லைப் பயன் படுத்துவது இல்லை.

குறிப்பிட்ட ஒருவருக்கும் நமக்கும் எழும் சட்டப் பிணைப்பைக் (legal) காட்டுவதற்குக் 'கடப்பாடு' என்ற சொல் பயன்படுகிறது. இதைக் காட்டும் வகையில் 'கடப்பாடு' என்பதறகான வரைவுரை அமைந்துள்ளது.

'கடப்பாடு என்பது குறிப்பிட்ட இரண்டு அல்லது மேற்பட்ட நபர்களிடையுள்ள சட்டமுறைப் பிணைப்பு'[1] — என்கிறார் சால்மண்ட்.

'கடமை' என்பது எல்லாவித உரிமைகளுக்கும் எதிரிணை யான சொல்லாகும். ஆனால், 'கடப்பாடு' என்பது 'தனிமுக உரிமை' (right in personam) என்பதற்கு மட்டுமே எதிரிணையாகிறது. அதாவது தனிமுக உரிமையைப் பொறுத்த கடமை மட்டுமே 'கடப்பாடு' எனப்படுகிறது.

எனக்குக் கடன் கொடுத்தவருக்கு அதை என்னிடமிருந்து வரப்பற்றும் உரிமை உண்டு. அது தனிமுக உரிமையாகும். அந்த உரிமையைப் பொறுத்து எனக்குள்ள கடமையைக்'கடப்பாடு' என்கிறோம்.

வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்துவது, ஒப்பந்தத்தை நிறைவேற்றுவது போன்ற கடமையைக் 'கடப்பாடுகள்' என்று குறிப்பிடுகின்றோம்.

மேலும், 'கடப்பாடு' என்ற சொல் மேலே கூறப்பட்ட கடமையை மட்டும் குறிப்பதில்லை; அக்கடமைக்கு எதிரிணை யான உரிமையையும் அச்சொல் குறிக்கின்றது.

குறிப்பிட்ட நபர்களிடையே எழும் சட்டப் பிணைப்பைக் குறிக்கும் சொல்லான 'கடப்பாடு', அந்தப் பிணைப்பில் அடங்கும் உரிமை, கடமை இரண்டையுமே குறித்து நிற்கிறது. சட்டப் பிணைப்பில் உள்ள உரிமையரின் நோக்கில் அச்சொல் அவரது உரிமையைக் குறிக்கின்றது; கடமையரின் நோக்கில் அச்சொல் அவரது கடமையைக் குறிக்கின்றது. சட்டப் பிணைப்பால் எழும் உரிமை, கடமை இரண்டையும் குறிக்கும் சொல்லாக அது அமைகின்றது. கடப்பாட்டை உடையவர் உரிமையர்; கடப்

[1] An obligation is the vinculam juris, or bond of legal necessity, which binds together two or more determinate individuals - Salmond

பாட்டிற்கு உட்பட்டவர் கடமையர்.

மேலும், கடப்பாடு என்பது 'சொத்துநிலை உரிமைகளைப் பொறுத்தே எழுவதாகும். ஒருவருடைய தனிநிலை உரிமைகளைப் (Personal rights) பொறுத்த கடப்பாடு எழுவதில்லை.

இக்கூறுகள் அனைத்தையும் காட்டும் வகையில் கடப்பாட்டிற்கு வரைவுரை கூறுவது எனில்:

'கடப்பாடு என்பது தனிமுகச் சொத்துநிலை உரிமை அல்லது அந்த உரிமைக்கு இணைவான கடமை எனலாம்'.[1]

வழக்கடைபொருள் (chose in action)

என்னிடம் கடன்பெற்ற ஒருவர் எனக்கு ஆயிரம் ரூபாய் திருப்பித் தரவேண்டும். இதில் எனக்குள்ள உரிமை எவ்வகைப் பட்டது?

கடனை வரப்பற்றுவதற்கு எனக்குள்ள உரிமை, என்னிடம் கடன் பெற்றவருக்கு எதிராக மட்டுமே உள்ளது. அதனால், இது 'தனிமுக உரிமை' (right in Personam) இந்த உரிமையில் அடங்குவது அல்லது உரிமைக்கு இலக்காவது என்ன? ஆயிரம் ரூபாய். அதனால், இந்த உரிமை 'சொத்துநிலை உரிமை' (Proprietary right).

இது தனிமுக உரிமையாகவும் சொத்துநிலை உரிமையாகவும் உள்ளது. இரண்டையும் சேர்த்துக் கூறுவதானால் 'தனிமுகச் சொத்துநிலை உரிமை' (prorietary right in personam) என்று கூறுகிறோம்.

இந்த ரூபாய் என் கையில் இப்பொழுது இல்லை. என் கைக்குப் பணம் கிடைக்க வேண்டுமெனில், கடன்காரர் அதை என்னிடம் கொடுக்கவேண்டும், அவர் தவறினால், வழக்கிட்டு அத்தொகையை அவரிடமிருந்து நான் வரப்பற்ற வேண்டும்.

என்மீது ஒருவர் அவதூறு இழைத்துவிட்டார்; எனவே, அதற்கான இழப்பீட்டை அவரிடமிருந்து பெறும் உரிமை எனக்கு உள்ளது. இந்த உரிமையும் 'தனிமுகச் சொத்துநிலையுரிமை'யே யாகும். இழப்பீட்டை வரப்பற்ற வேண்டுமெனில் நான்

1 An obligation may be defined as a proprietary right in personam or a duty which corresponds to such a right - Salmond

வழக்கிடவேண்டும்.

இவ்வாறு, வழக்கிட்டுப்பெற வேண்டிய வகையிலேயே 'தனிமுகச் சொத்துநிலை உரிமை' உள்ளது. ஆதலால், அத்தகைய உரிமையால் அடையப்பெறும் பொருளை வழக்கிட்டு அடையும்பொருள் 'வழக்கடைபொருள்' (Chose in action) என்பார்கள்.

'தனிமுகச் சொத்துநிலை உரிமை'க்கு உற்ற பொருள் அனைத்துமே 'வழக்கடை பொருளா'கவே உள்ளன.

தனிமுகச் சொத்துநிலை உரிமையே 'கடப்பாடு' என்று மேலே கண்டோம்.

ஆதலால் 'கடப்பாடு' என்பதை வழக்கடைபொருளுக்கு (Chose in action) மறுபெயர் என்று கூறுவார்கள்.

தனிமுகச் சொத்துநிலை உரிமைப் பொருள்களைத் தவிர வேறு எல்லா வகைப் பொருள்களும் வழக்கிடாமலே நம் உடைமையில் உள்ளவான பொருள்கள். எனவே, அவற்றை 'உடைமைப் பொருள்கள்' (Chose in possession) என்பார்கள். ஆனால், 'உடைமைப் பொருள்கள்' என்று கூறுவது பெரும் பாலும் வழக்கொழிந்துவிட்டது.

எனது பையில் உள்ள பணம் 'உடைமைப் பொருள்' எனக்குப் பிறரிடமிருந்து வரவேண்டிய பணம், 'வழக்கடை பொருள்'. இந்தப் பாகுபாடு ஆங்கிலச் சட்டநெறி வளர்ச்சி வரலாற்றினால் எழுந்ததாகும். இப்பொழுது இந்தப் பாகு பாட்டைப் புறக்கணித்துவிட்டனர்.

இணைவுறு கடப்பாடுகள் (Solidary obligations)

சாதாரணமாக, கடன் கொடுத்தவர் ஒருவர், கடன்பட்டவர் ஒருவர் என்று இரண்டு நபர்கள் மட்டுமே கடப்பாட்டினால் கட்டுண்டு இருப்பார்கள். சில நேர்வுகளில், கடன் கொடுத்தவர் ஒருவராகவும், ஆனால், கடன் பட்டவர்கள் இரண்டு அல்லது மேற்பட்டவர்களாகவும் இருப்பதுண்டு.

இரண்டு அல்லது மேற்பட்டவர்கள் சேர்ந்து 'கூட்டு வாணிகம்' (Partnership) நடத்தலாம். அந்தக் கூட்டு வாணிபத்தில் மூன்று கூட்டாளிகள் (Partners) உளர் என்று வைத்துக் கொள்வோம். அக்கூட்டு வாணிபம் இன்னொருவருக்கு மூவாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டியுள்ளது. கூட்டாளிகளுக்கு

உள்ள இக்கடன் எத்தன்மையுடையது?

கடன் கொடுத்தவர், கூட்டாளி ஒவ்வொருவரிடமிருந்தும் ஆயிரம் ரூபாய் மட்டுமே பெறும் உரிமையுடையவரா? இல்லை. கூட்டாளிகள் ஒவ்வொருவரும் முழுக்கடனான மூவாயிரம் ரூபாய்க்கும் பொறுப்பாகின்றனர். கூட்டாளிகள் மூவரில் எவர் ஒருவரிடமிருந்தும் மொத்தக் கடனையும் கடன் கொடுத்தவர் வரப்பற்றலாம். எனவே, கூட்டாளிகளில் ஒருவர், 'என் பங்குக்கு ரூபாய் ஆயிரம் மட்டுமே கொடுக்கும் கடப்பாடு உடையேன்' என்று வாதாட முடியாது. கூட்டாளிகளில் எவர் ரூபாய் மூவாயிரம் செலுத்தினாலும், முழுக்கடனும் தீர்ந்து போகிறது. கடன் கொடுத்தவர் மற்ற இருவரிடமிருந்தும் எதையும் வரப்பற்ற முடியாது. ஆனால், அவர் கடனை மூன்று பங்காகப் பிரித்து ஒவ்வொரு பங்கையும் ஒவ்வொரு கூட்டாளியிடம் இருந்து வரப்பற்ற வேண்டுமெனச் சட்டம் விதிப்பதில்லை. ஏனெனில், கடன் ஒரே கடன்தான். கூட்டாளிகள் ஒவ்வொருவரும் அந்தக் கடன் முழுவதற்கும் பொறுப்படைவு உள்ளவர்கள்.

இத்தகைய கடனைப் பொறுத்த கடப்பாடு, 'இணைவுறு கடப்பாடு' ஆகும் (Solidary obligation). ஒருவருக்குச் சேரவேண்டிய ஒரு கடனைச் செலுத்தும் கடப்பாடு இரண்டு அல்லது மேற்பட்டவர்களுக்கு இருந்தால், அது 'இணைவுறு கடப்பாடு' எனப்படுகிறது.[1]

ஒருவர் கொடுக்கவேண்டிய ஒரு கடனுக்குப் பிணையராக (sureties) இருவர் இருக்கலாம். முதற்கடனாளி (principal debtor), இரு பிணையர்கள் ஆகிய மூவருக்கும் அக்கடனைப் பொறுத்த கடப்பாடு, 'இணைவுறு கடப்பாடு' ஆகும்.

இணைவுறு கடப்பாட்டை மூன்று வகைப்படுத்திக் கூறுவதுண்டு:

முதற்கடனாளி கடன் பெற்றதற்குப் பின்னர், பிணையர்கள் அக்கடனுக்குப் பிணைநின்று பிணையாவணம் எழுதிக் கொடுத்தால், முதற் கடனாளிக்கும் கடன் கொடுத்தவருக்கும் உள்ள சட்டப் பிணைப்பு தனியாகவும், பிணையர்களுக்கும் கடன் கொடுத்தவருக்கும் உள்ள சட்டப் பிணைப்பு தனியாகவும் ஏற்படுகின்றது. எனவே, இவ்வகை இணைவுறு

1 A solidary obligation may be defined as one in which two or more debtors owe the same thing to the same creditor - Salmond

கடப்பாட்டைத் 'தனித்தனியானது' (several) என்பார்கள்.

முதற் கடனாளியும் பிணையர்களும் ஒரே ஆவணத்தின் மூலம் கடப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றால், அத்தகைய இணைவுறு கடப்பாட்டைக் 'கூட்டானது' (joint) என்பார்கள்.

தனித்தனியான ஆவணத்தின் மூலம், ஒரே நேரத்தில் இணைவுறு கடப்பாடு ஏற்கப்பட்டால் அதைக் 'கூட்டானதும் தனித்தனியானதும்' (joint and several) என்பார்கள்.

இந்திய நாட்டுச் சட்டத்தைப் பொறுத்த வரையில் இணைவுறு கடப்பாட்டிற்கு உட்பட்டவர்களின் பொறுப்படைவு கூட்டாகவும் தனித்தனியாகவும் உள்ளதாகும். கடனைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு கூட்டுப் பொறுப்பாக இருந்தாலும், தனித்தனியாகவும் அவர்களுக்குப் பொறுப்பு இருப்பதால், அவர்களுக்குற்ற பொறுப்படைவு கூட்டாகவும், தனித் தனியாகவும் (joint and several) உள்ளது.

ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சேர்ந்து ஒரு கடனொப்புச் சீட்டு எழுதிக் கொடுத்தல், ஒருவர் பட்ட கடனுக்குப் பிணையமாக நின்று எழுதிக் கொடுத்தல், கூட்டுவாணிபக் கடன் இவற்றால் எழும் கடப்பாடு இணைவுறு கடப்பாடாகும். அதனால் எழும் பொறுப்படைவு (liability) கூட்டாகவும் தனித்தனியாகவும் (Joint and several) உள்ளதாகும்.

குற்றப் பொறுப்படைவு
(Criminal Liability)

['பொறுப்படைவு' — 'குற்றப் பொறுப்படைவு' பற்றிய கொள்கை — குற்றமனம் — 'கருதிய செயல்' என்பது என்ன? — கருத்தைக் காண்பது எவ்வாறு? — முன்னறிதல், விருப்பம் இரண்டும் சேர்ந்தே 'கருத்து' ஆகின்றது — தெரிந்து செய்தல் — நோக்கம் — நோக்கத்தையும் காண வேண்டிய நேர்வுகள் உண்டு — கடும் பொறுப்படைவு — 'செயல்' என்றால் என்ன? — செய்வினை, சூழ்நிலை, விளைவு மூன்றும் சேர்ந்ததே 'செயல்'; வினைக்கும் விளைவிக்கும் உள்ள தொடர்பு — குற்ற முயற்சி — இக்கட்டு நிலையில் எழும் உரிமை — கவனமின்மை — கவனத்தின் தரநிலை — கவனமின்மை என்பது அகநிகழ்வானதா, புற நிகழ்வானதா? — கருத்து, நோக்கம், கவனமின்மை — தீயெண்ணம் — சட்டத்தை அறியாமல் இழைத்த செயல்கள் — தவறுதலால் விளையும் செயல்கள் — எதிர்பாரா விளைவு — காப்புரிமைச் செயல்கள்]

பொறுப்படைவு

மறந்தும் பிறன்கேடு சூழற்க, சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு (குறள் 204)

'ஒருவர் பிறருக்குத் தீங்கு விளைத்தால், அறம் அவருக்குத் தீங்கு விளைக்கிறது என்பது அறநூல் கூறும் உண்மை.

இது அறநெறி மட்டுமன்று, சட்ட நெறியுமாகும்.

நாம் செய்யும் செயல்கள் அனைத்திற்கும் சட்டம் நம்மையே பொறுப்பாக்குகின்றது. நம் வினையின் விளைவு களுக்கு நாமே பொறுப்பாகின்றோம்.

பிறருக்கு இன்னாமை இழைத்தவர், அந்த இன்னாமை யால் எழும் இன்னலுக்கு ஈடுசெய்யும் பொறுப்புடையவர் ஆகின்றார். இன்னாமைக்கு ஈடுசெய்யும் கடன், இன்னாமை

இழைத்தவரையே சேருகின்றது. இவ்வாறு, ஒரு செயலுக்கான பொறுப்பு அதைச் செய்தவரைச் சேர்ந்தடைவதைச் சட்டத்தில் 'பொறுப்படைவு' (Liability) என்பார்கள்.

தீங்கு இழைத்தவருக்கும் அத்தீங்கின் தீர்வழிக்கும் உள்ள கட்டாயமான பிணைப்பைத் தான் 'பொறுப்படைவு' அல்லது 'பொறுப்பு' என்று கூறுகின்றோம்,[1] —என்கிறார் சால்மண்ட்.

குற்றம் இழைத்தவரைச் சேரும் பொறுப்படைவு 'குற்ற இயல் பொறுப்படைவு' அல்லது 'குற்றப் பொறுப்படைவு' (Criminal Liability) எனப்படும்.

குற்றப் பொறுப்படைவின் பயனாகக் குற்றவாளி தண்டனைக்கு உள்ளாகின்றார். குற்றவாளியைத் தண்டிப்பதே குற்றஇயல் சட்டத்தின் குறிக்கோளாகும்.

ஒருவரைக் குற்றப் பொறுப்படைவுக்கு உள்ளாக்குவதற்கு முன், சட்டம் எந்தெந்தக் கூறுகளையெல்லாம் ஆய்கின்றது என்பதுபற்றிக் காண்போம்.

குற்றப் பொறுப்படைவு பற்றிய கொள்கை
(The Theory of criminal liability)

பொதுவாக, சட்டத்தால் 'குற்றங்கள்' என விதிக்கப்பட்ட செயல்களைச் செய்தவர் குற்றப் பொறுப்படைவுக்கு உள்ளாகின்றார். அவ்வாறு, அவரைக் குற்றப் பொறுப்படைவுக்கு உள்ளாக்குவதற்கு முன், அக்குற்றச் செயலை அவர் எந்த மன நிலையோடு செய்தார் என்பதைச் சட்டம் ஆய்கின்றது.

குற்றப் பொறுப்படைவு எப்பொழுது எழுகின்றது என்பதைக் கூறும் வகையில் இலத்தீன் மொழியில் விதிமொழி (maxim) ஒன்றுண்டு.

'குற்றமனம் இன்றிக் குற்றச் செயல் இல்லை' (Actus non facit reum, nisimens sit rea) என்பதே அவ்விதிமொழியாகும். (செயல் மட்டுமே குற்றமாகிவிடுவதில்லை; குற்ற மனத்தோடு இணைந்த செயலே குற்றமாகிறது.)

குற்றமனத்தோடு குற்றச் செயல் செய்யப்பட்டிருக்க

[1] Liability or responsibility is the bond of necessity that exists between the wrongdoer and the remedy of the wrong - Salmond.

வேண்டும். அப்பொழுதுதான் குற்றப் பொறுப்படைவு எழுகின்றது.

'குற்றமனம்' பற்றியும், 'குற்றச் செயல்' பற்றியும் இனிக் காண்போம்.

'குற்ற மனம்' (Mens rea)

'குற்றம்' என்ற சொல் ஒரு குற்றச்செயலையே குறிக்கின்றது.

'கொலைக் குற்றம்' என்றால், 'ஒருவரது மரணத்தை விளைவிக்கும் செயல்' என்பதாகும்.

ஒருவரது செயல் பிறிதொருவரின் மரணத்தை விளைவித்தாலும், அவர் மற்றவரின் மரணத்தை விளைவிக்க வேண்டும் என்ற தீய கருத்தோடு அச்செயலைச் செய்தாரா என்பதைச் சட்டம் பார்க்கின்றது.இந்தத் தீய கருத்தே 'குற்றமனம்' என்பதாகும். 'குற்றமனம்', 'குற்றச் செயல்' இரண்டும் இணைந்த செயலைத்தான் சட்டம் 'குற்றம்' எனக் கொள்கின்றது. குற்ற மனத்தால் தூண்டப்பட்ட குற்றச்செயலே குற்றம் ஆகின்றது.

இவ்வாறு, 'குற்றம்' என்பதில் இரண்டு கூறுகள் உள்ளன; ஒன்று 'குற்றமனம்' (guilty mind)' மற்றொன்று, 'குற்றச்செயல்' (Criminal act) .

இலத்தீன் மொழியில் 'குற்ற மனத்தை ' mens rea என்றும், 'குற்றச் செயலை' actus reus என்றும் கூறுவார்கள்.

குற்ற மனத்தைக் காட்டும் சில உதாரணங்கள் :

எனது மேசைமீதிருந்த பேனாவை என் நண்பர் மறதியாகத் தம்முடையது என்று எண்ணித் தமது சட்டைப் பையில் வைத்துக்கொண்டு போய்விடுகிறார். உடனே, அவர் பேனாவைத் திருடிவிட்டார் என்று கூறுவது பொருந்துமா? பொருந்தாது. அவர் பேனாவைத் திருட வேண்டும் என்ற தீய எண்ணத்துடன் அதை எடுத்துச் செல்லவில்லை. ஆனால், அயலான் ஒருவன் என் அறைக்குள் வந்து மேசைமீதிருந்த என் பேனாவை எடுத்துச் சென்றான் என்றால் அது திருட்டுக் குற்றமாகி விடுகின்றது. காரணம் அயலான், பேனாவை அகற்றியது அதைத் திருட வேண்டும் என்ற தீய எண்ணத்துடன்தான். நண்பரும் என் பேனாவை அகற்றிச் சென்றார்; அயலானும் என் பேனாவை அகற்றிச் சென்றான். இருவர் செயலும் ஒன்றுதான். இருப்பினும்

நண்பரின் செயல் தீய எண்ணத்தில் எழாததால் அது திருட்டு ஆவதில்லை. அயலான் செயல் தீய எண்ணத்தோடு செய்யப் பட்டதால், அது திருட்டுக் குற்றம் ஆகின்றது.

இதிலிருந்து தெரிவது என்ன?

ஒரு செயலைச் சட்டம் குற்றம் எனக் கொள்ளுவதற்கு முன் அச்செயல் குற்றமனத்தோடு செய்யப்பட்டதா என்பதை ஆராய்கின்றது. குற்றமனத்துடன் கூடிய செயலையே குற்றமாகச் சட்டம் கருதுகிறது.[1] தீய எண்ணம் ஏதுமின்றிச் செய்யப்பெற்ற செயலால் ஒருவருக்குத் தீங்கு விளைந்தாலும் அதைக் குற்றமாகச் சட்டம் கொள்ளுவதில்லை.

ஒருவர் தமது பகைவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விடுகிறார். அவரைக் கொலைக் குற்றவாளி என்று தீர்மானித்துச் சட்டம் அவருக்கு மரண தண்டனையை விதிக்கின்றது. ஒருவர் துப்பாக்கியால் குறிதவறாது சுடுவதற்கென்று, எவரும் வராத தனி இடத்தில், சுட்டுப் பழகிக் கொண்டிருக்கிறார். அப்பொழுது அங்கு எதிர்பாராத விதத்தில் குறுக்கே வந்த மற்றொருவர்மீது குண்டு பாய்ந்து அவர் இறந்து விடுகிறார். இப்பொழுது, சுட்டுப் பழகிக் கொண்டிருந்தவரைச் சட்டம் கொலைக் குற்றவாளியெனக் கொள்ளுவதில்லை.

பகைவரைக் கொன்றவரும் துப்பாக்கியால் சுட்டார்; பழகிக் கொண்டிருந்தவரும் துப்பாக்கியால்தான் சுட்டார். இருவரின் புறச்செயல்களும் ஒரே மாதிரியானவைதான். பகைவரின் செயலாலும் அவர் எதிரியின் மரணம் விளைந்தது; பழகிக் கொண்டிருந்தவரின் செயலாலும் பிறரின் மரணம் விளைந்தது. இவ்வாறு இருவரின் செயல்களும் விளைவுகளும் ஒரே தன்மையன. இருந்தும், ஏன் ஒருவர் கொலைக் குற்றவாளி ஆகின்றார். மற்றவர் ஆவதில்லை?

தட எதிரியைக் கொல்ல வேண்டுமென்ற தீய கருத்தோடு சுட்டவர் ஒருவர்; கொலை எண்ணம் சிறிதும் இன்றிச் சுட்டவர் மற்றொருவர். கொலை எண்ணம் கொண்டவர் கொலைக் குற்றவாளி ஆகின்றார்; அத்தீய எண்ணம் இல்லாதவர் கொலைக்குற்றவாளி ஆவதில்லை.

'ஒரு குற்றத்திற்கு இரு கூறுகள் உண்டு. ஒன்று அக

1 The act alone does not amount to guilt; it must be accompanied by a guilty mind — Salmond.

நிகழ்வான குற்ற எண்ணம் (mens rea); மற்றொன்று புறநிகழ்வான தீய செயல் (actus reus) இவ்விரண்டும் ஒன்றிய நிலையில் தீங்கு இழைக்கப்படும்பொழுதுதான் ஒருவரைக் குற்றவாளி எனச் சட்டம் தண்டிக்கிறது' [1]— இவ்வாறு கென்னி என்ற குற்ற இயல் சட்ட வல்லுநர் கூறுகின்றார்.

'குற்றமனம் இன்றிக் குற்றம் இல்லை' — என்ற விதிமொழி குற்றஇயல் சட்டத்தின் அடிப்படை நெறியாகும்.

அறநெறியை ஒட்டி எழும் சட்டநெறி

இந்தச் சட்டநெறி அறநெறியின் அடிப்படையில் எழுந்ததாகும்.

நம் செயல்களுக்கு மூலமாகச் சிந்தனை இருப்பதால், நம் மனத்தைத் தூய்மைப்படுத்த முயலுகின்றது அறம். "மனத்துக்கண் மாசு இலனாதல் அனைத்து அறன்'' என்கிறது அறநூல். மனத்திலே மாசு இருக்கின்றதா என்பதைக் கண்டே தண்டனையை விதிக்கின்றது சட்டம். மனத்திலே மாசற்ற நிலையில் தீங்கான செயல்கள் செய்யப்பட்டாலும் அவற்றைச் சட்டம் குற்றங்களாகக் கொள்வதில்லை.

'மனத்தால் எவருக்கும் தீமை செய்தலாகாது' என்று கூறுகிறது குறள்நெறி.

எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை — (குறள் 317).

'மனத்தானாம் மாணா செய்யாமை'யைக் குறள் வலியுறுத்துகிறது. அதாவது, மனம் பொருந்தி எவருக்கும் தீமை செய்யாதே என்பது குறள் கூறும் அறநெறி. 'குற்ற மனமின்றிக் குற்றம் இல்லை' என்பது அறநெறியை ஒட்டியெழும் சட்ட நெறியாகும்.

இந்த உண்மையினை ஆசிரியர் கென்னி தெளிவாகக் கூறுகின்றார்:

'குற்றஇயலில் மனநிலைக்கு அதிக முக்கியத்துவம்

1 There are two necessary elements in crime, a physical element and a mental element; and no man may be found guilty of a crime, and therefore, legally punishable, unless in addition to having brought about a harm which the law forbids, be had at that time a legally reprehensible state of mind - Kenny's Criminal Law

கொடுக்கும் வகையில், அறநெறி படிப்படியாகச் சட்டவிதியென உருவெடுத்துள்ளது'[1] என்கிறார்.

'கருதிய செயல்' என்பது என்ன?

மனத்தில் நிலவும் எண்ணங்களையே 'மனம்' என்று குறிப்பிடுகின்றோம். எண்ணத்தைக் குறிப்பதற்கு 'மனம்' என்ற சொல் பயன்படுகிறது.

எத்தனை எத்தனையோ எண்ணங்கள் மனக்கடலிலே அலை அலையாக எழுகின்றன; மறைகின்றன. அவற்றிலே சில எண்ணங்களை நிறைவேற்ற விரும்புகிறோம். அவ்வாறு நாம் நிறைவேற்ற விரும்பும் எண்ணங்கள்தாம் கருத்தாக உருவாகின்றன. ஓர் எண்ணத்தைச் (thought) செயற்படுத்த வேண்டும் என்ற இச்சை எழுந்தவுடன் 'கருத்து' உதயமாகிறது. எண்ணமும் (thought), இச்சையும் (desire) இசைந்து கருத்து (Intention) ஆகின்றது. இவ்வாறு, தோன்றும் கருத்து உடலை இயக்குகிறது. உடல் இயக்கத்தால் செயல் விளைகிறது. இந்தச் செயலைக் 'கருதிய செயல்' (intended act) என்று கூறுகிறோம்.

கருத்தைக் (Intention) காண்பது எவ்வாறு?

எண்ணமும் இச்சையும் இசைந்து கருத்து உருவாகிறது எனக் கண்டோம்.

இந்த அகநிகழ்வான கருத்தைக் காண்பது எவ்வாறு?

புறச்செயலை ஊக்கும் அகநிகழ்வான கருத்தை எப்படிக் காண்பது?

கருத்து ஊக்குவிக்கும் செய்கையில் இருந்துதான், கருத்தை ஊகித்து நாம் அறிகிறோம். அகத்தில் கருவாக உள்ள கருத்து, புறத்தில் உருவாகும் பொழுதுதான் 'செய்கை' பிறக்கிறது. கருத்தின் புறஉருவாகச் செய்கை தோன்றுகிறது. புறஉருவான இச்செய்கையை ஆராய்ந்து, அச்செய்கைக்குக் கருவான கருத்தை நாம் அறிகின்றோம்.

நீண்ட கத்தியை ஒருவர் மற்றொருவர் நெஞ்சில் பாய்ச்சினால், கொல்லவேண்டும் என்ற கருத்துடன் அச் செய்கை செய்யப்பட்டது என்று அறிகிறோம். ஒருவருடைய

1 Attention was thus more strongly directed to the mental element in crime, and the moral notion gradually crystallised into a rule of law - Kenny.

பணப்பையை மற்றொருவர் எடுத்துக்கொண்டு ஓடினால்; திருடும் கருத்துடன் பணப்பை எடுக்கப்பட்டது என்பது வெளிப்படை. இவ்வாறு, கண்களுக்குப் புலப்படும் செய்கை, அச்செய்கைக்குக் காரணமான கருத்தைக் காட்டுகிறது.

சில சமயங்களில் கருத்து கைகூடாமல் போவதும் உண்டு. ஒருவர் மற்றொருவரை நோக்கிக் குறிபார்த்துத் துப்பாக்கியால் சுடுகின்றார். குறி தவறிவிடுகிறது. எவரை நோக்கிச் சுடப் பட்டதோ அவருக்குக் காயம் கூட ஏற்படவில்லை. இருந்தும், சுட்டவர்மீது கொலைசெய்ய முயன்றதாகக் குற்றம் சாட்டப் படுகிறது. எவருக்கும் மரணம் விளையவில்லை. இருந்தும் கொலைமுயற்சிக் குற்றம் ஏன் சாட்டப்படுகிறது? சுடப்பட்டவர் நெஞ்சிலோ தலையிலோ துப்பாக்கிக் குண்டு பாய்ந்திருந்தால் இயல்பாக விளைவது மரணம்தான். இயல்பாக விளையும் மரணத்தை விளைவிக்க வேண்டும் என்ற கருத்துடன்தான் அவர் சுட்டிருக்க வேண்டும் என்பது தெளிவு. ஒரு செய்கையின் இயல்பான விளைவைக் கருதிய அச்செயல் செய்யப்படுகிறது. இவ்வாறு, ஒரு செய்கையின் (செய்வினையின்) தன்மையையும் அதன் இயல்பில் நேர்வதான விளைவையும் வைத்து, அச்செய்கை என்ன கருத்துடன் செய்யப்பட்டது என்பதைக் கண்டறிகின்றோம்.

எனவே, ஒரு செய்கையிலிருந்தும், அச்செய்கையின் இயல்பில் நேர்வதான விளைவிலிருந்தும் அச்செய்கையில் அடங்கியுள்ள கருத்தை நாம் அறிகின்றோம்.

கருதிய செயல்கள் எல்லாம் முன்னறியத் தக்க செயல்கள்

சாதாரண அறிவுள்ள மனிதர் எவரும் தம் செய்கையி லிருந்து இயல்பாக எழக்கூடிய விளைவுகளை அறிவார். ஒருவர் அடுத்தவரைத் தடியால் அடித்தால், அடிபட்டவருக்குக் காயம் விளையும் என்பதை அடித்தவர் அறிவார். தடியால் அடிப்பதன் இயல்பான விளைவு காயம் ஏற்படுதல். எனவே, காயம் ஏற் படும் என்பது அடித்தவர் முன்னறியக்கூடிய (foreseeable) செயல். இந்த முன்னறியக்கூடிய செயலைக் கருதியே அடித்தவர் அடித்திருக்கிறார்.

எனவே, கருதிய செயல்கள் எல்லாம் முன்னறியக்கூடிய செயல்களே ஆவன.

முன்னறிதல் இன்றிக் கருதுதல் இல்லை

முன்னறிய முடியாத விளைவை ஒருவர் கருதிச் செய்த தாகக் கூறமுடியாது.

கோடரியால் மரத்தை வெட்டிக் கொண்டிருந்தவரின் கையிலிருந்து கோடரி வழுக்கிப் போய் தூரத்தில் நின்றவர்மீது விழுந்து காயம் விளைக்கிறது. இது எவரும் முன்னறிய முடியாத விளைவு. ஆதலால், காயம் ஏற்பட்டதை முன்னறிய முடியாத விளைவு (Unforeseen consequence) என்கிறோம்.

ஆதலால், முன்னறிய முடியாத விளைவைக் 'கருதிய விளைவு' (intended act) என்று கூற முடியாது. எனவே, முன்னறிதல் இன்றிக் கருதுதல் இல்லை என்கிறார் கென்னி.[1]

விருப்பம் இன்றிக் கருதுதல் இல்லை

முன்னறியக்கூடிய விளைவுகள் அனைத்தையும் கருதிய விளைவுகளாகக் கொள்ள முடியாது.

சில வேளைகளில் ஒருவர் முன்னறியும் விளைவை விரும்பாத நிலையும் உண்டு.

ஒரு நோயாளிக்கு அறுவை வைத்தியம் செய்தால் நோயாளி ஒரு வேளை இறந்து போகலாம் என்பதை வைத்தியர் அறிவார். இருப்பினும், தவிர்க்க இயலாத நிலையில் அறுவைச் சிகிச்சையை வைத்தியர் நடத்துகிறார். நோயாளி இறந்து விடுகிறார்.

இப்பொழுது நோயாளியின் மரணத்தை வைத்தியர் முன்னறிந்தவராதலால் மரணத்தைக் கருதியே அறுவைச் சிகிச்சை செய்தார் என்று கூறுவது பொருந்துமா? பொருந்தாது.

அறுவையால் நோயாளியின் மரணம் நேரலாம் என்பது வைத்தியர் முன்னறிந்ததுதான்; ஆனாலும் மரணம் நேர்வதை வைத்தியர் விரும்பவில்லை. விரும்பாத விளைவை அவர் முன்னறிந்தாலும், அதை அவர் கருதிய விளைவாகக் கொள்ள முடியாது. முன்னறிந்த விளைவு விரும்பாத விளைவாக இருக்கும் நிலையில், அதைக் கருதிய விளைவாகக் கொள்ளுவதற்கில்லை. அது முன்னறியக்கூடிய விளைவாகவும் விரும்பிய விளைவாகவும் இருந்தால்தான், அதை விளைத்த செயலை, விளைவைக் கருதிச்

1 It is to be noted that there cannot be intention unless there is also foresight - Kenny.

செய்யப்பட்ட செயல் என்று கூற முடியும்.

எனவே, ஒரு செயலைச் செய்பவர் அச்செயலால் இயல்பாக நேரக் கூடிய விளைவுகளை முன்னறிவதோடு, அவ் விளைவுகளையும் விரும்பியிருந்தால்தான், அவ்விளைவுகளைக் கருதியே அச்செயலைச் செய்தார் என்று நாம் கூற முடியும்.[1]

போர்க்களத்தில் படைகளை முன்னேறிச் செல்லும்படி படைத்தலைவர் ஆணையிடுகின்றார். முன்னேறிச் செல்கையில் வீரர்கள் நிச்சயமாக மடிவார்கள் என்பது அவருக்குத் தெரியும். எனவே, வீரர்களுக்கு ஏற்பட இருக்கும் மரணத்தைப் படைத் தலைவர் முன்னறிகின்றார். இருப்பினும், வீரர்களின் மரணத்தை அவர் 'கருதினார்' என்று கூறுதல் சரியன்று. ஏனெனில், வீரர்களின் மரணத்தை அவர் விரும்பவில்லை.

'முன்னறிதல்', 'விருப்பம்' இரண்டும் சேர்ந்ததே 'கருத்து' என்பது

ஒரு செய்கையின் விளைவை நாம் முன்னறிந்திருக்க வேண்டும். அந்த விளைவை நாம் விரும்பவும் வேண்டும். அவ்விருப்பத்தினால் உந்தப்பட்டு அச்செய்கையை நாம் செய்திருக்க வேண்டும். இவ்வாறு, ஒரு செய்கையின் விளைவை முன்னறிந்து, அந்த விளைவை விரும்பி, அவ்விருப்பத்தால் உந்தப்பட்டு அச்செய்கையைச் செய்தால்தான், அது 'கருதிய செயல்' (Intended act) ஆகின்றது.

கல்லை எடுத்து ஒருவர்மீது எறிந்தால், எறியப்பட்ட வருக்கு உடற்காயம் விளையும் என்பதை நாம் அறிவோம். இவ்வாறு, ஒருவரைக் காயப்படுத்தவேண்டும் என்று விரும்பு கிறோம். இவ்விருப்பத்தால் தூண்டப்பட்டு ஒருவர்மீது கல்லை எறிகின்றோம். அதன் விளைவாகக் காயமும் ஏற்படுகின்றது. கல்லை அவர்மீது எறிந்தால் காயம் விளையும் என்ற முன்னறியத்தகக விளைவை விரும்பிக் கல்லெறிந்த செயலைக் 'கருதிய செயல்' (intended act) என்று சட்டம் கொள்ளுகிறது. அது 'வேண்டுமென்றே காயம் விளைத்தல்' (Voluntarily causing hurt) என்ற குற்றம் ஆகின்றது.

இவ்வாறு, 'முன்னறிதல்' (foresight), 'விருப்பம்' (desire)

---

1 Again a man cannot intend to do a thing unless he desires it - Kenny.

இரண்டும் சேர்ந்தே 'கருத்து' (intention) ஆகின்றது![1]

எனவே, கருதிய விளைவு (intended consequence) என்றால், அது முன்னறியத்தக்க விளைவாகவும் (foreseeable consequence) விரும்பிய விளைவாகவும் (desired consequence) இருத்தல் வேண்டும்.[2]

சட்டத்தில் 'கருத்து' (intention), 'கருதிய செயல்' (intended act) என்பவற்றின் பொருளமைதியைக் கண்டோம்.

'குற்ற மனம்' என்று சட்டம் கொள்வது 'குற்றக் கருத்தை' (Criminal intent) மட்டுமன்று. வேறுவகை மனநிலைகளையும் 'குற்ற மனம் எனக் கொள்ளுகிறது சட்டம். அந்த மனநிலைகள் எவை என்று காண்போம்.

தெரிந்து செய்தல் (done knowingly), அசட்டைத் துணிவு (recklessness or rashness), கவனமின்மை (negligence) இவைகளால் விளைக்கப்படும் தீங்குகளும் குற்றங்கள் ஆகின்றன.

தெரிந்து செய்தல் (Done Knowingly)

ஒருவருக்கு அடிவயிற்றில் கட்டி ஒன்று இருக்கிறது. அதனால், அவர் வயிற்றில் இலேசாக உதைத்தாலும் அவருடைய உயிருக்கு ஆபத்து விளையலாம் என்பது மற்றவருக்குத் தெரியும். இதைத் தெரிந்திருதும், 'கட்டி' உள்ளவரின் வயிற்றின்மீது மற்றவர் உதைக்கின்றார். இதன் விளைவாக உதைபட்டவர் இறந்துவிடுகிறார். இப்பொழுது உதைத்தவர் கொலைக் குற்றத்திற்கு ஆளாகின்றார்.

தாம் உதைத்த செயலால் உதைபட்டவர் இறந்துவிடலாம் என்பதைத் தெரிந்திருந்தும் அவர் உதைத்ததால், அது கொலைக் குற்றம் ஆகிறது.

இங்குள்ள 'குற்ற மனம்' என்ன? மரணம் விளையக் கூடும் என்பதைத் தெரிந்திருத்தல்.

---

1 Intention will be found to resolve itself into two things; foresight that certain consequences will follow from an act, and the wish for those consequences working as a motive which induces the act - Holmes'-Common Law.

2 The noun 'intention' in the present connection is used to denote the state of mind of a man who not only foresees but also desires (wills) the possible consequences of his conduct — Kenny.

மரணத்தை விளைவிக்க வேண்டும் என்ற கருத்து (Intention) ஒரு வகை மனநிலை; மரணம் விளையலாம் என்று தெரிதல் (Knowledge) மற்றொரு வகை மனநிலை. இந்த இரண்டில் எந்த மனநிலையோடு மரணம் விளைத்தாலும் அது குற்ற மனத்தோடு கூடிய செயலாகின்றது.

அசட்டைத் துணிவு; கவனமின்மை.

விளையும் தீங்கைப்பற்றி அக்கறை இன்றி ஒரு செயலைச் செய்வது 'அசட்டைத்துணிவான' (rash or reckless) செயல் என்பார்கள். விளையும் தீங்கைப் பற்றி எண்ணாமல், போதிய கவனம் இன்றி ஒரு செயலைச் செய்தல் 'கவனமின்மை' (negligent) யான செயல் என்பார்கள். இந்த இருவகை மனநிலைகளும் 'குற்ற மனம்' ஆகின்றன. ஆதலால், தீங்கு அசட்டைத்துணிவுடன் இழைக்கப்பட்டாலும், கவனமின்மையால் இழைக்கப்பட்டாலும் அது குற்றமே ஆகின்றது.

எனவே, 'குற்ற மனம்' என்பது கருதுதல் (intention), தெரிதல் (knowledge) அசட்டைத் துணிபு (recklessness or rashness), கவனமின்மை (negligence) என்ற மனநிலைகளைக் குறிக்கின்றது.

ஒருவர் மனநிலையை நம்மால் காணமுடிவதில்லை. அவர் செயல்களிலிருந்தும் அவற்றின் விளைவுகளிலிருந்துமே அவரது மனநிலையை ஊகித்து அறிய வேண்டியிருக்கிறது.

நோக்கம் (MOTIVE)

ஒருவர் மற்றொருவருக்குத் தீங்கு செய்கின்றார் என்றால், அவ்வாறு தீங்கு செய்வதன்மூலம் தமக்கு அதனால் கிடைக்கும் ஒரு நன்மையை எதிர்பார்க்கின்றார்.

ஒரு பெண் அணிந்துள்ள நகைகளைக் கைப்பற்ற வேண்டுமென்று அந்தப் பெண்ணைக் கொலை செய்கிறான் ஒருவன். இப்பொழுது அவன் செய்த கொலைச் செயல், கருதிய செயல்தான் என்பதில் ஐயமில்லை. அந்தக் கருதிய செயலுக்குக் காரணம் என்ன? நகையை அடையவேண்டும் என்பது. எனவே, கொலைக்கான நோக்கம் நகையை அடைய வேண்டும் என்ற தீய ஆசை என்கிறோம். ஒரு செயலின் காரணம், கருத்து; அக்கருத்தின் காரணம், நோக்கம்.

ஒரு செயலிலிருந்து அதைச் செய்தவரின் கருத்தை அறிய வேண்டுமெனில், 'என்ன செய்தார்' என்பதை நாம் பார்க்க வேண்டும். அதைச் செய்தவரின் நோக்கத்தை அறிய வேண்டுமெனில், அதை 'ஏன் செய்தார்' என்பதைக் காணவேண்டும்.

பகைமை காரணமாக ஒருவர் கையை மற்றொருவர் வெட்டி விடுகின்றார். கையை வெட்டியது கருதிய செயல். கையை வெட்டித் துன்பத்தை விளைவிக்கவேண்டும் என்ற கருத்துடன் செய்யப்பட்ட செயல் அது. அதற்குக் காரணமாக உள்ளது பகைமை; பழிதீர்க்கும் எண்ணம். எனவே, வெட்டிய செயலுக்கான நோக்கம் பகைமை என்கிறோம்.

கருத்தின் கருத்தாக, உட்கருத்தாக இருப்பது 'நோக்கம்' எனப்படுகிறது.

ஒரு செயல் எதை நோக்கிச் செய்யப்படுகிறதோ அதை 'நோக்கம்' என்கிறோம். ஆங்கிலத்தில் இதை Motive என்பார்கள்.

ஒரு செயலில் இருந்து அதைச் செய்தவரின் கருத்தைக் கண்டு கொள்ளலாம்; ஆனால், அவரது நோக்கத்தைக் காணுவது இயலாது. ஏனெனில், நோக்கம் என்பது செயலுக்கு அப்பாற் பட்டு, அதன் குறிக்கோளாக இருக்கிறது.[1]

தீய செயல் கருதிச் செய்யப்பட்டதா என்பதையே சட்டம் கணக்கில் எடுக்கிறது. அது எந்த நோக்கத்துடன் செய்யப்பட்டது என்பதைப்பற்றிச் சட்டம் அக்கறை செலுத்துவது இல்லை.

நல்ல நோக்கத்தோடு ஒரு குற்றமான செயல் செய்யப் படலாம். நோக்கம் நல்லது என்பதற்காகக் குற்றச் செயலைச் சட்டம் மன்னிப்பதில்லை. தீய நோக்கத்தோடு குற்றமற்ற செயல் செய்யப்படலாம்; நோக்கம் தீயதாக இருந்தாலும், அச்செயலைக் குற்றம் எனச் சட்டம் கொள்வதில்லை. எனவே, நோக்கத்தின் அடிப்படையில் ஒரு செயலின் தன்மை தீர்மானிக்கப்படுவ தில்லை.

சட்டம் ஒருவரைப் பற்றித் தீர்மானிப்பது அவர் என்ன செய்தார் என்பதை வைத்துத்தான்; என்ன காரணத்திற்காக அதைச் செய்தார் என்பதை வைத்து அன்று.[2]

---

1. Motive is the purpose for which an act is done.

2. The law will judge a man by what he does, not by the reasons for which he does it - Salmond.

எனவே, குற்றமான ஒரு செயல் நல்ல நோக்கத்தோடு செய்யப்பட்டது என்பதால் அது குற்றமற்றதாகிவிடுவதில்லை. எவ்வளவு நல்ல நோக்கத்தோடு ஒரு குற்றச் செயலைச் செய் தாலும், அது குற்றமேயாகும்.

ஈன்றாள் பசிகாண்பா னாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

(குறள்.656)

தன்னைப் பெற்ற அன்னையின் பசியைப் போக்குவதற்கு என்றுகூட ஒருவன் பழிச்செயலைச் செய்தல் கூடாது என்பது அறநெறி. பாசமுள்ள தாயின் பசியைப் போக்குவதைவிட உயர்ந்த நோக்கம் உலகில் வேறு என்ன இருக்க முடியும்? அத்தகைய உயர்ந்த நோக்கத்துடன்கூட உலகத்தார் பழிக்கும் பழிச் செயல்களைச் செய்தல் தகாது என்கிறது குறள் நெறி.

அறநெறியோடு இணைந்து நிற்கும் சட்ட நெறியும் நோக்கத்தைப் பார்க்காமல், கருதிய செயலையே கணக்கில் எடுக்கிறது. அது குற்றச் செயலெனில், செய்தோரைத் தண்டனைக்கு உள்ளாக்குகிறது.

நோக்கத்தையும் காண வேண்டிய நேர்வுகள் உண்டு

குற்றஇயல் சட்டம், குற்றச் செயல்களைத் தண்டனைக் குற்றவனாக விதிப்பது போல், குற்ற முயற்சியான செயல் களையும் தண்டிக்கத் தக்க செயல்கள் என விதிக்கின்றது.

குற்ற முயற்சியில் (Criminal attempt) செயல் முற்றுப் பெறவில்லை; அதாவது, குற்றவாளியின் செயல்மூலம் அவன் விரும்பிய விளைவு நேரவில்லை. நேராத அந்த விளைவை நாம் எப்படி ஊகிப்பது? குற்ற முயற்சியான செயலை எந்த நோக் கத்துடன் குற்றவாளி செய்தார் என்பதைக் கண்டுதான், அச் செயல் குற்ற முயற்சிச் செயலா அல்லவா என்பதைத் தீர்மானிக்க முடியும்.

பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருக்கும் நம்முடைய சட்டைப் பைக்குள் ஒருவர் தம் கையை விடுகின்றார். நாம் அவரைப் பிடித்துக் கொள்ளுகிறோம். நம் பையிலிருந்து பணத்தை அவர் இன்னும் எடுக்கவில்லை; எனவே திருட்டுக் குற்றம் இன்னும் நிறைவேறவில்லை. இருப்பினும், 'திருட்டு முயற்சிக் குற்றத்திற்கு அவர் ஆளாகின்றார். பணத்தை எடுக்காத

நிலையிலும் அவர் எப்படிக் குற்ற முயற்சிக்கு உள்ளாகின்றார்? அவர் என் பையில் கையை விட்டதன் நோக்கம் பணத்தைத் திருடுவதுதான் என்பதை நாம் காணுகின்றோம். எனவே, அந்தத் தீய நோக்கத்தை வைத்துத்தான் பையில் கைவிட்ட செயல் 'திருட்டு முயற்சி' என்ற குற்றமாகத் தீர்மானிக்கப்படுகிறது.

இவ்வாறு, குற்ற முயற்சியைத் தீர்மானிப்பதற்கு அதைச் செய்தவரின் நோக்கம் ஆய்வதற்குரியதாகின்றது.

இரண்டாவதாக, சில செயல்கள் இன்ன நோக்கத்தோடு செய்யப்பட்டிருந்தால்தான் குற்றங்களாகக் கொள்ளப் படுகின்றன. பொய்யாவணம் புனைதல் (forgery) என்ற குற்றம், ஒரு ஆவணத்தைத் திருத்தி மாற்றியதால் மட்டுமே பிறந்து விடுவதில்லை. மோசடியாகப் பிறரை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் செய்யப்பட்டிருந்தால் மட்டுமே அச்செயல் குற்றமாகிறது. இத்தகைய நிலையிலும், சட்டம் ஒரு செயலைச் செய்தவரின் நோக்கத்தைப் பார்க்கின்றது.

மேலும், ஒரு குற்றவாளிக்குத் தண்டனை விதிப்பதற்கு முன், அக்குற்றம் எந்த நோக்கத்துடன் செய்யப்பட்டது என்பதை நீதிமன்றம் பார்க்கின்றது. அரைப் பவுன் சங்கிலியைக் கைப்பற்ற வேண்டும் என்பதற்காக ஐந்து வயதுச் சிறுமியைக் கொலை செய்பவன் எவ்வளவு கொடியவனாக இருக்க வேண்டும்! அவன்மீது கருணை காட்டாமல் கடுமையான தண்டனை விதிக்கப்படுகிறது. வறுமையின் கொடுமையால் தன் ஐந்து வயதுப் பிள்ளையைக் கிணற்றில் தள்ளிக் கொன்ற தாயின் நோக்கத்தைக் கண்டு அவள்மீது கருணை காட்டப்படுகின்றது; குறைந்த தண்டனை விதிக்கப்படுகிறது.

இவ்வாறு, குற்ற முயற்சியைத் தீர்மானிப்பதிலும், தண்டனையின் அளவைத் தீர்மானிப்பதிலும் 'நோக்கம்' (motive) உதவுகின்றது.

கடும் பொறுப்படைவு (Strict Liability)

'குற்ற மனம் இன்றிக் குற்றம்இல்லை', என்ற விதியைக் கண்டோம். பொதுவான இந்த விதிக்குச் சில விலக்குகள் உள்ளன.

சிலவகைக் குற்றங்களில், குற்றம் இழைத்தவர்களின் குற்றமனத்தை நீதிமன்றத்தில் மெய்ப்பிப்பது இயலாததாகி விடுகின்றது. எனவே, குற்றம் செய்தவர்கள் எளிதாகத் தப்பிவிட ஏதுவாகின்றது.

கலப்பட உணவுப் பொருள்களை விற்பது குற்றம் எனச் சட்டம் உள்ளது. இது, பொதுமக்களின் உடல்நலனுக்கு அவசியமான சட்டம். பாலிலே நீர் கலந்து ஒருவர் விற்கின்றார். விற்றவர் கூறுகின்றார்; 'நான் இன்னொருவரிடமிருந்து வாங்கி விற்றேன். அதில் நீர் கலந்திருப்பது எனக்குத் தெரியாது', என்று. இது உண்மையாகக் கூட இருக்கலாம். ஆனால், இவரை விடுதலை செய்து விட்டால் ஒவ்வொருவரும் இந்த வாதத்தைக் கூறிச் சட்டத்திலிருந்து தப்பிவிட ஏதுவாகும். சட்டத்தைச் செய லுறுத்துவது இயலாமற் போய்விடும். எனவே, 'நீர் கலந்து பாலை விற்பது குற்றம். நீர் கலந்திருப்பது தெரிந்தாலும் தெரியா விட்டாலும், விற்ற செயலே குற்றமாகும்' என்று சட்டம் கூறு கின்றது. இப்படிக் கூறுவதைத் தவிர வேறு வழி இல்லை.

இவ்வாறு, குற்ற மனம் இன்றியே ஒருவரைக் குற்றப் பொறுப்படைவுக்கு உள்ளாக்குவதைக் 'கடும் பொறுப்படைவு' (Strict Liability) என்று கூறுவார்கள்.

இவ்வாறான கடும்பொறுப்படைவுக் குற்றங்களுக்கான சட்ட இலக்கணங்களில் குற்ற மனத்தைக் குறிப்பதற்கான சொற்கள், — 'கருதிய', 'வேண்டுமென்றே' (intentionally, wilfully, voluntarily) போன்ற சொற்கள் இடம் பெறுவதில்லை.

'குற்ற மனம்' என்பது பற்றி இதுவரை கண்டோம். இனி, குற்றமனத்தால் இயக்கப்படுவோர் செயல்களைப் பற்றிக் காணுவோம்.

செயல் (Act) என்றால் என்ன?

தீயவைகளை "உள்ளத்தால் உள்ளலும் தீது" என்று அறநூல்கள் விளக்குகின்றன. உள்ளத்தை உயர்த்துவது அறத்தின் குறிக்கோள்; எனவே, தீய எண்ணங்களை அறம் விலக்குகிறது.

ஆனால், சட்டத்தைப் பொறுத்தவரை உள்ளத்தால் உந்தப்படும் செயலையே அது கண்காணிக்கின்றது. கருத்து, கருத்தாகவே இருக்கும் பொழுது அது வெளியே தெரிவதில்லை. அகநிகழ்வான கருத்து புறச்செயலாக உருவெடுத்த பின்னரே, அச்செயலில் இருந்து கருத்தை நாம் ஊகிக்க முடிகிறது. குற்றச் செயல் இல்லையேல் சட்டம் ஏதும் செய்வதற்கில்லை. குற்ற மனம் இருந்தும், குற்றச் செயல் புரியாத ஒருவரைச் சட்டம் குற்ற வாளியாகக் கொள்ளுவது இல்லை.

'தீய கருத்தாலும் தீய செயலாலும் பாவம் விளையலாம்

என்பது [1] அறம்; தீய செயல் இன்றிக் குற்றம் இல்லை என்பது சட்டம்'என்கிறார் பிட்ஸ் ஜெரால்டு

மனம், வாக்கு, காயம் எனும் மூன்று வகையிலும் மனிதன் செயற்படுகிறான். மனத்தைப் பொறுத்தவரை 'குற்ற மனம்' என்ற தலைப்பில் அதுபற்றிக் கண்டோம். உரையாற்றல், உடல் இயக்கம் இவை இரண்டைப்பற்றியே 'செயல்' (Act) என்ற தலைப்பில் ஆய்கின்றோம்.

செயல்களை, 'இச்சைக்கு அடங்கும் செயல்' (Voluntary act) என்றும், 'இச்சைக்கு அடங்காச் செயல்' (Involuntary act) என்றும் இரண்டு வகைகளாகச் சட்டம் பிரிக்கின்றது.

இதயத்துடிப்பு, இரத்த ஓட்டம், தூக்கத்தில் பேசுவது, நடப்பது, இவையெல்லாம் நம் இச்சைக்கு அடங்காத செயல்கள் ஆகின்றன. இவற்றைப் பற்றிச் சட்டம் அக்கறை கொள்ளு வதில்லை. இச்சைக்கு அடங்கும் செயல்களைப் பற்றியே சட்டம் சிந்திக்கிறது.

என் கைகளையோ கால்களையோ அசைப்பது எனது செயல்; என் இதயம் இயங்குவது என் செயல் அன்று; ஏனெனில் அது என் இச்சைக்கு உட்பட்டதன்று. கைகளை அசைக்காமல் இருப்பது என் செயல்; ஆனால் காதுகளை அசைக்காமல் இருப்பது என் செயல் அன்று; எனெனில் நான் விரும்பினாலும் என் காதுகளை அசைப்பது முடியாத காரியம். சிந்திப்பது எனது செயல்; கனவு காண்பது எனது செயல் அன்று.[2]

நமது இச்சைப்படி ஒன்றை நிகழ்த்தலாம் அல்லது நிகழ்த்தாமல் இருக்கலாம். அவ்வாறு, நிகழ்த்தாமல் இருப்பதும் செயலே ஆகும். நம் கையை ஆட்டுவதும் நம் செயல் என்றால், ஆட்டாமல் இருப்பதும் நம் செயல்தான். நான் தெருவில் நடந்து செல்லும்போது, பின்னால் ஒரு விசைவண்டி வருகிறது. உடனே, நான் தெருவின் ஓரத்திற்கு விலகுகிறேன். இப்படி நான் விலகியது 'இயங்கும் செயல்' (Positive act or Act of commission) நான் விலகிச் செல்லவில்லையானால், அப்படி விலகாமல் இருப்பதும்

1 Sins may be committed in thought and deed; crimes only in deed — Fitzgerald.

2 The movements of a man's limbs are acts; those of his hart are not. Not to move his arms is an act; not to move his ears is not. To meditate is an act, to dream is not — Salmond.

ஒரு செயலே ஆகும். அதை 'இயங்காச் செயல்' (Negative act or Act of omission) என்பார்கள்.

எதைச் செய்யவேண்டுமோ அதைச் செய்யாமல் இருத்தல் 'செய்தக்க செய்யாமை' ஆகிறது. அதை Illegal omission என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். இதன் விளைவாகவும் பொறுப் படைவு சேர்கின்றது.

சட்டத்தால் 'செய்தக்க அல்ல' என்று விலக்கப்பட்ட செயல்களைச் செய்தல் தீங்கு (wrong) ஆவது போல், விதிக்கப்பட்ட செயல்களைச் செய்யாமல் விடுவதும் தீங்கு ஆகின்றது.

> செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க
> செய்யாமை யானும் கெடும்.
>
> **(குறள் 466)**

என்ற அறநெறி சட்டநெறியாகவும் உள்ளது.

செய்வினை, சூழ்நிலை, விளைவு மூன்றும் சேர்ந்ததே 'செயல்'

ஒரு செயலால், செய்வினையால் ஏற்படும் பயனை 'விளைவு' என்கிறோம். வினையும் விளைவும் இணைந்துள்ளவை. நான் கம்பினால் ஒருவரை அடிக்கிறேன்; அடித்தல் ஒரு வினை. இதன் பயனாக அடிபட்டவருக்குக் காயம் ஏற்படுகின்றது; காயம் விளைவு. வினையாகிய அடித்தலும் விளைவாகிய காயமும் சேர்ந்து 'காயம் விளைத்தல்' என்ற செயல் ஆகின்றது.

ஒருவர் மற்றொருவரை நோக்கிச் சுடுகின்றார். ஆனால், குறி தவறிவிடுகின்றது. எவரை நோக்கிச் சுடப்பட்டதோ அவர் இறக்கவில்லை. இப்பொழுது அச்செயல் 'கொலை முயற்சி' ஆகின்றது. குறி சரியாகப் பாய்ந்து அவர் இறந்து விட்டார் என்றால், அந்தச் செயல் 'கொலை' ஆகின்றது. சுட்டவரின் உடல் இயக்கம் இரண்டிலும் ஒன்றுதான். ஆனால், அதன் விளைவுகள் வேறுபட்டவை. ஒன்றில் மரணம் விளையவில்லை; மற்றையதில் மரணம் விளைந்தது. எனவே, முன்னதைக் 'கொலை முயற்சி' என்றும், பின்னதைக் 'கொலை' என்றும் கூறுகின்றோம். இரண்டிலும், வினைகள் ஒன்றாக இருந்தும் விளைவுகள் வேறாக இருந்ததால், செயல்கள் மாறுகின்றன.

எனவே, ஒருவரின் உடல் இயக்கத்தை, அதாவது, செய்வினையை மட்டும் வைத்துச் செயலை நிச்சயிக்க முடியாது. வினையின் விளைவையும் கண்டுதான் செயலைக் கணிக்கின்றோம்.

செய்வினை, விளைவு இந்த இரண்டைத் தவிர, இன்னும் ஒரு முக்கியமான கூறு ஒன்று உண்டு. அதுதான் சூழ்நிலை. வினையும் விளைவும் குறிப்பிட்ட சூழ்நிலையில் அமைந்தால் தான் அது குற்றச் செயல் ஆகின்றது.

மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளியைச் சிறையதிகாரி தூக்கிலிடுகின்றார். அந்த அதிகாரி கொலைக் குற்றத்திற்கு ஆளாவதில்லை. அவர் குற்றவாளியைத் தூக்கி லிட்டது சட்டப்படியான செயலாகும். அவர் தூக்கிலிட்ட செய்வினையும், அதனால் விளைந்த மரணமும் இருந்தாலும், அது 'கொலைக்குற்றம்' ஆவதில்லை. இவ்வாறே, நம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டிய சூழ்நிலையில் நம்மைக் கொல்ல முயன்றவரை நாம் கொன்றால் அது தற்காப்புச் செயலாகின்றது; கொலைச் செயல் ஆவதில்லை.

எனவே, வினையையும் விளைவையும் மட்டுமே வைத்துக் குற்றச் செயலை நிர்ணயிப்பதில்லை. அவை எந்தச் சூழ்நிலையில் நிகழ்ந்தன என்பதையும் ஆராய்ந்தே அது குற்றச் செயலா அன்றா என்பது உறுதிசெய்யப்படுகிறது.

ஒருவர் செய்யும் வினை, சூழ்நிலைகள், அதனால் நேரும் விளைவு இம்மூன்றும் 'குற்றச் செயல்' என்பதில் அடங்குகின்றன.[1]

இன்றைய சட்டஇயல் அறிஞர்கள் சிலர் 'செயல்' (act) என்பது 'செய்வினை' என்பதுதான் என்று கொள்ளுகின்றனர்.

'ஒருவரது இச்சையின் புறஇயக்கமே செயல் என்பது. அதில் அதன் நேரடியான, கருதிய விளைவு எதுவும் சேராது', என்பது அவர்கள் கொள்கை.

ஆனால், இது சாதாரண பேச்சுவழக்கிற்கு மாறுபட்ட தாகின்றது. நாம் சாதாரணமாக 'ஒருவன் கத்தியால் குத்திக் கொலை செய்தான்' என்று கூறுகிறோம். 'ஒருவன் கத்தியை

1 Every act is made up of three distinct factors or constituent parts. These are (i) its origin in some mental or bodily activity, (ii) its circumstances and (iii) its consequences - Salmond.

மற்றொருவர் மார்பிலேவைத்து அழுத்தினான்', என்று கூறுவ தில்லை. அப்படிச் சொன்னால் அது பொருள் முற்றுப் பெறாமல் சொல்லுவதேயாகும்.

வினைக்கும் விளைவுக்கும் உள்ள தொடர்பு (Causal relationship)

செய்வினையும் விளைவும் சேர்ந்து குற்றச் செயல் ஆகிறது எனக் கண்டோம்.

வினைக்கும் விளைவுக்கும் தொடர்பு இருத்தல் வேண்டும். வினையிலிருந்து பிறந்திருக்கவேண்டும் அந்த விளைவு. வினைக்கும் விளைவிற்கும் காரணகாரியத் தொடர்பு, — இணைப்பு — இருத்தல் வேண்டும் என்கின்றனர்.

ஒருவர் வினையிலிருந்து எழாத விளைவுகளுக்கு அவரைப் பொறுப்பாக்குதல் முறையன்று. எனவே, வினை — விளைவு இவற்றின் தொடர்பைத் தீர்மானிப்பது சட்டத்தின் முக்கியமான ஆய்வாகின்றது.

சில நேர்வுகளில், வினைக்கும் விளைவுக்கும் இடையில் நிகழ்வுகள் ஏற்படுவதுண்டு. இந்நிலையில் வினையின் நேரடி விளைவுபற்றி உறுதிசெய்வது சிக்கல் நிறைந்ததாகின்றது. சில எதிர்பாராத நிகழ்வுகளாலும் விளைவுகள் மாறலாம்; தீவிர மாகலாம். எனவே, வினைகளுக்கும் விளைவுகளுக்கும் உள்ள தொடர்பைக் கண்டு வினைகளைச் செய்தவர்க்கு எத்தகைய பொறுப்படைவு என்பதைக் கணிப்பதில் இடர்ப்பாடுகள் எழுகின்றன.

குற்ற முயற்சி (Criminal Attempt)

குற்றப்பொறுப்படைவு என்பது சட்டத்தால் விலக்கப்பட்ட செயல்களைச் செய்தவுடனேயே எழுகின்றது. அச்செயல்களால் பிறருக்குத் தீமை விளைந்திருச்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

தீமையான விளைவு ஏதும் இல்லாதிருந்தும், தண்டிக்கத் தக்தாகக் கொள்ளப்படுவது 'குற்ற முயற்சி' என்ற செயலாகும். அச்செயலில் வெளிப்படும் குற்றக் கருத்தைக் கண்டு சட்டம் அதைக் குற்றமாகக் கொள்ளுகிறது.

'குற்றமனம்', 'குற்றச்செயல்' இரண்டும் சேர்ந்தே 'குற்றம்'

ஆகிறது என்றும், 'செயல்' என்பது செய்வினை, சூழ்நிலை, விளைவு மூன்றையும் கொண்டது என்றும் முன்னர் கண்டோம். சில வேளைகளில் விரும்பிய விளைவு நேராமல் போகலாம். ஒரு செய்கையால் குற்ற விளைவு நேர்ந்துவிடில், குற்றச் செயல் முடிவடைந்து விடுகிறது. முடிவடைந்த குற்றச் செயலைக் 'குற்றம்' என்கிறோம். குற்ற விளைவு நேராமல், முடிவடையாத குற்றச் செயலைக் 'குற்ற முயற்சி' (Criminal attempt) என்பார்கள்.

குற்ற முயற்சியில், குற்றத்திற்கு அடிப்படையான குற்ற மனம் இருக்கிறது. அந்தக் குற்றமனம் ஒரு செய்வினையாகவும் வெளிப்பட்டுவிட்டது. ஆனால், அந்த வினையின் பயனாக விரும்பிய விளைவு நேரவில்லை. குற்றவிளைவு நேரவில்லையெனினும், செய்வினையிலிருந்து குற்றமனம் வெளிப்படுவதால், அந்த விளைவில்லாத வினையையும் குற்றம் எனச் சட்டம் கொள்ளுகிறது.

ஒருவர் கருதிய விளைவு கைகூடவேண்டுமாயின், அதில் நான்கு நிலைகள் அடங்கியுள்ளன. ஒன்று, அந்த விளைவைக் கருதுதல் (intention), இரண்டு, அதற்கான முன்னேற்பாடு (preparation); மூன்று, விளைவு கைகூடுவதற்கான முயற்சி (attempt); நான்கு, விளைவு அல்லது முடிவு (completion). கருத்து, முன்னேற்பாடு, முயற்சி. விளைவு என்ற நான்கு நிலைகளில் முதல் இரண்டு நிலைகளைப் பற்றிச் சட்டம் அக்கறை கொள்வது இல்லை. கருத்து கருத்தாகவே இருக்கும்பொழுது எவருக்கும் அது தெரிவதில்லை. முன்னேற்பாட்டு நிலையிலும் கருத்து தெளிவாகத் தெரிவதில்லை. முயற்சி நிலையில் குற்றக் கருத்து தெளிவாகப் புலப்படுகிறது. முடிவு நிலையில் கருத்து விளைவாக வெளிப்படுகின்றது.

குற்றக் கருத்தைக் காட்டும் முயற்சியையும் அக்கருத்தை நிறைவேறச்செய்யும் முடிந்த செயலையும் குற்றங்களாகக் கொண்டு சட்டம் தண்டனை விதிக்கின்றது.

குற்றக் கருத்தைக் காட்டும் 'முயற்சி' என்று ஒன்றை உறுதிசெய்வதில் சிக்கல்கள் எழுகின்றன.

ஒருவர் தம் எதிரியைக் கத்தியால் குத்திக் கொலை செய்யக் கருதுகிறார். அக்கருத்தை நிறைவேற்றும் முனைப்பால், குத்து வதற்கென்று ஒரு கத்தியை விலைக்கு வாங்குகிறார். கத்தியை வாங்கிய செயலை மட்டும் வைத்துக் கொண்டு, இன்னொருவரைக் கொலை செய்யத்தான் கத்தியை விலைக்கு அவர்

வாங்கியிருக்கிறார் என்று முடிவு செய்ய முடியாது. கத்தியை எத்தனையோ நல்ல காரியங்களுக்கும் பயன் படுத்தலாம். எனவே, அவரது தீய கருத்து அதிலிருந்து வெளிப்படவில்லை. பிறகு, அவர் தம் எதிரியின் வீட்டிற்குக் கத்தியோடு செல்லுகிறார். வீட்டு வாசலில் அவரைச் சந்தேகப்பட்டுப் பிடித்து விடுகின்றனர். இப்பொழுதும் அவர் கொலைசெய்ய முயற்சிசெய்தார் என்று உறுதியுடன் கூற முடிவதில்லை. ஏனெனில், அவர் கொலைச்செயலில் ஈடுபடாமல் இருப்பதற்கு இன்னும் வாய்ப்பு உள்ளது. கொலை செய்யவேண்டாம் என மனம் திருந்தி அதைச் செய்யாமலிருப்பதற்கு இன்னும் இடம் இருக்கிறது.

கத்தியைக் கையில் பிடித்து ஓங்கிக்கொண்டு தம் எதிரியை நோக்கி ஓடி வருகிறார் என்று வைத்துக் கொள்வோம். இந் நிலையில் அவர் தடுத்து நிறுத்தப் படுகிறார். இப்பொழுது, அவரது செய்கையைக் 'கொலைக்குற்ற முயற்சி' என்று கூற முடியும்.

ஓங்கிய கத்தியுடன் எதிரியை நோக்கி வந்ததிலிருந்து அவரது கொலை எண்ணம் தெளிவாக வெளிப்படுகிறது. பிறர் தடுத்திருக்காவிடில் தம் எதிரியை அவர் குத்தியிருப்பார் என்று நாம் எண்ணுவது நியாயமேயாகும். எனவே, அவர் 'கொலை முயற்சி'க் குற்றத்திற்கு ஆளாகின்றார்.

ஓங்கிய கத்தியுடன் ஓடிவராமல் சிறிது தூரத்தில் நின்றுகொண்ட தம் எதிரியை நோக்கிக் குறிவைத்துக் கத்தியை வேகமாக வீசுகின்றார், ஆனால்,அது குறிதவறி எதிரிக்கு அருகில் விழுகிறது. எனவே, எதிரி காயமின்றித் தப்பிவிடுகிறார் என்று வைத்துக் கொள்வோம். இப்பொழுதும் கத்தியை வீசியவர் 'கொலை முயற்சி'க் குற்றத்திற்கு ஆளாகின்றார்.

ஓங்கிய கத்தியுடன் ஓடிவரும் வரை, அல்லது எதிரியைக் குறிவைத்துக் கத்தியை வீசும் வரை, அவர் செய்த செயல்கள் எல்லாம் முன்னேற்பாட்டுச் செயல்கள் (preparation) தாம். அந்த முன்னேற்பாட்டு நிலையில் அது குற்றமாவதில்லை. காரணம், குற்றம் இழைக்க விரும்புபவர் மனம் மாறிக் கொலைச்செயலைச் செய்யாதிருக்கும் வாய்ப்பு உள்ளது. எதுவரை அந்த வாய்ப்பு இருக்கிறதோ, அதுவரை அந்தத் தொடர் செயல்களை 'முன்னேற்பாடு' என்றே சட்டம் கொள்ளுகிறது; முயற்சியாகக் கொள்ளுவதில்லை.

'எண்ணத்தால் மட்டுமே எவரும் தண்டனையுறுவதில்லை' (Cogitationis poenam nemo meretur) என்பது இலத்தீன் விதிமொழி.

குற்றம்இழைப்பதற்கென்று செய்யப்படும் தொடர் செயல்களில், குற்ற விளைவு உடனே நேர வெண்டும் என்ற கருத்துடன் எந்தச் செயல் செய்யப்படுகிறதோ, எந்தச் செயலின் இயல்பான போக்கு தடைபட்டதாலோ தவறுவதாலோ குற்ற விளைவு நேரவில்லையோ, அந்தச் செயலைக் 'குற்ற முயற்சி'ச் செயல் என்று சட்டம் கொள்கிறது.[1]

ஒரு குற்றச் செயலைச் செய்து முடிப்பதற்குமுன் பல காரியங்களைச் செய்யவேண்டியது அவசியமாகலாம். ஒருவன் ஒரு வீட்டில் கன்னமிட்டு நுழைந்து திருடத் திட்டமிட்டிருக்கிறான் என வைப்போம். அச்செயலைச் செய்வதற்கு முன்னேற்பாடாக, சுவரிற் கன்னம் வைப்பதற்குத் தேவையான கருவிகளைச் சேகரிக்கிறான். வீட்டிற்குள் இருக்கும் பெட்டிகளைத் திறப்ப தற்கென்று பலவிதத் திறவுகோல்களைச் சேகரிக்கிறான். இருட்டில் பிறர் கண்ணிற்குப் படாமல் இருக்கும்பொருட்டுக் கறுப்பு உடைகளைத் தயார்செய்து கொள்ளுகிறான். இவை யனைத்தும் முன்னேற்பாட்டுச் செயல்கள்தாம். இவைகளில் எதை வைத்தும் அவனைக் குற்றவாளி என்று கொள்ள முடியாது. கடப்பாரை வாங்குவோரெல்லாம் பிறர் வீட்டில் கன்னம் வைப்பதற்கு வாங்குவதில்லை. நம் பெட்டிகளுக்குச் சாவி போட்டுத் தருபவனும் பலவிதத் திறவுகோல்களை வைத்திருக் கிறான். எனவே, பல்வகைத் திறவுகோல்கள் அவனிடமிருப்பதை வைத்து அவன் குற்ற மனத்தை நாம் அறிய முடிவதில்லை. அம்மாதிரியே கறுப்புத் துணியில் உடைகள் வைத்திருப்பதைக் கொண்டும் அவன் குற்றமனத்தை நாம் துணிய முடியாது. எனவே, இவையனைத்தும் முன்னேற்பாட்டுச் செயல்களாகவே கருதப்படுகின்றன.

அவன் அந்த வீட்டிற்குச் சென்று இரவில் வீட்டின் சுவரில் துளையிடத் தொடங்கிவிட்டான் என்றாலோ, சுவரருகில் சென்று தன் ஆயுதங்களைப் பரப்பிவிட்டான் என்றாலோ அச்செயல் 'குற்ற முயற்சி' நிலையை அடைந்து விடுகிறது. ஏனெனில்,

---

[1] An attempt to commit a crime is an act done with intent to commit that crime, and forming part of series of acts which would constitute its actual commission, if it were not interrupted - Sir James Stephen.

அச்செயலில் இருந்து அவன் குற்றக் கருத்து தெளிவாக வெளிப்படுகிறது.

'முன்னேற்பாடு' என்பது குற்றத்தைச் செய்வதற்கு வேண்டிய ஆயுதங்களைச் செய்வதாகும்; 'முயற்சி' என்பது முன்னேற்பாடுகள் முடிந்தபின், குற்றச் செயலை நேரடியாகச் செய்யும் வாயிலாக ஒரு செய்கையைச் செய்வதாகும். 'குற்ற முயற்சி' நிலையில் குற்றச் செயல் ஆரம்பமாகிவிட்டது என்று கூறலாம்.

சில வேளைகளில் எது முன்னேற்பாட்டுச் செயல், எது முயற்சி என்று கொள்ளத்தக்க செயல் என்பதை உறுதிசெய்வது எளிதன்று. குற்றச் செயலுக்காகச் செய்யப்படும் செய்வினைகளின் தொடரில் எதுவரை முன்னேற்பாடாகக் கொள்ளுவது, எதிலிருந்து முயற்சியாகக் கருதுவது என்பதற்குத் திட்டவட்டமான விதிகள் இல்லை. அந்தந்தச் சூழ்நிலைகளுக்கு ஏற்பவே நாம் அதை நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது.

விரும்பிய விளைவு கைகூடவேண்டும் எனில், எந்தச் செய்கை கடைசியாகச் செய்யப்பட வேண்டியது அவசியமோ அச்செய்கைதான் முயற்சியாகும் என்று சில சட்டஇயலறிஞர்கள் கூறுகின்றனர்.

குற்ற மனம் மாறுவதற்கு வழி இருக்கும்வரை, ஒருவரது செய்கையைக் குற்றமுயற்சியாகக் கொள்ளலாகாது என்பது மற்றொரு கொள்கை.

தம் பகைவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்ல வேண்டுமென்ற கருத்துடன் ஒருவர் தமது துப்பாக்கியை எடுத்துக்கொண்டு செல்லுகிறார். எதிரியின் வீட்டருகில் மறைவாக ஓரிடத்தில் பதுங்கியிருக்கிறார். இந்த இரண்டு செயல்களையுமே முன்னேற்பாடுகள் என்றுதான் கொள்ள முடியும். ஏனெனில், தம் வீட்டைவிட்டு வெளியே வரும் பகைவரை அவர் சுடாமலே இருந்து விடலாம். இவ்வாறு அவர் மனம் மாறுவதற்கான வாய்ப்பு இன்னும் உள்ளது. ஆனால், அவர் பகைவரை நோக்கிச் சுட்டு விட்டார். எனினும், குறி தவறிவிடுகிறது என்று வைப்போம். சுட்ட செய்கை குற்ற முயற்சி (கொலை முயற்சி) ஆகிவிடுகிறது. துப்பாக்கியை எடுத்துச் சென்ற பின்னும், பகைவர் வீட்டருகில் பதுங்கி நின்ற பின்னும்கூட, கொலைசெய்யக் கருதிய மனம் திருந்தி, அதைச் செய்யாமல் அவர் இருப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த

வாய்ப்பு இருக்கும் வரை, அவர் செய்கைகள் எதுவும் முயற்சி நிலையை அடைவதில்லை. சுட்டுவிட்டார் என்றால் அதற்கான வாய்ப்பு இனி அறவே இல்லை. எனவே, சுட்ட செயல் குற்றமுயற்சி ஆகிவிடுகிறது. இவ்வாறு, குற்றமனம் திருந்தும் வாய்ப்பு இருப்பதை வைத்தே குற்ற முயற்சியைத் தீர்மானிக்க வேண்டும் என்பது மற்றொரு கொள்கை. குற்றமனம் திருந்தும் வாய்ப்புக் கொள்கையை Doctrine of Locus penitentie என்பார்கள்.

குற்றவாளியின் கருத்து தம் பகைவருக்கு, மரணத்தை விளைக்க வேண்டும் என்பதுதான். அவர் துப்பாக்கியை எடுத்துச் சென்ற செயலிலோ பகைவன் வீட்டருகில் பதுங்கி நின்ற செயலிலோ அவரது கொலைக்கருத்து தெளிவாக வெளிப்படவில்லை. ஆனால், சுட்ட செயல் அவர் குற்றக் கருத்தைத் தெளிவாக வெளியிட்டுவிட்டது. இவ்வாறு, எச்செய்கை குற்றவாளியின் கருத்தைத் தெளிவாக வெளிப்படுத்துகிறதோ அச்செய்கை 'குற்ற முயற்சி' ஆகிறது. 'குற்ற முயற்சிச் செயலில் அதைச் செய்பவரின் குற்றக் கருத்து பதிந்துள்ளது'[1] என்கிறார் சால்மண்ட்.

'கருதிய குற்ற விளைவு கைகூடுவதற்கெனக் கடைசியாகச் செய்யப்படுவது குற்ற முயற்சி; கருதிய குற்ற விளைவு என்ன என்பதைக் காட்டி நிற்பது குற்ற முயற்சி. இந்த இரு கூறுகளும் குற்ற முயற்சிச் செயலில் இருக்க வேண்டும்' என்கிறார் ஆசிரியர் கென்னி.[2]

எனவே, கருதிய விளைவு கைகூடுவதற்கெனச் செய்யப்பட்டது, அக்கருத்தையும் நன்கு வெளிப்படுத்தி நிற்பது — இவ்வாறான செய்கையே 'முயற்சி' ஆகிறது. கருதிய குற்ற விளைவு கைகூடுவதற்கெனச் செய்யப்பட்டதாகவும், கருதிய குற்றத்தை நன்கு வெளிப்படுத்துவதாகவும் உள்ள செய்கையே 'குற்ற முயற்சி' ஆகின்றது.

எனவே, கருதிய குற்றம் எந்தச் செயலில் இருந்து

---

1 A criminal attempt bears criminal intent upon its face — Salmond

2 The accused must have actually done things which are steps intentionally taken in furtherance of some specific aim, and which themselves are enough to suggest clearly what the specific aim was - Kenny.

தெளிவாக வெளிப்படுகின்றதோ அந்தச் செயலையே 'குற்ற முயற்சி' என்று சட்டம் கொள்ளுகிறது.

திருட வேண்டும் என்ற தீய கருத்துடன் ஒருவர் இன்னொருவரின் சட்டைப் பையினுள் கையை விடுகின்றார். ஆனால், பையில் பணமில்லை. இப்பொழுதும், அடுத்தவர் சட்டைப் பையில் கையை விட்டவர் திருட முயற்சி செய்த குற்றத்திற்கு ஆளாகின்றார். 'பையில்தான் பணம் இல்லையே, எந்த வகையிலும் நான் திருடியிருக்க முடியாதே', என்று கூறி அவர் தப்புவது இயலாது. குற்றவாளி கருதிய விளைவு கைகூடியிருக்குமா என்பதன்று கேள்வி. பையில் கையை விட்டதன் நோக்கம் என்ன? என்பதையே சட்டம் பார்க்கிறது. அச்செயல் குற்றவாளியின் குற்றமனத்தைத் தெளிவாக வெளிப் படுத்துவதால், அது 'குற்ற முயற்சி' செயல் ஆகிவிடுகின்றது. எனவே, இயலாத குற்றச் செயல்களைக் குறித்தும் முயற்சிகள் இருக்கலாம்.

இவ்வாறு, 'குற்ற முயற்சி' என்பதையும் தண்டிக்கத்தக்க செயலாகக் கொள்ளுகிறது சட்டம்.

குற்றங்களைத் தடுப்பதற்குக் குற்ற முயற்சிகளையும் தடுப்பது இன்றியமையாததாகின்றது.

'இக்கட்டு நிலையில் எழும் உரிமை' (Jus necessitatis)

பொதுவாக, ஒரு செயலைத் தீங்கானதா என்று சட்டம் தீர்மானிக்கும்பொழுது, அது எந்த நோக்கத்துடன் செய்யப் பட்டது என்பதைக் கவனிப்பதில்லை என்று கண்டோம். ஆனால், சில சூழ்நிலைகளில் செயலின் நோக்கத்தைக் கண்டு, அதைச் சட்டம் மன்னித்து விடுகின்றது.

'இக்கட்டான நிலையில் எழுவதில்லை சட்டம்' (Necessity knows no law) என்பது விதிமொழியாகும். இலத்தீனில் இதை 'Necessitatis non habet legem' என்பார்கள்.

ஆபத்தைத் தவிர்ப்பதற்கென ஆற்றப்படும் செயல்களைச் சட்டம் பரிவுடன் பார்க்கின்றது.

இக்கட்டான நிலையில் எவரும் சட்டத் தண்டனைக்கு அஞ்சாமல் செயற்படுகின்றனர். இவ்வாறு இயங்குவதை

'இக்கட்டு நிலையில் எழும் உரிமை' (Jus necessitatis) என்பார்கள்.[1]

தீப்பிடித்த வீட்டிற்குள் குழந்தை ஒன்று சிக்கிக்கொண்டது. அதை மீட்பதற்கென்று அந்த வீட்டின் கதவுகளை உடைத்து அயலார் செல்வது 'அத்துமீறி நுழைதல்' என்ற குற்றம் ஆகாது.

ஒரு பெரிய தீங்கைத் தவிர்ப்பதற்காக மற்றொரு சிறிய தீங்கைச் செய்வது இன்றியமையாதது ஆகிறது. அந்நிலையில் செய்யப்படும் சிறிய தீங்குச் செயலால் எவர் மீதும் பொறுப்படைவு (liability) எழுவதில்லை.

கடலில் சென்று கொண்டிருந்த கப்பல் 50 பேர்களைக் கொண்ட ஒரு பெரிய படகின்மீது திடீரென மோதக்கூடிய நிலை ஏற்படுகின்றது. அதைத் தவிர்ப்பதென்றால், கப்பலை வேகமாகத் திசை திருப்ப வேண்டும்; அவ்வாறு திருப்பும்பொழுது அக் கப்பலுக்கு அருகில் வந்து கொண்டிருக்கும் ஒரு சிறு படகுமீது மோதுவதைத் தவிர்க்க இயலாத நிலை எழுகிறது. சிறு படகில் மூன்று பேர்கள்தாம் உள்ளனர். இந்த இக்கட்டான நிலையில், கப்பலின்தலைவர் சிறிய படகின்மீது கப்பல் மோதினாற் படகு கவிழ்ந்துவிடும் என்பதைத் தெரிந்திருந்தும், கப்பலைத் திசை திருப்புகின்றார். சிறிய படகுமீது கப்பல் மோதி அதைக் கவிழ்த்து விடுகின்றது. அதிலிருந்த மூன்று பேர்களும் கடலில் மூழ்கி இறந்து விடுகின்றனர். 50 பேர்களைக் கொண்ட பெரிய படகுமீது கப்பல் மோதி விடுவதைத் தவிர்ப்பதற்கென்றே சிறிய படகுமீது கப்பலை மோத விட்டார் கப்பல் தலைவர். இந் நிலையில், வேண்டுமென்றே சிறுபடகுமீது கப்பலை மோதும்படி செய்த செயலைக் குற்றமாகச் சட்டம் கொள்வதில்லை.

இக்கட்டான (necessity) நிலை என்பது ஒன்று; தவிர்க்க இயலாத (inevitable) நிலை என்பது வேறொன்று. தவிர்க்க இயலாத நிலையில் ஒரு செயலைச் செய்வதா, வேண்டாமா என்ற சிந்தனைக்கே இடமில்லை. எனவே, அத்தகைய செயலை ஒருவர் கருதிய செயல் என்று சொல்லுவதே பொருந்தாது என்கிறார் சால்மண்ட். ஆனால், இக்கட்டால் எழும் நிலையில் உள்ளவர், சட்டத்திற்கு அஞ்சி நிற்பது அல்லது அதைவிட உயர்வாகக் கருதும் ஒன்றுக்காகச் சட்டத்தைப் புறக்கணித்து விடுவது என்ற இரண்டில் ஒன்றைத் தேர்வுசெய்ய

1 The jus necessitatis is the right of a man to do that from which he cannot be dissuaded by any terror of legal punishment - Salmond.

வேண்டியிருக்கிறது. இந்நிலையில் சட்டத் தண்டனை என்ற அச்சம் அடங்கிவிடுகிறது.

மூழ்கிவிட்ட கப்பலிலிருந்து தப்பிய இரண்டு பேர்கள் மிதப்புக் கட்டை ஒன்றைப் பற்றிக்கொண்டு கடலில் மிதக்கின்றனர். அந்தக் கட்டையால் ஒருவரைத்தான் தாங்கிக் கொள்ளமுடியும். எனவே, இருவரில் ஒருவர் கட்டையை விட்டுவிடவேண்டும் என்ற இக்கட்டான நிலை எழுகின்றது. அவர்கள் இருவரில் எவர் எவருக்கு விட்டுக் கொடுப்பது? கட்டையைக் கைநழுவ விடுபவர் கடலில் மூழ்கி மாள்வது உறுதி. அவர்களில் வயதில் மூத்தவருக்கு இளையவர் விட்டுக் கொடுக்க வேண்டும் என்றோ, எவருக்கு மனைவி மக்கள் இருக்கின்றனரோ அவருக்கு இளைஞர் விட்டுக் கொடுக்க வேண்டும் என்றோ ஒழுக்கநெறி பேசலாம். ஆனால், உயிருக்கு ஆபத்தான இந்த இக்கட்டான வேளையில் என்ன நடக்கும்? உடல் வலிமையுடையவர், வலிமை குறைந்தவரின் பிடியிலிருந்து மிதப்புக் கட்டையைப் பறித்துக் கொள்வார்; தாம் தப்ப வேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டு இயங்குவார். அவ்வாறு, அவர் இயங்கியது குற்றம் என்று எப்படிக் கூற முடியும்? எனவே, வலிமையுடையவர் தம்மைக் காத்துக் கொள்ளுவதற்கெனத் தம் வலிமையைப் பயன்படுத்தி மற்றவரை மிதப்புக் கட்டையிலிருந்து தள்ளிவிடுவதைத் தீங்கான செயல் என்று சட்டம் கொள்ளுவது பொருந்தாது; அவ்வாறு சட்டம் கொள்ளுவதும் இல்லை.

இதுபோன்ற மிக இக்கட்டான நிலையில், தாம் உயிர் வாழ்வதற்கென்று ஒருவர் இன்னொருவரின் உயிரைப் போக்குவது குற்றமா இல்லையா என்ற வினாவை எழுப்பி, புகழ்பெற்ற தீர்ப்பைப் பெற்றது சென்ற நூற்றாண்டில் இங்கிலாந்து நாட்டில் எழுந்த ஒரு வழக்கு.

1884 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட அத்தீர்ப்புரை 'இக்கட்டால் எழும் உரிமை' என்ற கோட்பாட்டினைப் பற்றிய தலையாய விளக்கவுரை ஆகும். (R.V Dubley and Stephens-(1884)14Q.B.D.273)

வழக்கின் விவரம்:

சிறிய கப்பல் ஒன்று நடுக்கடலில் மூழ்கிவிட்டது. அக்கப்பலில் இருந்த இரு மாலுமிகளும் ஒரு சிறுவனும்

சிறு படகு ஒன்றில் இருபது நாள்கள் கடலிலேயே மிதந்து கொண்டிருந்தனர். வாட்டும் வெயிலிலே அவர்கள் வதங்கிப் போனார்கள். கடைசி எட்டு நாள்கள் உணவும் நீரும் இன்றித் தவிக்கும் நிலை ஏற்பட்டது. மூவரும் இறப்பது உறுதியென்று தோன்றியது. பசியாலும் தாகத்தாலும் மூவரும் இறப்பதைவிட இருவராவது உயிர்பிழைக்கலாம் என்ற உயிர்வாழும் ஆசையால், வயதுவந்த மாலுமிகள் இருவரும் சிறுவனைக் கொன்று, அந்தப் புலாலை உண்டு தம் உயிரைக் காப்பாற்றிக்கொண்டு, முடிவிற் கரைசேர்ந்தனர். அந்த இருவர்மீதும் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு வழக்கு நடந்தது. இந்த வழக்கை ஐந்து நீதிபதிகள் விசாரித்து, தீர்ப்புக் கூறினர். மாலுமிகள் இருவரும் கொலைக் குற்றத்திற்கு உள்ளானவர்கள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆயினும், கருணைகாட்டி இவர்களை விடுதலை செய்யுமாறு அரசுக்குப் பரிந்துரை செய்தனர் நீதிபதிகள்.

இந்த வழக்கில், தலைமை நீதிபதி காலரிட்ஜ் (Coleridge) என்பார் கூறிய தீர்ப்புரை வாசகம் சீரிய செம்மொழியாக இன்றும் போற்றப் பெறுகிறது. அதில் ஒரு பகுதி:

'ஒழுக்கமும் சட்டமும் ஒன்றல்ல என்றாலும், ஒழுக்கத்தி லிருந்து சட்டத்தை முழுதுமாகப் பிரித்துவிட்டால் பெருந்தீங்கு விளைவதாகும். இந்த வழக்கிலே, தம் உயிரைக் காத்துக் கொள்வதற்கென்று, பிறரது இன்னுயிர் நீக்கிய வினை கொலைக் குற்றமாகாது என்று தீர்ப்பளித்துவிட்டால், அது அறவொழுக் கத்தை மறந்த தீர்ப்பாகி விடும் . . . . .வழக்கிலே, குற்றவாளிகள் இழைத்த செயல் மிருகத்தனமானது என்று கூறுவதற்கில்லைதான். ஆயினும், அது குற்றமற்றது எனக் கொண்டோமானால், கட்டுக்கடங்காத வெறியுணர்வால் கொடுங்குற்றங்கள் இழைப்பதற்கு இடம் கொடுப்பதாகி விடும்'.

பிறர் ஒருவரின் உயிரை நீக்காதிருந்தால் தன்னுயிர் நீங்கிவிடலாம் என்ற நிலையிலும், பிறரது இன்னுயிரை நீக்குவது குற்றமேயாகும் என்று கூறும் இத்தீர்ப்புரை.

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க, தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை.

(குறள் 327)

என்ற குறள் நெறியினைக் கூறும் சட்டநெறியாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஒரு தீங்கைத் தவிர்ப்பதற்கு இன்னொரு தீங்கை இழைக்கலாம் என்ற கொள்கையில் மூன்று கூறுகள் கவனிக்கப்படவேண்டும் என்கின்றனர். 1) தவிர்க்கப்பட்ட தீங்கு, செய்யப்பட்ட தீங்கைவிடப் பெரிய தீங்காக இருந்திருக்க வேண்டும். 2) அந்தப் பெரிய தீங்கைத் தவிர்ப்பதற்கு வேறு வழிகள் இல்லாதிருக்க வேண்டும். 3) பெரிய தீங்கைத் தவிர்ப்பதற்குத் தேவையான அளவிற்கே செய்யப்பட்ட தீங்கு இருத்தல் வேண்டும்.

இவ்வாறு, இக்கட்டான நிலையில் இழைக்கப்படும் தீங்குகளைச் சட்டம் மன்னித்துவிடுகிறது.

கவனமின்மை (Negligence)

கருதிய செயலால் தீமை விளைவதுபோல், கவன மின்மையாலும் தீமை விளைகின்றது.

கம்பால் அடித்து ஒருவர் மற்றொருவரது காலை ஒடிப்பதுபோல், கவனமின்றிக் காரை ஓட்டியதால் ஒருவர்மீது அது மோதி அவரது கால் ஒடிகின்றது. முன்னது கருதிய செயல் (Intended act); பின்னது கவனமின்மைச் செயல் (Negligent act). கருதிய செயல் எப்படிக் குற்றமனத்தோடு செய்யப்பட்ட செயலோ அப்படியேதான் கவனமின்மைச் செயலும் ஒருவகைக் குற்றமனத்தோடு செய்யப்பட்டதாகிறது. இரண்டும் வெவ் வேறான குற்ற மனநிலையைக் குறிக்கின்றன. 'கவனமே இல்லாச் செயல், கருதிய தீங்கேயாகும்' (Lata culpa dolo acquiparatur) என்பது இலத்தீன் விதிமொழி.

கருதிய செயலுக்கான மனநிலை வேறு, கவனமின்மைச் செயலுக்கான மனநிலை வேறு. கருதிய செயல் என்பதில் அச்செயலின் விளைவு முன்னறியப்பட்டது; விரும்பப்பட்டது. கவனமின்மைச் செயல் என்பதில் அதன் விளைவு முன்னறியப் படுகிறது; ஆனால், அது விரும்பப்படவில்லை, என்றாலும், விரும்பப்படாத அந்த விளைவு ஏற்படாமல் தடுக்கும் வகையில் விழிப்புடன் இருக்கவில்லை.

மக்கள் நெருக்கமாக நடமாடும் வீதியில் ஒருவர் எண்பது கிலோமீட்டர் வேகத்தில் தமது காரை ஓட்டினார் என்றால், அது எந்த மனநிலையைக் குறிக்கின்றது? இந்தச் செயலால் கார் மோதி எவருக்காவது மரணம் கூட விளையலாம்; அப்படி விளைந்

தாலும் அக்கறை இல்லை என்ற அசட்டையான மனநிலையை அச்செயல் காட்டுகின்றது. எனவே, கார் மோதி ஒருவருக்கு மரணம் விளைந்தால், 'கவனமின்மையால் மரணம் விளைத்த' குற்றத்திற்கு அவர் ஆளாகின்றார்.

'அசட்டைத் துணிவான' (rashness) மனநிலையும் கவன மின்மையின்பாற்பட்டதாகச் சட்டம் கொள்ளுகிறது.

எனவே, ஒரு செயலைச் செய்கையில் எத்தகு விழிப்புடன் இருக்க வேண்டியது கடமையோ அத்தகு விழிப்பு இல்லாமையே 'கவனமின்மை' ஆகிறது.

விழிப்புடன் செய்யப்படாத செயல் ஒவ்வொன்றும் குற்றமாக ஆகி விடுவதில்லை. விழிப்பு வேண்டும் எனச் சட்டக் கடமை இருக்கும்பொழுது, விழிப்புடன் இல்லாது செயற் படுவதுதான் குற்றமாகிறது.

குற்றஇயல் சட்டத்தில், கவனமின்மையால் மரணம் விளைத்தல் குற்றமாகிறது. உரிமைஇயல் சட்டத்தைப் பொறுத்தவரை, ஒரு செயல் தீங்கானது என்றால், அது கருதிய செயலாக இருந்தாலும், கவனமின்மைச் செயலாக இருந்தாலும் தீங்கானதுதான்.

எனவே, 'கவனமின்மை' என்றால் எத்தகைய மனநிலை குறிக்கப்படுகிறது என்பதை நாம் காணவேண்டும்.

கவனத்தின் தரநிலை (The standard of care)

ஒரு செயலைச் செய்வதில் கவனம் இந்த அளவு இருக்க வேண்டும் என்ற கவனத்தின் தரநிலையை நிர்ணயித்துக் கூறுவது எளிதன்று.

மாட்டு வண்டியை ஓட்டுவதற்கு வேண்டிய கவனம் ஒருவகை. காரை ஓட்டுவதற்கு வேண்டிய கவனம் வேறுவகை. விமானத்தைச் செலுத்துவதற்குரிய கவனத்தின் தரமும் அளவும் வேறானவை. காரை நெடுஞ்சாலையில் ஓட்டும் போது வேண்டிய கவனத்திற்கும், நகரவீதிகளில் ஓட்டும்போது வேண்டிய கவனத்திற்கும், சிறார்கள் பயிலும் பள்ளிகள் உள்ள வீதியில் ஓட்டும் போது செலுத்தவேண்டிய கவனத்திற்கும் வேறுபாடு உண்டு. இவ்வாறு, ஒவ்வொரு செயலுக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப, வேண்டிய கவனத்தின் தரநிலைகள் வேறுபாடானவை.

விரைவும் வேகமும் தவிர்க்க முடியாத இக்காலத்தில்,

ஆபத்து நிறைந்த செயல்களை அறவே ஒழித்தலும் இயலாது. அச்செயல்களால் விளையக்கூடிய ஆபத்துகளுக்கு வரம்பிடு வதுதான் சட்டத்தால் இயலுவதாகும். எனவே, அத்தகைய செயல்களில் ஈடுபடுவோர் பிறர் நலத்தையும் கருத்திற்கொண்டு கவனத்துடன் செயற்படவேண்டும் என்ற கடமையைச் சட்டம் விதிக்கின்றது. அவ்வாறு, கடமையென விதிக்கப்படும் கவனத்தின் தரநிலையினை (standard of care) அளவுகோல் கொண்டு நிர்ணயிப்பது இயலாததாகையால், சட்டம் ஒரு பொதுவான முறையைக் கையாளுகின்றது.

ஒருவர் குறிப்பிட்ட ஒரு சூழ்நிலையில் தகுந்த கவனத்துடன் நடந்து கொண்டாரா என்பதை அந்தச் சூழ் நிலையின் பல்வேறு கூறுகளையும் ஆராய்ந்து சட்டம் முடிவு செய்கிறது.

நேரறிவுள்ள மனிதன் (reasonable man) குறிப்பிட்ட சூழ்நிலையில் எந்த முறையில் கவனமாக நடந்து கொள்வானோ, அந்த முறையிலே கவனத்துடன் அனைவரும் நடக்க வேண்டும் என்ற பொதுமையான கொள்கையினை நீதிமன்றங்கள் வகுத்துள்ளன.

முன்னறியத்தக்க (foreseeable) ஆபத்துகளைத் தவிர்ப்பதில் கவனத்தைச் செலுத்தி ஒரு செயலைச் செய்தலே அறிவுடைமையாகும். முன்னறிய முடியாத (unforeseeable) ஆபத்துகளைத் தவிர்ப்பது எவராலும் இயலாது. மேலும், நிகழத்தக்க ஆபத்துகளை (Probable dangers) ஒருவர் தவிர்க்க முடியும்; நிகழக்கூடிய எல்லா ஆபத்துகளையும் (possible dangers) எவராலும் தவிர்த்தல் இயலாது. ஒரு செயலால், எவரும் முன்னறிய முடியாத எத்தனையோ ஆபத்துகள் விளையக் கூடும். முன்னறிய முடியாத, ஆனால், நிகழக்கூடிய ஆபத்துகள் அனைத்தையும் (unforeseen possible dangers) தவிர்ப்பது எவராலும் இயலாது. முன்னறியக் கூடிய, நிகழத்தக்க ஆபத்துகளைத் (foreseeable probable dangers) தவிர்ப்பதே முன்மதியும் நேரறிவும் உள்ள மனிதனால் (reasonable and prudent man) இயலுவதாகும்.

இந்த அடிப்படையில் 'கவனமின்மை' என்பதற்கு இலக்கணம் வகுக்கின்றனர். 'ஒரு காரியத்தைப் பொறுத்து, நேரறிவுள்ள மனிதன் எதைச் செய்வானோ அதைச் செய்யா திருத்தலும், எதைச் செய்ய மாட்டானோ அதைச் செய்தலும்,

'கவனமின்மை' ஆகின்றது' — என்று கவனமின்மைக்கு நீதிபதிகள் இலக்கணம் வகுத்துள்ளனர்.

நேரறிவுள்ள மனிதனின் செயல் என்றால் அது செயலின் தன்மைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப மாறுவதாகும். எனவே, ஒரு செயலால் விளையும் ஆபத்தின் தன்மை என்ன? அச்செயலால் விளையும் சமுதாய நன்மை என்ன? என்ற இரு கூறுகளையும் சட்டம் ஆய்கின்றது. சமுதாயத்திற்கு விளையும் நன்மையைக் கருதி, ஆபத்துச் செயல்களை அறவே விலக்காமல் விடுகிறது சட்டம்.

கவனமின்மை என்பது அகநிகழ்வானதா, புறநிகழ்வானதா?

கவனமின்மை என்பது ஒருவகை மனநிலையே ஆகும் என்பது ஒரு கொள்கை; அது மனநிலை அன்று; ஒரு வகையான புறச் செயலை, நடத்தையைக் குறிப்பது என்பது மற்றொரு கொள்கை. முன்னதை அகநிகழ்வுக் கொள்கை என்றும், (subjective theory), பின்னதைப் புறநிகழ்வுக் கொள்கை (objective theory) என்றும் கூறுவார்கள்.

கவனமின்மை என்பது ஒருவகை மனநிலைதான்; அக நிகழ்வான போக்குத்தான் என்ற கொள்கையை ஆதரிப்பவர் சால்மண்ட். மனத்திலே அக்கறை இல்லாமை, அசட்டைப் போக்கு இவற்றைத்தான் கவனமின்மை என்கிறோம். எனது செயலாறு எதை விளைக்கும் என்பதில் எனக்கு அக்கறை இல்லாதபோது அந்த விளைவை எதிர்நோக்கும் திறமையற்றவனாகிறேன்; அல்லது அந்த விளைவு பற்றித் தெரிந்தும் அதைப் பொறுத்து அசட்டையாக இருக்கிறேன்.

'ஒருவர் தமது செயலாறு (conduct), அதன் விளைவுகள் இவற்றைக் குறித்துச் சிறிதும் அக்கறை கொள்ளாத மனப் பான்மைதான் கவனமின்மை'[1], என்கிறார் சால்மண்ட்.

சட்ட இயலறிஞர் போலக் (Pollock) என்பார் புற நிகழ்வுக் கொள்கையை ஆதரிக்கிறார். கவனமின்மை என்பது ஒரு வகை மனநிலை அன்று; அது ஒரு வகைச் செயலாறு (conduct) என்கிறார் அவர்.

---

1 Negligence essentially consists in the mental attitude of undue indifference with respect to one's conduct and its consequences - Salmond.

விளக்குகள் இல்லாமல் காரை இரவில் ஓட்டிச் செல்லுதல் கவனமின்மையாகும். விபத்துகளைத் தவிர்க்கக் கருதும் நேரறிவுள்ள எவரும் விளக்குகளைப் போடாமல் காரை இரவில் ஓட்டமாட்டார்கள். எனவே, கவனத்துடன் ஓட்டுவது என்றால் காரின் விளக்குகளைப் போட்டு ஓட்டுவதுதான். காரின் விளக்குகளைப் போடுவது கவனமான செயலாறு (careful conduct), விளக்குகளைப் போடாமல் விடுவது கவன மின்மையான செயலாறு (careless conduct) இவ்வாறு, கவனமின்மை என்பது செயலாற்றைக் குறிக்கின்றது; மன நிலையை அன்று என்கிறார் போலக். தமது செயலாற்றால் விளையத்தக்க ஆபத்துகளைத் தவிர்க்கும் முன்னெச்சரிக்கையான செயல்களைச் செய்தல் கவனம் உடைமை; அச்செயல்களைச் செய்யாது விடுதல் கவனமின்மை. ஆதலால், கவனமின்மை என்பது ஒருவகைச் செயலாறு; புறநிகழ்வான நடத்தை என்கிறார் போலக்.

சிறிது ஆய்ந்தால், அகநிகழ்வும் புறச்செயலும் சேர்ந்ததே கவனமின்மை என்பது தெளிவாகும். அது புறச்செயல் மட்டும் அன்று.

வெண்மையான நச்சுப் பொடிக் குப்பியை ஒருவர் சீனி இருக்கும் குப்பிக்கு அருகில் வைத்துவிடுகிறார். இவ்வாறு வைத்தது தவறுதலாகவும் இருக்கலாம். பிறர் நச்சுப் பொடியைச் சீனி என்று பாலில் கலந்து குடித்துச் சாகட்டும் என்ற கொலைக் கருத்துடனும் இருக்கலாம். நோயுற்ற தன் குழந்தைக்குத் தக்க மருந்து கொடுக்க ஏற்பாடு செய்யாத தந்தை அசட்டையாலும் அவ்வாறு இருக்கலாம்; குழந்தையைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணத்திலும் இருக்கலாம். இவை போன்ற பல நிகழ்வுகளில், அவை கருதிய செயல்களா, கவனமின்மைச் செயல்களா என்பதைக் கண்டறிவதென்றால், அவரவர்களின் மனநிலையைக் கண்டுதான் ஆக வேண்டும். எனவே, மனநிலையைப் புறக் கணிப்பதற்கில்லை. அதே வேளையில் மனநிலையைக் காண் பதற்குக் காரணமாக உள்ளவை புறநிகழ்வான செயல்கள்தாம். எனவே, அசட்டை, அக்கறையின்மை இவற்றையுடைய மன நிலையை நாம் ஊகிப்பது, அந்த மனநிலையால் எழுந்த செயலில் இருந்துதான்.

'சட்டம் ஒரு மனிதனின் மனநிலையைப் பார்ப்பது, அம்மனநிலை புறச் செயல்களாக வெளிப்படும்போதுதான். அம்மனநிலையில் எழும் செயல்களால் இழப்பீடு வழங்கத்தக்க

கேடுகள் விளையும்பொழுதுதான் அகநிகழ்வான கவனமின்மை என்ற மனநிலையைச் சட்டம் காண்கிறது' என்கிறார் பேராசிரியர் கீட்டன் (Keeton).

எனவே, 'கவனமின்மை' என்று கூறும்போது, அக நிகழ்வான ஒரு வகை மனநிலையால் எழும் புறநிகழ்வான செயல்களையே நாம் குறிக்கின்றோம். அது மனநிலை மட்டுமே என்றோ புறச்செயல் மட்டுமே என்றோ பிரித்துக்கூறுதல் இயலாது.

கருத்து, நோக்கம், கவனமின்மை

முன்னறியக்கூடிய விளைவுகளை விரும்பிச் செய்யும் செயல்கள் 'கருதிய செயல்' (intended act) ஆகின்றது.

கருதிய செயல் எதை எய்த வேண்டும் என்று செய்யப் படுகின்றதோ அதை 'நோக்கம்' (motive) என்கிறோம்.

ஒருவர் என்ன செய்தார் என்பது அவர் கருத்தைக் குறிக்கின்றது; ஏன் செய்தார் என்பது அவர் நோக்கத்தைக் குறிக்கின்றது.

செயலால் விளையத்தக்கதை அறிந்தும், விளைந்தால் விளையட்டும் என்ற அசட்டைப்போக்கு 'கவனமின்மை' ஆகும். கேடு விளைந்தால் விளையட்டும் என்ற அக்கறையின்மையே 'கவனமின்மை'.

'கருதியது' என்பதில் விளையவிருக்கும் கேடு விரும்பப் படுகிறது; 'கவனமின்மை' என்பதில் விளையவிருக்கும் கேடு தெரிகிறது; ஆனால் விரும்பப்படவில்லை. கருதிய செயலால் விரும்பிய கேடு விளைகிறது; கவனமின்மைச் செயலால் தவிர்க்க விரும்பாத கேடு விளைகிறது. இரண்டிலும் கேடு விளைவதால், இருவகைச் செயல்களாலும் பொறுப்படைவு (Liability) எழுகின்றது. ஒன்றில் விளைந்த கேட்டை விரும்பியதால் பொறுப்படைவு; மற்றொன்றில் விளைந்த கேட்டைத் தவிர்க்க விரும்பாததால் பொறுப்படைவு.

அசட்டைத் துணிவு (Rashness)

விளையக்கூடிய கேட்டினை ஒருவர் அறிந்திருந்தும், அது விளையாது என்று அசட்டை காரணமாகத் துணிந்து

செயல்படுவதை 'அசட்டைத்துணிவு' (Rashness) என்பார்கள். இதுவும் கவனமின்மையின்பாற்பட்டதாகும்.

'மறந்தும் பிறன் கேடு சூழற்க; மறதியால்கூட பிறருக்குக் கேடு விளைத்தல் கூடாது. அவ்வாறு விளைத்தால், விளைத் தவனைக் கேடு வந்துஅடையும்' என்பது குறள்நெறி. 'கவனமின்மை' என்ற மறதி நிலையால் (heedlessness) கூட பிறர் கேடு விளையாதிருத்தல் வேண்டும் என்ற அறநெறியே சட்ட நெறியாகிறது.

'கருதிய செயல்' (Intention) என்ற கருத்தமைவினை 'மனத்தானாம் மாணா செய்யாமை' என்று கூறிய குறள், 'கவனமின்மை' என்ற கருத்தமைவினை 'மறந்தும் பிறன்கேடு சூழ்தல்' என்று கூறுகிறது.

கேடு, கருதியதால் விளைவது ஒருவகை, மறதியால் விளைவது வேறொரு வகை. இருவகைக் கேடுகளையும் விலக்குகின்றன சட்டநெறியும் அறநெறியும்.

தீயெண்ணம் (Malice)

'தீயெண்ணம்' என்ற சொல் சட்டத்தில் சூழ்நிலைக்கேற்பப் பல பொருள்களில் பயன்படுகின்றது.

தீயகருத்து (wrongful intention) அசட்டைத் துணிவு (recklessness), வன்மை (spite), கெட்ட நோக்கம் (badmotive) என்ற பொருள்களைக் குறிப்பதாக அச்சொல் சட்டத்தில் கையாளப்பெறுகிறது.

1) குற்றச் செயலுக்கு வேண்டிய குற்ற மனத்தைக் குறிக்கும் வகையில் தீயெண்ணம் என்கிறோம். தீங்கியலான சதிச் செயல்களுக்குக் (civil conspiracy) காரணமாகத் தீயெண்ணம் இருப்பதுண்டு.

2) பிறர்மீது குற்ற நடவடிக்கை எடுத்தல் முறையில்லா நோக்குடன் செய்யப்பட்டால், அதைத் 'தீயெண்ணத்தால் எழுந்த குற்றவழக்கு' (malicious prosecution) என்பார்கள்.

3) சில தறுவாய்களில் அவதூறு இழைத்தல் தீங்கோ குற்றமோ ஆவதில்லை. பொதுநலம் பேணுவதற்கோ நற் பெயரைக் காப்பதற்கோ பிறருக்கு அவதூறு இழைக்கப்படலாம். இத்தகைய நன்னோக்குடன் இழைக்கப்படாமல், வன்மத்தால், கெட்ட நோக்கத்தால் இழைக்கப்படுவதைத் தீயெண்ணத்தால்

இழைக்கப்பட்ட அவதூறு என்பார்கள்.

இன்னாமை செய்து இன்பம் பெறும் மனநிலையைப் பொதுவாக, 'தீயெண்ணம்' (malice) என்கிறோம். தந்நலம் கருதிப் பிறர் நலனைக் கெடுத்தல் தீங்காகிறது. தந்நலம் இன்றியே பிறர் நலம் கெடுத்தல் வன்மைச் செயல் ஆகின்றது. இந்த வன்மத்தையும் ஆங்கிலத்தில் malice என்பர்.

சட்டத்தை அறியாமல் இழைத்த செயல்கள்

(Acts done in ignorance of law)

ஒருவர் சட்டத்திற்கு முரணாக நடந்தபின், சட்டம் தமக்குத் தெரியாததால் அவ்வாறு நடந்ததாகச் சொன்னால், அதைச் சட்டம் ஏற்பதில்லை.

'சட்ட ஞானமின்மையைச் சட்டம் மன்னிப்பது இல்லை'[1] — என்பது விதிமொழி.

எல்லோருக்கும் சட்டம் தெரியும் என்பது அறுதியான துணிபு (conclusive Presumption) ஆகும்.

'சட்டஞானமின்மை சரியான வாதம்' என்பதை ஏற்றுக் கொண்டால் ஒவ்வொரு குற்றவாளியும் தமக்குச் சட்டம் தெரியாது என்ற வாதத்தை முன் வைப்பார். எவரையும் தண்டிப்பது இயலாததாகிவிடும். மேலும், இந்த வாதத்தை கூறுபவருக்கு உண்மையிலே சட்டம் தெரியுமா தெரியாதா என்பதைக் கண்டறிவது எளிதான காரியமன்று. பெரும்பாலும் சட்ட முரணான செயல்கள் ஒழுக்க முரணானவையாகவும் இருக்கின்றன. எனவே, குற்றம் இழைக்கும் ஒருவருக்கு அது சட்டத்திற்கு மாறான செயல் என்பது தெரியாவிட்டாலும், ஒழுக்கத்திற்கு மாறானது அது என்பதை அவர் அறிந்தே இருப்பார்.

எல்லாச் சட்டங்களையும் எல்லாரும் அறிந்துள்ளனர் என்று கூற இயலாதுதான். பெரும்பாலோர்க்குச் சட்டங்கள் பற்றித் தெரியாது என்பது உண்மைதான். அது போன்றே சட்டத்தை மீறுவோர் ஒழுக்க விதியையும் மீறுகின்றனர் என்று சொல்வதற்கில்லை. ஏனெனில், ஒழுக்கத்தோடு ஒட்டாத சட்டங்கள் பல உள்ளன.

---

[1] Ignorance of law is no excuse - Ignorantia jurisneminem excusat

எனினும், சட்டத்தை அனைவரும் அறிவார்கள் என்ற அடிப்படையில்தான், சட்டத்தைச் செல்லுறுத்த இயலும். ஒருவர் தமக்குத் தெரிந்த சட்டங்களுக்கு மட்டுமே இசைந்து நடக்க வேண்டும்; தெரியாத சட்டங்களை மதித்து நடக்க வேண்டிய தில்லை என்றால், சட்டமுறைச் சமுதாய அமைப்பே சீர்குலைந்து விடும்.

தவறுதலால் விளையும் செயல்கள் (Acts done owing to mistake of facts)

ஒன்றை நினைத்து இன்னொன்று செய்யப்பட்டால் அது தவறுதலாகச் செய்யப்பட்டது என்கிறோம். இது, பழுதையைப் பாம்பு என்று கருதுதல் போன்ற செயல்.

சட்டத்தைப் பற்றிய அறியாமையைச் சட்டம் ஏற்பதில்லை என்றாலும், பொருண்மை (fact) பற்றிய தவறுகளைச் சட்டம் ஏற்றுக் கொள்ளுகிறது.

நள்ளிரவில், இருட்டில், என், வீட்டினுள் சந்தடியின்றிச் சந்தேகம் தோன்றும் வகையில் நுழைந்த ஓர் உருவத்தைத் திருடன் என்று நினைத்து நான் சுட்டுவிட்டேன். அவ்வாறு நுழையும் எவரையும் கொல்வது சட்டப்படி குற்றம் இல்லை. ஆனால், அந்த உருவம் திருடன் அன்று; எனது வேலையாள்தான். சுட்டதன் விளைவாக வேலையாள் இறந்துவிட்டான். எனினும், நான் கொலைக் குற்றத்திற்கு ஆளாவது இல்லை. ஏனெனில், இது நியாயமான தவறுதலின் காரணமாக நிகழ்ந்த செயலாகும்.

ஆனால், உரிமை வழக்குகளில் இத்தகைய தவறுதல்களை மன்னிப்பது இல்லை. நான் ஒருவர் நிலத்தில் அத்துமீறி நுழைந்துவிட்டு, அதை எனது நிலம் என்று தவறுதலாக எண்ணி நுழைந்தேன் என்று கூறினால், அது சரியான சமாதானம் ஆவதில்லை.

குற்ற வழக்குகளில் கூட ,செய்யப்பட்ட செயல் வினைத் தூய்மையுடையதாய் இருந்தால்தான், சூழ்நிலையைப் பொறுத்த தவறுதல்கள் ஏற்றுக் கொள்ளப்படும். பதினாறு வயதுக்கு உட்பட்ட பெண்ணைக் கடத்திச் செல்லுதல் தண்டனைக்குரிய குற்றமாகும். ஒரு பெண்ணைக் கடத்திச் சென்றவர், 'நான் பெண்ணின் வயது பதினெட்டு என்று தவறுதலாக நம்பிக் கடத்திச் சென்று விட்டேன்' என்று கூறினால், அதை நியாயமான தவறுதல் எனச் சட்டம் கொள்வதில்லை. ஏனெனில், கடத்திச்

சென்ற செயலே தீங்கான, வினைத்தூய்மையற்ற செயல். தீமையான காரியத்தைச் செய்கையில் சூழ்நிலைகள் குறித்த தவறுதல்களால் அது செய்யப்பட்டது என்ற விளக்கம் பயனற்றதாகும் (R.V Prince-(1875)L R 2.c.c.154).

அறியாமை வேறு, தவறுதல் வேறு

சீனி என்று நினைத்து, சீனிக் குப்பிக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த பூச்சிமருந்துப் பொடியைப் பாலில் கலந்து தன் மேலவருக்கு வேலையாள் கொடுத்து விடுகிறான். இதனால் மேலவர் இறந்துவிட்டால், வேலையாளைக் கொலைக் குற்றத்திற்கு ஆளாக்குவதில்லை. ஏனெனில் இது உண்மையான தவறுதலால், பூச்சிமருந்தைச் சீனி என்று நினைத்த தவறுதலால் விளைந்த செயல்.

இந்த உதாரணத்தைச் சிறிது மாற்றிப் பார்ப்போம். வேலையாள் அதைப் பூச்சிமருந்து என்று தெரிந்தேதான் பாலில் கலந்து கொடுக்கிறான். ஆனால், பூச்சிமருந்து ஆளைக் கொன்றுவிடும என்று அவனுக்குத் தெரியாது. இந்தத் தெரியாமை காரணமாகப் பூச்சிமருந்தைப் பாலில் கலந்து மேலவருக்குக் கொடுத்துவிட்டான்; அதைக் குடித்த மேலவர் இறந்து விடுகிறார். இப்பொழுது வேலையாள், பூச்சிமருந்து நஞ்சு என்று தனக்குத் தெரியாது என்று வாதாடினால் சட்டம் ஏற்பதில்லை. வேலையாள் கொலைக் குற்றத்திற்கு ஆளாகிறான்.

பூச்சிமருந்து ஆளையும் கொல்லும் என்பதை வேலையாள் அறியாமல் இருந்திருக்கலாம். ஆனால், சாதாரண அறிவுள்ள எவரும் இதை அறிந்திருக்க வேண்டும். எனவே, இந்த அறியாமையைக் காரணம் காட்டி வேலையாள் குற்றப் பொறுப்பில் இருந்து தப்பமுடியாது.

பூச்சிமருந்தைச் சீனி என்று நினைத்தது தவறுதலால் விளைந்தது. பூச்சிமருந்து ஆளைக் கொல்லாது என்று நினைத்தது அறியாமையால் விளைந்தது. தவறுதலை மன்னிக்கும் சட்டம் அறியாமையை மன்னிப்பதில்லை.[1]

1 While genuine mistakes as to circumstances is a defence, genuine mistake as to the general way that things behave is only a defence so far as such mistake would be shared by reasonable men — Fitzgerald.

'நான் ஒரு செயலைத் தவறாக எண்ணிச் செய்து விட்டேன்' — என்று ஒருவர் வாதாடினால் அதன் பொருள் என்ன? தவறுதலாக அவர் எதைக் கருதினாரோ அது உண்மையாக இருந்தால், அது குற்றச் செயல் அன்று என்பதுதான். பூச்சிமருந்தைப் பாலில் கரைத்ததே தீங்கான செயல்தானே? எனவே, பூச்சிமருந்தை அருந்துவதால் ஏற்படும் விளைவுபற்றி வேலையாளின் அறியாமையைச் சரியான வாதமெனச் சட்டம் ஏற்பதில்லை.

எனவே, ஒரு குற்றமான செயல் தவறுதலால் விளைந்தது என்ற வாதத்தைச் சட்டம் ஏற்பதற்குரிய முக்கியமான நிபந்தனை, தவறுதலாக எது கருதப்பட்டதோ அது உண்மையாக இருந்தால், செய்யப்பட்ட காரியம் குற்றமற்றதாக, ஒழுக்கத்திற்கு உகந்ததாக இருத்தல் வேண்டும். இதுவே, உண்மையான தவறுக்கு உரைகல்லாகும்.

எதிர்பாரா விளைவு (Accident)

ஒருவர் கோடரி ஒன்றினால் மரத்தை வெட்டிக் கொண்டிருக்கிறார். அந்தக் கோடரியின் இரும்புத்தலைப்பு, கைப்பிடியினின்று பிரிந்து சென்று, அருகில் நின்று கொண்டிருந்தவரின் மண்டையில் பலமாக மோதி மரணத்தை விளைத்து விட்டது. இப்பொழுது மரணம் விளைந்தது எதிர் பாராத வகையில் நடந்ததாகும். இதற்கு மரத்தை வெட்டியவர் பொறுப்பாவதில்லை.

அருகில் நின்றவரின் மரணத்தை, மரத்தை வெட்டிக் கொண்டிருந்தவர் விரும்பவில்லை. மரத்தை வெட்டியது சட்ட இசைவான செயல். அதை அவர் போதிய கவனத்துடன்தான் செய்து கொண்டிருந்தார். எனவே, அவரை எவ்விதக் குற்றத் திற்கும் ஆளாக்குவது நியாயம் அன்று. சட்டமும் இதை 'எதிர்பாராத விளைவு' (Accident) என்று கொள்ளுகிறது.

தவறும், எதிர்பாராவிளைவும்

தவறால் விளையும் செயலுக்கும் (mistake) எதிர்பாரா விளைவுக்கும் (Accident) உள்ள வேறுபாட்டினை நாம் காண வேண்டும்.

எதிர்பாரா விளைவில், விளைவு கருதப்படாதது; தவறுதலால் விளைவதில், விளைவு கருதப்பட்டதுதான். ஆனால்,

செயலைச் செய்தவர் அதற்கான சூழ்நிலையைப் பற்றி தவறாகக் கருதிவிட்டார்.

இருட்டில் ஒருவர்மீது என் கார்மோதிக் காயம் விளைத்தால் அது எதிர்பாராவிளைவு. ஒரு காவல்துறை அதிகாரி குறிப்பிட்ட ஒருவரைக் கைதுசெய்வதற்குப் பதிலாக, அவர் என்று கருதித் தவறுதலாக இன்னொருவரைக் கைதுசெய்தால், அது தவறுதலால் விளைந்த செயல். முதல் செயலில் விளைவு கருதப்படாதது; இரண்டாவதில் விளைவு கருதப்பட்டதுதான், ஆனால், ஒருவரை இன்னொருவர் என்று நினைத்த தவறு நிகழ்ந்துள்ளது.

'எதிர்பாரா விளைவு' என்பது தண்டிக்கத் தக்கதாக இருக்கலாம்; தவிர்க்க முடியாததாகவும் இருக்கலாம். கவனமின்மையால் விளைந்ததாக இருந்தால் அது தண்டிக்கத் தக்கதாகிறது. சாதாரண கவனத்தால் அந்த விளைவைத் தவிர்க்க முடியாது என்றால் அது தவிர்க்க முடியாத விளைவாகிறது; தண்டனைக்கு அது உரியதன்று.

எதிர்பாரா விளைவு தவிர்க்க முடியாதது என்று கொள்ளப்பட வேண்டுமெனில், விளைவுக்குக் காரணமான செயல்,

1) சட்டப்படியான செயலாக இருத்தல் வேண்டும்.
2) சட்டப்படியான முறையில் செய்யப்பட வேண்டும்.
3) போதிய கவனத்துடன் செய்யப்பட வேண்டும்.
4) தீய எண்ணம் ஏதுமின்றிச் செய்யப்பட வேண்டும்.

குற்றஇயல், உரிமைஇயல் இருவகைச் சட்டங்களிலும் 'எதிர்பாரா விளைவு' என்ற வாதம் ஏற்கப்படுகிறது.

காப்புரிமைச் செயல்கள்

(Acts excercise of private defence)

தன்னையும் பிறரையும் உடலுக்கு ஊறு விளைவிக்கும் குற்றச் செயல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் உரிமை 'உடற்காப்புரிமை' (Right of private defence of body) எனப்படும்.

திருட்டு, கொள்ளை முதலிய குற்றங்களுக்கு எதிராகத் தன்னுடைய அல்லது பிறருடைய பொருள்களைப் பாதுகாக்கும் உரிமை 'பொருள் காப்புரிமை' (Right of private defence of

property) எனப்படும்.

இந்த இருவகை உரிமைச் செயல்களால் அந்த உரிமைக்கு ஊறுவிளைவிக்க முயலுவோர்க்குத் தீங்கு விளையலாம். நம்மைத் தாக்க வருபவரிடமிருந்து தப்புவதற்காக நாம் அவரைத் தாக்கலாம். அதனால் அவருக்குக் காயம் முதலிய ஊறுகள் விளையலாம். ஆனால், அதற்கு நாம் பொறுப்பாவதில்லை. மரணம் போன்ற கொடுந்தீங்குகளை நமக்கு விளைக்க முனைந்து நிற்பவரிடமிருந்து தப்புவதற்கென்று நாம் அவர் மரணத்தைக் கூட விளைக்கலாம் எனச் சட்டம் கூறுகின்றது. இந்த வகைத் தற்காப்புச் செயல்கள் எவ்வாறு இயங்க வேண்டும் என்பது பற்றிச் சட்ட விதிகள் உண்டு. அவற்றுக்கிசைந்து நாம் தற்காப்புக்கென ஆற்றும் செயல்களால், தாக்க வருவோர்க்கு விளையும் கேடுகளுக்கான பொறுப்படைவு நம்மைச் சேர்வதில்லை (இந்தியக் குற்றஇயல் சட்டம் பிரிவுகள் 96—106).

இது போன்றே சட்டம் விதிக்கும் செயல்களால் பிறருக்குத் தீங்கு விளைந்தால் அதற்கும் பொறுப்படைவு எவர்மீதும் எழுவதில்லை.

இதுவரை, குற்றப் பொறுப்படைவு என்பது என்ன; அது எவ்வாறு, எவர்மீது எழுகின்றது என்பன பற்றிக் கண்டோம்.

இனி, குற்றப் பொறுப்படைவின் பயனாகக் குற்றவாளிக்கு விதிக்கப்படும் தண்டனையின் நோக்கம் என்ன என்பது பற்றியும், தண்டனையின் அளவு எவ்வாறு அறுதியிடப்படுகிறது என்பது பற்றியும் அடுத்து வரும் ‘குற்றமும் தண்டனையும்’ என்ற தலைப்பில் காணலாம்.

நெறிமுறைச் சட்டம்

(The law of procedure)

[நிலைமுறைச் சட்டமும், நெறிமுறைச் சட்டமும் — நெறிமுறைச் சட்ட விதிகளின் விளைவு — நீதிமன்ற நெறிமுறை — சான்று — சான்றின் வகைகள் — சான்றை மதிப்பிடுதல் — அறுதியான மெய்யுறுத்தம், அறுதியில்லா மெய்யுறுத்தம் — குறைநிலைச் சான்று, தனிநிலைச் சான்று — சான்றாகா நிகழ்மைகள் — நீதிமன்றத்தின் முன் சான்றினை வைத்தல் — மெய்யுறுத்தும் பாடு]

நிலைமுறைச் சட்டமும்

நெறிமுறைச் சட்டமும்

சட்டங்களை, 'நிலைமுறைச் சட்டம்' (Substantive Law) என்றும் 'நெறிமுறைச் சட்டம்' (Procedural Law) என்றும், இருபெரும் பிரிவுகளாகப் பகுப்பார்கள். ('நெறிமுறைச் சட்டம்' என்பதை 'நடைமுறைச் சட்டம் 'என்றும் கூறுவதுண்டு.)

ஒருவர் இறந்தபின் அவர் விட்டுச் சென்ற சொத்துகள் எவர் எவருக்குச் சேருகின்றன, எந்த விகிதத்தில் சேருகின்றன என்பவற்றை 'இறங்குரிமைச் சட்டம்' கூறுகின்றது. ஒப்பந்தங்கள் செய்துகொள்வது எவ்வாறு; அவற்றால் எழும் உரிமைகள், கடமைகள் என்ன; எத்தகைய் ஒப்பந்தங்கள் செல்லுறுவன; எவை செல்லுறாதன என்பன பற்றி 'ஒப்பந்தச் சட்டம்' கூறுகின்றது. எச்செயல்கள் குற்றங்கள் ஆகின்றன, அக்குற்றங்களுக்குற்ற தண்டனை என்ன என்பன பற்றிக் 'குற்ற இயல் சட்டம்' கூறுகிறது. இவ்வாறு, உரிமைகள், கடமைகள், குற்றப் பொறுப்படைவு முதலியன பற்றிக் கூறும் சட்டங்களை 'நிலமுறைச் சட்டங்கள்' (Substantive Laws) என்று குறிப்பிடுவார்கள்.

ஒருவருக்கு இறங்குரிமையாகக் கிடைக்கவேண்டிய சொத்தை அடைவது எவ்வாறு; எங்கு, எந்தக் காலத்திற்குள் வழக்கிட வேண்டும்; ஒப்பந்தங்களைச் செல்லுறுத்துவது எவ்வாறு; குற்றங்கள் குறித்து விசாரணை செய்யும் முறை என்ன என்பன குறித்துக் கூறும் சட்டங்களை 'நெறிமுறைச் சட்டங்கள்' (The Laws of Procedure) என்பார்கள்.

எனவே, வழக்கிடும் முறையைக் கூறுவது 'நெறிமுறைச் சட்டம்'; அதாவது, உரிமைஇயல், குற்றஇயல் வழக்குகளை நடத்துவது எவ்வாறு என்பதைப் பற்றிய சட்டங்களே 'நெறி முறைச் சட்டங்கள்'; பிறவகைச் சட்டங்கள் எல்லாம் 'நிலைமுறைச் சட்டங்கள்'.

'நீதிமுறை நாடும் குறிக்கோள்களைப் பற்றியது நிலை முறைச் சட்டம்; அக்குறிக்கோள்களை எய்தும் வழிமுறைகளையும் கருவிகளையும் பற்றியது நெறிமுறைச் சட்டம்'[1] என்கிறார் சால்மண்ட்.

ஒரு சொத்தை அடைவதற்கான உரிமை எனக்கு உண்டா என்பதற்கு விடைகூறுவது நிலைமுறைச் சட்டம்; எந்த நீதி மன்றத்தில், எந்தக் காலத்திற்குள், எவ்வாறு அதை அடைவதற்கு வழக்கிடவேண்டும் என்பதைக் கூறுவது நெறிமுறைச் சட்டம். தீங்கு (Wrong) என்றால் என்ன என்பதைக் கூறுவது நிலைமுறைச் சட்டம்; அத்தீங்கை மெய்ப்பிப்பது எவ்வாறு என்பதைக் கூறுவது நெறிமுறைச் சட்டம். ஒரு குற்றத்திற்கான தண்டனை அபராதமா, சிறையா என்பதை நிலைமுறைச் சட்டத்தில் காண்கின்றோம்; அந்தக் குற்ற விசாரணை நடக்கும் முறை என்ன என்பதை நெறிமுறைச் சட்டத்தில் காண்கிறோம்.

உரிமைகளையும் உரிமைகள் மீறப்பட்டால் அதற்கான தீர்வழிகளையும் வரையறுத்துக் கூறுவது நிலைமுறைச் சட்டம்; உரிமைகளையும் தீர்வழிகளையும் பொருந்துறச் செய்யும் வழிவகைகளை வரையறுத்துக் கூறுவது நெறிமுறைச் சட்டம் .

நெறிமுறைச் சட்ட விதிகளின் விளைவு

இவ்வாறு, நிலைமுறைச் சட்டமும் நெறிமுறைச் சட்டமும்

1 Substantive Law is concerned with the ends which the administration of justice seeks; procedural law deals with the means and instruments by which those ends are to be attained - Salmond.

வேறுபட்டிருப்பினும், நெறிமுறைச் சட்டத்தின் சில விதிகள் செயற்பாட்டில், நிலைமுறைச் சட்டவிதிகளாகவே இருக்கின்றன. சில எடுத்துக்காட்டுகள்:

1) ஓர் ஒப்பந்தத்தை மெய்ப்பிப்பதற்கு அந்த ஒப்பந்தத்தைக் காட்டும் எழுத்து வேண்டும் என்பது சான்றியல் விதி. இதன் விளைவு என்ன? ஓர் ஒப்பந்தம் எழுத்துருவில் இல்லையென்றால் அது இல்லா நிலையதாகிவிடுகிறது. அது செல்லுறும் ஒப்பந்தமாக இருக்கவேண்டுமெனில், அது எழுத்துருவில் இருக்கவேண்டும்.

இவ்வாறு, ஓர் உரிமையை மெய்ப்பிப்பதற்கு வேண்டிய சான்றியல் விதி, அந்த உரிமைக்கான மூலத்தை வரையறுப்பதாகச் செயற்படுகின்றது.

2) கடனொப்புச் சீட்டின் (Promissory note) தேதியில் இருந்து அல்லது மீண்டும் கடனொப்புதல் பெறப்பட்ட தேதியில் இருந்து, மூன்று ஆண்டுகள் கழிந்துவிட்டால் அந்தச் சீட்டின்மீது வழக்கிட முடியாது என்று கால வரையறைச் சட்டம் (Limitation Act) விதிக்கின்றது.

இதன் பயன் என்ன? மூன்றாண்டுகள் கழிந்துவிட்ட பிறகு, கடனொப்புதல் சீட்டைப் பொறுத்துள்ள உரிமை மறைந்து விடுகிறது.

காலத்தின் போக்கால் உரிமைக்கும் அதைப் பொறுத்த தீர்வழிக்கும் உள்ள பிணைப்பு அறுந்துபோய் விடுகிறது என்று கூறும் நெறிமுறைச் சட்டம், உண்மையில் அந்த உரிமையையே அழித்து விடுவதாக உள்ளது.

3) சான்றியல் சட்டத்தில் மறுக்கொணாத் துணிபு (Conclusive Presumption) என்று ஒரு விதி உண்டு. ஒருவரைப்பற்றி ஏழுஆண்டு காலமாக எவரும் கேள்விப் படவில்லை என்றால் அவர் இறந்துவிட்டார் என்று துணிபு கொள்ளவேண்டும் என்பது சான்றியல் விதி. இது நெறிமுறைச் சட்டமான சான்றியல் சட்ட விதிதான். ஆனால், இந்த விதியின் விளைவு என்ன? ஒருவரைப்பற்றி எவரும் ஏழாண்டுகள் கேள்விப்படவில்லை என்றால் அவர் இறந்துவிட்டார் என்பதை மெய்ப்பித்தது போல் ஆகி விடுகிறது. அவர் இறந்ததால் எழும் இதர சட்ட விளைவுகள் அனைத்தும் செயல்படத் தொடங்கிவிடுகின்றன. சான்றி

யலான நெறிமுறைச் சட்ட விதியின் விளைவு நிலைமுறைச் சட்ட விளைவுகளாகவே மாறிவிடுகின்றது.

இவ்வாறு, நெறிமுறைச் சட்ட விதிகளில் சில நிலைமுறைச் சட்ட விதிகளாகவே செயலுறுகின்றன.

நம் நாட்டுச் சட்டங்களை எடுத்துக் கொண்டால், 'சொத்து மாற்றுச் சட்டம்', 'இறங்குரிமைச் சட்டம்', 'ஒப்பந்தச் சட்டம்' போன்றவை நிலைமுறைச் சட்டங்கள். 'சான்றியல் சட்டம்', 'உரிமை வழக்கு நெறிமுறைச் சட்டத் தொகுப்பு', 'குற்ற வழக்கு நெறிமுறைச் சட்டத் தொகுப்பு', 'காலவரையறைச் சட்டம்' போன்றவை நெறிமுறைச் சட்டங்கள்.

நீதிமன்ற நெறிமுறை

நீதிமன்ற நடவடிக்கைகளில் முக்கியமாக ஐந்து கூறுகள் உள்ளன.

1) அழைப்பாணை (Summons)

தரப்பினர்களை நீதிமன்றத்தின் முன் வருகை புரிந்து தங்கள் வாதுகளைக் கூறும்படி ஆணையிடுதல்.

2) வாதுரைகள் (Pleadings)

தீர்வுக்கு உற்ற பிரச்சினைகளை நீதிமன்றத்திற்கு விரித்துரைத்தல்.

3) மெய்யுறுத்தம் (Proof)

தீர்வுக்கு உற்ற பிரச்சினைகள் பற்றித் தீர்வு காண்பதற்கு ஏதுவான விவரங்களையும் சான்றுகளையும் நீதிமன்றத்திற்கு முன் வைத்தல்.

4) தீர்ப்புரை (Judgement)

ஆய்ந்து கண்ட முடிவுகளைக் கூறும் தீர்ப்புரை.

5) நிறைவேற்றம் (Execution)

தீர்ப்புரையை நிறைவேற்றுதல்.

மேலே கண்ட ஐந்து கூறுகளில் 'மெய்யுறுத்தம்' என்பது பற்றிக் கூறும் சான்றியலைச் சிறிது விவரமாகக் காணலாம்.

சான்று (Evidence)

ஆங்கிலத்தில் fact என்பதைத் தமிழில் 'நிகழ்மை' என்கிறோம். ஒரு நிகழ்வு, மனநிலை, செயல் இவை யனைத்தும் 'நிகழ்மை' என்ற சொல்லில் அடங்குவன.

ஒரு நிகழ்மையிலிருந்து, வேறொரு நிகழ்மை இருந்ததா இல்லையா என்பதை நாம் ஊகிக்கின்றோம். அவ்வாறு ஊகிக்க உதவுவதைத்தான் 'சான்று' என்கிறோம்.

நீதிமுறை ஆய்வில் ஒரு நிகழ்மையை மெய்ப்பிப் பதற்கோ, பொய்ப்பிப்பதற்கோ உதவும் சட்டமுறைச் சாதனங்களே 'சான்று' எனப்படும்.

ஒரு நிகழ்மை வேறொரு நிகழ்மையை ஊகிப்பதற்கு எந்த அளவுக்கு உதவுகின்றதோ, அந்த அளவுக்கு அது 'சான்றுரம்' (Probative force) கொண்டதாகின்றது. சான்றுரம் உடைய நிகழ்மைதான் 'சான்று' ஆகின்றது. சான்றுரம் எந்த அளவிலும் இருக்கலாம். சான்று குறிக்கும் பொருள் அல்லது நிகழ்மை, உண்மையில் இருந்தது அல்லது நிகழ்ந்தது என்பதை உறுதிபட ஊகிக்கும் வகையில் அதற்குச் சான்றுரம் இருந்தால் அச்சான்றினை 'மெய்யுறுத்தம்' (Proof) என்று கூறுகின்றோம்.

சான்றாக உள்ளதைச் 'சான்று நிகழ்மை' (Evidential fact) என்றும், அது எதற்குச் சான்றாக உள்ளதோ அதை 'முதல் நிகழ்மை' (Principal fact) என்றும் கூறுவார்கள்.

துணிபு (Presumption)

வெளிப்படையான சில உண்மைகளைச் சான்று மூலம் மெய்ப்பிப்பது என்றால் காலதாமதமும் பொருட் செலவும் ஆகலாம். எனவே, குறிப்பிட்ட ஒரு நிகழ்மை யிலிருந்து வேறொரு நிகழ்மையை நீதிமன்றம் ஊகித்துக் கொள்ளலாம் அல்லது ஊகித்துக் கொள்ளவேண்டும் என்று சட்டம் விதிக்கின்றது. இவ்வாறு ஊகிப்பதைத் 'துணிபு' (Presumption) என்பார்கள்.

ஏழு வயதுக்குக் குறைந்த இளம்பருவத்தினர் எவருக்கும் 'குற்ற மனம்' இல்லை என்பதை நீதிமன்றம் ஊகித்துக் கொள்ள வேண்டும் என்பது சட்டம். எனவே,

குழந்தைப் பருவத்தினர் எவரையும் குற்றவாளி எனக் கொண்டு தண்டித்தல் இயலாது. இவ்வாறு, ஏழு வயதுக்குக் குறைந்த குழந்தைப் பருவத்தினர்க்குக் 'குற்ற மனம்' இல்லை என்று நீதிமன்றம் கொள்வதைத் 'துணிபு' என்கிறோம். இத்கைய துணிபை எவரும் மறுப்பதற்கில்லை. அதாவது, குறிப்பிட்ட ஒரு சிறுவன் ஆறு வயதே கழிந்தவனாக இருந்தாலும், அவனால் நன்மை இது, தீமை இது என்று பகுத்தறிய முடியும்; 'எனவே, அவனுக்குக் 'குற்ற மனம்' உண்டு என்பதைக் காட்டும் வகையில் சாட்சியம் விடுவதைச் சட்டம் அனுமதிப்பதில்லை. ஆதலால், இவ்வகைத் துணிபை 'மறுக்கொணாத் துணிபு' (Irrebuttable presumption) என்பார்கள். சிலவகைத்துணிபுகளை மறுக்கும் வகையில் சாட்சியம் விடலாம். இவற்றை 'மறுக்க இயலும் துணிபு' (Rebuttable presumption) என்பார்கள்.

மேலும், ஓர் உரிமையை மெய்ப்பிப்பதற்கும் குற்றத்தை மெய்ப்பிப்பதற்கும் வேறுபாடு உண்டு. உரிமை வழக்கில், சாட்சியத்தை ஆய்ந்தபின் ஒருதரப்புச் சான்றே மறுதரப்புச் சான்றைவிட நம்பத் தகுந்தது என்ற அடிப்படையில் தீர்ப்புக் கூறிவிடலாம். ஆனால், குற்றவழக்கில், குற்றம் சாட்டப் பட்டவர்தான் குற்றத்தைச் செய்தார் என்பதை நேரிய ஐயப் பாட்டிற்குச் சிறிதும் இடமின்றி (beyond reasonable doubt) மெய்ப்பித்தல் வேண்டும். ஒரு சிறிது ஐயப்பாடு இருந்தாலும், அதன் பலன் குற்றவாளியைச் சேரும். அதன் பயனாய் அவர் விடுதலைக்கு உரியவராகிறார்.

சான்று பலவகைப்படுவன

வகைகள்:

1) நேர்நிலைச் சான்று (Direct evidence)

சூழ்நிலைச் சான்று (Circumstantial evidence)

ஒருவன் ஒரு பொருளைத் திருடினான் என்பதை மெய்ப்பிக்க முனையும்போது இருவகையான சான்றுகள் உதவுகின்றன. அவன் திருடுவதை நேரில் பார்த்த ஒருவரின் சான்று — இது 'நேர்நிலைச் சான்று' அல்லது 'நேர்முகச் சான்று' (Directive evidence) திருட்டு நடந்து சிறிது

நேரத்திற்குள் அவன்கையில் திருட்டுப்பொருள் இருந்ததைப் பார்த்த ஒருவரின் சாட்சியம் — இதிலிருந்து அவன்தான் திருடியிருக்க வேண்டும் என்று ஊகிக்கிறோம் — இது 'சூழ்நிலைச் சான்று' (Circumstantial evidence).

சான்றினால் மெய்ப்பிக்கப்படும் நிகழ்மை, அந்த வழக்கில் மெய்ப்பிக்கப்பட வேண்டிய நிகழ்மையாக (fact) அமைந்தால், அச்சான்று நேர்நிலைச் சான்று. சான்றினால் மெய்ப்பிக்கப்பட்ட நிகழ்மையைக் கொண்டு வழக்கில் மெய்ப்பிக்கப்பட வேண்டிய நிகழ்மைபற்றி ஊகிக்க முடியுமானால், அச்சான்று சூழ்நிலைச் சான்று.

2) ஆவணச் சான்று (Documentary evidence)

வாய்மொழிச் சான்று (Oral evidence)

நீதிமன்றம் சான்றெனக் கொள்ளத்தக்க ஆவணங்களை, 'ஆவணச் சான்று' என்கிறோம். நீதிமன்றத்தில் சாட்சிகள் கூறும் சான்றுரைகளை 'வாய்மொழிச் சான்று' என்கிறோம்.

3) தலைநிலைச் சான்று (Primary evidence)

சார்நிலைச் சான்று (Secondary evidence)

நீதிமன்றத்தின் முன் வைக்கப்படும் மூல ஆவணங்கள், தலைநிலைச் சான்று; அது இல்லாதபோது, நீதிமன்றம் அனுமதிக்கும் ஆவணத்தின் முறையான படிவம், 'சார் நிலைச் சான்று'.

4) அகநிலைச் சான்று (Intrinsic evidence)

புறநிலைச் சான்று (Extrinsic evidence)

வேறு விளக்கம் ஏதுமின்றி ஓர் ஆவணத்தின் வாசகத்தில் அடங்கியுள்ள சான்று, 'அகநிலைச் சான்று' எனப்படும். ஓர் ஆவணத்தின் வாசகத்தை விளக்கவோ, மாற்றவோ என, அந்த ஆவணத்தைத் தவிர்த்து வேறு வெளி ஆதாரங்களைக் கொண்ட சான்று 'புறநிலைச் சான்று' எனப்படும்.

சான்றை மதிப்பிடுதல்

(The valuation of evidence)

பொதுவாக, சான்றியல் சட்டம் இருபகுதிகளைக் கொண்டது.

சான்றுகளின் சான்றுரத்தை (Probative value) அளவிடும் வகையில் உள்ள விதிகளைக் கொண்டது ஒரு பகுதி. நீதி மன்றத்தின்முன் எந்த வழிமுறையில் எத்தகைய வரம்புகளுக்கு உட்பட்டுச் சான்றுகள் வைக்கப்படவேண்டும் என்ற விதிகளைக் கொண்டது அடுத்த பகுதி. அளிக்கப்படும் சான்றின் பயனைக் கூறுவது முன்பகுதி; அளிக்கப்படும் விதத்தைக் கூறுவது பின் பகுதி. ஆயினும், இரு பகுதிகளும் இணைவுடையன. குறிப்பிட்ட சான்றின் பயன் என்ன என்பதைக் கருத்திற்கொண்டுதான், அச்சான்று எவ்வாறு நீதிமன்றத்தில் அளிக்கப்படவேண்டும் என்ற விதிகள் வகுக்கப்படுகின்றன.

சாத்ரணமாக, ஒரு சான்றின் தன்மையும் பயனும் என்ன என்பதை நாம் பொது அறிவு கொண்டே தீர்மானிக்கின்றோம். ஆனால், சட்டத்தில் அவ்வாறு செய்தல் இயலாது. சான்றின் பயனை வரையறுத்துக் கூறும் விதிகள் உள்ளன. அந்த விதிகளை நீதிமன்றம் புறக்கணிப்பதற்கில்லை. அவ்விதிகளை ஒட்டியே சான்றின் பண்பும் பயனும் உறுதி செய்யப்படுகின்றன.

அந்த விதிகளை ஐந்து வகைகளாகப் பிரித்துக் காண் கின்றார் சால்மண்ட்:

1) அறுதியான மெய்யுறுத்தம் (Conclusive proof)

2) அறுதியில்லா மெய்யுறுத்தம் (Presumptive proof)

3) குறைநிலைச் சான்று (Insufficient evidence)

4) தனிநிலைச் சான்று (Exclusive evidence)

5) சான்றாகா நிகழ்மைகள் (No evidence)

1) அறுதியான மெய்யுறுத்தம் (Conclusive proof)

மறுக்கொணாத் துணிபு (Irrebuttable presumption)

சில நேர்வுகளில், ஒரு நிகழ்மைக்கான மெய்யுறுத்தமாக (Proof)குறிப்பிட்ட நிகழ்மையினை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும் என்று சட்டம் விதிக்கிறது. இந்த விதிப்படி, ஒரு

நிகழ்மைக்குச் சான்றாக எதை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டுமோ அது அறுதியான மெய்யுறுத்தம்'ஆகின்றது. அந்த மெய்யுறுத்தத்தை வேறு எந்தப் நிகழ்மையாலும் குலைக்க இயலாது.

இரு தரப்பினரிடையே சில உரிமைகளைப் பொறுத்து எழுந்த வழக்கில் நீதிமன்றத் தீர்ப்பு ஏற்பட்டபின், மீண்டும் அத்தரப்பினர்கள் அதே உரிமைகளைப் பற்றி வாதாடுவது சமுதாயத்திற்கு உகந்தது அன்று. எனவே, அந்த உரிமைகளைப் பொறுத்து அந்தத் தீர்ப்பிலே கூறப்பட்டது 'அறுதியான மெய்யுறுத்தம்'ஆகின்றது.

2) அறுதியில்லா மெய்யுறுத்தம் (Presumptive proof)

அறுதியில்லா மெய்யுறுத்தம்' யாறான வேறு மெய்யுறுத்தம் இல்லாத நிலையில் மட்டுமே மெய்யுறுத்தமாகக் கொள்ளப்படுகின்றது. வேறு நிகழ்மைகளிலிருந்து இதை மெய்யுறுத்தமாகக் கொள்ளக் கூடாது என்ற முடிவிற்கு நீதிமன்றம் வரலாம். இதற்குத் தடையில்லை.

குற்றம் சாட்டப்பட்டு விசாரணையில் உள்ள எவரும் குற்றம் செய்யாதவர்கள் என்பதே சட்டத்தின் துணிபு ஆகும். இது அறுதியில்லாத் துணிபு! ஆனால், சாட்சியத்தில் இருந்து இவர்தான் குற்றம் செய்தவர் என்பது மெய்ப்பிக்கப்பட்டால் முதலில் கொண்ட துணிபு மறைந்து விடுகிறது; அவர் குற்றவாளி எனத் தண்டிக்கப்படுகிறார்.

ஒன்றை மெய்ப்பிக்கும் பொறுப்பு எவர்மீது இருக்க வேண்டும் எனச் சட்டம் கொள்கிறதோ அவருக்கு எதிராக இந்த 'அறுதியில்லாத் துணிபு' கொள்ளப்படுகிறது. தாம் எழுதிக் கொடுத்த கடனொப்புதல் சீட்டுக்குப் பணம் பெறவில்லை என்று ஒருவர் வாதாடினால், அந்த வாதத்தை அவர்தாம் மெய்ப்பித்தல் வேண்டும் என்பது சட்டம். எனவே, கடனொப்புதல் சீட்டு இருந்தால் அதற்குப் பணம் கொடுக்கப்பட்டது என்று துணிபு கொள்ளுகிறது சட்டம். இது'அறுதியில்லாத் துணிபு'ஆகும்.

3) குறைநிலைச் சான்று (Insufficient evidence)

சில வகைக் குற்றங்களைப் பொறுத்த விசாரணையில், ஒருவரது சான்றை மட்டுமே வைத்துக் குற்றம் மெய்ப்பிக்கப்

பட்டதாகச் சட்டம் கொள்வதில்லை. குறைந்தது இரண்டு பேர்களாவது சாட்டாளிக்கு எதிராகச் சான்றுரைத்தால் மட்டுமே அதை மெய்யுறுத்தமாகச் சட்டம் ஏற்கின்றது.

எனவே, ஒருவர் மட்டும் சான்றளித்தால் அது 'குறைநிலைச் சான்று' ஆகிறது.

4) தனிநிலைச் சான்று (Exclusive Evidence)

ஒருவர் எழுதி வைத்த விருப்பாவணத்தை (will) மெய்ப்பிக்க வேண்டுமெனில், அதில் சான்றொப்பம் இட்டவர்தான் சான்று கூறி மெய்ப்பித்தல் வேண்டும். சான்றொப்பமிட்டவர்கள் இறந்துபோய் விட்டால் அல்லது அவர்களை விசாரிப்பது வேறு காரணங்களால் இயலாது போனால் மட்டுமே, வேறுவகையில் அதை மெய்ப்பித்தல் இயலும். விருப்பாவணம் எழுதுவது என்றால் அதற்கு இருவராயினும் சான்றொப்பம் (attestation) இட வேண்டும் என்று சட்டம் இருப்பதால், இத்தகைய 'தனிமுறைச் சான்று' அதை மெய்ப்பிப்பதற்கு வேண்டியுள்ளது.

இவ்வாறு, குறிப்பிட்ட சான்றின் வழிதான் ஒன்று மெய்ப்பிக்கப்பட வேண்டும் என்ற நிலையில், அத்தகைய சான்றைத் 'தனிநிலைச் சான்று' என்கிறோம்.

5) சான்றாகா நிகழ்மைகள் (Facts which are not evidence)

ஒருவர் ஒரு செயலை நேரில் தாமே பார்த்ததாகச் சான்று கூறலாம். ஆனால், 'அந்தச் செயலை நேரில் கண்டதாக ஒருவர் என்னிடம் கூறினார்' என்று சான்றுரைக்கப்பட்டால், அதைச் சட்டம் சான்றாகக் கருதுவதில்லை. இதைக் 'கேள்விநிலைச் சான்று' (Hearsay evidence) என்பார்கள். இதுபோன்றே, குற்றம் சாற்றப்பட்டவர் தீய குணமுடையவர் என்று கூறப்படும் சான்றைச் சட்டம் ஏற்பதில்லை.

இந்தியச் சான்றியல் சட்டத்தில் இத்தகு சான்றுகள் 'தள்ளத்தக்க சான்றுகள்' (Inadmissible evidence) என்று கூறப்படுகின்றன.

நீதிமன்றத்தின் முன் சான்றினை வைத்தல்
(The production of evidence)

நீதிமன்றத்தின்முன் எந்த வழிமுறைப்படி சான்றுகளை வைத்தல்வேண்டும் என்பது பற்றியும் சான்றியல் சட்டம் கூறுகின்றது.

விடப்படும் சான்றின் மதிப்பு, மேலும், மதிப்பின்மை பற்றிஅல்லாமல், சான்று விடப்படும் விதம்பற்றிக் கூறும் பகுதி இது.

சாட்சிகளை விசாரிக்கும் முறை என்ன, அவர்களைக் குறுக்கு விசாரணை செய்வது எவ்வாறு என்பதற்கான விதிகள் சான்றியலில் உண்டு. சில நேர்வுகளில், மெய்ப்பிக்கப்பட வேண்டிய நிகழ்மை குறித்துத் தக்க சான்று கூறக்கூடியவர்களைச் சட்டம் சான்றுகூற அனுமதிப்பதில்லை. எடுத்துக் காட்டாக, வழக்காடுபவருக்கும் அவரது வழக்கறிஞருக்கும் இடையில் நடந்த கடிதத் தொடர்புகளைச் சான்றாகக் கூறும்படி சட்டம் அனுமதிப்பதில்லை.

மிக முக்கியமான விலக்குச்சான்று விதி ஒன்று உண்டு. அதாவது, தாம் ஒரு குற்றவாளி என்பதை மெய்ப்பிக்கும் வகையில், எவரும் சான்றளித்தலைச் சட்டம் விலக்குகிறது. சாட்சியாக நிற்கும் ஒருவரிடம் கேட்கப்படும் வினாவிற்கு அவர் விடை கூறினால், அவர் ஒரு குற்றம் இழைத்தவர் என்பது மெய்ப்பிக்கப்படும் என்றால், அத்தகைய வினாவிற்கு அவர் விடைகூறுவதைச் சட்டம் அனுமதிப்பதில்லை. ஒருவருக்குத் தண்டனை விதிப்பதற்குக் கருவியாக அவரையே பயன் படுத்துதலைச் சட்டம் விலக்குகிறது.

குற்றம் சாட்டப்பட்ட ஒருவர், அக்குற்றத்தைத் தாமே செய்ததாக நீதிமன்றத்தில் குற்ற ஏற்புரை (confession) கூறலாம். ஆயினும், அதை நீதிமன்றம் ஏற்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஏதோ ஒருவகைக் கட்டாயத்தால் விளைந்தது அந்தக் குற்றஏற்புரை என்று ஒரு சிறிது ஐயப்பாடு தோன்றினாலும், அந்தக் குற்றஏற்புரையை நீதிமன்றம் புறக்கணித்து விடுகிறது.

பெந்தம் (Bentham) போன்ற அறிஞர்கள் குற்றவாளியை விசாரிக்கவே கூடாது என்ற கொள்கையை ஆதரிப்பதில்லை. குற்றம் செய்யாதவர் என்றால், அவர் சான்றளிப்பதற்கு ஏன்

அஞ்சவேண்டும் என்று அவர் கேட்கிறார். நம் நாட்டிலும், குற்றம் சாட்டப்பட்டவர் அவராக விரும்பினால், சான்று அளிக்கலாம் என்பதற்கு வகைசெய்து அண்மையில் குற்ற விசாரணைச் சட்டத்தொகுப்பு திருத்தப்பட்டுள்ளது.

மெய்யுறுத்தும் பாடு

பொதுவாக, ஒன்றை உண்டு என்று எவர் சொல்லுகின்றாரோ அவர்தான் அது உள்ளது என்பதை மெய்ப்பித்தல் வேண்டும். இதை 'மெய்யுறுத்தும் பாடு' (Burden of proof) என்பார்கள். 'மெய்யுறுத்தும் பாடு உளதென்பார் மாட்டே யாகும்' என்பது இலத்தீன் விதிமொழி.

சான்று உரைக்கும் ஒருவர் உண்மை பேசுகின்றாரா என்பதைக் காண்பதற்கு எந்தவகை உத்தியும் பயன்படுவதில்லை. எனவே, சான்று உரைப்பதற்குமுன், ஒவ்வொரு சாட்சியும் உண்மையே கூறுவதாக உறுதிமொழி எடுக்கின்றார். பெரும்பாலும் இந்த உறுதிமொழி கடவுள் பெயரால் எடுக்கப் பெறுகின்றது. கடவுள் பெயரால் ஆணையுறுதி எடுப்பவர்களில் எத்தனைபேர் உண்மையினை மட்டுமே கூறுகின்றார்கள் என்பது கடவுளுக்கு மட்டுமே தெரியும்.

பொய்ச்சான்று கூறுவோர் அதற்கான தண்டனையிலிருந்து தப்ப முடியாது என்ற நிலையில் கடுமையாகச் சட்டம் செயற்பட்டாலொழிய, பொய்ச்சான்றுரைப்பதைப் போக்குவது இயலாது என்கிறார் சால்மண்ட்.

''அறத்தால் வருவதே இன்பம்''

அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல.

—குறள் 39

இன்றைய சட்ட நெறியும்
அன்றைய அறநெறியும்

'சட்ட இயல்' என்ற இந்நூலில், இதுவரை, 'சட்டம்' என்றால் என்ன, சட்டத்தின் அடிப்படைக் கருத்துகள் எவை, அவற்றின் விளக்கங்கள் என்ன என்பது பற்றிச் சுருக்கமாகக் கண்டோம்.

நம் பண்டைத்தமிழ் இலக்கியங்களில் 'சட்டம்' என்ற சொல் வழங்கப்பெறவில்லை. ஆனால், 'சட்டம்' என்ற சொல் இந்நாளில் எக்கருத்துகளை உள்ளீடாகக் கொண்டுள்ளதோ அதே கருத்துகளைக் குறிக்கும் வகையில் 'அறம்' என்ற தமிழ்ச்சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் கையாளப்பெற்றுள்ளது.

'சட்டத்தின் பயன் நீதி' என்றும், 'நீதியின் கருவியே சட்டம்' என்றும் விளக்கப்படுவதை முன்னர் கண்டோம். எனவே, THE LAW (சட்டநெறி) JUSTICE (நீதி) என்ற இரு சொற்களும் வேறுபட்ட பொருள்களைச் சுட்டுவன அல்ல. சட்டத்தின் பயன் நீதி; நீதியின் பண்பு சட்டம். ஒரே பொருளின்

பண்பைக் குறிப்பது ' சட்டம் ' என்ற சொல், பயனைக் குறிப்பது ' நீதி ' என்ற சொல். பண்பைச் சுட்டும் சொல்லும், பயனைச் சுட்டும் சொல்லும் வெவ்வேறாக இருந்தாலும், அச்சொற்களின் உட்பொருள் ஒன்றே தான்.

ஆதலால் தான், நீதிமன்றத்தை ஆங்கிலத்தில் Court of Law என்கிறோம்; நீதி முறையான ஆட்சியை Rule of Law என்று கூறுகிறோம்.

இது போன்றே, ' அறம் ' என்ற சொல் அன்றைய தமிழ் இலக்கியங்களில் ஒழுக்க நெறியினையும், நீதி நெறியினையும் ஒருங்கே குறித்து நின்றது.

நீதி வழங்கும் அவையத்தினை ' அறங்கூறவையம் ' என்று பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. தனி மனிதனின் ஒழுக்கத்தையும் 'அறம்' என்றே பண்டைய நூல்கள் குறிக்கின்றன.

இந்தப் பிறவியில் அறம் புரிந்தால், இறந்த பின் நற்கதி கிடைக்கும் என்ற கொள்கையினைப் பண்டைத்தமிழ்ச் சான்றோர்கள் ஏற்கவில்லை. அக்கொள்கை அறத்தை விலை பேசும் வணிகம் என்று கண்டிக்கின்றனர்.

> ''இம்மைச் செய்தது, மறுமைக்கு ஆம்எனும்
> அறவிலை வணிகன் ஆய்அலன்''
>
> (புறம்—134)

என்று ஆய் என்ற அரசனைச் சங்க காலப் புலவர் முடமோசியார் பாடுகின்றார்.

இவ்வுலக இன்ப வாழ்விற்கு ஏற்ற நெறிகளையே அறநெறிகளாக அன்றைய தமிழ்ச் சான்றோர்கள் கொண்டனர்.

மேலை நாட்டுச் சட்ட அறிஞர்கள் பலரும் 'அறம்' என்ற பொருளில் பயன்படும் Justice என்ற ஆங்கிலச் சொல்லின் உட்பொருளை விளக்கும் வகையில் ஆய்வு நூல்கள் பல எழுதியுள்ளானர்.

' மனிதகுலத்தின் பொதுவான நல்வாழ்விற்கு உகந்த வகையில் ஒருவனின் நடத்தை அமைதல் வேண்டும் என்பதையே அறநெறி போதிக்கின்றது '[1] என்கிறார் சால்மண்ட்.

---

[1] The rule of justice instructs him how he must act in order to secure and promote the general welfare of mankind - Salmond.

அறத்தால் வருவதே இன்பம்

உலக வாழ்வில் நாம் ஒவ்வொருவரும் இன்பத்தையே நாடுகின்றோம்.

கல்வியால் வருவது இன்பம்; கலையால் பெறுவது இன்பம். பொருளாலும் புகழாலும் உறுவது இன்பம். கல்வியும் கலையும், பொருளும் புகழும் இன்பத்தை எய்தும் கருவிகளாகவே அமைகின்றன. இவ்வின்பத்தை நாடுவது மனிதனின் இயல்பாகிறது.

ஈதலால் பிறருக்கு இன்பம் விளைகின்றது; எனவே ஈதலை அறம் என்கிறோம். இன்னா செய்தலால் பிறருக்குத் துன்பம் விளைகின்றது; இன்னா செய்தலை அறமல்லாத செயல் என்கிறோம். இன்பம் பயக்கும் ஈதல் அறம்; துன்பம் பயக்கும் இன்னா செய்தல் அறமல்லாதது. எனவே, இன்பம் அளிக்கும் ஈதலும், இன்னா செய்யாமையும் 'அறம்' எனப் போற்றப் பெறுகின்றன. இவ்வாறு, இன்பமளிக்கும் பண்புகளையே 'அறம்' என்கிறோம்.

மனித குலத்தின் இயல்பான இந்த இன்ப வேட்கையே அறநெறிக்கு அடிப்படை ஆகின்றது.

'மனிதனுக்கு என்றுமுள்ள இன்ப வேட்கையே அற வேட்கையாக அமைகின்றது',[1] என்கிறார் கெல்சன் என்ற மேலை நாட்டுச் சட்ட நூலறிஞர்.

'அறத்தால் வருவதே இன்பம்', என்பது வள்ளுவர் வாக்கு.

'அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல' — (குறள்—39)

'இன்பம் பயப்பது அறம்' என்று வள்ளுவர் கூறவில்லை; 'அறம் எதைப் பயக்கின்றதோ அது மட்டுமே இன்பமாகும்', என்று கூறுகின்றார். 'அறத்தைத் தவிர வேறு எதுவும் இன்பம் பயப்பது அன்று', என்ற உண்மையினைத் தெளிவாக உணர்த்தும் பொருட்டு, "அறத்தால் வருவது இன்பம்" என்று கூறாமல், 'அறத்தால் வருவதே இன்பம்' என்று அறுதியிட்டு உறுதியுடன் உரைக்கின்றார் அறநூலாசிரியர். "அறம் இன்றி இன்பம் இல்லை" என்பது வள்ளுவர் வாக்கு.

[1] The longing for justice is man's eternal longing for happiness - Kelsen in 'What is Justice'

மக்கள் ஒவ்வொருவரும் தமக்கு எது இன்பமாகத் தோன்றுகிறதோ அதுவே 'இன்பம்' எனக் கொண்டால், அது தந்நலங் குறித்த இன்பமாகவே அமைவதாகும். பிறர் பொருளைத் திருடுவதால் திருடன் பெறும் இன்பம் அப்பொருளை இழந்தவருக்குத் துன்பத்தையே விளைக்கின்றது. பிறரை ஏமாற்றி ஒருவன் பெறும் இன்பம் ஏமாந்தவருக்குத் துன்பமாகிறது. எனவே, ஒவ்வொருவரும் தந்நலனை மட்டுமே கருத்திற் கொண்டு இன்பத்தை நாடினால், அது பிறரது துன்பத்திற்கு அடி கோலுகிறது. எனவே, தனிப்பட்ட ஒவ்வொருவரும் தம் எண்ணத்திற்கேற்பத் தந்நலம் பற்றிய இன்பத்தை நாடுவது அறநெறி அன்று.

ஆதலால், தந்நலங் கருதாமல், பொதுநலத்தை நாடிச் செய்யப் பெறும் செயல்களால் விளைவதுதான் உண்மையான இன்பமாகும். பொதுநலம் பேணும் வினைகளே புரை தீர்ந்த இன்பத்தை அளிக்கின்றன.

எனவே, அறம் என்பது 'சமுதாய இன்பம்'[1] என்கிறார் கெல்சன்.

அறத்தால் விளையும் இன்பம் சமுதாய இன்பம் (Social happiness) என்று சட்ட இயல் வல்லுநர்கள் கூறுவதையே குறளிலும் காணுகின்றோம். அறத்தால் வரும் இன்பமே புகழோடு இயைந்த இன்பமாகும் என்கிறார் வள்ளுவர்.

''அறத்தான் வருவதே இன்பம்'',

என்று கூறும் குறள் மற்ற இன்பங்களெல்லாம் புகழ் இல்லாதவை என்கிறது.

''. . . . . . . மற்றெல்லாம்
புறத்த புகழும் இல''

ஒருவருடைய புகழ் என்று எதைக் கூறுகிறோம்?

அவரைப் பற்றிப் பிறர் கொண்டுள்ள உயர் வெண்ணத்தையே அவருடைய புகழ் என்கிறோம். வசையொழிய வாழ்ந்து உயர்ந்த புகழ் எய்துவது சமுதாய வாழ்வில்தான் இயலும். சமுதாய வாழ்விலே எழுபவைதாம் புகழும், அதற்கு மாறுபட்ட இகழும். இத்தகைய புகழோடு இயைந்த இன்பம், அதாவது, சமுதாயம் போற்றும் இன்பம் அறச் செயலால்

---

[1] Social order regulates the behaviour of men in a way satisfactory to all men, so that all men find their happiness in it. Justice is social happiness. - Kelsen in 'What is Justice'.

மட்டுமே விளைகிறது. அறத்தால் வருவது புகழோடு இயைந்த சமுதாய இன்பம். இவ்வாறு "சமுதாய இன்பம்" (Social happiness) என்று இன்றைய சட்ட இயலறிஞர்கள் கூறுவதையே 'புகழோடு இயைந்த இன்பம்' என்று குறள்நெறி குறிக்கின்றது.

'புகழார்ந்த இன்பத்திற்கு அடிப்படையானது அறம்' என்ற குறள்நெறி, 'அறம் என்பது சமுதாய இன்பம்', என்று கூறும் இன்றைய சட்ட நெறியாக இருப்பது எண்ணி எண்ணி இன்புறத் தக்கதாகும்.[1]

சமுதாய அறத்தினைக் (Social Justice) குறிக்கோளாகக் கொண்டே நம் நாட்டு அரசமைப்பு இயங்குகிறது என்பதை அரசமைப்புச் சாசனத்தின் முகப்புரை சாற்றுகிறது.

"சமுதாய மக்களின் இன்றியமையாத் தேவைகளான உண்டி, உடை, உறையுள் (உண்ணுவதற்கு உணவு, உடுத்துவதற்கு ஆடை, உறைவதற்கு வீடு) இவை நிறைவு செய்யப்பட வேண்டும். இதுவே சமுதாய இன்பமான அறமாகும்', என்று விளக்குகிறார் சட்ட அறிஞர் கெல்சன்.

மக்கள் அனைவருக்கும் உணவும் உடையும் உறையுளும் கிடைப்பதே சமுதாய அறம் என்ற கொள்கை, இருபதாம் நூற்றாண்டில் மேலை நாட்டறிஞர்கள் வகுத்தது என்று நம்மில் பலரும் எண்ணுகிறோம்.

ஆனால், ஏறத்தாழ ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் எழுதப்பெற்ற 'மணிமேகலை' யில் இதே கருத்து ஒலிக்கின்றது என்றால் வியப்புக்குரியது தானே?

இதோ, பெரும்புலவர் சாத்தனார், 'அறம்' என்ற சொல்லிற்கு இலக்கணம் கூறுகின்றார்.

---

1 "குறள் கூறும் சட்ட நெறி" என்ற நூலில் குறள்நெறியில் அடங்கியுள்ள சட்டநெறிகள் பற்றி விரிவாகக் காணலாம்.

2 By social happiness we must understand the satisfaction of certain needs, recognised by social authority, the law giver, as needs worthy of being satisfied such as the need to be fed, clothed, housed and the like
— Kelsen in 'What is Justice'.

''அறம் எனப்படுவது யாது? 'எனக் கேட்பின்,
மறவாது இது கேள்; மன் உயிர்க்கு எல்லாம்
உண்டியும், உடையும், உறையுளும், அல்லது
கண்டது இல் . . . .''

(காதை 25)

எனவே, 'அறம்' என்பது 'சமுதாய இன்பம்' . 'சமுதாய இன்பம்' என்பது மக்களனைவருக்கும் உண்டி, உடை, உறையுள் இவை தவறாமல் கிடைப்பது. இதுவே, இன்றைய சட்டநெறி, பண்டைய தமிழ்ச் சான்றோர் பகரும் வாழ்க்கை நெறி.

இவ்வாறு, 'சட்ட நெறி' 'நீதி நெறி' என்ற இன்றைய சட்டஇயல் சொற்கள் உணர்த்தும் கோட்பாடுகளை, பண்டைய தமிழ் இலக்கியங்கள் 'அறநெறி' என்று கூறுவதைக் காணுகிறோம்.

இன்பமான சமுதாய வாழ்விற்கு ஏற்ற நெறியே சட்ட நெறியாகும். அதுவே, அறநெறியுமாகும். சட்டஇயல் பயின்ற நாம் இந்த உண்மையினை ஓர்ந்து உணர்தல் வேண்டும்.

சட்டக் கலைச்சொற்கள்

A

Abatement of nuisance — தொல்லை அகற்றல்
Ability — ஏலுமை
Absolute duties — அடிப்படைக் கடமைகள்
Accessory right — துணையுரிமை
Accident — எதிர்பாரா விளைவு
Acquisitive prescription — ஈட்டும் நீளுடைமை
Act — செயல்; செய்வினை; சட்டம்
Act in the law — சட்டவழிச் செயல்
Act of the commission — இயங்கும் செயல்
Act of the law — சட்டத்தின் செயல்
Act of omission — இயங்காச் செயல்
Acts of Private Defence — காப்புரிமைச் செயல்கள்
Actual delivery — மெய்ந்நிலை ஒப்படைப்பு
Actual possession — மெய்ந்நிலை உடைமை
Actus reus — குற்றச் செயல்
Administration of justice — முறை செய்தல்; நீதி வழங்குதல்
Admissible evidence — கொள்ளத்தக்க சான்று
Adverse possession — எதிர் உடைமை
Agent — முகவர்
Agreement — உடன்பாடு
Alienate — உரிமை மாற்றம்
Analytical School — பகுத்தாய்வுமுறைப் பயில்நெறியம்
Animus possidendi — உடைமை எண்ணம்
Artistic copy right — கலையமைப்புப் பதிப்புரிமை
Assignment — மாற்றடைவு
Attestation — சான்றொப்பம்
Attornment — மாறுதல் ஏற்பு
Authority — ஆள்வை

B

Behaviour — ஒழுகுமுறை
Bench — ஆயம்
Beneficial ownership — பயனுரிமையர் சொத்துரிமை
Beneficiary — பயனுரிமையர்
Bilateral act — உடன்படு செயல்
Burden of proof — சான்றுறுத்தும் பாடு; மெய்ப்பிக்கும் பாடு

C

Care — கவனம்
Chose in action — வழக்கடை பொருள்
Chose in possession — உடைமைப் பொருள்
Circumstantial evidence — சூழ்நிலைச் சான்று
Civil case — உரிமைஇயல் வழக்கு
Civil justice — உரிமைஇயல் நீதிமுறை
Civil Laws — உரிமைஇயல் சட்டங்கள்
Codification — சட்டத்தொகுப்பு
Coercion — வல்லந்தம்
Commercial Laws — வாணிபச் சட்டங்கள்
Common Law — பொதுமுறைச் சட்டம்
Concept — கருத்தமைவு
Conclusive proof — அறுதியான சான்றுறுத்தம்
Concurrent possession — ஒருங்கியல் உடைமை
Conduct — செயலாறு
Confession — குற்ற ஏற்பு
Conflict of Laws — முரண்படு சட்டங்கள்
Consideration — எதிர்பயன்
Constitution — அரசமைப்பு
Constitutional Law — அரசமைப்புச் சட்டம்
Construction — பொருளமைதி
Constructive delivery — கொள்நிலை ஒப்படைப்பு
Constructive possession — கொள்நிலை உடைமை

Contemptuous damages — அற்ப இழப்பீடு
Contingent ownership — நிறைவுறாச் சொத்துரிமை
Contingent right — நிறைவுறா உரிமை
Contract — ஒப்பந்தம்
Contributory negligence — தற்கவனமின்மை
Co-ownership — கூட்டுச் சொத்துரிமை
Copy right — பதிப்புரிமை
Corporation — கூட்டமைப்பு
Corporation aggregate — தொகுநிலைக் கூட்டமைப்பு
Corporation sole — தனிநிலைக் கூட்டமைப்பு
Corporeal possession — பருப்பொருள் உடைமை
Corporeal property — பருப்பொருட் சொத்து
Corpus possessionis — உடைமைச் செயல்
Correlative — எதிரிணை
Crime and punishment — குற்றமும் தண்டனையும்
Criminal act — குற்றச் செயல்
Criminal attempt — குற்ற முயற்சி
Criminal Case — குற்றஇயல் வழக்கு
Criminal Laws — குற்றவியல் சட்டங்கள்
Criminal justice — குற்ற இயல் நீதிமுறை
Custom — வழக்கநெறி
Customary Law — வழக்கநெறிச் சட்டம்

D

Damages — இழப்பீடு; தீங்கீடு
Damnum sine injuria — தீங்கு ஆகாத கேடுகள்
Declaratory judgement — சாற்றுவகைத் தீர்ப்பு
Definition — வரைவுரை; இலக்கணம்
Delegated legislation — ஒப்படைவு இயற்றுமுறை
Delivery — ஒப்படைத்தல்
Derivative title — மாறிய உரிமைமூலம்
Desire — விருப்பம்
Deterrent Theory of Punishment — "அச்சுறுத்துவது தண்டனை" என்ற கொள்கை

Director	— இயக்குநர்
Direct evidence	— நேர்நிலைச் சான்று
Direct possession	— நேரடி உடைமை
Discretion	— உளத்தேர்வு
Documentary evidence	— ஆவணச் சான்று
Doctrine of Unjust Enrichment	— "முறையற்ற பொருளடைவு" என்ற கோட்பாடு
Doctrine of mens rea	— குற்ற மனக் கோட்பாடு
Doctrine of precedent	— முன்தீர்ப்புநெறிக் கோட்பாடு
Doctrine of locus penitentie	— "குற்ற மனம் திருந்தும்" என்ற கோட்பாடு
Doctrine of strict proof	— கடும் சான்றுறுதிக் கோட்பாடு
Dominant tenement	— மேலமை இருப்பு
Dramatic Copy-right	— நாடகப் பதிப்புரிமை
Duty	— கடமை

E

Easement	— வசதியுரிமை
Enacted law	— இயற்றுமுறைச் சட்டம்
Encumbrance	— வில்லங்கம்
Enforcement	— செல்லுறுத்தம்
Equilibrium	— சமநிலைச் சீர்மை
Equitable right	— தகுமுறை உரிமை
Equity	— தகுமுறை
Error	— தவறு
Events	— நிகழ்வுகள்
Evidence	— சான்று
Evidentiary fact	— சான்றுப் பொருண்மை
Exclusive evidence	— தனிநிலைச் சான்று
Execution	— நிறைவேற்றம்
Exemplary damages	— எச்சரிக்கை இழப்பீடு
Extinction of rights	— உரிமைகள் தீர்வுறுதல்
Extinctive prescription	— இழக்கும் நீளுடைமை
Extrinsic evidence	— புறநிலைச் சான்று

F

Fictitious person — புனைவு நபர்
First offenders — முதற் குற்றவாளிகள்
Fiscal laws — நிதியச் சட்டங்கள்
Foreseeable — முன்னறியக்கூடிய
Foresight — முன்னறிதல்
Frustration of contract — ஒப்பந்தக் குலைவு
Full Bench — முழு ஆயம்

G

Government — ஆட்சியம்
Grant — வழங்கடைவு; அளிப்பு
Guilty Mind — குற்ற மனம்

H

Habitual offenders — வாடிக்கைக் குற்றவாளிகள்
Heedlessness — மறதிநிலை
Hearsay evidence — கேள்விநிலைச் சான்று
Historical school — வரலாற்றுமுறைப் பயில்நெறியம்
Hormonious construction — இசைந்த முறையில் பொருளமைதி

I

Illegality — சட்டமுரண்பாடு
Immediate possession — நேரடி உடைமை
Immovable property — நிலை பொருள் சொத்து
Immunity — காப்புநிலை யுரிமை
Impartiality — நடுவுநிலைமை; ஒருபாற் கோடாமை
Imperative School — கட்டுறுத்துமுறைப் பயில்நெறியம்
Imperative Theory of Law — 'அரசின் ஆணையே சட்டம்' என்ற கொள்கை
Imperfect right — செயலுறா உரிமை
Inadmissible evidence — தள்ளத்தக்க சான்று

Incapacity	—	திறன் இன்மை
Incorporeal possession	—	நுண்பொருள் உடைமை
Incorporeal property	—	நுண்பொருட் சொத்து
Individual rights	—	தனிம உரிமைகள்
Inflexibility	—	நெகிழ்வின்மை
Informality	—	வினைமுறை இன்மை
Insufficient evidence	—	குறைநிலைச் சான்று
Intended act	—	கருதிய செயல்
Intention	—	கருத்து
Interests	—	நலன்கள்
International Law	—	நாட்டிடைச் சட்டம்
Interpretation	—	பொருள் விளக்கம்
Intrinsic evidence	—	அகநிலைச் சான்று
Invalid agreement	—	செல்லுறாத உடன்பாடு
Involuntary act	—	இச்சைக்குஅடங்காச் செயல்
Irrebuttable presumption	—	மறுக்கொணாத் துணிபு

J

Joint and several liability	—	கூட்டாகவும் தனித்தனியாகவும் உள்ள பொறுப்படைவு
Joint ownership	—	இணைந்த சொத்துரிமை
Judgemade law	—	தீர்ப்புமுறைச் சட்டம்
Judgement	—	தீர்ப்புரை
Judicial source	—	தீர்ப்புமுறை மூலம்
Jurisdiction	—	ஆள்வரை
Jurisprudence	—	சட்ட இயல்
Jus necessitatus	—	இக்கட்டுநிலையில் எழும் உரிமை
Justice according to law	—	சட்டத்தை ஒட்டிய நீதிமுறை
Juvenile offenders	—	இளங் குற்றவாளிகள்

L

A Law	—	ஒரு சட்டம்
Law of procedure	—	நடைமுறைச் சட்டம்
Law of Torts	—	தீங்கியல் சட்டம்

Lease — குத்தகை
Legal concept — சட்டக் கருத்தமைவு
Legal duty — சட்டமுறைக் கடமை
Legal efficacy — சட்டப் பயனுறுதி
Legal person — சட்டமுறை நபர்
Legal right — சட்டமுறை உரிமை
Legal sanction — சட்ட மேலுறுத்தம்
Legislation — சட்டம் இயற்றுதல்
Legislative source — இயற்றுமுறை மூலம்
Liability — பொறுப்படைவு
Liberty — தன்னுரிமை
Lien — பற்றுமானம்
Litera legis — சட்ட வாசகம்
Literary copy-right — இலக்கியப் பதிப்புரிமை
Literary meaning — வாசகப் பொருள்

M

Malice — தீய எண்ணம்
Managing Director — நிர்வாக இயக்குநர்
Mandatory judgement — செயலுறுத்தும் தீர்ப்பு
Maxim — விதிமொழி
Mediate possession — பகர உடைமை
Mens rea — குற்ற மனம்
Monarchy — முடியாட்சி
Mortgage — அடைமானம்
Motive — நோக்கம்
Movable property — அசைபொருள் சொத்து
Musical copyright — இசையமைப்புப் பதிப்புரிமை

N

Natural justice — அறம்; இயற்கை நீதி
Natural law — இயற்கை நெறி
Natural law theory — 'இயல்பான அறவுணர்வே சட்டம்' என்ற கோட்பாடு

Natural person — இயல்பான நபர்
Negative act — இயங்காச் செயல்
Negative prescription — அழிக்கும் நீளுடைமை
Negative right — தடையுறுத்தும் உரிமை
Negligence — கவனமின்மை
Negligent act — கவனமின்மைச் செயல்
Nominal damages — பெயரளவு இழப்பீடு

O

Obiter dicta — புறவுரை
Obligation — கடப்பாடு
Oral evidence — வாய்மொழிச் சான்று
Original title — முதல் உரிமைமூலம்
Ownership — சொத்துரிமை
Ownership in common — பொதுவிலான சொத்துரிமை

P

Partnership — கூட்டுத்தொழில்
Partition — பாகப்பிரிவினை
Patent right — புதுப்புனைவுரிமை
Penal Laws — தண்டனைமுறைச் சட்டங்கள்
Penal redress — ஒறுத்தல்வகைத் தீர்வழி
Perfect right — செயலுறும் உரிமை
Performance — நிறைவேற்றம்
Person — நபர்
Personal Laws — இனமுறைச் சட்டங்கள்
Personal right — தனிநிலை உரிமை
Philosophical School — தத்துவமுறைப் பயில்நெறியம்
Pleadings — வாதுரைகள்
Possession — உடைமை
Possession in fact — மெய்ந்நிலை உடைமை
Possession in law — சட்டம்கொள் உடைமை
Possessory remedies — உடைமையாளருக்குரிய தீர்வழிகள்
Positive act — இயங்கும் செயல்

Positive prescription — ஆக்கும் நீளுடைமை
Positive right — செயலுறுத்தும் உரிமை
Positive School — இற்றைநிலைப் பயில்நெறியம்
Power — ஏலுரிமை
Preamble — முகப்புரை
Precedent — முன்தீர்ப்பு நெறி
Preparation — முன்னேற்பாடு
Prescription — நீளுடைமை
Presumption — துணிபு
Presumptive proof — அறுதியில்லாச் சான்றுறுத்தம்
Preventive Theory of Punishment — 'குற்றங்களைத் தடுப்பது தண்டனை' என்ற கொள்கை
Primary duty — முதல்நிலைக் கடமை
Primary evidence — தலைநிலைச் சான்று
Primary right — முதல்நிலை உரிமை
Principle of Equity — தகுமுறைக் கொள்கை
Principal right — தலையுரிமை
Privacy — தனியுறை நிலை
Private interests — தனிம நலன்கள்
Private right — தனிம உரிமை
Private wrong — தனிமத் தீங்கு
Probative force — சான்றுரம்
Prohibitory judgement — தடையுறுத்தும் தீர்ப்பு
Promise — வாக்குறுதி
Promissory note — கடனொப்புச் சீட்டு
Proof — சான்றுறுத்தம்
Property — சொத்து
Proportional equality — பகுதியால் பாறபடுதல்
Proprietory remedies — சொத்துரிமையாளருக்குரிய தீர்வழிகை
Proprietory right — சொத்துநிலை உரிமை
Provision — வகையம்
Public interests — பொதும நலன்கள்
Public right — பொதும உரிமை
Public wrong — பொதுமத் தீங்கு
Pure Theory of Law — சட்டம் பற்றிய 'தெளிந்த கொள்கை'

Q

Quasi contract — கொள்நிலை ஒப்பந்தம்

R

Rashness — அசட்டைத்துணிவு
Ratio decidendi — தீர்ப்புநெறி
Realism — நிகழ்வுநிலை
Reasonable doubt — நேரிய ஐயப்பாடு
Reasonable man — நேரறிவுள்ள மனிதன்
Rebuttable presumption — மறுக்கஇயலும் துணிபு
Reformative Theory of Punishment — 'சீர்திருத்துவது தண்டனை' என்ற கொள்கை
Relative duties — தொடர்புடைக் கடமைகள்
Release — விடுப்படைவு
Relief — மாற்றீடு
Remedy — தீர்வழி
Remedial right — தீர்வுநிலை உரிமை
Residuary right — எஞ்சுரிமை
Res judicata — முன்தீர்ப்புத்தடை
Respondent superior — 'மேலவர் பொறுப்பாகுக'
Restitution — மீட்டடைவித்தல்
Retributive Theory of Punishment — 'பழிவாங்குவது தண்டனை' என்ற கொள்கை
Right — உரிமை
Right in personam — தனிமுக உரிமை
Right in re aliena — மேலமை உரிமை
Right in rem — பொதுமுக உரிமை
Right in re-propria — சொத்தமை உரிமை
Right to air — வளி வசதியுரிமை
Right of private defence of body — உடற்காப்புரிமை
Right of private defence of property — பொருள் காப்புரிமை
Right of redemption — மீட்புரிமை
Right to support — தாங்கு வசதியுரிமை

Right to way — வழி வசதியுரிமை
Rule of law — சட்டத்தின் ஆட்சி

S

Sanction — மேலுறுத்தம்
Sanctioning right — தீர்வுநிலை உரிமை
Schools of Jurisprudence — சட்டஇயல் பயில்நெறியங்கள்
Secondary duty — சார்நிலைக் கடமை
Secondary evidence — சார்நிலைச் சான்று
Security — பிணையம்
Self-help — தன் உதவி
Sententia legis — சட்டக் கருத்து
Servient tenement — கீழ்மை இருப்பு
Share holders — பங்குதாரர்கள்
Sociological School — சமுதாயமுறைப் பயில்நெறியம்
Sole ownership — தனிச் சொத்துரிமை
Solidary obligation — இணைவுறு கடப்பாடு
Sources of Law — சட்டத்தின் மூலங்கள்
Sovereignty — அரசாண்மை
Spes successionis — எதிர்பார்க்கும் இறங்குரிமை
Standard of care — கவனத்தின் தரநிலை
Stare decisis — முன்தீர்ப்பு நெறிநிற்றல்
State — அரசு
Status — தகுநிலை
Strict liability — கடும் பொறுப்படைவு
Strict proof — கடுமையான சான்றுறுத்தம்
Sub-lease — உட்குத்தகை
Subordinate legislation — கீழ்மை இயற்றுமுறைச் சட்டம்
Substantive law — நிலைமுறைச் சட்டம்
Summons — அழைப்பாணை
Supreme legislation — மேல்நிலை இயற்றுமுறை
Surety — பிணையம்; பிணையர்

T

Taking — எடுத்தல்
Tax Laws — வரிச் சட்டங்கள்

Territorial Laws — நிலவரைச் சட்டங்கள்
Territory — நிலவரை
The Law — சட்ட நெறி
Theories of Law — சட்டக் கோட்பாடுகள்
Title — உரிமை மூலம்
Tort — உரிமைத் தீங்கு; தீங்கு
Trade mark — வாணிபக் குறி
Trade name — வாணிபப் பெயர்
Trust — பொறுப்பமைப்பு
Trustee — பொறுப்புரிமையர்
Trust ownership — பொறுப்புரிமையர் சொத்துரிமை

U

Ubi jus, Ubi remedium — உரிமை உண்டெனில், தீர்வழி உண்டு
Unborn person — பிறக்க இருப்பவர்
Uniformity — சீர்மை
Unilateral act — ஒருதலைச் செயல்
Unjust enrichment — முறையற்ற பொருளடைவு

V

Valid agreement — செல்லுறும் உடன்பாடு
Validity — செல்லுரிமை
Vested ownership — நிறைவுற்ற சொத்துரிமை
Vested right — நிறைவுற்ற உரிமை
Vicarious liability — பகரப் பொறுப்படைவு
Vinculum juris — சட்டப் பிணைப்பு
Vindictive damages — பழிவாங்கும் இழப்பீடு
Voidable agreement — தவிர்தகு உடன்பாடு; இல்லாநிலை உடன்பாடு
Voluntarily — தன்னிச்சையாக
Voluntary act — இச்சைக்குஅடங்கும் செயல்

W

Want of consideration — எதிர்பயன் இன்மை
Welfare Laws — நல்வாழ்வுச் சட்டங்கள்
Will — விருப்பாவணம்
Written Law — எழுத்துருச் சட்டம்
Wrong — உரிமைத்தீங்கு; தீங்கு

பிழை திருத்தம்

பக்	வரி	சொல்	திருத்தம்
3	16	1	சட்டங்கள்
7	26	6	அறிவொளியிலே
8	1	1	சட்டக்கருத்தமைவுகள்
27	13	2	கோக்
27	20	4	என்பது
40	24	1	பெற்றோர்
72	26	2	அரசன்
77	9	3	அடிப்படையிலேயே
77	12	1	சம்பந்தப்பட்டவை.
77	13	2	அளிக்கப்படுகிறது.
81	10	2	இடர்ப்பாடுகள்
88	13	2	முன் தீர்ப்பு நெறி
97	13	2	பெற்ற
98	12	1	கொண்டனவாய்
102	5	5	வரைவுமுறை
103	15	6	உள்ளுறை
117	25	5	தீர்ப்பு
125	1	1	வழக்குமுறைச் சட்டம்
134	5	2	செல்லுறுத்துவதற்கென்றோ
141	10	5	பண்பின்றி
143	16	3	மாறான செயல்
144	27	2	புதியதோர்
178	10	1	கொன்றுவிட்டால்
191	2	2	ஒருவர்
204	10	3	திரும்பப்
210	17	3	எனக்குள்ள
218	11	2	எல்லையற்றதன்று.
320	22	2	உரிமை
326	11	4	ஆனால்

Page	Line	Word	Correction
13	25	5	Codified
17	23	2	Immanuel Kant
27	13	2	Sir Edward Coke
51	18	3	Causal
51	28	4	causal
56	21	2	Grammar
67	10	3	Inheritance
101	10	4	subordinate
105	15	1	generis
109	23	4	harmonious
208	33	3	mortgage
215	26	1	Proprietary
216	1	1	Proprietary
232	4	3	Incorporeal
256	20	3	contingent
274	2	7	surrender
294	25	5	avoidance
313	15	3	encumbrance

Footnote :

Page	F.N No	Line	word	Correction
7	2	1	11	techniques
9	1	1	6	rather
26	1	2	1	bejewelled
33	2	2	7	relations
41	1	3	2	obey
43	1	1	4	might
56	1	2	2	sovereign
96	1	2	3	unsystematic
120	1	1	4	is the
190	1	1	9	in order that
197	1	2	2	interference
249	1	1	4	de facto
269	1	1	4	de facto
358		1	12	heart